583

T. R. R.C. 583

R.R. 63 | IV | 1908

ஸ்ரீமயூரவெ ஸ அந்தாதி

Q7
N08
33336

பிஸ்மில்லாஹி.

# கீமியாயெ ஸஆதத்து.

இரண்டாவது வால்யம்.

## ருகுனு முஆமலாத்து.

இஃது

இந்தி பார்ஸி பாஷைகளிலிருந்து

மஹா

ஹலரத்து முகம்மது இபுறாஹீம் சாகிபு நக்ஷபந்தி

அவர்களின் ஷாகிர்துகளில் ஒருவராகிய

செல்லிகுப்பம்

அப்துர்ரஹ்மான் சாகிபால்

உரைபடுத்தப்பட்டு,

சென்னை:

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

ஹிஜ்ரி 1326 ௵ ஷஃபான் ௴.

1908 ௵ செப்டம்பர் ௴.

Copyright Registered.

விலை ரூபா 1-6-0. வி-பி.செலவு 0-4-0.

பிஸ்மில்லாஹி.

# விளம்பரம்.

இதினால் சகலருக்கும் தெரிவிப்பது யாதெனில் கீமியாயெ ஸஆதத்தென்னும் இப்புத்தகம் 1876-ஞ 25-வது ஆக்ட்டு 20-வது பிரிவு 8-வது விதியின் பிரகாரம் இங்கிலீஷ் இலாகாவாகிய மதராசில் காப்பிரைட் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறது.

இன்னும் பிரான்சு இலாகாவாகிய புதுச்சேரியிலும் காப்பிரைட் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறது.

ஆகையால் இந்த கீமியாயெ ஸஆதத்து உ-வது வால்யம் முழுமையுமாவது இதிற் சில பாகத்தையாவது அடியிற் கையொப்பமிட்டிருக்கிற உரையாசிரியனுடைய உத்திரவின்றி ஒருவரும் அச்சிடக்கூடாது அப்படி அச்சிட்டால் மேற்கண்ட ஆக்டில் சொல்லியிருக்கிறபடி கோர்டின் மூலமாய் அதனாலுண்டாகும் நஷ்ட மஹாத்மம் வசூல் செய்யப்படும்.

டைட்டில் பேஜில் என் கையெழுத்தாவது நா-அப்துல்கபூர் சாகிபுடைய கையெழுத்தாவது இல்லாத புத்தகம் கள்ளர்களால் வெளிவந்ததாகையால் அக்கள்ளர்களைக் காண்பித்தவர்களுக்குத் தக்க இனாம் கொடுக்கப்படும்.

இப்புத்தகம் தேவையுள்ளவர்கள் நா. அப்துல்கபூர்சாகிபு, டைக்கால் தெருவு, நெல்லிக்குப்பம். என்ற விலாசக்காரரிடம் வர்த்தக விலைக்கும் வீ-பி. பார்சல் மூலமாயும் பெற்றுக்கொள்ளலாம்.

அப்துர் ரஹ்மான்,
நெல்லிக்குப்பம்.

அரபி லுக்தவிஜுட் முத்தியால்பேட் அஹ்ஸனுல் மதாபிஉ என்னும் அச்சில் பதிப்பித்தது.

பிஸ்மில்லாஹி.

## கீமியாயெ ஸஆதத்து

### இரண்டாவது ருகுனு முஆமலாத்து தமிழுரைக்கு

# முகவுரை.

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர்ரஹீம்.

அல்ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமீன். வஸ்ஸலாத்து வஸ்ஸலாமு அலா சய்யிதில் முர்ஸலீன முஹம்மதின் வஆலிஹி வஅஸ்ஹாபிஹி அஜ்மயீன்.

இதற்குமுன் உரையெழுதி அச்சியற்றப்பட்டு வெளிவந்திருக்கிற கீமியாயெ ஸஆதத்து முதலாவது வால்யம் என்னும் புத்தகமாரம்பத்திலுள்ள நான்கு உன்வான்களில் முறையே தன்னை அறிவது, றப்பை அறிவது, துன்யாவை அறிவது, ஆகிரத்தை அறிவது இவைகளின் விஸ்தரிப்பும்; பின்னர் அதில் முடிவுபெற்றிருக்கிற முதலாவது ருகுனு இபாதாத்தில் அடங்கியுள்ள பத்து அஸ்லுகளில் முறையே சுன்னத்து ஜமாஅத்துடைய நிர்ணயம், இல்மைத்தேடல், சுத்தம், தொழுகை, ஸக்காத்து, நோன்பு, ஹஜ்ஜு, குர்ஆன் ஓதல், திக்ரு தஸ்பீஹு, அவ்ராது ஓதுகிற ஒழுங்கு இவைகளின் விபரமும் கூறப்பட்டிருப்பதுடன் நான்முகத்தில் நூலாசிரியரான ஹுஜ்ஜத்துல் இஸ்லாம் இமாம் முஹம்மது கஸ்ஸாலி றஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களுடைய ஜீவிய சரித்திரச் சுருக்கமும் சொல்லப்பட்டிருக்கிறது. அன்றியும் அந்நான்முகத்தில் ஹழ்ரத்து மவ்லானா மவ்லவி முஹம்மது மஹ்தீ அலி என்பவர்கள் ஹிந்துஸ்தானி பாஷையில் இருப்பின கீமியாயெ ஸஆதத்தே அவ்வுரைக்கு மூலப்பிரதி எனவுங் கண்டிருக்கிறது.

இந்த இரண்டாவது ருகுனு முஆமலாத்தையும் அந்த ஹிந்துஸ்தானி பிரதியிலிருந்தே உரைப்படுத்தி வருகையிற் சில சந்தேக நிவர்த்திக்காக முதனூலாகிய பார்ஸீ கீமியாயெ ஸஆதத்தைப் பார்க்கும்படி நேரிட்டது. அப்போது நியாகுடைய பாடத்திற் சிலபாகம் வரையில் உரை எழுதப்பட்டிருந்தது. பின்னர் அந்த பார்ஸிப்பிரதியையே உரைப்படுத்துவது உத்தமமெனத் தோன்றினதால் அதிலிருந்தே மற்றவை சம்உரைப்படுத்தப்பட்டன. இந்த பார்ஸி பிரதியானது ஹிஜ்ரி ஆயிரத்து முன்னூற்று இருபதாம் ஆண்டில் பம்பாய் மத்பகுகரீமி என்னும்

பிஸ்மில்லாஹி.

## விளம்பரம்.

இதினால் சகலருக்கும் தெரிவிப்பது யாதெனில் கீமியாயெ ஸஆதத்தென்னும் இப்புத்தகம் 1870-ஆம் 25-வது ஆக்ட்டு 20-வது பிரிவு 8-வது விதியின் பிரகாரம் இங்கிலீஷ் இலாகாவாகிய மதராசில் காப்பிரைட் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறது.

இன்னும் பிரான்சு இலாகாவாகிய புதுச்சேரியிலும் காப்பிரைட் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறது.

ஆகையால் இந்த கீமியாயெ ஸஆதத்து 2-வது வால்யம் முழுமையுமாவது இதிற் சில பாகத்தையாவது அடியிற் கையொப்பமிட்டிருக்கிற உரையாசிரியருடைய உத்தரவின்றி ஒருவரும் அச்சிடக்கூடாது அப்படி அச்சிட்டால் மேற்கண்ட ஆக்டில் சொல்லியிருக்கிறபடி கோர்ட்டின் மூலமாய் அதனாலுண்டாகும் நஷ்ட ஈடுத்தொகை வசூல் செய்யப்படும்.

டைட்டில் பேஜில் என்கையெழுத்தாவது நா-அப்துல்கபூர் சாகிபுடைய கையெழுத்தாவது இல்லாத புத்தகம் கள்ளர்களால் வெளிவந்ததாகையால் அக்கள்ளர்களைக் காண்பித்தவர்களுக்குத் தக்க இனாம் கொடுக்கப்படும்.

இப்புத்தகம் தேவையுள்ளவர்கள் நா. அப்துல்கபூர்சாகிபு, நைனாக்கால் தெருவு, நெல்லிக்குப்பம். என்ற விலாசக்காரரிடம் கைவிலைக்கும் வீ-பி. பார்சல் மூலமாயும் பெற்றுக்கொள்ளலாம்.

அப்துர் ரஹ்மான்,

நெல்லிக்குப்பம்.

அபுல் லத்தீபியா முத்தியால்பேட் அஹ்ஸனுல் மதாபிஉ என்னும் அச்சில் பதிப்பித்தது.

பிஸ்மில்லாஹி.

# கீமியாயெ ஸஆதத்து

## இரண்டாவது ருகுனு முஆமலாத்து தமிழுரைக்கு

# முகவுரை.

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர்ரஹீம்.

அல்ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமீன். வஸ்ஸலாத்து வஸ்ஸலாமு அலா சய்யிதில் முர்ஸலீன முஹம்மதின் வஆலிஹி வஅஸ்ஹாபிஹி அஜ்மயீன்.

இதற்குமுன் உரையெழுதி அச்சியற்றப்பட்டு வெளிவந்திருக்கிற கீமியாயெ ஸஆதத்து முதலாவது வால்யம் என்னும் புத்தக ஆரம்பத்திலுள்ள நான்கு உன்வான்களில் முறையே தன்னை அறிவது, றப்பை அறிவது, துன்யாவை அறிவது, ஆகிரத்தை அறிவது இவைகளின் விஸ்தரிப்பும்; பின்னர் அதில் முடிவுபெற்றிருக்கிற முதலாவது ருகுனு இபாதாத்தில் அடங்கியுள்ள பத்து அஸ்லுகளில் முறையே சுன்னத்து ஜமாஅத்துடைய நிர்ணயம், இல்மைத்தேடல், சுத்தம், தொழுகை, ஸக்காத்து, நோன்பு, ஹஜ்ஜு, குர்ஆன் ஓதல், திக்ரு தஸ்பீஹு, அவ்ராது ஓதுகிற ஒழுங்கு இவைகளின் விவரமும் கூறப்பட்டிருப்பதுடன் நான்முகத்தில் நூலாசிரியரான ஹலரத்து இமாமுல் ஹுஜ்ஜத்துல் கஸ்ஸாலி றஹ்மத்துல்லாஹி அலைஹியவர்களுடைய ஜீவசரித்திரச் சுருக்கமும் சொல்லப்பட்டிருக்கிறது. அன்றியும் அந்நான்முகத்தில் ஹலரத்து மௌலானா மௌலவி முஹம்மது மஹ்மூதுல் ஹஸன் என்பவர்கள் ஹிந்துஸ்தானி பாஷையில் திருப்பின கீமியாயெ ஸஆதத்தே அவ்வுரைக்கு மூலப்பிரதி எனவுங் கண்டிருக்கிறது.

இந்த இரண்டாவது ருகுனு முஆமலாத்தையும் அந்த ஹிந்துஸ்தானி கிதாபிலிருந்தே உரைபடுத்தி வருகையிற் சில சந்தேக நிவர்த்திக்காக முதனூலாகிய பார்ஸி கீமியாயெ ஸஆதத்தைப் பார்க்கும்படி நேரிட்டது. அப்போது நிகாஹுடைய பாடத்திற் சிலபாகம் வரையில் உரை எழுதப்பட்டிருந்தது. பின்னர் அந்த பார்ஸி கிதாபையே உரைபடுத்துவது உத்தமமெனத் தோன்றினதால் அதிலிருந்தே மற்றவை சரி உரைபடுத்தப்பட்டன. இந்த பார்ஸி கிதாபானது ஹிஜ்ரி ஆயிரத்து முன்னூற்று இருபதாம் ஆண்டில் பம்பாய் மத்பஉகரீமி என்னும்

## முகவுரை.

அச்சியந்திரசாலையிற் பதிப்பிக்கப்பட்டதாயும் 424 பக்கங்களுடையதாயுமிருக்கிறது. ஆகலால் இவ்வுரையில் எங்கேனும் சந்தேகமாயிருந்தால் மேற்கண்ட பார்ஸிகிதாப்பைப் பார்வையிட்டுச் சந்தேகத்தை நிவர்த்திசெய்துகொள்ளலாம். ஆனால் முற்கூறியபடி இவ்வுரையின் ஆரம்பத்திலிருந்து நிகாஹுடைய பாடத்திற் சிலபாகம் வரையில் இந்துஸ்தானி கிதாபிலிருந்து எழுதப்பட்டிருப்பதால் அதில் வரும் சந்தேகங்களுக்கு இந்துஸ்தானி கிதாபைப் பார்வையிடவேண்டும். அன்றியும் இவ்வுரையில் இவ்விதமான (          ) இரண்டு விற்குறிகளுக்குள் அடங்கிய சிலசொற்கள் மூலப்பிரதியில் இல்லாதவைகளாயும் அந்தந்த இடங்களுக்கு வேண்டியபடி அமைக்கப்பட்டவைகளாயுமிருக்கின்றன.

ஆங்காங்கு வருகிற ஆயத்து ஹதீதுகளுக்கு இவ்வுரையில் அவ்வவ்விடங்களில் அர்த்தம் எழுதப்பட்டிருக்கிறது. அந்த ஆயத்துகளையும் ஹதீதுகளையும் அதுத்துக்களையும் ஜடீர் ஹேர் முதலிய குறிகளோடு அப்பொருத்தில் அச்சிட்டு, இவ் இப்புத்தகத்தின் இத்தனையாவது பக்கம் இத்தனையாவது வரியிலிருப்பதென ஓர் அட்டவணை அமைத்து விஷய அட்டவணைக்குமுன் வைக்கப்பட்டிருக்கிறது. இந்த அட்டவணையிற் சில பார்ஸி பய்த்துகளுமுண்டு.

இந்நூலை இயற்றிய இமாமவர்கள் ஷாபிஈ மத்ஹபையுடையவர்களாதலால் இதன் மூன்றாவது அஸ்லு இரண்டாவது பாபிற் கூறியுள்ள ஆறுவகை முஆமலாத்துகளான வர்த்தகம், வட்டி, ஒப்பந்தம், இஜாரத்து என்னும் கூலி, இரஹனு என்னும் அடைமானம், கூட்டு இவைகளிற் சில விஷயங்களும், நாலாவது அஸ்லு இரண்டாவது பாபிற் கூறிய பாகுபாடுடைய எழுவகைத் தொகைகளிற் சில விஷயங்களும் ஷாபிஈ மத்ஹபின் விதிப்படி எழுதப்பட்டிருக்கின்றன. ஆகலால் அவைகளில் ஹனபி மத்ஹபுக்குள்ள பேதாபேதங்களை ஆலிம்களிடத்திற் கேட்டுக்கொள்ளவேண்டும். அப்படி அமல்செய்ய அல்லாஹுதஆலா எல்லாருக்கும் நல்லுதவி செய்வானாக. ஆமீன்.

மனிதன் மறதியாளன் என்ற மறைவாக்கியத்துக் கிணங்க இவ்வுரையில் ஏதேனும் வழுவிருந்தாலுமிருக்கலாம். வழுவைப்பாராட்டாமல் விஷயத்தைக் கவனிப்பதே விக்ஞர்களான மனிதர்களின் விசேடகுணமாதலால் அவர்கள் என்னை மன்னிப்பார்களென நம்புகின்றேன்.

இங்ஙனம்:

அப்துர் ரஹ்மான்.

15 OCT 1906

## விஷய அட்டவணை.


இந்நூலை முஆமலாத்தில்—அடங்கிய அஸ்லுகள் இத்தனை என்பது. 1
முதலாவது அஸ்லு—உணவருந்தும் அதபுகள் ... 1
உண்பதற்கு முன்னேயுள்ள சுன்னத்துகள் ... 2
உண்ணும்போதுள்ள சுன்னத்துகள் 4
தண்ணீர் குடிப்பதற்குள்ள அதபுகள் 6
உண்டு முடிந்த பின்னுள்ள அதபுகள் 6
கூடி உண்பதற்குள்ள அதபுகள் 7
ஒருவரை யொருவர் கண்டுகொள்ளப் போகிறதிலேயும் உணவருந்தும் அதபுகள் ... 11
விருந்தளிப்பதின் வரிசை ... 15
விருந்துக்கழைப்பதும் விருந்தை கபூல் செய்வதும் ... 17
விருந்துக்கு நாடிப்போவது ... 20
உணவுவைக்கும் அதபுகள் ... 21
விருந்தாளி வீட்டிலிருந்து புறப்படும் அதபுகள் ... 22
இரண்டாவது அஸ்லு—நிகாஹின் பயான் ... 23
முதலாவது பாபு-நிகாஹுடைய பலன்களும் அதன் ஆபத்துகளும் ... 24
இரண்டாவது பாபு-நிகாஹ் முடிக்கும் வகையும் அதன் அதபுகளும் பெண்களில் கவனிக்க வேண்டிய பெத்துகளும் ... 33
மூன்றாவது பாபு-நிகாஹுக்குப்பின் நடக்கவேண்டிய காரியங்களின் அதபுகள் ... 35
மூன்றாவது அஸ்லு—தொழில் வர்த்தகம் இவைகளுடைய அதபுகள் 52
முதலாவது பாபு-தொழில் செய்வதின் வரிசையும் சவாபும் ... 53
இரண்டாவது பாபு-தொழில் அல்லது வர்த்தகம் ஷரஉடைய விதிப்படி இருப்பதற்கு வேண்டிய இல்மு 57
வர்த்தகம் ... 58
வட்டி ... 69
ஒப்பந்தம் ... 69
இஜாரத்து அல்லது கூலி வாடகை முதலியவை ... 71
கிராழு அல்லது முழாரபா அதாவது ஒருவனுடைய முதலும் மற்றொருவனுடைய பிரயாசையுமாய் நடத்தும் வேலை ... 78
கூட்டுவேலை ... 79
மூன்றாவது பாபு-முஆமலாவில் நீதத்தைக் கவனிப்பது ... 80
நாலாவது பாபு-முஆமலாவில் உபகாரமும் நன்றியும் செய்வது ... 91
ஐந்தாவது பாபு-தன்னுடைய முஆமலாவில் தீனைப்பற்றிய கவலை வேண்டுமென்பது ... 97
நான்காவது அஸ்லு—ஹலாலைத் தேடுவது ... 107
முதலாவது பாபு-ஹலாலைத் தேடுவதின் சவாபும் வரிசையும் ... 107
இரண்டாவது பாபு-ஹலால், ஹராம் இவைகளிற் பேணுதல் செய்பவர்களின் வகுப்புகள் ... 111
மூன்றாவது பாபு-ஹராமைவிட்டு ஹலாலைப் பிரித்தறிவதும் அதை விசாரித்தறிவதும் ... 120
நான்காவது பாபு-பாதுஷாக்களிடம் பயபுலியயா வாங்குவது அவர்களுக்கு சலாம் சொல்வது முதலியவை 125

ஐந்தாவது அஸ்லு—சகவாசத்தின் ஹக்குகள் ... ... ... 138
முதலாவது பாபு - அல்லாவுக்காக ஒருவரை நேசிப்பது... ... 138
அல்லாவுக்காக நேசிக்கும் நேசம் எதுவென்பது... ... ... 142
அல்லாவுக்காகப் பகைக்கும் பகை எதுவென்பது ... ... 146
இரண்டாவது பாபு-சகவாசத்தின் ஹக்குகளும் அதன் ஷர்த்துகளும் 149
சகவாசம், சினேகம் இவைகளுடைய ஹக்குகள் ... ... ... 151
மூன்றாவது பாபு முஸ்லிம்கள், பந்துக்கள், அண்டை வீட்டார், அடிமைகள் இவர்களுடைய ஹக்குகள் 169
உறவினர்களான பந்துக்களுடைய ஹக்குகள் ... ... 190
தாய்தந்தையருடைய ஹக்குகள் 191
பிள்ளைகளுடைய ஹக்குகள் ... 192
அடிமைகளுடைய ஹக்குகள் ... 195
ஆறாவது அஸ்லு — ஏகாங்கியாய்த் தனிப்பது ... ... 196
ஏகாங்கியாய்த் தனிப்பதின் பிரயோசனங்கள் ... ... 198
ஏகாங்கியாய்த் தனிப்பதின் ஆபத்துகள் ... ... ... 211
ஏகாங்கியாய்த் தனிப்பதில் அநுஷ்டிக்கவேண்டிய அதபுகள் ... 222
ஏழாவது அஸ்லு — சபர் போவதற்குள்ள அதபுகள் ... ... 223
முதலாவது பாபு - சபருடைய நிய்யத்தும் சபருடைய வகைகளும் 224
முஸாபிரானவன் அநுஷ்டிக்கவேண்டிய அதபுகள் ... ... 231
இரண்டாவது பாபு - முஸாபிரானவன் சபர் போகுமுன் கற்றுக்கொள்ள வேண்டிய இல்மு ... 237
எட்டாவது அஸ்லு—இராகத்துடைய பயான் ... ... 243
முதலாவது பாபு - இராகம் கேட்பது முபாஹானா என்பதும் அதில் ஹலாலானது இன்னது ஹறாமானது இன்னது என்பதும் ... 243
இரண்டாவது பாபு - இராகம் கேட்பதிலுண்டாகிற குணங்குறிகள் 251
சூபியாக்கள் ஹக்குத்தஆலாவை நாடி இராகம் கேட்பவர்களாயிருந்தார்கள் என்ற ஓர் சுவாலும் அதற்கு ஜவாபும் ... ... 260
இராகங்கேட்பதற்குள்ள அதபுகள் 272
ஒன்பதாவது அஸ்லு—ஏவல் விலக்கல்களின் பயான். ... 274
முதலாவது பாபு - நன்மை தீமைகளை உணர்த்தி ஏவல் விலக்கல் செய்வது வாஜிபென்பது ... 274
இரண்டாவது பாபு - ஏவல் விலக்கல் செய்வதற்கு வேண்டிய இல்மு 277
உணர்த்துகிறவனுக்கு வேண்டிய அதபுகள் ... ... 297
மூன்றாவது பாபு-வழக்கத்தில் பெருகியிருக்கிற தீமைகளின் பயான் 301
பத்தாவது அஸ்லு — அரசாளுவதும் அதிகாரம் செலுத்துவதும்... 307
அரசர்களும் தலைமைத்தனம் செய்பவர்களும் அறியவேண்டிய பத்து காயிதாக்கள் ... ... 310

முற்றிற்று.

| | | |
|---|---|---|
| 263 | 15 | خورشید برآمدی نگارین دیر است ؛ پرنده اگرشتابدازادبیرست |
| 267 | 35 | كنا كما كنتم ثم تبت قلوبنا ۞ |
| 273 | 25 | خالق الناس باخلاقهم ۞ |
| 274 | 15 | ولتكن منكم امة يدعون الى الخير ويامرون بالمعروف وينهون عن المنكر ۞ |
| 274 | 26 | الذين ان مكناهم في الارض اقاموا الصلوة واتوا الزكوة وامروا بالمعروف ونهوا عن المنكر ۞ |
| 288 | 1 | ولا تلقوا بايديكم الى التهلكة ۞ |
| 298 | 23 | وأمر بالمعروف وانه عن المنكر واصبر على ما اصابك ۞ |
| 299 | 28 | فقولا له قولا لينا. الخ ۞ |
| 321 | 21 | ام حسب الذين اجترحوا السيئات ان نجعلهم كالذين امنوا وعملوا الصلحت سواء محياهم ومماتهم ساء ما يحكمون ۞ |

والحمد لله رب العلمين، وصلى الله تعالى على خير خلقه
نور عرشه سيدنا ومولانا محمد واله واصحابه
اجمعين برحمتك يا ارحم الرحمين،

تمت

مطبوعة احسن المطابع متيالهيت مدراس ١٣٢٩

| | | |
|---|---|---|
| 212 | 32 | فَقَدِ اتَّخَذَ اِلٰهَهٗ هَوَاهُ۝ |
| 214 | 17 | لَيْسَ الْخَبَرُ كَالْمُعَايَنَةِ۝ |
| 224 | 1 | اَوَلَمْ يَنْظُرُوْا فِيْ مَلَكُوْتِ السَّمٰوٰتِ وَالْاَرْضِ وَمَا خَلَقَ اللّٰهُ |
| | | مِنْ شَيْءٍ۝ |
| 226 | 5 | وَكَاَيِّنْ مِّنْ اٰيَةٍ فِي السَّمٰوٰتِ وَالْاَرْضِ يَمُرُّوْنَ عَلَيْهَا |
| | | وَهُمْ عَنْهَا مُعْرِضُوْنَ۝ |
| 227 | 22 | لَا تُشَدُّ الرِّحَالُ اِلَّا اِلٰى ثَلٰثَةِ مَسَاجِدَ۝ |
| 228 | 8 | وَقَدْ نَجَا الْمُخِفُّوْنَ۝ |
| 232 | 14 | اَسْتَوْدِعُ اللّٰهَ دِيْنَكَ وَاَمَانَتَكَ وَخَوَاتِيْمَ عَمَلِكَ۝ |
| 232 | 18 | زَوَّدَكَ اللّٰهُ التَّقْوٰى وَغَفَرَ ذَنْبَكَ وَوَجَّهَ لَكَ الْخَيْرَ |
| | | حَيْثُمَا تَوَجَّهْتَ۝ |
| 232 | 32 | اَسْتَوْدِعُ اللّٰهَ مَا فِيْ بَطْنِكِ۝ |
| 233 | 30 | اَللّٰهُمَّ اِنِّيْ اَتَقَرَّبُ بِهِنَّ اِلَيْكَ فَاخْلُفْنِيْ بِهِنَّ فِيْ اَهْلِيْ |
| | | وَمَالِيْ وَهِيَ خَلِيْفَتِيْ فِيْ اَهْلِهٖ وَمَالِهٖ وَدُوَيْرَتِهٖ اِلٰى دَارِهٖ |
| | | حَتّٰى يَرْجِعَ اِلٰى اَهْلِهٖ |
| 233 | 35 | بِسْمِ اللّٰهِ وَبِاللّٰهِ تَوَكَّلْتُ عَلَى اللّٰهِ لَا حَوْلَ وَلَا قُوَّةَ اِلَّا |
| | | بِاللّٰهِ رَبِّ اَعُوْذُ بِكَ اَنْ اَضِلَّ اَوْ اُضَلَّ اَوْ اَظْلِمَ |

| | | |
|---|---|---|
| | | اَوْ اُظْلَمَ اَوْ اَجْهَلَ اَوْ يُجْهَلَ عَلَيَّ۝ |
| 234 | 3 | سُبْحَانَ الَّذِيْ سَخَّرَ لَنَا هٰذَا وَمَا كُنَّا لَهٗ مُقْرِنِيْنَ وَاِنَّا |
| | | اِلٰى رَبِّنَا لَمُنْقَلِبُوْنَ۝ |
| 234 | 13 | اَللّٰهُمَّ بَارِكْ لِاُمَّتِيْ فِيْ بُكُوْرِهَا يَوْمَ السَّبْتِ۝ |
| 234 | 14 | اَللّٰهُمَّ بَارِكْ لِاُمَّتِيْ فِيْ بُكُوْرِهَا يَوْمَ الْخَمِيْسِ |
| 235 | 35 | اَللّٰهُمَّ اجْعَلْ لَّنَا بِهَا قَرَارًا وَّرِزْقًا حَسَنًا۝ |
| 236 | 7 | تَوْبًا تَوْبًا لِرَبِّنَا اَوْبًا لَا يُغَادِرُ عَلَيْنَا حَوْبًا۝ |
| 249 | 26 | لِكَيْلَا تَاْسَوْا عَلٰى مَا فَاتَكُمْ۝ |
| 250 | 5 | طَلَعَ الْبَدْرُ عَلَيْنَا مِنْ ثَنِيَّاتِ الْوَدَاعِ۝ |
| | | وَجَبَ الشُّكْرُ عَلَيْنَا مَا دَعَا لِلّٰهِ دَاعٍ۝ |
| 252 | 28 | وَاِذْ لَمْ يَهْتَدُوْا بِهٖ فَسَيَقُوْلُوْنَ هٰذَا اِفْكٌ قَدِيْمٌ۝ |
| 256 | 7 | گفتم بشمارم سر یک حلقہ زلفش ٭ تا تو کہ بتفصیل سر جملہ برآرم |
| | | خندید بمن بر سر زلفینک مشکین ٭ یک پیچ بہ پیچید و غلط کرد شمارم |
| 256 | 27 | گرمی دو ہزار رطل برپائی ٭ تا می نخوری نباشدت شیدائی |
| 257 | 8 | ہر کہ بخرابات نشد بے دین است ٭ زیرا کہ خرابات اصول دین است |
| 258 | 14 | مَا زَالَتْ فِي النَّوْمِ اِلَّا حَيًّا لَكُمْ۝ |
| 262 | 27 | زاول بنت سیل ہاں سیل کجا است ٭ وامروز ملول گشتن از بہر چیست |

| | | |
|---|---|---|
| | | عُمُرَكَ فِي طَاعَتِهِ ۝ |
| 133 | 26 | تَبَّتْ يَدَا أَبِي لَهَبٍ ۝ |
| 134 | 29 | إِنَّ الْأَبْرَارَ لَفِي نَعِيمٍ وَإِنَّ الْفُجَّارَ لَفِي جَحِيمٍ ۝ |
| 134 | 32 | قَرِيبٌ مِنَ الْمُحْسِنِينَ ۝ |
| 137 | 14 | وَلَا تَرْكَنُوا إِلَى الَّذِينَ ظَلَمُوا ۝ |
| 139 | 10 | الْمُتَحَابُّونَ فِي اللهِ ۝ |
| 149 | 4 | اللّٰهُمَّ اهْدِ قَوْمِي فَإِنَّهُمْ لَا يَعْلَمُونَ ۝ |
| 148 | 28 | لَا تَجِدُ قَوْمًا يُؤْمِنُونَ بِاللهِ وَالْيَوْمِ الْآخِرِ يُوَادُّونَ مَنْ حَادَّ اللهَ وَرَسُولَهُ ۝ |
| 150 | 17 | وَلَا تُطِعْ مَنْ أَغْفَلْنَا قَلْبَهُ وَاتَّبَعَ هَوَاهُ ۝ |
| 152 | 9 | وَيُؤْثِرُونَ عَلَى أَنْفُسِهِمْ وَلَوْ كَانَ بِهِمْ خَصَاصَةٌ ۝ |
| 158 | 2 | إِذَا أَحَبَّ أَحَدُكُمْ أَخَاهُ فَلْيُخْبِرْهُ ۝ |
| 159 | 21 | الْمُؤْمِنُ مِرْآةُ الْمُؤْمِنِ ۝ |
| 160 | 36 | وَلٰكِنْ لَا تُحِبُّونَ النَّاصِحِينَ ۝ |
| 165 | 1 | فَإِنْ عَصَوْكَ فَقُلْ إِنِّي بَرِيءٌ مِمَّا تَعْمَلُونَ ۝ |
| 167 | 21 | إِنَّ الشَّيْطَانَ يَنْزَغُ بَيْنَهُمْ ۝ |
| 167 | 23 | مِنْ بَعْدِ أَنْ نَزَغَ الشَّيْطَانُ بَيْنِي وَبَيْنَ إِخْوَتِي ۝ |



| | | |
|---|---|---|
| 177 | 10 | وَلَا تَجَسَّسُوا ۝ |
| 177 | 12 | وَأْتُوا الْبُيُوتَ مِنْ أَبْوَابِهَا ۝ |
| 177 | 14 | وَلَا تَدْخُلُوا بُيُوتًا غَيْرَ بُيُوتِكُمْ حَتَّى تَسْتَأْنِسُوا وَتُسَلِّمُوا عَلَى أَهْلِهَا ۝ |
| 179 | 22 | وَيَدْرَءُونَ بِالْحَسَنَةِ السَّيِّئَةَ ۝ |
| 182 | 2 | اللّٰهُمَّ أَصْلِحْ أُمَّةَ مُحَمَّدٍ اللّٰهُمَّ ارْحَمْ أُمَّةَ مُحَمَّدٍ اللّٰهُمَّ فَرِّجْ عَنْ أُمَّةِ مُحَمَّدٍ صَلَّى اللهُ عَلَيْهِ وَآلِهِ وَأَصْحَابِهِ وَسَلَّمَ ۝ |
| 185 | 1 | بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ أُعِيذُكَ بِاللهِ الْأَحَدِ الصَّمَدِ الَّذِي لَمْ يَلِدْ وَلَمْ يُولَدْ وَلَمْ يَكُنْ لَهُ كُفُوًا أَحَدٌ مِنْ شَرِّ مَا تَجِدُ ۝ |
| 185 | 7 | أَعُوذُ بِعِزَّةِ اللهِ وَقُدْرَتِهِ مِنْ شَرِّ مَا أَجِدُ ۝ |
| 193 | 22 | إِنَّمَا أَمْوَالُكُمْ وَأَوْلَادُكُمْ فِتْنَةٌ ۝ |
| 194 | 4 | قَضَى رَبُّكَ أَلَّا تَعْبُدُوا إِلَّا إِيَّاهُ وَبِالْوَالِدَيْنِ إِحْسَانًا ۝ |
| 205 | 31 | عِنْدَ ذِكْرِ الصَّالِحِينَ تَنْزِلُ الرَّحْمَةُ ۝ |
| 209 | 2 | وَاللهِ لَقَدْ حَلَّتِ الْعُزُوبَةُ ۝ |
| 210 | 10 | وَلَا تَمُدَّنَّ عَيْنَيْكَ إِلَى مَا مَتَّعْنَا بِهِ أَزْوَاجًا مِنْهُمْ ۝ |

| | | |
|---|---|---|
| | | عيني في الصلوة ۝ |
| 28 | 34 | ليتخذ احدكم لسانا ذاكرا وقلبا شاكرا وزوجة مؤمنة |
| 32 | 5 | ولهن مثل الذي عليهن بالمعروف ۝ |
| 32 | 18 | يا ايها الذين امنوا لا تلهكم اموالكم ولا اولادكم عن ذكر الله |
| 39 | 2 | اولم ولو بشاة ۝ |
| 41 | 15 | خيركم خيركم لاهله وانا خيركم لاهلي ۝ |
| 42 | 21 | الرجال قوامون على النساء ۝ |
| 43 | 23 | تعس عبد الزوجة ۝ |
| 44 | 15 | مضغة مني ۝ |
| 46 | 13 | قوا انفسكم واهليكم نارا ۝ |
| 47 | 32 | بسم الله العلي العظيم الله اكبر الله اكبر ۝ |
| 48 | 1 | اللهم جنبنا الشيطان وجنب الشيطان ما رزقتنا ۝ |
| 48 | 5 | الحمد لله الذي جعل من الماء بشرا فجعله نسبا وصهرا |
| 49 | 10 | كنا نعزل والقران ينزل ۝ |
| 55 | 32 | ما اوحي الي ان اجمع المال واكون من التاجرين ولكن اوحي الي ان سبح بحمد ربك وكن من الساجدين واعبد ربك حتى ياتيك اليقين ۝ |
| 83 | 34 | رحم الله امرءا سهل القضاء وسهل الاقتضاء ۝ |
| 85 | 4 | ما يلفظ من قول الا لديه رقيب عتيد ۝ |
| 85 | 13 | لا والله بلى والله ۝ |
| 86 | 10 | من غشنا فليس منا ۝ |
| 88 | 25 | ويل للمطففين الذين الخ ۝ |
| 89 | 31 | وان منكم الا واردها الخ ۝ |
| 92 | 1 | ان الله يامر بالعدل والاحسان ۝ |
| 92 | 5 | ان رحمت الله قريب من المحسنين ۝ |
| 94 | 5 | رحم الله امرءا سهل البيع وسهل الشراء ۝ |
| 100 | 19 | لا تلهكم اموالكم ولا اولادكم عن ذكر الله ۝ |
| 101 | 10 | لا تلهيهم تجارة ولا بيع عن ذكر الله ۝ |
| 101 | 33 | لا اله الا الله وحده لا شريك له له الملك وله الحمد يحيي ويميت وهو حي لا يموت بيده الخير وهو على كل شيء قدير ۝ |
| 107 | 5 | طلب الحلال فريضة على كل مسلم ۝ |
| 107 | 24 | يا ايها الرسل كلوا من الطيبات واعملوا صالحا ۝ |
| 114 | 8 | كخ كخ القها ۝ |
| 129 | 3 | اصلحك الله ووفقك الله للخيرات وطول الله |

## கீமியாயெ ஸஆதத்து இரண்டாவது ருகுனு முஆமலாத்தில் அடங்கியுள்ள ஆயத்துகளும் ஹதீதுகளும் துஆக்களும்

| | வரி | பக்கம் |
|---|---|---|
| الحمد لله رب العالمين والصلوة والسلام على سيد المرسلين محمد وآله وأصحابه أجمعين | முகவுரை | |
| كلوا واشربوا واعملوا صالحا | 5 | 2 |
| الحمد لله الذي جعله عذبا فراتا برحمته ولم يجعله ملحا اجاجا بذنوبنا | 14 | 6 |
| الحمد لله الذي أطعمنا وسقانا وكفانا وآوانا وهو سيدنا ومولانا | 1 | 7 |
| خيركم من أطعم الطعام | 1 | 11 |
| الحمد لله الذي متعنا بما رزقتنا | 24 | 14 |
| وما خلقت الجن والإنس إلا ليعبدون | 24 | 23 |
| كلميني يا عائشة | 10 | 28 |
| أرحنا يا بلال | 16 | 28 |
| حبب إلي من دنياكم ثلث الطيب والنساء وقرة | 20 | 28 |

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்.

# கீமியாயெ ஸஆதத்து.

இரண்டாவது ருக்குனு.

## முஆமலாத்துடைய பயான்.

(முதலாவது ருக்குனுக்கு எப்படியோ அப்படியே) இந்த இரண்டாவது ருக்குனுக்கும் பத்து அஸ்லுகளுண்டு. முதலாவது அஸ்லு-உணவருந்தும் அதபுகளின் பயான். இரண்டாவது அஸ்லு-நிக்காஹுடைய அதபுகளின் பயான். மூன்றாவது அஸ்லு-கைத்தொழில், வர்த்தகம் இவைகளுடைய அதபுகளின் பயான். நான்காவது அஸ்லு-ஹலாலைத் தேடுவதின் பயான். ஐந்தாவது அஸ்லு-ஜனங்களோடு சகவாசஞ் செய்யும் அதபுகளின் பயான். ஆறாவது அஸ்லு-ஜனங்களை விட்டும் தனித்திருக்கும் அதபுகளின் பயான். ஏழாவது அஸ்லு-சபருடைய அதபுகளின் பயான். எட்டாவது அஸ்லு-இராகம் கேட்பதின் பயான். ஒன்பதாவது அஸ்லு-நன்மையைக் கொண்டு ஏவுதல், தீமையை விட்டும் விலக்குதல் இவைகளுடைய அதபுகளின் பயான். பத்தாவது அஸ்லு-அதிகாரம் செலுத்தல், தலைமைத்தனஞ் செய்தல் இவைகளுடைய அதபுகளின் பயான்.

### 1-வது அஸ்லு-உணவருந்தும் அதபுகள்.

அறிந்து கொள்ளுங்கள்:—எவர் இபாதத்துக்கு வழியாயிருக்கிறதோ அதுவும் இபாதத்தைச் சேர்ந்ததாயிருக்கும். வழியின் செலவுக்கு வேண்டிய தயாரிப்பானது வழியைச் சேர்ந்ததேயாம். ஆகவே எந்த வஸ்து தீனுடைய வழிக்குத் தேவையோ அது தீனிற் சேர்ந்ததாகும்.

தீன்வழி நடப்பவர்களுக்கு உணவு தேவையாகின்றது. ஏனென்றால், இந்த வழியில் நடக்கிற எல்லாரும் அல்லாஹு தஆலாவுடைய தீதாரியகிரசனையை நாடிச்செல்லுகிறார்கள். அந்தத் தரிசனையானது இல்மு, அமல் இவைகளால் கிடைப்பதாயிருக்கிறது. இல்மு படிப்பதும், அமல் செய்வதும் தேகசவுக்கியத்தினலன்றி முடியாது; தேக

சவுக்கியமோ, உணவு குடிப்பு இவைகளைப் பொருத்ததா யிருக்கிறது. மேலும், தீன்வழி நடப்புக்காக உணவு உண்பது அவசியமென்றால் அது தீனுடைய காரியங்களில் ஒன்றேயாகும். இதனாலேதான் அல்லாஹுதஆலா உணவையும் அமலையும் ஒருங்கே சேர்த்து "நீங்கள் உண்ணுங்கள், பருகுங்கள், நல்ல அமலைச் செய்யுங்கள்" என்று திருவுளமாயிருக்கிறான். ஆகவே, எவனொருவன் இல்மு படிப்பது, அமல் செய்வது, தீனுடைய பாதையில் நடப்பது இவைகளுடைய வலிவுக்காக உணவு உண்டானோ அவன் உண்பது இபாதத்தேயாம். இதனாலே நாயகம் றஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்கள் தங்கள் திருவாயினால் முமினுக்கு ஒவ்வொரு வஸ்துவிலும் ஸவாபுண்டாகிறதென்றும், அவன் தான் தின்னுகிற அல்லது தன்னுடைய பெண்சாதி பிள்ளைகளுக்குத் தின்னக் கொடுக்கிற துண்டுப் பிடி உணவின் பேரிலும் அவனுக்கு ஸவாபு கிடைக்கிறதென்றும் திருவுளமா யிருக்கிறார்கள். இப்படி எந்த அமலிலும் அவனுக்கு ஸவாபு கிடைக்கிறதாய்ச் சொன்னது எதனாலென்றால், முமினானவன் இவையெல்லாவற்றிலும் தீனுடைய பாதையை நிய்யத்து செய்கிறானேயாம். தீனுடைய பாதையை நிய்யத்து செய்து உண்பதற்கு அத்தாட்சியாவது ஆவலாய்த் தின்னாதிருப்பதும், ஹலாலான தொழிலால் சம்பாதித்து நிறைந்த அளவின்படி உண்பதும், உண்பதற்குள்ள அதபுகளை நோட்டத்தில் வைப்பதுமா யிருக்கும்.

## உணவருந்துவதற்குள்ள அதபுகள்.

அறிந்து கொள்ளுங்கள்:—உணவருந்துவதில் பல சுன்னத்துகளுண்டு. அவைகளில் சில சுன்னத்துகள் உண்பதற்கு முன்னேயும் சில சுன்னத்துகள் இடையிலும் சில சுன்னத்துகள் அதன் பிறகுமா யிருக்கின்றன.

உண்பதற்கு முன்னேயுள்ள சுன்னத்துகளில் முதலாவது சுன்னத்து:—கை, வாய் இவைகளைக் கழுவிக்கொள்வதாம். ஏனென்றால், உண்பது தீனுடைய பாதையின் தங்கரிப்புக்கென்று நிய்யத்திருந்தால் அது இபாதத்தேயாம். உண்பது இபாதத்தானால் கை, வாய்களைக் கழுவுதலாகிய இது ஒளுவைப்போலாகும். ஒளுவோ இபாதத்துக்கு அவசியம் வேண்டியதா யிருக்கிறது. அன்றியும் கழுவுவதில் கை, வாய்களும் சுத்தமாகின்றன. "எவனொருவன் உணவருந்துவதற்கு முன்னே கையைக் கழுவிக்கொள்ளுகின்றானோ அவன் மிடிமைத் தனத்தை விட்டும் கவலையற்றிருப்பான்" என்று ஹதீஸில் வந்திருக்கிறது.



இரண்டாவது சுன்னத்து:—உணவை (மறவையின்மேல் அல்ல) சுப்ராவின்மேல்வைத்து உண்பதாயிருக்கும். றஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்கள் இப்படியே உண்பவர்களா யிருந்தார்கள். ஏனென்றால், சுப்ராவானது சபரை ஞாபகப்படுத்துகின்றது. துன்யாவுடைய சபரானது ஆகிறத்துடைய சபரை நினைப்பூட்டுகின்றது. அன்றியும், இதில் தாழ்ச்சியு மிருக்கின்றது. யாராவது உணவை மறவையின்மேல் வைத்து உண்டபோதிலும் ஆகும். அதைப்பற்றி ஷரகில் விலக்கில்லை. என்றாலும் ஸலபுகளென்னும் முன்னோரான பெரியோர்களும் றஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்களும் உணவை சுப்ராவின்மேல் வைத்து உண்பவர்களா யிருந்தார்கள்.

மூன்றாவது சுன்னத்து:—நல்ல விதமாய் உட்காருவதாம். அதாவது, வலது முழங்காலை நிலையாய் நிறுத்தி இடது காலின்மேல் உட்காருவான். திண்டில் சாய்ந்துகொண்டு உண்ணமாட்டான். ஏனென்றால், றஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்கள் தங்கள் திருவாயினால், "நான் திண்டில் சாய்ந்து உண்ணமாட்டேன்; நான் அடிமையா யிருக்கிறேன்; அடிமைபோல் உட்காருவேன்; அடிமைபோல் உண்பேன்" என்று திருவுளமாயிருக்கிறார்கள்.

நான்காவது சுன்னத்து:—(இச்சைக்கல்ல) இபாதத்தில் பலமுண்டாவதற்காக உண்கிறேன் என்று நிய்யத்து செய்வதாம். "என்பது வருஷம் சென்றிருக்கிறது இதன் நடுவில் நான் எந்த வஸ்துவையும் இச்சைக்காகத் தின்றதில்லை" என்று இப்ராஹீமுப்னு ஷைபான் என்பவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இந்த நிய்யத்து உண்மையென்பதற்கு அடையாளமாகிறது கொஞ்சமாய் உண்ண நாட்டம் வைப்பதேயாம். ஏனென்றால், அதிகமாய் உண்பது மனிதனை இபாதத்து செய்யவொட்டாமல் தடுக்கின்றது. அன்றியும், றஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்கள் தங்கள் திருவாயினால் "மனிதனுக்குத் தெம்பு வரக்கூடிய சில சிறிய பிடிகளே அவனுக்குப் போதுமென்றும், அப்படிச் செய்ய முடியாமற்போனால் வயிற்றின் மூன்றிலொரு பங்கை உணவுக்காகவும், மூன்றிலொரு பங்கை தண்ணீருக்காகவும், மூன்றிலொரு பங்கை மூச்சு வாங்குவதற்காகவும் விட்டுவிடுவான்" என்றும் திருவுளமா யிருக்கிறார்கள்.

ஐந்தாவது சுன்னத்து:—பசியெடுத்தபின் உண்பதாம். ஏனென்றால், பசியெடுக்குமுன் உண்பது மக்ருஹாயும் பழிக்கப்பட்டதாயு மிருக்கிறது. எவனொருவன் பசியெடுத்த நேரத்தில் உண்கிறானாயும்,

பசியடங்குமுன் உணவிலிருந்து கையை எடுத்துக்கொள்ளுகிறவனாயு மிருக்கிறேனே அல்லன் ஒருபோதும் வயிற்றினைத் தேடான்.

ஆறாவது சுன்னத்து:—ருசிகரமான உணவைத் தேடாமல் எது ஹாஸிராயிருக்கிறதோ அதனையே போதுமெனப் பொருந்திக் கொள்வதாம்; ஏனென்றால், உண்பதில் இபாதத்துக்கு வேண்டிய உடம்பின் வலிமையைக் காக்கவேண்டு மென்பதே மூமினுடைய நாட்டமாயிருக்கிறது. ருசியான உணவுகளைத் தின்று மகிழ்ந்து பெருமை பாராட்டுவதற்கல்ல. * ரொட்டிக்கு சங்கை செய்வது சுன்னத்தாயிருக்கும். ஏனென்றால், அதனால் மனிதனுக்கு பலமுண்டாகிறதினாலேயாம். † கறியை எதிர்பாராம லிருப்பதே ரொட்டிக்குப் பெரிய சங்கையாயிருக்கும். மேலும், தொழுகைக்காகவும் அதைப் பிற்படுத்தாமல் அது ஹாஸிரானபோதே முந்தி அதை உண்டு அதன் பிறகு தொழுதுகொள்ளுவான்.

ஏழாவது சுன்னத்து:—தன்னோடு கூடியுண்கிறவன் யாராவதிருந்தால் அவன் ஹாஸிராகிற வரையில் உண்ணாமலிருப்பதாம். ஏனென்றால், தனியாய் உண்பது அழகல்ல. உணவில் எத்தனை கைகள் விழுமோ அத்தனை பரக்கத்துண்டாகும். "றசூல் சல்லல்லாகு அலைஹி வசல்லமவர்கள் ஒருபோதாவது தனியாய் உண்டதில்லை" என்று அனசு றலியல்லாகு அன்கு சொல்லியிருக்கிறார்கள்.

இனி உண்ணும்போதுள்ள அதபுகளில் முதலாவது அதபு:—ஆரம்பத்தில் பிஸ்மில்லாஹ் என்றும், கடைசியில் அல்ஹம்து லில்லாஹ் என்றும் சொல்வதாம். ஆனால், முதலாவது பிடியில் பிஸ்மில்லாஹி என்றும், இரண்டாவது பிடியில் பிஸ்மில்லாஹிர் றஹ்மான் என்றும், மூன்றாவது பிடியில் பிஸ்மில்லாஹிர் றஹ்மானிர் றஹீம் என்றும் சொல்வது மிக மேலாயிருக்கும். மற்றவர்களுக்கும் கேட்கும்படி பிஸ்மில்லாவை சப்தமிட்டுச் சொல்லுவான். வலதுகையால் உண்பான். உப்பைக் கொண்டு தொடங்கி உப்பைக்கொண்டு முடிப்பான். "துவக்கத்தில் உப்பைத்தின்பது இர்சைக்கு மாற்றமாகையால் அது எழுபது நோயை அடக்குமென்று ஹதீஸில் வந்திருக்கிறது. சிறுபிடியாக எடுத்து வாயுட்கொண்டு நன்றாய் மெல்லுவான். அதை விழுங்குகிற வரையில் மறுபிடியை வாயுட்கொள்ளான். உணவில் குற்றம் கூறான். ஏனென்றால், றசூல் சல்லல்லாகு அலைஹிவசல்லமவர்கள் உணவின்மேல் குற்றங்

* ரொட்டி என்பதில் சோறு முதலிய உணவுகளும் அடங்கும்.
† கறியென்பதில் தர்க்காரி பதார்த்தங்களும் அடங்கும்.



கூறாதவர்களாயும் தங்களுக்குப் பிரியமானதைப் புசிப்பவர்களாயும் பிரியமில்லாததை விட்டுவிடுகிறவர்களாயுமிருந்தார்கள்.

பாத்திரத்தில் நின்றும் உணவைத் தனக்கு முன்னாலிருந்து எடுத்துண்பான். ஆனால் கனிவர்க்கங்களைத் தட்டத்தினின்று பலபக்கங்களினின்றும் எடுத்துத் தின்பது ஆகும். ஏனென்றால், அவை ஒன்றுக்கு ஒன்று வித்தியாசப்பட் டிருப்பதினாலேயாம். ரொட்டித் துண்டுகளை இறைச்சியாணத்துடன் கலந்து செய்யப்பட்ட ஸரீது என்னும் உணவைப் பாத்திரத்தின் நடுவில் நின்றும் எடுத்துத் தின்னான். ரொட்டியையும் நடுவில்நின்றல்ல ஓரத்தில்நின்றும் பிட்டுத் தின்பான்; அதைக் கத்தியால் அறுத்துத் தின்னமாட்டான். இறைச்சியையும் கத்தியால் அறுக்கமாட்டான். கறியைக்கூட்டோராவையும் தின்பண்டமல்லாத மற்ற யாதொன்றையும் ரொட்டியின்மேல் வைக்கமாட்டான். கையையும் ரொட்டியில் துடைக்கான்.

உணவின் ஒரு பிடியாவது மற்றும் தின்பண்டமாவது கையிலிருந்து கீழேவிழுந்துபோனால் அதை எடுத்துக்கொள்ளுவான், சுத்தப்படுத்தித் தின்பான். ஏனென்றால், அதை எடுக்காமல் விட்டு விடுவானாகில் ஷைத்தான் அதை உபயோகிப்பான் என்று ஹதீஸில் வந்திருக்கிறது. முதலில் விரல்களை வாயினால் சூப்பி அதன்பிறகு பிடைவையால் துடைப்பான். ஏனென்றால், பரக்கத்து அதில் தங்கியிருக்கவும் கூடுமாதலாலென்க. சூடாயிருக்கிற உணவை வாயினால் ஊதமாட்டான், ஆறுகிறவரையில் பொறுப்பான்.

பேரீந்து, ஜர்தாலு முதலிய கனிகளை அல்லது எண்ணும்படியான யாதொரு பண்டத்தைத் தின்றால், ஏழு அல்லது பதினொன்று அல்லது இருபத்தொன்று இப்படி ஒற்றைப்படத் தின்பான். ஏனென்றால், இவனுடைய எல்லாக் காரியங்களும் அல்லாகு தஆலாவுடன் சம்பந்தப்பட்டிருக்கவேயாம். அல்லாகுதஆலா இணைத் துணையில்லாத ஒருவனாயிருக்கிறான். எந்தக்காரியத்தில் ஒருவாறு அல்லாகு தஆலாவுடைய நினைவு உண்டாகவில்லையோ அந்தக் காரியம் ஒவ்வொன்றும் வீணும் பயனற்றதுமேயாம். ஆகவே, ஒற்றைப்படுமெண்ணானது ஒருவனாகிய அல்லாகுதஆலாவுடன் சம்பந்தப்பட்டிருக்கிற நிமித்தம் அது இரட்டைப்படுமெண்ணினும் சிறந்ததாயிற்று.

தின்று உமிழும் பேரீந்துக் கொட்டைகளைப் பழத்துடன் ஒரு தட்டத்தில் சேர்க்கான். கையிலும் வைத்துக்கொள்ளான். இன்னும் எந்தப் பண்டத்தின் சக்கையை அல்லது திப்பியை எறிந்துவிடுகிறா

களை அர்க்கப்பண்டங்க ளெல்லாவற்றிலும் இப்படியேயாம். உணவு உண்பதற்கிடையில் தண்ணீரை அதிகமாய்க் குடிக்கான்.

தண்ணீர் குடிப்பதற்குள்ள அதபுகளாவன:—பான பாத்திரத்தை வலது கையினால் எடுப்பான். பிஸ்மில்லாஹ் சொல்லுவான். மெதுவாகக் குடிப்பான். நின்றுகொண்டாவது படுத்துக்கொண்டாவது குடிக்கான். பூச்சு, பொட்டு, செத்தை முதலியவை விழுந்திராதபடி முதலில் பாத்திரத்தைப் பார்த்துக்கொள்ளுவான். ஏப்பம் வந்தால் பாத்திரத்தை விட்டும் முகத்தைத் திருப்பிக்கொள்ளுவான். மற்றொரு தரம் அதிகமாய்க் குடிக்க வேண்டுமானால் மூன்றுதரமாய்க் குடிப்பான். ஒவ்வொருதரமும் பிஸ்மில்லா சொல்லுவான். முடிவில் அல்ஹம்து லில்லா சொல்லுவான். தண்ணீர் எங்கும் சிந்தாதபடி பாத்திரத்தைக் கவனமாய்ப் பார்த்துக்கொள்ளுவான். குடித்து முடிந்தால் இதை ஓதுவான்:—

"அல்ஹம்து லில்லாஹில்லதீ ஜஅலஹு அத்பன் புராதன்
பிறஹ்மத்திஹி வலம்யஜ்அல்ஹு மில்ஹன் உஜாஜன் பிதுனூபினா.

உண்டு முடிந்தபின் அதபுகளாவன:—வயிறு நிறைவதற்கு முன்னே உண்பதை நிறுத்திவிடுவான். விரல்களை வாயினால் சூப்பி அதன்பிறகு சுபுராவில் துடைப்பான். சிந்திப்போன ரொட்டித் துண்டுகளைப் பொறுக்கிக்கொள்ளுவான். இப்படிச் செய்கிறவனுக்கு உணவில் பரக்கத்துண்டாகும் என்றும் அவனுடைய பிள்ளைகள் சுகமுள்ளதாயும் குற்றமற்றதாயும் இருக்குமென்றும், அந்தத் துண்டுகள் சொர்க்கத்து ஹூறுகளுக்கு மஹராகுமென்றும் ஹதீதில் வந்திருக்கிறது. பிறகு பற்களைக் கோதுவான். அவற்றிலிருந்து நாவின்மேல் வந்ததை விழுங்கிவிடுவான். கோதும் குச்சியோடு வெளிப்பட்டதை உமிழ்ந்து விடுவான். உண்ட பாத்திரத்தை விரலால் சுத்தப்படுத்தி அதை நக்கிக்கொள்ளுவான். யாராவதொருவன் இவ்விதம் பாத்திரத்தைச் சுத்தப்படுத்துவானாகில் அப்போது அந்தப் பாத்திரமானது "என்னுடைய ஆண்டவனே! ஷைத்தானுடைய கையை விட்டும் இவன் என்னைக் காப்பாற்றினதுபோல் நரகத்தினுடைய நெருப்பைவிட்டும் நீ இவனைக் காப்பாற்று" என்று சொல்லுகிறதாயும் உண்டபின் அப்பாத்திரத்தைக் கழுவி அத்தண்ணீரைக் குடிப்பானேயில் ஒரு அடிமையை உரிமை விட்டவன்போல் ஆகிறான் என்றும் ஹதீதில் வந்திருக்கிறது. உணவு உண்டு முடிந்தபிறகு இதை ஓதுவான்.



"அல்ஹம்து லில்லாஹில்லதீ அத்அமனா வஸகானா வகபானா
வஅவானா வஹுவ சையிதுனா வமவுலானா."

பிறகு குல்ஹுவல்லாஹுவையும் லீஈலாபி குறைஷினையும் ஓதுவான். உண்டது ஹலாலான உணவாயிருந்தால் ஷுக்குரு செய்வான். ஷுபுஹத்தான உணவாயிருந்தால் அழுது விசனமுற்றிருப்பான். ஏனென்றால், எவனொருவன் உண்டு பயந்து உருகியழுதானோ அவன் தின்று மறந்து சிரித்தவன்போல் ஆகான். கைகழுவும்போது உசுலை இலையை அல்லது சவுக்காரத்தை இடதுகையில் எடுத்துக்கொண்டு முதலில் வலதுகையின் விரல்களைக் கழுவி அதன் பிறகு உசுலையிலையின்மேல் தேய்ப்பான். பற்களையும் தொண்டையையும் உதடுகளையும் உசுலையிலையால் நன்றாய்த் தேய்ப்பான். விரல்களைக் கழுவின பிறகு வாயை உசுலையிலையால் கழுவுவான்.

கூடியுண்பதற்குள்ள அதபுகள்.

மேற்சொன்னவை தனியாய் உண்பதற்குள்ள அதபுகளாயிருந்தன. ஆனால் மற்றவரோடு சேர்ந்து உண்டால் இந்த அதபுகளுடன் இன்னும் ஏழு அதபுகளை அதிகப்படுத்துவான். அவற்றுள்:—

முதலாவது அதபு:—வயதினாலாவது இல்மினாலாவது தக்குவாவினாலாவது இன்னும் யாதொரு விதத்தினாலாவது தன்னிலும் மேலாயிருப்பவன் எவனோ அவன் உண்ணத் தொடங்குமுன் தான் தொடங்கமாட்டான். எல்லாரிலும் தானே அதிக விசேஷமுள்ளவனாயிருந்தால் தன்னை அவர்கள் எதிர்பார்க்கும்படி காக்கவைக்கான்.

இரண்டாவது அதபு:—உண்ணும்போது மவுனமாயிரான். இது அஜமிகளாகிய பார்சியர்களின் வழக்கமாயிருக்கும். மேலும், அப்போது ஸாலிஹீன்களுடைய ஹிக்காயத்துகளையும் ஷறகுடைய பேச்சுகளையும் பேசிக்கொண்டிருப்பான். வீண்பேச்சுகளைப் பேசான்.

மூன்றாவது அதபு:—கூடவுண்பவனைக் கவனித்துக் கொள்ளுவான். எந்தவகையிலும் அவன் உண்பதற்குமேல் அதிகமாய் உண்ணமாட்டான். ஏனென்றால், இருவருக்கும் கூட்டாயிருக்கிற உணவில் இப்படிச் செய்வது ஹறாமாயிருக்கும். என்றாலும் தான் அதிகமாய் உண்ணாமல் அவனை உண்ணும்படிச் செய்வான். ஏது நல்ல பண்டமாயிருக்கிறதோ அதை அவன் முன்பாக வைப்பான். அவன் மெதுவாய் உண்டால் சங்கோஜத்துடன் நன்றாய் உண்ணென்று சொல்லுவான். உண் என்று மூன்றுதரத்துக்குமேல் அதிகமாய்ச் சொல்லான். ஏனென்றால், அதற்குமேல் அதிகமாய்ச் சொல்வது அசட்டாயும்

அளவு கடந்ததாயிருக்கிறது. ஆணையிடமாட்டான். ஏனென்றால், ஆணையிட உணவுக்கு அவ்வளவு *தரதாயில்லை.

நான்காவது அதபு:—கூட உண்பவன் தன்னை உண் என்று சொல்லும்படி வைத்துக்கொள்ளான். மேலும், அவனோடு ஒப்ப அவன் உண்பதுபோல் சரியாக உண்பான். தன் வழக்கத்துக்குக் குறைவாக உண்ணமாட்டான். இது * ரியா வென்னும் துர்க்குணமாயிருக்கும். ஆனால் ஜனங்களுக்கு முன்பாக எப்படி அதபாக உண்ணுகிறானோ அப்படியே தனிமையிலும் அதபாக உண்டு பழகிவைப்பான். அப்படிப் பழகிவைத்தால் ஜனங்களோடு சேர்ந்து உண்ணும்போதும் அதபாக உண்ணவரும். கூட உண்பவன் அதிகமாக உண்ணவேண்டுமென்ற எண்ணங்கொண்டு இவன் தன் வழக்கத்துக்குக் குறைவாக உண்பானாகில், இது நன்மையாகும். மற்றவர்களுக்குச் சந்தோஷத்தை யுண்டாக்கும்பொருட்டு அதிகமாக உண்பானாகில் இதுவும் ஆகும். இப்னுல் முபாறக்கு என்பவர்கள் தம் சிநேகிதர்களுக்குப் பேரீச்சம்பழத்தால் விருந்து செய்வார்கள். அப்போது எவர் மற்றவர்களினும் அதிகமாய்த் தின்னுகிறாரோ அவருக்கு அவர் அதிகமாய்த் தின்ற பழத்தின் ஒவ்வொரு விதைக்குப் பதிலாக ஒவ்வோர் திர்ஹம் கொடுப்பேன்" என்று சொல்லி முதலில் வரம்பு ஏற்படுத்துவார்கள். பின்பு யார் அதிகமாய்த் தின்றிருக்கிறதென்று விதைகளை எண்ணிப் பார்ப்பார்கள்: அதிகமான ஒவ்வோர் விதையின்பேரில் ஒவ்வோர் திர்ஹம் கொடுப்பார்கள்" என்று நகல் செய்யப்பட்டிருக்கிறது.

ஐந்தாவது அதபு:—பார்வையைத் தன் முன்பாக வைப்பான். மற்றவர்கள் உண்பதின்பேரில் நோட்டமிடான். மற்றவர்கள் இவனைக் கண்டு கண்ணால் நோக்கும்பக்கத்தில் அவர்கள் உண்டு நிறுமுன் இவன் தான் உண்பதை நிறுத்தான். கொஞ்சமாய் உண்ணுகிற வழக்கமுள்ளவன் கடைசிவரையில் மற்றவர்களுடன் சந்தோஷமாய் உண்பதற்காக முதலில் கையை மெதுவுபடுத்துவான். அதிகமாய் உண்ண முடியாமற்போனால் மற்றவர்கள் கூச்சப்படாதபடி அதைப் பற்றி அவர்களுக்கு † உஜ்ரு சொல்லுவான்.

ஆறாவது அதபு:—மற்றவர்களுக்கு அருவருப்பையுண்டாக்குகிற யாதொரு காரியத்தையுஞ் செய்யான். உண்ணும் பாத்திரத்தில் கையை உதறமாட்டான். முகத்தைப் பாத்திரத்துக்குச் சமீபமாய் வைத்துக்

* ரியா என்பது புகழை இச்சித்தாவது, இகழைப் பயந்தாவது யாதொரு காரியத்தைச் செய்வது அல்லது விலகுவது. † உஜ்ரு—[illegible]



கொள்ளான். ஏனென்றால், வாயிலிருந்து வெளிப்படுகிற எதுவும் அதில் விழாதிருக்கவேயாம். வாயிலிருந்து ஏதாவது வெளிப்பட்டால் முகத்தைத் திருப்பிக் கொள்ளுவான். நெய்ப்பசையுள்ள உணவைக் காடியில் போடமாட்டான். வாயுட்கொண்டு மென்றதைப் பாத்திரத்தில் உமிழான். நஜிஸான வஸ்துக்களின் பேச்சை யெடுக்கான். இக்காரியங்களெல்லாம் இயற்கையாகவே ஜனங்களுக்கு அருவருப்பையுண்டாக்கும்.

ஏழாவது அதபு:—படிக்கனில் கை கழுவினால் ஜனங்களுக்கு முன் அதில் துப்பமாட்டான். எவன் இல்முடைய வரிசையும் பெருமையுமுள்ளவனாயிருக்கிறானோ அவனுக்கு முதலில் கைகழுவத் தண்ணீர் வார்ப்பான். தனக்கு மரியாதை செய்தால் அதைத் தட்டாமல் அங்கீகரிப்பான். படிக்கனை வலப்பக்கமாய்ச் சுற்றிக்கொண்டு வருவர். எல்லாரும் கை கழுவின தண்ணீரை ஒன்றாகச் சேர்த்து வெளியே கொட்டிவிடுவான். ஒவ்வொருவரும் கழுவின தண்ணீரைத் தனித்தனியே கொண்டுபோய்க் கொட்டமாட்டான். இது அஜமிகளின் வழக்கமாய் இருக்கும். எல்லாரும் ஒன்றாகச் சேர்ந்து கை கழுவுவார்களாகில் மிக மேலாயிருக்கும். அன்றியும், இது தாழ்ச்சியென்னும் நற்குணத்தைச் சேர்ந்ததாயிருக்கிறது. வாய்க்கொப்பளித்தால், எவர் பேரிலாவது தண்ணீர் தெறிக்காமலும், விரிப்பில் தண்ணீர் விழாமலும் பேணுதலாய்க் கொப்பளிப்பான். கைகழுவத் தண்ணீர் ஊற்றுகிறவன் உட்கார்ந்து ஊற்றுவதினும் நின்று ஊற்றுவது மேலாயிருக்கும்.

இந்த எல்லா அதபுகளும் ஹதீஸில் வந்திருக்கின்றன. மனிதனுக்கும் மற்றும் ஜீவராசிகளுக்கும் இந்த அதபுகளினாலேயே வித்தியாசம் ஏற்படுகின்றது. ஏனென்றால், மிருகமானது தன்னுடைய சுபாவ இச்சையின்படியே இரை தின்னுகின்றது: நல்லது, கெட்டது இவைகளில் அது பகுத்தறிகின்றதில்லை. இந்தப் பகுத்தறிவு அதற்குக் கொடுக்கப்படவில்லை. மனிதன் பகுத்தறிவுள்ளவனாயிருக்க, அவன் அதை யுணர்ந்து நடக்காமல் மறந்தவனாயிருந்தால், பகுத்தறிவென்னும் பாக்கியத்தின் நன்றியறிதல் அவனால் நிறைவேறாது. மேலும், நன்றிமறந்தவனென்றாவான்.

## மூமினான சிநேகர்களுடன் சேர்ந்து உண்பதின் வரிசை.

அறிந்து கொள்ளுங்கள்:—ஒரு சிநேகனுக்கு விருந்து செய்வதானது மிகுந்த கைராத்து கொடுப்பதிலும் அதிக வரிசையுள்ளதாயிருக்கும். மூன்று வஸ்துக்களின்பேரில் அடியார்களிடத்தில் கேள்வி கணக்

இல்லையென்றும், அவற்றுள் முதலாவது-நோன்புக்காக ஸஹரில் உண்ட உணவு என்றும், இரண்டாவது-நோன்பு திறக்கும்போது உண்ட உணவு என்றும், மூன்றாவது-சினேகர்களோடு சேர்ந்து உண்ட உணவு என்றும் ஹதீதில் வந்திருக்கிறது. இன்னும் "நீ சினேகர்களுடன் சேர்ந்து சுப்ராவில் உட்காருவாயாகில் அவசரப்படாதே" என்றும், "அவ்வளவு தாமதப் படுத்துவதின்பேரில் கேள்வி கணக்கில்லை" என்றும் முகம்மது புனு ஜஃபர்ஸாதிகு என்பவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இன்னும் "தான் உண்பதின்பேரிலும், தன் தாய் தகப்பனுக்கு உண்ணக்கொடுப்பதின்பேரிலும் மனிதனைக் கேட்கப்படும்" என்றும், "ஆனால் அவன் தன் சினேகர்களுக்கு முன்பாக வைக்கிற உணவைப்பற்றிக் கேள்வி கணக்கில்லை" என்றும் ஹஸன் பசரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இன்னும் பெரியோர்களில் நின்றுமொருவர் தமது சினேகர்களுக்கு முன்பாக சுப்ராவை விரித்து உணவை அதிகமாய்க்கொண்டு வந்து வைத்து, "சினேகர்களுக்கு முன்பாக வைக்கப்பட்ட உணவில் நின்றும் மிஞ்சிப்போன உணவைக் குறித்துக் கேள்வி கணக்காகிறதில்லையென்பதாய் ஹதீதில் வந்திருக்கிறது" என்றும், "நான் என் சினேகர்கள் உண்டு மிஞ்சியதை உண்ண ஆசிக்கிறேன்" என்றும் சொல்பவரா யிருந்தார். "இன்னும் சினேகர்களுக்கு முன்பாக ஒரு மரக்கால் உணவை வைப்பதானது ஒரு அடிமையை உரிமை விடுவதினும் எனக்கு மிக உவப்பானதா யிருக்கிறது" என்று அமீருல் முமினீன் அலிறலியல்லாகு அன்கு சொல்லியிருக்கிறார்கள். இன்னும் கியாமத்து நாளில் அல்லாகுதஆலா அடியானை நோக்கி, "ஆதமுடைய மகனே! நான் பசியா யிருந்தேன். நீ யெனக்கு உண்ண உணவு கொடுக்கவில்லை" என்று சொல்லுவதாயும், அதற்கு அடியான், "ஓ என்னுடைய ஆண்டவனே! நான் எப்படி உனக்கு உண்ணக் கொடுப்பேன். நீ யெல்லா உயிர்களுக்கும் இரணமளித்துப் பரிபாலிக்கிறவனா யிருக்கிறாய். உனக்கு உணவு தேவையில்லையே" என்று சொல்லுவதாயும், அதற்கு அல்லாகு தஆலா, "அடியானே! உன்னுடைய மூமினான சினேகன் பசியாளியா யிருந்தான். நீ அவன் பசிக்கு ஆகாரம் கொடுத்திருப்பாயாகில் எனக்குக் கொடுத்ததுபோல் ஆகும்" என்று சொல்லுவதாயும் ஹதீதில் வந்திருக்கிறது. இன்றும், "எவனொருவன் முஸ்லிமான சகோதரனுக்குத் திருப்தியாயுண்ண உணவும், குடிக்கத் தண்ணீரும் கொடுப்பானோ அவனை அல்லாகுதஆலா நரக நெருப்பை விட்டும் ஏழு அகழ் தூரத்துக்கு அப்புறமாக்கி வைப்பான்" என்றும், "அந்த அகழ்கள் ஒவ்வொன்றுக்கும் மத்தியில் ஐந்நூறு வருஷம் நடக்கக் கூடிய வழியா யிருக்கும்" என்றும் றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திரு



வுளமா யிருக்கிறார்கள். இன்னும் "உண்ணக் கொடுப்பவன் உங்களில் மிக நல்லவன்" என்றும் திருவுளமா யிருக்கிறார்கள்.

### ஒருவரையொருவர் சந்திக்கப்போகிற சினேகர்கள் உணவருந்தும் அதபுகள்.

இதில் நான்கு அதபுக ளிருக்கின்றன. முதலாவது அதபு:—எவருடைய வீட்டுக்கும் உணவருந்தும் சமயத்தில் போகமாட்டான். எவனொருவன் அழைக்கப்படாமல் மற்றொருவருடைய வீட்டிற் போய் உணவருந்த நாட்டம் வைக்கின்றானோ அவன் போவதில் பாவியும் உண்பதில் ஹறாமைத் தின்னவனுமாவான் என்று ஹதீதில் வந்திருக்கிறது. ஆனால், உணவருந்தும் நேரத்தில் போகும்படிச் சந்தர்ப்ப முண்டானால், அப்போது அவன் உண்ணும்படிச் சொன்னாலன்றி உண்ணமாட்டான். உண்ணும்படிச் சொன்னால், அப்படிச் சொல்வது மனப்பிரியத்தோடல்லவென்று தெரிந்தால், அப்போதும் உண்ணமாட்டான். ஏதாவது சாக்குப் போக்குச் சொல்லுவான். ஆனால், எந்த சினேகன்மேல் நன்னம்பிக்கை வைத்திருக்கின்றானோ அந்த சினேகன் உணவருந்தும் சமயத்தில் அவனிடம் போகும்படிச் சந்தர்ப்ப முண்டாகி, அவனுடைய மனப்பிரியமும் தெரிந்தால், அப்போது அவனிடம் உண்பது ஆகும். மேலும், உண்மையுள்ள சினேகர்களில் இது நன்னதா யிருக்கும். ஏனென்றால், றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களும், அபூபக்கர், உமர்றலியல்லாகு அன்குமா இவர்களும் பசித்த நேரத்தில் அபூ அய்யூபுல் அன்ஸாரி, அபூஹைதமுத்திஹான் றலியல்லாகு அன்குமா இவர்களுடைய வீட்டுக்குப் போய் உணவைக் கேட்டு வாங்கி யுண்பவர்களா யிருந்தார்கள். உணவைக் கொடுப்பவர்களுக்கு இதில் ஆசை யுண்டென்று தெரிந்தால், இப்படிச் செய்வது அவர்களுடைய நன்மைக்குச் சீரான உதவியாகின்றது. பெரியோர்களில் ஒருவருக்கு நூற்று அறுபது சினேகர்கள் இருந்தார்கள். அவர் ஒவ்வொரு இரவில் ஒவ்வொரு சினேகருடைய வீட்டில் உண்பவரா யிருந்தார். இந்தச் சினேகர்கள் சம்பாதிப்பத்திலும் பயிர்த் தொழிலிலு மிருந்து ஆபிதுகளுக்கு உணவளித்துப் பணிவிடை செய்துவந்தார்கள். ஏனென்றால், இப்பாதத்தில் அவர்களுக்கு மனவோர்மை யுண்டாகவேயாம். மேலும், ஒருவன் மார்க்க நெறியுள்ள உண்மையான சினேகனா யிருப்பானாகில், வீட்டில் அவன் ஹாஜிராயில்லாத சமயத்திலும் போய் உண்பது ஆகும். றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் பரீதா றலியல்லாகு அன்குடைய வீட்டுக்குப் போய், அவர்களில்லாத சமயத்தில் அவர்களுக்காக வைத்திரு

ந்த உணவை அருந்தி யிருக்கிறான். ஏனென்றால், இதனால் அவர் சந்தோஷம் அடைவாரென்று ஹலரத்தவர்கள் அறிந்ததினாலேயாம். ஸாஹிபாக்களில் ஒருபெரியோராகிய முஹம்மதுபுனுல் வாஸிஉ என்பவர்கள் தங்கள் தோழர்களுடன் ஹஸன்பசரி யவர்களுடைய வீட்டுக்குப் போய் அங்கு ஹாஸிராயிருக்கிற உணவை உண்பார்கள். ஹஸன் பசரி யவர்கள் வந்து இந்தச் சங்கதியைக் கேட்கிறபோது மிகுந்த சந்தோஷத்தை யடைவார்கள். இன்னும் சில ஆபிதுகள் சுப்யானுஸ் ஸவ்ரி யவர்களுடைய வீட்டுக்குப் போய் உணவருந்திக்கொண் டிருந்தார்கள், சுப்யானுஸ்ஸவ்ரியவர்கள் வெளியிலிருந்து வந்து இவர்களைக் கண்டபோது "நீங்கள் முற்காலத்துப் பெரியோர்களுடைய நற்குணங்களை எனக்கு ஞாபகப்படுத்தினீர்கள். அவர்கள் இதே விதம் செய்பவர்களா யிருந்தார்கள்" என்று சொன்னார்கள்.

இரண்டாவது அதபு:—ஒரு சினேகன் கண்டுகொள்ள வந்தால், அப்போது உணவில் ஏது ஹாஸிராயிருக்கிறதோ அதை அவன் முன்பாகக் கொண்டுவந்து வைப்பான், இல்லாத வஸ்துவைத் தயார் செய்வதற்கு இம்சை யெடுத்துக்கொள்ளான். வீட்டில் ஒன்றும் இல்லாவிட்டால் கடன் வாங்கமாட்டான். மனைவி மக்களுக்குத் தேவையாகும் உணவுக்குமேல் அதிகமில்லையானால் அதை அவர்களுக்காக வைத்துவிடுவான். ஒருவர் ஹலரத்து அலீ றலியல்லாஹு அன்ஹு அவர்களை விருந்துக்கழைத்தார். அதற்கவர்கள், "நான் சொல்லும் மூன்று விதிகளை நீ சம்மதிப்பாயாகில் நான் உன் வீட்டுக்கு வருவேன். முதலாவது- நீ கடையிலிருந்து ஒன்றையும் வாங்கிக்கொண்டு வரக்கூடாது. இரண்டாவது- வீட்டி லிருப்பதை யெல்லாம் ஒரு மிக்கச் சேர்த்துக்கொண்டு வரக்கூடாது. மூன்றாவது- உன் மனைவியுடைய பங்கைப் பூர்த்தியாக வைத்துவிட வேண்டும்" என்று சொன்னதாய் நகல் செய்யப்பட் டிருக்கிறது. புலைலுறஹிமஹுல்லா அவர்கள் சொல்வதாவது:—"ஜனங்கள் ஒருவரை யொருவர் கண்டுகொள்ளப் போவதற்குப் பின் வாங்குகிறார்களே; இதற்குக் காரணம் யாதெனில், அவர்கள் உயர்ந்த வகையான உணவைத் தயார் செய்வதில் எடுத்துக்கொள்ளும் கஷ்டமேயாம். இந்தக் கஷ்டம் எடுபட்டுப் போனால் தடையின்றி ஒருவரை யொருவர் கண்டுகொள்ளப் போகலாம்" என்பதே. ஹிக்காயத்து:— ஒரு பெரியோருக்கு ஒரு சினேகர் உயர்ந்த வகையான உணவுகளைத் தயார் செய்தார். அப்போது அந்தப் பெரியவர் அவரை நோக்கி, "நீ தனிமையில் இப்படியான உணவை உண்ண மாட்டாய்; நானும் என் வீட்டில் இப்படி உண்ணுகிறதில்லை. நாம் ஒரு



வரை யொருவர் கண்டுகொள்ள வந்தால் ஏன் இப்படி இம்சை எடுத்துக்கொள்ள வேண்டும்? இனிமேல் இதை நீ நிறுத்திவிடு. இல்லையாயின் நான் வருவதை நிறுத்திவிடுவேன்" என்றார். "உள்ளதைக் கொண்டு போதுமாக்குங்கள் என்றும், இல்லாததைத் தயார் செய்ய இம்சை எடுத்துக்கொள்ளாதீர்கள் என்றும் றசூல் சல்லல்லாஹு அலைஹி வசல்லமவர்கள் எங்களுக்கு ஆக்கியாபித் திருக்கிறார்கள்" என்று சல்மான் றலியல்லாஹு அன்ஹு சொல்லுகிறார்கள். ஸஹாபாக்கள் ரொட்டித் துண்டுகளையும் உலர்ந்த பேரித்தங் காய்களையும் ஒருவருக்கொருவர் உணவா யளித்து, "உள்ள உணவை அற்பமாய் நினைத்து அதைச் சினேகனுக்கு முன்கொண்டு வாராதவனோ? அல்லது, கொண்டு வந்து வைத்ததை அற்பமாய் நினைத்தவனோ? எவன் பெரும்பாவி என்று நமக்குத் தெரியவில்லை" என்பார்கள். யூனுஸ் அலைஹிஸ்ஸலாமவர்கள் ரொட்டித் துண்டுகளையும் கீரையையும் தோழர்களுக்கு முன்பாக வைத்து, "உயர்ந்த வகையான உணவைத் தயார் செய்யக் கஷ்டமெடுத்துக் கொள்பவர்கள்பேரில் அல்லாகுத்ஆலா லஃனத்து செய்யாதிருக்கும்பக்ஷத்தில், அதற்காக நான் கஷ்டமெடுத்துக்கொள்ளுவேன்" என்று சொல்லுவார்கள்.

ஹிக்காயத்து:—சில ஜனங்களுக்குள் ஓர் வழக்கிருந்தது. அந்த வழக்கைப்பற்றித் தீர்ப்பு செய்வித்துக்கொள்ள அவர்கள் ஸகரிய்யா அலைஹிஸ்ஸலாமைத் தேடி அவர்களுடைய வீட்டுக்குப் போனார்கள். அவர்கள் அங்கு அகப்படவில்லை. ஓர் அழகிய ஸ்திரீயை அவ்வீட்டில் கண்டு ஆச்சரியமுற்று, ஆ! நபியாயிருக்கிற *ஸகரிய்யா அவர்கள் இப்படியான ஸ்திரீயோடு இன்பம் பாராட்டுகிறார்கள் என்று மயங்கினார்கள். பின்பு அவர்களைத் தேடிப் பார்க்கையில், கூலிவேலைக்காக அவர்கள் போயிருந்த ஒரு ஜாகையில் அவர்களைக் கண்டார்கள். அப்போது அவர்கள் உணவருந்திக்கொண் டிருக்கிறார்கள். இந்த ஜனங்கள் அவர்களோடு பேசிக்கொண்டும், அவர்கள் உணவருந்திக்கொண்டு மிருந்தார்கள். என்னுடன் உண்ண வாருங்கள் என்று ஒருவரையும் அவர்கள் அழைக்கவில்லை. உண்டு முடிந்தபின் காலில் பாதரட்சை யில்லாமல் அந்த இடத்திலிருந்து புறப்பட்டார்கள். இம்மூன்று வேலைகளும் அம் மனிதர்களுக்கு ஆச்சரியமாய்த் தோன்றினபடியால் நபியவர்களிடத்தில் அதற்குக் காரணம் யாதென்று கேட்டார்கள். அதற்கு ஸகரிய்யா அலைஹிஸ்ஸலாம் சொன்னதாவது:—"நான் என்னுடைய [illegible]னைக் காப்பாற்றிக் கொள்வதற்கும், என் கண்ணும் கருத்தும் [illegible]ங்களிற் செல்லாதிருக்கவுமே அழகிய ஸ்திரீயை நிகாஹு செய்துகொண்டேன்.

நான் உண்டுகொண்டிருந்த உணவானது என் வேலைக்குக் கூலியாய்க் கிடைத்த உணவாதலாலும், அதில் நான் குறைவாய் உண்ணும் பக்ஷத்தில், அவர்களுடைய வேலைக்கு என்னால் குறைவு நேரிடுமாதலாலும், அந்த வேலை என்பேரில் பாரமாயிருந்ததாலுமே உண்ணும்படி உங்களை நான் அழைக்கவில்லை. நான் அந்நிலத்தில் பாதரக்ஷை யில்லாமல் நடந்தது ஏனென்றால், அந்நிலக்காரருக்குள் வழக்கிருப்பதால் அந்நிலத்தின் மண் என் பாதரக்ஷையில் ஒட்டி மற்றொரு நிலத்தில் விழுவது எனக்குப் பிரியமில்லை" என்றார்கள். காரியங்களைப் பகட்டிக் காட்டுவதிலும் உள்ளதைச் சாதிப்பதே உத்தமமென்று இந்த ஹிகாயத்தினால் தெரியவருகின்றது.

மூன்றாவது அதபு:—உணவளிப்பவனுக்குக் கஷ்டமாகுமென்று தெரிந்தால், அதைக் கொண்டுவா இதைக் கொண்டுவா என்று அவன் மேல் அதிகாரம் செய்யான். இரண்டு வஸ்துக்களில் எது உனக்குத் தேவையென்று சம்மதம் கேட்டால், அவ்விரண்டில் உணவளிப்பவனுக்கு எது இலேசாகுமோ அதைத் தெரிந்து கொள்ளுவான். ரசூல் சல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்கள் எல்லாக் காரியங்களிலும் இப்படியே செய்பவர்களா யிருந்தார்கள். ஒருவர் சல்மான் றழியல்லாஹு அன்ஹு அவர்களின் வீட்டிற்குப் போனார். அவர்கள் தொலி கோதுமையின் ரொட்டித் துண்டையும் உப்பையும் அவர் முன்பாகக் கொண்டு வந்து வைத்தார்கள். அப்பொழுதவர் இந்த உப்புடன் ஸஃதர் என்னும் தர்காரி யிருந்தால் நன்றாயிருக்கு மென்றார். சல்மான் றழியல்லாஹு அன்ஹுவினிடம் காசில்லாமையால் பான பாத்திரத்தை அடவு வைத்து, அந்தத் தர்காரியை வாங்கினார்கள். பின்பு விருந்தாளி ரொட்டியைத் தின்று, "அல்ஹம்துலில்லா ஹில்லதீ கன்னஅனா பிமா றஜகனா" என்று ஷுக்குரு செய்தார். அதாவது, நமக்கு அவன் கொடுத்தது போதுமென்று நம்மைப் பொருந்திக்கொள்ளச் செய்த அல்லாஹுதஆலாவுக்கே எல்லாப் புகழுமென்று புகழ்ச்சி கூறினார். அப்போது சல்மான் றழியல்லாஹு அன்ஹு அவர்கள் அவரை நோக்கி, "போதுமென்று பொருந்திக்கொள்ளுங்குணம் உன்னிலிருக்கும் பக்ஷத்தில், என்னுடைய பானபாத்திரம் அடவுக்குப் போகாது" என்றார்கள். என்கிலும், உணவளிப்பவனுக்குக் கஷ்டமாகாதென்றும், அவன் சந்தோஷப்படுவானென்றும் தெரிந்தால் அவனிடத்தில் தான் விரும்பிய எப்பொருளை—ம் கேட்கலாம். இமாம் ஷாபிஈ றழியல்லாஹு அன்ஹு அவர்கள் பக்தாதில் ஒரு வர்த்தகன் வீட்டில், தங்கி யிருந்தார்கள். அவன் தினந்தோறும் தனக்கு விருப்பமுள்ள விதம்விதமான உணவு



களை ஓர் காகிதத்தில் குறித்து அதைத் தயார்செய்யும்படித் தனது அடிமைப் பெண்ணான வேலைக்காரி வசம் கொடுப்பான். ஒருநாள் இமாமவர்கள் அக்காகிதத்தில் தங்கள் கைப்பட ஒருவகை உணவை அதிகமா யெழுதினார்கள். வர்த்தகன் இந்த எழுத்தை வேலைக்காரியின் கையிற் கண்டபோது மிகவும் சந்தோஷமடைந்து அதன் ஷுக்குருக்காக அந்த அடிமைப்பெண்ணை உரிமையாக்கினான்.

நாலாவது அதபு:—விருந்தாளிகள் விரும்பும் உணவைத் தயார் செய்ய விருந்தளிப்பவனுக்கு மனதில் பிரியமிருந்தால் அவர்களிடத்தில் "நீங்கள் எதை விரும்புகிறீர்கள்? எதன்மேல் உங்களுக்கு இச்சை யிருக்கிறது?" என்று கேட்பான். ஏனென்றால், அவர்கள் விரும்பும் உணவைத் தயார் செய்வதில் மிகவும் அதிகமான சவாபு கிடைக்கும். யாராவதொருவன் முஸ்லிமான சகோதரனுடைய இச்சையை நிறைவேற்றுவதில் முயற்சிப்பானாகில், அவனுக்காக ஆயிரமாயிரம் நன்மைகள் எழுதப்படுமென்றும், ஆயிரமாயிரம் தீமைகள் அவன் பட்டோலையிலிருந்து அழிக்கப்படுமென்றும், ஆயிரமாயிரம் பதவிகள் அவனுக்காக உயர்த்தப்படுமென்றும் பிருதவுஸ், அதன், குல்து என்னும் மூன்று சொர்க்கங்களில் நின்றும் அவனுக்குப் பயனளிக்கப்படுமென்றும் ரசூல் சல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்கள் திருவுளமா யிருக்கிறார்கள். ஆனால், இன்னது கொண்டுவரவா? வேண்டாமா? என்று கேட்பது மக்ருஹாயும் கெட்டதாயு மிருக்கும். மேலும், எது ஹாஸிரா யிருக்கிறதோ அதை அவன் முன்பாகக்கொண்டுவந்து வைப்பான். உண்ணுமற் போனால் திரும்பக் கொண்டுபோய் விடுவான்.

விருந்தளிப்பதின் வரிசை.

மேலே விவரிக்கப்பட்டவை விருந்துக்கென் றழைக்கப்படாத ஒருவன் மற்றொருவனுடைய முலாகாத்துக்கு வந்துவிடுவானாகில் அப்போது அனுசரிக்கவேண்டிய அதபுகளா யிருந்தன. ஆனால் விருந்து சொல்லி யழைக்கும் விதி வேறாயிருக்கிறது. இன்னும் விருந்தாளி வந்துவிட்டால், வேறு வஸ்துவைத் தயார் செய்ய வருத்தமெடுத்துக் கொள்ளாதே என்றும், ஒருவரை நீ விருந்துக் கழைப்பாயாகில் உன்னுடைய வன்றவரையில் ஒன்றையும் விடாதே என்றும் பெரியோர்கள் சொல்லி யிருக்கிறார்கள். விருந்தளிப்பதின் வரிசை பெரிதாயிருக்கும். இது அரபிகளுடைய வழக்கத்தின் பேரி லாயிருக்கிறது. இவர்கள் சபர் செய்வதில், ஒருவர் மற்றொருவருடைய வீட்டுக்குப் போவார்கள். இப்படியான விருந்தாளியினுடைய உபசாரனை மிக பாக்கியமா யிருக்கும். இதன் நிமித்தமே விருந்தாளி யில்லாதவன் எவனோ அவ

ளில் நன்மையில்லை யென்று றசூல் சல்லல்லாகு அலைஹிவசல்லமவர்கள் திருவுளமா யிருக்கிறார்கள். இன்னும் விருந்தாளிக்காக வேறு வஸ்துவைத் தயார் செய்வதில் நீங்கள் வருத்த மெடுத்துக்கொள்ள வேண்டாமென்றும், அப்படிச் செய்வதில் நீங்கள் அவன்மேல் பகை பாராட்டுவீர்களென்றும், எவன் விருந்தாளியின்மேல் பகை வைத்தானோ அவன் அல்லாகுதஆலாவின்மேல் பகை வைத்தான் என்றும், அல்லாகு தஆலாவின்மேல் பகை வைத்தவனை அல்லாகுதஆலா பகை வைப்பான் என்றும் திருவுளமா யிருக்கிறார்கள். ஆனால், அருமையாக யாராவதொரு விருந்தாளி வந்துவிட்டால் அவனை உபசரிப்பதற்குக் கடன் வாங்கியாவது உயர்ந்த வகையான உணவைத் தயார் செய்வதும் ஆகும். ஆயினும், ஒருவரையொருவர் கண்டுகொள்ளப்போகிற அநேகர்களுக்காக இப்படிச் செய்வது கூடாது. ஏனென்றால், இதுஅநேகம் அற்றுப்போவதற்குக் காரணமாகும். றசூல் சல்லல்லாகு அலைஹிவசல்லமவர்களுடைய மவுலாவாகிய அபூறாபிகு என்பவர்கள் சொல்லுகிறதாவது:—ஹஜரத்து நபி அலைஹிஸ்ஸலா மவர்கள் என்னை நோக்கி, அபூராபிகே! நீ இன்ன யஹூதியினிடத்திற் போய் என் வீட்டில் விருந்தாளி வந்திருப்பதால் எனக்கு இவ்வளவு மாவு கடனாய்த் தரவேண்டுமென்றும், இந்தக் கடனை நான் ரஜபு மாதத்தில் கொடுத்துவிடுவேன் என்றும் சொல் என்றார்கள். நான் அப்படியே அந்த யஹூதியினிடம் போய்ச் சொல்ல, ஏதாவது அடகு வைத்தாலன்றி நான் கடன் கொடுக்கமாட்டே னென்றான். அதை நான் திரும்பி வந்து இந்த ஹஜரத்தவர்களுக்கு அறிவித்தேன். அப்போது ஹஜரத்தவர்கள் வல்லாஹி என்று ஆணையிட்டு நான் வானத்திலும் விசுவாசியா யிருக்கிறேன், பூமியிலும் விசுவாசியா யிருக்கிறேன். அடகில்லாமல் அவன் கொடுத்தாலும் நான் அவன் கடனை இறுப்பேன். இப்போது அந்தப் போர்க் கவசத்தைக் கொண்டுபோய் அடகுவை யென்றார்கள். நான் அப்படியே கொண்டுபோய் வைத்தேன் என்பதே.

இபுராஹீம் அலைஹிஸ்ஸலா மவர்கள் விருந்தாளியைத் தேடுவதற்காக இரண்டு மைல் தூரம் போகிறவர்களாயும், ஒரு விருந்தாளியும் கிடைக்காத பக்ஷம் உணவருந்தாதவர்களாயு மிருந்தார்கள். இது விஷயத்தில் அவர்களுக்கிருந்த உவப்பின் பொருட்டால் அவர்களுடைய கபுருஷரீபில் நாளது வரையில் விருந்தளிக்கும் வழக்கம் நடைபெற்று வருகிறது. அவ்விடத்தில் ஒரு இரவாவது விருந்தாளி யில்லாம லிருந்ததில்லை. சில சமயம் நூறுபேர் இருநூறுபேர் வரையில் விருந்தாளிக ளிருப்பார்கள். இந்த தர்மத்துக்காக அநேகம் கிராமங்கள் வருபு செய்யப்பட் டிருக்கின்றன.



## விருந்துக்கு அழைப்பது, விருந்தை கபூல்செய்வது இவைகளுடைய அதபுகள்.

ஒருவரை விருந்துக் கழைத்தால் அழைப்பவன் அநுசரிக்க வேண்டிய அதபுகளாவன:—பாவிஷ்டான மனிதனை யன்றி மற்றவரை அழைக்கமாட்டான். ஏனென்றால், உணவளிப்பது வலிமையைக் கொடுப்பதா யிருக்கும். பாவியான மனிதனுக்கு வலிமையைக் கொடுப்பதில் பாவஞ்செய்ய அவனுக்கு உதவி புரிந்ததாகின்றது. விருந்துக்கு ஏழைகளை அழைப்பான். சீமான்களை அழைக்கான். ஏனென்றால், எந்த வலீமா விருந்தில் ஏழைகளை விட்டுச் சீமான்களை அழைக்கிறார்களோ அந்த வலீமா விருந்தே உணவில் மிகவும் கெட்ட உணவா யிருக்கிறதென்று றசூல் சல்லல்லாகு அலைஹிவசல்லமவர்கள் திருவுளமா யிருக்கிறார்கள். அன்றியும், நீங்கள் விருந்து செய்வதிலும் பாவஞ் செய்கிறீர்களென்றும், யாரையும் அழைத்து வருகிறீர்கள், ஏழைகளை விட்டுவிடுகிறீர்கள் என்றும் திருவுளமா யிருக்கிறார்கள். சொந்த ஜனங்களையும் நெருங்கிய பந்துக்களையும் மறக்காமல் அழைக்கவேண்டும். இல்லாவிட்டால் வெறுப்புக்குக் காரணமாகும். விருந்து செய்வதில் பெருமை பாராட்டுவதை நாடமாட்டான். எனினும், சுன்னத்தை நிறைவேற்றுகிறேன் என்றும், பிறருக்குச் சௌக்கியம் கொடுக்கிறேன் என்றும் நிய்யத்து வைப்பான். ஒருவன் விருந்தை கபூல் செய்யக் கஷ்டப்படுகிறவனா யிருந்தால் அவனை அழைக்கமாட்டான். ஏனென்றால், அது அவன் வருத்தப்படுவதற்குக் காரணமா யிருப்பதினாலேயாம். இன்னும் எவன் விருந்தை கபூல் செய்ய விருப்பமில்லாதவனா யிருக்கிறானோ அவனையும் அழைக்கான். ஏனென்றால், விருப்பமில்லாமல் கபூல் செய்யும்பக்ஷத்தில், அவன் வெறுப்புடன் விருந்தை யுண்பான். அதில் அவன்மேல் குற்றம் ஏற்படும்.

### விருந்தை கபூல் செய்பவன் அநுசரிக்கவேண்டிய அதபுகளாவன:—

முதலாவது அதபு:—பணக்காரன் ஏழை யென்கிற வித்தியாச மில்லாமல் எல்லாருடைய விருந்தையும் கபூல் செய்வான். ஏழையின் விருந்தை அலட்சியம் செய்யமாட்டான். றசூல் சல்லல்லாகு அலைஹிவசல்லமவர்கள் மிஸ்கீன்களின் விருந்தை கபூல் செய்கிறவர்களா யிருந்தார்கள். ஹஜரத்து ஹஸன் றலியல்லாகு அன்குமா ஏழை ஜனங்களாகிய ஒரு கூட்டத்தினிடத்தில் போகும்படி நேர்ந்தது. அப்போது அவர்கள் ரொட்டித் துண்டுகளைத் தின்றுகொண் டிருந்தார்

கள். அவர்கள் ஹசன்றலியல்லாகு அவ்குலவைப் பார்த்து, "ரசூலுடைய குமாரரே! தாங்களும் எங்களோடு கூடுங்கள்" என்றார்கள். ஹசன்றலியல்லாகு அங்கு தங்களுடைய வாகனத்தை விட்டிறங்கி அவர்களோடிருந்து ரொட்டித்துண்டுகளை உணவாய் அருந்தினார்கள். இன்னும் "முத்தகப்பிர்களென்றும் பெருமைக்காரனை அல்லாகு தஆலா உவப்பு வைக்கிறதில்லை" என்றுஞ் சொன்னார்கள். பின்னர் அந்த ஏழை ஜனங்களைப் பார்த்து "நீங்கள் நாளையதினம் நான் செய்யும் விருந்துக்கு வரவேண்டும்" என்றார்கள். மறுநாள் அவர்களுக்காக நல்ல உயர்ந்த வகையான உணவைத் தயார்செய்து தாங்களும் அவர்களோடிருந்து உணவருந்தினார்கள்.

இரண்டாவது அதபு:—விருந்தளிப்பவன் இவனுக்கு உபகாரம் செய்ததாய் நினைப்பான் என்றும் [illegible] விருந்தாக நினைக்கிறான் என்றும் தெரிந்தால் அவனுடைய விருந்தை கபூல்செய்யமாட்டான். சாக்குப் போக்குச் சொல்லுவான். மேலும், விருந்தாளி கபூல் செய்வதையே தன்பேரில் உபகாரமாய் விருந்தளிப்பவன் நினைக்கவேண்டும். இது போலவே அவனுடைய விருந்தில் [illegible] அல்லது அந்தவிடத்தில் கெட்ட காரியங்கள் செய்யப்பட்டிருக்கிறதென்று தெரிந்தால், உதாரணமாக:—அவ்விடத்தில் பட்டு விரிப்பு விரித்திருப்பது அல்லது வெள்ளி பாத்திரம் [illegible] வைத்திருப்பதுபோல் அல்லது சுவர்களிலும் மேலேயும் உயிர்ஜந்துக்களின் உருவமெழுதி யிருப்பதுபோல் அல்லது வாத்தியங்களால் இராகம் பாடுகிறதுபோல் அல்லது அவ்விடத்தில் ஒருவன் விகடப்பிரசங்கம் செய்வது அல்லது கெட்ட வார்த்தைகளை வழங்குவதுபோல் அல்லது ஆடவர்களைப் பார்க்கும்பொருட்டு பெண்பிள்ளைகள் வெளியில் வருவதுபோல் இவையெல்லாம் கெட்டவைகளாயிருப்பதால் இப்படிப்பட்ட மஜ்லிஸ்களுக்குப் போவது ஆகாது. இன்னும் இதுபோலவே விருந்தளிப்பவன் பித்அத்துக்காரனாய் அல்லது பாவிகளாய் அல்லது கொடுமை செய்கிறவனாய் இருந்தாலும் அல்லது அவன் பெருமை காட்டுவதற்காக விருந்து செய்தாலும் விருந்தை கபூல்செய்யமாட்டான். விருந்தை கபூல்செய்து போனவன் அவ்விடத்தில் யாதொரு கெட்டதைக் கண்டால் அதை விலக்க முடியாத பக்ஷத்தில் அவ்விடத்திலிருந்து எழும்பிப்போய் விடுவது வாஜிபா யிருக்கும்.

* [illegible] யாதொரு சங்கைப்படுத்துவதைப் பொருள் படுமென்றது. [illegible] என்ற சொல்லிருந்து [illegible] உண்டாயிற்று. [illegible]



மூன்றாவது அதபு:—விருந்துக்கு அழைக்கப்படுகிற இடம் தூரமாயிருக்கிற நிமித்தமாக விருந்தை ரத்து செய்யமாட்டான். மேலும், சாதாரண வழக்கப்படி எவ்வளவு தூரம் இம்சையில்லாமல் போகக்கூடுமோ அவ்வளவு தூரத்தின் விருந்தை ரத்துசெய்யாமல் ஹாஜிராகுவான். வியாதியஸ்தனை விசாரிக்க ஒரு மைல் தூரமும், ஜனாஸாவுடன் இரண்டுமைல் தூரமும், விருந்துக்காக மூன்றுமைல் தூரமும், சிநேகர்களைக் கண்டுகொள்ள நான்குமைல் தூரமும் போவாயாக என்று தவ்றாத்தில் வந்திருக்கிறது.

நான்காவது அதபு:—நபிலான நோன்பின் பொருட்டால் விருந்தை ரத்துசெய்யமாட்டான். மேலும் ஹாஜிராகுவான். விருந்தளிப்பவன் சந்தோஷமாய்ச் சம்மதித்தால் நல்ல யோசனையின் பேரிலும் நல்ல [illegible] பேரிலும் நோன்பை முறித்துக் கொள்ளுவான். இதுவே நோன்பாளியின் விருந்தாயிருக்கும். அவன் வருத்தப்படுபவனாயிருந்தால் நோன்பை விடமாட்டான். ஏனென்றால், ஒரு முஸ்லிமுடைய மனதைச் சந்தோஷப்படுத்துவதின் சவாபானது நோன்பு வைப்பதிலும் எவ்வளவோ அதிகமாயிருக்கிறது. ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்கள் இப்படியான சமயத்தில் நோன்பை விடாதவர்களை விளித்து, "உன் சகோதரன் உனக்காக வருத்தத்தை எடுத்திருக்க நான் நோன்பாளியா யிருக்கிறேன் என்று நீ சொல்லுகிறாய்" என நிராகரித்துப் பேசியிருக்கிறார்கள்.

ஐந்தாவது அதபு:—வயிற்றின் ஆவலை அடக்குவதற்கென்று விருந்தை கபூல்செய்யான். இது மிருகங்களுடைய செய்கையாயிருக்கும். மேலும், ரசூலுல்லாவுடைய சுன்னத்தைப் பின்பற்றுவதையும் விருந்தை கபூல் செய்யாதவன் எவனோ அவன் அல்லாவுக்கும் ரசூலுக்கும் வழிபடாதவன் என்று ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்கள் திருவுளமா யிருக்கிறார்களே அந்தக் குற்றத்தினின்று நீங்குவதையும் நிய்யத்து செய்வான். இதன் நிமித்தமே விருந்தை கபூல் செய்வது வாஜிபென்று சில உலமாக்கள் சொல்லியிருக்கிறார்கள். இன்னும் மிக்க நிய்யத்துடன் முஸ்லிமான சகோதரனுக்குச் சங்கை செய்வதையும் நிய்யத்து செய்வான். யாராவதொருவன் ஒரு முஃமினுக்குச் சங்கை செய்வானாகில் அவன் அல்லாகு தஆலாவுக்குச் சங்கை செய்தவன்போ லாகுவான் என்று ஹதீதில் வந்திருக்கிறது. இன்னும் முஃமினுடைய மனதுக்குச் சந்தோஷமுண்டாக்குவதையும் நிய்யத்து செய்

வான். ஒருவன் ஒரு மூமினுடைய மனதைச் சந்தோஷப்படுத்துவானாகில் அவன் அல்லாகு தஆலாவைச் சந்தோஷப்படுத்தினவனாகுவான் என்று ஹதீதில் வந்திருக்கிறது. இன்னும் விருந்தளிப்பவனுடைய முலாகாத்துக்குப் போவதையும் நிய்யத்து செய்வான். ஈமானவர்களாகிய சகோதரர்களுடைய முலாகாத்தாகிறது அல்லாகு தஆலாவுடைய திருச்சமூகத்துக்கு நெருங்கச் செய்கிற இபாதத்துகளிற் சேர்ந்ததாயிருக்கும். இன்னும் தன்மேல் புறங்கூறுதலை விட்டுத் தன்னைக் காத்துக்கொள்வதையும் நிய்யத்து செய்வான். ஏனென்றால், இவன் விருந்துக்கு வராததைப்பற்றி ஜனங்கள் இவனைக் கெட்ட குணமுள்ளவனென்றும், பெருமைக்காரனென்றும் புறங்கூறாதிருக்கவேயாம். விருந்தை கபூல் செய்வதில் இந்த ஆறு நிய்யத்தாக விருக்கின்றன. ஒவ்வொரு நிய்யத்தின் பேரிலும் ஒவ்வொரு சவாபு கிடைக்கும். இப்படி நிய்யத்து செய்கிற பக்கத்தினால் முபாஹான செயல்களெல்லாம் இபாதத்திற் சேர்கின்றன. நிஜமார்களாகிய பெரியோர்கள் தங்களுடைய ஆட்டம் அடக்கங்கள் ஒவ்வொன்றும் நினைக்கொண்டு சம்பந்தப்பட்டிருக்கவேண்டிய விதமாக அவைகளில் நிய்யத்து செய்துகொள்ளுவார்கள். ஏனென்றால், அவைகளுள் ஒரு மூச்சாவது பழுதாகாமலிருக்கவேயாம்.

## விருந்துக்கு ஹாஜிராகுவதின் அதபுகள்.

விருந்தளிப்பவனைக் காக்க வைக்காமல் அதிகமாய் ஹாஜிராகுவான். உட்காருவதற்காக நல்ல இடத்தைத் தேடான். விருந்தளிப்பவன் எங்கே உட்காரச் சொல்லுகிறானோ அங்கே உட்காருவான். பெண்பிள்ளைகளிருக்கும் அறைக்கு எதிரில் உட்காரமாட்டான். எந்தப்பக்கத்திலிருந்து உணவைக் கொண்டுவருகிறார்களோ அந்தப் பக்கம் அதிகமாய்ப் பார்க்கமாட்டான். உட்கார்ந்த பிறகு தனக்கு அதிக சமீபமாயிருப்பவனிடத்தில் சுகசேதி விசாரிப்பான். அவ்விடத்தில் ஷரஉக்கு விரோதமான யாதொரு காரியத்தைக் கண்டால் அதை நிராகரித்து விலக்குவான். விலக்க முடியாமற் போனால் அங்கிருந்து எழும்பிவிடுவான். வெள்ளியினாலாகிய சுருமாக் கூட்டைக் கண்டாலும் அவ்விடத்தில் உட்காருவது ஆகாதென்று அஹ்மது இப்னு ஹம்பல் றஹிமஹுல்லா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். விருந்தாளி அவ்விடத்தில் இரவில் தங்கியிருக்க வேண்டிய பக்ஷத்தில் விருந்தளிப்பவன் அவனுக்குக் கிப்லாவையும் ஒழுச்செய்யும் இடத்தையும் காட்டுவான்.



உணவு வைக்கும் அதபுகளாவன:—விருந்தாளி காத்திராதபடி துரிதப்படுத்தவேண்டும். இது விருந்தாளியைச் சங்கை செய்வதிற் சேர்ந்ததாயிருக்கும். அநேகம்பேர் ஹாஜிராகி ஒருவன் வரத் தாமதமானால் ஹாஜிரானவர்களை உபசரிப்பது மிக மேலாயிருக்கும். ஆனால், அப்படி வராதவன் ஏழையாயும் தாமதிக்காததினால் வருத்தப்படுகிறவனாயுமிருந்தால் அவனைச் சந்தோஷப்படுத்துகிற நிய்யத்து கொண்டு தாமதிப்பது நன்மையாகும். துரிதப்படுத்துவது ஷைத்தானுடைய அமலாயிருந்தபோதிலும் விருந்திலும், இறந்துபோனவர்களை அடக்க ஆயத்தம் செய்வதிலும், பெண்களை நிக்காஹ் செய்து கொடுப்பதிலும், கடனைத் திருப்பிதலும், பாவங்களை விட்டுத் தவ்பாச் செய்வதிலும், ஆக இந்த ஐந்து காரியங்களிலும் துரிதப்படுத்துவது ஆகுமென்று ஹாதிமுல் அஸம்மு என்பவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இன்னும் வலீமா விருந்தில் துரிதப்படுத்துவது சுன்னத்தாயிருக்கிறது.

இரண்டாவது:—உணவுகளை வைப்பதற்கு முன்னே கனிவர்க்கத்தைக் கொண்டுவந்து வைப்பான். கீரை முதலிய தர்க்காரி பதார்த்தங்களை விட்டும் சுப்ராவைக் காலியாக்கமாட்டான். ஏனென்றால், சுப்ராவில் தர்க்காரி பதார்த்தமிருந்தால் மலக்குகள் அவ்விடத்தில் ஹாஜிராகிறார்களென்று ஹதீதில் வந்திருக்கிறது. எது நல்ல உணவாயிருக்கிறதோ அதைத் தின்று திருப்தியடையும்படி முன்பாக அதை வைப்பான். அதிகமாய்த் தின்பதற்கென்று பெரும்பாடியான தீனியை முன்பாக வைப்பது பெருந்தீனிக்காரருடைய வழக்கமாயிருக்கிறது. இது மக்ரூஹாயிருக்கும். இன்னும் ஒவ்வொருவரும் தங்களுக்குப் பிரியமானதைத் தின்பதற்காகப் பலவிதமான உணவுகளையும் ஒரேதரமாய்க் கொண்டுவந்து வைப்பது சிலருடைய வழக்கமாயிருக்கிறது. பலவகையான உணவுகளை வைத்தால் அவைகளைச் சீக்கிரத்தில் எடுத்துக்கொள்ளமாட்டார்கள். ஏனென்றால், எல்லாரும் இன்னும் இன்னும் திருப்தியடையாமலிருக்கவும் கூடுமாதலாலென்க.

மூன்றாவது:—உணவை மிகவும் கொஞ்சமாய்க் கொண்டுவந்து வைக்கான். இது மரியாதைத் தன்மைக்கு மாறாயிருக்கும். மிதமின்றி அதிகமாகவும் வைக்கான். இது பெருமைத்தனமாயிருக்கும். ஆனால் அதிகமாகிற உணவைப்பற்றிக் கேள்வி கணக்கில்லையென்கிற நிய்யத்தைக்கொண்டு அதிகமாய் வைத்தால் பரவாயில்லை. இப்ராஹீமுப்னு அத்ஹமவர்கள் உணவை அதிகமாய்க் கொண்டுவந்து வைத்தபோது சுப்யானுஸ்ஸவ்ரியவர்கள் "உமக்கு இஸ்ராபைப் பற்றிப் பயமில்லையா?"

என்று கேட்க, அதற்கு இப்ராஹீமுப்னு அத்ஹமவர்கள் "விருந்தின் உணவில் இஸ்ராபில்லை" என்று விடையளித்தார்கள். இன்னும் மனைவி மக்களுடைய பார்வை சுபுராவின்மே லிராதபடி முதலில் அவர்களுடைய பங்கை எடுத்துவைத்து விடுவான். ஏனென்றால், ஒன்றும் மிஞ்சாமற் போனால் அவர்கள் விருந்தாளியைக் குறைகூறுவார்கள். இதில் விருந்தாளியை வஞ்சித்தல் ஏற்படுகின்றது.

இன்னும் சிலருடிகளின் வழக்கமா யிருக்கிறதுபோல் சோற்றை வாரிக் கட்டிக்கொண்டு போவது கூடாது. ஆனால் விருந்தளிப்பவன் அப்படி எடுத்துக்கொண்டு போகிறவர்கள் வெட்கமடைகிற காரணத்தை நோக்கியல்ல, உண்மையாகவே தனது சம்மதத்தைப் பகிரங்கமாய்ச் சொல்லிவிட்டாலும், அல்லது இவர்கள் விருந்து செய்தவனுடைய மனப்பிரியத்தை அறிந்தவர்களா யிருந்தாலும் அப்போது எடுத்துக்கொண்டு போவது ஆகும். எனினும் கூடவுண்பவர்களோடு கொடுமை செய்து அதிகமாய் எடுத்துக் கொள்ளுவானானால் ஹறாமாகும். விருந்தளிப்பவனுடைய சம்மத மில்லாமல் கொண்டுபோவதும் ஹறாமாகின்றது. இப்படி எடுத்துக்கொண்டு போவதிலும் திருடிக்கொண்டு போவதிலும் கொஞ்சமும் வித்தியாசமில்லை. இன்னும் கூடவுண்பவன் தனது மனப்பிரியத்தோடல்லாமல் வெட்கத்தினால் பாத்திரத்தில் வைத்துவிட்டாலும் ஹறாமாயிருக்கும்.

## விருந்துண்ட வீட்டிலிருந்து புறப்படுகிற அதபுகள்.

விருந்தளித்தவனுடைய உத்திரவின்மேல் புறப்படுவான். விருந்தளித்தவன் தனது வீட்டு வாசற்படி வரையில் அவனுடன் வருவான். றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் இப்படியே செய்பவர்களா யிருந்தார்கள். விருந்தளித்தவன் நல்ல வார்த்தையாய்ப் பேசுவான். முகமலர்ச்சியா யிருப்பான். விருந்துண்டவன் அவனால் ஏதாவது குற்றத்தைக் கண்டால் அதைப் பாராட்டாமல் விட்டுவிடுவான். தனது நற்குணத்தால் அதை மறைப்பான். நற்குணமானது அநேகம் நபிலான இபாதத்துகளிலும் மிக்க நன்மையுள்ளதா யிருக்கிறது.

ஹிக்காயத்து: ஒரு சிறுவன் தன் தகப்பன்செய்த விருந்துக்காக ஜுனைது பகுதாதி றகிமகுல்லா அவர்களை அழைத்திருந்தான். இது அவன் தகப்பனுக்குத் தெரியாது. ஜுனைது றகிமகுல்லா அவர்கள் வீட்டு வாசற்படியில் வந்தபோது அச்சிறுவனுடைய தகப்பன் அவர்களை உள்ளே போகவிடவில்லை. அவர்கள் திரும்பிவிட்டார்கள். பிறகு அச்சிறுவன் அவர்களை அழைக்க அவர்கள் வந்தார்கள். அப்போதும் தகப்பன்



தடைசெய்தான். பின்பும் திரும்பிவிட்டார்கள். இதேவிதமாய் நாலுதரம் அழைத்ததிலும் தடைசெய்ததிலும் சிறுவனுடைய மனதைச் சந்தோஷப்படுத்தும் பொருட்டு வருகிறவர்களாயும், அவன் தகப்பனுடைய மனதைச் சந்தோஷப்படுத்தும் பொருட்டுத் திரும்பிவிடுகிறவர்களாயு மிருந்தார்கள். அதைப்பற்றி அவர்களின் மனதில் கொஞ்சமும் வருத்தமுண்டாகவில்லை. ஒவ்வொரு தடையின்போதும் அழைப்பின்போதும் அவர்களுக்கு அச்சமுண்டாகி, இது காரியம் அல்லாகு தஆலாவினால் சம்பவிக்கிறதென்று ஆலோசித்து நஸீஹத்து பெறுகிறவர்களா யிருந்தார்கள்.

## ௨-வது அஸ்லு - நிக்காஹுடைய பயான்.

அறிந்து கொள்ளுங்கள்:—நிகாஹு செய்வதானது உணவருந்துவதுபோலவே தீனுடைய பாதையிற் சேர்ந்ததா யிருக்கிறது. ஏனென்றால், தீனுடைய பாதையில் நடப்பதற்கு எப்படி மனிதனுக்கு ஜீவிப்பும் அந்த ஜீவிப்புக்கு உணவு குடிப்புகளும் வேண்டுமோ அப்படியே மனுஷஜாதியும் அவன் வம்சமும் நிலைத்திருப்பதும் வேண்டும். இது நிகாஹில்லாமல் நிலைபெறமாட்டாது. ஆகவே நிகாஹானது மனுஷனுடைய பிறப்புக்குக் காரணமாயும் உணவும் குடிப்பும் அவன் உயிர்வாழ்ந் திருப்பதற்குக் காரணமாயு மிருக்கிறது. நிகாஹு ஆகுமென்று ஏற்பட்டது இதற்காகவேயாம். இச்சை பாராட்டுவதற்கல்ல. என்கினும், இச்சையைப் படைத்தது எதற்கென்றால், நிகாஹு செய்து கொள்ளும்பொருட்டு ஜனங்களைத் தூண்டிவிடவும் அதனால் தீன்வழி நடப்பவர்கள் உண்டாகவும் அவர்கள் தீன்வழியில் நடக்கவுமேயாம். ஏனென்றால், எல்லாப்படைப்பும் தீனுக்காகவே படைக்கப்பட்டிருக்கிறது. இதனாலேதான் அல்லாகு தஆலா "ஜின்னுகளையும் மனிதர்களையும் என் வணக்கத்துக்காகவே படைத்தேன்" என்று திருவுளமாயிருக்கிறான். இன்னும் மனிதர்கள் எவ்வளவு அதிகமாய் உண்டாகின்றார்களோ அவ்வளவு அல்லாகு தஆலாவுடைய அடியார்கள் அதிகமாகின்றார்கள். அன்றியும், ஹுலரத்து முஹம்மது முஸ்தபா சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுடைய உம்மத்தும் அதிகமாகின்றது. இதன் நிமித்தமே றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் "நீங்கள் பெருகிப் பலுகும்பொருட்டு நிகாஹு செய்யுங்கள்" என்றும் "கியாமத்து நாளில் உங்களைக்கொண்டு மற்றும் நபிமார்களுடைய உம்மத்துகளிடம் நான் பெருமைபேசுவேன்" என்றும், "அது தாய்வயிற்றிலிருந்து கலைந்து விழுந்துபோன சிசுவாயிருந்தாலும் சரியே" என்றும் திருவு

ளமா யிருக்கிறார்கள். ஆகவே, எவனொருவன் அவுலாது பெருகவும் அல்லாவை வணங்கவுமான ஒரு காரியத்தில் முயற்சிக்கின்றானோ அவனுடைய சவாபு பெரிதேயாம். இதற்காகத்தான் தகப்பனுடைய ஹக்கு பெரிதென்றும் உஸ்தாதுடைய ஹக்கு அதிலும் பெரிதென்றும் சொன்னது. ஏனென்றால், பிள்ளை பிறப்பதற்குத் தகப்பன் காரணமாயும், பிள்ளை நேர்வழி அறிவதற்கு உஸ்தாது காரணமாயு மிருப்பதினாலேயல்லவா. இதனாலேதான் நபிலான இபாதத்துகளில் பார்க்கிலுமதிலும் நிகாஹு செய்வது மேலாயிருக்குமென்று சில உலமாக்கள் சொல்லியிருக்கிறார்கள்.

நிகாஹ்ஹானது நம்முடைய பாதையிற் சேர்ந்ததென்று இப்போது தெரியவந்ததாகையால் அதனுடைய அதபுகளின் விவரத்தை அறிவது மிகவும் அவசியமாம். இதன் விவரம் மூன்று பாபுகளால் தெரியலாகும். முதலாவது பாபு நிகாஹினால் உண்டாகும் பயன்களையும் அதினாலுண்டாகும் ஆபத்துகளையும் விவரிப்பது. இரண்டாவது பாபு நிகாஹை முடிக்கும் அதபுகளை விவரிப்பது. மூன்றாவது பாபு நிகாஹுக்குப் பின் குடித்தனம் நடத்தும் அதபுகளை விவரிப்பது.

## முதலாவது பாபு நிகாஹுடைய பயன்களும் அதன் ஆபத்துகளும்.

அறிந்துகொள்ளுங்கள்:—நிகாஹு செய்வதை நன்மை என்று அதன் பயன்களைக் கருதவேண்டியதாம். அதில் ஐந்து பயன்களுண்டு. முதலாவது பயன் பிள்ளையாயிருக்கும் பிள்ளையினால் நான்குவிதமான சவாபுண்டாகின்றது. முதலாவது சவாபு:—அல்லாஹுதஆலாவுக்குப் பிரியமாயும் மனுஷன் உற்பத்தியாகுவதற்கும் அவன் வம்சம் நிலைத்திருப்பதற்கும் காரணமாயிருக்கிற ஒரு காரியத்தில் இவன் முயற்சித்தவனாகுவான். எவன் அல்லாஹுதஆலாவுடைய ஆழிய ரகசியத்தை அறிவானோ அவனுக்கு இக்காரியம் அல்லாஹுதஆலாவுக்குப் பிரியமானதே என்பதிற் சந்தேகமிராது. ஒரு எஜமானன் பயிரிடத் தகுந்த ஓர் நிலத்தைத் தன் வேலைக்கார அடிமையினிடம் கொடுத்து விதையையும் இரண்டு மாடுகளையும் ஏர் முதலிய கருவிகளையும் அவன் வசம் ஒப்புவித்துப் பயிரிடும் வேலையில் அவனைத் தூண்டிக் கொண்டிருக்க ஒரு அதிகாரியையும் அவன்மேல் சாட்டினானென்றால், வேலைக்காரன் புத்திசாலியாயிருக்கும்பக்ஷத்தில் இதில் எஜமானனுடைய நோக்கம் இன்னதென்பதைத் தெரிந்துகொள்ளுவான். எஜமானன் தனது நாவினால் இன்னது செய்யென்று அவனுக்குச்



சொல்லாமற்போனாலுஞ் சரியே. இதுபோலவே அல்லாஹுதஆலா மனிதருக்குள் கருப்பையாகிய நிலத்தையும் புணர்ச்சிக்குரிய கருவிகளையும் உண்டாக்கி, ஆண்களின் முதுகிலும் பெண்களின் மார்பிலும் இந்திரியமாகிய விதையையும் வைத்து ஆசையாகிய அதிகாரியையும் அவர்கள்மீது சாட்டி அவர்களைத் தூண்டிக்கொண்டிருக்கவும் செய்தான். இதில் அவன் நாடிய கருத்து இன்னதென்பது எந்த புத்திமானுக்கும் தெரியாமலிராது. ஒருவன் அந்த விதையை விருதாவாக்கித் தூண்டும் அதிகாரியையும் ஏதோ சாக்குச்சொல்லி அனுப்பிவிட்டால் நிச்சயமாய் அல்லாஹுதஆலா நாடிய நோக்கமானவழியிற் செல்ல இவன் மறுக்கிறான். இதனாலேதான் ஸஹாபாக்களும் முன்னோரான பெரியோர்களும் நிகாஹில்லாமல் மவுத்தாய்ப் பொருந்த மில்லாதவர்களா யிருந்தார்கள். உதாரணமாக:—மஆதுப்னு ஜபல் ரலியல்லாகு அன்குவுடைய இரண்டு மனைவிகள் விஷபேதியில் மவுத்தாய்ப் போனார்கள். அவர்களுக்கும் பேதிகண்டது. அப்போது அவர்கள் "நான் மவுத்தாகு முன் எனக்கு நிகாஹு செய்துவையுங்கள்; மனைவி யில்லாதவனாய் மவுத்தாக எனக்குப் பிரியமில்லை" என்று சொன்னார்கள்.

இரண்டாவது சவாபு:—ஹலரத்து றசூல் சல்லல்லாகு அலைஹி வசல்லமவர்களுடைய உம்மத்துகள் பெருகி அதனால் அவர்கள் பெருமை பெறுவதற்குச் சார்பான ஒரு காரியத்தில் இவன் முயற்சித்தவனாகின்றான். இதனாலேதான் "மக்கட்பேறில்லா மலடியை மணம் புரியேல்" என்றும், "மனையில் விரித்திருக்கும் பாயானது மலடியினும் மேலாயிருக்கிறது" என்றும், "பிள்ளை பெறுகிற ஸ்திரீ அந்தங்கெட்டவளா யிருந்தாலும் அழகியாயிருக்கிற மலடியினும் மேலானவள்" என்றும் றசூல் சல்லல்லாகு அலைஹிவசல்லமவர்கள் திருவுளமா யிருக்கிறார்கள். இதனால் நிகாஹு செய்வது இன்பம் பாராட்டுவதற்கல்லவென்பது தெரியலாகும். ஏனென்றால், இன்பம் பாராட்டுவதற்கு அழகில்லாதவளினும் அழகுள்ளவளே இணக்கமானவளல்லவா.

மூன்றாவது சவாபு:—பிள்ளையினால் துஆ கிடைக்கின்றது. இடைவிடாமல் எப்போதும் சவாபு கிடைத்துக்கொண்டிருக்கிற கைராத்துகளில் பிள்ளையுமொன்றென்று ஹதீதில் வந்திருக்கிறது. அதாவது, தகப்பனுடைய மவுத்துக்குப் பிறகு பிள்ளையினுடைய துஆவானது எப்போதும் தகப்பனாருக்குச் சேர்ந்துகொண்டிருக்கிறது. அதனை ஒளியினாலாகிய தட்டுகளில் வைத்து மவுத்தானவர்களுக்குக் காட்

டப்படுகிறதென்றும் அதனால் அவர்களுக்கு ராஹத்துண்டாகிறதென்றும் ஹதீதில் வந்திருக்கிறது.

நாலாவது ஃவாயிது:—சிலசமயம் தகப்பனுக்கு முன்னே பிள்ளை மௌத்தாய்ப் போகின்றது. அப்போது அந்த முஸீபத்துக்காக அவன் துக்கத்தைச் சகிப்பான். பிள்ளையானது அவனுக்கு ஷபாஅத்து செய்யும். பிள்ளையைச் சொர்க்கத்துக்குப் போகும்படி உத்திரவாகுமென்றும், அப்போது அது கவாக்குள்ளே கோபமும் துக்கமுங்கொண்டு தாய் தந்தையரில்லாமல் நான் ஒருபோதும் சொர்க்கம் போகமாட்டேனென்று சொல்லுமென்றும் ஹதீதிலிருக்கிறது. இன்னும் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் ஒருவருடைய ஆடையைப் பிடித்திருக்கிறவர்களாயும், இதோ நான் உன்னை இழுக்கிறதுபோலவே பிள்ளையானது தன் தாய் தந்தையரைச் சொர்க்கத்துக்கு இழுத்துக்கொண்டு போகுமென்று சொல்லுகிறவர்களாயு மிருந்தார்கள். இன்னும் பிள்ளைகள் சொர்க்கத்துடைய வாசற்படியில் கூட்டமாய்க் கூடி நேரே சத்தமாய்த் தங்கள் தாய் தந்தையரைக் கூப்பிட்டுக் கதறி யழுவார்களென்றும், அப்போது அவர்களை நோக்கி நீங்கள் கூட்டத்தில் போய்ப் பார்த்து ஒவ்வொருவரும் தங்கள் தாய் தந்தையருடைய கையைப் பிடித்து அவர்களைச் சொர்க்கத்துக்கு அழைத்துக்கொண்டு போங்களென்று உத்திரவாகுமென்றும் ஹதீதில் வந்திருக்கிறது.

ஹிக்காயத்து:—பெரியோர்களில் ஒருவர் நிகாஹு செய்துகொள்ளாமலும் அதற்கு மிகவும் பயப்படுகிறவரா யிருந்தார். அவர் ஓர் இரவு சொப்பனத்தில் கியாமத்து நடக்கிறதுபோலும், ஜனங்கள் தாக மிகுதியினால் தவித்துக்கொண்டிருக்கிறதுபோலும், பிள்ளைகளின் ஓர் கூட்டம் தங்கள் கைகளில் வெள்ளியாலும் பொன்னாலுமாகிய பான பாத்திரங்களை வைத்துக்கொண்டு ஒரு கூட்டத்துக்குத் தண்ணீர் கொடுக்கிறதுபோலும், தானும் அவர்களைத் தண்ணீர் கேட்டதுபோலும், அதற்கு அவர்கள் தண்ணீர் கொடுக்காமல் உன்னுடைய பிள்ளை எங்களில் இல்லையென்று சொன்னதுபோலும் கண்டார். பின்பு நித்திரையிலிருந்து விழித்து அந்தக்ஷணமே நிகாஹு செய்து கொண்டார்.

இரண்டாவது பயன்:—நிகாஹு செய்வதினால் மனிதன் தன்னுடைய தீனைப் பலப்படுத்துகிறான். இன்னும் ஷைத்தானுடைய ஆயுதமாகிய இச்சையைத் தன்னிலிருந்தும் தூரப்படுத்துகிறான். இதனாலேதான் எவனொருவன் நிகாஹு செய்தானோ அவன் தன்னுடைய தீனில்



அரைவாசியைப் பலப்படுத்தினனென்றும், இன்னும் எவன் நிகாஹு செய்யவில்லையோ அவன் பெரும்பாலும் கெட்டபார்வை யில்லாமல் கண்ணையும், கெட்ட சிந்தனை யில்லாமல் கல்பையும் காக்கமுடியாது, அவன் தன் மானத்தைக் காத்துக்கொண்டாலுஞ் சரியே என்றும் நபிஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் திருவுளமா யிருக்கிறார்கள். ஆனால் நிகாஹு செய்வது பிள்ளையின் நிய்யத்தைக்கொண் டாயிருக்க வேண்டும். இன்பம் பாராட்டுகிற நிய்யத்தைக்கொண்டல்ல. ஏனென்றால், அல்லாவுடைய உத்திரவுக்கு வழிபட்டு அவன் பிரியத்துக்காகச் செய்யப்படுகிற ஓர் அமலானது இச்சை பாராட்டுகிற நிய்யத்துடன் செய்யப்படுவதா யிராது. இச்சையில் வேறொரு பிரயோசனமும் உண்டு. எவரையும் நிகாஹின்பேரில் தூண்டுதல்செய்துகொண் டிருக்கும்பொருட்டு அது படைக்கப்பட்டிருக்கிறது. வேறொரு பிரயோசனமாவது யாதெனில், அதில் ஒரு பெரிய இன்பம் வைக்கப்பட்டிருக்கிறது. ஏனென்றால், நெருப்பின் எரிச்சலானது ஆகிரத்துடைய துன்பத்துக்கு அறிகுறியா யிருக்கும் பொருட்டு நெருப்பைப் படைத்திருக்கிறதுபோல், புணர்ச்சியின் இன்பமானது ஆகிரத்துடைய இன்பத்துக்கு அறிகுறியா யிருக்கும் பொருட்டு அதில் இன்பம் வைக்கப்பட்டிருக்கிறது. புணர்ச்சியினாலுண்டாகும் இன்பமும் நெருப்பினாலுண்டாகும் துன்பமும் ஆகிரத்துடைய இன்பதுன்பங்களை நோக்க ஒருபொருட்டுமல்ல. படைக்கப்பட்ட ஒவ்வொரு வஸ்துவிலும் அல்லாகுத்தஆலா பல பிரயோசனங்களை வைத்திருக்கிறான். ஒரு வஸ்துவில் அநேகம் பிரயோசனங்களை அமைத்திருக்கவும், அவைகளை ஆலிம்களுக்கும் பெரியோர்களுக்குமே யன்றி மற்றவர்களுக்குத் தெரியாமலிருக்கவும் கூடும். இனி ஒரு பெண் பிள்ளை வருகிறபோது அவளுடன் ஷைத்தா னிருக்கிறானென்றும், ஒருவனுடைய பார்வைக்கு ஒரு பெண்பிள்ளை அழகாய்த் தோற்றுவாளானால் அவன் தன் வீட்டுக்குப்போய்த் தன் மனைவியை மருவுவானென்றும், இவ்விஷயத்தில் எல்லாப் பெண்களும் சமமா யிருக்கிறார்களென்றும் நபிஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் திருவுளமா யிருக்கிறார்கள்.

மூன்றாவது பயன்:—மனையாட்டிகளின் முகத்தைப் பார்ப்பதினாலும் அவர்களோடிருந்து சரச வார்த்தைகள் பேசுவதினாலும் மனதுக்கு ஆநந்தமும் சுகமும் உண்டாகின்றது. இந்தச் சுகத்தினால் இபாதத்து செய்வதற்கு மனதில் உற்சாகம் பிறக்கின்றது. ஏனென்றால், இடைவிடாமல் இபாதத்து செய்வது மனச்சடைவுக்கும் தளர்ச்சிக்கும்

காரணமாகின்றது. இந்தச் சுகமானது அந்தச் சடைவையும் தளர்ச்சியையும் அகற்றிப் பலத்தைப் புதுப்பிக்கின்றது. நீங்கள் மனதுக்குச் சுகமே கொடாமல் நெருக்கப் பிடித்துவிடாதீர்களென்றும், அதனால் மனம் குருடாய்ப் போகுமென்றும் ஹலறத்து அமீருல் மூமினீன் அலீ றலியல்லாஹு அன்ஹு சொல்லியிருக்கிறார்கள். இன்னும் ஹலறத்து றஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களுக்கு வெளியாக்கப்படுகிற முகாஷபாத்தென்னும் வெளிப்பாடுகளின்போது சில சமயம் அவர்களுடைய தேகம் தாங்கமுடியாதபடி காரியம் அவ்வளவு கஷ்டமாயிருக்கும். அப்போது அவர்கள் பீவி ஆயிஷா றலியல்லாஹு அன்ஹாவின் மீது தங்கள் திருக்கரத்தை வைத்து "கல்லிமீனீயா ஆயிஷா" ஓ ஆயிஷாவே! என்னோடு பேசு என்று சொல்லுவார்கள். இதில் தங்களுக்கு வலிமையைக் கொடுக்கவேண்டுமென்பதும் அதனால் வஹியைச் சுமக்கும்படியான சக்தி பிறக்கவேண்டுமென்பதுமே அவர்களுடைய நாட்டமாயிருந்தது. பின்பு எப்பொழுது அவர்களை இந்த அலுப்புச் சூழ்ந்துகொள்ளப்படுகிறதோ, இன்னும் அந்தப் பலம் பூர்த்தியாகின்றதோ அப்போது அந்த ஆசை அவர்களுக்கு நீங்கிவிடும். "அரிஹ்னா யாபிலால்" ஓ பிலாலே! எமக்கு ஆறுதலைக் கொடு என்று சொல்லுவார்கள். பின்பு தொழுகையை ஆரம்பிப்பார்கள். இன்னும் சில சமயம் மணத்தைக் கொண்டு தங்கள் ரூஹுக்குப் பலத்தைக் கொடுப்பார்கள். இதனாலேதான் "உங்கள் துன்யாவிலிருந்தும் மணம், மாதர், தொழுகை இம்மூன்று விஷயங்கள் எனக்கு உவப்பாக்கப்பட்டன" என்றும், "என் கண்ணினது குளிர்ச்சியாகிய ஒளியானது தொழுகையிலிருக்கிறது" என்றும் றஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். என் கண்ணினது குளிர் தொழுகையிலென்று தொழுகையைச் சிறப்பித்துக் காட்டினதில் அதுவே அவர்களுடைய நாட்டமென்றும் மணமும் மாதரும் ரூஹுக்குப் பலத்தையுண்டாக்குமென்றும் ஏற்படுகின்றது. ஆகவே, மணத்தாலும் மாதராலும் மனதுக்குச் சுகத்தையூட்டி அதன் பலத்தினால் தொழுகையில் புகுந்து அதிலிருக்கிற கண்குளிர்ச்சியாகிய ஒளியை அடைவதே அவர்களுடைய முக்கிய கருத்தாயிருக்கிறது. இதனாலேதான் துன்யாவினுடைய பொருளைச் சேகரிக்க வேண்டாமென்று ஸஹாபாக்களை விலக்குகிறவர்களாயிருந்தார்கள். இன்னும் உமர் றலியல்லாஹு அன்ஹு றஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களிடத்தில், "யாறஸூலல்லாஹ்! துன்யாவைக் குறித்து நாங்கள் எதைப் பிடித்துக்கொள்ளுகிறது" என்று கேட்டதற்கு, "திக்ரு செய்யும் நாவையும் ஷுக்ரு செய்யும் கல்பையும் மூமினாகிய மனைவியையும்



தெரிந்துகொள்ள வேண்டும்" என்று திருவுளமானார்கள். இவ்விடத்தில் மனைவியை திக்ரு, ஷுக்ருகளுக்குச் சமமாக்கியிருக்கிறது.

நாலாவது பயன்:—மனைவியானவள் வீட்டுக் குடித்தனத் தொல்லையை ஏற்றுக்கொள்ளுகிறாள். சமைத்தல், கழுவல், பெருக்கல் முதலிய வேலைகளெல்லாம் அவளைச் சேர்ந்ததாயிருக்கிறது. ஆண்பிள்ளை இந்த வேலைகளில் பராக்காகுவானாகில் இல்மு, அமல், இபாதத்து இவைகளை விட்டும் தடைபட்டவனாயிருப்பான். இதனாலேதான் மனைவியானவள் தீனுடைய பாதையில் தன் புருஷனுக்கு உதவிக்காரியாகிறாள் என்பது. இன்னும் நல்ல மனைவியானவள் துன்யாவிற் சேர்ந்தவளல்லவென்றும், மேலும் அவள் ஆகிறத்தைச் சேர்ந்தவளென்றும் தீனுடைய காரியத்தில் பராக்காகும்பொருட்டு ஒருவனுக்கு மனோவொருமையை உண்டாக்குகிறாளென்றும் அபூசுலைமான் தாறா னென்பவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இன்னும் "ஈமானுக்குப் பிறகு நல்ல மனைவியைப் போன்ற மேலான யாதொரு செல்வமில்லை" என்று உமர் றலியல்லாஹு அன்ஹு சொல்லியிருக்கிறார்கள்.

ஐந்தாவது பயன்:—ஸ்திரீகளுடைய குணங்களின்பேரில் ஸபுறு செய்வதும், அவர்களுடைய காரியங்களைச் சரிப்படுத்துவதில் ஈடுபடுவதும், அவர்களைத் தீனுடைய வழியில் நிலைநிறுத்துவதும் பெரிய முயற்சியைப் பொறுத்ததாயிருக்கிறது. இந்த முயற்சியானது மிகவும் மேன்மையான இபாதத்தாகிற் சேர்ந்ததாயிருக்கும். மனைவிக்கு ஆகுமானவிதமாகச் செலவு செய்வது ஸதக்கா(தர்மம்) கொடுப்பதிலும் மேலாயிருக்கிறதென்று ஹதீஸில் வந்திருக்கிறது. இன்னும் "பிள்ளைகுட்டிகளுக்காக ஹலாலான தொழிலைச் செய்வது அப்தாலுகளின் வேலையாயிருக்கும்" என்று பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள். இப்னுல் முபாறக்கு என்பவர்கள் சில பெரியோர்களுடன் சேர்ந்து ஜிஹாது என்னும் மார்க்க யுத்தம் செய்பவர்களாயிருந்தார்கள். ஒருவர் "ஜிஹாது செய்வதிலும் மேலான அமல் ஏதாவது உண்டா?" என்று கேட்டார். அதற்கு "இதிலும் மேலான அமல் ஒன்றையும் நாங்கள் அறியோம்" என்று சிலர் சொன்னார்கள். அப்போது இப்னுல் முபாறக்கு என்பவர்கள் "இதிலும் மேலான அமலை நான் அறிவேன்" என்றும், "அது யாதெனில், ஒருவனுக்கு மனைவிமக்களுண்டாயிருந்து அவன் அவர்களை நல்விதமாய் வைத்திருப்பவனும், இரவில் விழிக்கும்போது தன் பிள்ளைகள் ஆடையை சோர்ந்து நிர்வாணமாயிருக்கப் பார்த்து எழுந்து அவர்கள்மேல் போர்வையைப் போர்த்திவிடுகிறவனு

யிருந்தால் அவனுடைய இந்த அமலானது ஜிஹாது செய்வதிலும் மேலானதாயிருக்கும்" என்றும் சொன்னார்கள். பிஷ்ருல்ஹாபி என்பவர்கள் சொல்வதாவது:—"இமாம் அஹ்மது ஹம்பல் அவர்களில் மூன்று விசேஷங்களிருக்கின்றன. அவை என்னில் இல்லை. அவற்றுள் ஒன்று:- அவர் தமக்காகவும் தமது பெண்சாதி பிள்ளைகளுக்காகவும் ஹலாலான தொழிலைச் செய்கிறார். நானோ எனக்காக மாத்திரம் தொழில் செய்கிறேன்" என்பதே. "இன்னும் எல்லாப் பாவங்களிலும் ஒரு பாவமுண்டு. அந்தப் பாவத்துக்குக் குடும்ப சம்ரக்ஷணையே யன்றி மற்றொன்றும் கப்பாராவாகிறதில்லை" என்று ஹதீதில் வந்திருக்கிறது. ஒரு பெரியோர் இருந்தார். அவருடைய மனைவியர் இறந்துபோயினார். அவரை மறுவிவாகம் செய்துகொள்ளும்படி ஜனங்கள் அநேகமாய்ச் சொல்லியும் அவர் அதில் விருப்பங்கொள்ளவில்லை. தனியாயிருப்பதில் ஹுழூறு கல்பும் மனவோர்மையும் அதிகமாயிருக்கிறதென்று சொன்னார். அவர் ஓர் இரவு சொப்பனங் கண்டார். வானத்துடைய வாசல்கள் திறந்திருக்கின்றன. அநேகம் மனிதர்கள் ஒருவருக்குப்பின் ஒருவராக இறங்கிக்கொண்டும் ஆகாய வெளியில் போய்க்கொண்டுமிருக்கிறார்கள். அவர்கள் இவரிடத்தில் வந்தபோது ஒருவர் மற்றொருவரிடத்தில் இவரைச் சுட்டிக் காட்டி, "இவன்தானோ அந்த மூதேவி" என்கிறார். அவர் "ஆம்" என்கிறார். இப்படியே மூன்றாவது ஒருவர் வந்து மற்றொருவரிடத்தில் "இவன்தானோ அந்த மூதேவி" என்கிறார். அவர் "ஆம்" என்கிறார். பயங்கரத்தினால் அவர்களிடத்தில் ஒன்றையும் கேட்க இவரால் முடியவில்லை. எல்லாருக்கும் கடைசியாக ஒரு சிறுவனிருந்தான். அவனிடத்தில் "இவர்கள் யாரை மூதேவி என்கிறார்கள்" என்று கேட்டார். அதற்கந்தச் சிறுவன் "உம்மைத்தான் சொல்லுகிறார்கள். ஏனென்றால், இதற்கு முன்னே உம்முடைய அமல்களை முஜாஹிதுகளென்னும் மார்க்க யுத்தஞ் செய்பவர்களுடைய அமலோடு சேர்த்து வானத்துக்குக் கொண்டுபோகிறவர்களாயிருந்தார்கள். இப்போது ஒருவாரமாக உம்மை முஜாஹிதுகளுடைய கூட்டத்திலிருந்து நீக்கிவிட்டார்கள். உம்மால் என்ன செய்கை வெளியாயிற்றோ எனக்குத் தெரியாது" என்று அச்சிறுவன் சொன்னான். அவர் நித்திரையிலிருந்து விழித்த உடனே நிகாஹ் செய்துகொண்டார். ஏனெனில், முஜாஹிதுகளிற் சேர்வதற்கேயாம். இவைகளே நிகாஹில் உண்டாகும் பயன்களாம். இப்பயன்கள் காரணமாக நிகாஹை விரும்புவது அவசியமாயிருக்கிறது. என்றாலும், நிகாஹில் மூன்று ஆபத்துக்களுமுண்டு.



முதலாவது ஆபத்து:—ஹலாலான தொழிலைச் செய்ய அறிவும் இக்காலத்தில் அவனால் கூடாமலிருக்கவும் குடும்பஸ்தனாயிருப்பதைப் பற்றி அவன் ஷுப்ஹத்தான அல்லது ஹராமான பொருளைச் சம்பாதிக்கவும் போதும். இது அவனுடைய தீனும் குடும்பமும் கெடுவதற்குக் காரணமாகும். எந்த நன்மையும் இதற்கு ஈடாய் ஆகாது. ஒரு அடியானுக்கு மலையளவின நன்மைகளிருக்குமென்றும், அவனை மீஜான் என்னும் தராசினிடத்தில் நிறுத்திக்கொண்டு "உன் குடும்பத்துக்கு எங்கிருந்து அன்னவஸ்திரங் கொடுத்தாயென்று கேட்கப்படுமென்றும், இதைப்பற்றி அவனைப் பிடித்துக் கொள்ளப்படுமென்றும், அதனால் அவனுடைய எல்லா நன்மைகளும் வீணாய்ப் போமென்றும், அப்போது முறையிட்டு ஒரு மலக்கு சத்தமிட்டு, "ஓ ஜனங்களே! இதோ இந்த மனிதனைப் பாருங்கள். இவனுடைய நன்மைகளெல்லாம் இவன் குடும்பம் தின்றுவிட்டது. இவன் குற்றத்தில் அகப்பட்டுக்கொண்டான்" என்று கூவிச் சொல்லுவார் என்றும் ஹதீதில் வந்திருக்கிறது. இன்னும் கியாமத்து நாளில் அடியானைப் பற்றி முதலாவதாய் முறையிடுபவர்கள் அவன் குடும்பத்தார் என்றும், அவர்கள் அல்லாஹுதஆலாவினிடத்தில் "ஆண்டவனே! எங்களைப்பற்றி இவனை நியாயவிசாரணை செய். இவன் எங்களுக்கு ஹராமான உணவை ஊட்டினான். அதை நாங்கள் அறியாதவர்களாயிருந்தோம். நாங்கள் அறியவேண்டிய இல்மை இவன் எங்களுக்குப் படிப்பிக்கவில்லை. நாங்கள் ஜாஹில்களாகவே யிருந்தோம்" என்று பிராது செய்வார்களென்றும் ஹதீதில் வந்திருக்கிறது. ஆதலால், எவனொருவன் ஹலாலான சொத்து சுதந்திரமாவது ஹலாலான தொழிலாவது இல்லாதவனாயிருக்கிறானோ அவன் நிகாஹ் செய்துகொள்வது தகுதியல்ல. ஆனால் நிகாஹ் செய்யாமற்போனால் ஜினாவில் விழுவான் என்று உண்மையாய் அறிந்தால் அவன் நிகாஹ் செய்வது தகுதியாம்.

இரண்டாவது ஆபத்து:—எவன் நற்குணம், பொறுமையுமுள்ளவனாயும் குடும்பத்தா லுண்டாகும் கஷ்டங்களைச் சகித்துத் தக்கதாய் நடத்தக் கூடியவனாயும் இருக்கிறானோ அவனால்தான் குடும்பத்தின் வாக்கை நிறைவேற்றக் கூடும். இது எல்லாராலும் முடியாது. ஒருக்கால் அவர்களை இம்சைப்படுத்திப் பாவியாகவும், அல்லது அவர்களைத் திக்கற்றவர்களாய்விட்டு ஓடிப்போகவும் கூடும். யாராவதொருவன் மனைவிமக்களைவிட்டு ஓடிப்போவானாகில் எஜமானைவிட்டு ஓடிப்போன அடிமைக்கு அவன் சமானமாகுவான் என்றும், அவன் திரும்பி அவர்களிடம் வராதிருக்கிறவரையில் அவன் தொழுகையும் நோன்பும் கபூல்செய்யப்

படாமலவன் தம் ஹதீதில் வந்திருக்கிறது. ஆகக்கூடி ஒவ்வொருவருக்கும் உயிர் இருக்கிறது. எவன் தன் ஜீவனைக் காப்பாற்றிக்கொள்ள முடியாதவனாயிருக்கிறானோ அவன் மற்றொருவனைக் காப்பதற்குப் பிணைப்படாமலிருப்பது மிகமேலேயாம். பிஷ்ருல்ஹாபியிடத்தில் "நீர் ஏன் நிகாஹ் செய்கிறதில்லை" என்று கேட்டதற்கு, "புருஷர்களுடைய ஹக்கு ஸ்திரீகள்மீதிருப்பதுபோலே ஸ்திரீகளுடைய ஹக்கு புருஷர்மீது முண்டு" என்று அல்லாஹு தஆலா திருவுளமாயிருக்கிற இந்த ஆயத்தினால், நான் நிகாஹ் செய்ய பயப்படுகிறேன்" என்றார்கள். இப்ராஹீமுப்னு அத்ஹம் சொல்லுகிறதாவது:—"நான் ஏன் நிகாஹ் செய்வேன் எனக்கு அதன் ஹாஜத்தில்லையே, ஸ்திரீயின் ஹக்குகளை நிறைவேற்றுவதல்ல என்னாலே. எந்த ஸ்திரீயையும் நான் ஏன் வஞ்சிக்க வேண்டும்" என்பதே.

மூன்றாவது ஆபத்து:—மனமானது குடும்பகாரியத்தின் கவலையில் ஆழ்ந்துபோகின்றது. அதனால் அவன் ஆகிரத்துடைய நினைவே இல்லாமலும், அதற்கு வேண்டிய தயாரிப்புகளைத் தயார்செய்யாமலும் மறந்துபோகின்றான். எந்த வஸ்து உன்னை அல்லாவின் நினைவிலிருந்து மறக்கச் செய்கின்றதோ அது உன்னுடைய கேட்டுக்குக் காரணமாகும். இதனாலேதான் அல்லாஹுதஆலா "ஓ ஈமான் கொண்டவர்களே! உங்கள் பொருள்களும் உங்கள் பிள்ளைகளும் அல்லாவின் நினைவிலிருந்து உங்களை மருட்ட வேண்டாம்" என்று திருவுளமாயிருக்கிறான். ஆதலால் ரசூல் சல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்களிருந்ததுபோல் குடும்ப காரியத்தின் கவலையில் அல்லாஹு தஆலாவின் திக்ரை மறக்காமலிருக்க யாருக்கு வல்லமையிருக்கிறது. ஒருவன் நிகாஇல்லாமலிருந்தால் அவன் எப்போதும் அல்லாவுடைய வணக்கத்திலும் அவன் திக்ரிலும் இருப்பானென்றும், ஹராமில் பிரவேசிக்காதபடி தன்னைக் காத்துக்கொள்ளுவானென்றும் அறிகிற பக்ஷத்தில் இப்படிப்பட்டவன் நிகாஹ் செய்யாமலிருப்பது நன்மையாயிருக்கும். நிகாஹ் இல்லாமற் போனால் ஜினாவில் விழுவேனென்று எவன் பயப்படுகிறானோ அவன் நிகாஹ் செய்துகொள்வது மேலாயிருக்கும். இந்தப் பயமில்லாதவன் நிகாஹ் செய்யாமலிருப்பதே மேல். ஆனால், எவனொருவன் ஹலாலான தொழிலைச் செய்யக் கூடியவனாயும், தனது நற்குணத்தால் மனைவி மக்களைப் பக்ஷமாய் நடத்துபவன் என்ற நம்பிக்கையுள்ளவனாயும், நிகாஹ் செய்வது தன்னை அல்லாஹு தஆலாவுடைய திக்ரிலிருந்து நீக்கமாட்டாதென்று அறிந்தவனாயும் இருக்கின்றானோ அவன் நிகாஹ் செய்வது ஏற்றமேயாம்.



## இரண்டாவது பாபு - நிகாஹ் முடிக்கும் வகையும், அதன் அதபுகளும், பெண்ணில் கவனிக்கவேண்டிய சிபத்துகளும்.

நிகாஹ்வுக்கு ஐந்து ஷர்த்துகளுண்டு. முதலாவது ஷர்த்து:— * வலியென்னும் பாத்தியக்காரனும், ஏனென்றால், வலிகாரன் இல்லாமல் நிகாஹ் செய்வது கூடாது. எந்தப் பெண்ணுக்கு வலிகாரன் இல்லையோ அந்தப் பெண்ணுக்கு சுல்தான் என்னும் பாதுஷா வலிகாரனாகுவான்.

இரண்டாவது ஷர்த்து:—பெண்ணின் சம்மதமாயிருக்கும். ஆனால் பெண் † சிறுமியாயிருந்து அவள் தகப்பனாவது பாட்டனாவது அவளை நிகாஹ் செய்துகொடுக்கும் பக்ஷத்தில் அவள் சம்மதம் தேவையில்லை. அப்படித் தேவையில்லாதிருப்பதுடன் அவளுக்குத் தெரியப்படுத்துவது ஏற்றமாயிருக்கும். தெரியப்படுத்தும்போது அவள் பேசாமல் மௌனமாயிருந்தால் போதும்.

மூன்றாவது ஷர்த்து:—நீதமுள்ள இரண்டு சாக்ஷிகள் ஹாஜிராயிருப்பதாம். எனினும், இரண்டு சாக்ஷிகளின்பேரில் போதுமாக்கிக் கொள்ளாமல் பேறுதலுள்ள ஒரு ஜமாஅத்தை அப்போது ஹாஜிராக்கிக்கொள்வது ஏற்றமாயிருக்கும். பின்பு எந்த இரண்டு ஆண்பிள்ளைகளுடைய பாவிருத்தனம் மாப்பிள்ளை, பெண் இருவருக்கும் தெரியாமல் மறைந்திருக்கிறதோ அந்த இரண்டு ஆண்பிள்ளைகளின் சாக்ஷியத்தாலும் நிகாஹ் கூடியபோம்.

நாலாவது ஷர்த்து:—வலிக்காரனும் மாப்பிள்ளையுமாவது அல்லது அவர்களுடைய வக்கீலாவது ஈஜாபுகபூல் சொல்வதாம். அது நிகாஹ் அல்லது தஸ்வீஜ் என்னும் பரிஷ்காரமான சொல்லாயிருக்கவேண்டும் அல்லது அதற்குச் சரியான பார்ஸியாயிருக்கவேண்டும். இதில் சுன்னத்தானவழி - கொத்துபா ஓதின பிறகு வலிகாரன் மாப்பிள்ளையை நோக்கி பிஸ்மில்லாஹி வல்ஹம்து லில்லாஹி நான் இன்னானை இவ்வளவு மஹரின்பேரில் உனக்கு நிகாஹ் செய்து கொடுத்தேன் என்று சொல்லுவான். அதற்கு மாப்பிள்ளை பிஸ்மில்லாஹி வல்ஹம்து லில்லாஹி நான் இந்த நிகாஹை இந்த மஹரின்பேரில் கபூல் செய்தேன் என்று சொல்லுவான்.

* ஹனபி மத்ஹபின்படி பாலிகில்லாத பெண்ணின் நிகாஹுக்கு வலிகாரன் அவசிய வேண்டும். பாலிகான பெண்பிள்ளையின் நிகாஹுக்கு வலிகாரன் அவசியமல்ல. † பாலிகாவான [illegible]

நிகாஹு முடிப்பதற்கு முன்னே பெண்ணைப் பார்த்துக்கொள்ளுவது மேல். ஏனென்றால், அவளை அவன் விரும்பின பிறகு நிகாஹு செய்வதற்கேயாம். இதில் அவர்கள் ஆசையுடன் கூடிவாழ்வதை மிகவும் ஆதரவு வைக்கப்படுகிறது. நிகாஹு செய்வதில் சந்ததியையுண்டாக்குதல், கருத்து இவைகளைப் பாவமான கருமங்களில் செல்லவிடாமல் காப்பதையும் நிய்யத்து செய்வான். இதைவிட்டு இன்பம் பாராட்டுவதும் ஷிந்துமே அவனுடைய முழுநோக்கமாயிருக்கக்கூடாது.

ஐந்தாவது ஷரத்து:—நிகாஹு செய்துகொள்ள ஹலாலாகும்படியான நிலைமையில் அந்தப்பெண் இருப்பதாம். ஏனென்றால், அடியில் விவரிக்கும் இருபது சிபத்துகளில் ஒன்றின் காரணமாக நிகாஹு ஹராமாகின்றது. 1-வது அன்னியனுடைய நிகாஹில் இருப்பவள். 2-வது அன்னியனுடைய இத்தாவில் இருப்பவள். 3-வது மூர்த்தத் தாய்ப் போனவள். 4-வது புத்தை வணங்குகிறவள். 5-வது மார்க்கத்தையும் அல்லா ரசூலையும் இன்காரு செய்யும் ஜிந்திகானவள். 6-வது அன்னிய ஆண்பிள்ளைகளோடு உட்காருகிறவளாயும் தொழுகாதவளாயுமிருந்துகொண்டு இது எனக்கு ஹலாலென்றும் இதைப்பற்றி ஆகிரத்தில் அதாபாகாது என்றும் சொல்லுகிற இபாஹத்தியானவள். 7-வது ரசூல் சல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்கள் நபியாகி வந்த பிறகு இஸ்லாம் மார்க்கத்தை அல்லது யூதமார்க்கத்தைத் தெரிந்துகொண்டவர்களின் வம்சத்திலுள்ள நஸ்ரானியபெண் அல்லது யஹூதியபெண். 8-வது ஆண்பிள்ளையானவன் அடிமையல்லாத ஹுர்ராகான பெண்ணுடைய மஹர் கொடுக்கச் சக்தியுள்ளவனாய் அல்லது ஜினாவில் பிரவேசிக்கும் பயமில்லாதவனாய் இருக்கிற நிலைமையில் அடிமைப்பெண். 9-வது எந்த அடிமைப் பெண்ணுக்கு அவன் முழுசொந்தக்காரனாய் அல்லது அவளிற் சில பாகத்துக்குச் சுதந்திரனாய் இருக்கிறானோ அந்த அடிமைப்பெண். 10-வது இரத்த பந்துத்துவ சம்பந்தத்தால் கொள்ளுமுறையில்லாத பெண். 11-வது பால்குடி சம்பந்தத்தால் கொள்ளுமுறையில்லாத பெண். 12-வது விவாக சம்பந்தத்தால் கொள்ளுமுறையில்லாத பெண். உதாரணமாக:—இதற்கு முன் அவனுடைய மகளையாவது அவன் தாயையாவது அவன் பாட்டியையாவது நிகாஹு செய்து விடு கூடியிருப்பது அல்லது அந்தப்பெண் இவனுடைய தகப்பன் அல்லது பாட்டனுடைய நிகாஹில் வந்தவளாயிருப்பதுபோல். 13-வது நாலு பெண்ஜாதிகளிருக்கிற நிலைமையில் ஐந்தாவது பெண். 14-வது ஒரு பெண்ணுடைய சகோதரியாவது அவள் மாமியாவது அவள் சிறிய பெரிய தாயாவது இவனுடைய



நிகாஹில் இருக்கிற நிலைமையில் அந்தப் பெண். இன்னும் இதுபோல் எந்த இரண்டு பெண்களில் ஒருத்தியை ஆணாகப் பாவிப்பதில் அவர்களிருவருக்கும் நிகாஹு செய்வது கூடாதோ அந்த இரண்டு பெண்கள். 16-வது இவனுடைய நிகாஹிலிருந்து மூன்றுதரம் தலாக்கு சொல்லப்பட்ட பெண். 17-வது மூன்றுதரம் விலைக்கு வாங்கி விற்றுவிட்ட அடிமைப்பெண். இப்படி முத்தலாக்கு சொல்லப்பட்டவளும் மூன்றுதரம் வாங்கி விற்கப்பட்டவளுமான இந்தப் பெண்கள் வேறொரு புருஷனை நிகாஹு செய்யாதிருக்கிறவரையில் முந்தினவனுக்கு ஹலாலாக மாட்டார்கள். 18-வது * லிஆன் கூறப்பட்ட பெண். 19-வது ஹஜ்ஜுக்காவது உம்ராவுக்காவது † இஹ்ராம் கட்டியிருக்கிற ஆண் அல்லது பெண். 20-வது பாலிகாகாத சிறுமியாயிருந்து எத்தீம் என்னும் அநாதப்பெண். இவர்களில் ஒருவரையேனும் நிகாஹு செய்வது கூடாததாயிருக்கும். நிகாஹு ஹலாலாகுவதற்குள்ள ஷரத்துகள் இவைகளேயாம்.

ஆனால் எந்த சிபத்துகளை நிகாஹுக்காகப் பெண்களில் கவனிக்க வேண்டியது அவசியத்தோ அந்த சிபத்துகள் என்னும் இலக்ஷணங்கள் எட்டாயிருக்கும். முதலாவது சிபத்து:— பெண்ணானவள் தனது கற்பையும் கணவனுடைய சொத்தையும் காப்பவளாயிருப்பதாம். இதுதான் மற்றும் நன்மைகளுக்கு மூலமாயிருக்கிறது. ஏனென்றால், அவள் அப்படியில்லாமல் கணவனுடைய சொத்தில் களவு செய்கிறவ

---

* லிஆன் கூறல் என்பது ஒருவன் தன் பெண்ஜாதியைக் குறித்து "இவள் விபசாரம் செய்தாள்" என்று காஜியினிடம் நான்குமுறை சத்தியத்துடன் சொல்லி, ஐந்தாவதுமுறை "இதில் நான் பொய்யனாயிருந்தால் என்மேல் அல்லாவுடைய லஃனத்துண்டாக" என்று கூறுவதும், பிறகு அந்தப் பெண்பிள்ளையும் நான்குமுறை சத்தியத்துடன் "இவன் என்மேல் விபசாரக்குற்றம் கூறுவதில் பொய்யனாயிருக்கிறான்" என்று சொல்லி ஐந்தாவது முறை "இதில் இவன் மெய்யனாயிருந்தால் என்மேல் அல்லாவுடைய லஃனத்துண்டாக" என்று கூறுவதுமேயாம். இருவரும் இப்படிக் கூறிக்கொண்ட பிறகு காஜியுடைய கட்டளையினால் இவர்கள் பிரிந்து விடுவார்கள். கன்ஸா.

† இது இஹ்ராம் ஷாபிஈ மத்ஹபுக்குள்ள ஹுக்கிலாயிருக்கும். இமாம் அபூஹனீபா றஹிமஹுல்லா யிடத்தில் இஹ்ராம் கட்டியிருக்கிறவரில் நிகாஹு முடிப்பது ஆகும். ஏனென்றால், நபி சல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்கள் மைமூனா றலியல்லாஹு அன்ஹாவை இஹ்ராம் கட்டியிருக்கும்போது நிகாஹு செய்திருக்கிறதாய் ஸஹீஹுல் புகாரியிலும் முஸ்லிமிலும் இபுனு அப்பாஸ் றலியல்லாஹு அன்ஹு அவர்களைக்கொண்டு ரிவாயத்து செய்யப்பட்டிருக்கிறது. இதுதான் இமாம் அபூஹனீபா றஹிமஹுல்லா அவர்களுக்கு ஆதாரம்.

ளாயிருந்தால் அதனால் அவனுக்கு சஞ்சலமுண்டாகும். அவள் தன் கற்பு நிலைமையில் கள்ளியாயிருக்கும் பக்ஷம் கணவன் அதைப்பாராட்டாமல் மவுனமாயிருப்பானாகில் இதில் கைரத்துக்கும் தீனுக்கும் குறைவிருக்கிறது. ஜனங்களில் அவன் முகபங்கனும் பேர்கெட்டவனுமாயிருப்பான். மவுனமாயிராமல் கண்டிப்பானாகில் இன்பவாழ்க்கை அவனுக்கு எப்போதும் துன்பவாழ்க்கையாகும். தலாக்குகொடுத்து அவளைத் தள்ளிவிடுவானாகில், முந்தின சம்பந்தத்தால் ஒருக்கால் அவள் பேரில் அவன் மையலாகவும் கூடும். ஒரு பெண் கற்புநிலை மாறினவளாயிருப்பதுடன் கட்டழகியாயுமிருந்தால் இது பெரிய துன்பமாயிருக்கும். இப்படியான ஸ்திரீயின்மேல் அவள் புருஷன் மையலாகாதிருக்கிற பக்ஷத்தில் அவளைத் தலாக்குசொல்வது ஏற்றமாம். ஒருவர் றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களிடத்தில் வந்து தம்முடைய பெண்ஜாதியின் பேறுதல் குறைவை முறையிட்டார். அதற்கு ஹஸரத்தவர்கள் “அவளைத் தலாக்கு சொல்லிவிடு” என்று சொன்னார்கள். அதற்கவர் “என் மனம் அவளை ஆசிக்கிறது” என்றார். அப்போது ஹஸரத்தவர்கள் “அவளை நீக்காதே, ஏனென்றால், தலாக்கு கொடுப்பாயாகில் ஆபத்தில் விழுவாய்” என்று திருவுளமானார்கள். இன்னும் யாராவதொருவன் ஒரு பெண்ணை அழகுக்காக அல்லது பொருளுக்காக நிகாகு செய்வானாகில் அவன் அந்த இரண்டுமில்லாமல் நிர்ப்பாக்கியனாகுவான் என்றும், தீனுக்காக நிகாகு செய்வானாகில் இரண்டு நாட்டமும் நிறைவேறுமென்றும் ஹதீதில் வந்திருக்கிறது.

இரண்டாவது சிபத்து:—நற்குணமாயிருக்கும். ஏனென்றால், துர்க்குணமுள்ளவள் நன்றியில்லாதவளாயும் நாக்கு நீண்டவளாயும் வீண் விஸ்தரிப்பான பேச்சுகளால் அதிகாரம் செய்கிறவளாயுமிருப்பாள். இப்படிப்பட்ட ஸ்திரீயுடன் இன்புற்று வாழ்வதெங்ஙனம். துன்பமாகவே யிருக்கும். அன்றியும், தீனுடைய காரியங்களில் இவளால் இடையூறுண்டாகின்றது.

மூன்றாவது சிபத்து:—அழகாயிருக்கும். அழகானது ஆசையுறக் காரணமாகின்றது. இதற்காகத்தான் நிகாகுக்கு முன்னே பெண்ணைப் பார்த்துக்கொள்ளுவது சுன்னத்தாயிருக்கிறது. றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் தங்கள் திருவாயினால், “அன்ஸாருகளுடைய பெண்களின் கண்ணில் மனதுக்கு அருவருப்பையுண்டாக்குகிற ஒரு வஸ்து இருக்கிறது” என்றும், “அவர்களை நிகாகு செய்ய நாடுகிறவன் முதலில் பெண்ணைப்பார்த்துக் கொள்ளக்கடவன்” என்றும் திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும் பெண்ணைப் பார்ப்பதற்குமுன் செய்யப்



பட்ட நிகாகு எதுவோ அதன் முடிவு மனஸ்தாபமும் துக்கமுமாயிருக்கிறதென்று ஆன்றோர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் பெண்ணை அழகுக்காக அல்ல தீனுக்காக நிகாகுசெய்யுங்களென்று ஹஸரத்தவர்கள் சொல்லியிருக்கிறார்களே, அதன் பொருள் யாதெனில், அழகை மாத்திரம் ஆசித்து பெண்கொள்ளவேண்டாமென்பதேயாம். அழகைத் தேடவேண்டாமென்பதல்ல. ஒருவன் நிகாகு செய்வதில் அழகை விரும்பாமல் சந்ததியையும் சுன்னத்தைப் பின்பற்றுவதையுமே நாடுவானாகில் இது ஸவாபு என்னும் தலத்தில் சேர்ந்ததாயிருக்கும். இமாம் அஹ்மது ஹம்பல் றஹிமஹுல்லா அவர்கள் ஒற்றைக் கண்ணியான ஒரு பெண்ணை நிகாகு செய்துகொண்டார்கள். அந்தப் பெண்ணின் சகோதரி அதிக அழகியாயிருந்தும் அவளை அவர்கள் விரும்பவில்லை. ஏனெனில், இந்த ஒற்றைக்கண்ணியான பெண் அவளிலும் அதிக புத்திசாலியென்று அவர்கள் கேள்விப்பட்டிருந்ததினாலேயாம்.

நாலாவது சிபத்து:—மஹர் குறைவாயிருப்பதாம். றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் தங்கள் திருவாயினால் “எந்தப் பெண்களின் மஹர் குறைவாயும் அழகு அதிகமாயுமிருக்கிறதோ அவர்களே பெண்களில் மிக நன்மையானவர்கள்” என்று திருவுளமாயிருக்கிறார்கள். அதிக மஹர் வைப்பது மக்ரூஹாயிருக்கும். றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் சில பெண்களுடைய நிகாவில் பத்து திர்ஹம் மஹர் வைத்திருக்கிறார்கள். இன்னுமவர்கள் தங்களுடைய புத்திரிகளுக்கு நானூறு திர்ஹங்களுக்குமேல் மஹர் வைக்கவில்லை.

ஐந்தாவது சிபத்து:—மலடில்லாதவளாயிருப்பதாம். “வீட்டின் மூலையில் விழுந்து கிடக்கும் பழைய பாயானது பிள்ளை பெறாத மலடியினும் மேலாயிருக்கிறது” என்று றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள்.

ஆறாவது சிபத்து:—கன்னிகையாயிருப்பதாம். ஏனென்றால், உவப்புடன் ஒற்றுமையாக அவள் இணக்கமாயிருப்பதினாலேயாம். முன்னொரு புருஷனுக்கு வாழ்க்கைப் பட்டவளின் மனமானது பெரும்பாலும் அந்த முன்னவனையே பற்றி நிற்கும். ஜாபிர் றழியல்லாகு அன்கு அவர்கள் வாழ்க்கைப்பட்ட ஒருபெண்ணை நிகாஹு செய்ய, அதற்கு றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் அவரை நோக்கி, “நீர் கன்னிகையான ஒருபெண்ணை நிகாகு செய்யக்கூடாதா? அப்படிச் செய்திருந்தால் அவள் உம்முடன் குலாவுவாள், நீர் அவளுடன் குலாவுவீர்” என்று சொன்னார்கள்.

ஏழாவது சிபத்து:—பெண்ணானவள் அஷ்ராபாயும் மார்க்க நெறி தவறாத குடும்பத்திலுள்ளவளாயுமிருப்பதாம். ஏனென்றால், தாழ் குலப் பெண்ணானவள் அதபில்லாதவளாயும் குணங்கெட்டவளாயு மிருப்பதுண்டு. ஒருக்கால் அவளுடைய அக்குணங்கள் அவ்லாது களிலும் உறையக்கூடும்.

எட்டாவது சிபத்து:—அவள் நெருங்கிய பந்துவாயில்லாம லிருப்பதாம். ஏனென்றால், நெருங்கிய பந்துவா யிருப்பவளில் பிறக்கும் பிள்ளை பலவீனமா யிருக்கிறதுண்டு. பந்துக்களில் தாருட்டிய பலங் குன்றியிருக்குமாகையால் ஒருக்கால் இதுவே அந்தப் பிள்ளையின் பல வீனத்துக்குக் காரணமா யிருக்கலாம். பெண்களில் கவனிக்கவேண்டிய சிபத்துகளொன்றும் இச்சுதானங்கள் இவைகளேயாம்.

ஆனால் தன் மகளை நிகாஹு செய்து கொடுக்கும் [illegible] கடமையாவது யாதெனில், பெண்ணின் [illegible] நாட்டத்தில் வைத்து யோக்கியமுள்ள நல்ல புருஷனைத் தெரிந்துகொள்ளுவான். [illegible] இவர்களைத் தெரிந்து கொள்வதை விட்டும் [illegible]. புருஷனானவன் பெண்ணுக்குச் சரியான குணமில்லாத பக்ஷத்தில் நிகாஹு கூடாது. இன்னும் பாவிக்கும் பாக்கியமற்றவனுக்கும் பெண்ணைக் கொடுப்பது கூடாது. ஏனென்றால், றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் தங்கள் திருவாயினால் "யாராவது தன்மகளை பாவியா யிருப்பவனுக்குக் கொடுத்தாலவன் அவளுடைய பந்துபாசத்தை அறுத்துவிட்டவனாகுவான்" என்றும், "நிகாஹு செய்து கொடுப்பது அடிமையாக்குவதாகையால், புத்தியுள்ள ஒவ்வொருவரும் யாருக்கு அடிமையாக்குகிறோமென்பதை யோசித்துக்கொள்ள" வேண்டுமென்றும் திருவுளமா யிருக்கிறார்கள்.

## மூன்றாவது பாபு—நிகாஹுக்குப்பின் நடக்கவேண்டிய காரியங்களின் அதபுகள்.

நிகாஹானது இருவருடைய காரியங்களில் ஒன்றாயிருக்கிறதென்று தெரியவந்ததாகையால் அதில் இருவருடைய அதபுகளைப் பேணுவது அவசியமேயாம். இல்லாவிட்டால் மனிதருடைய நிகாஹுக்கும் மிருகங்களுடைய புணர்ச்சிக்கும் வித்தியாசமில்லை. ஆகலால், அதில் பன்னிரண்டு அதபுகளைப் பேணுவான். முதலாவது அதபு:—வலீமா என்னும் கலியாண விருந்து செய்வதாம். இது முவக்கதான சுன்னத்தா யிருக்கும். அப்துர் றஹ்மானுப்னு அவ்பு றலியல்லாகு அன்ஹு



நிகாஹு செய்தபோது றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் அவரை நோக்கி "நீர் வலீமாவிருந்து செய்வீராக, ஒரு ஆட்டைக்கொண்டானாலுஞ் சரி" என்று திருவுளமானார்கள். ஆடறுத்து விருந்து செய்ய வல்லமையில்லாதவன் தன் சிநேகர்களுக்கு முன்பாக எந்த உணவை வைக்கின்றானோ அதுவே வலீமாவாம். றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் ஸபிய்யா றலியல்லாகு அன்ஹாவை நிகாஹுசெய்த போது பேரீத்தம்பழத்தினாலும் கோதுமைப் பொரிமாவினாலும் வலீமாவிருந்து செய்தார்கள். ஆகலால், சுன்னத்தைக் கனப்படுத்தும் பொருட்டு எவ்வளவு செய்யக்கூடுமோ அவ்வளவாவது செய்வது அவசியமா யிருக்கும். அந்த விருந்தை நிகாஹு முடிந்த தினத்திலிருந்து மூன்று நாட்களுக்குள் செய்வான். தவறினால் ஒருவாரத்துக்குள் செய்துவிடவேண்டும்.

* தப்பு கொட்டுவதும் நிகாஹைப் பிரஸ்தாபப்படுத்துவதும் அதனால் சந்தோஷங்கொண்டாடுவதும் சுன்னத்தாயிருக்கும். ஏனென்றால், பூமியின்மேல் படைக்கப்பட்டிருக்கிற படைப்புகளெல்லாவற்றிலும் மனிதர்களே மிகச்சிறந்த படைப்பாதலாலும் நிகாஹானது அவர்கள் உற்பத்தியாகுவதற்குக் காரணமா யிருப்பதாலும் அதில் இந்தக் கொண்டாடல் தகுமானதே என்க. இப்படிக் கொண்டாடும் போது இராகம் பாடுவதும் தப்பு கொட்டுவதும் சுன்னத்தாயிருக்கும். றுபைஉ பின்த் முஅவ்வது றலியல்லாகு அன்ஹா சொல்லுகிறதாய் ரிவாயத்து செய்யப்பட்டிருக்கிறது. அதாவது:—"என்னை நிகாஹு செய்த இரவுகழித்த மறுதினத்தில் றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் வந்தார்கள். அடிமைப் பெண்கள் தப்பு கொட்டிக்கொண்டும் இராகம் பாடிக்கொண்டுமிருந்தார்கள். அவர்கள் ஹஸ்ரத்தவர்களைக் கண்டபோது அவர்களைப் புகழ்ந்து பாடத்தொடங்கினார்கள். அப்போது ஹஸ்ரத்தவர்கள் அந்த அடிமைப்பெண்களை விளித்து "நீங்கள் முன்னே பாடிக்கொண்டிருந்ததையே பாடுங்கள்" என்று ஆக்கியாபித்தார்கள்" என்பதே. தப்பு கொட்டிக்கொண்டு தங்கள் புகழைப் பாட அவர்களுக்கு உத்திரவளிக்காமல் தடைசெய்தது ஏனென்றால், தங்களுடைய புகழும் புகழவேண்டிய நிலைமையும் வேறாயிருப்பதால். அதாவது பயபக்தியான நிலைமையில் புகழவேண்டியதாயிருப்பதால் அதைச் சிரிப்பு விளையாட்டான நிலைமையில் பாடும் பாட்டுடன் சேர்ப்பது கூடாதென்பதற்கேயாம்.

---

* தப்பு என்பதற்குப் பறைத் தப்பு என்று விபரீத அர்த்தங்கொள்ளாமல் தாறுல் [illegible] என்னும் அரபு தமிழ் கிதாபைப் பார்வையிட்டு அது இன்னவிதமான தென்பதைத் தெரிந்துகொள்ள வேண்டியது.

இரண்டாவது அதபு:—மனையாட்டிகளுடன் நற்குணமாயிருப்பதாம். நற்குணமென்பது அவர்களை இம்சைப்படுத்தாமலிருப்பது மாத்திரமல்ல. மேலும், அவர்களால் உண்டாகும் இம்சைகளைச் சகிப்பதாம். அவர்கள் இயலாத வஸ்துக்களைக் கேட்பதின்பேரிலும் நன்றியறியாதிருப்பதின்பேரிலும் ஸபுரு செய்வதுமே நற்குணமாயிருக்கும். இன்னும் பெண்களை ஈனமும், மானமும் சேர்ந்த ஓர் உருவாய்ப் படைத்திருக்கிறதென்றும், அவர்களுடைய ஈனத்துக்குப் பரிகாரம் மௌனமாயிருப்பதென்றும், அவர்களுடைய மானத்துக்குப் பரிகாரம் அவர்களை வீட்டில் சிறையாக்குவதென்றும் ஹதீதில் வந்திருக்கிறது. இன்னும் "யாராவதொருவன் தன் மனையாளுடைய துர்க்குணத்தின்பேரில் ஸபுரு செய்வானாகில் அவனுக்கு அய்யூபு அலைஹிஸ்ஸலாம் அடைந்த துன்பத்தின்பேரில் அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட ஸவாபு எவ்வளவோ அவ்வளவு ஸவாபு கொடுக்கப்படும்" என்றும், "யாராவதொருத்தி பெண்பிள்ளை தனது மணவாளனுடைய துர்க்குணத்தின்பேரில் ஸபுரு செய்வாளாகில் அவளுக்கு பிர்அவ்னுடைய பெண்சாதியாகிய ஆஸியா றளியல்லாஹு அன்ஹா அடைந்த ஸவாபைப்போல் பதிலளிக்கப்படும்" என்றும் றஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும் றஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் தங்கள் ஆயுளின் நெருக்கத்தில் அடியில் காணும் மூன்று வார்த்தைகளை மெள்ள மெள்ளச் சொல்லிக்கொண்டிருந்ததை ஜனங்கள் தங்கள் காதினாற் கேட்டார்கள். அவையாவன:—(1) தொழுது வாருங்கள். (2) அடிமைகளை அன்பாய் நடத்துங்கள். (3) மனையாட்டிகள் விஷயமாய் அல்லாஹு தஆலாவை நான் உங்கள் நடுவில் ஆக்குகிறேன். இவர்கள் உங்கள் கையின் கீழ்ச் சிறைப்பட்டவர்களாயிருக்கிறார்கள், அவர்களுடன் நீங்கள் நல்லவிதமாய்க் கூடிவாழுங்கள் என்பவைகளே.

றஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் தங்கள் மனையாட்டிகளுடைய கோபத்தின்பேரில் ஸபுரு செய்கிறவர்களாயிருந்தார்கள். உமர் றளியல்லாஹு அன்ஹு அவர்களுடைய மனைவியர் ஒருநாள் தம் கணவருக்குக் கோபத்துடன் பதில் பேசினதினால் உமர் றளியல்லாஹு அன்ஹு அவளை நோக்கி, "ஏ! கெட்ட நாவே! நீ என் பேச்சுக்குப் பதில் பேசுகிறாயா?" என்றார்கள். அதற்கவள் "ஆம் மெய்தான். றஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் உம்மிலும் நல்லவர்களாயிருக்கிறார்கள். மனையாட்டிகள் அவர்களுக்குப் பதில் பேசுகிறார்கள்" என்றனள். அப்போது உமர் றளியல்லாஹு அன்ஹு அவர்கள் "ஆ! அப்படியானால் ஹப்ஸாவுடைய கதியென்ன? [illegible] ஆகமாட்டோமானால்



ஹப்ஸாவின்மேல் மிகவும் கைசேதம் என்றார்கள். பின்பு றஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களுடைய மனையாட்டியும் தங்கள் மகளாருமான ஹப்ஸாவையைப் பார்த்து, "பத்திரம்; நீ ஒருபோதும் றஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களுக்குப் பதில் பேசாதே. அபூபக்கருடைய மகள் ஆயிஷாவின்மேல் ஹஸரத்தவர்கள் பிரியமாயிருக்கிறதையும் ஆயிஷாவுடைய வார்த்தைகளின்மேல் அவர்கள் ஸபுருசெய்துகொள்வதையும் பார்த்து மருண்டு நீ கர்வங்கொள்ளாதே" என்று சொன்னார்கள். இன்னும் றஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களுடைய மனையாட்டிகளில் ஒருவர் கோபமாய் நாயகமவர்களுக்கு அதபு குறைவாய் நடந்துகொண்டதைப்பற்றி அம்மனையாட்டியுடைய தாயார் அவளை மிகவும் அடித்துக்கொண்டிருந்தனர். அப்போது றஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் அவளுடைய தாயை நோக்கி, "விடுங்கள், இவர்கள் இதைவிடமேலும் அதிகமாயுஞ் செய்வார்கள், நான் அதைப் பாராட்டாமல் விட்டுவிடுகிறேன்" என்று சொன்னார்கள். இன்னும் "தன் மனையாளுக்கு நல்லவனெவனோ அவனே உங்களில் நல்லவன், நானோ உங்கள் எல்லாரிலும் என் மனையாட்டிகளுக்கு மிக நல்லவனாயிருக்கிறேன்" என்று றஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள்.

மூன்றாவது அதபு:—மனையாட்டிகளுடன் ஸரஸவார்த்தைகள் பேசியும் விளையாடியும் வருதல். மனதைச் சுருக்கிக்கொண்டிருக்கமாட்டான். அவர்களுடைய புத்தியின் தகுதிப்படி நடப்பான். றஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் ஸரசம் செய்து வந்ததுபோல் தன் மனையாட்டிகளோடு ஸரசம் செய்கிறவன் ஒருவனுமிருக்கமாட்டான். ஏனென்றால், ஹஸரத்தவர்கள் பீபி ஆயிஷா றளியல்லாஹு அன்ஹாவுடன் ஒன்று யார் முந்துகிறதுபார்ப்போமென்று ஓடியிருக்கிறார்கள். அதில் ஹஸரத்தவர்கள் முந்திவிட்டார்கள். மற்றொருமுறை ஓடினதில் பீபி ஆயிஷா றளியல்லாஹு அன்ஹா முந்திவிட்டார்கள். அப்போது ஹஸரத்தவர்கள், "இது முன் ஓட்டத்தில் நான் முந்தினதற்குச் சரியாய்ப் போயிற்று" என்றார்கள்; அதாவது இப்போது நாமிருவரும் சரியாய்ப் போனோமென்பதே. ஒருநாள் ஹபஷிகள் விளையாடிக்கொண்டிருக்கிற சத்தம் காதிற் கேட்டது. அப்போது ஹஸரத்தவர்கள் பீபி ஆயிஷா றளியல்லாஹு அன்ஹாவை நோக்கி "நீ அதைப்பார்க்க நாடுகிறாயோ" என்று வினவ, பீபியவர்கள் "ஆம்" என்றார்கள். தாங்களெழுந்து பீபியவர்களை அழைத்துக்கொண்டு அவ்விடத்திற்கு வந்து தங்கள் புயத்தை பீபியவர்களுக்குத் தாங்கலாய்த்

கொடுத்துக்கொண்டு நின்றார்கள். பீவியவர்கள் அந்த புயத்தின்மேல் தங்கள் மோவாயை வைத்துக்கொண்டு வெகு நேரம் வரையில் வேடிக்கைப்பார்த்துக்கொண்டிருந்தார்கள். இதற்கிடையில் றஸூலுல்லாஹ் அவர்கள் "அய்! ஆயிஷா! பார்த்தது போதாதா?" என்று வினவ, பீவியவர்கள் மவுனமாயிருந்தார்கள். இதேவிதம் மூன்றுதரம் வினவிக்கொண்டிருந்ததில் மூன்றும் முறையில் பீவியவர்கள் போதுமாக்கிக் * கொண்டார்கள். இன்னும் உமர்றலியல்லாகு அன்கு ஒவ்வொரு காரியத்திலும் உறப்பும் அழுத்தமுமான குணத்தைப் பூண்டவர்களாயிருந்தும் அவர்கள் சொல்லுகிறதாவது:—"புருஷனானவன் தன் மனையாட்டியோடு சிறுவர்போலும் குடித்தன விஷயத்தில் ஆண்பிள்ளைகள்போலு மிருக்கவேண்டும்" என்பதே. இன்னும் புருஷனானவன் தன் வீட்டில் வரும்போது சிரித்துக்கொண்டும் வெளியே போகும்போது வாய் மூடிக்கொண்டும் இருக்கவேண்டுமென்றும், வீட்டில் இருப்பதை யுண், பின் இல்லாததைக் கேட்காள் என்றும் பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

நாலாவது அதபு:—அவர்களுக்குப் பயமுறுத்தப்போகும்படி அவ்வளவு சரசம் செய்யாமலிருப்பதும் ஆகாதகாரியங்களில் அவர்களுடன் இணங்காமலிருப்பதுமாம். மேலும் ஷர்க்கத்துக்கும் மனுஷத்தன்மைக்கும் மாறான ஒருசெயலை அவர்களில் கண்டால் அதைப்பற்றிக் கண்டித்து உணர்த்துவான். கண்டிக்காமல் விட்டுவிடுவானாகில் அவர்களுக்குக் கீழ்ப்படிந்தவனாய்ப் போவான். "புருஷர்கள் எப்போதும் ஸ்திரீகளுக்கு அதிகாரிகளாயிருப்பவர்கள்" என்று அல்லாஹுத்தஆலா திருவுளமாயிருக்கிறான். இன்னும் "பெண்சாதிக்கு அடிமையாயிருப்பவன் நிர்ப்பாக்கியன்" என்று றஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். ஏனென்றால், புருஷனுக்குப் பெண்ஜாதி அடிமையாயிருக்கவேண்டியவள். அதற்குமாறாயிருப்பது நிர்ப்பாக்கியமேயாம். இன்னும் "பெண்பிள்ளைகளிடத்தில் ஆலோசனை கேளுங்கள்" என்றும், "ஆனால் அவர்கள் சொல்வதற்கு மாற்றமாக நடவடிக்கை நடத்துங்கள்" என்றும் ஆன்றோர்கள் சொல்லியிருக்கிறார்கள். உண்மையில் பெண்பிள்ளை

* எச்சரிக்கை:—இது காரியம் சம்பவித்தது எப்போதென்றால், பெண்கள் மறைந்திருக்கவேண்டு மென்று அல்லாஹுத்தஆலா ஆயத்தை இறக்குவதற்கு முன்னேயாம். அதாவது, அக்காலம்வரையில் பெண்கள் அன்னிய ஆண்பிள்ளைகளுக்கு மறையவேண்டுமென்ற விதி ஏற்பட்டிருக்கவில்லை யாதலால் இது முபாஹாயிருந்தது. உதாரணமாக:—மதுபானம் கூடாதென்ற ஆயத்து இறங்குவதற்கு முன்னே மதுபானமும் ஹலாலாயிருந்ததுபோல்.



யானவள் அடங்காத நபுஸுக்குச் சமானமாயிருக்கிறாள். ஆதலால் அவளைக் கொஞ்சம் சோரவிடுவாயாகில் அவள் உன்கைக்கு அடங்காதவளாய் வரம்பு கடப்பாள். இதற்குப் பக்குவஞ் செய்வது கஷ்டமாகும். ஆகக்கூடி பெண்பிள்ளையில் ஒரு ஈனத்தனமும் துஷ்டத்தனமு மிருக்கிறது. அவளுடைய ஈனத்தனத்துக்குப் பொறுமையாயிருப்பதும் துஷ்டத்தனத்துக்குக் கண்டித்து அதபுறுத்துவதுமேயன்றி வேறொன்றும் பரிகாரமில்லை. ஆகையால், புருஷனானவன் தேர்ந்த வயித்தியன் போலிருந்து அந்தந்த சமயங்களில் ஒவ்வொன்றுக்கும் தகுந்தபடி பரிகாரம் செய்துகொள்ளவேண்டும். என்றாலும், பொறுமையையே அதிகமாய் உபயோகிப்பான். இன்னும் பெண்பிள்ளையானவள் விலா எலும்பைப் போன்றவளென்றும், அதை நீ நேராக்க நாடுவாயாகில் முறிந்துபோகுமென்றும் ஹதீஸில் வந்திருக்கிறது.

ஐந்தாவது அதபு:—ரோஷ விஷயத்தில் நடுநிலைமையை விடாதிருப்பதாம். ஆபத்துக்கும் துன்பத்துக்கும் காரணமாயிருக்கிற ஒவ்வொரு காரியத்தையும் விட்டுப் பெண்பிள்ளையை விலக்குவான். கூடிய வரையில் அவளை வெளியே புறப்படவிடாமல் தடுத்துவைப்பான். வீட்டு மாடியின்மீதேறவும் தெருவாசற்படிக்குப் போகவும் விடமாட்டான். ஏனென்றால், அன்னிய ஆண்பிள்ளைகள் அவளைப் பார்க்காமலும் அன்னிய ஆண்பிள்ளைகளை அவள் பார்க்காமலு மிருக்கவேயாம். ஆண்பிள்ளைகள் செய்யும் வேடிக்கை விளையாட்டுகளைச் சன்னல், சாளரங்களின் வழியாய்ப் பார்க்காதபடி அவளைத் தடுத்து வைப்பான். ஏனென்றால், எல்லா ஆபத்துகளும் கண்ணினாலேயே உண்டாகின்றன. அந்த ஆபத்துகள் வீட்டுக்குள்ளிருந்து உண்டாகுவனவல்ல. மேலும், அவை சன்னல், சாளரம், மாடி, தெருவாசல் இவைகளின் வழியாய் வருவனவேயாம். ஆதலால், பெண்கள் வேடிக்கைப் பார்ப்பதை இலேசாக எண்ணக்கூடாது. யாதொரு காரணமுமின்றி அவள் மேல் துர் எண்ணங் கொள்வதும், துர்வார்த்தைகளைப் பேசுவதும், அனாவசியமாய் அதிகமாய் ரோஷம் பாராட்டுவதும் அழகல்ல. அவளுடைய இரகசிய காரியங்கள் ஒவ்வொன்றையும் தேடிப்பிடிப்பதில் கட்டுசெய்யாவே. ஒருதரம் றஸூல்ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் பயணிலிருந்து திரும்பி மாலைக் கடைசி நேரத்தில் மதீனா வந்துசேர்ந்தார்கள். அப்போது கூட இருந்தவர்களை நோக்கி, "இன்று இரவில் ஒருவரும் திடுப்பிரவேசமாய் வீட்டுக்குப் போகவேண்டாம், நாளை வரையில் இவ்விடத்திலேயே தங்கியிருங்கள்" என்று ஆக்ஞாபித்தார்கள். அவர்களில் இரண்டுபேர் உத்தரவுக்கு விரோதமாய் வீட்டு

டுக்குப் பேசுவதில் இருவரும் தங்கள் வீட்டில் கெடுதியைக் கண்டார்கள்.

"இன்னும் பெண்பிள்ளைகள் விஷயத்தில் அளவுக்குமேல் அதிகமாய் ரோஷம் பாராட்டாதீர்கள்" என்றும், "இதை ஜனங்களறிந்தால் நிந்திப்பார்கள்" என்றும், "பெண்பிள்ளையின் பார்வை அந்நியன்மேல் விழாதபடி அவளைப் பேணிக்கொள்வதே ரோஷமென்பதற்குப் பொருள்" என்றும் அலி றலியல்லாகு அன்கு சொல்லியிருக்கிறார்கள்: நபி ஸல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் தங்கள் மகளாராகிய பீவி பாத்திமா றலியல்லாகு அன்ஹாவை நோக்கி, "அம்மா! பெண்கள் விஷயத்தில் எக்காரியம் நல்லது சொல்" என்று வினவ, அதற்கு பீவியவர்கள், "அந்நியரொருவனும் அவர்களைப் பார்க்காமலும் அந்நிய ஒருவனையும் அவர்கள் பார்க்காமலுமிருப்பதே பெண்கள் விஷயத்தில் நல்லது" என்று சொன்னார்கள். இது றஸூலவர்களுக்கு அழகாய்த் தோன்றியதினால் சந்தோஷமாகி, மகளாரைக் கழுத்தோடணைத்து "நீ என் சதையில் ஒரு துண்டாயிருக்கிறாய்" என்றார்கள். முஆது றலியல்லாகு அன்கு தங்கள் பீவி சன்னலில் வழியாய் எட்டிப்பார்த்துக்கொண்டிருந்ததைக் கண்டு அவளை அடித்திருக்கிறார்கள். இன்னும் ஒருமுறை அவ்வாறே சேப்பழத்தின் ஒரு பிளவைத் தாம் தின்று மற்றொரு பிளவைத் தம் அடிமைப் பையனுக்குக் கொடுத்ததைக் கண்டு அப்போதும் அவளை அடித்திருக்கிறார்கள். இன்னும், "பெண்பிள்ளைகள் தங்கள் வீட்டிலேயே சிறைப்பட்டிருப்பதற்குப் பரிகாரம் அவர்களுக்கு நல்ல உடை கொடுக்காமலிருப்பது" என்றும், "அவர்கள் நல்ல உடை உடுப்பார்களானால் வெளியில் புறப்பட அவர்களுக்கு விருப்பமுண்டாகும்" என்றும் உமர் றலியல்லாகு அன்கு சொல்லியிருக்கிறார்கள்.

நபி ஸல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுடைய காலத்தில் பெண்பிள்ளைகள் முக்காட்டில் மறைந்து பள்ளிவாசலுக்கு வரவும் கடைசியான ஸப்பில் இருக்கவும் அவர்களுக்கு உத்தரவு கிடைத்திருந்தது. அஸ்ஹாபுகள் தங்கள் காலத்தில் அதைத் தடுத்துவிட்டார்கள். இன்னும் ஆயிஷா றலியல்லாகு அன்கா "இப்போது பெண்பிள்ளைகளிருக்கிற நடத்தையை நபி ஸல்லல்லாகு அலைகிவசல்லம இருந்து பார்ப்பார்களாகில் இவர்களைப் பள்ளிவாசலுக்கு வரவிடமாட்டார்கள்" என்று சொல்லியிருக்கிறார்கள். இக்காலத்தில் பெண்பிள்ளைகள் பள்ளிவாசலுக்கும் மஜ்லிசுகளுக்கும் போகாதபடிக்கும் ஆண்பிள்ளைகளைப்



பார்க்காதபடிக்கும் அவர்களைத் தடுத்து வைப்பது மிகவும் அவசியமாம். ஆனால் கிழவியாயிருப்பவள் பழைமையான முக்காட்டில் மறைந்துகொண்டு போவாளாகில் குற்றமில்லை. மஜ்லிசுகளுக்குப் போவதினாலும் வேடிக்கைப் பார்ப்பதினாலும் அநேக பெண்பிள்ளைகள் விஷயத்தில் ஆபத்துண்டாகின்றது. எந்த இடத்தில் ஆபத்துண்டாகுமென்று பயமிருக்கிறதோ, அந்த இடத்துக்குப் போகவிடுவது கூடாது. அந்தகரான ஒருவர் நபி ஸல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுடைய வீட்டுக்கு வந்தார். பீவி ஆயிஷா றலியல்லாகு அன்காவும் மற்றொரு பீவியும் அவ்விடத்தில் உட்கார்ந்திருந்தவர்கள் அவரைக் கண்டு மறையாமல் இவர் குருடர்தானே என்று சும்மாயிருந்தார்கள். அதற்கு றஸூலவர்கள் "அவர் குருடரா யிருந்தால் நீங்களும் குருடிகளா" என்று சொன்னார்கள்.

ஆறாவது அதபு:—புருஷனானவன் பெண்ஜாதிக்கு நல்லவிதமாக நபகாவென்னும் அன்னவஸ்திரம் கொடுப்பதாம். நபகா கொடுப்பதில் உலோபியானதினால் செலவை அதிகமாய் நெருக்காமலும் ஊதாரித்தனத்தால் வீண் விரையஞ் செய்யாமலும் மிதமாகக் கொடுப்பான். இன்னும் பெண்ஜாதிக்கு நபகா கொடுப்பதின் சவாபானது கைராத்துடைய சவாபிலும் பெரிதென்று எண்ணிக்கொள்ளுவான். இன்னும் நபி ஸல்லல்லாகு அலைகிவசல்லம் தங்கள் திருவாயினால் "ஒருவன் ஜிஹாதில் ஒரு தீனாரையும், அடிமையை மீட்டு உரிமையாக்குவதில் ஒரு தீனாரையும், பகீருக்கு ஒரு தீனாரையும், தன் பெண்ஜாதிக்கு ஒரு தீனாரையும் கொடுப்பானாகில் இந்த நாலு தீனாருக்குள்ளும் மனைவிக்குக் கொடுத்த தீனாரே சவாபில் அதிகமானது" என்று திருவுளமாயிருக்கிறார்கள். நல்லவிதமான எந்தக் கனியையும் தனியாய்த் தின்னமாட்டான். அப்படித் தின்றிருந்தால் அதைச் சொல்லமாட்டான். எந்த உணவைத் தயார்செய்யத் தன்னால் முடியாதோ அந்த உணவின் வர்ணிப்பைப் பெண்பிள்ளைகளிடம் எடுத்துப் பேசான். வாரத்தில் ஒருமுறை ஹல்வா அல்லது இனிப்பான யாதொரு பண்டம் செய்யவேண்டுமென்றும், இனிப்பை விட்டுவிடுவது மனுஷத்தன்மையல்லவென்றும் இப்னுஸீரீன் என்பவர்கள் சொல்லியிருக்கிறார்கள். விருந்தாளியில்லாதபோது தன் மனையாளுடன் உண வருந்துவான். ஹதீஸிலும், ஒன்றாய்ச் சேர்ந்து உண்டிடுபவர்களின் மேல் அல்லாகு தஆலா றஹ்மத்து செய்வதுடன் மலக்குகளும் பிஜ்வுபொறுக்கத் தேடுகிறார்களென்று வந்திருக்கிறது. எது வொன்று அபகாரில்லாமல் செலவு செய்கிறதோ அது ஹலாலான பொரு

ளாயிருக்கவேண்டும். இது தான் முக்கியமானது. ஹராமான பொருளைக்கொண்டு அவர்களைப் பரிபாலிப்பானாகில் இதற்குமேல் யாதொரு வஞ்சனையும் கொடுமையுமில்லை.

ஏழாவது அதப்:—தொழுகை, ஒழுவு, முழுக்கு, ஹைலு முதலியவைகளில் தேவையாகும் தீனுடைய இல்மைப் பெண்பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுப்பதாம். அப்படி அவன் கற்றுக்கொடுக்காதபக்ஷத்தில் பெண்பிள்ளையானவள் வெளியே புறப்பட்டுப்போய் ஒரு ஆலிமிடத்தில் கேட்பது அவள்பேரில் வாஜிபாகும். புருஷன் அவளுக்குக் கற்றுக்கொடுப்பானாகில் அவனுடைய உத்திரவில்லாமல் அவள் வெளியே புறப்படுவதும் ஒருவரிடத்தில் போய்க் கேட்பதும் கூடாது. தீனுடைய இல்மைக் கற்றுக்கொடுப்பதில் புருஷன் குறை செய்வானாகில் அவன் பாவியாகுவான். ஏனென்றால், அல்லாகுதஆலா "நீங்கள் உங்களையும் உங்கள் வீட்டாரையும் நரகத்தைவிட்டும் காத்துக் கொள்ளுங்கள்" என்று திருவுளமாயிருக்கிறான். இன்னும் சூரியன் அஸ்தமிக்குமுன் ஹைலு நின்றுபோனால் அசர்தொழுகையை கலாசெய்ய வேண்டுமென்ற இந்த மஸ்அலாவையும் அவர்களுக்குக் கற்றுக் கொடுக்கவேண்டும். அநேகம் பெண்பிள்ளைகள் இந்த மஸ்அலாவை அறியாதவர்களாயிருக்கிறார்கள்.

எட்டாவது அதப்:—மனையாட்டிகள் இரண்டுபேர் இருந்தால் அவர்களுக்குக் கொடுக்கும் கொடையிலும் அவர்களுடன் இராத்தரிப்பதிலும் நேராய் நடப்பதாம். யாதாவதொருவன் ஒரு மனையாள் பக்கம் அதிகமாய்ச் சார்ந்திருப்பானாகில் கியாமத்துநாளில் அவன் சரீரத்தின் பாதிபாகம் கோணலாகவும் வருவானென்று ஹதீஸில் வந்திருக்கிறது. ஆனால், கொடுப்பதிலும் இராத்தரிப்பதிலுமேயன்றி மற்றப்படி அவர்கள்மேல் ஆசைவைப்பதிலும் அவர்களுடன் சுகம் பாராட்டுவதிலும் சரியாயிருக்கவேண்டுமென்ற கட்டாயமில்லை. ஏனென்றால், இது இக்தியாருக்குள் அடங்காததாயுள்ள காரியமாயிருக்கிறது. நாயகம் ஸல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் ஒவ்வோர் இரவில் ஒவ்வோர் பீவியினிடம் இருப்பவர்களாயும் ஆயிஷா நாயகியை அதிகமாய் நேசிக்கிறவர்களாயுமிருந்தார்கள். இன்னும் இதைப்பற்றி அல்லாகு தஆலாவுக்கு பயந்து, "என்னுடைய நாயனே! நான் என் இக்தியாருக்குள் அடங்கினகாரியத்தில் குறைசெய்யாமல் தெண்டிக்கிறேன். ஆனால் மனமானது எனக்குள் அடங்காததாயிருக்கிறது" என்று சொல்லுவார்கள். ஒருவன் தன் மனையாட்டிகளில் ஒருத்தியின்மேல் விருப்பமில்



லாதவனாயும் அவளுடன் சுகம் பாராட்ட மனமில்லாதவனாயுமிருந்தால் அவளைத் தலாகு சொல்லிவிடுவான். கைதுபடுத்திச் சிறைபாக்க மாட்டான். நாயகம் ஸல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் சவுதா றலியல்லாகு அன்ஹாவைத் தலாகுசொல்ல நாடினார்கள். ஏனென்றால், அவர்கள் விருத்தாப்பியத்தை யடைந்திருந்தார்கள். அப்போது அவர்கள் சொன்னதாவது:—"நான் என்னுடைய முறையை ஆயிஷாவுக்குக் கொடுத்துவிட்டேன். கியாமத்துநாளில் நான் தங்களுடைய மனையாட்டிகளில் ஒருத்தியாயிருப்பதை ஆசிக்கிறேன்; ஆதலால், தாங்கள் என்னைத் தலாகு சொல்லாதிருக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்" என்றார்கள். அதனால் ஹஸரத்தவர்கள் அன்னாரைத் தலாகு சொல்லவில்லை. ஆயிஷா றலியல்லாகு அன்காவிடம் இரண்டு இரவும் மற்ற மனையாட்டிகளிடம் ஒவ்வோர் இரவும் இருப்பார்கள்.

ஒன்பதாவது அதப்:—மனையாட்டி வழிபட்டு நடக்காத சமயத்தில் மிருதுவான வார்த்தைகளாலும் சமாதானத்தாலும் அவளை வழிபாட்டில் கொண்டுவருவான். அதில் வழிபடாவிட்டால் கோபித்துக் கொள்ளுவான். படுக்கையில் அவள் பக்கம் முதுகைத் திருப்பிக்கொண்டு தூங்குவான். அப்படியும் வழிபடாமற்போனால் மூன்று இரவு அவளை விட்டும் தனித்துப் படுப்பான். இதனாலும் பயன்படாமற்போனால் அவளை அடிப்பான். முகத்தின்மேலும், காயமாகும்படி உறுத்த அடியாயும் அடிக்கான். தொழுகையில் அல்லது தீனுடைய யாதொரு அமலில் குறை செய்தாளாகில் ஒரு மாசம் வரையில் அவள்மேல் கோபமாயிருப்பான். நாயகம் ஸல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் ஒரு மாதம் வரையில் தங்கள் மனையாட்டிகள் எல்லார்பேரிலும் கோபமாயிருந்திருக்கிறார்கள்.

பத்தாவது அதப்:—புணர்ச்சியின்போது முகத்தை கிப்லா பக்கமாக்காமலிருப்பதும், முதலில் சரசம்பேசி விளையாடி முத்தங்கொடுத்து அவளுடைய மனதைச் சந்தோஷப் படுத்துவதுமாம். இன்னும் "மனிதனானவன் தன்மனையாள்மேல் மிருகம்போல் விழாமல் புணர்ச்சிக்குமுன்னே தூதனுப்பவேண்டும்" என்று நாயகம்ஸல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமானபோது, "தூதாவது யாது?" என்று கேட்கப்பட்டது. அதற்கு "முத்தங் கொடுப்பது" என்று கூறினார்கள். ஆரம்பத்தில் இதை ஓதுவான். "பிஸமில்லாஹில் அலிய்யில் அலீம் அல்லாஹு அக்பர் அல்லாகு அக்பர்". குல்ஹு வல்லாஹு அஹது ... ஓதுவானாகில் மிக நன்மையாம். இன்னும் இதையும் ஓதுவான்;

"அல்லாஹும்ம ஜன்னிப்னஷ் ஷைத்தானவஜன்னிபிஷ் ஷைத்தானமிம் மாரஸக்தனா" "யாராவதொருவன் இந்தது ஆவை ஓதுவானாகில் அவனுடையபிள்ளை ஷைத்தானைவிட்டும் காக்கப்பட்டதாயிருக்கும்" என்று ஹதீசில் வந்திருக்கிறது. இன்ஸாலுடைய நேரத்தில் அதாவது விந்து ஸ்கலிதமாகும்போது மனதில் இதை ஓதுவான்: "அல்ஹம்துலில்லாஹில்லதீ ஜஅலமினல்மாஇ பஷரன்வஜஅலஹு நஸபன்வஸிஹ்றா". இன்ஸால் செய்வதைத் துரிதப்படுத்தான். பெண்பிள்ளைக்கும் இன்ஸாலாகிறவரையில் சபுருசெய்வான். "மூன்று அவஸ்தைகள் மனிதனுடைய ஈனத்துக்கு அடையாளங்களாயிருக்கின்றன" என்றும், "அவற்றுள் ஒன்று அவன் ஒரு சினேகனைக் கண்டு அவன் பெயரைத் தெரிந்து கொள்ளாமலிருப்பதும், இரண்டாவது ஒரு சினேகன் இவனுக்கு மரியாதைசெய்ய இவன் அதைத் தட்டிவிடுவதும், மூன்றாவது முத்தம் கொடுப்பதற்கு முன்னே பெண்ஜாதியைப் புணரத் தொடங்கி இன்ஸாலுடைய நேரத்தில் பெண்ஜாதியினுடைய தாகம் தீருகிறவரையில் சபுருசெய்யாமலிருப்பதுமாம்" என்றும் றஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். "பிறைபிறந்த முதல் இரவிலும் பதினைந்தாம் இரவிலும் மாதத்தின் கடைசி இரவிலும் சுஹ்பத்து செய்வது மக்ரூஹாகும், 'இந்த இரவுகளில் சுஹ்பத்து செய்தால் அப்போது ஷைத்தான்கள் ஹாஜிராகிறார்கள்'" என்றும் ஹஸரத்து அலி, ஹஸரத்து அபூஹுரைறா, ஹஸரத்து முஆவியா றலியல்லாஹு அன்ஹும் இவர்களால் ரிவாயத்து செய்யப்பட்டிருக்கிறது. ஹைலாயிருக்கும்போது சுஹ்பத்து செய்யக்கூடாது. ஆனால் ஹைலுகாரியுடன் படுப்பது ஆகும். ஹைலுநின்றபின் குளிப்பதற்கு முன்னேயும் சுஹ்பத்து கூடாது. ஒருமுறை சுஹ்பத்து செய்து மறுமுறையும் செய்ய நாடினால் உறுப்பைக் கழுவிக்கொள்ளுவான். ஜுனுபாளியாயிருப்பவன் ஏதாவது தின்ன நாடினால் ஒழு செய்து கொள்ளுவான். தூங்குவதற்கும் ஒழுசெய்துகொள்ளுவான், அவன் ஜுனுபாளியாயிருந்தாலுஞ் சரியே. ஏனென்றால், இது சுன்னத்தாயிருக்கிறது. ஜுனுபாளி குளிப்பதற்கு முன்னே உரோமத்தையும் நகத்தையும் தறிக்கமாட்டான். ஏனென்றால், தொடக்காயிருக்கிற நிலைமையில் அவை அவனில்நின்றும் பிரியாமலிருக்கலேயாம்.

மனியென்னும் விந்தானது கருப்பையில் சேரும்படி உள்ளே இறக்குவது நன்மையாயிருக்கும். அஸ்லு செய்யமாட்டான். அதாவது, ஸ்கலிதநேரத்தில் சந்தோசத்தை இழந்து விந்துவை வெளியேவிட மாட்டான். ஒருவன் அப்படிச் செய்தாலும் அது ஹறாமல்ல



வென்பதே ஸஹீஹாயிருக்கும். ஒருவர் றஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்களிடத்தில் வந்து "யாறஸூலல்லா! எனக்கு ஒரு அடிமைப் பெண்ணிருக்கிறாள். அவள் எனக்குப் பணிவிடை செய்துவருகிறாள். அவள் கர்ப்பவதியாய்ப் போனால் பணிவிடை செய்ய அவளால் முடியாது. ஆதலால், அவள் கர்ப்பவதியாகுவது எனக்குப் பிரியமில்லை" என்று சொன்னார். அப்போது ஹஸரத்தவர்கள் அவரை நோக்கி, "நீ அஸ்லு செய்துகொள், ஆனால் விதியிலிருந்தால் பிள்ளை பிறந்தே விடும்" என்று சொன்னார்கள். பின்பு ஒருமுறை அவர் வந்து பிள்ளை பிறந்தேவிட்டதென்று தெரியப்படுத்தினார். ஜாபிர் றலியல்லாஹு அன்ஹு சொல்லுகிறதாவது:—"நாங்கள் அஸ்லு செய்கிறவர்களாயிருந்தோம். வஹி இறங்கிக்கொண்டிருந்தது. இது காரியத்தைவிட்டும் எங்களை விலக்கவில்லை" என்பதே.

பதினோராவது அதபு:—பிள்ளை பிறந்தால் அதன் வலது காதில் பாங்கும் இடதுகாதில் இகாமத்தும் சொல்லுவதாம். யாராவதொருவன் இப்படிச் செய்வானாகில் அந்தப்பிள்ளை நோயைவிட்டும் காக்கப்பட்டதாயிருக்குமென்று ஹதீசில் வந்திருக்கிறது. பிள்ளைக்கு நல்ல பெயராக வைப்பான். பெயர்களில்நின்றும் அல்லாஹு தஆலாவிடத்தில் நல்ல பெயராகிறது அப்துல்லா அப்துர்ரஹ்மான் இன்னும் இவை போன்ற பெயர்களாயிருக்கும் என்று ஹதீசில் வந்திருக்கிறது. கர்ப்பத்திலிருந்து விழுந்துபோன பிள்ளைக்கும் பெயரிடுவது சுன்னத்தாயிருக்கும். அகீகா செய்வது முவக்கதாவான சுன்னத்து. பெண்குழந்தைக்காக ஒரு ஆடும், ஆண்குழந்தைக்காக இரண்டு அல்லது ஒரு ஆடும் அறுப்பான். ஆயிஷா றலியல்லாஹு அன்ஹா அந்த ஆட்டின் எலும்புகளை முறிப்பது கூடாதென்று சொல்லியிருக்கிறார்கள். குழந்தை பிறந்தபோது அதன் வாயில் இனிப்பான வஸ்துவைப் போடுவதும், ஏழாம் நாளில் அதன் தலை ரோமத்தை இறக்கி அதன் நிறைக்குச் சரியாக வெள்ளி, அல்லது பொன்னை சதகா செய்வதும் சுன்னத்தாயிருக்கும். பெண்குழந்தை பிறந்தால் வெறுப்படையாமலும் ஆண்குழந்தை பிறந்தால் அதிக சந்தோஷத்தையடையாமலுமிருப்பான். ஏனெனில், யாரில் நன்மையிருக்கிறதென்று அவனுக்குத் தெரியாததினாலேயாம். பெண்குழந்தை மிகவும் பரக்கத்துள்ளதாயிருக்கும். அதனாலுண்டாகும் சவாபு அதிகமாயிருக்கிறது. "ஒருவனுக்கு மூன்று மகள் அல்லது மூன்று சகோதரிகள் உண்டாயிருந்து அவன் அவர்களுக்காக நோக்கப்பட்டு கஷ்டத்தை எடுத்துக்கொள்ளுவானாகில் அந்த இரக்கத்துக்குப் பிரதியாக

அல்லாஹுதஆலா அவன்மேல் றஹ்மத்து செய்வா"னென்று றஸூல் சல்லல்லாஹு அலைஹிவசல்லம் திருவுளமானார்கள். அப்போது ஒருவர் "யாறஸூலல்லாஹ்! இரண்டுமகளிருந்தால் எப்படி?" என்க "இரண்டுமகளிருந்தாலும் சரி" என்றார்கள். மற்றொருவர் "ஒருமகளிருந்தாலோ?" என்றார். அதற்கு "ஒருமகளிருந்தாலுஞ் சரியே" என்று விடையளித்து பின் "ஒருவனுக்கு ஒருமகளிருந்தால் அவன் துன்புற்றவன்" என்றும், "இரண்டுமகளிருந்தால் அவன் சுமை கனத்தவன்" என்றும், "மூன்று மகளிருந்தால் முஸ்லிம்களே! நீங்கள் அவனுக்கு உதவிபுரியுங்கள் இரண்டு விரல்கள் சேர்ந்திருப்பதுபோல் அவன் என்னோடு சொர்க்கத்தில் சேர்ந்திருப்பான்" என்றும் திருவுளமானார்கள். இன்னும் "யாராவதொருவன் கடையிலிருந்து கனிகள் முதலிய தீனி பண்டம் ஏதாவது வாங்கிக்கொண்டு வருவானாகில் இது சதகாவுக்குச் சமானமாகும்" என்றும், "அந்தத் தீனிபண்டத்தில் முன்னதாக மகளுக்கும் பிறகு மகனுக்கும் கொடுப்பான்" என்றும் திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும் "யாராவதொருவன் தன் மகளைச் சந்தோஷப்படுத்துவானாகில் அவன் அல்லாஹுதஆலாவைப் பயந்து அழுதவன்போலாகுவான்" என்றும், "அல்லாஹுதஆலாவைப் பயந்து அழுதவன்பேரில் நரகம் ஹறாமாகும்" என்றும் திருவுளமாயிருக்கிறார்கள்.

பன்னிரண்டாவது அதபு:—கூடியவரையில் பெண்ஜாதியைத் தலாகுசொல்லாமலிருப்பதாம், ஏனென்றால், தலாகுசொல்வது முபாஹ் என்னும் ஆகுமான காரியங்களில் ஒன்றாயிருந்தபோதிலும் அல்லாஹுதஆலாவுக்கு இது பொருத்தமில்லாத காரியமாயிருக்கிறது. உண்மையில் இது ஒருவரை நோவச்செய்வதாயிருப்பதால் யாதொரு காரணமின்றி இது எப்படிக்கூடும்? கூடாதாகவே, யாதொருகாரணங்கொண்டு தலாகுசொல்ல நேரிட்டால் முதலில் ஒரே தலாகு சொல்லுவான். மூன்று தலாகையும் ஒரே முறையில் சொல்லுவது மக்ரூஹாயிருக்கும். ஹைலாயிருக்கிறபோதும் விடகூடிய துப்பரவின்போதும் தலாகுசொல்வது ஹறாமாயிருக்கும். தலாகு கொடுக்கப்போகிற பெண்ஜாதிக்குத் தயவாயும் இரக்கமாயும் தலாகுக்கு ஏதாவது காரணம் சொல்லுவான். கோபமாயும் இலேசாய் என்னியும் தலாகுசொல்லான். தலாகு கொடுத்தபிறகு அவள் மனம் சந்தோஷமாகும்பொருட்டு அவளுக்கு ஹதியா கொடுப்பான். அவளுடைய இரகசியத்தை ஒருவருக்கும் சொல்லான். அவளில் இன்ன அய்பு இருக்கிற காரணமாக நான் தலாகு சொல்லுகிறேன் என்று அவளுடைய அய்பை



வெளிப்படுத்தான். தலாகுகொடுக்கச் சித்தமாயிருந்த ஒருவனை "நீயேன் தலாகு கொடுக்கிறாய்?" என்று கேட்டதற்கு, "என் பெண்ஜாதியின் இரகசியத்தை நான் வெளிப்படுத்தமாட்டேன்" என்று சொன்னான். தலாகு கொடுத்தபிறகு "ஏன் தலாகு கொடுத்தாய்?" என்று கேட்க, "ஒரு அன்னிய ஸ்திரியை அப்படி இப்படி என்று சொல்ல எனக்கென்ன கவை" என்றான்.

பசல் மேற்சொல்லிவந்தவை பெண்ஜாதிக்காகப் புருஷன்பேரிலுள்ள ஹக்குகளாயிருந்தன. என்கிலும், புருஷனுக்காகப் பெண்ஜாதியின்பேரிலுள்ள ஹக்கு அதினும் பெரிதாயிருக்கிறது. அதாவது:— பெண்ஜாதியானவள் உண்மையில் புருஷனுக்கு அடிமைப்பெண்ணாயிருக்கிறாள். இன்னும் றஸூல் சல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்கள் தங்கள் திருவாயினால் "அல்லாஹுதஆலாவுக்கன்றி மற்றவர்களுக்கு சஜ்தா செய்வது ஆகுமென்றிருந்தால் பெண்பிள்ளைகள் தங்கள் புருஷருக்கு சஜ்தா செய்யவேண்டுமென்பதாய் நான் விதி ஏற்படுத்துவேன்" என்று திருவுளமாயிருக்கிறார்கள்.

ஹஸ்ரத்தவர்களுடைய காலத்தில் ஒருவர் சபர் போகும்போது தமது மனையாளிடத்தில் "நீ மாடியிலிருந்து கீழேயிறங்கவேண்டாம்" என்று சொல்லிப்போயினர். அந்தப்பெண்ணின் தகப்பனார் அந்த மாடியின் கீழான வீட்டிலிருந்தார். அவருக்குத் திடும்பிரவேசமாய் ஏதோ ஓர் நோய் உண்டாயிற்று. அப்போது அந்தப்பெண் ஹஸ்ரத்தவர்களிடம் ஆளனுப்பி மாடியிலிருந்து கீழே இறங்கிவர உத்திரவு கேட்டனர். அதற்கு ஹஸ்ரத்தவர்கள் "நீயுன் புருஷனுடைய உத்திரவுக்கு வழிபட்டிரு" என்று சொல்லியனுப்பினார்கள். கடைசியாய் அந்தத் தகப்பனார் மவுத்தாய்ப் போனார். பின்பும் ஹஸ்ரத்தவர்களிடம் உத்திரவு கேட்டதற்கு "முன்போலவே நீயுன் புருஷன் உத்திரவுக்கு வழிபட்டிரு" என்று சொல்லிவிட்டார்கள். அந்தத் தகப்பனை அடக்கம் செய்து வந்தபிறகு ஹஸ்ரத்தவர்கள் அந்தப் பெண்பிள்ளையினிடம் ஆளனுப்பி "நீயுன் புருஷன் உத்திரவுக்கு வழிபட்டிருந்ததற்குப் பிரதியாக அல்லாஹுதஆலா உன் தகப்பனுடைய பாவங்களை மன்னித்தான்" என்று சொல்லச் சொன்னார்கள்.

புருஷனுக்காகப் பெண்பிள்ளையின்பேரிலுள்ள ஹக்குகளாவன:— அவன் வீட்டிலேயே இருப்பாள். புருஷனுடைய உத்திரவில்லாமல் வெளியே புறப்படாள். வேடிக்கைப் பார்ப்பதற்காகச் சன்னல் சாளரம் இவைகளினிடமும் மாடியின் மீதும் போகாள். அண்டை வீட்டுக்காரருடன் மறைவான சிநேகமும் அதிகப் பேச்சும் வைத்துக்கொ...

ள்ளமாட்டாள். அவசியமில்லாமல் அவர்களுடைய வீட்டுக்குப் போகாள். புருஷனுடைய நன்றியைத் தவிர வேறொன்றையும் அவர்களிடம் சொல்லாள். சேர்க்கையிலும் குடித்தன நிருவாகத்திலும் உண்டாகிற குறைகளை ஒருவரிடத்திலும் சொல்லாள். ஒவ்வொரு காரியத்திலும் புருஷனைச் சந்தோஷப்படுத்தவும் அவன் இஷ்டப்படி நடக்கவும் பேராவல் கொண்டவளாயிருப்பாள். அவன் சொத்தில் களவு செய்யாள். அவன்மேல் இரக்கமாயிருப்பாள். அவனுடைய சிநேகர்களில் யாராவது வந்து கதவைத்தட்டினால் அவனை அறியாதவள்போல் ஜவாபு சொல்லுவாள். புருஷனுடைய சிநேகர் எல்லாருக்கும் தன்னை மறைப்பாள்; இவள் தங்கள் சிநேகனுடைய பெண்ஜாதியென்று அவர்களுக்குத் தெரியாதபடி நடந்து கொள்ளுவாள். புருஷன் எது கொடுக்கிறானோ அதைப் போதுமென்று பொருந்திக்கொள்ளுவாள். எல்லா பந்துக்களுடைய ஹக்கினும் புருஷனுடைய ஹக்கே பெரிதென்று எண்ணுவாள். சுஹபத்துக்கும் சுகம் பாராட்டுவதற்கும் எப்படியிருக்கவேண்டுமோ அப்படியாகவே எப்போதும் தன்னைச் சுத்தமாய் வைத்துக்கொள்ளுவாள். தன்னால் செய்யக்கூடிய வேலையைச் செய்யாமலிராள். புருஷன் முன்பாகத் தன் அழகையும் வடிவையும் பற்றிப் பெருமை பேசாள். புருஷன் செய்த நன்றிகளை மறந்து நீ எனக்கு என்னத்தைச் சாதித்துவிட்டாய் என்று சொல்லமாட்டாள். இதைவாங்கு அதை வில்லு எனக்குத் தலாகுகொடு என்று எந்நேரமும் அவனைக் கேட்டுக்கொண்டிராள். ரசூல்சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் தங்கள் திருவாயினால் "நான் நரகத்தைப் பார்த்தபோது அதில் அநேகம் பெண்பிள்ளைகளிருக்கக் கண்டேன்" என்றும், அவர்களைப் பற்றி நான் காரணம் கேட்டதில், "இவர்கள் தங்கள் புருஷர்களைத் திட்டினவர்களும் புருஷர்களுடைய நன்றியை மறந்தவர்களுமாயிருக்கிறார்களென்று தெரியவந்தது" என்றும் திருவுளமாயிருக்கிறார்கள்.

### மூன்றாவது அஸ்லு—கைத்தொழில் வர்த்தகம் இவைகளுடைய அதபுகளின் பயான்.

அறிந்துகொள்ளுங்கள்:—துன்யாவானது மனிதன் ஆகிரத்துக்குச் செல்லும் வழியிலிருக்கிற மன்ஸில் என்னும் தங்குமிடமாயிருக்கும். இவ்விடத்தில் மனிதனுக்கு ஊணும் உடையும் தேவையாகின்றன. அவை கிட்டுவதற்கு மனிதன் ஏதாவதொரு தொழிலைச் செய்யவேண்டும், இல்லாவிட்டால் அவை கிடைப்பது அசாத்தியமாம். ஆதலால் தொழில் செய்யும் அதபுகளை அறிவது அவசியமாயிற்று. எவனொருவன் துன்யாவுடைய சம்பாத்தியத்திலேயே மூழ்குவானோ



அவன் பதவி கெட்ட மூதேவியாயிருக்கிறான். இன்னும் எவனொருவன் துன்யாவுடைய தொல்லையில் விழாமல் தவக்கல் வைத்தவனாய் ஆகிரத்துடைய அமல்களைச் செய்வதிலேயே பராக்காயிருக்கிறானோ அவன் பெரிய பதவியுள்ள சீதேவியாகுவான். ஆனால் இரண்டுக்கும் நடுத்தரமான பதவியாகிறது மனிதன் துன்யாவுடைய வாழ்க்கையை அனுஷ்டிப்பதுடன் ஆகிரத்தைத் தேடுவதேயாம். எனினும், இந்த அனுஷ்டிப்பிலும் முக்கிய நோக்கம் ஆகிரத்தாயிருக்கவேண்டும். அதாவது, ஆகிரத்துக்கு வேண்டியவைகளை ஹாசில் செய்துகொள்ளும் பொருட்டாய் துன்யாவுடைய வாழ்க்கையை அனுஷ்டிப்பான். இனி தொழில் செய்வதற்குள்ள அஹ்காமுகள், ஆதாபுகளில்நின்றும் முக்கியமாய் அறிய வேண்டியவைகளை ஐந்து பாபுகளென்னும் அத்தியாயங்களில் நாம் விவரிப்போம்.

முதலாவது பாபு:—தொழில் செய்வதின் வரிசையும் சவாபும். இரண்டாவது பாபு:—முஆமலா (வர்த்தகம், தொழில்) செய்வது ஷரஇன்படியாயிருப்பதற்கு வேண்டிய இல்மு. மூன்றாவது பாபு:—முஆமலாவில் நீதி வழுவாமல் நடப்பது. நாலாவது பாபு:—முஆமலாவில் நீதி வழுவாமலிருப்பதுடன் உபகாரம் தயவு இவைகளையும் கவனித்துக் கொள்வது. ஐந்தாவது பாபு:—துன்யாவுடைய முஆமலாவில் தீனைப்பற்றிய கவலையிருக்கவேண்டுமென்பது.

### முதலாவது பாபு—தொழில் செய்வதின் வரிசை, அதன் சவாபு இவைகளின் பயான்.

அறிந்துகொள்ளுங்கள்:—தன்னையும் தன் பெண்ஜாதி பிள்ளை முதலிய குடும்பத்தையும் மற்ற ஜனங்களுடைய உதவி வேண்டாதபடி ஒழித்துவைப்பதும் ஹலாலான தொழிலின் சம்பாத்தியத்தால் அவர்களுக்கு அன்னவஸ்திரங் கொடுப்பதும் தீனுடைய பாதையில் ஜிஹாது செய்வதிற் சேர்ந்ததாயிருக்கும். அன்றியும், அது மிகுந்த இபாதத்துகளினும் மேலானதாயிருக்கிறது. ஒருநாள் ஹலரத்து ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் உட்கார்ந்திருந்தபோது பலசாலியான ஒரு வாலிபர் அதிகாலையில் அந்தப் பக்கமாய் வந்து கடைவீதிக்குப் போய்விட்டார். அப்போது அங்கிருந்த அஸ்ஹாபுகள் அவரைக்குறித்து "ஆ! கைசேதம் இந்த வாலிபர் இவ்வளவு காலையில் அல்லாவுடைய இபாதத்துக்காக எழுந்திருப்பாராகில் எவ்வளவு நன்மையாயிருக்கும்" என்றார்கள். அதற்கு ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் "நீங்கள் அப்படிச் சொல்லாதீர்கள். ஏனென்றால், அவன் தன்

ளையும் தன் பெண்ஜாதி பிள்ளைகளையும் மற்ற ஜனங்களுடைய உதவி வேண்டாமல் ஒழித்துவைப்பதற்காகப் போரும்பக்ஷத்தில் அவன் அல்லாவுடைய பாதையிலிருக்கிறான். பெருமைபாராட்டுவதையும் பிமானுகுவதையும் நாடிச் செல்லுவானாகில் அவன் ஷைத்தானுடைய பாதையில் இருக்கிறான்" என்று திருவுளமானார்கள். இன்னும் "யாராவதொருவன் துன்யாவில் ஜனங்களுடைய உதவி வேண்டாதபடி தன்னை ஒழித்துவைப்பதற்காகவும் பந்துக்களுக்கும் அண்டை அயலில் இருப்பவர்களுக்கும் உதவி செய்வதற்காகவும் ஹலாலான தொழிலைச் செய்வானாகில் கியாமத்துநாளில் அவன் முகம் பூரணச்சந்திரன்போல் பிரகாசித்துக்கொண்டிருக்கும்படி வருவான்" என்று ரசூல் சல்லல்லாகு அலைஹிவசல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும் "உண்மை பேசுகிற வர்த்தகன் சித்தீகுகளுடனும் ஷஹீதுகளுடனும் எழும்புவான்" என்றும், "தொழில் செய்கிற மூமினை அல்லாகுத்தஆலா நேசிக்கிறான்" என்றும், "தொழில் செய்கிற மூமின் நஸீஹத்தின்படி நடப்பானாகில் அவனுடைய சம்பாத்தியமானது மற்ற சம்பாத்தியத்திலும் அதிக ஹலாலாயிருக்கிறது" என்றும், "பத்து பங்கு இரணத்தில் ஒன்பது பங்கு வர்த்தகத்தில் இருப்பதால் நீங்கள் வர்த்தகஞ்செய்யுங்கள்" என்றும், "பிச்சை யிரக்குதலென்னும் வாசலைத் தன்மேல் ஒருவன் திறந்துகொள்ளுவானாகில் அல்லாகுதஆலா அவன்பேரில் மிடிமையில்நின்றும் எழுபது வாசல்களைத் திறந்துவிடுவான்" என்றும் ரசூல் சல்லல்லாகு அலைஹிவசல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள்.

ஈஸா அலைஹிஸ்ஸலாமவர்கள் ஒரு மனிதனைக் கண்டு "நீ என்ன வேலை செய்துகொண்டிருக்கிறாய்?" என்றுகேட்டார்கள். அதற்கவன் "இபாதத்து செய்துகொண்டிருக்கிறேன்" என்றான். உனக்கு ஆகாரம் எங்கிருந்து கிடைக்கிறது?" என்று கேட்டார்கள். "அதற்கவன் என் சகோதரன் எனக்கு உணவளித்து வருகிறான்" என்றான். அப்போது ஈஸா அலைஹிஸ்ஸலாமவர்கள் "உன்சகோதரன் உன்னிலும்பெரிய ஆபிதாயிருக்கிறான்" என்று சொன்னார்கள். இன்னும் "அல்லாகுத்தஆலா வானத்திலிருந்து பொன் வெள்ளிகளைப் பொழிகிறதில்லையாதலால் நீங்கள் தொழில்செய்வதை விட்டுவிட்டு அல்லாகுதஆலா ரிஸ்கு கொடுப்பானென்று சொல்லாதீர்கள்" என்று உமர்றலியல்லாகு அன்குசொல்லியிருக்கிறார்கள். இன்னும் லுக்மான் ஹகீமவர்கள் தங்கள் மகனை நோக்கி, "மகனே! நீ தொழில்செய்வதைவிட்டுவிடாதே? ஏனென்றால், எவனொருவன் தொழிலற்ற ஏழையாயும், இதர ஜனங்களுடைய கையை எதிர்பார்ப்பவனுமாயிருக்கிறானோ அவனது மார்க்க நெறி குன்றும்,



மதி மெலியும், மனுஷத்தன்மை கெடும், ஜனங்கள் அவனை இலக்ஷியம் செய்யாமல் இலேசாய்ப் பார்ப்பார்கள்" என்று நஸீஹத்தாய்ச்சொன்னார்கள். பெரியோர்களில் ஒருவரை நோக்கி "ஆபிதாகிய வணக்கவாளி மேலா? அமானத்துள்ள வர்த்தகன் மேலா?" என்று கேட்டதற்கு, அவர் சொன்னதாவது:—"அமானத்துள்ள வர்த்தகனே மேல். அவன் ஜிஹாதென்னும் போர்புரியும் வேலையிலிருக்கிறான். ஏனென்றால், ஷைத்தானானவன் தராசுவழியாயும் விற்கல் வாங்கல்களின் வழியாயும் இவனைத் தாக்கலாமென்று குறிப்புப் பார்த்துக்கொண்டிருக்கிறான். இவன் அதைத் தட்டுவதற்காக அவனோடு எதிர்த்து நிற்கின்றான்" என்பதே. இன்னும் உமர்றலியல்லாகு அன்கு சொல்லுகிறதாவது:—"நான் என் குடும்பசம்ரட்சணையின்பொருட்டு ஹலாலான சம்பாத்தியத்தைத்தேடுகிறவனாய்க் கடைவீதியில் நான் உட்கார்ந்திருக்குமிடத்தில் எனக்கு மவுத்து வருவதை நான் ஆசிக்கிறதுபோல் மற்ற எந்த விடத்திலும் மவுத்து வருவதை நான் அவ்வளவாக ஆசிக்கவில்லை" என்பதே. இன்னும் "பள்ளிவாசலில் இருந்து இபாதத்து செய்துகொண்டு எனக்கு ரிஸ்கு அல்லாகுதஆலா கொடுப்பானென்று சொல்லுகிற ஒரு மனிதன் விஷயத்தில் தாங்கள் என்ன சொல்லுகிறீர்கள்" என்று இமாம் அஹ்மது அம்பல் றகிமகுல்லா அவர்களைக் கேட்டதற்கு, அவர்கள் சொன்னதாவது, "இப்படிப்பட்ட மனிதன், ஜாஹிலாயும் ஷரீஅத்தை அறியாதவனுமிருக்கிறான். ஏனென்றால், ரசூல் சல்லல்லாகு அலைஹிவசல்லமவர்கள் தங்கள் திருவாயினால் அல்லாகுதஆலா என்னுடைய இரணத்தை என் வல்லயத்தில் அதாவது ஜிஹாதில் வைத்திருக்கிறான் என்று திருவுளமாயிருக்கிறார்கள்" என்பதே. இன்னும் இபுராஹீமுபுனு அதுஹம் றகமத்துல்லாஹி அலைஹியவர்கள் விறகு கட்டைத் தங்கள் தோள்மீது தூக்கிக்கொண்டு வருவதை அவுஸாஇ என்பவர்கள் கண்டு "நீர் எதுவரையில் இந்த கஷ்டத்தை அநுபவிப்பீர்? உம்முடைய முஸ்லிமான சகோதரர்கள் உம்மை இந்தக் கஷ்டத்திலிருந்து நீக்கக்கூடும்" என்று சொன்னதற்கு, அவர்கள் சொன்னதாவது, "நீர் சும்மாயிரும். ஒருவன் ஹலாலைத்தேடுவதில் கஷ்டத்தைஅடைவானாகில் சொர்க்கம் அவனுக்கு வாஜிபாகுமென்று ஹதீஸில் வந்திருக்கிறது" என்பதே.

ஆனால், "பொருள்சேர் என்றும், வர்த்தகனாயிரு என்றும், அல்லாகுதஆலா எனக்கு வஹியனுப்பவில்லை. மேலும் உன் றப்புடைய புகழைக்கொண்டு ஸ்தோத்திரம் செய் என்றும், சஜ்தா செய்கிறவனாயிரு என்றும், உனக்கு மவுத்து வருகிறவரையில் உன்னுடைய

றப்பை வணங்கிக்கொண்டிரு என்றுமே எனக்கு வஹி வந்திருக்கிறது" என்று றசூல் சல்லல்லாகு அலைஹிவசல்லமவர்கள் திருவுளமாயிருக்கிற இந்த ஹதீசானது தொழில் செய்வதினும் இபாதத்தே மேல் என்று அறிவிக்கிறதே என்று ஒருவன் கேட்கும் பக்ஷத்தில், அதற்கு ஜவாபாவது:—ஒருவன் தனக்கும் தன்பெண்ஜாதி பிள்ளைகளுக்கும் போதுமான பொருள் உள்ளவனுயிருப்பானுகில் சந்தேகமின்றி அவன் விஷயத்தில் தொழிலினும் இபாதத்தே மேலாயிருக்கும். இன்னும் எந்தத் தொழில் அதிகத்தைச் சம்பாதிப்பதற்காகச் செய்யப்படுகிறதோ அந்தத் தொழிலில் ஒன்றும் வரிசையில்லை. மேலும், அது நஷ்டத்தைக் கொடுப்பதாயும் துன்யாவுடன் மனதைச் சேர்ப்பதாயு மிருக்கிறது. இதுவோ எல்லாப்பாவங்களுக்கும் தலையாம். இன்னும் ஒருவன் பொருளில்லாதவனுயிருந்து அவனுக்கு தர்மசொத்திலிருந்து ஜீவனம்கிடைக்கிறபக்ஷம் அவன் தொழில் செய்யாமலிருப்பது ஏற்றம். இந் நாலு வகையாருக்காம். முதலாவது:—ஷரகுடைய இல்மைப்போல் ஜனங்களுக்கு தீன் சம்பந்தமான பிரயோசனமுண்டாக்குகிற இல்மில் அல்லது வைத்தியம்போல் துன்யா சம்பந்தமான பிரயோசன முண்டாக்குகிற இல்மில் பராக்கா யிருப்பவர்களாம். இரண்டாவது:—காஜிவேலையில் அல்லது வகுபு என்னும் தர்மகாரியத்தில் அல்லது பொது ஜனநன்மையில் பராக்கா யிருப்பவர்களாம். மூன்றாவது:—கல்புக்குள்ளே சூபியாக்களுடைய ஹாலுகளும் வெளிப்பாடுகளும் உண்டாகும்படி வழிதிறந்திருப்பவர்களாம். நாலாவது:—சூபிதுகளுக்கென்று வகுபாயிருக்கிற கான்காஹ் என்னும் ஜாகையிலிருந்து வெளிபரங்கமான இபாதத்துகளிலும் அவுறாதுகளிலும் பராக்கா யிருப்பவர்களாம். ஆகவே இவ்வகையான மனிதர்கள் தொழில் செய்யாமலிருப்பது மேலாயிருக்கும். இவ்வகையாருக்கு இதர ஜனங்களால் ஜீவனம் கிடைக்கிறதாயும், கேட்பதன்றியும் உபகாரத்தைப் பாராட்டுவதன்றியும் ஜனங்கள் இப்படியான நன்மையில் விருப்பங்கொண்டிருக்கிற காலமாயுமிருந்தால் அப்போதும் தொழில் செய்யாமலிருப்பது மேலாம். ஏனென்றால், முற்காலத்துப் பெரியோர்களில் ஒருவரிருந்தார். அவருக்கு முன்னூற்றறுபது சிநேகர்க ளிருந்தார்கள். அவர் எப்போதும் இபாதத்தில் பராக்காயிருப்பார். வருஷத்தில் ஒரு இரவில் ஒரு சிநேகருடைய வீட்டில் உணவருந்துவார். இது அவருடைய சிநேகர்களின் இபாதத்தா யிருந்தது. ஏனென்றால், அவர்கள் அவரைப் பராக்கொழித்து வைத்ததினாலேயாம். அன்றியும் ஜனங்களின் மேல் நன்மையின் வாசல் திறந்திருக்க இது ஓர் காரணமாயும்



இருந்தது. இன்னுமொரு பெரியவருக்கு முப்பது சிநேகர்க ளிருந்தார்கள். அவர் மாசத்தில் ஓர் இரவில் ஒரு சிநேகருடைய வீட்டில் உணவருந்துவார். என்கிலும், காலமானது இவன் சுவால் செய்யாமலும் சிறுமையடையாமலும் ஜனங்கள் தங்கள் சுயவிருப்பமாகவே இவனுக்கு உணவளிக்காத காலமாயிருந்தால், இப்படி யிருப்பதில் இவன் தொழில் செய்வதே மேலாயிருக்கும். ஏனென்றால், பிச்சை இரப்பது கெட்டவேலைகளிற் சேர்ந்ததாயும் அது அவசியமான ஓர் மிடையின் போதன்றி ஹலாலாகாததாயு மிருக்கிறது.

ஆனால் ஒருவன் பெரியதாஜா உள்ளவனும் அவனுடைய இல்மினால் ஜனங்களுக்குப் பெரிய பிரயோசன முண்டாகிறதாயும், ஜீவனத்துக்காகத் தொழில் செய்வதில் அவனுக்கு ஏதோ கொஞ்சம் சிறுமையுண்டாகிறதாயு மிருந்தால், அப்போது அவன் தொழில் செய்யாமலிருப்பது ஏற்றமென்று நாம் சொல்லலாம். என்கிலும் எவனால் வெளிபரங்கமான இபாதத்தைத் தவிர வேறொன்றும் ஆகமாட்டாதோ அவன் தொழில்செய்வதே ஏற்றம். இன்னும் எவன் தொழில் செய்துகொண் டிருக்கும்போது மனதை அல்லாகு தஆலாவுடைய நினைவில் நிறுத்தக்கூடியவனு யிருக்கிறானோ அவன் தொழில் செய்வது மிகவும் ஏற்றமாம். ஏனென்றால், அல்லாகு தஆலாவுடைய நினைவே எல்லா இபாதத்துகளின் சாரமாயிருக்கிறது. இவனோ தொழில் செய்துகொண் டிருக்கும்போதும் மனதை அல்லாவுடைய நினைவில் நிறுத்தக்கூடியவனு யிருக்கிறான்.

## இரண்டாவது பாபு-முஆமலாவென்னும் தொழில் அல்லது பேரம் ஷரகுடைய விதிப்படி இருப்பதற்கு வேண்டிய இல்மின் பயான்.

அறிந்துகொள்ளுங்கள்:—இது ஒரு பெரிய பாபாயிருக்கும். பிக்ஹு கிதாபுகளில் நாம் இதை விவரித்தெழுதியிருக்கிறோம். ஆனால் இந்தத் தொழில் அவசியமாய் அறியவேண்டியவை எவ்வளவோ அவ்வளவு சொல்லப்படும். ஒருவன் இதை அறிந்துகொண்டால் இன்னும் ஏதாவது அவனுக்குக் கஷ்டமான மஸ்அலா வந்து நேரும்போது அதை ஆலிம்களிடத்தில் அவன் கேட்டுக்கொள்ளக் கூடும். ஒருவன் இவ்வளவுகூட அறியாமலிருந்தால் அவன் தெரியாமலும் வட்டியிலும் சிக்கி யுழல்கிறவனு யிருப்பான். அன்றியும், மற்றும் கஷ்டமான மஸ்அலாக்களைக் கேட்டுத் தெரியவும் பரவா செய்யாமல் இருந்தவனு யிருப்பான்.

முஆமலா வென்னும் இருவர் சம்பந்தமான தொழில் அல்லது வியாபாரமானது பெரும்பான்மை ஆறுவகைப்பட்டிருக்கிறது. அவை:— வர்த்தகம், வட்டி, ஒப்பந்தம், இஜாரத்தென்னும் கூலி, வாடகைமுதலியவை, கிறுல் என்னும் ஸஹபக்ஷ், கூட்டு இவைகளேயாம்.

முதலாவது - வர்த்தகம்.

வர்த்தகத்துடைய மஸ்அலாக்களை அறிவது பர்லாயிருக்கும்; ஏனென்றால், ஒருவனும் இதைவிட்டுத் தப்பமாட்டான். உமர்றலி யல்லாகு அன்கு அவர்கள் கடைவீதியில் போய் ஜனங்களைச் சவுக்காலடிப்பவர்களாயும், வர்த்தகத்துடைய மஸ்அலாக்களை அறிவதற்கு முன்னே ஒருவனும் இந்தக் கடைத் தெருவில் வர்த்தகஞ் செய்யக் கூடாது; அப்படி அறியாமல் வர்த்தகஞ் செய்கிறவன் ஹறாமாகவாவது மற்றியாதவாவது வட்டியில் சிக்குவான் என்று சொல்லுகிறவர்களாயுமிருந்தார்கள்.

அறிந்துகொள்ளுங்கள்:— வர்த்தகத்துக்கு மூன்று ருகுனுகள் உண்டு. முதலாவது ருகுன்:— கிரயஞ் செய்பவனும் கிரயம் வாங்குகிறவனுமாம். இரண்டாவது ருகுன்:— சரக்கு சொத்தாம். மூன்றாவது ருகுன்:— விற்றேன் வாங்கினேன் என்று சொல்லலாம். முதலாவது ருகுனை விற்பவன் வாங்குகிறவன் இவர்கள், நாலுபேரிடத்தில் பேரம் செய்யக்கூடாது. அவர்கள் யாரெனில்:— பாலிகில்லாத சிறுவன், பயித்தியக்காரன், அடிமை, அந்தகனாகிய குருடன், ஹறாமான சம்பாத்தியத்தால் வயிறு வளர்ப்பவன் இவர்களேயாம். பாலிகில்லாத சிறுவன் விற்பனை இமாம் ஷாபியீ றஹிமஹுல்லா அவர்களிடத்தில் கூடாது வலீக்காரனுடைய உத்திரவைக் கொண்டாலுஞ்சரி. பயித்தியக்காரனுடைய வர்த்தகமும் இதுபோலவேயாம். ஆகலால் ஒருவன் இவர்களிடத்தில் யாதொரு பொருளைக் கிரயத்துக்கு வாங்கினால் அது பழுதாய்ப்போகும் பக்ஷத்தில் வாங்கினவன் அதன் நஷ்டத்துக்கு உத்திரவாதியாகவேண்டும். இவர்களிடத்தில் எதையாவது கொடுத்து அது பழுதாய்ப்போனால் அதற்கு இவர்கள் உத்திரவாதிகளாகமாட்டார்கள்; ஏனென்றால், இவர்களுக்கு விற்றதில் விற்றவனே அதைப் பழுதாக்கினவனாய் எண்ணப்படுவான். அடிமையான ஆண் அல்லது பெண் தன் எஜமானனுடைய உத்திரவில்லாமல் ஒன்றை விற்பதும் வாங்குவதும் கூடாது. ஆதலால் கலாயிக்காரன், பலசரக்கு வர்த்தகன், ரொட்டிக்காரன் முதலானவர்கள் எஜமானனுடைய அனுமதிபெற்றுக்கொள்ளாமல் அவனுடைய அடிமையினிடத்தில் பேரம் செய்யக்கூடாது. அவ



னுடைய அனுமதி பெற்றுக்கொண்டால், அல்லது விற்கவும் வாங்கவும் அந்த அடிமைக்கு எஜமானனால் உத்திரவு கிடைத்திருக்கிறதாய் ஒரு நீதிமான் சாக்ஷி சொன்னால், அல்லது அந்த அடிமை உத்திரவு பெற்றிருப்பது ஊரெங்கும் பிரஸ்தாபமாயிருந்தால் அப்போது அந்த அடிமையினிடத்தில் பேரம் செய்யலாம். அப்படியில்லாமல் அந்த அடிமையினிடத்தில் யாதொன்றை வாங்கினால் வாங்கினவன் அதன் நஷ்டத்துக்கு உத்திரவாதியாவான். அடிமையினிடத்தில் யாதொன்றை விற்று அது பழுதாய்ப் போனால் அந்த அடிமையினிடத்தில் அதற்குப் பதில் வாங்க விற்றவனுக்கு இடமில்லை. ஆனால், அந்த அடிமை உரிமை பெற்றால் அப்போது பதில் வாங்கிக்கொள்ளலாம். அப்போது அந்த உரிமை பெற்றவன் அதற்கு உத்திரவாதியாகவேண்டும். குருடனுடைய பேரமும் தப்பு பேரமாம். ஆனால் கண்ணுள்ள ஒருவனை வகீலாக்கிவைத்தால் அவனிடம் பேரஞ்செய்வது ஆகும். எனினும், அந்த வகீல் யாதொன்றை வாங்கி அது பழுதாய்ப்போனால் அதற்கு உத்திரவாதம் குருடன் பொறுப்பாயிருக்கும். ஏனென்றால், குருடன் மார்க்கம் விதிக்கப்பட்ட முகல்லபாயும் அடிமையல்லாதவனுமாயிருப்பதினாலேயாம்.

ஹறாமான சம்பாத்தியத்தால் வயிறு வளர்ப்பவர்கள் உவமையில் துருக்கர், அநீதக்காரர், திருடர், வட்டிவாங்குகிறவர்கள், சாராயம் விற்பவர்கள், கொள்ளைக்காரர், சங்கீதம் செய்கிறவர்கள், புலம்பல் பாடுகிறவர்கள், பொய்சாக்ஷி சொல்லுகிறவர்கள், லஞ்சம் வாங்குகிறவர்கள் இவர்களிடத்தில் பேரம் செய்வது கூடாது. அப்படியிருப்பதுடன் அவர்களிடம் யாதொருவன் பேரம் செய்து ஒரு பொருளை வாங்கினால் அந்தப் பொருள் அவர்களுடைய சுயாதீனமானதென்று உண்மையாய்த் தெரிந்தால் ஹறாமாகாது பேரம் கூடும். அது அவன் சுயாதீனமான பொருளல்லவென்று உண்மையாய்த் தெரிந்தால் அது தப்பு பேரமாகும். சந்தேகமாயிருந்தால் நோட்டமிடுவான். அவன் பொருளில் இருந்த பாகம் ஹலாலானதாயும் குறைந்த பாகம் ஹறாமானதாயுமிருந்தால் பேரம் கூடும். என்கிலும் ஷுப்ஹத்தை விட்டும் ஒழியாது. மிகுந்தபாகம் ஹறாமாயும் குறைந்தபாகம் ஹலாலாயுமிருந்தால் வெளிப்படைக்கு நாம் இதைத் தப்புபேரமென்று சொல்ல மாட்டோம். எனினும், இது ஹறாமுக்கு முடுகின ஷுப்ஹத்தாயிருக்கும். இதன் அபாயம் பெரிதாயிருக்கிறது.

யகூதியர், நஸ்ராணியர் இவர்களிடத்தில் பேரம் செய்வது ஆகுமென்றாலும் குர்ஆனை அவர்களுக்கு ஹதியாச் செய்யப்படாது.

முஸ்லிமாகிய அடிமையையும் அவர்களிடம் விற்கமாட்டான். ஹர்புக் காபிர்களாயிருந்தால் அவர்களிடத்தில் ஆயுதங்களையும் விற்கமாட்டான். ஏனென்றால், இந்த முஆமலாவானது ஷரீஅத்து மறுப்பின்படி தப்பாயிருக்கிறது. விற்றவன் பாவியாகுவான்.

ஆனால் ஆகாதவைகளை ஆகுமென்று சொல்லுகிற இபாஹத்திகள் மார்க்கங் கெட்ட ஜிந்திக்களாயிருக்கிறார்கள். இவர்களிடத்தில் பேரம் செய்வது கூடாது. இவர்களைக் கொல்லுவதும் இவர்களுடைய பொருளைப் பறிமுதல் செய்வதும் ஹலாலாயிருக்கும். மேலும் இவர்கள் எந்தப்பொருளுக்கும் சுதந்திரர்கள் அல்ல. இவர்களுடைய நிகாஹும் கூடாது. இவர்களுடைய ஹுக்முமாகிறது முர்தத்துகளுடைய ஹுக்முமைப்போலாயிருக்கும். ஜிந்திக்கள் யாரென்றால் தங்கள் அறிவின்மையினாலுண்டான வழுவிய சந்தேகங்களில் ஒன்றின் காரணமாக சரீஅத்தை முடிப்பதாய் அன்னிய ஸ்திரீகளுடன் உட்காருவதும் தொழுகாமலிருப்பதும் ஆகுமென்று நினைக்கிற ஜனங்களெவர்களோ அவர்களே ஜிந்திக்கள் என்னப்படுவார்கள். அவர்களுடன் பேரம் செய்வதும் நிகாஹ் செய்வதும் கூடாது. (இவர்களையும் இவர்களுடைய அறிவின்மையான சந்தேகங்களையும் குறித்து முதலாவது வால்யம் இரண்டாவது உன்வானில் சொல்லப்பட்டிருக்கிறது.)

இரண்டாவது ருகுனாகிய கிரயசொத்தில் ஆறு ஷர்த்துகளைக் கவனிக்கவேண்டும். முதலாவது ஷர்த்து:—கிரயசொத்து அசுத்தமல்லாமலிருப்பதாம். ஆகவே பன்றி, நாய், சாணி, யானையின் எலும்பு, சாராயம், செத்தபிராணியின் இறைச்சி, செத்த பிராணியின் எண்ணெய் இவைகளின் விக்கிரயம் ஆகாது. ஆனால் சுத்தமான எண்ணெயில் நஜீஸ் விழுந்துபோனதால் அதன் விக்கிரயம் ஹராமல்ல. ஒரு பிடவை அசுத்தமாய்ப் போனாலும் இதுபோல்தான். கஸ்தூரிப்பை, பட்டுப்பூச்சியின் முட்டை இவைகளின் விக்கிரயம் ஆகும். ஏனென்றால், இவையிரண்டும் சுத்தமானவையென்பதே ஸஹீஹான கவுலாயிருக்கிறது.

இரண்டாவது ஷர்த்து:—கிரயசொத்தில் நாட்டப்பட்ட ஓர் பிரயோஜனமுண்டாயிருப்பதாம். ஆகவே எலி, பாம்பு, தேள் மற்றும் ஊர்வன இவைகளின் விக்கிரயம் ஆகாது. பாம்பாட்டிக்குப் பாம்பினால் உண்டாகிற பிரயோஜனம் ஷரஇல் ஆதாரமற்றதாம். கோதுமையின் ஒரு மணியை அல்லது எந்தப் பொருளில் யாதொரு பிரயோச



னத்தை நாடுதல் ஏற்படாதோ அந்தப்பொருளை விக்கிரயஞ் செய்வது ஆகாது. ஆனால் பூனை, தேன்குளவி, சிறுத்தை, சிங்கம், ஓநாய் முதலியவைகள்போல் தன்னிலாவது தோலிலாவது பிரயோசனமுண்டாயிருக்கிற உயிரினங்களின் விக்கிரயம் ஆகும். கிளி, மயில், மற்றும் அழகான பறவைகள் இவைகளைப் பார்ப்பதில் ஜனங்களுக்குச் சந்தோஷமுண்டாகிற பிரயோசனமிருப்பதினால் இவைகளின் விக்கிரயம் ஆகும். தம்பூர், வீணை முதலிய வாத்தியக் கருவிகளின் விக்கிரயம் ஆகாது. ஏனென்றால், இவைகளால் பிரயோசனமடைவது ஹறாமாயும் இல்லையெனப் பாவிக்கப்படுகிறதாயுமிருப்பதினாலேயாம். பிள்ளைகள் விளையாடுவதற்காக மண்ணினால் செய்யப்பட்ட உயிரினங்களின் சிலையை விக்கிரயம் செய்வது ஹறாமாயும் அதை உடைப்பது வாஜிபாயுமிருக்கிறது. செடி, இலை, பூக்கள்போல் செய்யப்பட்ட விளையாட்டு உருவுகளின் விக்கிரயம் ஆகும். எந்தத் தட்டத்தில் அல்லது பிடவையில் உயிரினங்களின் உருவமெழுதியிருக்கிறதோ அந்தத் தட்டம் அல்லது பிடவையின் விக்கிரயம் ஆகும். அந்தப் பிடவையினால் தலையணையும் விரிப்பும் தைப்பது ஆகும், உடுப்பது ஆகாது.

மூன்றாவது ஷர்த்து:—கிரயசொத்தானது விற்பவனுக்குச் சுயாதீனமாயிருப்பதாம். ஆகவே அன்னியனுடைய சொத்தை அவன் உத்திரவில்லாமல் விற்றால் கிரயம்செல்லாது. அது புருஷன் சொத்தாயிருந்தாலும் தகப்பன் சொத்தாயிருந்தாலும் மகன் சொத்தாயிருந்தாலும் சரியே. இன்னும் விற்றபிறகு அந்த சொத்துக்குடையவர் உத்திரவு கொடுத்தாலுஞ் சரியே கிரயம் செல்லாது. ஏனென்றால் உத்திரவு முதலில் வேண்டியது அவசியம்.

நாலாவது ஷர்த்து:—கிரயசொத்தானது கிரயம் கொள்பவனுக்கு உடனே ஒப்புக்கொடுக்கக்கூடியதாயிருப்பதாம். ஆகவே ஓடிப்போன அடிமை, தண்ணீரிலிருக்கிற மீன், ஆகாயத்திலிருக்கிற பறவை, கர்ப்பத்திலிருக்கிற பிள்ளை, குதிரையின் முதுகிலிருக்கிற விந்து, இவைகளின் விக்கிரயம் செல்லாது. ஏனென்றால் இவைகளை உடனே ஒப்புக்கொடுக்க விற்றவனால் முடியாது. மிருகத்துடைய முதுகின்மேலிருக்கிற மயிர், மடியிலிருக்கிற பால் இவைகளின் விக்கிரயம் ஆகாது. ஏனென்றால், ஒப்புக்கொடுப்பதற்குள்ளாக புதிய பால் சுரந்து அதனோடு கலப்பதினாலேயாம். அடமானசொத்தை அடமானம் வைத்தவனுடைய உத்திரவில்லாமல் விற்றால் கிரயம் செல்லாது. இன்னும்

தன் எஜமானனால் பிள்ளை பெற்றிருக்கிற வெள்ளாட்டியின் விக்கிரயம் செல்லாது. ஏனென்றால் அவளை ஒப்புக்கொடுப்பது கூடாதென்றலெங்க. சிறு குழந்தையுள்ள வெள்ளாட்டியை அந்தக் குழந்தையினின்று பிரித்து அவளை மாத்திரம் தனியாய் விற்பதும், அந்தக் குழந்தையை அவளிலினின்றும் பிரித்து அந்தக் குழந்தையை மாத்திரம் தனியாய் விற்பதும் செல்லாது. ஏனென்றால், அப்படிப் பிரிப்பது ஹராமாயிருப்பதினாலெங்க.

ஐந்தாவது ஷரத்து:—கிரயசொத்து இதுவென்ற குறிப்பும் அதன் அளவும் அதன் குணமும் தெரிந்திருப்பதாம். கிரய சொத்து இதுவென்ற குறிப்பு தெரியாதிருப்பதற்கு உதாரணம்:—இந்த மந்தையில் நீ விரும்புகிற ஒரு ஆட்டை, அல்லது இந்த மூட்டையில் நீ பிரியப்படுகிற ஒரு பீஸ் பிடவையை உனக்கு நான் விற்கிறேன் என்று சொன்னால் இப்படியான கிரயம் செல்லாது. மேலும், அந்த ஆட்டை அல்லது பிடவையை ஓர் சமிக்கினையால் சுட்டிக் காட்டி இதுவென்று குறிப்பிட்டு விற்பான். இந்தப் பூமியில் பத்து செண்ட் பூமியை நான் உனக்கு விற்கிறேன். உனக்கு எந்தப்பக்கம் பிரியமோ அந்தப் பக்கத்தில் வைத்துக்கொள் என்று சொன்னால் இந்தக்கிரயம் செல்லாது.

கிரயசொத்தின் அளவு தெரிந்திருக்க வேண்டுமென்பது எப்போதென்றால் வாங்குகிறவன் அந்தச் சொத்தைக் கண்ணால் பார்க்காத போதுதான். உதாரணமாக:-விற்பவன் வாங்குகிறவனை நோக்கி இன்றுள் தன்னுடைய பிடவையை என்ன விலைக்கு விற்றிருக்கிறாயோ அதே விலையாக நான் உனக்கு விற்கிறேன் என்று சொல்வதுபோல், அல்லது நிறை தெரிந்துகொள்ளாத ஒரு வஸ்துவைக் குறிப்பிட்டு இன்ன வஸ்துவின் நிறைக்குச் சரியான பொன் அல்லது வெள்ளிக்குப் பதிலாக விற்றேன் என்று சொல்வதுபோல் இப்படியான விக்கிரயம் செல்லாது. ஆனால் இந்தக் கோதுமையை இந்தப்பாத்திரம் நிறைந்த பொன் அல்லது வெள்ளிக்குப் பதிலாக உனக்கு விற்றேன் என்று விற்பவன் சொல்ல வாங்குகிறவன் அவ்விரண்டையும் தன் கண்ணால் பார்ப்பானாகில் இந்த விக்கிரயம் செல்லும்.

கிரயசொத்தின் குணம் தெரிந்திருக்க வேண்டுமென்பது இதற்கு முன் பார்த்திராத பொருளில்தான். ஆகவே கிரயசொத்து இதற்குமுன் பார்க்காத பொருளாயிருந்தால் அதைப் பார்த்துக் கொள்வதில் அதன் குணம் தெரிந்துவிடும். வெகுநாளைக்கு முன் பார்த்



திருந்த ஒரு பொருளை வாங்கப்போகிறான். பார்த்தநாளிலிருந்து இது நாள் வரையில் அந்தப்பொருள் பேதமடைகிற பொருளாயிருந்தால் அதன் விக்கிரயம் செல்லாது. ரொட்டு அல்லது மூட்டைப் பிடவையில் சுற்றப்பட்டிருக்கிற மெல்லிய பிடவை, கதிரில் இருக்கிற கோதுமை இவைகளின் விக்கிரயம் செல்லாது. ஒருவன் ஒரு அடிமைப் பெண்ணைக் கிரயத்துக்கு வாங்கும்போது அவள் தலையின் உரோமம், கை, கால் இவைகளையும் இன்னும் அடிமை விற்பவன் வழக்கமாய் அவளில் காண்பிக்கின்ற ஒவ்வொன்றையும் பார்த்துக்கொள்ளுவான். இவைகளிற் சிலவற்றைப் பார்த்துச் சிலவற்றைப் பார்க்காமல் விட்டுவிடுவானாகில் விக்கிரயம் செல்லாது. இன்னும் ஒரு வீட்டைக் கிரயத்துக்கு வாங்குகிறவன் அந்த வீட்டின் ஒவ்வொரு பாகத்தையும் நன்றாய்ப் பார்த்துக்கொள்ள வேண்டும். சிலபாகத்தைப் பார்க்காமல் வாங்குவானாகில் கிரயம் செல்லாது. ஆனால் அக்குரோட்டு, பாதாம், மொச்சை, மாதுளை, முட்டை இவைகளின் விக்கிரயம் ஆகும். இவை தோலிக்குள் மறைந்திருந்தாலுஞ் சரியே. ஏனென்றால் இந்த வஸ்துக்களை இப்படியே விற்பதுதான் இணக்கம். பச்சையாகிய அக்குரோட்டுக்காய் மொச்சைக்காய் இவைகள் தேவையாகிற நிமித்தம் இவைகளின் விக்கிரயம் ஆகும். வாய்மூடிய சீஷாவுக்குள் அடைக்கப்பட்டிருக்கிற புக்காஉ என்னும் திராட்சை ரசத்தின் கிரயம் செல்லாது. ஏனென்றால் அது மறைந்திருக்கிறதினாலெங்க. ஆனால் விற்றவன் அதை ஹலாலாக்கியிருப்பதால் வாங்கினவன் அதைக் குடிப்பது ஆகும். ஈடுக்கிரயமில்லாமையால் வாங்கினவன் அதை மற்றவருக்கு விற்கமுடியாது.

ஆறுவது ஷரத்து:—கிரய சொத்தை வாங்கினவன் அதைக் கைபற்றுவதாம். கைபற்றுதிருக்கிறவரையில் அவன் அதை விற்பது செல்லாது. முதலில் அவன் கைபற்றி அதன்பிறகு மற்றவருக்குக் கிரயப்படுத்தினால் செல்லும்.

மூன்றாவது ருக்னு விற்றேன், வாங்கினேன் என்ற சொல் அதாவது கிரயசொத்தை விற்றவன் இந்த வஸ்துவை நான் உனக்கு விற்றேன் என்றும் வாங்குகிறவன் நான் இதைக் கிரயத்துக்குக் கொண்டேன் என்றும் சொல்வதாம். அல்லது விற்றவன் நான் இந்த வஸ்துவை இதற்குப்பதிலாக உனக்குக் கொடுத்தேன் என்றும், வாங்கினவன் நான் வாங்கினேன் அல்லது கபூல் செய்தேன் என்றும் சொல்வதாம். அல்லது இப்படிப் பரிஷ்காரமாய்ச் சொல்லாமற்போனாலும்

கிரயமென்னும் பொருள் விளங்குகிறவிதமாய் வேறே யாதொரு சொல்லைச் சொல்லுவார்கள். இப்போது வழக்கமாய்ப் போயிருக்கிறபடி கொடுக்கல் வாங்கல்களுக்கு முன்னே இந்தச்சொல் சொல்லப்படாவிட்டால் விக்கிரயம் செல்லாது. ஆனால் இலகுவுபடுத்துவதற்காக அற்பவஸ்துக்களில் இதை நாம் அயாக்குவது ஏற்றமாயிருக்கும். ஏனென்றால் இது வழக்கமாய்ப் பயிற்போயிருப்பதினாலென்க. இன்னும் இமாம் அபூஹனீபா றஹ்மதுல்லாஹி அலைஹியவர்களுடைய மதஹபு இப்படியாகவே யிருக்கிறது. அன்றியும், ஷாபிஈ மதுஹபுடைய உலமாக்களின் ஒரு கூட்டம் ஷாபிஈ மதுஹபிலும் இந்தச் சொல்லை அனுசரித்திருக்கிறார்கள். மூன்று காரணங்களை முன்னிட்டு இந்தச்சொல்லின்மேல் பற்றுவா கொடுப்பது ஆச்சரியமல்ல. முதலாவது காரணம்:-இது பொதுவாய் எல்லாருக்கும் தேவைப்பட்டதாய்ப் போயிருப்பது. இரண்டாவது காரணம் - அஸ்ஹாபுகளுடைய காலத்திலும் இதே வழக்க மிருந்திருக்கலாமென்பது. ஏனென்றால், அவர்கள் காலத்தில் விக்கிரயத்தில் விற்றேன் வாங்கினேன் என்று சொல்வது வழக்கமாய்ப்போயிருந்தால் அது அவர்களுக்குக் கஷ்டமாயிருந்திருக்கும், அந்தக் கஷ்டத்தை அவர்கள் சொல்லியிருப்பார்கள். அப்போது இதுகாரியம் மறைந்திராது. மூன்றாவது காரணம் வழக்கமாய்ப்போனால், செயலைச் சொல்லுடைய தானத்தில் நிறுத்துவது அசாத்தியமல்லவென்பது. உதாரணமாக:—ஹதியாவில் வெளிப்படையாயிருப்பதுபோல் அதாவது நபி சல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களுடைய சமூகத்துக்கு ஹதியாவாய்க் கொண்டுவரப்படுகிற வஸ்துக்களில் கொடுத்தேன் கபூல் செய்தேன் என்கிற வார்த்தையின் கஷ்டமிருந்ததில்லை. ஒவ்வொரு காலத்திலும் இப்படியே இருந்திருக்கிறது. பிரதியில்லாத இப்படியான முஆமலாக்களில் அதாவது ஹதியாவில் வழக்கப்படி வைப்பதும் எடுத்துக்கொள்வதுமான செயல் நிகழ்ந்த அந்தக்ஷணமே சுதந்திரம் உண்டாய்ப் போகிறதாயிருக்க விலையென்னும் பிரதியுள்ள முஆமலாவில் அதாவது விக்கிரயத்தில் கொடுப்பதும் வாங்கிக்கொள்வதுமான செயலினாலேயே சுதந்திர முண்டாய்ப் போவது அசாத்தியமாகாது. ஆனால் ஹதியாவில் வழக்கப்படி அற்பத்திலும் அதிகத்திலும் வித்தியாச மிருந்ததில்லை. (அதாவது ஹதியாவாகக்கொண்டு வரப்படுகிற பொருள் அற்பமானதா யிருந்தாலும் அதிகமானதா யிருந்தாலும் கொடுத்தேன் கபூல் செய்தேன் என்கிற சொல்லின் கஷ்டமிருந்ததில்லை.) விலையுயர்ந்த வஸ்துக்களின் விக்கிரயத்திலோ அப்படியல்ல. விற்றேன் வாங்கினேன் என்று சொல்லுகிற



வழக்க மிருந்திருக்கிறது. உதாரணமாக:—வீடு, நிலம், அடிமை, மிருகம் உயர்ந்த விலையுள்ள பிடவை முதலியவைபோல் இந்தப்பொருள்களில் விற்றேன், வாங்கினேன் என்ற சொல் சொல்லாவிட்டால் முன்னோர்களுடைய வழக்கத்துக்கு விரோதம் செய்தவனாகுவான், சுதந்திரமுண்டாகாது.

என்கிலும் இறைச்சி, ரொட்டி, கனிவர்க்க முதலிய தின்பண்டங்கள் இன்னுமிதுபோல் பலவிடங்களில் பலவிதமான அற்பவஸ்துக்களைக் கிரயத்துக்கு வாங்குவதில் விற்றேன் வாங்கினேன் என்ற சொல் இல்லாமலே வழக்கத்தின்படி நடைபெற்றுவர உத்திரவு கொடுப்பதற்குக் காரணமில்லாமற் போகவில்லை. அற்ப வஸ்துக்களிலும் விலைபெற்ற வஸ்துக்களிலும் ஏற்றம் இறக்கமான வகுப்புகளிருக்கின்றன. இது அற்ப வஸ்துக்களிற் சேர்ந்ததா? அல்லது இல்லையா? என்று அறியவேண்டும். அந்த வகுப்புகளை நாம் கணித்துச் சொல்ல முடியாது. ஆகவே பேணுதலான வழியில் நடப்பதே உத்தமம்.

அறிந்துகொள்:—ஒருவன் ஒரு கழுதைப் பொதியளவு கோதுமையைக் கிரயத்துக்கு வாங்குவதில் விற்றேன் வாங்கினேன் என்ற சொல் சொல்லாவிட்டால் அந்தக் கோதுமை அவனுக்குச் சுதந்திரமாய்ப்போகாது. ஏனென்றால் அது அற்பவஸ்து அல்லாததினாலேயாம். என்கிலும், அதை உண்பதும் உபயோகிப்பதும் ஹறாமல்ல. விற்றவன் அந்த ஒப்புக்கொடுத்த காரணமாக அது முபாஹாய்ப்போகிறது சுதந்திரம் உண்டாகாமற் போனாலுஞ் சரி. அந்தக் கோதுமையினால் யாருக்காவது விருந்தளிப்பானாயினும் ஆகும். ஏனென்றால், உடையவன் அதை இவனுக்கு ஒப்புக்கொடுத்த சமயோசிதமானது அதை இவன்பேரில் ஹலாலாக்கி விட்டானென்று அறிவிக்கின்றது. ஆனால் பிரத்தியாக்ஷ விலைவிதித்து ஒப்புக்கொடுத்திருக்கிறான். என்னுடைய தானியத்தை நீயுனே விருந்தாளிக்கு உணவாய்க்கொடு. பிறகு அதன் கண்டத்துக்கு நீ பிணைப்படு என்று அவன் பரிஷ்காரமாய்ச் சொல்லியிருக்கும் பக்ஷத்தில் இது ஆமாகிறதாயும் கண்டம் கொடுப்பது வாஜிபாகிறதாயு மிருந்தது. ஆகவே, அவன் தன் செயலை இது காரியத்தின்பேரில் அத்தாட்சியாக்கினால் அப்போதும் இது காரியம் உண்டாய்விட்டது. பின்னர் விற்றேன் வாங்கினேன் என்ற சொல் சொல்லாததினால் ஏற்படுகிற தோஷ மென்னவென்றால், வாங்கினவனுக்கு அந்தத் தானியம் சுதந்திரமாகாமையால் அவன் அதை மற்றவருக்கு விற்க நாடினால் விற்க முடியாதென்பதும், அதையவன் உண்பதற்கு முன்னே விற்றவன் அதைத் திரும்பவும் எடுத்துக்கொள்ள

நாடினால், விருந்தாளியின்முன் வைக்கப்பட்ட உணவைப்போல் அதை அவன் எடுத்துக்கொள்ளக் கூடுமென்பதுபோலாம்.

அறிந்துகோள்:—விக்கிரயமானது அதனுடன் வேறொரு விதியை ஒட்டாமலிருந்தால்தான் ஆகும். விதியை ஒட்டுகிற விக்கிரயம் கூடாது. உதாரணமாக:—ஒருவன் இந்த சிறகை நீ யென் வீட்டில் கொண்டுபோய்ச் சேர்க்கிற விதியை ஒட்டி நான் இதை உன்னிடம் கிரயத்துக்கு வாங்கினேன், அல்லது இந்தக் கோதுமையை நீ மாவாய் அரைத்துக்கொடுக்கிற விதியை ஒட்டி நான் இதை உன்னிடம் கிரயத்துக்கு வாங்கினேன், அல்லது நீ யெனக்குக் கொஞ்சம் கடனாய்க் கொடுக்கிற விதியை ஒட்டி நான் இதை உன்னிடம் கிரயத்துக்கு வாங்கினேன் என்று சொன்னால் அல்லது இன்னும் யாதொரு விதியை ஒட்டினால் விக்கிரயம் செல்லாது. ஆனால் ஆறு விதிகளை ஒட்டலாம். அவையாவன:—இன்னவஸ்துவை ஈடாகவை, அல்லது யாரையாவது சாக்ஷியாய்க்கொண்டுவா, அல்லது இன்னவனை ஜாமினாய்க்கொண்டுவா, அல்லது கிரயத்தை இப்போதே கொடுத்துவிடு. அத்தனைநாள் தவணைக்கு நான் சம்மதிக்கமாட்டேன். மூன்று நாளையில் அல்லது அதற்குள்ளாக நீ கிரயம் கொடுக்காமற் போனால் என் சரக்கை நான் எடுத்துக்கொள்ள எனக்கு இக்தியார் இருக்கவேண்டும். (ஆனால் மூன்று நாளைக்குமேல் அதிக நாள் கெடுவிட்டுச் சரக்கைத் திரும்ப எடுத்துக் கொள்ளுகிற இக்தியாருடன் விக்கிரயம் கூடாது.) அல்லது ஒரு அடிமையை வாங்குவதில் இந்த அடிமைக்கு எழுத அல்லது இன்னும் யாதொரு தொழில் செய்யத் தெரிந்திருந்தால் நான் இந்த அடிமையைக் கிரயத்துக்கு வாங்கினேன் என்று சொல்வதாம்; இந்த விதிகளை ஒட்டினால் விக்கிரயத்துக்குப் பாதகமில்லை.

## இரண்டாவது - வட்டி.

வட்டியானது நாணயத்திலும் தானியத்திலும் நடைபெறுவதாயிருக்கின்றது. ஆனால் நாணயங்களை விற்பதில் இரண்டு காரியங்கள் ஷருத்தாகின்றன. முதலாவது காரியம்:—கிரயசொத்தை ஹாஜிர்ப்படுத்தாமல் கெடுவின்மேல் விற்பதாம். அதாவது பொன்னைப் பொன்னுக்கும் வெள்ளியை வெள்ளிக்கும் பகரமாய் விற்பதில் இரண்டும் ஹாஜிராயிருக்கவேண்டும். மஜ்லிசைவிட்டுப் பிரியுமுன் இருவரும் தங்கள் கிரயசொத்தைக் கைபற்றவேண்டும். அதே மஜ்லிஸில் கைபற்றாமல் போனால், கிரயம் செல்லாது. இரண்டாவது காரியம்:—பொன்னைப் பொன்னுக்கு அல்லது வெள்ளியை வெள்ளிக்கு விற்பதில்



கிரயசொத்து இரண்டும் சரியாயிராமல் ஒன்றுக்கொன்று அதிகமாயிருப்பதாம். அதிகம் ஹறாமாகும். ஆகவே ஒரு முழு *தீனாரை (ஒரு தீனார் எடையும் ஒரு குன்றிமணி எடையுமுள்ள) நறுக்கு சன்னங்களுக்குப் பகரமாய் விற்பதும், சுயமான தீனாருக்குப் பகரமாய்க் கலப்பான தீனாரை அதிகப்படுத்தி விற்பதும் கூடாது. மேலும் சுயமான தீனாரும் கலப்பானதீனாரும் முழுதீனாரும் சில்லரைச் சன்னங்களும் சரியாயிருக்கவேண்டும்.

பின்னர் ஒருவன் ஒரு பிடவையை ஒரு தீனாருக்கு வாங்கிப் பிறகு விற்றவனுக்கே அதை ஒரு தீனார், ஒரு † தாங்கு சன்னம் இவைகளுக்குப் பகரமாய் விற்பது ஆகும். நாட்டமும் நிறைவேறும். வெள்ளி கலந்துள்ள பொன்னைச் சுயமான பொன், அல்லது சுயமான வெள்ளி, அல்லது வெள்ளி கலந்துள்ள பொன் இவைகளுக்குப் பகரமாய் விற்பது கூடாது. மேலும் மத்தியில் யாதொரு வஸ்துவைக் கொண்டுவரவேண்டும். சுயமான பொன்னல்லாத ஒவ்வொரு பொன் நகையும் இதே விதியுள்ளதாயிருக்கிறது. பொன் கலந்துள்ள முத்துச்சரத்தைப் பொன்னுக்குப் பகரமாய் விற்பது கூடாது. பொன் சரிகையுள்ள பிடவையைப் பொன்னுக்குப் பகரமாய் விற்பது கூடாது. ஆனால் அந்தச் சரிகையை உருக்கும்பக்ஷம் அதில் ஒன்றும் அகப்படாததாயிருந்தால் ஆகும்.

தானியத்தைத் தானியத்துக்குப் பகரமாய்க் கெடுவின்மேல் விற்பது கூடாது. மேலும் ஒரே மஜ்லிஸில் இரண்டையும் கைபற்றவேண்டும். அந்த இரண்டும் வெவ்வேறு தானியமாயிருந்தாலுஞ் சரியே. கோதுமைக்குக் கோதுமையை விற்பதுபோல் ஒரே தானியமாயிருந்தால் அப்போதும் கெடுவின்மேல் விற்பது கூடாமலிருப்பதுடன் அதிகத்துக்கும் விற்பது கூடாது. மேலும் அளவில் சரியாயிருக்கவேண்டும். நிறையில் சரியாயிருந்தால் போதாது. என்கினும், ஒவ்வொரு வஸ்துவுக்கும் அளவோ நிறையோ பெரும்பான்மையில் எது வழக்கமோ அதன்படி சரிபார்த்துக் கொள்ளவேண்டும்.

இறைச்சிக்குப் பகரமாய் கசாய்க்காரனுக்கு ஆட்டை விற்றலும், ரொட்டிக்குப் பகரமாய் ரொட்டிக்காரனுக்குக் கோதுமையை விற்றலும், எண்ணெய்க்குப் பகரமாய் வாணியனுக்கு எள்ளை அல்லது கொப்பரையை விற்றலும் கிரயம் கூடாது. ஆனால் கிரயம் செய்யா

* தீனார் என்பது இரண்டரை ரூபாய் பெறுமான ஓர் பொன் நாணயம்.
† தாங்கு என்பது ஆறு குன்றிமணி எடையுள்ள பொன் நாணயம். ‡ கஸாந்தி.

மல் ரொட்டி வாங்கிக்கொள்ளலாமென்று நிய்யத்துக்கொண்டு கோதுமையைக் கொடுப்பானாகில் அதைத் தின்பது ஆகும். ஆனால் இந்த ரொட்டி இவனுக்குச் சுதந்திரமாகாது. இதை இவன் விற்கமுடியாது. இதுபோல் கோதுமையும் ரொட்டிக்காரனுக்கு முபாஹாகும். அதில் அவன் அநுபோகம் செய்யலாம். விற்கமுடியாது. ரொட்டி வாங்குகிறவனுடைய கோதுமை ரொட்டிக்காரன்மேலும் ரொட்டிக்காரனுடைய ரொட்டி அந்தக் கோதுமைக்காரன்மேலும் பாக்கியாகவே நிற்கும். ஒவ்வொருவரும் நாடும்போது தங்கள் பொருளைக் கேட்கக் கூடியவர்களாயிருக்கிறார்கள். ஒருவன் மற்றொருவனுக்கு ஹலாலாக்கிவிட்டால் போதாது.

ஏனென்றால், யாராவதொருவன் இந்த வஸ்துவை நான் உனக்கு ஹலாலாக்கிவிட்டேன், நீயும் அதை எனக்கு ஹலாலாக்கினால் என்று ஷர்த்திட்டுச் சொல்லுவானாகில் இது கூடாது. இப்படிப் பரிஷ்காரமாய் ஷர்த்திடாமல், இதை நான் உனக்கு ஹலாலாக்கிவிட்டேனென்று சொல்லுவானாகில், அப்போதும் எதிரியுடைய மனதில் இந்த ஷர்த்து இருக்குமென்று இவன் மனதுக்குத் தெரியுமாகில், அல்லது இதை நான் ஹலாலாக்காமற்போனால் ஒரு மணி கோதுமையை இவன் எனக்குக் கொடுக்கமாட்டானென்று நினைப்பானாகில், இந்த ஹலாலாக்குதல் அல்லாஹுதஆலாவுக்கும் இவனுக்கும் மத்தியில் பயன்படுவதாகாது. ஏனென்றால், இது நாவினால் பொருந்தினதே தவிர மனதினால் பொருந்தினதல்ல. மனதைக்கொண்டல்லாத ஒவ்வொரு பொருத்தமும் அவ்வுலகத்துக்கு உதவாது. ஆனால் நீ எனக்கு ஹலாலாக்கினாலும் ஆக்காமற்போனாலுஞ்சரி நான் இதை உனக்கு ஹலாலாக்கிவிட்டேனென்று வாக்கும் மனமும் ஒத்துச் சொல்லுவானாகில் இது ஆகும். அப்போது அந்த மற்றொருவனும் ஹலாலாக்கினால் இதே விதமாம். ஒருவன் மற்றொருவனுக்கு ஹலாலாக்காமற்போனால் இரண்டும் விலையிலும் அளவிலும் சரியாயிருக்கும் பக்ஷத்தில் அதைப்பற்றி இவ்வுலகத்தில் வழக்கில்லை. அவ்வுலகத்திலும் பிரதி நேரிடும். சரியாயிராமல் வித்தியாசப்பட்டிருந்தால் இதைப் பற்றி இவ்வுலகத்தில் வழக்கும் அவ்வுலகத்தில் குற்றமும் உண்டாகுமென்று பயமிருக்கிறது.

ஒரு தானியத்தைக்கொண்டு செய்யப்பட்ட ஒரு பண்டத்தை அதே தானியத்துக்கு விற்பது கூடாது. தானியமும் பண்டமும் சரிசரியாயிருந்தாலுஞ்சரியே. ஆகவே கோதுமை மாவு, கோதுமை ரொட்டி, ரொட்டிக்குக் கபதேற்றிய கோதுமைமாவு இவைகளை



கோதுமைக்குப் பகரமாய் விற்பதும், திராட்சைப்பழத்தைச் சிருக்கா, தேன் இவைகளுக்குப் பகரமாய் விற்பதும், பாலைப் பனீரென்றும் பாற்கோவை நெய் இவைகளுக்குப் பகரமாய் விற்பதும் கூடாது. மேலும் திராட்சைப்பழமும் பேரீத்தம் பழமும் நீர்வற்றிக் காய்ந்த பிறகேயன்றி மற்றப்படி பச்சைத் திராட்சைப்பழத்தைப் பச்சைத் திராட்சைப்பழத்திற்கும், நீர்வற்றாத பேரீத்தம்பழத்தை நீர்வற்றாத பேரீத்தம்பழத்திற்கும் சரிசரியாய் விற்பதும் கூடாது. இதை விரித்தால் பெருகும். எனினும் இவ்வளவு சொன்னதெல்லாம் கற்கக் கடமையாயிருந்த சங்கதிகளாம். இனித் தெரியாத யாதொரு மஸ்அலா வந்து நேர்ந்தால் அது தனக்குத் தெரியாத மஸ்அலாவென்பதைச் சிந்தையில் வைத்து ஹராமில் வீழாதிருக்கும்பொருட்டு ஆலிம்களிடத்தில் அதைக் கேட்டுத் தெளிவது அவசியமாயிருக்கும். அதைத் தெரியாமல் விட்டுவிடுவதைப் பற்றி பயந்துகொள்வது வாஜிபாயுமிருக்கிறது. இல்மின்படி அமல் செய்வது எப்படி பர்ளாயிருக்கிறதோ அப்படியே இல்மைத் தேடித் தெரிந்துகொள்வதும் பர்ளாயிருக்கிறதினால் தெரியாமையென்னும் சமாதானத்தினால் தப்பிக்கவும் வழியில்லை.

## மூன்றாவது - ஒப்பந்தம்.

இதில் பத்து விதிகளை அநுசரிப்பது அவசியமாயிருக்கும்.

முதலாவதுவிதி:—ஒப்பந்தம் பேசும்போது இந்த வெள்ளியை அல்லது இந்தப் பொன்னை, அல்லது இந்தப் பிடவையை உவமையில்:- ஒரு கழுதைப் பொதியளவு கோதுமைக்காக ஒப்பந்த கிரயமாய்க் கொடுத்தேனென்று சொல்லுவான். இன்னும் தான் கருதியது இன்ன கோதுமையென்று அதன் சிபத்தையும், (கார் அல்லது சம்பா என்பதுபோல்) எந்த சிபத்தினால் விலை பேதப்படக்கூடுமோ அதையும், வழக்கத்தில் எதைச் சொல்வது அவசியமென்று கருதப்படுமோ அதையும் இப்படி ஒவ்வொன்றையும் அவன் தெரிந்து கொள்ளும்படி பரிஷ்காரமாய்ச் சொல்லிவிடவேண்டும். அதற்கவன் இதை நான் கபூல் செய்தேன் என்று சொல்லவேண்டும். ஒப்பந்தமாய்க் கொடுத்தேன் என்ற சொல்லுக்குப் பதிலாய் இன்னின்ன சிபத்துள்ள வஸ்துவை நான் கிரயத்துக்குக் கொண்டேன் என்று சொன்னாலும் ஆகும்.

இரண்டாவதுவிதி:—ஒப்பந்தப் பொருளுக்குக் கிரயமாக எதைக் கொடுக்கிறானோ அதைக் கணக்கில்லாமல் கொடுக்கமாட்டான். மேலும் அதன் நிறை, அளவுகளைக் குறித்துக்கொள்ளுவான். ஏனென்

னுல், கிரயத்தை வாபசு செய்து கொள்ளத் தேவையாகும்போது தான் கொடுத்தது இன்னது, இவ்வளவு என்று அவன் தெரிந்து கொள்ளவேயாம்.

மூன்றாவதுவிதி:—ஒப்பந்தம் பேசினவிடத்திலேயே அதன் கிரயமாகிய தலைமுதலை முன்னுடி கொடுத்துவிடுவான்.

நான்காவதுவிதி:—* வஸ்பு செய்வதினுல்அதன்நிலைமை தெரியக் கூடியபொருள் எதுவோ அந்தப்பொருளில், உதாரணமாக:—தானிய வித்துகள், பஞ்சு, உரோமம், பட்டு, பால், இறைச்சி முதலியவைக ளில் ஒப்பந்தம் செய்வான். என்னிலும், கூட்டுமணம்போல் பல பொருள் கலந்துள்ள வஸ்துவில், அல்லது துருக்கிய வில்லைப்போல் பலஇணைப்பாயுள்ள வஸ்துவில், அல்லது செருப்பு, ஜோத்தா, மோறா, செதுக்கிய அம்பு முதலியவைபோல் செயர்க்கைப்பொருளில் ஒப்பந்தம் செய்வது கூடாது. ஏனென்றால், இவையெல்லாம் வஸ்பை ஏற்காத பொருள்களா யிருப்பதினுலேயாம். ஆனுல் ரொட்டியில் ஒப்பந்தம் ஆகுமென்பதே சஹீஹான சொல்லாயிருக்கிறது, அதில் உப்பும் தண்ணீரும் கலந்திருந்தாலும் சரியே. அப்படிக் கலந்துள்ள உப்பு, தண்ணீர் இவைகளுடைய அளவு அவ்வளவாய் நோக்கக் கூடியதல்ல, அது தெரியாமையையும் வருத்துகிறதில்லை.

ஐந்தாவதுவிதி:—கெடுவின்மேல் வாங்குகிறதாயிருந்தால் காலம் தெரியவேண்டும். குறிப்பில்லாமல் தானியம் தயாராகிறவரையிலென்று கெடுவிடமாட்டான். ஏனென்றால் அது எப்போதும் ஒரே விதமாயிராது. நவுரோஸ் வரையில் என்று கெடுவிட்டால் அது இன்ன தினத்திலென்று தெரிந்திருக்கும் பக்ஷத்தில் ஆகும். அல்லது ஜமாதி வரையிலென்று கெடுவிட்டாலும் ஆகும். இதை ஜமாதியுல் அவ்வலாக நியமித்துக் கொள்ளுவோம்.

ஆருவதுவிதி:—குறித்த காலத்தின் கடைசியிலாவது கிடைக்கக் கூடிய வஸ்து எதுவோ அந்த வஸ்துவில் ஒப்பந்தம் செய்வான். யாதொரு கனி பழுக்காத காலத்தைக் குறிப்பிட்டு அக்கனியை ஒப்பந்தம் செய்வது கூடாது. பெரும்பான்மையில் அக்காலம் வரையில் அது பழுக்கிறதாயிருந்தால் ஆகும். பின்னர் யாதொரு ஆபத்தினுல் குறித்தகாலம் தவறித் தாமதிக்கும் பக்ஷத்தில், சம்மதமானுல் அவனுக்குத் தாமதம் கொடுப்பான்; இல்லாவிட்டால் ஒப்பந்தத்தை உடைத்துத் தான் கொடுத்த பொருளைத் திரும்ப வாங்கிக்கொள்ளுவான்.

---

* வஸ்பு செய்வது - குணங்குறிகளைச் சொல்லிக் காட்டுவது.



ஏழாவதுவிதி:—ஒப்பந்தம் செய்த வஸ்துவை எவ்விடத்தில் கொண்டுவந்து கொடுப்பது? பட்டணத்திலா? கிராமத்திலா? என்பதைச் சொல்லிவிடவேண்டும். ஆனுல் அது சாத்தியப்படுகிற இடமாயிருக்கவேண்டும். இதேனென்றால், மாறுதல் சம்பவிக்காமலும் சண்டை நேரிடாமலு மிருக்கவேயாம்.

எட்டாவதுவிதி:—இந்தத் திராட்சைப்பழம் அல்லது இந்த நிலத்துக் கோதுமை என்பதுபோல் குறிப்பாய்ச் சுட்டி ஒரு பொருளையும் ஒப்பந்தம் செய்யான். இது ஆகாது.

ஒன்பதாவது விதி:—எந்த வஸ்து கிடைப்பது அரிதோ அந்த வஸ்துவில், உதாரணமாக:—நிகரில்லாத பெரியமுத்து, பிள்ளைகளுள்ள அழகிய அடிமைப்பெண் இன்னும்இவைபோன்ற வஸ்துக்களில் ஒப்பந்தம் கூடாது.

பத்தாவது விதி:—தானியத்தையே தலைமுதலாய்க்கொடுத்து எந்தத் தானியத்திலும் ஒப்பந்தம் செய்வது கூடாது. உதாரணமாக:—தொலி கோதுமையை அல்லது மணிகோதுமையைக் கொடுத்துத் தினை முதலிய தானியத்தை ஒப்பந்தம் செய்வது ஆகாது.

நாலாவது - இஜார்த்து அதாவது கூலி, வாட்கை முதலியவை.

இதற்கு இரண்டு ருக்குனுகளுண்டு, முதலாவது:—உஜ்ரத்தென்னும் கூலி வாடகை முதலியவும், இரண்டாவது:—மன்பஅத்தென்னும் பயன் அல்லது உபயோகமுமா யிருக்கும். என்னினும் கிரயத்தில் விற்பவனும் கொள்பவனுமாகிய இரண்டு ஆகிதுகளும் விற்றேன், கொண்டேன் என்ற சொல்லும் எப்படி அவசியமோ அப்படியே இதிலும் இரண்டு ஆகிதுகளும் அதற்குரிய சொல்லும் அவசியமாயிருக்கும். உஜ்ரத்தும் தெரிந்திருக்கவேண்டும். கிரயத்தில் சொல்லியதுபோல்.

ஒருவன் தன் வீட்டைக் கட்டிக்கொடுப்பதற்குப் பிரதியாக அந்த வாடகைக்கு விட்டால் இது கூடாது. ஏனென்றால், கட்டுதலாகிய கிரியை மறைத்தாயிருப்பதினுலேயாம். பத்து திருஹம் செலவு செய்து கட்டென்று சொல்லுவானுகில் இதுவும் கூடாது. ஏனெனில், கட்டுதலென்னும் செயலானது அறியப்படாத ஒரு வஸ்துவாயிருக்கிறதினுலேயாம். கசாய்காரனுக்கு ஆட்டுத்தோலைக் கூலியாய்க் கொடுப்பதும், திருகை அரைப்பவனுக்குத் தவிட்டை, அல்லது கொஞ்சம் மாவைக் கூலியாய்க் கொடுப்பதும் கூடாது. இன்னும் எந்தப் பொருள் வேலைக்காரனுடைய தொழிலால் உண்டாகின்றதோ

அந்தப் பொருளை அவனுடைய கூலியில் கொடுப்பது கூடாது. இந்தக் கடையை நான் உனக்கு விட்டேன், நீ எனக்கு ஒவ்வொரு மாதத்திலும் ஒரு தீனார் கொடு என்று சொல்லுவானாகில் இது கூடாது. ஏனென்றால் வாடகையின் முழுகாலம் தெரியாததினாலேயாம். ஆகலால் அது தெரியும்பொருட்டு ஒரு வருஷம் இரண்டு வருஷமென்று குறிப்பிட்டுக்கொள்ளுவான்.

இரண்டாவது ருக்னு மன்பஅத்து அதாவது கூலி அல்லது வாடகை முதலியவைகளுக்குப் பிரத்தியாகிய பயனும். ஆகவே எந்த வேலை முபாஹாயும் அறியப்பட்டதாயும் அதில் ஏதோ கொஞ்சம் பிரயாசையுள்ளதாயும் பதிலாள் வைக்கக்கூடியதாயுமிருக்கிறதோ அந்த வேலையில் இஜாராசெய்வது ஆகும். பின்னர் இதற்கு ஐந்துவிதிகளை அநுசரிக்கவேண்டும்.

முதலாவதுவிதி:—அந்த வேலைக்கு மதிப்பும், கிரயமும் பிரயாசையுமிருக்கவேண்டும். ஆகவே கடையை சிறப்பிப் பகட்டுவதற்காக ஒருவனுடைய தானியத்தை வாடகைக்கு வாங்கினால், அல்லது பிடவையை உலரவைப்பதற்காக மரத்தை வாடகைக்கு வாங்கினால், அல்லது வாசனை முகர்ந்து கொள்ளுவதற்காக சேப்பழத்தை வாடகைக்கு வாங்கினால் இவையெல்லாம் கூடாது. ஏனென்றால் இதற்கு யாதொரு மதிப்பும் கிரயமுமில்லை. இதுவோ கோதுமையின் ஒரு மணியை விற்பதுபோலிருக்கிறது.

ஒருவர்த்தகன் கௌரவம் பொருந்தியவனாயிருக்கிறான். அவன் ஒருவார்த்தை சொல்லுவானாகில் சரக்கு விற்கிறதாயிருக்கிறது. அப்படி விற்கும்பொருட்டு அவன் ஒருவார்த்தை சொல்வதற்காக அவனுக்குக் கூலி நியமிப்பது கூடாது. அந்தக்கூலி ஹறாமாகும். ஏனென்றால், இந்த வேலையில் யாதொரு பிரயாசையில்லாததினாலேயாம். மேலும் விற்பவருக்கும் தரகருக்கும் கொடுக்கிற கூலி ஹலாலாகுவது எப்போதென்றால், அவர்கள் பேசுவதிலும் நடப்பதிலும் பிரயாசையிருக்கவேண்டும். அப்போதும் சாமானிய கூலிக்குமேல் அதிகம் வாஜிபாகாது. ஆகலால், பத்துக்கு அரைகொடுக்கவேண்டுமென்றும், சரக்கின் அளவைக் காட்டவேண்டுமென்றும் (பிரயாசையின் அளவையல்ல) வழக்கம் செய்திருக்கிறார்களே இது ஹறாமாயிருக்கும். ஆகவே விற்பவர்களும் தரகர்களும் இவ்வகையாய் வாங்குகிறபொருள் ஹறாமேயாம். பின்னர் இந்தக் குற்றம் வராதபடி இவர்கள் தங்களைக் காத்துக்கொள்வதற்கு இரண்டுவழிகளுண்டு, முதலாவது:—எதுவென்று



[illegible] கொடுக்கிறார்களோ அதை வாங்கிக்கொள்ளவேண்டும். தகரார் செய்யக்கூடாது. ஆனால் தன் பிரயாசைக்குத் தக்க அளவாய் வாங்கிக்கொள்வான். என்கிலும், அந்தச் சரக்குடைய கிரயத்தின் அளவின்பிரகாரம் வேண்டுமென்று கேட்கமாட்டான். இரண்டாவது:—இந்த வஸ்துவை நான் விற்பேனாகில் (உவமையில்) ஒரு திர்ஹம் அல்லது ஒரு தீனார் வாங்குவேனென்று முன்னாடி சொல்லிவிடுவான். இதற்கு அவன் சம்மதிக்கவேண்டும். கிரயத்தின் பதிலொன்றில் பாதி வாங்குவேன் என்று சொல்லமாட்டான். ஏனென்றால், இது கிரயம் இவ்வளவென்று அறியப்படாத சங்கதியாயிருக்கிறது. எவ்வளவுக்கு வாங்குவார்களென்பது தெரியவில்லை. ஆகலால் இப்படிச் சொல்வது வீணாகும். அவனுடைய பிரயாசையின் கூலிக்குமேல் ஒன்றும் ஹதியாகாது.

இரண்டாவது விதி:—இஜாரத்தானது ஒரு பொருளினுண்டாகிற பயனைப்பற்றியதாயிருக்கவேண்டும். அந்தப்பொருளையே பற்றியதாயிருக்கக்கூடாது. பின்னர்க் கனிகளைப் புசித்துக் கொள்வதற்காக ஒரு தோட்டத்தை அல்லது திராட்சைப்பந்தலைக் குத்தகைக்கு வாங்கினால், அல்லது பால் கறந்துகொள்வதற்காகப் பசுவை வாடகைக்கு வாங்கினால், அல்லது தீனி போடுகிறதின்பேரில் பாலில் அரைவாசி எடுத்துக்கொள்வதற்காகப் பசுவைப் பால்காரத்துக்கு வாங்கினால் இவை ஒன்றும் கூடாது. ஏனென்றால் கனி, தீனி, பால் இவை அறியப்படாதவைகளாயிருக்கின்றன. ஆனால் குழந்தைக்குப் பால் கொடுப்பதற்காக ஒருபெண்பிள்ளையைக் கூலிக்கு நியமித்தால் ஆகும். ஏனென்றால் இதில் குழந்தையின் பாதுகாப்பே முக்கிய நோக்கமாயிருக்கும். பாலோ அவளைத் தொடர்ந்ததாயிருக்கிறது. இது எழுத்துக்காரனுடைய மையைப்போலும் தையற்காரனுடைய நூலைப்போலுமாம். இந்த அறியப்படாத அளவானது அறியப்பட்ட வேலையினுடைய தொடர்ச்சியினால் ஜாயிஸாகும்.

மூன்றாவது விதி:—செய்ய இயன்றதாயும் முபாஹாயுமிருக்கிற வேலையின்பேரில் இஜாராசெய்யவேண்டும். ஒருவனால் செய்ய இயலாத வேலைக்காக அவனைக் கூலிக்கு நியமிப்பது கூடாது. பள்ளிவாசலைப் பெருக்குவதற்காக ஹைளுக்காரியைக் கூலிக்கு நியமிப்பது கூடாது. ஏனென்றால் பள்ளிவாசலில் புகுத அவளுக்கு ஹறாமாயிருப்பதினாலேயாம். நல்ல பல்லைப் பிடுங்குவதற்காக, அல்லது நல்ல கையை அறுப்பதற்காக, அல்லது பாவஞ்செய்வதற்கு ஆண்பிள்ளையின் காதைக் குத்துவதற்காக ஒருவனைக் கூலிக்கு நியமித்தால் இது

ஆகாது. ஏனென்றால் இவையெல்லாம் ஷரகில் ஆகாதவைகளாயிருக்கின்றன. இப்படியான வேலைகளின்பேரில் கூலி வாங்குவது ஹராமாயிருக்கும். இதுபோலவே பச்சை குத்துகிறவர்களின் கூலியும், ஆண்பிள்ளைகளுக்காகப் பட்டுத்தொப்பி, பட்டுச்சட்டை தைப்பவர்களின் கூலியும் ஹராமாயிருக்கிறது. இப்படியான வேலைகளுக்காக இஜாரத்து கூடாது.

இதுபோலவே ஒருவன் தனக்கு ரஸன்பாஸி யென்னும் ஆட்டத்தைக் கற்பிக்கும்படி ஒருவனைக் கூலிக்கு நியமித்தால் ஹராமாயிருக்கும். அந்த ஆட்டத்தின் வேடிக்கைப் பார்ப்பதும் ஹராமாயிருக்கும். யாராவதொருவன் இந்த ஆட்டத்தை ஆடுவானாகில் அவன் தன் உயிருக்கு அபாயமான வேலையிலிருக்கிறான். வேடிக்கைப் பார்க்க நிற்பவனோ அவனுடைய கொலையில் கூட்டாளுவான். ஏனென்றால், ஜனங்கள் வேடிக்கைப் பார்க்காதபக்ஷம் அவன் தன் பிராணனுக்குச் சேதம் வருகிற வேலையில் விழமாட்டான். ஆதலால் ரஸன்பாஸ், தார்பாஸ் முதலிய கழைக்கூத்தர்களுக்கும் இன்னுமிவைபோல் அபாயமானதும் உபயோகமற்றதுமான ஆட்டத்தை ஆடுகிறவர்களுக்கும் யாராவதொருவன் ஏதாவது கொடுப்பானாகில் பாவியாவான். இதுபோலவே விகடப்பிரசங்கி, சங்கீதவான், புலம்பல்காரர், வசைபாடுகிறபுலவர் இவர்களுக்குக் கூலிகொடுப்பது ஹராமாயிருக்கும்.

தீர்ப்புச் செய்வதற்காக காஜிக்கும், சாட்சியம் சொல்லுவதற்காகச் சாட்சிக்காரனுக்கும் கூலிகொடுப்பது ஹராமாயிருக்கும். ஆனால் காஜியானவன் தன் தீர்ப்பைத் தானே எழுதி அந்த வேலையின்பேரில் கூலி வாங்குவானாகில் ஆகும். ஏனென்றால் தீர்ப்பை எழுதுவது அவன்பேரில் கடமையல்லாததினாலேயாம். எனினும் இது ஆகுமென்பதற்கு விதியாவது, மற்றவர் அந்தத் தீர்ப்பை எழுத அவன் தடைசெய்யாமலிருப்பதாம். தடைசெய்து தானே எழுதுவானாகில் அப்போது ஒரு ஸாஅத்து நேரத்தில் எழுதக்கூடிய தீர்ப்புக்காகப் பத்துதீனார் அல்லது ஒருதீனார் கேட்பானாகில் ஹராமாயிருக்கும். ஆனால் மற்றவர்களைத் தடைசெய்யாமல் பத்துதீனார் கொடுத்தாலே யொழிய நான் கைப்பட எழுதமாட்டேன் என்று சொல்லுவானாகில் இது ஆகும். வேறே யாராவது தீர்ப்புநகல் எழுதி அதில் அவன் கையெழுத்து செய்வதற்காக ஏதாவும் கேட்பானாகில், இன்னும் கையெழுத்துச் செய்வது என்மேல் கடமையல்லவென்பானாகில் இது ஹராமாயிருக்கும். ஏனென்றால், எவ்வளவு வேலையினால் ஜனங்களுடைய பாத்தியதைகள் ஸ்திரப்படுமோ அவ்வளவுவேலை காஜியின்



மேல் கடமையாயிருப்பதே சரி. அப்படிக் கடமையல்லாமற் போனாலும் கையெழுத்து செய்யும் இந்த அற்பப்பிரயாசையானது கோதுமையின் ஒரு வித்துக்குச் சமானமாயிருக்கிறது. இதற்கோர் மதிப்பும் கிரயமுமில்லை. அந்த எழுத்துக்குள்ள மதிப்பு, ஏதனாலென்றால் அது ஹாகிமுடைய எழுத்தென்பதினாலேயாம். அந்தஸ்தின் பொருட்டால் அதிகாரியான ஒருவன் அவ்வந்தஸ்துக்குக் கூலி வாங்குவது கூடாது.

ஆனால் காஜியினிடமிருக்கிற வகீலுடைய கூலிஹலாலாயிருக்கும். இது ஹலாலாவதற்குள்ள விதிகளாவன:—ஒருவன் கொண்டுவந்த வழக்குத் தப்புவழக்கென்று தெரிந்தால் அவன் பக்ஷ வகீலாகக் கூடாது. மேலும் உண்மையான வழக்கென்று தெரிந்தால் அல்லது தப்பு வழக்கென்று தெரியாமலிருந்தால் அந்த வழக்காளியின் பக்ஷம் வகீலாகுவான். பொய்சொல்லக்கூடாது. சூது செய்யக்கூடாது. உண்மையை மறைத்துப்பேசாதிருக்கக்கூடாது. மேலும் தப்பை நீக்க நாட்டங்கொள்ளவேண்டும். உண்மை வெளிபட்டுவிட்டால் சும்மாயிருப்பான். ஆனால் எதை உண்டென்று ஒப்புக்கொள்ளுவதினால் ஒரு பாத்தியம் தப்பிப்போகிறதாயிருக்கிறதோ அதை இல்லையென்று மறுக்கவும் பேசலாகும்.

எனினும், இரண்டு வழக்காளிகளுக்கு நடுவே மத்தியஸ்தனாயிருந்து தீர்ப்புச்செய்கிறவன் இருவரிடத்திலும் ஏதாவது வாங்குவது கூடாது. ஏனென்றால் ஒருவழக்கில் இருவருடைய வேலையைச்செய்ய அவனால் முடியாது. ஆனால் ஒருவனுடைய பக்கத்தில் முயற்சித்து அதில் மதிக்கத்தக்க அளவாய்ப் பிரயாசை யெடுத்துக்கொள்ளுவானாகில் அதற்காக அவனுக்குக் கூலிகொடுப்பது ஹலாலாகும். இதற்கும் அவன் ஹராமாகிய யாதொரு பொய் சொல்லாமலும் சூதுசெய்யாமலும் இருதரத்தாருக்கும் உண்மையை மறைக்காமலுமிருப்பது விதியாகும். இன்னும் அவர்களில் ஒவ்வொருவருக்கும் எப்படிப் பயங்காட்டினால் இருவரும் ராஜியாய்ப்போகப் பிரியப்படுவார்களோ, இன்னும் உண்மையை அறிந்தால் ராஜியாகமாட்டார்களோ அப்படிப் பொய்யாக அவர்களுக்குப் பயங்காட்டக் கூடாது. இப்படிப்பட்ட மத்தியஸ்தனால் பெரும்பான்மையில் சமாதானமுண்டாகாது. மிகுந்த பஞ்சாயத்துகளில் ஹராமும், பொய், அநீதம், சூது இவைகளில்லாமலிருக்கிறதில்லை. ஆதலால் அதன் கூலி ஹராமாயிருக்கும். மத்தியஸ்தன் எப்போது ஒருபக்கத்தில் பாத்தியமிருக்கிறதாய்த் தெரிந்துகொண்டானோ அப்போது அந்தப்பாத்தியக்காரனை யேமாற்றி அவன்தன் பாத்

கியைதவிற்கொஞ்சத்தை விட்டு ராஜியாய்ப் போகும்படித் தந்திரம் செய்வது கூடாது. ஆனால் அவர்களில் எவன் அநீதம் செய்வான் என்று தெரிகின்றதோ அவன் அப்படிச் செய்யாதிருக்கும்பொருட்டுத் தந்திரத்தினால் அவனைப் பயமுறுத்த மத்தியஸ்தனுக்கு இஷ்டமிருந்தால் அப்படிச் செய்துகொள்ளலாம்.

எவனொருவன் யார்க்கு நேரியுள்ளவனா யிருக்கிறானோ அவன் தான் சொல்லுகிற ஒவ்வொரு வார்த்தையையும் குறித்து, ஏன் சொன்னாய்? எதற்காகச் சொன்னாய்? மெய் சொன்னாயா? பொய் சொன்னாயா? இது விஷயத்தில் உனக்கு நல்ல எண்ண மிருந்ததா? கெட்ட எண்ண மிருந்ததா? என்று தன்னைக் கேட்கப்படுமென்பதை உணர்ந்திருக்கின்றானதினால் இப்படிப்பட்டவன் மத்தியஸ்தம் பண்ணவும் வகில் வேலை பார்க்கவும் வழக்குத் தீர்க்கவும் முடியாது.

ஆனால் அமீர்களான பிரபுக்களிடத்தில் யாரைப்பற்றியாவது சிபாரிசு செய்கிற ஒருவன் அதற்காகப் பிரயாசை யெடுத்திருந்து அதன்மேல் கூலி வாங்குவானாகில் ஆகும். இதற்கு விதியாவது அவன் செய்த வேலையில் கஷ்டமிருக்கவேண்டும். தனது கவுரவத்துக்குப் பகரமாய் வாங்கமாட்டான். இன்னும் ஆகுமான வேலைக்காக சிபாரிசு செய்திருக்கவேண்டும். அதிகாரனுக்கு உதவியாய் அல்லது ஹராமான பதவியா கிடைப்பதற்காகப் பரிந்து பேசியிருப்பானாகில், அல்லது உண்மையான சாட்சியத்தை மறைப்பதற்காக அல்லது ஹராமான வேலைக்காக சிபாரிசு செய்வானாகில் பாவியாகுவான். அதற்காக வாங்கும் கூலியும் ஹராமாகும். இதாரா விஷயமாய் இந்த எல்லா வகைகளையும் அறிவது அவசியமாயிருக்கும். ஏனென்றால், கொடுக்கிறவனும் வாங்குகிறவனும் இருவரும் பாவியாகிறார்களென்க. இதை விரித்தால் பெருகும். என்கிலும் இவ்வளவு சொன்னதினால் கஷ்டமான யாதொரு மஸ்அலா வந்து நேரும்போது சாமானியன் இது நமக்குத் தெரியாத விஷயமென்றுணர்ந்து இதைக் கேட்டுத் தெரிவது அவசியமென்று தெரிந்துகொள்ளுவான்.

நான்காவது விதி:—அந்த வேலை அவன்மேல் கடமையல்லாததாயும் பதிலாள் வைத்துச் செய்யக்கூடியதாயு மிருக்கவேண்டும். (காபிர்களோடு) யுத்தம் செய்வதற்காக யுத்தவீரனைக் கூலிக்கு நியமித்தல் கூடாது. ஏனென்றால், அந்த வீரன் அமர்க்களத்தில் வந்துவிட்டால் அவன்தானே யுத்தஞ்செய்யக் கடமைப்பட்டவனா யிருப்பதினாலென்க. காழியுடைய கூலியும் ரஆயியுடைய கூலியும் ஆகாதென்பதற்குக்



காரணம் இதுதான். தனக்குப் பதிலாய்த் தொழுவதற்காக அல்லது நோன்பு வைப்பதற்காக ஒருவனைக் கூலிக்கு நியமித்தால் கூடாது. ஏனென்றால் இந்த வேலையில் பதிலாள் வைப்பது செல்லாது. சுகப்படுமென்ற நம்பிக்கையில்லாத படுக்கையாய்க் கிடக்கிற வியாதியஸ்தன் பதிலாள் வைத்து ஹஜ்ஜு செய்வது கூடுமாதலால் அப்படி ஹஜ்ஜு செய்பவன் அவனிடத்தில் கூலிவாங்குவது ஆகும்.

குர்ஆன் ஓதிக்கொடுப்பதற்காக அல்லது குறிப்பான ஒரு இல்மைப் படித்துக் கொடுப்பதற்காக ஒருவனைக் கூலிக்கு நியமிப்பது ஆகும். கபுரு தோண்டவும் மய்யித்தைக் குளிப்பாட்டவும் ஜனாஸாவைத் தூக்கிச் சுமக்கவும் கூலிகொடுப்பது ஆகும். இது பர்ளுகிபாயா வாயிருந்தாலும் சரியே. என்கிலும், தராவீஹு தொழுகையுடைய இமாமத்தின் கூலியைப்பற்றியும் பாங்கு சொல்லுதலின் கூலியைப்பற்றியும் உலமாக்களில் வித்தியாசமிருக்கிறது. ஆயினும் அது ஹராமல்லவென்பதே சஹீஹாயிருக்கும். இந்தக் கூலியானது அவன் நேரங்காத்துப் பள்ளிவாசலுக்கு ஹாஜிராகிறானே அந்தக் கஷ்டத்துக்குப் பிரதியா யிருக்கிறது. தொழுகைக்கும் பாங்குக்கும் பிரதியல்ல. என்றாலும் இந்தக் கூலி கராஹத்தையும் ஷுப்ஹத்தையும் விட்டொழிந்ததல்ல.

ஐந்தாவது விதி:—அந்த வேலை இன்ன வேலையென்று அறியப்பட்டிருக்கவேண்டும். ஒருவன் ஒரு மிருகத்தைக் கூலிக்குப் பிடித்தால் அவன் அதைப் பார்த்துக்கொள்ளவேண்டும். அந்த மிருகத்துக்குடையவன் அதன்மேல் ஏற்றப்படும் சுமை எவ்வளவென்பதையும், எப்போது ஏற்றப்படுமென்பதையும், எவ்வளவு தூரம் தினமொன்றுக்கு நடக்குமென்பதையும் தெரிந்துகொள்ள வேண்டும். ஆனால் இது விஷயத்தில் அறியப்பட்ட ஓர் வழக்கமிருந்தால் அதுபோதும். ஒரு பூமியை நிர்வைக்கு வாங்கினால் அதில் விதைப்பது இன்னதென்று சொல்லவேண்டும். ஏனென்றால், கோதுமை விதைப்பதினாலுண்டாகிற நஷ்டத்திலும் பூமிக்குத் தினை விதைப்பதினாலுண்டாகிற நஷ்டம் அதிகமாதலாலென்க. ஆனால் வழக்கத்தில் அறியப்பட்டிருக்கும் பக்ஷத்தில் அவசியமில்லை.

இதுபோலவே எல்லா இஜாரத்துகளிலும் இல்முல்அறியவும் வேண்டியதா யிருக்கிறது. ஏனென்றால் அதைக்குறித்து விவாதம் நேரிடாமலிருக்கவேயாம். எந்த இஜாரத்தைப்பற்றிய இல்மு தெரியவில்லையோ அந்த இஜாரத்தில் விவாதம் நேரிடக் கூடுமாகையால் அப்படிப்பட்ட இஜாரத்து ஆகாது.

## ஐந்தாவது - கிராஸ் என்னும் ஸஹதுபக்ஷ — அதாவது ஒருவனுடைய முதலும் மற்றொருவனுடைய பிரயாசையுமாய் நடக்கும் பேரம்.

இதற்கு மூன்று ருகுனுகளுண்டு. முதலாவது ருகுனு:—வர்த்தகத்துக்காக வைக்கும் முதலாயிருக்கும். இது பொன் அல்லது வெள்ளி நாணயமாயிருக்கவேண்டும். வெள்ளித்தகடு, பிடைவை, மற்றும் சாமான்களை முதலாய் வைக்கக்கூடாது. அதன் நிறையும் தெரிந்திருக்கவேண்டும். இன்னும் வர்த்தகம் நடத்தும் ஆமிலாகிய அந்த மனிதனிடத்தில் அந்த முதலைக் கொடுத்துவிடவேண்டும், முதலாளியானவன் அந்த முதல் தன்வசமே யிருக்கவேண்டுமென்று சொல்லுவானாகில் இந்த பேரம் கூடாது.

இரண்டாவது ருகுனு:—இலாபமாயிருக்கும். அதாவது வர்த்தகம் நடத்தும் ஆமிலுக்கு இலாபத்தில் கிடைப்பது உவமைக்கு அரைவாசி அல்லது மூன்றிலொருபங்கு என்பது தெரியவேண்டும். எனக்கு அல்லது உனக்குப் பத்து திருஹம் போக மீதியைப் பங்கிட்டுக்கொள்ளவேண்டுமென்று சொல்லுவானாகில் இது கூடாது.

மூன்றாவது ருகுனு:—பிரயாசையாயிருக்கும். இதற்கு விதியாவது அந்தப் பிரயாசை வர்த்தக சம்பந்தமானதாயிருக்கவேண்டும். கைத்தொழிலாயிருக்கக்கூடாது. ரொட்டி சுட்டு விற்கும்படி ரொட்டிக்காரனுக்குக் கோதுமையைக் கொடுத்து இலாபத்தில் பாதியென்று சொல்லுவானாகில் இது கூடாது. இதே விதமாய் கத்தான் விதையை (அல்லது எள்ளை) வாணியனுக்குக் கொடுப்பானாகில் கூடாது. இன்னும் வர்த்தகம் நடத்துவதில் இன்னானிடத்திலேயே வாங்கு, இன்னானிடத்திலேயே வில் என்று முதலாளி ஓர் நிபந்தனை ஏற்படுத்தினால் இது கட்டுப்படுத்துவதாயிருக்கும். இது செல்லாது. விற்கல் வாங்கல்களில் நெருக்கத்தை யுண்டாக்குகிற எந்த நிபந்தனையும் கூடாது.

இந்த பேரத்தில் (முதலாளியும் ஆமிலும் மூன்றாவது பேசிக்கொள்ளவேண்டிய) முடிவாவது. முதலாளி ஆமிலைப் பார்த்து, "இந்த முதலை நான் உனக்கு வர்த்தகத்துக்காகக் கொடுத்தேன். இதனால் நீ வர்த்தகம் செய்து வரும் இலாபத்தில் ஆளுக்குப் பாதியாய் எடுத்துக்கொள்ளுவோம்" என்று சொல்லவேண்டும். இதை நான் கபூல்செய்தேன் என்று அவன் சம்மதிக்கவேண்டும். எப்போது ஆமில் இந்த முடிவை ஏற்றுக்கொண்டானோ அப்போது அவன் வாங்கல் விற்கல் முதலிய வியவகாரங்களைச் செய்வதில் முதலாளிக்கு வகீலாய்ப் போனான். இந்த பேரமானபோது * பஸகு செய்துகொள்ளலாகும்.

* பஸகு - நீக்கிவிடல், நீக்கல்.



முதலாளி எப்போது பஸகு செய்தானோ அப்போது முதலும் இலாபமும் எல்லாம் ரொக்க நாணயமாயிருந்தால் இருவரும் இலாபத்தைப் பங்கிட்டுக்கொள்ளுவார்கள். முதலானது சரக்காயிருந்து இலாபம் ஒன்றுமில்லையானால் அதை முதலாளிவசம் ஒப்புக்கொடுத்துவிடுவான். அதை விற்றுக்கொடுப்பது அவன்மேல் கடமையல்ல. அதை அவன் விற்க நாடினால் முதலாளி தடை செய்யலாம். ஆனால் ஒரு வர்த்தகன் வந்து இலாபங்கொடுத்து அதை வாங்குகிறானென்று தெரிந்தால் முதலாளி தடைசெய்யக் கூடாது. முதலும் இலாபமும் சரக்காயிருந்தால் வைத்த முதல் (பொன்னோ அல்லது வெள்ளியோ) எதுவோ அதே நாணயத்துக்குச் சரக்கை விற்பது அவன்மேல் கடமையாகும். வேறு நாணயத்துக்கல்ல. வைத்த முதலுக்குப் போதுமான சரக்கை விற்று ரொக்கமாக்கினால் மீதியான சரக்கைப் பாகித்துக்கொள்ளுவார்கள். அதை விற்பது அவன்மேல் கடமையாகாது. ஒருவருஷம் சென்றால் ஸக்காத்து கொடுப்பதற்காகச் சரக்கின் கிரயம் இவ்வளவென்று தெரிந்துகொள்ளுவது கடமையாகும். ஆமிலுடைய பங்குக்குள்ள ஸக்காத்து ஆமில்பேரிலாயிருக்கும்.

முதலாளியுடைய அநுமதியில்லாமல் ஆமிலானவன் சபர் செய்யக்கூடாது. அப்படிச்செய்வானாகில் முதலில் நேரிடும் நஷ்டத்துக்குப் பிணையாகுவான். அநுமதியின்மேல் சபர் செய்தால் எப்படி அளக்குங்கூலி, நிறுக்குங்கூலி, எடுக்குங்கூலி, கடைவாடகை முதலிய செலவுகள் வர்த்தக முதலைப் பொருக்குமோ அப்படியே வழிச்செலவும் வர்த்தக முதலைப்பொருக்கும். சபரிலிருந்து எப்போது அவன் திரும்பி வந்தானோ அப்போது சுபுரா, தண்ணீர் பாத்திரம் இன்னும் இப்படி எந்தெந்தப் பொருளை வர்த்தக முதலிலிருந்தும் வாங்கியிருக்கிறானோ அந்தப் பொருள்கள் வர்த்தக முதலைச் சேரும்.

## ஆறாவது - கூட்டுபேரம்.

முதலானது இரண்டுபேருக் குள்ளதாயிருந்தால் அதில் அநுபோகம் செய்ய ஒருவருக்கொருவர் உத்திரவு கொடுப்பது கூட்டுபேரமாம். இருவருடைய முதலும் சரிசரியாயிருந்தால் இலாபம் பேரில் பாதியாயிருக்கும். சரிசரியாயில்லாமல் குறையவும் கூடவுமாயிருந்தால் இலாபம் அதேவிதமாகும். முறைபோட்டு வியங்கிறதென்ற ஏற்பாடு கூடாது. ஆனால் ஒருவனே வேலைபார்த்து அந்தவேலை காரணமாகத் தனக்கு இலாபத்தில் அதிகமாய்க் கொடுக்கிறதென்று ஏற்பாடு செய்து கொள்ளலாம். இது இருவருடைய முதலால் நடத்தும் கூட்டுபேரமாயிருப்பதுடன் ஒருவருடைய பிரயாசையில் நடக்கும் பேர

மமாயிருக்கிறது. ஆனால் ஜனங்களிடையே கூட்டுவியாபாரங்கள் வழங்கி வருகின்றனவே, அவை ஆகா. முதலாவது:—கைத்தொழிற் தொழிலாளிகள் இவர்கள் தங்களுக்குள் நாம் வேலைசெய்து எது சம்பாதிக்கிறோமோ அது பொருளில் நம்மெல்லாருக்கும் பங்காயிருக்கிறதென்று ஏற்பாடு செய்து கொள்வதாம். இந்தக் கூட்டு ஆகாது. ஏனென்றால், யார் யார் எது சம்பாதிக்கிறார்களோ அது அவரவருக்கே சொந்த பாத்தியமுள்ளதாயிருப்பதினாலேயாம். இரண்டாவது:—இருவரிடத்தில் ஏதுமொன்றிருக்கிறதோ அதை ஒருவருக்கொருவர் எதிரில்கொண்டுவந்து வைத்து இலாபமோ நஷ்டமோ எதுவோ அதில் நாமிருவரும் கூட்டாளிகளென்று சொல்லுவதாம். இதுவுங் கூடாது. மூன்றாவது:—முதலில்லா ஒருவனும் கௌரவமுள்ள ஒருவனும் சேர்ந்து கௌரவமுள்ளவன் சொல்லுகிறபடி இவன் விற்கிறதும் இந்தச் சொல்லுக்காக இலாபத்தில் அவனுக்குப் பங்கு கொடுப்பதுமாம். இதுவும் ஆகாது.

முஆமலாத்தென்னும் மேற்சொல்லிவந்த பேரங்களின் விஷயமாய் இவ்வளவு இல்மைக் கற்றுக்கொள்ளுவது கடமையாயிருக்கும். ஏனென்றால் இது தேவையாகுவது எல்லாருக்கும் பொதுமையாயிருப்பதினாலேயாம். எனினும் இதிற் சொல்லப்படாதது மிகவும் அருமையாய்ச் சம்பவிக்கும். இவ்வளவைத் தெரிந்துகொண்டால் அருமையாய்ச் சம்பவிக்கிற விஷயத்தைக் கேட்டுத் தெரிந்துகொள்ளக் கூடியவனாயிருக்கிறான். இவ்வளவை அறியாமற் போனால் ஹறாமில் விழுவான். அது அவனுக்குத் தெரியாமலிருக்கும். அப்போது தெரியாதென்று சொல்லும் சமாதானம் ஏற்றுக் கொள்ளப்படாது.

## மூன்றாவதுபாபு - முஆமலாவில் நீதத்தைக் கவனிப்பதின் பயான்.

அறிந்துகொள்:—மேற்சொல்லியவைகள் வாஜிபு ஷரஇன்படி முஆமலாவில் பஸாதம் முதலிய தோஷங்கள் வராதிருப்பதற்குள்ள விதிகளாயிருக்கின. அநேகம் முஆமலா எப்படி யிருக்கிறதென்றால், இது ஆகுமென்று அந்த விஷயத்தில் நாம் பத்வா கொடுக்கிறோம். ஆனால் அந்தமனிதன் அல்லாஹுத்தஆலாவுடைய லஃனத்திலாகிறான். அது எந்த முஆமலாவென்றால் எதில் முஸ்லிம்களுக்குக் கஷ்ட நஷ்டங்கள் உண்டாகின்றனவோ அதுவேயாம். இந்தக் கஷ்ட நஷ்டம் பொது ஜனங்களைப் பற்றியதென்றும் குறிப்பானவர்களைப் பற்றியதென்றும் இருவகைப்படும். பின்னப் பொது ஜனங்களைப் பற்றியதும் இருவகையாயிருக்கின்றன.



முதலாவது வகை:—இஹ்திகாராயிருக்கும். அதாவது உணவுப் பொருளாகிய தானியத்தை எடுத்துக்கட்டுவதாம். முஹ்தகிரானவன் லஃனத்து பெற்றவனாயிருக்கும். முஹ்தகிர் என்பவன் யாரென்றால், கிராக்கியான பிறகு விற்பதற்காகத் தானியத்தை வாங்கிக் கட்டுகிறவனே முஹ்தகிர் எனப்படுவான். நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் தங்கள் திருவாயினால், "யாராவதொருவன் கிராக்கியான சமயத்தில் விற்பதற்கென்று தானியத்தை வாங்கி நாற்பது நாள் கட்டிவைப்பானாகில் அவன் அந்தத்தானியம் முழுமையும் ஸதகா செய்தாலும் அந்தப்பாதகத்துக்குத் தண்டமாகாது" என்றும், இன்னும் "யாராவதொருவன் தானியத்தை நாற்பதுநாள் கட்டிவைப்பானாகில் அல்லாஹுத்தஆலா அவனையும் அவன் அல்லாஹுத்தஆலாவையும் வெறுத்திருக்கிறான்" என்றும் திருவுளமா யிருக்கிறார்கள். இன்னும் "யாராவதொருவன் தானியத்தை வாங்கி ஓர் பட்டணத்துக்குக் கொண்டுபோய் அப்போதுள்ள விலையின்படி விற்பானாகில் அவன் அதை ஸதகாகொடுத்தவன்போலாகுவான்" என்றும் திருவுளமாயிருக்கிறார்கள். ஒரு அடிமையை உரிமையாக்கினவன்போலாகுவானென்றும் ஒரு ரிவாயத்தில் வந்திருக்கிறது. இன்னும் "யாராவதொருவன் தானியத்தை நாற்பதுநாள் வைப்பானாகில் அவன் மனம் கறுத்துப் போகும்" என்று அலி றலியல்லாஹு அன்ஹு சொல்லியிருக்கிறார்கள். இன்னும் இவர்களிடத்தில் ஒரு முஹ்தகிருடைய தானியத்தைப் பற்றி அறிவித்தபோது அதில் நெருப்புவைத்துக் கொளுத்தும்படி ஆக்கியாபித்தார்கள்.

முன்னுள்ள பெரியோர்களில்நின்றும் ஒருவர் ஏதோ தானியத்தைத் தம்முடைய வகீல் வசம் ஒப்புவித்து அதை விற்றுவரும்படி வாஸித்தென்னு மூரிலிருந்து பஸராவுக்கு அனுப்பிவைத்தார். வகீல் அங்குபோகிறபோது தானியம் மிகவும் சலகமாயிருந்தது. அதனால் அவர் அங்கு ஒருவாரம் வரையில் காத்திருந்து பிறகு நல்ல இலாபத்துக்கு விற்றார். இந்தச் சங்கதியை அந்தப் பெரியோருக்கு எழுதித் தெரியப்படுத்தினார். அதற்கந்தப் பெரியவர் எழுதின ஜவாபாவது:—"தீனுடைய ஸலாமத்துடன் கொஞ்ச லாபம் போதுமென்று நாம் பொருந்தியிருந்தோம். அதிக லாபத்தை ஆசித்து நீ நம்முடைய தீனைக் கைவிட்டது நியாயமா யிருக்கவில்லை. நீ செய்த இந்த வேலையானது பெரிய பாதகமாயிருக்கிறது. இந்தப்பாதகத்துக்குத் தண்டமாக நீ எல்லா முதலையும் ஸதகா கொடுத்துவிடவேண்டும். கொடுத்தாலும் நாம் இந்தப் பாதகத்திலின்று முற்றும் தப்புவது கஷ்டமேயாம்" என்பதே.

தானியம் வாங்கிக் கட்டுவதை ஹறாமாக்கினதற்குக் காரணம் யாதெனில், அதனால் ஜனங்களுக்குக் கஷ்ட முண்டாகிறதென்பதே காரணமாம். ஏனென்றால், ஜனங்களுடைய ஜீவிப்பானது உணவைக் கொண்டாயிருக்கிறது. அதை விற்கிற பக்ஷம் எல்லாரும் வாங்கலாம். ஒருவனே வாங்கிக் கட்டிக்கொண்டால் மற்றவருக்கு அது கிடைக்காமல் போகிறது. இதானது எல்லாருக்கும் முபாஹாயிருக்கிற தண்ணீரை, ஜனங்களுக்குத் தாகமுண்டானால் அதிக விலை கொடுத்து வாங்குவார்களென்று நிய்யத்துடன் ஒருவன் பிடித்துக்கட்டிக்கொள்வதுபோலிருக்கிறது. இந்த நிய்யத்துடன் தானியம் முதலிய உணவுப்பொருள்களை வாங்கிக்கட்டுவதுதான் பாவம். பயிரிடுகிற ஒரு சிற்றூரானிடத்தில் அவனுக்குச் சொந்தமான தானியமிருந்தால் அவன் தனக்கிஷ்டமானபோது அதை விற்கலாம். சீக்கிரத்தில் விற்கப்போவது அவன்மேல் கடமையல்ல. ஆயினும் தாமதிக்காமல் விற்றுவிடுவானாகில் சிறப்பு ஏற்றமேயாம். கிராக்கியாக வேண்டுமென்ற எண்ணமிருக்குமாகில் இது கெட்ட எண்ணமாயிருக்கும்.

உணவுப்பொருளாகிய தானியத்தை வாங்கிக்கட்டல் ஹறாமாகுவது எப்போதென்றால், தானியம் கிடைப்பது கஷ்டமாயிருக்கும் போதுதான். அப்படியில்லாமல் இஷ்டமானபோது வாங்கிக்கொள்ள எவருக்கும் எளிதாயிருக்கும் பக்ஷத்தில் அப்போது கட்டிவைப்பது ஹறாமாகாது. ஏனென்றால், அதில் யாருக்கும் கஷ்டமில்லையாதலாலென்க. இன்னும் எப்படிப்பட்ட காலத்திலும் எடுத்துக்கட்டுவது ஹறாமாகுமென்று உலமாக்களில் ஒரு கூட்டம் சொல்லியிருக்கிறது. என்றாலும் அப்போது இது மக்றூஹாயிருப்பதே சரியாயிருக்கும். ஏனென்றால், மொத்தத்தில் அவன் கிராக்கியாகுமென்பதை எதிர்பார்ப்பவனாகுவான். ஜனங்களுக்குக் கஷ்டமுண்டாகிற ஒரு காரியத்தை எதிர்பார்ப்பது கெட்டதாயிருக்கும்.

ஸலபுகளென்னும் முற்காலத்துப் பெரியோர்கள் இருவிதமான வர்த்தகத்தை மக்றூஹாக்கினார்கள். அதில் ஒன்று தானியம் விற்பதாம் மற்றொன்று கபன் புடவை விற்பதாம். ஏனென்றால், இதில் ஜனங்களுக்குக் கஷ்டமுண்டாகுவதையும் அவர்கள் மௌத்தாகுவதையும் எதிர்பார்க்குதல் ஏற்படுகின்றது. இது கெட்டதேயாம். இன்னும் இருவிதமான தொழிலையும் மக்றூஹாக்கினார்கள். அவை கசாபுத்தொழிலும் தட்டாரத்தொழிலுமாம். இதேனெனில், கசாபுத்தொழில் கல்நெஞ்சையாக்குவதினாலும், தட்டாரத்தொழில் துன்யாவைச் சிறப்பித்துக் காட்டுவதினாலுமேயாம்.



இனி பொதுஜன கஷ்டநஷ்டங்களில் இரண்டாவது வகையாகிறது:—முழுமலாவில் செல்லாத பணங்காசுகளைக் கொடுப்பதாம். ஏனென்றால், வாங்குகிறவன் தெரியாமல் வாங்கினால் கொடுத்தவன் அவன்மேல் கொடுமை செய்தவனாகுவான். தெரிந்தபின் ஒருக்கால் அவனும் மற்றொருவனை வஞ்சிக்கப் பார்ப்பான். இப்படியே அந்த மற்றொருவன் வேறொருவனையும், அந்த வேறொருவன் பின்னொருவனையும் வஞ்சித்து, நெடுநாள் வரையில் அது அநேகருடைய கைகளில் வரவும், அவர்களெல்லாருடைய கொடுமையானது அந்த முந்தினவனைச் சாரவும்கூடும். இதனாலேதான் ஒருபெரியோர் பின்வருமாறு சொல்லுகிறார். அதாவது:—"ஒரு செல்லாத திர்ஹத்தை ஒருவருக்குக் கொடுப்பது நூறு திர்ஹங்களைத் திருடுவதினும் கெட்டதாயிருக்கும். அதேனென்றால், திருடுகிற பாவம் அந்த நேரத்தோடு முடிகிறது. செல்லாப் பணத்தைக் கொடுக்கும் பாவமோ அவனுடைய மௌத்துக்குப் பிறகும் நடைபெறக்கூடும். தான் மரித்தும் தனது பாவமொழியாத மனிதன் எவனோ அவனே மூதேவியாம். ஒருக்கால் நூறு இருநூறு வருஷங்கள் வரையில் இந்தக்கொடுமை நடைபெற்று வரவும், இது இப்படி நடைபெற இவன் மூலகாரணனாயிருந்த நிமித்தம் இவனை கபுரில் அதாபு செய்துகொண்டிருக்கவும் கூடும்" என்பதே.

செல்லாத வெள்ளிநாணயம் பொன் நாணயங்களில் நாலுவிஷயங்கள் தெரிந்திருப்பது அவசியமாகும். முதலாவது விஷயம்:—செல்லாத நாணயம் கிடைத்தால் அதைக் கிணற்றில் போட்டுவிடவேண்டும். செல்லாததென்று சொல்லியாவது அதை ஒருவனுக்குக் கொடுப்பது தகாது. ஏனென்றால், ஒரு சமயம் அவன் மற்றொருவனை வஞ்சிக்கவும் கூடுமாதலாலென்க. இரண்டாவது விஷயம்:—வர்த்தகம் செய்கிறவன் நாணயங்களைப் பரிசோதித்தறியும் இல்மைக்கற்றுக்கொள்வது கடமையாகும்; அதாவது-செல்லாத கெட்ட நாணயம் இன்னது என்று அறிந்திருப்பதாம். இது எதற்கென்றால் தான் அதை வாங்காமலிருப்பதற்கல்ல. மேலும் பிசகாக அதைப் பிறருக்குக் கொடுக்காமலிருக்கவும், முஸ்லிம்களுடைய ஹக்கைப் பழுதாக்காமலிருக்கவுமேயாம். யாராவதொருவன் இந்த இல்மைத் தெரிந்துகொள்ளாத பிசகினால் அவன் கையிலிருந்து அது மற்றவருடைய கையில் வருமாகில் அவன் பாவியாகுவான். ஏனென்றால், எவன் எந்தத் தொழிலைச் செய்கிறானோ அவன் அந்தத் தொழிலைப்பற்றின இல்மைக் கற்றுக்கொள்ளக் கடமைப்பட்டவனாயிருப்பதினாலென்க. மூன்றாவது விஷயம்:—ரொக்கல் வாங்கல்களை இலேசாகநினைத்தவன்மேல் அல்லாகுதஆலா ற

மத்து செய்வான்" என்று நாயகம் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறபடி தானும் இலேசாக்கி வைப்பதை நியமத்து செய்து ஒருவன் செல்லாத பணத்தை வாங்குவானாகில் இது நன்மையாகும். என்கினும் அதைக் கிணற்றில் போட்டுவிட நாட்டம்வைத்து வாங்கவேண்டும். செலவில் கொண்டுபோக நாடுவது அழகல்ல. இது செல்லாததென்று அதை ஒருவனுக்குக் கொடுக்கிறபோது சொன்னாலுஞ் சரியே. நாலாவது விஷயம்:—எதில்வெள்ளி அல்லது பொன்னென்பதே இல்லாமல் தப்புநாணயமாயிருக்கிறதோ அதுவே செல்லாத நாணயமென்னப்படும். ஆனால் பொன் அல்லது வெள்ளி நாணயமாயிருந்து அதில் ஏதாவது பழுதிருந்தால் அதைக் கிணற்றில் போட்டுவிடுவது வாஜிபாகாது. மேலும் அதைச் செலவில் கொண்டுவருகிற பக்ஷம் இரண்டு காரியம் வாஜிபாகும். அவற்றுள் ஒன்று - இது இத்தன்மையுடையதென மறைக்காமற் சொல்லிவிடுவதும், மற்றொன்று - பிறரை வஞ்சிக்கமாட்டானென்று எவனை நம்புகின்றோமோ அவனுக்கு அதைக் கொடுப்பதுமாம். இவன் பிறரை மோசஞ் செய்வானென்று தெரிந்து அவனுக்குக் கொடுப்பானாகில், இதானது ஒருவன் சாராயம் செய்வானென்று தெரிந்து அவனுக்குத் திராட்சைப்பழத்தை விற்பதுபோலும், வழிப்பறி செய்வானென்று தெரிந்து அவனுக்கு வாளை விற்பதுபோலுமாகும். இப்போ ஹராமாயிருக்கிறது. முஆமலாவில் விசுவாசமாய் நடப்பது கஷ்டமாயிருப்பதினாலேயே விசுவாசியான வர்த்தகன் விசாலமுள்ள ஆகிறத்துமேல் ஷரீகையுடையவன் என்று ஸஹாபாக்களான முன்னோர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

இரண்டாவது வகை:—குறிப்பானவர்களைப் பற்றிய கொடுமையாம். இது யாரிடத்தில் முஆமலாச் செய்யப்படுகிறதோ அவர்கள் மேலன்றி மற்றவர்கள்மேல் ஏற்படுவதல்ல. எந்த முஆமலாவில் யாதொருவருக்கு முண்டாகுமோ அது கொடுமையாயும் ஹராமாயுமிருக்கும். அதாவது பிறர் தனக்குச் செய்யத் தான் பொருந்தாத ஒரு காரியத்தைத் தானுமொரு முஸ்லிமுக்குச் செய்யக்கூடாதென்பதே இதன் கருத்து. யாராவதொருவன் தனக்குப் பிரியமில்லாத ஒன்றை ஒரு முஸ்லிமுக்கு ஆக்கி வைப்பானாகில் அவனுடைய ஈமான் நிறப்பமானதாகாது.

இனி நாலு வஸ்துக்களை அறிவதினால் இதன் விபரம் தெரியவரும். முதலாவது:—உள்ள வருணிப்புக்குமேல் சரக்கைப்பற்றி அதிகமாய் ஒன்றும் வருணித்துச் சொல்லமாட்டான். ஏனென்றால் இதில் பொய்யும் மோசமும் கொடுமையும் ஏற்படுகின்றன. மேலும் தான்



சொல்லாமலே வாங்குகிறவன் அதன் வருணிப்பைத்தெரிந்துகொள்ளுகிறபக்ஷத்தில் அப்போது அதன் உண்மையான வருணிப்பையும் சொல்லக்கூடாது. ஏனென்றால், இது விருதாவான பேச்சாயிருப்பதினாலேயாம். மனிதனிடத்தில் ஹாலிராயிருக்கிற ஒரு காவலாளி இருந்தேயொழிய அவன் ஒருசொல்லையும் மொழிகிறதில்லை என்று அல்லாகுதஆலா திருவுளமாயிருக்கிறான். இதன் கருத்தாகிறது-மனிதன் பேசுகிற ஒவ்வொரு பேச்சையும் குறித்து எதற்காகப் பேசுகிறாய் என்று அவன் கேட்கப்படுவானென்பதும், விருதாவில் பேசியிருப்பானாகில் அப்போது அவன் யாதொரு சமாதானமும் சொல்லமுடியாதென்பதுமேயாம். சத்தியம் செய்வானாகில் அது பொய்ச்சத்தியமாயிருக்கிறபக்ஷம் பெரும்பாவமாம். மெய்யாயிருந்தால், அற்பகாரியத்துக்காக அல்லாவுடைய நாமத்தைக் கொண்டுவந்தவனாகுவான். இதுவோ சங்கைக் கேடாயிருக்கிறது. அன்றியும் "லாவல்லாஹி, பலாவல்லாஹி" அல்லாவின்மீதாணையாக, இல்லை. அல்லாவின்மீதாணையாக, ஆம் என்கிற வர்த்தகர்மேல் கைசேதம் என்றும், நாளைக்கு மறுநாளைக்கு என்று சொல்லுகிற தொழிலாளிகள்மேல் கைசேதம் என்றும் ஹதீஸில் வந்திருக்கிறது. இன்னும் யாராவதொருவன் சத்தியம் செய்து தன்னுடைய சரக்கைவிற்பானாகில் கியாமத்துநாளில் அல்லாகுதஆலா அவனைப் பார்க்கமாட்டானென்று ஹதீஸில் வந்திருக்கிறது.

ஹிக்காயத்து:—யூனுஸுப்னு உபைது என்பவர் பட்டாடைவிற்கிறவராயும் அதைப்பற்றி யொன்றும் வருணிக்காதவராயுமிருந்தார். ஒருநாள் பட்டாடை வாங்கவந்த ஒருவரிடம் பெட்டியைத் திறந்து பட்டாடையை எடுத்துவைத்தார். அப்போது அவருடைய யானுக்கர், "யாரப்பீ சொர்க்கலோகத்துப் பட்டாடையை எனக்குக் கொடு" என்று சொன்னார். இப்படிச் சொன்னது சரக்கைப்பற்றிய புகழாயிருக்குமென்ற பயத்தினால் அவர் மீண்டும் பெட்டியிலிருந்து பட்டாடையை எடுக்காமல் பெட்டியைப் போட்டுவிட்டார். எடுத்தபட்டாடை விற்கவில்லை.

இரண்டாவது:—சரக்கிலுள்ள எந்தப் பழுதையும் வாங்குகிறவர்களுக்கு மறைக்கக்கூடாது. உள்ள பழுதுகளில் ஒன்றையும் மறைக்காதபடி சரக்கைப் பூராவுக்கும் உண்மையாகக் காட்டிவிடவேண்டும். மறைப்பானாகில் அவன் மோசம் செய்தவனென்றும், நஸீஹத்தை அலட்சியம் செய்தவனென்றுமாகிக் கொடியவனும் பாதகனுமாய்ப் போவான். பிடவை பகட்டாய்த் தெரிவதற்காக அதன் நல்ல புறத்தை அல்லது அதைவிரிப்பில் எடுத்துக்காட்டுவானாகில், அல்லதுமோடு

பேரிடம் இவைகளில் கலந்திருக்கிற ஒரு பால் உருபா-யை மறைத்துக் காட்டுவானாகில் கொடுமைசெய்த பாவியாகுவான். ஒரு நாள் ரசூல்சல்லல்லாகு அலைஹிவசல்லமவர்கள் கோதுமை விற்கக் கொண்டிருந்த ஒரு வர்த்தகனிடம்போய் அவன் கடையிற் கொட்டியிருந்த கோதுமையிற் கையைச் செலுத்தினார்கள். உள்ளே ஈரமாயிருந்ததால் இதென்னவென்று கேட்டார்கள். அதற்கந்த வர்த்தகன் நபியவர்! பனி நனைந்துவிட்டதென்று சொல்ல, அப்போது ரசூல்சல்லல்லாகு அலைஹிவசல்லமவர்கள் அதை ஏன் அப்புறப்படுத்தவில்லை? (அல்லது ஏன் அதை வெளியே தெரியும்படி வைக்கவில்லை) என்றும், யாராவதொருவன் மோசம் செய்வானாகில் அவன் நம்மிற் சேராமல் நமக்குப் புறம்பாகுவான் என்றும் திருவுளமானார்கள். ஒருவர் ஒரு ஒட்டகத்தை முந்நூறு திர்கங்களுக்கு விற்றார். அதன் காலில் ஒரு குற்றமிருந்தது. வாஸிலத்துப்னுல் அஸ்கஉ றழியல்லாகு அன்கு அவ்விடத்தில் நின்றுகொண்டிருந்தார்கள். அதிலிருந்த குற்றம் முதலில் அவர்களுக்குத் தெரியவில்லை. பின்பு அது அவர்களுக்குத் தெரிந்தது. அவர்கள் அதை வாங்கியவரிடத்திற்போய் அதன் காலில் குற்றமிருக்கிறதென்று அறிவித்தார்கள். அவர் திரும்ப வந்து தாம் கொடுத்த முத்ராவைத் திரும்பவும் வாங்கிக்கொண்டார். விற்றவர் வாஸிலத்துப்னுல் அஸ்கஉ றழியல்லாகு அன்குவைப்பார்த்து "நீர் என்னுடைய விற்பனையை ஏன் கெடுத்தீர்?" என்று கேட்டதற்கு அவர்கள் சொன்னதாவது:—"ஒருவன் சரக்கை விற்று அதிலிருக்கிற குற்றத்தை மறைப்பதும், அக்குற்றத்தை அறிந்த மற்றொருவன் அதை அறிவிக்காமலிருப்பதும் ஹறாம் அல்லவென்று ரசூல்சல்லல்லாகு அலைஹிவசல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்களும், இன்னும் நான் முஸ்லிம்களுக்கு நஸீஹத்து செய்துகொண்டிருக்கவேண்டுமென்றும், அவர்கள்மேல் இரக்கமும் தயவுமுள்ளவனாயிருக்கவேண்டுமென்றும், நாயகமவர்கள் என்னிடத்தில் (பைஅத்து) வாக்குறுதி வாங்கியிருப்பதால், இதைமறைப்பது உடன்படிக்கைக்கு மாறுபாடாயிருக்கிறதினாலுமே நான் அப்படிச் செய்தேன்!" என்பதே.

அறிந்துகொள்:—இப்படியாய் வர்த்தகம் செய்வது மிகவும் கஷ்டமாயும் பெரும்பிரயாசையான பாடுகளில் ஒன்றாயுமிருக்கிறது. இது இரண்டு காரியங்களால் இலேசாகும். முதலாவது:—பழுதான சரக்கை வாங்காமலிருப்பதாம். அப்படி வாங்கிவிட்டால் அதை விற்கும்போது சொல்லிவிடலாமென்ற நாட்டமிருக்கவேண்டும். தன்னை யொருவன் மோசஞ்செய்திருந்தால் அது தனக்கு வந்த நஷ்டமென்று இவன்



எண்ணிக்கொள்ளவேண்டும். அந்த நஷ்டத்தை மற்றொருவன்மேல் போட நாட்டங்கொள்ளக்கூடாது. தன்னை மோசஞ் செய்தவன்மேல் இவன் முனிந்து குற்றங் கூறுகின்றானாகையால் இவனை யொருவன் முனிந்து இவன்மேல் குற்றங்கூறும்படி வைத்துக்கொள்ளமாட்டான். மோசஞ்செய்து சம்பாதிப்பதினால் இரணம் ஏறிப்போகாது என்றும், மேலும் அதனால் முதலில்நின்றும் பறக்கத்துமாறிப்போம் என்றும், இலாபமிருக்காது என்றும் எண்ணிக்கொள்வதே இது காரியம் இலேசாகுவதற்கு மூலமாயிருக்கும். வஞ்சித்துக் கொஞ்சங் கொஞ்சமாய்ச் சம்பாதித்துச் சேகரமான பொருளானது ஒருமிக்க நஷ்டமாய்ப்போய், வஞ்சித்த பாவமானது மிஞ்சிய சுமையாயிருக்கும்படி யாதொரு சம்பவமுண்டாகும். இதற்கு உதாரணமாக:—ஒரு மனிதன் நெடுநாளாகப் பாலில் தண்ணீர் கலந்து விற்கிறவனாயிருந்தான். ஒருநாள் திடீரென்று வெள்ளம் வந்து பசுவை அடித்துக்கொண்டு போகின்றது. அப்போது அவன் மகன் தன் தகப்பனை நோக்கி, "தந்தையே! நாம் பாலில் கலந்துக்கொண்டிருந்தோமே அந்தத் தண்ணீர் முழுமையும் ஒன்றாகச்சேர்ந்து வெள்ளமாய்த் திரண்டு வந்து நம் பசுவை அடித்துக்கொண்டுபோகிறது" என்று சொன்னான். இன்னும் "வர்த்தகத்தில் மோசம் நுழைந்தால் பறக்கத்துபோய்விடும்" என்று ரசூல்சல்லல்லாகு அலைஹிவசல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். பறக்கத்தென்பதற்குப் பொருளாகிறது:—ஒருவனிடத்தில் கொஞ்சம் முதல் உண்டாயிருந்து, அதனால் அவன் பயனையடைவான். அதில் அநேகருக்கு முறைத்துண்டாகும். அதிலிருந்து அநேகம் நன்மைகள் விளையும் இதுவே பறக்கத்தென்பதற்குப் பொருளாம். ஒருவனிடம் முதல் அதிகமாயிருக்கும். அது அவனுடைய இகபரங்களின் கேட்டுக்குக் காரணமாயும் அதனால் யாதொரு பயனுண்டாகாமலு மிருக்கும். ஆதலால் அதிகத்தையல்ல பறக்கத்தையே தேடுவான். பறக்கத்தோ அமானத்தில் இருக்கிறது. மேலும் அமானத்தில் (பறக்கத்து மாத்திரமல்ல) பொருள அதிகரித்தலு மிருக்கிறது. ஏனென்றால், ஒருவர்த்தகன் விசுவாசியாயிருக்கிறானென்று பிரஸ்தாபமாகிறபக்ஷத்தில் அப்போது எல்லாரும் அவனிடம் வர்த்தகம் செய்ய விருப்பங்கொள்ளுவார்கள். அவனுக்கு இலாபம் அதிகமாய்க் கிடைக்கும். எவனொருவன் மோசக்காரனென்று பேர்பெற்றிருக்கிறானோ அவனிடம் ஒருவரும் நெருங்கமாட்டார்கள்.

இரண்டாவது காரியம்:—அவன் தன் மனதில் என் வயசு நூறுக்குமேல் அதிகமாகாது என்றும், ஆகிறத்துடைய வாழ்க்கைக்கு முடி-

இல்லையென்றும் எண்ணிக்கொள்ள வேண்டும். இப்படி எண்ணு கிறவன் இந்த அற்பகாலப் பிரபஞ்ச வாழ்க்கையில் பொன் வெள்ளி முதலிய பொருளை அதிகமாய்ச் சம்பாதிப்பதற்காக முடிவில்லாத நித்திய வாழ்க்கையைத் தன்மீது நஷ்டமாக்கிக்கொள்ள எப்படிச் சம் மதிப்பான். ஆதலால், ரூபா வராகன் முதலியவை அவன் மனதுக்கு இனிமையாகாமல் வெறுப்பாய்ப் போகும்படி அவன் எப்போதும் இந்த எண்ணத்தைப் புதுப்பித்துக்கொண்டிருப்பான். றசூல் ஸல்லல் லாகு அலைகிவசல்லமவர்கள் தங்கள் திருவாயினால், ஜனங்கள் அல்லாகு தஆலாவுடைய கோபத்தைவிட்டும் லாஇலாஹ இல்லல்லாஹு என்ற கலிமாவின் அடைக்கலத்தி லிருக்கிறார்கள். அவர்கள் தீனிலும் துன்யாவை முற்படுத்தா திருக்கிறவரையில் என்றும், துன்யாவை முற்படுத்தியபோது கலிமாவைச் சொன்னால் அப்போது அல்லாகு தஆலா நீ பொய்சொன்னாய் மெய்சொல்லவில்லையென்று சொல்லுகிறான் என்றும் திருவுளமாயிருக்கிறார்கள். வர்த்தகத்தில் வஞ்சகம் செய்யாம லிருப்பது எப்படி பர்லாயிருக்கிறதோ அப்படியே எல்லாத்தொழில் களிலும் அது பர்லா யிருக்கிறது. சூதான தொழில்செய்வது ஹறா மாயிருக்கும். ஹஸ்ரத்து இமாம் அஹ்மது ஹம்பல் றஹிமஹுல்லா அவர்க ளிடத்தில் கிழிந்த உடைக்கு இழைபோட்டும் தொழிலைப்பற்றி மஸ்அலா கேட்டதற்கு அந்தத் தொழில் கூடாது என்றும், ஆனால் விற்பதற்கல்லாமல் தான் உடுப்பதற்காக ஒருவன் இழைபோட்டுக் கொள்வானாகில் ஆகுமென்றும், ஏமாற்றுவதற்காக இழைபோட்டுவா னாகில் அவன் பாவியாகுவான் என்றும், அவனுக்குக் கூலி ஹறாமாகு மென்றும் இமாமவர்கள் சொன்னார்கள்.

மூன்றாவது காரியம்:—நிறையிலும் அளவிலும் யாதொரு புரட்டு செய்யாமலிருப்பதாம். சரியாய் நிறுக்கவேண்டும். ஏனென்றால், விற் கும்போது குறைத்தும் வாங்கும்போது கூட்டியும் நிறுக்கிறவர்களுக்கே கேடு என்று அல்லாகு தஆலா திருவுளமாயிருக்கிறான். பெரியோரான முன்னோர்களில் ஓர் வழக்கமிருந்தது. அதாவது, அவர்கள் யாதொன் றை வாங்கினால் அரைதானியமணி குறைவாக வாங்குவார்கள். யாதொ ன்றை விற்றால் அரை தானியமணி அதிகமாய்க் கொடுப்பார்கள். இன்று இந்த அரைதானியமணியானது எங்களுக்கும் நரகத்துக்கும் மத்தியில் தடையா யிருக்குமென்றும் அவர்கள் சொல்லுவார்கள். இதேனென்றால், சரியாய் நிறுத்துவாங்கவும் சரியாய் நிறுத்துவிற்கவும் நம்மால் முடியாதென்று அவர்கள் பயப்படுகிறவர்களா யிருந்ததி னாலேயாம்.



“இன்றும் ஏழு வானம் பூமிகளுடைய விஸ்தாரத்துக்குச் சரி யான ஒரு சொர்க்கத்தை அரைதானியமணிக்கு விற்பவன் எவனோ அவனே மூடன்” என்றும், “அரைதானியமணிக்குப் பகரமாய்த் தூபா என்னும் அபசோபனத்தை வாங்காமல் வைல் என்னும் நரகத் தை வாங்குகிறவன் எவனோ அவனே மூடன்” என்றும் அந்த முன் னோர்கள் சொல்லுகிறவர்களாயிருந்தார்கள். றசூல் ஸல்லல்லாகு அலைகி வசல்லமவர்கள் யாதொன்றை வாங்கினால் “நிறுத்துக்குச் சரியாய் நிறு, முன்னுக்கு நிறு” என்று சொல்லுவார்கள். புலைறதுல்லா அவர் கள், தங்கள் மகன் ஒரு பசுவை யொருவருக்கு விற்றபோது அதைக் கறந்துகொண்டிருப்பதையும் அதன் முதுகிலே படிந்திருக் கும் அழுக்கைத் தேய்த்துச் சுத்தப்படுத்துகிறதையுங்கண்டு, “மகனே! நீ செய்யும் இந்த வேலையானது இரண்டு ஜாக்கிரதைகளை விட மேன்மையானதாயிருக்கும்” என்றுசொன்னார்கள். இன்னும் “வாங்கு வதற்கு ஒன்றும் விற்பதற்கு ஒன்றுமாய் இரண்டு தராசுகள் வைத் திருப்பவன் எல்லா பாவிகளிலும் மிகக்கெட்டவன்” என்று முன் னோர்கள் சொல்லியிருக்கிறார்கள். வாங்கும்போது, பிடவையைத் தளரவிட்டும், விற்கும்போது இழுத்துப்பிடித்தும் அளக்கிற ஜவளி வர்த்தகரும் இவர்களிற் சேர்ந்தவனாகுவான். இறைச்சியிற் சேர்க்கிற வழக்கமில்லாத எலும்பை இறைச்சியுடன் சேர்த்து விற்கிற கசாய்க் காரனும் இவர்களைச் சேர்ந்தவனாகுவான். வழக்கமாய்க் கலந்திருக்கிற அளவுக்குமேல் அதிகமாய் மண் சேர்ந்திருக்கும் தானியத்தை விற்ப வனும் இவர்களைச் சேர்ந்தவனே யாகுவான். இவையெல்லாம் ஹறா மாயிருக்கிறது. ஆதலால் எல்லா முஆமலாத்களிலும் நீதமாய் நடந் துகொள்வது வாஜிபாயிருக்கும். ஏனென்றால், தன்னைக்குறித்து மற்றொருவன் சொல்லத் தனக்குப் பிரியப்படாத ஒரு வார்த்தையை மற்றொருவனைக் குறித்துத் தான் சொல்லுவானாகில் அவன் தன் கொடுக்கல் வாங்கல்களில் வித்தியாசம் செய்தவனாகுவான். இந்தப் பாவம் வராமல் தப்பித்துக்கொள்வதற்கு அவன் எந்த முஆமலா விலும் யாதொன்றிலும் தன்னை முஸ்லிமான சகோதரனுக்கு மேலாக் காமலிருக்கவேண்டும். இதுவோ மிகவும் கஷ்டமானகாரியம். இதன் நிமித்தமே அல்லாகு தஆலா உங்களில் நரகத்தின்மேற் செல்லாதவன் ஒருவனுமில்லை என்று திருவுளமாயிருக்கிறான். ஆனால் யாராவதொரு வன் தக்வாவுடைய பாதைக்கு நெருங்கினவனாயிருந்தால் அவன் சீக்கிரத்தில் ஈடேற்றம் பெறுவான்.

நாலாவது காரியம்:—சரக்கின் விலையில் யாதொரு சூது செய்யக் கூடாது. விலையை மறைக்கவும் கூடாது. ஏனென்றால் சரக்குக்கொண்டு

வரும் தானியக்காரரிடம் முன்னேக்கிப்போய் அவர்களிடம் சரக்கை நயமாய் வாங்குவதற்காகப் பட்டணத்து விலையை மறைப்பது கூடாது என்று ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்கள் தடை செய்திருக்கிறார்கள். அப்படிச் செய்தால், சரக்குக்காரர் அந்தக் கிரயத்தை * பஸக்கு செய்துவிடலாம். இன்னும் ஓர் அயலூரான் ஓர் பட்டணத்துக்குச் சரக்கைக்கொண்டுவரும்போது, அவசியமாயிருக்கிற நிமித்தம் ஒருவன் இந்தச்சரக்கை என்னிடத்தில் வை, நான் சில தினத்திற்குப் பிறகு உனக்கு நயமாகும்படி விற்றுத் தருகிறேன் என்று சொல்வது கூடாது என்று விலக்கியிருக்கிறார்கள். மற்றவர் மெய்யென்று நம்பி அதிக விலைக்கு வாங்குவதற்காக யாராவதொருவன் சரக்கின் விலையை ஏற்றிக் கேட்பதுங் கூடாதென்று விலக்கியிருக்கிறார்கள். இப்படி யொருவரை ஏமாற்றுவதற்காகச் சரக்குக்காரனிடம் ஒருவன் கிரயம் தீர்த்துக்கொண்ட சங்கதி அதை வாங்கினவனுக்குத் தெரியும் பக்ஷத்தில் அந்தக் கிரயத்தை அவன் பஸகு செய்துகொள்ளலாம். சரக்கைக் கடைவீதியில் வைப்பதும், உண்மையில் அதை வாங்காதவர்கள் அதன் கிரயத்தை ஏற்றிக் கேட்பதுமான இந்த வழக்கம் ஜனங்களில் நடைபெற்று வருகிறதே இது ஹராமாயிருக்கும். இதுபோலவே விலை தெரியாமல் சரக்கை நயமாய் விற்கிறவனும், விலை தெரியாமல் சரக்கைக் கிராக்கியாய் வாங்குகிறவனுமான சாதாரண மனிதனிடத்தில் வாங்குவதும் விற்பதும் கூடாது. இக்கிரயம் ஆகுமென்று வெளிப்படைக்கு நாம் பத்வா கொடுத்தபோதிலும் சரியே உண்மையை அவனுக்கு மறைத்திருக்கிறபடியால் பாவியாகுவான்.

ஹிக்காயத்து:—பஸராவில் ஓர் வர்த்தகர் இருந்தார். அவருடைய அடிமையான வேலைக்காரன் ஸூஸ் பட்டணத்திலிருந்து, இந்த வருஷத்தில் கரும்புக்குச் சேதம் நேரிட்டிருப்பதால் சர்க்கரை மிகவும் பூர்சியமாகும்போலிருக்கிறதென்றும், இந்த சங்கதியை மற்றவர்கள் அறிவதற்கு முன்னே தாங்கள் ஏராளமாய்ச் சர்க்கரை வாங்கி வைக்க வேண்டியதென்றும் காயிதம் எழுதினான். அவர் அப்படியே சர்க்கரையை அதிகமாய் வாங்கி வைத்திருந்து தருணத்தில் நல்ல விலையாக விற்றார். முப்பதினாயிரம் திருஹம் இலாபம் கிடைத்தது. பிறகு அவர் தமக்குள்ளே; நான் ஒரு முஸ்லிமுக்கு மோசஞ்செய்தேன், கரும்புக்குச் சேதம் நேரிட்டிருக்கிற சங்கதியைச் சொல்லாமல் மறைத்தேன்.

* பஸக்கு செய்தலென்பது - கிரயத்தை ரத்து செய்து விற்ற சரக்கைத் திரும்ப வாங்கிக்கொள்ளல்.



இப்படியான காரியம் எப்படி ஆகும் என்று யோசித்து, அந்த முப்பதினாயிரம் திருஹத்தையும் எடுத்துக்கொண்டு, அந்தச் சர்க்கரைக்காரனிடம் வந்து இது உன் பொருளென்று சொன்னார். அவன் அதெப்படி யென்றான். இவர் சங்கதியைச் சொன்னார். அவன் இப்போது நான் உமக்கு ஹலாலாக்கி விட்டேன் என்றான். இவர் வீட்டுக்கு வந்து அன்றிராத்திரியில் யோசித்ததாவது:—அவனை நாம் மோசம் செய்தோமென்ற வெட்கத்தினால் அவன் ஹலாலாக்கியிருப்பான், நாமோ அவனுக்கு மோசமே செய்துவிட்டோம் என்று நினைத்து, மறுநாள் அவனிடம் வந்து அந்த முப்பதினாயிரம் திருஹத்தையும் தம்மிடத்திலிருந்து வாங்கிக்கொள்ளும்படி அவனை வெகுவாய் வேண்டினதினால் அவன் வாங்கிக்கொண்டான்.

கொள்கிரயத்தைச் சொல்லி விற்பவன் உண்மையைச் சொல்ல வேண்டும். புரட்டாய்ச் சொல்லக்கூடாது. சரக்கில் ஏதாவது பழுதிருந்தால் அதை வெளிப்படுத்த வேண்டும். ஒருவன் தனக்குச் சினேகனாய் அல்லது பந்துவாய் இருக்கிற நிமித்தம் அவனுக்கு நயப்படுத்தக்கருதி அவன் சரக்கை அதிக விலை கொடுத்து வாங்கியிருந்தால் அதையும் சொல்லிவிடவேண்டும். ஒருவன் ஒரு வஸ்துவைப் பத்து தீனார் என்று சொல்லி அதை மற்றொரு பொருளுக்குப் பகரமாய் விற்றால், அந்த வஸ்து பத்துதீனாருக்கு விற்காத பக்ஷத்தில் அதற்குப் பகரமாய் வாங்கின பொருளின் கொள்முதல் பத்துதீனார் என்று சொல்லக்கூடாது. முதலில் சரக்கை நயமாய் வாங்கியிருந்து பிறகு அது * கிராக்கியாய்ப்போனால் முந்தின விலையையே வெளிப்படுத்த வேண்டும். இதை விரிந்துச் சொன்னால் மிகவும் பெருகும். இது விஷயத்தில் வர்த்தகர் அநேக மோசங்கள் செய்கிறார்கள். ஆனால் இது மோசமென்று அவர்கள் நினைக்கிறதில்லை. பிறர் தன்மீது செய்கிற எந்தமோசத்தை மனிதன் பிரியப்படானோ அந்த மோசத்தைப் பிறர்மீது தானும் செய்யக்கூடாதென்பதே இதன் சாராம்சமாயிருக்கிறது. இதையே தனக்கு உரைகல்லாக்கிக் கொள்ளவேண்டும். ஏனென்றால், கொள்கிரயத்தை நம்பி வாங்குகிறவன் நான் நன்றாய்த் தெரிந்து ஞாயமான விலைகொடுத்து வாங்கினேன் என்று நினைக்கிறான். இதில் மோசமிருக்கிறதென்று தெரிந்தால் அவன் சம்மதிக்கமாட்டான். ஆதலால் இது மோசமேயாம்.

## நாலாவது பாபு - முஆமலாவில் உபகாரமும் நன்றியும் செய்வதின் பயான்.

அறிந்துகொள்:—அல்லாகுதஆலா நம்மை நீதியாய் நடக்கும்படி ஆக்கியாபித்ததுபோல் உபகாரம் செய்யும்படிக்கும் கட்டளைசெய்

திருக்கிறன். அது வருமாறு:—நீதியையும் உபகாரத்தையும்பற்றித் திடனுக அல்லாகுதஆலா ஏவுகின்றன் என்பதே. மேற்சொல்லிவந்த பாபானது நீதியைக்குறித்த விளக்கமாயிருந்தது. அதனுல் மனிதன் கொடுமை செய்வதிலிருந்து நீங்க ஏதுவாயிற்று. இந்த பாபாகிறது உபகாரத்தைக் குறித்துப் பேசுவதாயிருக்கும். திடனுக அல்லாகுதஆலாஉடைய றஹ்மத்தாகிறது உபகாரஞ் செய்கிறவர்களை அடுத்திருக்கிறது என்று திருவுளமாகிறன். ஒருவன் நீதியைப் பேணுமாக்கிக் கொள்ளுவானுகில் அவன் தனில் முதலைக் காப்பாற்றிக் கொண்டவனுவான். எனினும் அந்த முதலுக்கு இலாபமாகிறது உபகாரம் செய்வதிலாயிருக்கும். எந்த முஆமலாவிலும் ஆகிறத்துடைய லாபத்தைவிடாதவன் எவனே அவனே புத்திமானுகுவான். இனி உபகாரமென்பது உன்னிடம் முஆமலாச்செய்கிறவனுக்கு உன்னுல் இலாபமுண்டாகிற உன்மேல் கடமையல்லாத ஓர் நன்மையான காரியமேயாம். உபகாரத்தின் பதவி ஆறு காரணங்களால் உண்டாகும்.

முதலாவது காரணம்:—அதிகலாபம் கூடாதென்று விட்டுவிடுவதாம். வாங்குகிறவனுக்கு ஏதேனும் அவசியமாயிருக்கிற நிமித்தம் அதிக லாபங்கொடுக்க அவன் சம்மதித்தாலும் சரியே. ஸரிய்யுஸ்ஸக்தி றதியல்லா அவர்கள் கடைவைத்திருந்தார்கள். அவர்கள் நூற்றில் ஐந்துக்குமேல் இலாபம் வைத்து விற்கிறதில்லை என்று நிய்யத்து செய்திருந்தார்கள். ஒருதரம் அறுபது தினருக்கு பாதாம் வாங்கியிருந்தார்கள். பின்பு அதன்விலை ஏறிவிட்டது. ஓர் தரகன்வந்து அதை விற்பதற்காக அவர்களிடம் கேட்டான். அதற்கவர்கள் அறுபத்துமூன்று தினருக்கு அதைவிற்கும்படிச் சொன்னர்கள். அதற்கவன் இப்போது இதன்கிரயம் தொண்ணூறு தினரா யிருக்கிறதென்றுன். அதற்கவர்கள் நூற்றில் ஐந்துக்குமேல் இலாபம் வைக்கிறதில்லையென்று நான் முதலில் நிய்யத்து செய்திருக்கிறேன். இப்போது அந்த நிய்யத்தை முறிக்க எனக்குப் பிரியமில்லை என்றுர்கள். அதற்கவன் தங்களுடைய சரக்கைக் குறைந்த விலைக்கு விற்க எனக்கும் இஷ்டமில்லையென்றுன். அவனும் அதை விற்கவில்லை. அவர்களும் அதிக லாபத்தைச் சம்மதிக்கவில்லை. உபகாரத்தின் பதவி இப்படியாயிருக்கிறது. இன்னும் முஹம்மதுபின்முன்கதிர் றதியல்லா என்ற ஓர்பெரியோர் கடையில் சில உடுப்புகளை வைத்து விற்பவர்களாயிருந்தார்கள். அவற்றுட்சில உடுப்புகள் பத்துதினர் கிரயமுள்ளனவாயும், சில உடுப்புகள் ஐந்துதினர் கிரயமுள்ளனவாயுமிருந்தன. ஒருநாள் அவர்களில்லாத சமயத்தில் அவர்களுடைய வேலைக்காரன் ஓர் நாட்டறபிக்கு ஐந்துதினர் கிரயமுள்ள



உடுப்பைப் பத்துதினருக்கு விற்றுவிட்டான். அவர்கள் வந்த பிறகு இதையறிந்து அன்று முழுமையும் அந்த நாட்டறபியைத் தேடியலைந்து அவனைக் கண்டுபிடித்து அந்த உடுப்பு ஐந்து தினருக்குமேல் விற்காதென்று சொன்னர்கள். அப்போதவன் அதற்கு நான் சம்மதித்து வாங்கினேன் என்று சொன்னன். அதற்கவர்கள் என் விஷயத்துக்கு நான் சம்மதிக்காத ஓர் காரியத்தை ஓர் முஸ்லிம் விஷயத்திலும் சம்மதிக்கேன், நீ கிரயத்தை பஸக்குசெய், அல்லது ஐந்து தினரைத் திரும்ப வாங்கிக்கொள், அல்லது என்னுடன்வந்து நான் கொடுக்கும் உயர்ந்த உடுப்பை வாங்கிக்கொள் என்றுர்கள். அவன் ஐந்து தினரைத் திரும்பவாங்கிக்கொண்டான். பிறகு இந்தமனிதர் யார் என்று ஜனங்களை விசாரித்தான். முஹம்மதுபின்முன்கதிர் என்றுசொன்னர்கள். அப்போது அந்நாட்டறபி "ஸுப்ஹானல்லா! காட்டில் மழையில்லாத காலத்தில் நாங்கள் மழைதேடிப் புறப்பட்டு இவருடைய பேரைச்சொன்னுல் மழைவருமே, அவரல்லவோ இவர்" என்று வியந்துசொன்னுன். ஸலபுகளான முன்னேர்களில் ஓர் வழக்கமிருந்தது. அதாவது:—அவர்கள் கொஞ்ச லாபத்தின்மேல் ஏராளமான வர்த்தகம் செய்கிறவர்களாயும், அதிக லாபத்தை எதிர்பார்த்துச் சரக்கை வைத்துக் காப்பதிலும் இதுவே மிக நயமானதென்று நினைப்பவர்களாயுமிருந்தார்கள். ஹலரத்து அலிமுர்த்துலா றதியல்லாஹு அன்கு அவர்கள் கூபாவுடைய கடைவீதியைச் சுற்றி "ஓ ஜனங்களே! நீங்கள் கொஞ்ச லாபத்தைத் தட்டவேண்டாம்" என்றும், "அதனுல் நீங்கள் அதிகலாபத்துக்கு அருகரல்லாமற்போவீர்கள்" என்றும் சொல்லுகிறவர்களாயிருந்தார்கள். அப்துர்றஹ்மானுபினு அவ்பு றதியல்லாகு அன்கு இடத்தில் உம்முடைய ஐசுவரியத்துக்குக் காரணம்யாது என்று ஜனங்கள் கேட்டபோது, அவர்கள் சொன்னதாவது:—"நான் கொஞ்ச லாபத்தைத் தட்டினதில்லை. யாராவது என்னிடத்தில் எதாவதோர் மிருகத்தைக்கேட்டால் அதை நான் வைத்துக்கொள்ளாமல் விற்றுவிட்டிருக்கிறேன். ஒருநாள் ஆயிரம் ஒட்டகங்களைக் கொள்முதலுக்கே விற்றேன். அவற்றின் கால்களைக் கட்டியிருந்த கயிறுகளையன்றி அதிக லாபத்தை நான் ஆசிக்கவில்லை. அந்தக் கயிறுகள் ஒவ்வொன்றும் ஒவ்வோர் திருஹத்துக்கு விற்றதுந் தவிர அன்று அவற்றின் தீனிச்செலவாகவேண்டிய திருஹங்களும் எனக்கு மீதியாயின. ஆதலால் அன்று இரண்டாயிரம் திருஹம் எனக்கு இலாபமாயிற்று" என்பதே.

இரண்டாவதுகாரணம்:—ஏழைகளுடைய சரக்கை உதாரணமாக: விதவைகள் நூற்றநூல், பாலகருடையவும் பகீருகளுடையவுமான

ளையிலிருந்து திரும்பிவந்த பழவர்க்க முதலிய பக்ஷணம் இவை போன்றவைகளைக்கிராக்கியான விலைகொடுத்து வாங்குவதாம். ஏனென்றால், அவர்களுக்குச் சந்தோஷமுண்டாகவேயாம். இதானது சதகா கொடுப்பதைக் காண மிகவதிகமுள்ளதாயிருக்கிறது. யாராவதொருவன் இப்படிச் செய்வானாகில், விற்கல் வாங்கல்களை இலேசாக்கி வைத்தவன்மேல் அல்லாகுத்தஆலா றஹ்மத்து செய்வானாக என்று றசூல் ஸல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் வாழ்த்தியிருக்கிற இந்த அதுஆவை அவன் பெற்றுக்கொள்ளுவான். ஆனால் சீமான்களுடைய சரக்கை அதிகவிலைகொடுத்து வாங்குவது சவாபுமல்ல, நன்றியுமல்ல, பொருளை நஷ்டப்படுத்துவதேயாம். மேலும், அவர்களிடத்தில் தக்ரார்செய்து நயமானவிலைக்குவாங்குவதே ஏற்றமாம். இமாம்ஹஸன் இமாம் உஸைன் றலியல்லாகு அன்குமா இவர்கள் யாதொன்றை வாங்கினால் நன்றாய்த் தக்ரார் செய்து விலையைத் திரவிசாரித்து நயமாய் வாங்குவார்கள். அவர்களிடத்தில் நீங்கள் தினந்தோறும் ஆயிரக்கணக்காய்த் தருமத்தில் செலவு செய்கிறீர்களே, இவ்வளவு கொஞ்சத்திற்மேல் ஏன் இப்படி கண்டிப்பாயிருக்கிறீர்களென்று கேட்டதற்கு அவர்கள் சொன்னதாவது:—"நாங்கள் ஏதொன்று கொடுக்கிறோமோ அதை அல்லாவுக்காகக் கொடுக்கிறோம். அவ்வழியில் எவ்வளவு அதிகமாய்க் கொடுத்த போதிலும் அது கொஞ்சமேயாம். ஆனால் வர்த்தகத்தில் அதிகவிலை கொடுத்து ஏமாறுவது புத்திக் குறைவும் பொருள் நஷ்டமுமேயாம்" என்பதே.

மூன்றாவது காரணம்:—கிரயம் வாங்குவதிலாயிருக்கும். இதில் மூன்று விதத்தினால் உபகாரம்செய்தல் ஏற்படுகின்றது: ஒன்று கிரயத்தில் கொஞ்சம் குறைத்து வாங்குவதினாலும், மற்றொன்று பழயமும் செல்லாததுமான பணக்காசுகளை வாங்கிக்கொள்ளுவதினாலும், மற்றொன்று தவணையின்மேல் கொடுப்பதினாலுமாம். றசூல் ஸல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் தங்கள் திருவாயினால் "கொடுக்கல் வாங்கல்களை இலேசாக்கி வைத்தவன்மீது அல்லாகுத்தஆலாவுடைய றஹ்மத்துண்டாக" என்று துஆச் செய்ததுமன்றி, "யாராவதொருவன் இலேசு படுத்துவானாகில் அல்லாகுத்தஆலா அவனுடைய காரியங்களை இலேசாக்கி வைப்பான்" என்றும் அருளியிருக்கிறார்கள். எந்த உபகாரமும் இல்லாதவனுக்குத் தவணை கொடுக்கும் உபகாரத்துக்கு மேலாகாது. என்கிறதும், இல்லாதவனுக்குத் தவணை கொடுப்பது வாஜிபாயிருக்கும். இது நீதத்தைச் சேர்ந்ததாகும். உபகாரத்தைச் சேர்ந்ததல்ல. ஆனால் ஏதோ கொஞ்சம் ஜீவனமுள்ளவனாயிருந்து அவன் யாதொரு வஸ்து

வைஷ்டத்துக்கு விற்றாலேயொழிய, அல்லது அவனுக்கு அகத்தியம் வேண்டியதாயிருக்கிற ஒருவஸ்துவை விற்றாலேயொழிய கிரயங் கொடுக்க முடியாதவனாயிருந்தால் இவனுக்குத் தவணை கொடுப்பது உபகாரமாயும் பெரிய சதகாக்களிற் சேர்ந்ததாயுமிருக்கும். இன்னும் இயாமத்து நாளில் ஒரு மனிதனைக் கொண்டுவருவார்களென்றும், அவன் மார்க்க விஷயத்தில் தனக்கே கொடுமை செய்தவனாயிருப்பானென்றும், அவன் பட்டோலையில் யாதொரு நன்மையுமிராதென்றும், நீ ஒரு நன்மையும் செய்யவில்லையா? என்று அவனைக் கேட்பார்களென்றும், அதற்கவன் ஆம், நான் ஒன்றும் செய்யவில்லை, ஆனால் எனக்குக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் இல்லாத ஏழைகளாய்ப் போனால் அவர்களை இம்சிக்காமல் விட்டுவிடுங்களென்று என் வேலைக்காரர்களுக்குக் கட்டளையிட்டிருந்தேன் எனச் சொல்லுவானென்றும், அதற்கு அல்லாகுதஆலா நீ இன்று ஒன்றுமில்லாத ஏழையாயிருக்கிறாய், உனக்கு நான் இலேசுபடுத்துவது மிக மேலாயிருக்கும் என்று சொல்லி அவனை மன்னித்தருள்வானென்றும் றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும் யாராவதொருவன் கெடுவின்மேல் ஒருவனுக்குக் கடன் கொடுப்பானாகில், அந்தக்கெடுவுக்குள்ளே செல்லுகின்ற ஒவ்வொரு நாளும் சதகா கொடுத்த சவாபு அவனுக்குச் சேருகிறதென்றும், கெடுவுதாண்டிவிட்டால் அதன்பிறகு கொடுக்கிற தவணையில் ஒவ்வொரு நாளும் அந்தப்பொருள் முழுமையும் சதகா கொடுத்த சவாபு அவனுக்குக் கிடைக்கிறதென்றும் ஹதீஸில் வந்திருக்கிறது. முன்னுள்ள பெரியோர்களிற் சிலர் தங்களிடத்திற் கடன்பட்டவர்கள் திரும்பவும் அதைக் கொண்டுவந்து கொடுப்பதை விரும்பாதவர்களாயிருந்தார்கள். ஏதற்கென்றால், தினந்தோறும் அந்தப்பொருள் முழுமையும் சதகா கொடுத்ததாய் அவர்கள் பட்டோலையில் எழுதப்படுமென்பதினால். இன்னும் சதகாவில் கொடுத்த ஒவ்வொரு திர்ஹமும் பத்து திர்ஹங்களுக்குச் சமானமென்றும், கடனாய்க் கொடுத்த ஒரு திர்ஹமானது பதினெட்டு திர்ஹங்களுக்குச் சரியாகுமென்றும் சொர்க்கவாசலில் எழுதியிருக்கக் கண்டேனென்று றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். இப்படி சதகாவுடைய சவாபைக்காண கடன் கொடுப்பதின் சவாபு அதிகமாவதற்குக் காரணம் யாதெனில், ஹாஜத்துள்ளவனேயன்றி மற்றவன் கடன் வாங்கமாட்டான். எனினும், சதகாவானது ஹாஜத்துள்ளவனுக்கு ஒரு சமயம் கிடைக்காமற் போகவும் கூடும் என்பதேயும்.

நாலாவது காரணம்:—கடனைத் தீர்ப்பதாம். இதில் உபகாரமாவது கொடுத்தவன் கேட்கும்படி வைத்துக்கொள்ளாமலிருப்பதும், சீக்கிரத்தில் தீர்ப்பதும், நல்ல நாணயத்தால் தீர்ப்பதும், தன் கையினால் கொடுப்பதும், அவனை வருவித்துக் கொடுக்காமல் அவன் வீட்டில் கொண்டுபோய்க் கொடுப்பதுமே உபகாரமாம். இன்னும் கடனை நல்லவிதமாய்த் தீர்த்தவன் எவனோ அவனே உங்களில் மிக நல்லவன் என்று ஹதீஸில் வந்திருக்கிறது. இன்னும் ஹதீஸில் வந்திருக்கிறதாவது:—கடன்காரனாயிருக்கிற ஒருவன் தன்மனதில், இந்தக் கடனை நான் நல்லவிதமாய்த் தீர்ப்பேன் என்று நிய்யத்து செய்வானாகில் அல்லாகுதஆலா அவனுக்காகச் சிலமலக்குகளை நியமிக்கிறான். அவர்கள் அவனைக் காத்திருந்து அவனுடைய கடன் தீரும்படி துஆச் செய்கிறார்கள். இன்னும் கடன்பட்டவன் கடனைத் தீர்க்கச் சக்தியுள்ளவனாயிருந்து கடன் கொடுத்தவனுடைய சம்மதமில்லாமல் ஒருவினாடி நேரமாவது தாமதிப்பானாகில் அவன் கொடியவனும் பாதகனுமாய்ப்போவான். அவன் நோன்புவைத்துக்கொண்டிருந்தாலும், தொழுதுகொண்டிருந்தாலும், தூங்கிக்கொண்டிருந்தாலும், எப்படியிருந்தாலும் அவன்மேல் அல்லாகுதஆலாவுடைய லஃனத்துண்டாகும். இதுவோ தூக்கத்திலும் அவனோடிருக்கிற பாவமாயிருக்கிறது. கடனைத் தீர்க்கச் சக்தியுள்ளவனென்றதில் அவனிடம் ரொக்கநாணயமிருக்கவேண்டுமென்றவிதியில்லை. ஒரு வஸ்துவை விற்கக்கூடியவனாயிருந்து அதை விற்றுக் கடனைத் தீர்க்காவிட்டாலும் பாவியாகுவான். கெட்ட நாணயத்தைக் கொண்டு கடனைத் தீர்ப்பதில் கடன் கொடுத்தவன் பொருத்தங்கேடாய் வாங்குவானாகில் கடன் தீர்ப்பவன் பாவியாகுவான். அவனைச் சமாதானப்படுத்திக் கொள்ளாதவரையில் அந்தப் பாவத்தினின்று அவன் நீங்கமாட்டான். இது பெரும்பாவங்களிற் சேர்ந்ததாயிருக்கிறது. ஜனங்களோ இதை இலேசாக எண்ணியிருக்கிறார்கள்.

ஐந்தாவது காரணம்:—ஒருவன் ஒரு வஸ்துவைக் கிரயத்துக்கு வாங்கிப் பிறகு அதைப்பற்றி மனஸ்தாபப்படுவானாகில் அந்தக் கிரயத்தைப் பசுகுசெய்து விடுவதாம். அதாவது விற்ற சரக்கைத் திரும்ப வாங்கிக் கொள்வதாம். ஏனென்றால், ஒருவன் ஒரு கிரயத்தைப் பசுகுசெய்து கிரயமே செய்யாததுபோல் எண்ணிக்கொள்வானாகில் அல்லாகுதஆலா அவன் செய்த பாவத்தையும் செய்யாதது போல் எண்ணுகிறான் என்று றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். ஆனால் இந்தக்கிரயத்தைப் பசுகுசெய்து விடுவது அவன்மேல் வாஜிபல்ல எனினும், இதன் சவாபு மிகவும்



பெரிதாயிருக்கிறது. அன்றியும் உபகாரத்திற் சேர்ந்ததாயுமிருக்கிறது.

ஆறுவதுகாரணம்:—பகீருகளுக்கு அதிகநாள் தவணையின்பேரில் யாதொரு வஸ்துவை விற்பதாம். அது கொஞ்சமாயிருந்தபோதிலும் சரியே. அப்படி விற்பதிலும் அதன் கிரயங்கொடுக்க அவர்களுக்குச் சக்தியுண்டாகிற வரையில் கிரயங் கேட்கமாட்டேனென்றும், அப்படியே சக்தியில்லாதவர்களாய் மவுத்தாய்ப்போனால் அந்த அவர்களுக்கு மன்னித்து விடுவேன் என்றும் நிய்யத்து செய்வான். முற்காலத்தில் சில தனவான்களிருந்தார்கள். அவர்களிடத்தில் இரண்டு யாத்தாஷ்த்து புத்தகங்களிருக்கும். ஒன்றில் இன்னாரென அறியப்படாத பெயர்கள் எழுதப்பட்டிருக்கும். பகீருகளெல்லாம் அதிற் சேர்ந்தவர்களென்று கருதப்பட்டார்கள். இன்னும் சில ஜனங்களிருந்தார்கள். அவர்கள் பகீருகளுடைய பெயரை எழுதுகிறதேயில்லை. ஏனென்றால், தங்களுக்குப் பிற்காலம் யாராவது அந்த பகீருகளிடத்தில் யாதொரு நகாதா செய்யாதிருக்கவேயாம். அந்தத் தனவான்களை நல்லவர்களிற் சேர்ந்தவர்களென்று அக்காலத்து ஜனங்கள் எண்ணவில்லை. மேலும் பகீருகளின் பேரை எழுதாமல் விட்டுவிட்டவர்களையே நல்லவர்களென்று எண்ணினார்கள். கடன்வாங்கின பகீருகள் பிறகு தாங்களே கொண்டுவந்து கொடுத்தால் வாங்கிக்கொள்வார்கள். இல்லையாயின் அவர்களிடம் வாங்கவேண்டுமென்கிற அபேட்சை இவர்களுக்கு இருந்ததில்லை. தீன்தார் என்னும் மார்க்கானுசாரிகள் முஆமலாவில் இப்படியாயிருந்திருக்கிறார்கள். துன்யாவுடைய முஆமலாவில் தீன்தார்களுடைய பதவி விளங்குகின்றது. எவனொருவன் தீனுக்காக ஷுபுஹாத்தான ஒரு திருஹத்தை உதைத்துத் தள்ளினானோ அவன் தீன்தார்களிற் சேர்ந்தவனாயிருக்கிறான்.

## ஐந்தாவது பாபு - துன்யாவுடைய முஆமலாவில் தீனைப்பற்றிய கவலையின் பயான்.

அறிந்துகொள்:—மனிதனைத் துன்யாவுடைய வர்த்தகமானது ஆகிரத்துடைய வர்த்தகத்தினின்று நீக்கிவைக்குமோ அந்தமனிதன் துர்ப்பாக்கியனாம். பொன்பாத்திரத்தை மண்பாத்திரத்துக்குப் பதிலாய்க்கொடுப்பவனுடைய தகிகன்னவிதமாகும்? துன்யாவானது மண்பாத்திரத்துக்குச் சமானமாய்க் கெட்டதாயும் சீக்கிரத்தில் அழிந்துபோவதாயுமிருக்கிறது. ஆகிரத்தானது பொன்பாத்திரம்போல் நல்லதாயும், நாட்படயிருப்பதாயும், மேலும் எப்போதும் அழியாததாயுமிருக்கிறது. துன்யாவுடைய வர்த்தகம் ஆகிரத்துடைய தங்கிப்புக்குத்

தருந்ததல்ல. மேலும், நரகத்து வழியிற் செல்லாமல் தப்பித்துக் கொள்ள அதில் அதிகமாய் முயர்ச்சிக்கவேண்டும். இதுவும், ஆகிறத்தும் மனிதனுக்குத் தலைமுதலா யிருக்கிறது. ஆதலால் அவன் அதை மறந்தவனும் தீனைப்பற்றிய கவலையில்லாதவனும் வர்த்தகம் பயிர்த் தொழில் இவைகளிலேயே முழுதும் பராக்குள்ளவனு மிருப்பது கூடாது.

மனிதன் ஏழு பேணுதல்களை அனுசரிப்பதினால் அவன் தன் தீனைப்பற்றிய கவலையுள்ளவனாகுவான். முதலாவது:—நாள்தோறும் நல்ல நிய்யத்துகளைத் தன் மனதிற் புதுப்பித்துக் கொள்வதாம். அஃதெவ்வாறெனில், அல்லாகுத ஆலாவை வணங்கவும், ஆகிரத்துடைய பாதையில் நடக்கவும், போதுமான அளவாய் உணவும், உடையும் வேண்டிய நிமித்தமாயும் ஜனங்களிடம் அபேட்சையாகாமல் அவர்களின் தேவையற்றிருக்கவேண்டிய நிமித்தமாயும் நான் என்னுடையவும் என் பெண்சாதி பிள்ளைகளுடையவுமான இரணத்தைச் சம்பாதிக்கக் கடைவீதிக்குப் போகிறேன் என்று நிய்யத்து செய்வான். இன்னும் இன்று நான் கல்குகளுடன் தயவாயிருக்கவும் அவர்களுக்கு நஸீஹத்து செய்யவும் அவர்களிடம் விசுவாசமாய் நடந்துகொள்ளவும் முயலுவேன் என்றும் நிய்யத்து செய்வான். இன்னும் நன்மையைக்கொண்டு ஏவுவேன், தின்மையை விட்டும் விலக்குவேன். யாராவது யாதொரு மோசம் செய்தால் அவர்களைக் கடிந்துகொள்ளுவேன், அதனின்மேல் பொருத்தமா யிருக்கமாட்டேன் என்றும் நிய்யத்து செய்வான். இந்த நிய்யத்துகளைச் செய்வானாகில் இவை ஆகிரத்துடைய அமல்களைச் சேர்ந்தவைகளா யிருக்கும். இவை தீனுக்கு ரொக்கலாபமாகும். இனி துன்யாவுடைய லாபம் ஏதாவது கிடைத்தால் அது அதிகமே யாம்.

இரண்டாவது:—மனிதர்களில் குறைந்த பக்ஷம் ஆயிரம்பேர் ஒவ்வொருதொழிலைச் செய்யாதவரையில் நான் ஒருநாளாவது ஜீவித்திருக்க முடியாதென்று இவன் அறிந்திருக்க வேண்டும். உதாரணமாக:-ரொட்டிசுட்டு விற்பவன், பயிர்த்தொழில் செய்பவன், சேவுக்காரன், கருமான், பஞ்சுகொட்டுகிறவன், மற்றும் தொழிலாளிகள் இவர்களெல்லாரும் இவனுடைய வேலையைச் செய்துகொண் டிருக்கிறார்கள். ஏனென்றால் இவையெல்லாம் இவனுக்குத் தேவையாகின்றதினாலேயாம். இப்படி எல்லாரும் இவனுடைய வேலையைச் செய்து அவர்களால் இவனுக்குப் பிரயோசன முண்டாகுவதா யிருக்க, இவனால் ஒருவருக்கும் பிரயோசனமில்லாமலிருப்பது அழகல்ல. அன்றி



யும் இவ்வுலகத்தில் எல்லாரும் யாத்திரை செய்கிறவர்களா யிருக்கிறார்கள். யாத்திரைக்காரர் ஒருவருக்கொருவர் உதவியாயிருக்க வேண்டும். ஆதலால் மற்ற முஸ்லிம்கள் என்வேலையைச் செய்கிறதுபோல நானும் அவர்களுக்கு ராஹத்தை யுண்டாக்குகிற ஒரு தொழிலைச் செய்யக் கடைவீதிக்குப் போகிறேன் என்று நிய்யத்து செய்வான். ஏனெனில், எல்லாத் தொழில்களும் * பர்லுல் கிபாயாவிற் சேர்ந்தவைகளாயிருக்கின்றன. அந்த பர்லுகளில் ஒன்றை நான் நிலைப்படுத்துகிறேன் என்று நிய்யத்து செய்வான். இந்த நிய்யத்து உண்மையென்பதற்கு அடையாளமாகிறது எந்த வேலை ஜனங்களுக்கு அகத்தியம் தேவையோ, இன்னும் எது இல்லாமற்போனால் அவர்களுடைய காரியத்தில் இடையூறுண்டாகுமோ அந்த வேலைகளில் ஒன்றைச் செய்ய வேண்டும். அது தட்டாரவேலை, சித்திரவேலை, பூச்சுவேலை போன்றதா யிருக்கக்கூடாது. ஏனென்றால் இவையெல்லாம் துன்யாவை அலங்கரிப்பவைகளா யிருக்கின்றன. அலங்கரிப்போ அநாவசியமானது. இத்தொழில்களைச் செய்வது ஆகுமென்றிருந்தாலும் செய்யாமலிருப்பதே சிறந்ததாம். ஆனால், ஆண்பிள்ளைகளுக்காகப் பட்டாடை தைப்பதும் பொன்னாபரணஞ் செய்வதும் தன்னிலேயே ஹராமாயிருக்கிறது.

இனி ஸலபுகளான முன்னோர்கள் மக்ரூஹாக்கிவைத்த தொழில்களாவன:—தானியவர்த்தகம், கபன்விற்பனை, கலாய்த்தொழில் இவைகளும் காசுக்கடை பேரமுமாம். ஏனென்றால், காசுக்கடையில் வட்டியினுடைய நுட்பங்களை அறிந்து அதைவிட்டும் தப்பிப்பது கஷ்டமாகலாலென்க. இன்னும் மக்ரூஹான தொழில்களில் ரணவைத்தியமும் ஒன்றாம். ஏனென்றால், இதில் பிரயோசன முண்டாகுமென்கிற எண்ணத்தின்பேரில் மனிதனைக் காயப்படுத்த வேண்டியதா யிருக்கிறது. ஒரு சமயம் பிரயோசன முண்டாகாம லிருக்கவும் கூடும். இன்னும் அந்தமக்ரூஹான தொழில்களில் குப்பைபெருக்குகிற வேலையும் தோல்பாடம் செய்கிற வேலையும் ஒன்றாம். ஏனென்றால், இதிற் பிடவைகளைச் சுத்தமாய் வைத்துக்கொண்டிருக்க முடியாது. அன்றியும், அறிவீனத்தின்மேல் இது அத்தாட்சியாயு மிருக்கிறது. ஒட்டகைக் காரர் குதிரைக்காரர்களுடைய கதியும் இப்படியேயாம். இன்னும் அந்தத் தொழில்களில் தரகுத் தொழிலும் ஒன்றாம். ஏனென்றால், இதில்

* பர்லுல்கிபாயாவென்பது யாராவது ஒருவர் செய்தால் மற்றவர்மேல் பொறுப்பில்லாமல் நீங்கிப்போவதும், எவரும் செய்யாமற்போனால் எல்லார் மீதும் பொறுப்பாயிருப்பதுமான ஓர் காரியமாம்.

அதிகப்பேச்சை விட்டும் தப்பித்துக்கொள்ள முடியாது. வர்த்தகங்களில் ஜவுளிவர்த்தகமும் தொழில்களில் தைக்குந்தொழிலும் மிக நல்லதென்று ஹதீஸில் வந்திருக்கிறது. தைக்குந்தொழிலென்றதில் ஒலுவுக்குத் தண்ணீர் வைக்கிற தோல்பை, தண்ணீர் துருத்தி இன்னும் இவைபோன்றவைகளைத் தைப்பதாம். இன்னும் சொர்க்கத்தில் வர்த்தகம் நடக்கிறபக்ஷத்தில் ஜவுளிவர்த்தகம் நடக்குமென்றும், நரகத்தில் வர்த்தகமிருந்தால் காசுக்கடை வர்த்தகமிருக்குமென்றும் ஹதீஸில் வந்திருக்கிறது.

நான்கு தொழில்கள் கேவலமாக்கப்பட்டிருக்கின்றன. அவை:- நெசவுத்தொழில், பஞ்சுவிற்கும் தொழில், நூல்நூற்கும் தொழில், படித்துக்கொடுக்கிற உபாத்திமைத்தொழில் இவைகளேயாம். இவைகளைக் கேவலமாக்கினதற்குக் காரணம் யாதெனில், இவர்கள் தங்கள் தொழில்களைச் செய்வதில் ஸ்திரீகளிடத்திலும் சிறுவர்களிடத்திலும் சகவாசம் செய்ய வேண்டியவர்களாயிருக்கிறார்கள். எவனொருவன் புத்தியீனர்களோடு கலந்திருக்கிறானோ அவன் புத்தியீனனாகுவான்.

மூன்றாவது:—துன்யாவுடைய கடைவீதியானது ஆகிரத்துடைய கடைவீதியினின்று அவனை நீக்கிவைக்காமலிருக்கவேண்டும். ஆகிரத்துடைய கடைவீதியென்பது பள்ளிவாசல்களாயிருக்கும். பத்திரம், வர்த்தகப் பராக்கானது உங்களை அல்லாகுதஆலாவுடைய ஞாபகத்திலிருந்து நீக்காமலிருக்கட்டும். அதனால் நீங்கள் நஷ்டத்தையடைவீர்கள் என்று குர்ஆன் ஷரீபு கூறுகின்றது. இன்னும் "ஓ வர்த்தகர்களே! நீங்கள் முற்பகலை ஆகிரத்துக்காகவும் பிற்பகலை துன்யாவுக்காகவும் விட்டுவிடுங்கள்" என்று உமர் றலியல்லாகு அன்கு அவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். ஸலபுகளான முன்னோர்களின் வழக்கம் எப்படியிருந்ததென்றால், அவர்கள் காலைமாலைகளில் ஆகிரத்துடைய அமல்களைச் செய்வார்கள். பள்ளிவாசலில் அல்லாகுதஆலாவுடைய திக்ரு, அவுராதுகளில் பராக்காயிருப்பார்கள். அல்லது இல்முடைய மஜ்லிஸில் போயிருப்பார்கள். * ஹரீஸா, பொரித்த தலைக்கறி முதலிய பலகாரபட்சணங்களைச் சிறுவர்களும் திம்மிக்காபிர்களும் கொண்டுவந்து விற்பார்கள். அப்போது ஜனங்கள் பள்ளிவாசலில் இருப்பார்கள். இன்னும் ஹதீஸ் ஷரீபில் அமல்நாமாவென்றும் பட்டோலைகளை மலக்குகள் கொண்டுபோவார்களென்றும், நாளின் ஆரம்பத்திலும் கடைசியிலும் மனிதன் ஏதாவது நன்மை செய்திருந்தால் நடுவே செய்த தீமைகளெல்லாம் மன்னிக்கப்படுமென்றும் வந்திருக்கிறது. இன்னும் இரவு, பகல்களின் மலக்குகள் காலையிலும் மாலையி

* ஹரீஸா என்பது கோதுமை ரவையும் இறைச்சியும் நெய்யும் உப்பு முதலிய மசாலைகளும் சேர்த்துச் செய்யப்படுகிற ஓர்வித புணர்ப்பகமாம்.



லும் சேகரமாகிறார்களென்றும், அப்போது அல்லாகுதஆலா அவர்களிடத்தில் நீங்கள் என்னுடைய அடியார்களை எந்த நிலைமையில் விட்டு வந்தீர்களென்று கேட்கிறான் என்றும், அதற்கவர்கள் எங்கள் நாயகனே! நாங்கள் அவர்களை விட்டுவரும்போதும் அவர்களிடம் போகும்போதும் அவர்கள் தொழுதுகொண்டிருந்தார்களென்று விண்ணப்பஞ் செய்கிறார்கள் என்றும், அப்போது அல்லாகுதஆலா அவர்களை நான் மன்னித்துவிட்டேன், நீங்கள் சாக்ஷியாயிருங்கள் என்று சொல்லுகிறான் என்றும் ஹதீஸில் வந்திருக்கிறது. பகலில் பாங்கு சத்தங் கேட்டால் அப்போது தாமதஞ் செய்யாமல் எந்தவேலையிலிருந்தாலும் அதை விட்டுவிட்டுப் பள்ளிவாசலுக்குப் போகவேண்டும். வர்த்தகமும் விற்பனையும் அல்லாகுதஆலாவுடைய ஞாபகத்திலிருந்து அவர்களை மறக்கச்செய்யாது என்று வந்திருக்கிற இந்த ஆயத்தின் தப்ஸீரில் கூறியிருக்கிறதாவது:—இந்த ஆயத்தில் சுட்டிய கூட்டங்கள் எப்படிப்பட்டவர்களென்றால், இவர்களில் கருமாரவேலை செய்பவர்கள் சம்மட்டியைத் தூக்கின சமயத்தில் பாங்கு சத்தத்தைக் கேட்டால் பிறகு அவர்கள் அதை இரும்பின்மேல் அடிக்காமல் விட்டுவிடுவார்கள். சம்மார்வேலை செய்பவர்கள் செருப்பில் ஊசியைக் குத்தின சமயத்தில் பாங்கைக் கேட்டால் பிறகு அந்த ஊசியை வெளியே இழுக்கமாட்டார்கள். அப்படியே விட்டுவிட்டுத் தொழுகைக்குப் புறப்படுவார்கள் என்பதே.

நான்காவது:—கடைவீதியில் அல்லாகுதஆலாவுடைய திக்ரையும், தஸ்பீஹையும், ஞாபகத்தையும் மறக்காமலிருப்பதாம். கூடியவரையில் நாவையும் மனதையும் இக்காரியங்களில் ஆக்கிக்கொள்ளுவான். இதை விடுகிறதினால் தப்பிப்போகிற பிரயோசனத்துக்கு எல்லா உலகமும் ஈடாகமாட்டாதென்றும், மறந்திருப்பவர்களுக்கு நடுவே உண்டாகிற திக்ரின் சவாபு அதிகமென்றும் அறிந்துகொள்ளுவான். நபிகள் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் தங்கள் திருவாயினால் "மறதியாளரின் நடுவே அல்லாகுதஆலாவை ஞாபகம்செய்கிறவன் பட்ட மரங்களின் நடுவே பச்சைமரம்போலும், செத்தசவங்களின் நடுவே ஜீவித்திருப்பவன்போலும், சண்டைமுகத்திலிருந்து ஓடுகிறவர்களின் நடுவே சமர்த்தாய்ப் போர்புரிபவன்போலும் ஆகுவான்" என்று திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும் யாராவதொருவன் கடைத்தெருவிற்போய் லாஇலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீக லஹு லஹுல் முல்கு வலஹுல் ஹம்து யுஹ்யீ வயுமீத்து வஹுவ ஹைய்யுன் லாயமூத்து பியதிஹில் கைரு வஹுவ அலாகுல்லி ஷைஇன் கதீர்.

என்று ஹதீஸ்களிலும் அவனுக்காக இரண்டுமுறை ஆயிரம் ஆயிரம் நன்மைகள் எழுதப்படுமென்று திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும் ருகீகளுடைய காதைப் பிடித்து (அவர்களை இழுத்துவிட்டு) அவர்களுடைய ஸ்தானத்தில் உட்கார அருகரான (வர்த்தகர்) அவிவேகியோர் கடைவீதியில் இருக்கிறார்கள் என்றார், கடையில் நினைக்கொண்டு விருதாக முந்நூறு மக்கூக்கு தொழுதுகொண்டும் முப்பதினாயிரம் தஸ்பீஹுகளை ஓதிக்கொண்டும் வருகிற ஒருவனிருந்தான் என்று அறிவேன் என்றும் ஹஸரத்து ஜுனைது றஹிமஹுல்லா அவர்கள் ஒருநாள் சொல்லிக்கொண்டிருந்தார்கள். இவர்கள் தங்களைக் குறித்தே இப்படிச் சொன்னார்களென்று உலமாக்கள் சொல்லியிருக்கிறார்கள். மொத்தத்தில், எவனொருவன் தன்னுடைய காரியங்களின் உதவிக்காக உணவைச் சம்பாதிக்கும் பொருட்டுக் கடைவீதிக்கு வர்த்தகம் செய்யப் போகிறானோ அவனே இப்படியிருப்பான். அவன் தன்னுடைய முக்கிய நோக்கத்தை விடமாட்டான். இன்னும் எவனொருவன் தான் யாவை அதிகப்படுத்தும்பொருட்டு வர்த்தகம் செய்யக் கடைக்குப் போகின்றானோ அவனால் இது முடியாது. மேலும், அவன் பள்ளிவாசலில் வந்து தொழுதாலும் அப்போதும் அவன் மனமானது கணக்கெழுதுக் கடைக்கணக்கில் லயித்துக்கொண்டிருக்கும்.

ஐந்தாவது:—கடைவீதியின்மேல் அதிக ஆவல் கொள்ளாதிருப்பதாய். எதுபோலெனில், எல்லாருக்கும் முந்தி கடைவீதிக்குப்போவது, எல்லாருக்கும் கடைசியாய் அங்கிருந்து வருவதுபோல், இன்னும் பயங்கரமுள்ள கப்பல்யாத்திரைக்குச் சமீபம்போவது, கடல் யாத்திரை செய்வதுபோல், இவைகளெல்லாம் அதிக ஆவலின் பொருட்டால் உண்டாகிறவைகளாம். இன்னும் மஆதுபுனுஜபல் றழியல்லாஹு அன்ஹு அவர்கள் சொல்லியிருக்கிறதாவது:—இப்லீசுக்கு ஸலம்பூர் என்னும் பெயருள்ள ஓர் மகனிருக்கிறான். அவன் இப்லீசுக்கு காரியாகிக் கடைவீதிகளில் இருப்பான். இப்லீசானவன் அவனைக் கடைவீதிகளிற் போய்க் கடைக்காரர்களுக்கு வஞ்சகம், பொய், மோசம், சத்தியங்கள் இவைகளைப் போதித்துக்கொண்டிரு என்றும், எல்லாருக்கும் முந்தி கடைக்குப்போகிறவனும் எல்லாருக்கும் கடைசியாய் அங்கிருந்து வருகிறவனுமான மனிதனையே அன்றுமிரு என்றும் ஆக்ஞாபித்துவைப்பிருக்கிறான் என்பதே. இன்னும் எல்லா இடங்களிலும் மிகக்கெட்டது கடைவீதியென்றும், எல்லாவர்த்தகர்களிலும் மிகக்கெட்டவன் முந்திப்போய் பிந்திவருகிறவனென்றும் ஹதீதில் வந்திருக்கிறது. ஆதலால் வர்த்தகன் இஸ்லாமுடைய மதிப்பினையும் காப்பாற்றவுடைய அசூரா



களையும் ஹஸரத்துடைய தொழுகையையும் விட்டுப் பாக்கொழியாத வரையில் கடைவீதிக்குப் போகிறதில்லை யென்று தன்மேல் விதித்துக்கொள்ளுவான். இன்னும் அன்றையின் செலவுக்குப் போதுமான அளவு இலாபம் கிடைத்துவிட்டால் கடையிலிருந்து திரும்பிப்பள்ளிவாசலுக்குப்போய் ஆகிரத்துடைய வாழ்க்கைக்கு வேண்டிய தங்கரிப்புகளைச் சம்பாதிப்பான். ஏனென்றால், அவ்விடத்தின் வயது மிகவும் பெரிதாயிருப்பதினாலும் தங்கரிப்பு அதிகந்தேவையாதலினாலும் மனிதன் அதனுடைய தங்கரிப்பில்லாமல் தரித்திரனாயிருப்பதினாலுமேயாம். ஹம்மாதுபுனுசல்மா றழியல்லா அவர்கள் ஹஸரத்து இமாம் அபூஹனீபா றஹிமஹுல்லா அவர்களுடைய உஸ்தாதாயிருக்கிறார்கள். இவர்கள் மக்கள் என்னும் மூக்காட்டுப் பிடவை விற்பவர்களாயும், அப்படி விற்கும்போது இரண்டு ஹப்பா இலாபம் கிடைத்துவிட்டால் மூட்டையைக் கட்டிக்கொண்டு திரும்பி விடுகிறவர்களாயுமிருந்தார்கள். இபுராஹீமுபுனு யஷார் றஹிமஹுல்லா அவர்கள் ஒருநாள் இபுராஹீமுபுனு அதுஹம் றஹிமஹுல்லா அவர்களைக் கண்டு "நான் இன்று மண்வேலைக்குப் போகிறேன்" என்று சொன்னார்கள். அதற்கவர்கள், "யஷாருடைய புத்திரரே! நீர் இரணத்தைத் தேடுகிறீர். மௌத்து உம்மைத் தேடுகிறது. உம்மைத்தேடுகிற மௌத்துக்கும் நீர் தப்பமாட்டீர். நீர் தேடுகிற இரணமும் உம்மைவிட்டும் தப்பிப் போகாது. ஆனால், ஆவலாய்த் தேடுகிற ஹரீசின் எண்ணம் நிறைவேறாமல் அவன் தரித்திரனாயிருப்பதையும், தேடாமற் சும்மாய்க் கிடப்பவன் இரணம் பெறுவதையும் நீர் ஒருபோதும் கண்டதில்லை போலிருக்கிறது" என்றார்கள். அதற்கு இபுராஹீமுபுனு யஷார் அவர்கள் "நான் ஒருவர்த்தகனிடம் கொடுத்துவைத்திருக்கிற ஒரு பணமேயொழிய வேறொன்றும் என்னிடத்தில் கிடையாது" என்றார்கள். அதற்கு இபுராஹீமுபுனு அதுஹமவர்கள் "ஆ! உம்முடைய இஸ்லாமின் மேல் மிகவும் கைசேதம்!! உம்முடைய கையினத்தில் ஒரு பணமிருக்கப் பின்பும் நீர் மண்வேலைக்குப் போகிறீர்" என்று சொன்னார்கள். ஸலபுகளான முன்னோர்களில் ஒரு கூட்டம் ஒரு வாரத்தில் இரண்டு நாளைக்குமேல் கடைக்குப் போகாதவர்களாயிருந்தார்கள். இன்னும் சிலர் தினந்தோறும் கடைக்குப்போய் ளுஹறு தொழுகைக்கு முன்னே திரும்பி விடுகிறவர்களாயிருந்தார்கள். இன்னும் சிலர் அசறுவரையில் கடையிலிருப்பவர்களாயிருந்தார்கள். இவர்களில் ஒவ்வொருவரும் அன்றையதினத்தின் இரணம் கிடைத்துவிட்டால் பிறகு பள்ளிவாசலுக்குப் போய்விடுவார்கள்.

ஆறாவது:—ஹலால் என்றும் ஹராம் என்றும் தெரியாமல் சந்தேகமாயிருக்கிற ஷுப்ஹத்தான பொருளை விட்டும் பேணுதல் செய்வான்; ஹராமான பொருளை வாங்குவானாகில் பாஸிகாயும் பாவியாயும் போவான். சந்தேகமாயிருக்கிற பொருளின் விஷயத்தில், தானே தீர்ப்புச் செய்துகொள்ளத் திறமையுடையவனாயிருந்தால் (வேறு முப்திகளிடத்தில் அல்ல) தன் மனமென்னும் முப்தியிடத்தில் பத்வாவைக் கேட்பான். இது மிகவும் அரிதாயிருக்கும். எந்தப்பொருளின் விஷயத்தில் தன் மனதுக்கோர் அருவருப்பு உண்டாகின்றதோ அந்தப் பொருளை வாங்கமாட்டான். அக்கிரமக்காரர்களிடத்திலும் அவர்களைச் சேர்ந்தவர்களிடத்திலும் முஆமலா செய்யமாட்டான். எந்த அக்கிரமக்காரனுக்கும் சரக்கைக் கடனாய்க் கொடுக்க மாட்டான். ஏனென்றால், அந்த அக்கிரமக்காரன் செத்தால் இந்தக்கடன் கொடுத்தவன் அவனைப்பற்றித் துக்கப்பட வேண்டியதாவதாலும், அக்கிரமக்காரனுடைய மவுத்தின்மேல் துக்கப்படுவதும் அவனுடைய சிமீன் தனத்தின்மேல் சந்தோஷப்படுவதும் ஆகாததாகுமேயாம். அக்கிரமக்காரர் எந்த வஸ்துவைத் தங்கள் அக்கிரமத்துக்கு உதவியாய்த் தேடுகிறார்களோ அந்த வஸ்துவை அவர்களிடம் விற்கமாட்டான். விற்றால் இவனும் அக்கிரமத்தில் அவர்களோடு கூட்டாளுவான்.

உதாரணமாக:—எல்லா ஹக்குகளையும் எடுத்துக்கொள்ளப் பார்க்கிற முஸ்தவுபிகளுக்கும் அக்கிரமக்காரருக்கும் காகிதத்தை விற்பானாகில் குற்றவாளியாகுவான். மொத்தத்தில் எல்லாரிடத்திலும் முஆமலா செய்யாமல் அதற்குத் தகுந்தவர்களைத் தேடி முஆமலா செய்ய வேண்டுமென்பதே இதன் கருத்தாகும். உலமாக்கள் சொல்லியிருக்கிறார்கள், அதாவது:—முன் ஒருகாலமிருந்தது. அக்காலத்தில் ஒருவன் கடையிலிருந்துகொண்டு நான் யாரிடத்தில் முஆமலா செய்யலாமென்று கேட்டால், நீ யாரிடத்தில் நாடினாலோ அவர்களிடத்தில் முஆமலா செய்துகொள், எல்லாரும் பேணுதலுள்ளவர்களாகவே யிருக்கிறார்கள் என்று சொல்லுவார்கள். பின்பு ஒரு காலம் வந்தது. அக்காலத்திலுள்ள ஜனங்களிடத்தில் ஒருவன் இவ்விதம் கேட்டால் நீ எல்லாரிடத்திலும் முஆமலா செய்துகொள், ஆனால் இன்னாரிடத்தில் செய்யாதே என்று சொல்லுவார்கள். பின்பு ஒருகாலம் வந்தது. அதில் நீ யாரிடத்திலும் முஆமலா செய்யாதே, ஆனால் இன்னாரிடத்தில் செய்துகொள் என்று சொல்லுவார்கள். இனி யாரிடத்திலும் முஆமலா செய்யக்கூடாத ஒருகாலம் வருமென்று அச்சமிருக்கிறது என்றே, இதுவோ, நம் காலத்துக்கு முன்னே



சொல்லப்பட்ட வார்த்தையாயிருக்கிறது. நம்காலமாகிய இக்காலத்தில் முஆமலாவில் வித்தியாசமே இல்லாமல் எடுபட்டுப் போயிருக்கலாம். இன்னும் இல்மில் குறைந்தவர்களும் தீனில் பூரணத்தன்மையை அடையாதவர்களுமான சில அறிவாளர்கள், துன்யாவுடைய பொருளெல்லாம் ஒரேமாதிரியாய் விட்டதென்றும், சகலமும் ஹராமான பொருளாயிருக்கிறதென்றும், இதை விட்டும் பேணுதல் செய்ய முடியாதென்றும் சொல்வதை ஜனங்கள் கேட்டு மிகவும் துணிகரமுள்ளவர்களாய்ப் போயிருக்கலாம். இந்த அறிவாளிர் சொல்வது மிகவும் தப்பிதமான பேச்சாயிருக்கிறது. இவர்கள் சொல்வதுபோல் உண்மையில் காரியம் அப்படியல்ல. இதைப்பற்றி ஹலால், ஹராம்களைப் பிரித்தறியும் பாகத்தில் பின்வருகிற நாலாவது உஸூலில் விபரித்தெழுதப்படும்.

ஏழாவது:—யாரிடத்தில் முஆமலா செய்கிறானோ அவனைப் பற்றிய சொல், செயல், கொடுக்கல், வாங்கல் இவைகளில் தன் கணக்கைச் சரியாய் வைத்துக்கொள்ளுவான். கியாமத்துநாளில் இவனை ஒவ்வொருவரோடும் நிறுத்தி நியாயங் கேட்கப்படுமென்பதை நினைவில் வைத்துக்கொள்ளுவான். பெரியோர்களில் ஒருவர் ஒருவர்த்தகனைக் கனவில் கண்டு "அல்லாகுதஆலா உனக்கு என்னசெய்தான்?" என்று கேட்டார்கள். அதற்கவன் "ஐம்பதினாயிரம் ஸஹீபாக்கள் என்னும் ஏடுகளை என்முன்னே வைத்தான். அப்போது நான் என்னுடைய ஆண்டவனே! இந்த ஏடுகள் எவருக்குள்ளவை? என்று கேட்டேன். அதற்கு அல்லாகுதஆலா ஐம்பதினாயிரம் பேர்களிடத்தில் நீ முஆமலாச் செய்திருக்கிறாய். இந்த ஏடுகள் ஒவ்வொன்றும் ஒவ்வொருவரைப்பற்றின கணக்காயிருக்கிறது என்று கூறினான். அந்த ஏடுகள் ஒவ்வொன்றிலும் நான் அவர்களுடன் செய்த முஆமலாக்களை ஆதியோடந்தமாகக் கண்டேன்" என்று அந்த வர்த்தகன் சொன்னான். இதன் கருத்தாகிறது:—ஒருவனை மோசஞ்செய்து அபகரித்துக் கொண்ட தாங்கு என்றாலும், சின்னப்பணமாவது ஒருவன்மேல் இருக்குமாகில் அதைப்பற்றிய குற்றத்துக்காக அவன் பிடிக்கப் படுவான் என்பதும், அதற்கு அவன் ஜவாபுசொல்லி ஈடுசெய்யாதிருக்கிறவரையில் ஒருவஸ்துவும் அவனுக்குப் பிரயோசனங்கொடாதென்பதுமேயாம்.

முஆமலா விஷயமாய் மேற்சொல்லிவந்ததுதான் ஸலபுகளான முன்னோர்களின் நடவடிக்கையாயும் ஷரகுடைய பாதையாயுமிருக்கிறது. இந்த நடவடிக்கையான சுன்னத்தும் எடுபட்டுப்போயிருக்கிறது.

இப்படியான முஃஜிஸாக்களையும் இதன் இல்லையும் இக்காலத்து ஜனங்கள் மறந்துபோனார்கள். யாதாவதொருவன் இந்த சுன்னத்துகளில் ஒன்றை அநுஷ்டானத்துக்குக் கொண்டுவருவானாகில் அவனுக்குப் பெரிய சவாபு கிடைக்கும். ஏனென்றால், ரசூல்சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் தங்கள் திருவாயினால், "ஒருகாலம் வரும்" என்றும், "அக்காலத்தில் நீங்கள் இப்போது அநுஷ்டித்து வருகிற பேறுதல்களில் பத்திலொருபங்கை யாராவது அநுஷ்டிப்பானாகில் அது அவனுக்குப் போதும்" என்றும் சொன்னார்கள். அப்போது அஸ்ஹாபுகள் "அது ஏன்? யாரசூலல்லா!" என்று கேட்க, அதற்கு நாயகமவர்கள் "நன்மையான காரியங்களின்பேரில் அவர்கள் செய்ய உங்களுக்கு உதவியிருக்கிறதினால் அது உங்களுக்கு இலேசாயிருக்கும். அக்காலத்தில் அவர்களுக்கு உதவியிருக்காது. அவர்கள் அருமையாயிருப்பார்கள். அன்றியும் அவர்கள் மறதியாளரின் கூட்டமேயிருப்பார்கள்" என்று திருவுளமானதாய்ஹதீதில் வந்திருக்கிறது.

இதைச்சொல்ல வாய்த்தது எதற்கென்றால், யாராவதொருவன் இந்தப்பேறுதல்களையெல்லாம் அநுஷ்டிக்க யாரால் முடியுமென்றும், இக்காலத்தில் அநுஷ்டித்து வருகிற பேறுதல்களே அதிகமென்றும் சொல்லி ஆதரவற்றுப் போவானாகில், அவன் இதைப் பார்த்து அப்படிச் சொல்லாமலும் ஆதரவற்றுப் போகாமலுமிருப்பதற்கேயாம். எவனாவது, எவனொருவன் ஆகிறத்தானது துன்யாவைப் பார்க்கிலும் அதிகமேலானதென்று ஈமான் கொண்டிருக்கிறானோ அவன் இந்த எல்லாப் பேறுதல்களையும் அநுஷ்டித்து வரக்கூடும். ஏனென்றால், இவைகளை அநுஷ்டிப்பது ஏழைத்தனத்தை யன்றி வேறொன்றையும் சகிப்பிக்காது. என்னவென்றால் ஆகிறத்தின் இராஜரீகத்தை அடைய ஆசைகொண்டவன் அதற்காக அநுஷ்டிக்கும் பேறுதல்களினால் எவ்வளவு ஏழையாய்ப்போனாலும் அது அவனுக்குக் கஷ்டமாய்த் தோற்றாது சகித்துக்கொள்ளக்கூடும். ஏனென்றால், உலகத்தில் ஜனங்கள் ஏதாவது பொருள் கிடைக்குமென்ற அல்லது யாதொரு தேசம் வசமாகுமென்ற எண்ணத்தினால் பிறதேசங்களுக்கு யாத்திரை செய்கிறார்கள். அப்படிச் செய்யும்போது வழிக்குவேண்டிய சாமக்கிரியைகள் இல்லாமற்போவதாலும் நடையினாலும் நேரிடுகிற கஷ்ட நஷ்டங்களையும் சிறுமைகளையும் வெகுவாய்ச்சகித்துக்கொள்ளுகிறார்கள். இம்மென்று மனுஷர்கள் அந்த எல்லா எண்ணங்களும் நன்றுமில்லாமல் ஒழிகின்றன. ஆகிறத்துடைய இராஜரீகத்தை அடையும்பொருட்டு ஒருவன் தனக்குப் பிரியஞ்செய்யுந் தான் பொருந்தாத ஒருகாரியத்



தைத் தானும் பிறனுக்குச் செய்யாமலிருப்பது அவ்வளவு பெருங் காரியமல்லவே.

## நான்காவது அஸ்லு—ஹலால், ஹராம், ஷுபுஹாத்து இவைகளைப் பிரித்தறியும் பயான்.

அறிந்துகொள்:—"ஹலாலைத்தேடுவது முஸ்லிம்களாயிருக்கிற எல்லார்மீதும் பர்லாயிருக்கிறது" என்று ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். ஹலால் இன்னதென்பதை நீ அறிந்துகொள்ளுகிறவரையில் ஹலாலைத்தேட உன்னால் முடியாது. இன்னும் ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் தங்கள் திருவாயினால் "ஹலாலும் தெரிந்ததாயிருக்கிறது, ஹராமும் தெரிந்ததாயிருக்கிறது, ஷுபுஹாத்தானது இவ்விரண்டிக்கும் மத்தியில் மறைந்ததாயும் கஷ்டமானதாயுமிருக்கிறது" என்றும், "யாராவதொருவன் அந்தஷுபுஹாத்துகளிடம் சுற்றித் திரிவானாகில் அவன் ஹராமில் விழுவான் என்ற அச்சமிருக்கிறது" என்றும் திருவுளமாயிருக்கிறார்கள்.

இன்னுமறிந்துகொள்:—இது ஒரு பெரிய இல்மாயிருக்கும். இஹ்யா என்னும் கிதாபில் இதைப்பற்றி விரிவாய்ச் சொல்லியிருக்கிறோம். எந்த கிதாபிலும் அவ்வளவு விரிவாய்க் கிடைக்கமாட்டாது. இந்த கிதாபில் அவாம்களென்னும் சாமானிய ஜனங்களுடைய புத்தியில் அடங்கக்கூடிய அளவாய்ச் சிலவற்றைச்சொல்லுவோம். அன்றியுமிதை நான்கு பாபுகளில் விஸ்தரித்து எழுதுவோம்.

## முதலாவது பாபு—ஹலாலைத் தேடுவதின் சவாபிலும் அதன்வரிசையிலும் பேசுவது.

அறிந்துகோள்:—அல்லாகுதஆலா திருவுளமாகிறான். அதாவது:—ஓ ரசூல்மார்களே! நீங்கள் ஹலாலும் சுத்தமுமாயிருக்கிற வஸ்துக்களில் நின்றும் தின்னுங்கள். இன்னும் ஸாலிஹான அமலைச் செய்யுங்கள் என்பதே. இதன்நிமித்தமே ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் "ஹலாலைத்தேடுவது முஸ்லிம்கள் எல்லார்மீதும் பர்லு" என்று திருவுளமானார்கள். இன்னும் "யாராவதொருவன் நாற்பது நாளைக்கு ஹராம் கலக்காதபடி சுத்தமான ஹலாலைத் தின்பானாகில் அல்லாகுதஆலா அவனுடைய மனதை ஒளியினால் நிறப்புவான்" என்றும், "அவன்மனதிலிருந்து ஹிக்மத்தென்னும் நீர்க்குமிழிகளைத் திறந்துவிடுவான்" என்றும் திருவுளமாயிருக்கிறார்கள். இன்னுமொரு ரிவாயத்தில் "துன்யாவுடைய ஆசையை அவன் மனதிலிருந்து அகற்றிவிடுவான்" என்றும் வந்திருக்கிறது. அஸ்ஹாபுகளில் நின்றும் பெரிய ஓர் ஸஹாபியாயி

ஸஃது றலியல்லாகு அன்கு நாயகமவர்களுடைய சமூகத்தில், "யாறஸூ
லல்லா! நான் எதற்காகவாயினும் துஆ கேட்டால் அது கபூலாகும்படித்
தாங்கள் துஆ செய்யவேண்டும்" எனக்கோரினார்கள். அப்போது நாயக
மவர்கள் "நீர் ஹலாலான உணவையே தின்றுவர்; அப்போது உம்முடைய
துஆ கபூலாகுவதாயிருக்கும்" என்று திருவுளமானார்கள். இன்னும் றஸூ
லுல்லாஹி ஸல்லல்லாகு அலைஹிவஸல்லம் அவர்கள், "சில ஜனங்கள் இருக்கிறார்கள்"
என்றும், "அவர்கள் உண்பதும் உடுப்பதும் ஹறாமானதாயிருக்கிறது"
என்றும், "அவர்கள் கையேந்தி துஆ கேட்டால் இது எப்போது
கபூலாகப்போகிறது" என்றும் திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும்
"அல்லாகுதஆலாவுக்கு பைத்துல் முகத்தஸில் ஒரு மலக்கு இருக்கிற
தாயும், அந்த மலக்கு ஒவ்வொரு இரவிலும் சத்தமிட்டு, யாராவதொரு
வன் ஹறாமைத் தின்பானாகில் அல்லாகுதஆலா அவனிலிருந்தும்
பர்ளையும் கபூல் செய்யமாட்டான், சுன்னத்தையும் கபூல் செய்ய
மாட்டான்" என்று சொல்லுகிறதாயும் திருவுளமாயிருக்கிறார்கள்.
இன்னும் "ஒருவன் பத்து திர்ஹத்துக்கு ஒரு பிடவை வாங்கு
வதில் ஒரு திர்ஹம் ஹறாமானதாயிருந்தால் அந்தப் பிடவை அவன்
தேகத்திலிருக்கிற வரையில் அவனுடைய தொழுகை கபூல் செய்யப்
படாது" என்றும் திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும் "ஹறாமான தீனி
யால் வளர்ந்த சதைக்கு நெருப்பே மிகவும் ஏற்றது" என்றும் திரு
வுளமாயிருக்கிறார்கள். இன்னும் "ஒருவன் எங்கிருந்தும் பொருள் சம்
பாதிப்பதை இலட்சியம் செய்யாதவனாயிருப்பானாகில் அல்லாகு
தஆலா அவனை எங்கிருந்தாயினும் நரகத்திற்போட இலட்சியம் செய்ய
மாட்டான்" என்றும் திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும் "இபாதத்தா
னது பத்து பங்காயிருக்கிறது" என்றும், "அதில் ஒன்பது பங்கு இபா
தத்து ஹலாலைத் தேடுவதாயிருக்கும்" என்றும் திருவுளமாயிருக்கிறார்
கள். இன்னும் "ஒருவன் ஹலாலைத் தேடுவதில் நின்றும் களைப்ப
டைந்து இரவில் வீட்டுக்கு வருவானாகில் அவன் பிழை பொறுக்கப்
பட்டவனாய்த் தூங்குவான்" என்றும், "காலையில் அவன் விழிக்கும்
போது அல்லாகுதஆலா அவன்மேல் சந்தோஷமாயிருப்பான்" என்
றும் திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும் "எந்த ஜனங்கள் ஹறாமை
விட்டும் பேணுதல் செய்கிறார்களோ அந்த ஜனங்களிடத்தில் கணக்
குக்கேட்க நாணப்படுகிறேன்" என்று அல்லாகுதஆலா சொல்
லுகிறதாயும் திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும் "வட்டியில் நின்றும்
ஒரு திர்ஹமாகிலும் ஒருவன் இலாபமாயிருக்கிற பொழுதில் முப்பது
தரம் செய்கிற ஜினாவைப் பார்க்கிலும் மிகக்கடினமானது" என்றும்
திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும் "ஒருவன் ஹறாமான பொருளைச



சம்பாதிப்பானாகில் அதை அவன் சதகா கொடுத்தால் கபூலாகாது.
சும்மாவைத்திருந்தால் அவன் நரகவாசல் போய்ச் சேருகிறவரை
யில் அது அவனுக்கு வழிச்செலவாகும்" என்றும் திருவுளமாயிருக்கி
றார்கள்.

இன்னும் அபூபக்கர் சித்தீகு றலியல்லாகு அன்கு அவர்கள் ஒரு
அடிமையினுடைய கையிலிருந்து பால்வாங்கி அருந்தினார்கள். பின்பு
அது ஹலாலானதல்லவென்று தெரிந்தது. வாந்தியினால் அதை வெளி
ப்படுத்தக்கருதித் தொண்டையில் விரலைவிட்டார்கள். வாந்தி பெறுவ
தற்காக அவர்கள் பட்ட கஷ்டத்தில் அவர்களுடைய உயிர் நீங்கி
விடுமென்று பயமாயிருந்தது. அப்படி பெறுத்தபிறகு "என்னுடைய
நாயனே! உள்ளேயிருந்து வெளிப்படாமல் என் நரம்புகளில் தங்கி
விட்டபாலின் தீங்கைவிட்டும் உன்னிடம் காவல் தேடுகிறேன்" என்று
சொன்னார்கள். உமர் றலியல்லாகு அன்கு அவர்களும் இப்படியே
செய்திருக்கிறார்கள். ஏனென்றால் சதகாவில் வந்த பாலைப் பிசகாய்
அவர்களுக்குக் கொடுத்திருந்ததினாலேயாம். இன்னும் "நீ உன் முதுகு வளை
ந்து கூனும்படி அவ்வளவு தொழுகை தொழுதாலும், உரோமம்போல்
மெலிந்து கரையும்படி அவ்வளவு நோன்பு வைத்தாலும், ஹறாமை
விட்டும் பேணுதல் செய்யாதிருக்கிறவரையில் உன் தொழுகையும்
நோன்பும் உனக்குப் பயன்படமாட்டாது, கபூலுமாகாது" என்று
அப்துல்லாஹிப்னு உமர் றலியல்லாகு அன்குமா சொல்லியிருக்கிறார்
கள். இன்னும் "யாராவதொருவன் ஹறாமான பொருளைச் சதகா கொடுப்
பானாகில், இன்னும் தருமம் செய்வானாயின், நஜீஸான பிடவையைச்
சுத்தமாக்க நாடி அதை மூத்திரத்தில் தோய்த்து மிகவும் அசுத்தமாக்கு
கிற ஒருவனுக்கு இவன் ஒப்பாகுவான்" என்று யஹ்யா சவீ றஹ்ம
துல்லா அவர்கள் சொல்லுகிறார்கள். இன்னும் "இபாதத்தானது அல்
லாகுதஆலாவுடைய பொக்கிஷம்" என்றும், "துஆவானது அதற்குத்
திறவுகோல்" என்றும், "ஹலாலான தீனியானது அந்தத் திறவுகோலுக்
குப் பல்லுகள்" என்றும் வஹ்பிப்னு முனப்பிஹ் றலியல்லாகு அன்கு சொல்
லுகிறார்கள். இன்னும் ஸஹ்லுத்துஸ்தரீ றஹிமகுல்லா அவர்கள் சொல்லு
கிறதாவது:—நாலு வஸ்துக்களைக்கொண்டேயொழிய ஒருவனும் ஈமா
னுடைய ஹகீகத்தை எத்திக்கொள்ளான். அவற்றுள் முதலாவது:—
எல்லா பர்ளுகளையும் சுன்னத்துடைய விதியின்படி நிறைவேற்றுவ
தும், இரண்டாவது:—ஹலாலான உணவைப் பேணுதலுடைய விதி
யின்படி உண்பதும், மூன்றாவது:—குற்றமான எல்லாச் செயல்களையும்
விட்டுப் பகிரங்கத்திலும் அந்தரங்கத்திலும் சுத்தமாயிருப்பதும்,

நான்காவது:—இதேவிதமாய் மவுத்துவரையில் சபுரு செய்துகொண்டிருப்பதுமாம் என்பதே. இன்னும் "யாராவதொருவன் நாற்பது நாளைக்கு ஷுபுஹத்தான தீனியைத் தின்பானாகில் அவனுடைய மனம் இருண்டுபோம்" என்றும் சொல்லியிருக்கிறார்கள். இன்னும் "நாறுபிரம் திருஹங்களைச் சதகாசெய்வதிலும் ஷுபுஹத்தான ஒரு திருஹத்தை உடையவனிடம் திரும்பக் கொடுத்துவிடுவது எனக்கு மிகப்பிரியமானது" என்று இப்னுல் முபாறக்கு றஹிமஹுல்லா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இன்னும் "யாராவதொருவன் ஹறாமான தீனியைத் தின்பானாகில், அவன் இச்சித்தாலும் இச்சிக்காமற்போனாலும் இயல்பாகவே அவனுடைய தேகமுழுமையும் பாவத்தில் உழலும்" என்றும், "இன்னும் யாராவதொருவன் ஹலாலான உணவை உண்பானாகில், அவனுடைய அவயவங்கள் முழுதும் இபாதத்தில் இருக்கும்" என்றும், "நன்மையின் நல்லுதவியானது அவனுடன் சேர்ந்திருக்கும்" என்றும் ஸஹ்லுத்துஸ்தரீ றஹிமஹுல்லா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

இந்த விஷயத்தில் ஸஹாபிகளும் அனேகருடைய அரிய வாக்கியங்களும் அநேகமாயிருக்கின்றன. இதனைமேலதான் பேணுதல்களை அநுஷ்டித்தவர்கள் பெரும்பேணுதல் செய்து வந்திருக்கிறார்கள். வஹபுப்னுல்வர்து என்பவரும் அவர்களில் ஒருவராம். இவர்கள் எந்த வஸ்துவையும் இது எங்கிருந்து வந்ததென்று தெரிந்து கொள்ளாதவரையில் தின்னுவதில்லை. ஒருநாள் இவர்களுடைய தாயார் கொஞ்சம் பால் கொண்டுவந்து குடிக்கும்படி கொடுத்தார்கள். அப்போது இவர்கள் "இது எங்கிருந்து வந்தது? இதற்குக் கிரயம் எங்கிருந்து கொடுத்தீர்கள்? யாரிடத்தில் வாங்கினீர்கள்?" என்று இவைகளையெல்லாம் கேட்டுத் தெளிந்துகொண்டதின் பின்னால் "இந்த ஆடு எங்கே மேய்ந்தது" என்று கேட்டார்கள். அது முஸ்லிம்களுக்குப் பாத்தியமுள்ள ஓர் இடத்தில் மேய்ந்திருக்கிறதென்று தெரிந்ததினால் அந்தப்பாலை இவர்கள் குடிக்கவில்லை. அப்போது தாயாரவர்கள் இரக்கப்பட்டு, "மகனே! நீ இதைக்குடி; அல்லாஹுதஆலா உனக்கு றஹ்மத்துச் செய்வான்" என்றார்கள். அதற்கிவர்கள் "நான் இதைக் குடிக்கமாட்டேன். அவன் றஹ்மத்து செய்தாலும் சரியே. ஏனென்றால், அப்போது நான் அவனுக்குப் பாவஞ்செய்து, அதன் மூலமாய் அவனுடைய றஹ்மத்தை அடைந்தவனாவேன். இது எனக்குப் பிரியமில்லை" என்றார்கள். பிஷ்ருல்ஹாபி றஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் பெரும்பேணுதலுள்ளவர்களாயிருந்தார்கள். அவர்களிடத்தில் "நீர்



எங்கிருந்து உண்கிறீர்?" என்று கேட்டதற்கு, "எல்லாரும் எங்கிருந்து உண்கிறார்களோ அங்கிருந்தே நானும் உண்கிறேன். ஆனால் உண்டு பயந்து உருகியழுபவனுக்கும் தின்றுமறந்து சிரிப்பவனுக்கும் வித்தியாசமிருக்கிறது" என்றும், "கைநெருங்கியும் கவளம் சுருங்கியும் போவதினால் வேறொன்றும் குறைந்துபோகாது" என்றும், சொன்னார்கள்.

## இரண்டாவது பாபு - ஹலால் ஹறாம் இவைகளில் பேணுவதின் வகுப்புகளைப் பேசுவது.

அறிந்துகொள்:—ஹலால், ஹறாம் இவை ஒவ்வொன்றுக்கும் பலவகுப்புகளிருக்கின்றன. எல்லாம் ஒரேசரி என்பதில்லை. ஹலால்களிற் சிலது ஹலால் மாத்திரமாயும், சிலது சுத்தமான ஹலாலாயும், சிலது மிகச் சுத்தமான ஹலாலாயுமிருக்கிறது. இப்படியே ஹறாம்களிற் சிலது மிகவும் கடினமானதாயும், மிகவும் அசுத்தமானதாயும், சிலது அதிலும் குறைந்ததாயுமிருக்கிறது. உதாரணமாக:-ஒரு நோயாளிக்கு உஷ்ணமான பொருள் உபத்திரவம் செய்வதாயிருந்தால் அதிக உஷ்ணமான பொருள் அதிக உபத்திரவத்தைக் கொடுக்கும். உஷ்ணத்திலும் பலவகுப்புண்டு. உவமையில் தேனானது உஷ்ணத்தில் சர்க்கரைபோலாகாது. ஹறாமும் இதுபோலவாம்.

ஹறாம் ஷுபுஹத்து இவைகளைவிட்டும் பேணுவதில் முஸ்லிம்கள் ஐந்து வகுப்பினராயிருக்கிறார்கள்: முதலாவது வகுப்பு:-சாமானியரின் பேணுதலாம். இது பொதுவாய் எல்லா முஸ்லிம்களும் அநுஷ்டிப்பதாம். ஏனென்றால் உலமாக்களுடைய பத்துவாவென்னும் தீர்ப்பானது எந்தவஸ்துவை ஹறாமென்று வெளிப்படையாய்ச் சொல்லுகிறதோ அந்த வஸ்துவைவிட்டும் இவர்கள் பேணுதல்செய்கிறார்கள். இதுவே மிகவும் தாழ்ந்த வகுப்பாம். யாராவதொருவன் இந்தப் பேணுதலை அநுஷ்டிக்காமற்போனால் அவனை நீதிமான் என்பது ஒழிந்துவிட்டது. அவனை பாஸிகு என்றும் பாவியென்றும் சொல்லுகிறார்கள். இதற்கும் பலவகுப்புகளுண்டு. ஏனென்றால், ஒருவன் மற்றொருவனுடைய சொத்தை அவன் சம்மதியின்மேல் ஷரகில் ஆகாத தப்புக்கிரயத்துக்கு வாங்குவானாகில் இது ஹறாமாயிருக்கிறது. ஆனால் பலாத்காரமாய் அபகரித்துக்கொண்டால் இது அதிலும் கடினமான ஹறாமாகும். ஓர் எத்தீமிடத்திலிருந்து அல்லது ஓர் ஏழையினிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளுவானாகில் இது மிகவும் கடினமான ஹறாமாகும். ஷரகில் ஆகாத தப்புக்கிரயத்துக்கு வாங்குவதோடு அது வட்டிசம்பந்தமானதாயிருந்தால் இது எல்லாவற்றிலும் மிகப்பெரிய ஹறாமாகும். இவையெல்லாவற்றிற்கும் பொதுவாய் ஹறாமென்று பேர்.

சொன்னுஞ்சரியே. எது பெரிய ஹறாமாயிருக்கிறதோ அதைப்பற்றிய அபாயம் ஆகிரத்தில் அதிகமாயும் மன்னிப்பின் ஆதரவு அற்பமாயுமிருக்கும். உதாரணமாக:—உஷ்ணம் ஏற்காத ஓர் நோயாளி தேனைக் குடித்தால் அதன் அபாயமானது சர்க்கரையைத் தின்பதின் அபாயத்தைவிட அதிகமாயிருக்கும். அன்றியும், இவைகளை அதிகமாய் உபயோகிப்பதின் அபாயமானது கொஞ்சமாய் உபயோகிப்பதின் அபாயத்திலும் பெரிதாயிருக்கும்.

ஹலால் எது? ஹறாம் எதுவென்பதின் விபரத்தை பிக்குஹு முழுவதும் ஓதினவன் அறிவான். பிக்குஹு முழுவதையும் ஓதுவது எல்லார்பேரிலும் வாஜிபல்ல. ஏனென்றால், யுத்தத்தில் கிடைத்த கொள்ளைசொத்து, திம்மிகளின்மேல் விதிக்கப்பட்ட ஜிஸ்யாவென்னும் தலைவரி இவைகளில்நின்றும் எவனுக்கு ஏதேனுமம்சம் கிடையாதோ அவன் கொள்ளை முதலைப்பற்றியும் ஜிஸ்யாவைப்பற்றியும் கூறுகிற கிதாபை ஓதவேண்டிய அவசியம் என்ன இருக்கிறது. ஆனால் அவரவருக்கும் எது தேவையாகுமோ அது அவரவர்பேரில் வாஜிபாகும். உதாரணமாக:—ஒருவனுக்கு வர்த்தகத்தைக்கொண்டு வருமானமிருந்தால் கிரயவிக்கிரயமான இல்மு அவன்மேல் வாஜிபாகும். கூலி, வாடகை முதலியவைகளால் வருமானமிருந்தால் இஜாரத்துடைய இல்மு வாஜிபாகும். இப்படியே ஒவ்வொரு தொழிலுக்கும் ஒவ்வோர்இல்மு இருக்கிறது. எவன் எந்தத் தொழிலைச் செய்கிறானோ அந்தத்தொழிலின் இல்மைக்கற்பது அவன்மேல் விதியாயிருக்கும்.

இரண்டாவது வகுப்பு:—சாலிஹீன்களென்னும் சாதுக்களின் பேணுதலாம். இந்தப்பேணுதல் யாதெனில், ஒரு வஸ்துவைக்குறித்து முப்தியானவர் இது ஹறாமல்லவென்று பத்துவா கொடுத்திருக்கிறார். ஆனாலது ஷுபுஹாத்தைவிட்டும் நீங்கியதாயிருக்கவில்லை. இப்படியாயிருக்கிற வஸ்துவையும் விட்டு இவர்கள் பேணுதல் செய்வார்கள். இனி ஷுபுஹாத்தானது மூன்று வகையாயிருக்கிறது. அவைகளுள் ஒருவகை ஷுபுஹாத்தைவிட்டும் பேணுவது வாஜிபாயிருக்கும். மற்றொருவகையைவிட்டும் பேணுவது வாஜிபாகாது. ஆயினும் முஸ்தஹப்பாயிருக்கும். மூன்றாவது வகையைவிட்டும் பேணுவது உபயோகமற்றதும் விபரீதமான வஸ்வாஸமுமாயிருக்கும். இதெப்படியென்றால், ஒருவன் வேட்டையில் கிடைத்த இரையைத் தின்னாமல், "இது மற்றவருடைய சுவாதீனத்திலிருந்து பின்பு அவர்களைவிட்டும் ஓடிப்போயிருக்கவும் கூடும்" என்று அதைவிட்டும் பேணுவதுபோல், அல்லது இரவல் வீட்டில் குடியிருக்கிற ஒருவன் "ஒருகால் இந்த



வீட்டுக்குடையவன் மவுத்தாய்ப்போயிருப்பான். இது அவனுடைய வாரிசுகளின் ஆதீனமாய் மாறியிருக்கும்" என்று சொல்லி அந்தவீட்டைவிட்டும் வெளிப்படுவதுபோல் இவைகளின்பேரில் அறிவிக்கிற அத்தாட்சியில்லாவிட்டால் இந்தப் பேணுதல் விபரீதமான வஸ்வாஸமும் உபயோகமற்றதுமேயாம்.

மூன்றாவது வகுப்பு:—முத்தகீன்களென்னும் அச்சமுற்றவர்களின் பேணுதலாம். இந்தப் பேணுதல் யாதெனில், ஒருவஸ்து ஹறாமாயுமில்லை, ஷுபுஹத்தாயுமில்லை, ஹலாலாகவே யிருக்கிறது. ஆனால் அதை உபயோகிப்பதில் ஒருசமயம் ஷுபுஹத்திலாவது ஹறாமிலாவது விழும்படி நேரிடுமென்கிற அச்சமிருக்கிறது. இந்த விதமான ஹலாலையும்விட்டு இவர்கள் பேணுதல் செய்வார்கள். ஏனென்றால், ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் தங்கள் திருவாயினால் "ஒருகுற்றமுமில்லாத யாதொரு வஸ்துவினால் வேறொரு குற்றமுண்டாகுமென்ற அச்சமிருந்தால் அந்தவஸ்துவையும்விட்டு அடியான் பேணுதல் செய்யாதிருக்கிறவரையில் அவன் முத்தகீன்களுடைய வகுப்பில் சேரமாட்டான்" என்று அருளிச்செய்திருக்கிறார்கள். இன்னும் உமர்றலியல்லாகு அன்கு அவர்கள் "நான் ஹறாமில் விழுவேன் என்கிற அச்சத்தினால் பத்து ஹலால்களில் ஒன்பது ஹலால்களைவிட்டுவிட்டேன்" என்று சொல்லியிருக்கிறார்கள். இதனாலேதான் ஒருவர் மற்றொருவருக்கு நூறுரூபாய்கடன்கொடுத்திருந்தால் வாங்கும்போது தொண்ணூற்றொன்பது ரூபாய்க்குமேல் வாங்காதவர்களாயிருந்தார்கள். ஏனென்றால், முழுமையும் வாங்கினால் அதிகமாய் வாங்கினதுபோல் ஆகுமென்றேயாம். அலியப்னு மஃபது றகிமகுல்லா அவர்கள் சொல்லுகிறதாவது:—நான் ஒரு வீட்டை வாடகைக்கு வாங்கியிருந்தேன். ஒருகாகிதம் எழுதி அதன் ஈரம் காய்வதற்காக அந்த வீட்டுச் சுவற்றின் மண்ணில் கொஞ்சம் அதன்மேல் போடலாமென்று நினைத்தேன். பின்பு இது நமக்குச் சுவாதீனமல்லவாதலால் அப்படிச் செய்யக்கூடாதென்று ஓர் எண்ணம்வந்தது. அதன்பிறகு அந்த எண்ணம் மாறி, நிஞ்சித்து மண்ணுக்குக் கிரயமும் மதிப்புமில்லையென்று மருண்டு, கொஞ்சம் மண்ணை யெடுத்துக் காகிதத்தின்மேல் போட்டேன். அன்று சொற்பனத்தில் ஒருவர்வந்து "சுவற்று மண்ணுக்கு மதிப்பில்லையென்று சொல்லுகிறவர்கள் நாளை கியாமத்தில் தெரிந்துகொள்வார்கள்" என்று சொன்னார் என்பதே.

இந்தவகுப்பிலிருப்பவர்கள், ஷரகில் இலேசாக்கி மன்னிக்கப்பட்டிருக்கிற வஸ்துவிலும் அற்பவஸ்துவிலும் இவ்வளவு பேணுதல்

செய்வதற்குக் காரணம்யாதெனில், முதலாவது:- இலேசு என்றவழி திறந்துபோனால் அதேவழியாய் மனமானது அதிகத்தை இச்சிக்கும் என்பதும், இரண்டாவது:- ஆகிறத்தில் முத்தகீன்களுடைய தறஜாவை விட்டும் விழாமலிருக்க வேண்டுமென்பதுமேயாம். இதனாலேதான் இமாம் ஹஸன் றலியல்லாகு அன்கு அவர்கள் சிறுபிராயமாயிருக்கும்போது சதகாவில்வந்தபேரித்தம்பழத்தை வாயில்போட்டதற்கு, றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள், (அசங்கிதப்படுகிறவர்கள்போல் சப்தித்து) "அ! அ!! அதைத் துப்பிவிடு" என்று சொன்னார்கள். இன்னும் யுத்தத்தில் காபிர்களிலிருந்தும் கொள்ளையாடினதில் கிடைத்த கஸ்தூரியை உமறுப்னுல் அப்துல் அஸீஸ் கலீபா அவர்களுடைய சமுகத்தில் கொண்டுவந்து வைத்தபோது அவர்கள் தங்கள் மூக்கைப் பிடித்துக்கொண்டு இதனால் அடையும் பிரயோசனம் வாசனைதானே. இது எல்லாமுஸ்லிம்களுடைய ஹக்காயிருக்கிறதென்று சொன்னார்கள். இன்னும் பெரியோர்களில் நின்றுமொருவர் ஒரு நோயாளியின் தலைமாட்டில் இருந்தார். அந்த நோயாளியின் ரூகு போன அக்ஷணமே அந்தப் பெரியவர் அங்கு எரிந்துகொண்டிருந்த விளக்கை ஊதிவிட்டு "வாரிசுகளுக்கு இந்த எண்ணெயில் சுதந்திரமுண்டாய்விட்டது" என்று சொன்னார். இன்னும் உமர்றலியல்லாகு அன்கு அவர்கள் கொள்ளையில் வந்த கஸ்தூரியை முஸ்லிம்களுக்கு விற்கும்படி வீட்டில் தங்கள் பீவியிடத்தில் கொடுத்திருந்தார்கள். ஒருநாள் அவர்கள் தங்கள்வீட்டுக்கு வந்தபோது பீவியவர்களுடைய முக்காட்டுப்புடவையில் கஸ்தூரிவாசங்கமழக்கண்டு "இதென்ன" என்றுகேட்டார்கள். அதற்கு பீவியவர்கள் "கஸ்தூரி நிறுத்துக்கொண்டிருக்கையில், அதனால் என் கையில் ஒட்டிய கஸ்தூரியை முக்காட்டில் துடைத்தேன்" என்று சொன்னார்கள். அப்போது உமர் றலியல்லாகு அன்கு அந்த முக்காட்டுப் புடவையைப் பீவியவர்களுடைய தலையிலிருந்தெடுத்துத் தண்ணீரால் கழுவிக்கொண்டும், மண்ணில் தேய்த்துக்கொண்டும், முகர்ந்துபார்த்துக் கொண்டுமிருந்து அதில் கொஞ்சமும் வாசனை யில்லாமலாக்கிப் பின்பு பீவியவர்களிடம் கொடுத்தார்கள். இது ஷரஇல் இலேசாய் மன்னிக்கப்பட்ட அற்பவஸ்துவாயிருந்தும் உமர் றலியல்லாகு அன்கு அவர்கள் இப்படிச்செய்தது எதைக்கருதியென்றால், இதேவழியாய் அதிகமான ஒருவேலையில் விழாதிருக்கும்படி, இந்த வழியை அடைத்துவிடவேண்டுமென்றும், ஹறாமில் விழும் அச்சத்தினால் ஹலாலை விட்டுவிட வேண்டுமென்றும், அதனால் முத்தகீன்களுடைய தறஜாவை அடையவேண்டுமென்றுங் கருதியேயாம்.



இமாம் அஹ்மது இப்னு ஹம்பல் றஹ்மத்துல்லாஹி அலைகியவர்களிடத்தில் கேட்ட சுவாலாவது:- "ஒருவன் பள்ளிவாசலில் இருக்கிறான். அதில் சுல்தானுடைய பொருளைக்கொண்டு (ஊதுவத்தி முதலிய) நல்வாசனையான வஸ்துக்கள் புகைக்கப்படுகின்றன. அப்போது அவன் என்னசெய்யவேண்டும்?" என்பதே.

இதற்கு இமாம் அஹ்மது ஹம்பல் றகிமகுல்லா அவர்கள் சொன்ன ஜவாபாவது:- "அவன் அந்த வாசனையை அடையாதிருக்கும்படி அதைவிட்டும் வெளியில் வந்துவிடவேண்டும். இது ஹறாமுக்கு நெருங்கினதாயிருக்கிறது. ஏனென்றால், அவன் அடைந்ததும் அவனுடைய உடைகளிற் பட்டதுமான அவ்வளவு வாசனையானது நாட்டப்படும் பொருளேயாம். இது ஷரகில் மன்னிக்கப்பட்டதாயிராது" என்பதே. இன்னும் "ஹதீசு எழுதியிருக்கிற ஒரு காகிதம் கீழே கிடந்து அகப்பட்டால் அதற்குடையவனுடைய அநுமதியில்லாமல் அந்த ஹதீசை நகல் செய்துகொள்வது ஆகுமா?" என்று இந்த இமாமவர்களிடத்தில் கேட்டதற்கு "ஆகாது" என்று விடையளித்தார்கள்.

இன்னும் உமர் றலியல்லாகு அன்கு அவர்களுக்கு ஒரு மனைவியர் இருந்தனர். அந்த மனைவியர்மீது அவர்கள் மிகவும் பக்ஷமாயிருப்பார்கள். பின்பு அவர்களுக்கு கிலாபத்தென்னும் இராஜபட்டம் வந்தபோது, அந்த மனைவியர் எதைப்பற்றியாவது தங்களிடத்தில் சிபாரிசு செய்யும்படி நேரிடுமென்றும், அப்போது தங்களால் அந்த மனைவியருக்கு விரோதம் செய்யக்கூடாமலிருக்குமென்றும் நினைத்து அன்னாரைத் தலாக்கு சொல்லிவிட்டார்கள்.

அறிந்துகொள்:—துன்யாவுடைய வீணத்தின் பக்கம் திருப்பிவிடுகிற ஒவ்வொரு ஹலாலான காரியமும் இதிற் சேர்ந்ததேயாம். ஏனென்றால், அந்தக்காரியத்தில் அவன் பராக்காகுவானாகில் அது வேறு காரியங்களில் அவனை இழுத்துவிடும். மேலும் ஒருவன் ஹலாலான உணவை வயிறு நிரம்பத் தின்பானாகில் அவன் முத்தகீன்களுடைய தறஜாவை அடைய அருகனல்லாதவனாய்ப் போய்விடுவான். ஏனென்றால் ஹலாலான உணவைத் திருப்தியாய்த்தின்று இச்சையை எழுப்புவானாகில் அவன் மனதில் கெட்ட எண்ணங்கள் உண்டாகுமென்றும், அதிக மகிழ்ச்சியும் மஸ்துங்கொள்ளுவானென்றும் அச்சமிருக்கிறது. இன்னும் துன்யாதார்களுடைய சொத்து சுதந்திரங்களையும் மெத்தைமாளிகைகளையும் தோட்டந்துறவுகளையும் பார்ப்பதானது இதே வகையிற் சேர்ந்ததாயிருக்கிறது. ஏனென்றால் இது துன்யா

னுடைய ஹிர்ஸை எழுப்பிவிடும். அப்போது அதைத் தேடுவதில் அவனை இழுக்கும் ஹராமில் கொண்டுபோய்த் தள்ளும். இதனாலே தான் "துன்யாவுடைய இச்சையாகிறது எல்லாப் பாவங்களுக்கும் தலையாயிருக்கிறது" என்று ரசூல் ஸல்லல்லாகு அலைஹிவஸல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். இப்படிச் சொன்னதில் ஹலாலான துன்யாவென்பதையே நாயகமவர்கள் நாடியிருக்கிறார்கள். ஏனென்றால், துன்யாவில் முபாஹானவைகளை இச்சிப்பது ஹலாலாயிருந்தபோதிலும் அது மனதை மயக்கித் துன்யாவை அதிகமாய்த் தேடும்படி செய்துவிடும். பாவமான காரியங்களில் பிரவேசிக்காமல் அதிகமான துன்யாவை அடைவது வாய்க்காது. அப்போது அல்லாகுதஆலாவுடைய நினைவையே மனதில் வரவொட்டாது. இப்படி அல்லாகு தஆலாவுடைய நினைவே யில்லாமல் மனதில் மறதியே மேலிடுவது மூதேவித்தனத்துக்கெல்லாம் முதன்மையானதாயிருக்கும். இதனாலே தான் ஸுபியானிஸவ்ரீ றஹ்மத்துல்லாஹி அலைஹிவவர்கள் ஒரு அமீருடைய மாளிகையின் உன்னதமான வாசற் பக்கமாய்ப்போனபோது தங்களுடன் கூடயிருந்த ஒருவர் அந்த மாளிகையைப் பார்க்கத் தொடங்கினார். அதற்கு ஸுபியானுஸவ்ரீ றஹ்மத்துல்லாஹி அலைஹிவவர்கள் அவரைத் தடைசெய்து "நீங்கள் இப்படிப் பார்க்காமற்போனால் இந்த அமீர்கள் இவ்விதம் இஸ்ராபு செய்யமாட்டார்கள்" என்றும், "இதனால் நீங்களும் இஸ்ராபுடைய குற்றத்தில் அவர்களுடன் கூட்டாகிறீர்கள்" என்றும் சொன்னார்கள். இமாம் அஹ்மது ஹம்பல் றஹிமஹுல்லா அவர்களிடத்தில் "பள்ளிவாசல், வீடு இவைகளின் சுவர்களுக்குச் சுண்ணாம்பினால் காரைபூசுவதின் ஹுகுமு என்ன?" என்று கேட்டதற்கு, "கைப்பறக் காதபடி தரைக்குக்காரை பூசுவது ஆகும், ஆனால் சுவர்களுக்குப்பூசுவது அலங்காரிப்பாயிருப்பதால் அது என்னிடத்தில் மக்ரூஹாயிருக்கிறது" என்று சொன்னார்கள். இன்னுமிதுபோலவே ஸலபுகளான முன்னோர்கள் "எவனுக்கு உடை மிருதுவாயும் மெல்லியதாயு மிருக்கிறதோ, அவனுடைய தீனும் மெலிந்ததாயிருக்கும்" என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகக்கூடி ஹராமில் விழும் அச்சமிருந்தால் சுத்தமான ஹலாலையும் விட்டுவிடவேண்டுமென்பதே இதன் மொத்தக் கருத்தாம்.

நான்காவதுவகுப்பு:—சித்திகீனென்னும் சத்தியவந்தர்களுடைய பேணுதலாம். அதாவது:—ஒருவஸ்து ஹலாலாயும் அதை உபயோகிப்பதில் ஹராமில் தள்ளுமென்ற அச்சமில்லாததாயு மிருக்கிறது. ஆனால் அந்தவஸ்து யாதொரு பாவசம்பந்தமான காரணத்தால் உண்டானதா



யிருந்தால் இப்படியான ஹலாலையும் விட்டு இவர்கள் பேணுதல் செய்கிறார்கள். இதற்கு உதாரணம்:—பிஷ்ருல்ஹாபி றஹ்மத்துல்லாஹி அலைஹிவவர்கள் பாதுஷாக்களால் வெட்டப்பட்ட கால்வாய்களில் நின்றும் தண்ணீர் குடிக்காதவர்களா யிருந்தார்கள். இன்னும் சிலர் ஹஜ்ஜுக்குப்போகிற பாதையில் சுல்தான்களால் வெட்டப்பட்டிருக்கிற குளங்களில் தண்ணீர் குடிக்காதவர்களா யிருந்தார்கள். இன்னும் சிலர் சுல்தான்களால் வெட்டப்பட்ட ஆறுபாய்ச்சலுள்ள தோட்டங்களின் கொடிமுந்திரிகை முதலிய கனிகளைத் தின்காதவர்களா யிருந்தார்கள். இன்னும் அஹ்மதுப்னு ஹம்பல் றஹிமஹுல்லா அவர்கள் பள்ளிவாசலில் தையல் தைப்பதை மக்ரூஹு என்று சொல்லுகிறவர்களாயும், அதில் யாதொரு தொழில் செய்வதைப் பிரியப்படாதவர்களாயு மிருந்தார்கள். இன்னும் "கபுருஸ்தானுடைய மண்டபத்தில் உட்கார்ந்து கயிறு திரிப்பவர்களைக் குறித்து "இதன் ஹுக்குமென்ன" என்று இந்த இமாமிடம் கேட்டதற்கு "அது மக்ரூஹு" என்றும், "கபுருஸ்தானாகிறது ஆகிரத்துக்காக ஏற்பட்டது" என்றும் சொன்னார்கள். இன்னும் ஒரு அடிமையானவன் பாதுஷாவுடைய வீட்டிலிருந்து விளக்குக் கொளுத்திக் கொண்டுவந்ததை அவனுடைய எஜமானன் நூர்த்துவிட்டார். இன்னும் ஓர் இரவில் ஒரு பெரியோருடையசெருப்பின்வார் அறுந்துவிட்டது. அப்படியிருக்கையில் பாதுஷாவுடைய மஷ்அல்சிகள் பந்தங்களேற்றிக் கொண்டு அவ்வழியாய் வந்தார்கள். அந்தவெளிச்சத்தில் அந்தவாரைச் சரிப்படுத்திக்கொள்ள அந்தப்பெரியவர் பிரியப்படவில்லை. இன்னும் ஒரு பெண்பிள்ளை நூல் இழைத்துக்கொண்டிருக்கும்போது பாதுஷாவுடைய பந்தக்காரர்கள் அந்த வழியாய் வந்துவிட்டார்கள். அந்த வெளிச்சத்தில் நூல் இழைப்பது ஆகாதென்று அந்தப்பெண்பிள்ளை அப்போது இழைப்பதை நிறுத்திவிட்டனள். இன்னும் துன்னூனுல் மிஸ்ரீ றஹ்மத்துல்லாஹி அலைஹிவவர்கள் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருந்தார்கள். அதில் சிலதினம் அவர்கள் பட்டினியாயிருந்தபடியால் அவர்களுடைய முரீதுகளில் ஒருபெண்பிள்ளைத் தன்னுடைய ஹலாலான கைத்தொழிற்றதில்நின்றும் உணவைத் தயார்செய்து அனுப்பி வைத்தனள். அதையவர்கள் உண்ணவில்லை. பின்பு அந்தப்பெண்பிள்ளை வந்து "நான் அனுப்பினது ஹலாலான உணவு என்பதும் தங்களுக்குத் தெரியும். தாங்களும் பட்டினியா யிருக்கிறீர்கள். அப்படியிருந்தும் தாங்கள் உண்ணாததற்குக் காரணமென்ன?" என்று மிகவும் வருத்தமாய்முறையிட்டனள். அதற்கவர்கள் சொன்னதாவது:—"அந்தஉணவு

ஒரு அக்கிரமக்காரனுடைய கட்டில்வைக்கப்பட்டு என்னிடம்வந்ததி னாலும் அதுசிறைச்சாலையின் காவலன்கையிலிருந்ததினாலுமே அதை நான் உண்ணவில்லை" என்பதே. இதைவிட்டும் இவர்கள் பேணுதல் செய்தது எதைக்கருதியென்றால், ஒரு அக்கிரமக்காரனுடைய கை பலத்தினால் அதுதங்களிடம் சேர்ந்ததென்றும், அந்தக்கைபலமானது ஹராமான தீனியால்உண்டாயிருக்கலாமென்றுங் கருதியேயாம். இந்த வகுப்பில் இது மிகவும் பெரியபேணுதலாயிருக்கும். இந்தப் பேணு தலுக்குக் காரணம் இதுவென்பதை அறியாதவன் ஒருக்கால் பாவி கான எவனுடைய கையாலும் எடுத்து வரப்படுகிற உணவை உண் பது ஆகாதென்று சொல்லி வஸ்வாஸில் விழவும் கூடும். இது அப்படி யானதல்ல. ஹறாமான தீனியால் பலத்தை அடைந்திருக்கிற அக்கிர மக்காரன் எவனோ அவனைக்கொண்டே அது சொந்தமாகும். என்றா லும் (மேற்படியாவைகளைச் செய்கிற ஒரு பாவியின் மூலமாய்ச் சேர்கிற உணவை உண்பதினால் இந்தப் பேணுதலுக்கு யாதொரு தோஷ முண்டாகாது.) உதாரணமாக ஒருவன் ஜினாச் செய்கிறவனாயிருந்தால் அவனுடைய பலம் ஜினாவைக்கொண்டு உண்டானதல்லவாதலால் அவ னால் உணவு சேருவதற்குள்ள பலமானது ஹறாமில் உண்டான பல மென்றாகாது. இன்னும் ஸரிய்யு ஸகத்தி றஹ்மத்துல்லாஹி அலைஹியவர் கள் சொல்லுகிறதாவது:-"நான் ஒருநாள் காட்டுவழியாய்ப் போய்க் கொண்டிருந்தேன். அங்கு ஒரு தடாகத்தினருகே பசுமையான ஒரு பூண்டைக்கண்டு நான் ஹலாலைத் தின்னவேண்டுமானால் இதைத் தின் பேன் என்று என் மனதுக்குள் சொல்லிக்கொண்டேன். அப்போது அசரீரியாக "உம்மை இந்த இடத்துக்குக்கொண்டுவந்து சேர்த்த குவ்வத்தென்னும் பலம் எங்கிருந்து வந்தது?" என்று ஓர் சத்தம் பிறந்தது. அதனால் நான் வெட்கமடைந்து அல்லாஹுதஆலாவினிடம் பிழைபொறுக்கத் தேடினேன்" என்பதே. சித்தீக்களுடைய பேணு தல் இவ்விதமாயிருந்திருக்கிறது. அவர்கள் இவ்வகையான பேணு தல்களில் மிகவும் நுணுக்கமான யோசனைகளைச் செய்வார்கள். இப் போது இந்தப்பேணுதல்மாத்திரம் உடையைக் காப்பதிலும் சுத்தமான தண்ணீரைத் தேடுவதிலும் பேணுதல் செய்யவேண்டியிருக்கிறது. அவர்க ளிதைச் சரியாய் அனுஷ்டித்து வந்தார்கள். காலில் பாதரக்ஷையில் லாமல் நடப்பார்கள். எந்தத்தண்ணீரைக்காண்கிறார்களோ அதில் ஒளு முதலிய சுத்தங்களைச் செய்துகொள்ளுவார்கள். ஆனால் இந்த வெளிப்படையான சுத்தமாகிறது வெளிக்கு அலங்காரமாயும் ஜனங்க ளுடைய பார்வையில் விருப்பமுடையதாயுமிருப்பதால் இதில் நப்ஸுக்குப்



பெரிய இன்பமிருக்கிறது. இதனால் அது முஸ்லிமை ஏமாற்றி இந்த சுத்தத்தில் அவனைப் பராக்காக்கி வைக்கின்றது. அந்த சுத்தமானது உள் அலங்காரமாயும் அல்லாஹுதஆலாவுடைய பார்வையிலுந் தான மாயுமிருப்பதால் நப்ஸுக்கு அது கஷ்டமாய்விட்டது.

ஐந்தாவது வகுப்பு:—முகற்றபுகள், முவஹ்ஹிதுகள் இவர்க ளுடைய பேணுதலாம். இவர்கள் அல்லாஹுதஆலாவுக்காகவேயன்றி மற்றொன்றுக்காக உண்பதும் உறங்குவதும் பேசுவதும் ஹராமென்று நினைக்கிறார்கள். இவர்கள் ஒரே நாட்டமும் ஒரே குணமுமாய் மாறிய ஒரு கூட்டமாயிருக்கிறார்கள். இவர்களில் பூரணத்தன்மையை அடைந் தவர்கள் முவஹ்ஹிதுகளாகின்றார்கள். யஹ்யபுனுல் மஆது றஹ்மத் துல்லாஹி அலைஹி யவர்களைப்பற்றி வந்திருக்கிற ஹிகாயத்தாவது:— ஒருநாள் இவர்கள் ஏதோ மருந்து குடித்திருந்தார்கள். இவர்களு டைய பீவி யவர்கள் இவர்களை வீட்டுக்குள்ளே கொஞ்சம் உலாத்தும் படி சொன்னார்கள். அதற்கவர்கள் "இந்த உலாத்தலுக்கு யாதொரு முகாந்தரம் தெரியவில்லை. நானோ முப்பது வருஷகாலமாய் தீன் சம் பந்தமல்லாத காரியம் ஒன்றும் என்னால் உண்டாகாதபடி என்னுடைய நடவடிக்கைகளின் கணக்கைக் கவனித்துக்கொண்டு வருகிறேன்" என்று சொன்னார்கள்.

ஆகவே, இந்த ஜனங்கள் தீன் சம்பந்தமான நிய்யத்து ஏதாவது தங்கள்மனதில் வந்தாலேயன்றி மற்றப்படி வெறுமையாய் ஒருகாரிய மும் செய்யமாட்டார்கள். உண்டாலும் இபாதத்தின் பலத்துக்காக உயிரும் உணர்வும் நிலைத்திருக்கப் போதுமான அளவாய் மிகவும் கொஞ்சமாய் உண்பார்கள். பேசினாலும் தீன் வழியான பேச்சாகவே யிருக்கும். தீன் சம்பந்தமல்லாத எதையும் இவர்கள் தங்கள்பேரில் ஹறாமாக்கியிருக்கிறார்கள். இவைகளே பேணுதலின் வகுப்புகளாம். இந்தப் பேணுதல்களை நீ ஒருதரமாவது கேட்டு உற்றுணர்[illegible]க. அப்போது நீ உன்னையும் உன்னுடைய கேவல ஸ்திதியையும் அறிந்து கொள்வாய்.

பாஸிகு என்கிற பேர் உனக்கு வராமலிருக்கும்படி முந்தின வகுப்பாகிய சாமானிய முஸ்லிம்களின் பேணுதலை நீ அனுஷ்டிக்க நாடினால் அதுவும் உன்னால் முடிகிறதில்லை. பின்பு பேசத் தொடங்கி னால் வாயை விசாலமாய்த் திறந்துகொண்டு வானத்துடைய பேச்சு களையெல்லாம் எடுத்துப்பேசுகிறாய். ஷரகுடைய வெளிப்படையான பேச்சுகளைப் பேச உனக்கு வெட்கமாயிருக்கிறது. மேலும் உனக்கு ஏதோ கஷ்பு கறாமத்துகளிருக்கிறதாய் வீண் பெருமையான பல பிதற்றல்களைப் பிதற்றவும் பெரும்பேச்சுகளைப் பேசவுமே [illegible]

ரூய். றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் தங்கள் திருவாயினால் "எந்த ஜனங்கள் நிஃமத்தாகிய செல்வத்தில் நிலைத்து வகை வகையான உணவுகளை உண்பவர்களாயும், வகைவகையான உடைகளை உடுப்பவர்களாயு மிருந்துகொண்டு, பின்பு வாயைத்திறந்து நல்ல நல்ல பேச்சுகளை எடுத்துப் பேசுகிறார்களோ அவர்களே ஜனங்களில் மிகக் கெட்டவர்கள்" என்று அருளிச்செய்ததாய் ஹதீதில் வந்திருக்கிறது. அல்லாகுதஆலா இந்த ஆபத்துகளைவிட்டும் நம்மைக் காப்பானாக.

## மூன்றாவது பாபு - ஹறாமைவிட்டும் ஹலாலைப் பிரித்தறிவது, அதை விசாரித்தறிவது இவைகளின் பயான்.

அறிந்துகொள்:—சிலர் துன்யாவிலிருக்கிற பொருள்களெல்லாம் அல்லது அவற்றின் பெரும்பான்மையானது ஹறாமாயிருக்கிறதென்று நினைத்திருக்கிறார்கள். இவர்கள் மூன்று கூட்டமாய்ப் பிரிந்தார்கள். முதலாவது கூட்டம் - பேணுதல் மிகைத்தவர்களாம். இவர்கள் ஒன்றையும் நாங்கள் தின்னமாட்டோமென்றும், ஆனால் காட்டில் முளைத்திருக்கிற தாவர வஸ்துக்களை, அல்லது மீன் இனங்களை, அல்லது வேட்டை இறைச்சியை, இன்னும் இவைபோன்றவைகளைத் தின்போமென்றும் சொல்லுகிறார்கள். இரண்டாவது கூட்டம் - இச்சைமிகைத்தவர்களாம். இவர்கள் எதையும் வித்தியாசப்படுத்தக் கூடாதென்றும், எல்லாவற்றையும் தின்னலாமென்றும் சொல்லுகிறார்கள். மூன்றாவது கூட்டம் - நடுநிலைமைக்குச் சற்று அடுத்திருப்பவர்களாம். இவர்கள் எல்லாவற்றிலும் அவசியமாய் வேண்டிய அளவாய்த் தின்னலாமென்று சொல்லுகிறார்கள். இந்த மூன்று முறைகளும் சரிதமில்லாமல் பிசகானவைகளா யிருக்கின்றன. மேலும், றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமானபடி ஹலாலும் தெளிந்ததாய், ஹறாமும் தெளிந்ததாய், இருக்கிறது. சந்தேகமானது இவ்விரண்டுக்கும் மத்தியிலிருக்கிறது. இதுதான் சரி. கியாமத்நாள் வரையில் இப்படியே யிருக்கும். இன்னும் துன்யாவுடைய பொருள்களில் பெரும்பான்மையானது ஹறாமா யிருக்கிறதென்று எண்ணுவதும் பிசகு. ஏனென்றால் ஹறாம் அதிகமாயிருக்கிறது. என்றாலும் பெரும்பான்மையாயில்லை. அதிகமென்பதற்கும் பெரும்பான்மையென்பதற்கும் வித்தியாசமிருக்கிறது. உதாரணமாக:—நோயாளிகளும் முசாபிர்களும் சிப்பாய்களும் அதிகமா யிருக்கிறார்கள். என்றாலும் பெரும்பான்மையாயில்லை. கொடுமை செய்கிறவர்கள் அதிகமாயிருக்கிறார்கள். கொடுமைபட்டவர்



கள் பெரும்பான்மையாயிருக்கிறார்கள். இந்தப்பிசகின் முகாந்தரத்தை இஹ்யாவில் அத்தாட்சியுடன் விவரித்திருக்கிறோம். அதன் சாராம்சம் பின் கூறுவதை நீ யறிந்துகொள்வதேயாம். அதாவது:—அல்லாகு தஆலா எந்தப்பொருளை ஹலாலென்றறிந்திருக்கிறானோ அந்தப்பொருளைத் தின்னவேண்டுமென்று ஜனங்களுக்குக்கட்டளையிட்டிருப்பதில்லை. மேலும்அவர்கள் தங்கள் அறிவின்படி எந்தப்பொருளை ஹலாலென்று தெரிந்துகொள்ளுவார்களோ, அல்லது எந்தப்பொருள் ஹறாமென்று தெரியாமலிருக்கிறதோ அந்தப்பொருளைத் தின்னும்படி கட்டளையிட்டிருக்கிறது. இது எப்போதும் இலகுவாய்க் கிடைக்கும். இதற்கு அத்தாட்சியாவது:—றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் ஒரு முஷ்ரிகான காபிருடைய பாத்திரத்தில் ஒழு செய்திருக்கிறார்கள். இன்னும் உமர் றலியல்லாகு அன்கு ஒரு நஸ்றானிய ஸ்திரீயுடைய பாத்திரத்தில் ஒழு செய்திருக்கிறார்கள். இன்னும் அவர்களிடத்தில் தாக சாந்திக்குத் தண்ணீரும் குடிப்பார்கள். அசுத்தமான தண்ணீரைக் குடிப்பது ஹலால் ஆகாது. அந்த முஷ்ரிகுகள் சாராயம் குடிப்பவர்களாயும் செத்தப் பிராணியைத் தின்பவர்களாயும் இருப்பதினால் பெரும்பான்மையில் அவர்களுடைய கைகள் அசுத்தப்பட்டிருக்கலாம். என்றிருந்தும், அசுத்தத்தை இந்த பெரியோர்கள் தங்கள் கண்ணால் பார்க்காதபடியால் சுத்தமென்றே எண்ணிக்கொண்டார்கள். அஸ்ஹாபுகள் எந்தப் பட்டணத்திற்குப் போனாலும் அவ்விடத்தில் விற்கிற ரொட்டி முதலிய உணவுகளை வாங்குவார்கள். கொள்ளல், விற்கல் முதலிய முஆமலாவும் செய்துகொள்வார்கள். அக்காலத்திலோ கள்ளர்கள், வட்டி வாங்குகிறவர்கள், சாராயம் விற்பவர்கள் இவர்களெல்லாரும் இருந்தார்கள். அப்படியிருந்தும் இவர்கள் துன்யாவுடைய பொருள்களை விட்டுவிடவில்லை. ஆனால் எல்லாவற்றையும் சமமாகவும் எண்ணவில்லை. அவசியமான அளவின்படியில் போதுமாக்கிக் கொண்டார்கள். ஆகலால்,

ஜனங்கள் உன்விஷயத்தில் ஆறுவகுப்பாயிருக்கிறார்கள் என்பதை நீ அறிந்துகொள்ளவேண்டும். முதலாவது வகுப்பார் யாரென்றால், எந்த ஜனங்களுடைய நிலைமை நல்லதென்றும் கெட்டதென்றும் உனக்குத் தெரியாதோ அந்தஜனங்களேயாம். உதாரணமாக:—நீ ஒரு பட்டணத்துக்கு யாத்திரைபோனால் அங்கு நீ நாடுகிற எந்த [illegible]விடத்திலும் ரொட்டி முதலிய உணவுகளை வாங்கிக்கொள்ளலாம். மற்ற முஆமலாவும்செய்துகொள்ளலாம். ஏனென்றால், எந்தப்பொருள் அவன் கையிலிருக்கிறதோ அந்தப்பொருள் அவன் சுவாதீனமென்பதே

வெளிப்பட்டையாயிருக்கிறது. இந்த அத்தாட்சியேபோதும். அது ஹராமென்பதின்பேரில் அறிவிக்கிற யாதொரு அடையாளமில்லாத பக்ஷத்தில் அந்த முஆமலா தப்பாகாது. என்கிலும் ஒருவன் இதனிஷயத்தில் நிதானித்து அவனுடைய நிலைமையைப்பற்றி மற்றொருவனிடத்தில் விசாரித்துக்கொண்டால் இது பேணுதலில்சேர்ந்ததாகும். என்றாலும் இது வாஜிபல்ல.

இரண்டாவது வகுப்பார் யாரென்றால், எந்த ஜனங்களை நல்லவர்களென்று நீ அறிந்திருக்கிறாயோ அந்த ஜனங்களாம். இவர்களுடைய பொருளிலிருந்தும் உண்பது ஆகும். நிதானிப்பது பேணுதலில் சேராது. மேலும் விபரீதமான வஸ்வாஸமாயிருக்கும். நீ நிதானித்து விசாரித்ததைப்பற்றி அவன் வருத்தப்படுவானாகில் இதுவுனக்குப் பாவமாகும். நல்லவர்கள்மீமேல் கெட்ட எண்ணங்கொள்வது பாவமேயாம்.

மூன்றாவது வகுப்பார் யாரென்றால், எந்த ஜனங்களை அக்கிரமக்காரர் என்று நீ அறிந்திருக்கிறாயோ அவர்களேயாம். உதாரணமாக:- துருக்கியர், பாதுஷாவுடைய உத்தியோகஸ்தர்களை இவர்கள்போல். அல்லது எந்த ஜனங்களுடைய பொருள் முழுமையுமாவது அதிற் பெரும்பாகமாவது ஹராமாகுமென்று உனக்குத் தெரியுமோ அந்த ஜனங்களாம். இவர்களுடைய பொருளைவிட்டும் பேணுதல் செய்வது வாஜிபாகும். ஆனால் அது ஹலாலான இடத்திலிருந்து வந்ததென்று உனக்குத்தெரிந்து அதை அவன் அக்கிரமமாய் அபகரித்துக்கொண்டுவரவில்லை, கிரமமாகவே வாங்கியிருக்கிறானென்பதின்பேரில் யாதொரு அடையாளம் வெளியானால் அப்போது பேணுதல் வாஜிபல்லாது.

நான்காவது வகுப்பார் யாரென்றால், எந்த ஜனங்களுடைய பெரும்பான்மையான பொருள் ஹலாலானதென்றும், அது ஹராமைவிட்டும் அறவே ஒழிந்ததல்லவென்றும் உனக்குத் தெரியுமோ அந்த ஜனங்களேயாம். உதாரணமாக:—ஒருவன் பயிரிடுகிறவனாயிருக்கிறான். ஆனால் அவனுக்குப் பாதுஷாவிடத்தில் ஏதோ ஒருவேலையும் கிடைத்திருக்கிறது. அல்லது ஒரு வர்த்தகனிருக்கிறான். அவன் பாதுஷாவுடைய உத்தியோகஸ்தர்களிடத்திலும் வர்த்தகம் செய்கிறவனாயிருக்கிறான். இப்படிப்பட்டவர்களுடைய பொருள் ஹலாலாகும். அதில் பெரும்பாகத்தை வாங்குவது ஆகும். ஏனென்றால், பெரும்பாகம் ஹலாலாயிருப்பதினாலேயாம். ஆனால் பேணுதல்காரர் இதை விட்டுவிடுவது அவசியமாம். அப்துல்லா ஹிபுனுல் முபாறக்கு



றஹிமகுல்லா அவர்களுக்கு வகீலாயிருந்து வர்த்தகம் நடத்தின ஒருவர் பசராவிலிருந்து அவர்களுக்கு ஒருகாகிதம் எழுதினார். அதாவது:— "பாதுஷாவுடைய உத்தியோகஸ்தர்களிடம் முஆமலா செய்கிற ஜனங்களிடத்தில் நான் முஆமலா செய்கிறேன்" என்பதே. அதற்கு இபுனுல் முபாறக்கு றஹிமகுல்லா அவர்கள் எழுதின ஜவாபாவது:- "அவர்கள் மற்றவர்களிடத்திலும் முஆமலா செய்யாமல் அந்த உத்தியோகஸ்தர்களிடத்தில் மாத்திரம் செய்கிறவர்களாயிருந்தால் நீர் அவர்களிடம் முஆமலா செய்யவேண்டாம். மற்றவர்களிடத்திலும் செய்கிறவர்களாயிருந்தால் அவர்களிடம் முஆமலா செய்யலாம்" என்பதே.

ஐந்தாவது வகுப்பார் யாரென்றால், எந்த ஜனங்களுடைய அக்கிரமத்தையும் அவர்களுடைய பொருளின் தன்மையையும் நீ அறியாமலிருப்பதுடன் அவர்களிடத்தில் அக்கிரமக்காரருடைய அடையாளத்தைக் காண்கிறாயோ அந்த ஜனங்களாம். உதாரணமாக:—கபா என்னும் சட்டை அணிவது, குலாஹ் என்னும் தொப்பி தரிப்பது, சிப்பாய்களின்கோலத்திலாகுவதுபோல். இவைகள் அக்கிரமக்காரருடைய அடையாளங்களாயிருக்கின்றன. இவர்கள் உனக்கு (விற்கிற அல்லது) கொடுக்கிற பொருளை எங்கிருந்து இவர்கள் கொண்டுவந்தார்களென்பது உனக்குத் தெரியாதிருக்கிறவரையில் இவர்களிடம் முஆமலா செய்வதைவிட்டும் பேணுதல் செய்வது உனக்கு அவசியமாகும்.

ஆறாவது வகுப்பார் யாரென்றால், எந்த ஜனங்களில் கொடுமையின் குறிகள் ஒன்றும் வெளியாகாமல் பாவத்தின் அடையாளம் தென்படுகின்றதோ அந்த ஜனங்களாம். உதாரணமாக:—ஒருவன் பட்டுடை உடுத்தியிருக்கிறான். அல்லது பொன் ஆபரணம் தரித்திருக்கிறான். அல்லது சாராயங் குடிக்கிறவன் அல்லது அந்நியஸ்திரீகளைப் பார்க்கிறவன் என்று உனக்குத் தெரிந்திருக்கிறது. இப்படியானவர்களின் பொருளைவிட்டும் பேணுவது வாஜிபாகாதென்பதே சரி. ஏனென்றால் இந்தச் செயல்களால் பொருள் ஹராமாய்ப்போகாது. ஆனால் இதையெல்லாம் செய்கிறவன் ஹராமான பொருளையும் சம்பாதிப்பான் என்று யாராவது சொல்லலாம். இந்தப் பாவித்தனத்தைக்கொண்டு அவனுடைய பொருளை ஹராமானதென்று தீர்ப்புச்செய்யமுடியாது. ஏனென்றால், பாவத்தைவிட்டுங் காவல்பெற்றவன் ஒருவனுமில்லை. அநேகம்பேர் பாவமான வேலைகளைவிட்டும் பேணாதவர்களாயிருந்தாலும் கொடுமை செய்வதைவிட்டும் பேணுகிறார்கள்.

ஹலாலையும் ஹராமையும் பிரித்தறிவதற்கு மேற்சொல்லிய காரியங்களை ஞாபகத்தில் வைத்து அதன்படி நடந்து கொள்ளுவாயாக.

பின்பு ஹறாமென்று தனக்குத் தெரியாத யாதொரு ஹறாமான பொருளைத் தின்றுவிட்டால் அதைப்பற்றி அவன் குற்றவாளியாக மாட்டான். உதாரணமாக:—நஜிஸ்பட்டிருப்பதுடன் தொழுதுகொள்வது ஆகாது. என்றிலும், நஜிஸ்பட்டிருப்பது தனக்குத்தெரியாமல் ஒருவன் தொழுதுவிட்டால் தொழுகை நிறைவேறிப்போம். தொழுது முடிந்தபின் தெரிந்தால் ஒருஸொல்லின்படி அந்தத் தொழுகையைக் கலாசெய்வது வாஜிபாகாது. ஏனென்றால், ரசூல் சல்லல்லாகு அலைஹி வசல்லமவர்கள் தொழுகையின் நடுவே காலில் அணிந்திருந்த பாதரட்சையைக் கழட்டிவிட்டார்கள். அந்தத் தொழுகையை மீண்டும் துவக்கத்திலிருந்து ஆரம்பிக்கவில்லை. (அப்படியே தொழுது முடிந்துவிட்டு) பாதரட்சை அசுத்தப்பட்டிருக்கிறதென்று ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் வந்து தங்களுக்குத் தெரியப்படுத்தினதாய்ச் சொன்னார்கள்.

எந்த எந்த இடத்தில் பேணுதல் அவசியமென்று நாம்சொல்லியிருக்கிறோமோ அது வாஜிபாயில்லாமற் போனாலும் சரியே, அந்த விடங்களில் இந்தப் பொருள் உனக்கு ஏது? எங்கிருந்து கிடைத்தது என்று விசாரித்தறிவது தருமமானதேயாம். ஆனால் அப்படிக்கேட்பதில் அவனுக்கு வருத்தம் உண்டாகாதபடி பார்த்துக்கொள்ளவேண்டும். வருத்தம் உண்டாகுமென்று தெரிந்தால் கேட்பது ஹறாமாகும். ஏனென்றால், விசாரித்துத் தெளிவது பேணுதலாயும், வருத்தம் கொடுப்பது ஹறாமாயுமிருக்கிறதினாலென்க. ஆதலால் மிருதுவாய்ச் சமாதான வார்த்தைகளைச் சொல்லி உண்மையை விளக்கிக்கொள்ளுவான். அப்படி முடியாமற்போனால் அவன் வருத்தப்படாமலிருப்பதற்காக அவனிடம் உண்பான். மற்றொருவனிடத்தில் அவனைப்பற்றி விசாரிப்பதானால் ஒருசமயம் அது அவனுக்குத் தெரிந்துவிடுமாதலால் ஹறாமாகும். ஏனென்றால், இது ஐயத்தேடலும், புறம்பேசலும், கெட்டெண்ணங்கொள்ளலுமாயிருக்கிறது. இந்த மூன்றும் ஹறாமாயிருக்கும். ஹலாலாகாது. ஏனென்றால், ரசூல் சல்லல்லாகு அலைஹி வசல்லமவர்கள் விருந்துக்குப்போனால் அதைப்பற்றி ஒன்றும் கேட்கமாட்டார்கள். ஜனங்கள் ஹதியா கொண்டுவந்தால் அதைப்பற்றியும் கேட்கமாட்டார்கள். ஆனால், ஏதாவது சந்தேகந்தோன்றினால் மாத்திரம் கேட்பார்கள். அவர்கள் மதீனம்போன ஆரம்பத்தில் ஜனங்கள் ஏதாவது சமுகத்துக்குக் கொண்டுவந்தால் இது ஹதியாவா? அல்லது சதகாவா? என்று கேட்பார்கள். இதேனென்றால், சந்தேகமுள்ள இடமாயிருந்ததினாலும் கேட்பதைப்பற்றி ஜனங்கள் வருத்தப்படாம



லிருந்ததினாலுமேயாம். இன்னும் அறிந்துகோள்:—ஓர் பஜாரில் பாதுஷாவுடைய சாமான்களைக் கொண்டுவந்து போடுகிறார்களென்றாவது, அல்லது கொள்ளையடித்த ஆடுகளைக் கொண்டுவருகிறார்களென்றாவது, அல்லது அந்த பஜாரில் பெரும்பான்மையான பொருள் ஹறாமானதென்றாவது தெரிந்தால், இது ஏது? எங்கிருந்து கொண்டுவந்தாய்? என்று கேட்டுத்தெளியாதவரையில் அந்தபஜாரில் ஒன்றையும் வாங்குவது கூடாது. பெரும்பான்மையான பொருள் ஹறாமானதாயில்லாமற்போனால் கேட்காமல் வாங்குவது ஆகும். என்றாலும் கேட்பது பேணுதலுக்கு முக்கியமாம்.

## நான்காவது பாபு - பாதுஷாவின் யவுமியா வாங்குவது, அவர்களுக்கு சலாம் சொல்வது, அவர்களுடைய ஹலாலான பொருளை வாங்குவது இவைகளின்பயான்.

அறிந்துகோள் :—இக்காலத்து பாதுஷாக்களிடத்தில் முஸ்லிம்களின் திர்வை அல்லது அபராதம், அல்லது லஞ்சம் இவைகளால் வாங்கிச் சேர்ந்திருக்கிற பொருள் எல்லாம் ஹறாமானதாயிருக்கிறது. ஆனால் மூன்றுவிதமான பொருள் இவர்களிடம் ஹலாலானதாயிருக்கும். ஒன்று-காபிர்களுடைய யுத்தத்தில் கொள்ளையாடிய பொருள். மற்றொன்று-திம்மிகளின்மேல் ஏற்படுத்தப்பட்ட ஜிஸ்யாவென்னும் தலைவரி. இதுவும் ஷரகுடைய விதிப்படி வாங்கியிருந்தால்தான். மூன்றாவது - வாரிசில்லாமல் இறந்துபோனவர்களுடைய பொருள். இது பொது நன்மைக்காக பாதுஷாக்களிடம் வரவேண்டிய பொருளாம். இந்த வகையான பொருள் இக்காலத்தில் அருமையாய்விட்டதினாலும், திர்வை அபராதம் முதலியவைகளாற் சேர்ந்தபொருள் இவர்களிடத்தில் பெரும்பான்மையாயிருப்பதினாலும், இவர்களிடத்தில் ஒன்றையும் வாங்குவது தகாது. ஆனால், ஹலாலானதென்றாவது, யுத்தத்தில் கிடைத்த கொள்ளைமுதலென்றாவது, திம்மிகளின்மேல் விதிக்கப்பட்ட ஜிஸ்யா என்றாவது, வாரிசில்லாமல் இறந்தவனுடைய சொத்தென்றாவது தெரிந்தால் வாங்குவது ஆகும். பாதுஷாவும் ஒரு பூமியைப் பயிரிட்டு செழிக்கச்செய்வானாகில் அதன் [illegible] அவனுக்கு ஹலாலாகலாம். ஆனால், கூலியில்லாமல் அமிஞ்சி [illegible]ர்களைக்கொண்டு வேலைவாங்கியிருப்பானாகில் அதில் ஷுப்ஹத்துக்கு இடமுண்டாகும். ஹறாமாகாமற்போனாலும் சரியே. இன்னும் அவன் தன் ஆளுகைக்குட்பட்ட தேசத்தில் பயிரிடும் பூமியாகிய கிராமங்களை கிரயத்துக்கு வாங்குவானாகில் அதுவும் அவனுக்குச் சொந்தமாகும். என்னெனும், ஹறாமான பொருளிலிருந்தும் அதற்குக் கிரயம் கொடுப்பா

னால் அதில் ஷுப்ஹத்துக்கு இடமாயிருக்கும். ஆதலால் பாதுஷாவிடத்தில் பணமிப்படி வாங்கியவர்களுக்கு அந்தப் பொருள் எவ்வளவா யிருந்தாலும் அது பாதுஷாவுடைய சொந்தப்பொருளில் நின்றுமாயிருந்தால் ஆகும். பொது நன்மைகளுக்காக வைக்கப்பட்டிருக்கிற பொருளாயிருந்தால் அப்போது முஸ்லிம்களுக்கு வேண்டிய பொது நன்மையான காரியங்களில் நின்றும் ஏதாவதொரு காரியம் இவனில் இல்லாமற்போனால் அதை வாங்குவது இவனுக்கு ஆகாது. உதாரணமாக:—காஜி, முப்தி, முதவல்லி, வயித்தியன். இன்னது பிறதுபோல் பொதுநன்மையான வேலைகளில் ஒன்றைச்செய்கிறவனா யிருக்கவேண்டும். இன்னும் இவனுடைய இல்லைமைப்படிக்கு நாலுபேர்களும் இதிற் கூட்டாகுவான். வேலைசெய்ய சக்தியில்லாதவன் ஏழையாயிருந்தால் அவனுக்கும் இதில் ஹக்கிருக்கிறது. ஆனால் உலமாக்களுக்கும் மற்றவருக்கும் இது ஹலாலாகுவதற்குச் சில ஷர்த்துண்டு. அதாவது:—உத்தியோகஸ்தர்களிடத்திலும் பாதுஷாவிடத்திலும் நியாயமான பேச்சுகளில் சோராமலும் முகஸ்துதி கூறாமலும் நிர்த்தாட்சண்ணியமாயிருக்கவேண்டும். கெட்ட காரியங்களில் அவர்களுடன் இணங்கியிருக்கக் கூடாது. அக்கிரமத்தின்பேரில் அவர்களுக்கு ஆசை மூட்டக் கூடாது. அதாவது அவர்களின் அக்கிரமத்தை நியமமாகக்காட்டி அவர்களை மருட்டக் கூடாது. மேலும் அவர்களிடத்திற்குப் போகவும் கூடாது. அப்படிப் போனால் ஷரகுடைய விதிப்படி போகவேண்டும். இதின் விஸ்தாரம் பின்னால் வரும்.

(பசல்) அறிந்துகொள்:—ஆலிம்களும் அவர்க ளல்லாதவர்களும் பாதுஷாக்களோடு மூன்று நிலையா யிருக்கிறார்கள். முதலாவது:—இவர்கள் பாதுஷாக்களிடம் போகாமலும் பாதுஷாக்கள் இவர்களிடம் வராமலு மிருப்பதாம். இதில்தான் தீனுடைய சலாமத்திருக்கிறது. இரண்டாவது:—இவர்கள் பாதுஷாக்களிடம் போவதும் அவர்களுக்கு ஸலாம் செய்வதுமாம். இது ஷரஇல் பெரிய பழிப்பானதா யிருக்கிறது. என்கிறபடியாதொரு அவசியத்துக்காகப் போகலாம். ஒருநாள் நபி ஸல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் அக்கிரமக்கார அமீர்களின் குணங்களைக் குறித்துப் பேசிக்கொண்டிருந்து, "எவனொருவன் இந்த அமீர்களை விட்டு தூரமாயிருப்பானோ அவன் தப்புவான்" என்றும், "இவர்களுடன் துன்யாவில் பிரவேசிக்கிறவன் இவர்களையே சேருவான்" என்றும் திருவுளமானார்கள். இன்னும் "எனக்குப் பிறகு அக்கிரமக்கார அரசர்கள் உண்டாவார்கள்" என்றும், "யாரொருவன் அவர்களுடைய அசத்தியத்தையும் அக்கிரமத்தையும் நியமமாகக்காட்டி அதன்மேல் பொருந்தியுள்ளவனா யிருப்பானாகில் அவன் என்னில் உள்ளவனல்ல" என்றும், "கியாமத்து நாளில் அவனுக்கு என்னுடைய



ஹவுலின் பக்கம் வழியில்லை" என்றும் திருவுளமா யிருக்கிறார்கள். "இன்னும் அமீர்களிடத்தில் போகிற ஆலிம்களே அல்லாகுதஆலா இடத்தில் பெரும் பகையர்" என்றும், "ஆலிம்களிடத்தில் வருகிற அமீர்களே மிகவும் நல்லவர்கள்" என்றும் திருவுளமா யிருக்கிறார்கள். "இன்னும் ஆலிம்களாகிறவர்கள் அரசர்களோடு கலக்காம லிருக்கிற வரையில் அவர்கள் நபிமார்களுடைய அமானத்தைக் காப்பவர்களா யிருக்கிறார்கள்; கலந்தால் அந்த அமானத்தில் மோசம் செய்தவர்களாய் விட்டார்கள்" என்றும், "நீங்கள் இவர்களைவிட்டும் தூரமாயிருங்கள்" என்றும் திருவுளமா யிருக்கிறார்கள். இன்னும் அபூதர் றலியல்லாகு அன்கு சல்மா அவர்களுக்குச் சொன்னதாவது:—"நீங்கள் சுல்தானுடைய சமூகத்தை விட்டும் தூரமாயிருங்கள். ஏனென்றால், உங்கள் தீனில் அதிக நஷ்டமுண்டாகியே ஒழிய அவர்களுடைய துன்யாவில்நின்றும் உங்களுக்கு ஒன்றும் கிடைக்காது. நரகத்தில் ஒரு ஓடையிருக்கிறது. அந்த ஓடையில் சுல்தான்களுடைய முலாகாத்துக்குப் போகிற ஆலிம்களேயன்றி மற்றவர்கள் விழமாட்டார்கள்" என்பதே. இன்னும் "ஆலிம்களும் ஆபிதுகளும் அரசர்களை நேசிப்பதானது முறிருதனத்துக்கு அத்தாட்சி" என்றும், "அவர்கள் சீமான்களை நேசிப்பது ரியாவுக்கு அத்தாட்சி" என்றும் உபாதத்துபுனு ஸாமித்து றலியல்லாகு அன்கு சொல்லுகிறார்கள். இன்னும் "மனிதன் சன்மார்க்கத்துடன் அரசர்களிடம் போகிறான், பின்பு துன்மார்க்கத்தை யடைந்து அங்கிருந்து வெளிப்படுகிறான்" என்று இபுனு மஸ்ஊது றலியல்லாகு அன்கு சொன்னார்கள். அதேனென்று அவர்களிடம் கேட்டதற்கு, "அல்லாகு தஆலாவைக் கோபப்படுத்துகிற ஒரு காரியத்தில் இவன் அரசனைச் சந்தோஷப்படுத்தப் பார்க்கிறதினால்" என்று சொன்னார்கள். "இன்னும் ஆலிமானவன் அரசர்களுடைய சமூகத்துக்கு எவ்வளவு நெருங்குகிறானோ அவ்வளவுக்கு அல்லாகு தஆலாவுடைய சமுகத்தைவிட்டும் தூரமாகின்றான்" என்று புலைலு றகிமகுல்லா சொல்லுகிறார்கள். இன்னும் "சுல்தான்களிடம் போகிற ஆலிம்களால் முஸ்லிம்களுக்கு நேரிடுகிற தீங்கானது சூதாடிகளால் உண்டாகிற தீங்கைவிட அதிகமாயிருக்கும்" என்று வஹபுப்னு முனப்பஹ் றக்மத்துல்லாகி அலைகியவர்கள் சொல்லுகிறார்கள். இன்னும் "மனிதருடைய மலத்தின்மேல் மொய்க்கும் ஈயானது அரசர்களிடம் போகிற ஆலிம்களைப் பார்க்கிலும் அதிக நல்லதா யிருக்கிறது" என்று முகம்மதுபுனு சல்மா அவர்கள் சொல்லுகிறார்கள்.

(பசல்.) அறிந்துகொள்:—(அரசர்களிடம்போகிற ஆலிம்களைப் பற்றி) இவ்வளவு கடினமாய்ச் சொல்லியிருப்பதற்குக் காரணம் பின்

கூறுவதாயிருக்கும். அதாவது:—சுல்தானிடம் போகிறவர்கள் தங்கள் செய்கையினாலும், சொல்லினாலும், சும்மாயிருப்பதினாலும், என்னத்தினாலும் பாவமென்னும் ஆபத்தில் விழுகிறார்கள்.

செய்கையினால் வரும் பாவமாவது:—சுல்தான்களுடைய வீடுகள் அநேகமாய் அக்கிரமத்தினால் அபகரிக்கப்பட்டிருக்கும். அப்படியான இடத்துக்குப் போவது தகாது. அவர்கள் காட்டிலிருந்தாலோ அவர்களுடைய கூடாரமும் விரிப்பும் ஹராமானதாயிருக்கும். அதிற் பிரவேசிப்பதும் அந்த விரிப்பின்மேல் கால்வைப்பதும் தகாது. ஹலாலான பூமியில்கூடாரம் விரிப்புமுதலியவைகளில்லாமல் வெறுந்தரையிலிருந்தால், அப்போது அவர்களுக்கு சலாம் சொல்வதில் தலை சாய்த்தாலும், அவர்களுக்குப் பணிவிடை செய்தாலும் ஒரு அக்கிரமக்காரனுக்குத் தாழ்ச்சி செய்தவனாகுவான். இது ஆகாது. ஏனென்றால், ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் தங்கள் திருவாயினால், "ஒருவனுடைய சீமான் தனத்துக்காக மற்றொருவன் அவனுக்குத் தாழ்ச்சி செய்வானாகில் அவன் அக்கிரமக்காரனல்லவென்கிலும் சரியே அவனுடைய தீனில் ஒருபாகம் பாழாகும்" என்று அருளிச்செய்திருக்கிறார்கள். ஆதலால், அவர்களுக்கு சலாம் சொல்வதைத்தவிர வேறொன்றும் செய்யத்தகாது. அவர்களுடைய கையை முத்தமிடுவதும், முதுகு வளைவதும், தலைகுனிந்திருப்பதும் இவைகளெல்லாம் தகாதவைகளாம். ஆனால் நீதிமானாகிய சுல்தானுக்கும் ஆலிமுக்கும் இன்னுமிவர்கள்போல் தீனுடைய சபபால் தாழ்ச்சிக்குப் பாத்தியமுள்ளவனாயிருப்பவனுக்கும் (இக்கிரியைகளால் தாழ்ச்சி செய்வது) ஆகும். ஸலபுகளான முன்னோர்களிற் சிலர் இது விஷயத்தில் மிகவும் கடினமாயிருந்திருக்கிறார்கள். அக்கிரமக்காரருடைய சலாமுக்கும் இவர்கள் ஜவாபு சொல்லுகிறதில்லை. ஏனென்றால், அவர்களுடைய அக்கிரமத்துக்காக அவர்களைத் தாழ்த்துவதற்கேயாம்.

இனி சொல்லினால் வரும் பாவமாவது:—அக்கிரமக்கார பாதுஷாக்களுக்கு துஆ செய்யும்படி நேரிடும். உதாரணமாக:—"அல்லாகு தஆலா உமக்கு வாழ்க்கையைக் கொடுப்பானாக" என்றும், "உம்முடைய ஆயுள்நீடித்திருப்பதாக" என்றும், இன்னுமிதுபோன்ற சொற்களைச் சொல்லுவான். இது ஆகாது. ஏனென்றால், "யாராவதொருவன் அக்கிரமக்காரனுக்கு ஆயுள் நீடித்திருக்கும்படி துஆ செய்வானாகில் அவன் அல்லாகு தஆலாவுக்கு மாறுசெய்கிற ஒருவன் எப்போதும் இப்பூமியின்மீது இருக்கவேண்டுமென்று ஆசிக்கிறவனாகுவான்" என்று ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள்.



ஆதலால் அக்கிரமக்காரனுக்கு அடியில்வரும் துஆவைத்தவிர வேறொரு துஆவும் செய்யக்கூடாது.

அஸ்லஹகல்லாஹு வவப்பக கல்லாஹு லில்கைராத்திவதவ்வலல்லாஹு உம்ரக்க பீதாஅத்திஹி. இதன் பொருளாவது:—அல்லாகுதஆலா உம்மை நன்மையில் திருத்துவானாக, நன்மைகளில் உமக்கு அவன் நல்லுதவி புரிவானாக, அவனுடைய வணக்கத்தில் உம்முடைய ஆயுளை நீட்டுவானாக என்பதே.

துஆசெய்து தீர்ந்தால் அநேகமாய்த் தன்னுடைய ஆசையை வெளிப்படுத்துகிறான். எப்படியென்றால், நான் தங்கள் சமுகத்துக்கு வரவும் தங்களைத் தரிசிக்கவும் எப்போதும் ஆசித்தவனாயிருக்கிறேன் என்று சொல்லுகிறான். இந்த ஆசை இவன் மனதில் இல்லாமற்போனால் அவசியமின்றிப் பொய்சொன்னவனென்றும், முனாபிக்குத்தனம் செய்தவனென்றும் ஆகுவான். மனதில் மெய்யாகவே ஆசையிருந்தால் எந்த மனம் அக்கிரமக்காரனைப் பார்க்க ஆசிக்கின்றதோ அந்த மனம் இஸ்லாமுடைய ஒளியில்லாதபடி ஒழிந்ததாய்ப் போம். எங்கிலும், உனக்கு ஒருவன் மாறுசெய்தால் எப்படி அவன் முகத்தைப் பார்க்க உனக்கு வெறுப்பாயிருக்குமோ அப்படியே அல்லாகுதஆலாவுக்கு மாறுசெய்கிறவனைப்பார்க்க உனக்குவெறுப்பாயிருக்கவேண்டும். இனி தனது ஆசையைக் காட்டியான பிறகு அவனை நீதவானென்றும் கொடையாளியென்றும் இன்னுமிதுபோல் பலவிதமாய்ப் புகழ ஆரம்பிக்கின்றான். இதுவும் பொய்யைவிட்டும் நிபாகைவிட்டும் ஒழியாது. இதில்குறைந்தபக்ஷம் ஒரு அக்கிரமக்காரனை சந்தோஷப்படுத்துகிறவனாகின்றான். இதுவும் கூடாது. இது தீர்ந்தால் ஒரு சமயம் அந்த அக்கிரமக்காரன் ஏதாவதொரு அசத்தியமான பேச்சைச் சொல்லுவான். அதற்கவன் தலையசைத்து ஆம் என்று ஒப்புக்கொள்ளும்படி நேரிடும். இவைகளெல்லாம் சொல்லால் வரும் பாவங்களாம்.

இனி சும்மாயிருப்பதினால்வரும்பாவமாவது:—அவனுடைய அரண்மனையில் பட்டு விரித்திருப்பதையும் சுவர்களில் ரூபங்கள் எழுதப்பட்டிருப்பதையும் பார்ப்பான் இன்னும் அவன் பட்டுடை உடுத்தியிருப்பதையும் பொன்மோதிரம்தரித்திருப்பதையும் அவ்விடத்தில்வெள்ளி கூஜாவைத்திருப்பதையும் காண்பான். இன்னும் ஒருசமயம் அவனில் நின்றும் அசங்கிதமான பேச்சுகளை அல்லது அபத்தமான வார்த்தைகளைக் கேட்பான். இவை எல்லாவற்றையும் விலக்கும்படி சொல்வது வாஜிபாயிருக்கிறது. வாய்மூடியிருப்பது கூடாது. ஆனால்விலக்கும்படி சொல்வதில்தனக்கு ஏதாவது இடர் சம்பவிக்குமென்ற பயமிருந்தால்

அப்போது சொல்லாமல்சும்மாயிருப்பதைப்பற்றி இவன்மேல்குற்றம் ஏற்படாது. என்றாலும், அவசியமில்லாமல் அவ்விடத்திற்குப்போன குற்றம் இவன்மேலிருக்கிறது. ஏனென்றால், ஒரு இடத்தில் பாவமிருக்க அதை விலக்கத் தன்னால் கூடாதபக்ஷத்தில் அவசியமில்லாமல் அவ்விடத்திற்குப் போவது கூடாதாயிற்றென்க.

இனி எண்ணத்தினால்வரும் பாவமாவது:—அக்கிரமக்காரன்மேல் இவன் மதிக்கிறதும். அவனை மனதால் நேசிப்பான். அவனுக்குத் தாழ்ச்சிசெய்வது தருமென்று எண்ணுவான். அவனுடைய செல்வத்தில் சிந்தனைபற்செலுத்துவான். அதனால் அன்யாயுடைய செல்வத்தின்மேல் இவனுக்கு ஆசையுண்டாம். ஈஸா நபி அலைஹிஸ்ஸலாம் அவர்கள் முறைமீறினவர்களான அவ்வாதுக்களை நோக்கி, "ஓ முறைமீறினவர்களே! நீங்கள் அன்யாயமானவைகளையுடைய செல்வர்களிடம் நெருங்கவேண்டாம். நெருங்குவீர்களாகில் அல்லாஹுதஆலா உங்களுக்குக் கொடுத்திருக்கிற இவைகளைப்பற்றி நீங்கள் வெறுப்படைவீர்கள்" என்று திருவுளமானார்கள். இன்னும் "நீங்கள் அன்யாயமுடையவர்களின் செல்வத்தைப் பார்க்கவேண்டாம்" என்றும், "பார்ப்பீர்களாகில் அவர்களுடைய அன்யாயின் (பகட்டான) பிரகாசமானது ஈமானுடைய இன்பத்தை உங்கள் மனதிலிருந்து நீக்கிவிடும்" என்றும் ஈஸா அலைஹிஸ்ஸலாம் சொல்லியிருக்கிறார்கள்.

இந்த எல்லா சங்கதிகளாலும் எந்த அக்கிரமக்காரனிடத்திலும் போக உத்தரவில்லையென்பது உனக்குத் தெரிந்திருக்கலாம். என்றாலும் இரண்டு காரியங்களின் நிமித்தம் போக உத்தரவுண்டு. முதலாவது: பாதுஷாவானவன் உன்னை ஹாஜிர்படுத்தும்படி கட்டளை பிறப்பித்திருக்க அதற்காக நீ போகாவிட்டால் உன்னை இம்சைபடுத்துவானென்றாவது, அல்லது அரசாங்கத்துக்குக் குரோதபங்கமுண்டாகி பிரஜைகள் அச்சமற்றவர்களாய்ப்போவார்களென்றாவது பயமேற்பட்டால் போவதாம். இரண்டாவது: தன்மேல் அநியாயமாய் வரும் துன்பத்தை அல்லது ஒரு முஸ்லிமின் விஷயத்தில் முறையிடப் போவதாம். இதற்கு விதியாவது:-பொய்சொல்லக் கூடாது. கடினமாய் ஸலாஞ்செய்வதை விடக்கூடாது. பயமாயிருந்தால் பிருதுவாயாவது ஸலாஞ்செய்ய வேண்டும். அங்கீகாரமாகாதென்று தெரிந்தால் பொய்சொல்லாமலும் புகழாமலும் பேசுவதைச் செய்துகொள்ளவேண்டும். சிபார்சு செய்வதற்காகப் போகிறேனென்று நினைசெய்கிறதுமிருக்கலாம். அந்த வேலை மற்றொருவனுடைய சிபார்சினால் கிடைத்துவிட்டால் அல்லது வேறொருவனுக்குக் கிடைத்துவிட்டால் இவன் வருத்தப்படுகிறான். இதனால் இவன் அவசர மிகுந்தமாய்ப் போகிறவனல்லவென்றும், பெருமை சம்பாதிக்கப் போகிறவனென்றும் தெரியலாகும்.



மூன்றாவது:—இவர்கள் சுல்தானிடம் போகாமல் சுல்தான் இவர்களிடம் வருவதாம். இதற்கு விதியாவது:—சுல்தான் ஸலாம் சொன்னால் அதற்கு இவன் ஜவாபு சொல்வான். சங்கைக்காக எழுந்து நின்றாலும் ஆகும். ஏனென்றால், சுல்தான் இவனிடம் வந்தது இல்மின் சங்கைக்காகவேயாம். இந்த நன்மை காரணமாக அவனும் சங்கைக்குப் பாத்தியமுள்ளவனாயினான். (அக்கிரமக்காரன் அவமதிப்புக்குப் பாத்தியனானது போல்) என்கிலும் எழுந்து மரியாதைசெய்யாமல் தன்பாவுடைய கேவலத்தைக் காட்டுவானாகில் ஏற்றமேயாம். என்றாலும், இதனால் அரசன் இவனை இம்சைபடுத்துவானென்றாவது அல்லது அரசாங்கத்துக்குப் பங்கமுண்டாகிப் பிரஜைகளில் இராஜபக்தி அற்றுப்போகும் என்றாவது அச்சமிருந்தால் அவமதிப்பது கூடாது. உட்கார்ந்தபிறகு அவனுக்கு மூன்றுவிதமான நஸீஹத்துகளைச் செய்வது வாஜிபாகும். முதலாவது:-ஹராமென்பது தெரியாமல் அவன் செய்துவருகிற காரியத்தைப்பற்றி அவனுக்கு விளக்கிக்காட்டி அது ஹராமென்பதை அறிவிக்கவேண்டும். இரண்டாவது:—ஹராமென்று தெரிந்து அவன் செய்துவருகிற கொடுமை, பாவம் போன்ற காரியங்களைப்பற்றி அச்சமூட்டவேண்டும். இன்னும் அன்யாயுடைய இன்பசுகத்தால் ஆகிரத்து என்னும் அழியாத இராச்சியத்தை இழந்துவிடுவது தகுதியல்லவென்றும், இன்னும் இதுபோன்றவைகளையும் சொல்லி, அவனுக்கு நஸீஹத்துசெய்யவேண்டும். மூன்றாவது:—பொதுஜன நன்மைகளின் பாதுகாப்புக்காகவேயாய் அரசனுக்குத் தெரியாத ஓர் யுக்தி தனக்கு ஏற்பட்டிருந்து அவன் அங்கீகரிப்பானென்ற நம்பிக்கையுமிருந்தால் அதை அவனுக்கு உணர்த்துவான். இந்த மூன்று நஸீஹத்துகளும் சுல்தான்களிடம் போகிற ஆலிமர்களின்மீது வாஜிபாயிருக்கிறது. (அங்கீகாரமாகுமென்ற நம்பிக்கையிருந்தால்தான்.) ஆலிமானவன் தனது இல்மின் விதிப்படி நடக்கிறவனாயிருந்தால் அவன்சொல் வீண்போகாது. என்கிலும் இவர்களுடைய அன்யாயின்மேல் ஹிர்ஸுள்ள ஆலிமாயிருந்தால் அவன் மௌனமாய் வாய்பொத்தியிருப்பதே உத்தமம். ஏனென்றால், இவன் ஏதாவது சொன்னால் சிரிப்புக்கு இடமாகுமேயொழிய வேறுபயனுண்டாகாது.

முகாத்திலுப்னுஸாலிஹு என்பவர் சொல்லுகிறதாவது:—நான் ஹம்மாதுப்னுஸல்மா றஹிமஹுல்லா அவர்களிடமிருந்தேன். அவர்களுடைய வீட்டில் ஒரு பாயும், ஒரு தோலும், ஒரு குர்ஆனும், ஒரு ஒளு செய்யும் பாத்திரமுந்தவிர வேறொன்றும் இருந்ததில்லை. அங்கு நான் இருக்கும்போது யாரோ கதவைத் தட்டின சத்தம் வந்தது. யார் என்று இவர்கள் கேட்டதற்கு, "முஹம்மதுப்னுஸுலைமான் என்

னும் நமது கலீபரசர் வந்திருக்கிறார் என்று அறிவித்தார்கள். பின்பு அவ்வரசன் உள்ளே வந்து உட்கார்ந்து, ஹம்மாது நகிமகுல்லாவை நோக்கி, "நான் தங்களைப் பார்க்கும்போது என் உள்ளமெல்லாம் நடுங்குகிறதே, இதற்குக் காரணம் யாது?" என்று கேட்டான். அதற்கு அவர்கள் சொன்னதாவது:—"ஒரு ஆலிமானவன் தன்னுடைய இல்மைக்கொண்டு அல்லாகு தஆலாவை நாடுவானாகில் அவனுக்கு எல்லாரும் பயப்படுவார்கள் என்றும், துன்யாவை நாடுவானாகில் அவன் எல்லாருக்கும் பயப்படுவான் என்றும் நாருல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள்" என்பதே. பின்பு அவ்வரசன் நாற்பதினாயிரம் திருஹங்களை அவர்களுக்கு முன்பாக வைத்து "இவைகளிலாவது செலவு செய்யுங்கள்" என்றான். அதற்கவர்கள் "நீரிதை எடுத்துக்கொண்டுபோய் உடையவர்களிடம் செலுத்திவிடும்" என்றார்கள். அதற்கரசன் ஆணையிட்டு "நான் இதை ஹலாலான மீராசினால் அடைந்திருக்கிறேன்" என்றான். அப்போதவர்கள் "இதன்மேல் எனக்கு ஹாஜத்தில்லை" என்றார்கள். அதற்கரசன் "ஹாஜத்துள்ள பாத்தியஸ்தர்களுக்குப் பங்கிட்டுவிடுங்கள்" என்றான். அதற்கவர்கள் "நான் நீதமாய்ப் பங்கிடுவேன்; ஒரு சமயம் யாராவது சரியாய்ப் பங்கிடவில்லையென்று சொல்லி குற்றவாளியாய்ப் போவான்; இதுவும் எனக்கிஷ்டமில்லை" என்றார்கள். அதை வாங்கவேயில்லை என்பதே. அரசர்களிடத்தில் ஆலிம்களின் வசனிப்பு இம்மாதிரியாயிருந்திருக்கிறது. இவர்கள் அரசர்களிடம் போனால் அவர்கள் நடந்துகொள்ளும் விதத்தைப் பின்வரும் ஹிக்காயத்தினால் தெரிந்துகொள்ளலாம்.

ஹிக்காயத்து:—ஹிஷாமுப்னு அப்துல் மலிக்கு என்னும் கலீபரசன் மதினமாநகரத்துக்குச் சென்றபோது அஸ்ஹாபுகளில் யாரையாவது ஒருவரிடம் அழைத்துக்கொண்டு வாருங்களென்றான். அப்போது அஸ்ஹாபுகள் ஒருவருமில்லை, எல்லாரும் சென்று போனார்களென்று அவனுக்கு அறிவிக்கப்பட்டது. அதற்கரசன் தாபியீன்களில் யாரையாவது ஹாஜிர்ப்படுத்துங்கள் என்றான். தாவூஸ் றகமத்துல்லாஹி அலைகியவர்களை அழைத்துக்கொண்டு வந்தார்கள். அவர்கள் உள்ளே பிரவேசித்துத் தங்கள் பாதரட்சையைக் கழட்டிவிட்டு, அஸ்ஸலாமு அலைக்க யாஹிஷாம் என்று சலாம் சொல்லி, "ஹிஷாமே! நீர் எப்படியிருக்கிறீர்?" என்று கேட்டார்கள். இதனால் அரசன் உக்கிர கோபங்கொண்டு அவர்களைக் கொன்றுவிட எத்தனித்தான். அப்போது இவர் றசூல் அலைகிஸ்ஸலாமுடைய ஹரமாயிருக்கிறதென்றும், இவர் பாரவான்களாகிய உலமாக்களில் ஒருவராயிருக்கிறார் என்றும்,



இப்படிச் செய்யக்கூடாது என்றும் மனதுக்குச் சொல்லி சமாதானப்படுத்திக்கொண்டான். பின்பு அவர்களை நோக்கி, "ஓய் தாவூஸே! இதென்ன நீர் துணிகரம் செய்தது?" என்றான். அதற்கவர்கள் "நான் என்ன செய்தேன்?" என்றார்கள். இதனால் கோபம் இன்னும் மதிகரித்து அரசன் சொன்னதாவது:—"நீர் நான்கு மரியாதைகளை விட்டு விட்டீர். முதலாவது:- பாதரட்சையோடு என்னிடம் வராமல் அதை என்னுடைய விரிப்பின் ஓரத்தில் கழட்டிவிட்டீர். (இப்படிச்செய்வது இவர்களிடத்தில் மரியாதைத் தாழ்வென்று எண்ணப்படுகிறது. மேலும் பாதரட்சையுடன் இவர்களிடம் வந்து உட்காரவேண்டுமாம். இப்போதும் கலிபாக்களுடைய வீடுகளில் இதேவழக்கம் நடந்து வருகிறது.) இரண்டாவது:-நீர் என்னை அமீருல் மூமினீன் என்று அழைக்கவில்லை. மூன்றாவது:-என்னை குன்யத்து என்னும் காரணப்பேரால் கூப்பிடாமல் இடுகுறி நாமத்தால் அழைத்தீர். (இதுவும் அறபிகளிடத்தில் மரியாதைத் தாழ்வாம்.) நான்காவது:- நீர் என்கையை முத்தமிடாமலும் என் உத்தரவில்லாமலும் உட்கார்ந்துவிட்டீர்" என்பதே. இதற்கு தாவூஸ் றகமத்துல்லாகி அலைகியவர்கள் பின்வருமாறு விடையளித்தார்கள்.

அவையாவன:—"எல்லாவற்றிற்கும் பெரிய பாதுஷாவாகிய அல்லாகு தஆலாவுடைய சன்னதிமுன் தினமொன்றுக்கு ஐந்துதரம் பாதரட்சையைக் கழட்டுகிறேன். அவன் என்மேல் கோபிக்கிறதில்லை. ஆதலால் உம்மிடத்தில் அப்படிச்செய்தேன். உம்முடைய அரசநீதி சர்வஜனங்களுக்கும் சம்மதமில்லையாதலால் உம்மை அமீருல் மூமினீன் (மூமின்களுக்கரசர்) என்று கூப்பிடுவதில் நான் பொய்யனாய்ப் போவேனென்று எனக்குப் பயமிருந்ததால் உம்மை நான் அப்படிக் கூப்பிடவில்லை. அல்லாகு தஆலா தனதுநேசர்களை இடுகுறிநாமத்தினால் யாதாவூது! யாயஹ்யா! யாஈஸா! என்று அழைக்கிறான். பகைவனைக் குன்யத்தினால் குறித்துக்காட்டி தப்பத்யதா அபீலஹபின் லஹபுடைய தகப்பனின் இரண்டு கைகளும் நாசமாய்ப்போயின என்று சபித்துச்சொல்லுகிறான். ஆதலால் நான் உம்மைக் குன்யத்தினால் அழைக்காமல் இடுகுறி நாமத்தினால் அழைத்தேன். பெண்ஜாதியின் கையை ஆசையோடும் பிள்ளையின் கையை அன்போடும் முத்தமிடலாமேயன்றி மற்றவருடைய கையையும் முத்தமிடுவது கூடாதென்று அமீருல் மூமினீன் அலிறலியல்லாகு அன்கு அவர்கள் சொல்ல நான் கேட்டிருக்கிறேன். அதனால் உம்முடைய கையை நான் முத்தமிடவில்லை. நரகவாளியைப் பார்க்கவேண்டுமென்று ஒருவன் கேட்டால், எவன் தனக்கு முன்னால் ஜனங்கள் நின்றுகொண்டிருக்கத் தான் உட்கார்ந்திருக்கிறானோ

அவனைப்பார்த்துக்கொள்ளும்படி அவனுக்குச்சொல் என்று அமீருல் மூமினீன் அலிறலியல்லாகு அன்கு சொல்ல நான் கேட்டிருக்கிறேன். அதனால் நான் உட்கார்ந்துவிட்டேன் என்பவைகளே. இவைகளைக் கேட்டகலீபாசன் களிப்புற்று எனக்கு வேறொரு நஸீஹத்து சொல்லுமென்றான். அப்போது அவர்கள், நரகத்தில் மலைகளைப்போன்ற அநந்தம் பாம்புகளும் ஒட்டகம்போன்ற அநந்தம் தேள்களுமிருக்கின்றனவென்றும், அவை பிரஜைகளின்மேல் அநீதம் செய்கிற அரசர்களை எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றனவென்றும் அமீருல் மூமினீன் அலிறலியல்லாகு அன்கு அவர்களால் கேட்டிருக்கிறேன் என்று சொல்லிவிட்டு உடனே எழுந்துபோய் விட்டார்கள்.

இன்னும் சுலைமானுப்னு அப்துல்மலிக்கு என்னும் கலீபாசன் மதீனாவுக்கு வந்தபோது அவ்விடத்தில் பாரவான்களாகிய உலமாக்களில் ஒருவராயிருந்த அபூஹாஸிம் றகமத்துல்லாஹி அலைஹியவர்களைத் தன் சமூகத்துக்கழைத்து "எங்களுக்கு மௌத்து வெறுப்பாயிருக்கிற காரணமென்ன?" என்று கேட்டான். அதற்கு "நீங்கள் துன்யாவைச் செழிப்பித்து ஆகிரத்தைப் பாழாக்குகிறீர்கள்" என்றும், "ஒருவன் செழிப்பான இடத்திலிருந்து பாழான இடத்துக்குப்போக நேரிட்டால் அது அவனுக்கு வெறுப்பாய்த்தானிருக்கும்" என்றும் சொன்னார்கள். "பின்பு ஜனங்கள் அல்லாகுத்தஆலாவுடைய சமூகத்துக்குப் போனால் அவர்கள் எவ்வகைநிலைமையாயிருப்பார்கள்" என்று அரசன் கேட்டான். அதற்கு "ஊரிலிருந்து திரும்பிவந்த ஒருவன் எப்படித் தன் பந்துக்களையும் சிநேகர்களையும் கண்டு களிக்கின்றானோ அப்படியே நல்லவர்கள் களிப்படைவார்கள். கெட்டவர்களோ ஓடிப்போன அடிமைப்பாலைத் தேடிப்போய்ப் பிடித்து இழுத்துக்கொண்டுவந்து எஜமானனுடைய சமூகத்தில் நிறுத்தினால் அவன் எப்படியாகுமோ அப்படியே அவர்களுடைய கதியுமாம்" என்று சொன்னார்கள். அப்போது அரசன், "ஆ கைசேதமே! என்னுடைய கதி எப்படியாகுமோ எனக்குத் தெரியவில்லையே" என்றான். அதற்கு "நீர் குர்ஆனைப்பார்வையிடும். அதில் அல்லாகுத்தஆலா நல்லவர்கள் திடனாகச் சொர்க்கத்திலிருப்பார்கள். கெட்டவர்கள் திடனாக நரகத்திலிருப்பார்கள் என்று திருவுளமாகிறான்" என்றார்கள். பின்பு "அல்லாகுத்தஆலாவுடைய றகமத்து யாரிடத்திலிருக்கும்?" என்று கேட்டான். "உபகாரிகளை அடுத்திருக்கும்" என்றார்கள்; தீனுடைய உலமாக்கள் அரசர்களோடு இவ்விதமாய் வசனித்திருக்கிறார்கள். துன்யாவுடைய உலமாக்கள் இவர்களிடம் யாசனிப்பதானது புகழும் போற்றலும் அழவுமாயிருக்கிறது. அன்றியும், அவர்க-



ளுக்குச் சந்தோஷமுண்டாகும்படியான ஏதாவதொரு பேச்சை எடுத்துப் பேசலாமென்று அதன் ஆராய்வில் இருக்கிறார்கள். அரசர்களுடைய எண்ணம் நிறைவேறுவதற்குச் சார்பான யாதொரு ஹீலாவை அல்லது ஆதாரவைத் தேடுகிறார்கள். அரசர்களுக்கு இவர்கள் நஸீஹத்து செய்தால் அதில் இவர்களுடைய நோக்கமாகிறது தங்களுக்குப் பெருமை கிடைக்கவேண்டுமென்பதுதான். இதற்கு அடையாளம் யாதெனில், அந்த நஸீஹத்தைவேறே யாராவது சொன்னால் இவர்களுக்குப் பொறுமையாயிருக்கும். எவ்விதத்திலும் அக்கிரமக்காரர்களைக்காணாமலிருப்பதே ஏற்றமாம். அவர்களிடம் கலந்திருப்பது கூடாது. இதுபோலவே அவர்களுடன் கலந்திருப்பவர்களோடும் கலக்குதல் கூடாது. ஒருவன் ஜனசகவாசமில்லாமல் தனித்திருந்தாலேயன்றி, இன்னும் மற்றவர்களுடைய சிநேகத்தையும் தரித்தாலேயன்றி, அக்கிரமக்காரருடன் கலக்காமலிருக்க அவனால் முடியாத பக்ஷத்தில், அவன் எல்லாரையும்விட்டு ஏகாங்கியாயிருப்பதைத் தெரிந்துகொள்ளவேண்டும். எவருடைய சகவாசமும் சிநேகமுமில்லாதபடி நீங்கிவிடவேண்டும். றசூல் சல்லல்லாகு அலைஹிவசல்லமவர்கள் தங்கள் திருவாயினால் "என் உம்மத்திலுள்ள உலமாக்கள் அரசர்களோடு கலக்காமலிருக்கிறவரை, என் உம்மத்து எப்போதும் அல்லாகுத்தஆலாவுடைய காவலுக்குள்ளிருக்கும்" என்று அருளிச்செய்திருக்கிறார்கள். [illegible] களின்கேடு அரசர்களின் கேட்டினாலும், அரசர்களின் கேடு ஆலிம்களின் கேட்டினாலுமாயிருக்கிறது. ஏனென்றால் இவர்கள் அரசர்களைத் திருத்துகிறதில்லை. அவர்கள்மேல் நிராகரிப்பு செய்கிறதுமில்லை.

(பசல்) யாராவதொரு பாதுஷா ஒரு ஆலிமிடத்துக்குக் கொஞ்சம் பொருளை அனுப்பி அதை கைராத்தில் பங்கிட்டுவிடும்படிச்சொன்னால், அந்தப்பொருளுக்குடையவன் குறிப்பாய் ஒருவனிருக்கிறான் என்று அந்த ஆலிமுக்குத் தெரிந்திருந்தால் ஒருபோதும் அதைப் பங்கிடுவது கூடாது. மேலும், அதை உடையவனுக்கே திரும்பக்கொடுத்துவிடும்படி சொல்லவேண்டும். அதற்குடையவன் ஒருவனும் வெளியாகாமற்போனால், உலமாக்களில் ஒரு கூட்டம் அதை வாங்குவதும் பங்கிடுவதும் கூடாதென்று தடைசெய்திருக்கிறார்கள். ஆனால், அந்தப் பொருளை அவர்களிடமிருந்து வாங்கி ஏழைகளுக்குப் பங்கிடுவதே உத்தமமென்று நாம் தாத்பரியப்படுகிறோம். ஏனென்றால், அது மீண்டும் அவர்கள் கைக்குப் போகாமலும் அவர்கள் அதை அக்கிரமத்திலும் பாவச்செயல்களிலும் செலவு செய்யாமலுமிருக்குமேயாம். அன்றியும் இப்படிச்செய்வதில் ஏழைகளுக்கும் கிஞ்சித்து சுகம் கிடை-

க்கின்றது. இவ்வகையான பொருளைப்பற்றிய தீர்ப்பு என்னவென்றால் மூன்று விதிகளை அநுசரித்து இதை வாங்கி பகீருகளுக்குக் கொடுக்கலாம் என்பதே.

முதலாவது விதி:—அந்த ஆலிம் அதை வாங்குவதினால் அனுப்பினவன் தன் பொருள் ஹலாலானதென்றும், ஹலாலாயில்லாமற்போனால் ஆலிமானவர் அதை வாங்கமாட்டாரென்றும் நினைக்காமலிருப்பதாம். அப்படி அவன் நினைக்கிறபக்ஷத்தில் வாங்கக்கூடாது. ஏனென்றால், அப்போது அவன் ஹராமைச் சம்பாதிக்கத் துணிவான். இதன் கெடுதியாகிறது ஏழைகளுக்குப் பங்கிடுவதின் நன்மையைக்காட்டிலும் அதிகமாயிருக்கும்.

இரண்டாவது விதி:—அந்த ஆலிம் வாங்குவதை ஆதாரமாகக் கொண்டு மற்றவர்களும் அவரைத் தொடர்ந்து வாங்குகிறவர்களாயும், அவர் ஏழைகளுக்குக் கொடுத்துவிடுவதை மறந்தவர்களாயுமிருக்கிற ஓர் இடத்தில் அந்த ஆலிம் இல்லாமல் வேறு இடத்திலிருப்பதாம். உதாரணமாக:—சிலர் ஷாபியீ றழியல்லாகு அன்கு அவர்கள் கலீபாக்களிடம் பொருள் வாங்குகிறவர்களாயிருந்தார்களென்பதை ஆதாரமாகக் கொள்ளுகிறார்கள். ஆனால் அவர்கள் அந்தப் பொருள் எல்லாவற்றையும் ஏழைகளுக்குப் பங்கிட்டுவிடுகிறவர்களாயிருந்ததை இவர்கள் மறந்துவிட்டிருக்கிறார்கள். வஹபுப்னுல் முனப்பஹ், தாவூஸ் றழிமகுமல்லாகு இவர்களிருவரும் ஹஜ்ஜாஜுடைய சகோதரனாய கலீபாவிடம் போனார்கள். தாவூஸ் றழிமகுல்லா அவர்கள் அரசனுக்குச் சன்மார்க்கபோதனை செய்துகொண்டிருந்தார்கள். காலைநேரமானபடியால் குளிராயிருந்தது. அப்போது அரசனுடைய உத்தரவின்பேரில் தைலஸான் என்னும் ஓர்வகைப் போர்வையைக் கொண்டுவந்து அவர்கள் மீது போர்த்தினார்கள். தாவூஸ் றழிமகுல்லா அவர்கள் அரசனிடத்தில் அசைந்தசைந்து பேசிக்கொண்டே அந்தப்போர்வையைக் கீழே நழுவவிட்டார்கள். இதைக்கண்ட அரசனுக்குக் கோபமுண்டாயிற்று. பின்பு அவர்கள் வெளியே வந்தபோது வஹபுப்னுல் முனப்பஹ் றழிமகுல்லா அவர்கள் தாவூஸ் றழிமகுல்லாவைநோக்கி, நீர் போர்வையை நழுவவிட்டு அரசனைக் கோபப்படுத்தினதைப் பார்க்கிலும் அதைக் கொண்டுவந்து பகீருக்குக் கொடுத்திருந்தால் நன்மையாயிருந்ததே என்றார்கள். அதற்கு அவர்கள் சொன்னதாவது:—எனக்கு ஒரு பயமிருந்தது. அதென்னவென்றால் என்னைப் பார்த்து எவரும் அரசர்களிடத்தில் பொருள் வாங்குவார்கள். ஆனால் நான் பகீருக்குக் கொடுப்பது அவர்களுக்குத் தெரியாமற்போகுமென்ற பயமேயாம் என்பதே.



மூன்றாவது விதி:—ஒரு அக்கிரமக்காரன் தன்னிடம் பொருள் அனுப்பினகாரணமாக அவன்மேல் மனதில் பக்ஷமுண்டாகக்கூடாது. ஏனென்றால், அக்கிரமக்காரன்மேல் பக்ஷமிருப்பதானது அநந்தம் பாவங்களுக்குக் காரணமாகும். அவனுடன் தாட்சண்ணியமாய்ப் பேசுவதற்குக் காரணமாகும். அவன் மவுத்தாய்ப் போவதிலும், அதிகாரத்திலிருந்து நீக்கப்படுவதிலும் துக்கிப்பதற்குக் காரணமாகும். அவனுக்கு அதிகார ஆட்சிகள் அதிகப்படுவதில் சந்தோஷிப்பதற்குக் காரணமாகும். இதற்காகவே ரசூல்சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் அல்லாகுதஆலாவை வேண்டி, "என்னுடைய நாயனே! அக்கிரமக்காரன் எனக்கு ஏதாவது உபகாரஞ் செய்யும்பக்ஷத்தில் என்மனம் அவனைச் சார்ந்திருக்குமாதலால் எனக்கு உபகாரஞ்செய்ய எந்த அக்கிரமக்காரனுக்கும் நீ உதவி புரியாதே" என்று கேட்டிருக்கிறார்கள். இப்படிக் கேட்டது எதனாலென்றால், உபகாரஞ் செய்தவன்மேல் அநுதினம் மனஞ்சாருமாதலாலும். அக்கிரமம் செய்தவர்களின்பக்கம் நீங்கள் சாரவேண்டாம் என்று அல்லாகுதஆலா திருவுளமாகிறதினாலுமாம். கலீபாசர்களில் ஒருவன் பதினாயிரம் திருஹங்களை ஜனங்களுக்குப் பங்கிடும்படி மாலிகுப்னுதீனார் றஹ்மத்துல்லாஹி அலைகிவர்கள் சமுகத்துக்கு அனுப்பினான். அவர்கள் அவையெல்லாவற்றையும் பங்கிட்டுவிட்டார்கள். தங்களுக்காக ஒரு திருஹத்தையாவது வைத்துக்கொள்ளவில்லை. அவர்களை முகம்மதுப்னு வாஸிகு றழிமகுல்லா கண்டு, "நீர் உண்மையாய்ச்சொல்லும். அரசன் உம்மிடத்திற்குப்பொருள் அனுப்பினதைப் பற்றி அவன்மேல் உமக்குக் கொஞ்சமாவது பக்ஷமுண்டாகவில்லையா?" என்று கேட்டார்கள். அதற்கவர்கள் "ஆம் உண்டாயிற்று" என்றார்கள். அப்போது முஹம்மதுப்னுல் வாஸிகு றழிமகுல்லாஹி அவர்கள் "இதைத்தான் நான் பயந்திருந்தேன். கடைசியில் அந்தப்பொருளின் கிலேசமானது அதன் தொழிலை உம்மிடம் காட்டிவிட்டது" என்று சொன்னார்கள். பசராவிலிருந்த பெரியோர்களில் ஒருவர் சுல்தானிடத்தில் பொருளைவாங்கிப் பங்கிடுகிறவராயிருந்தார். அப்போது அவரிடத்தில் "உமக்கு சுல்தானைப்பற்றி மனதில்பக்ஷமுண்டாகுமென்ற பயமில்லையா?" என்று கேட்டதற்கு, "ஒருவன் என் கையைப் பிடித்துச் சொர்க்கவாசலில் கொண்டுபோய்ச் சேர்த்தாலும் அவன் பாவஞ்செய்வானாகில் என்னைச் சொர்க்கவாசலில் சேர்க்கும்படி அவனை வசப்படுத்திய அல்லாகுதஆலாவுக்காக அந்தப் பாவியை நான் பகைப்பேன்" என்று சொன்னார். எவனுக்கு இந்த சக்தியிருக்கிறதோ அவன் அரசர்களிடத்தில் பொருளைவாங்கிப் பங்கிடுவதில் பாதகமில்லை.

## ஐந்தாவது அஸ்லு - அல்லாவுக்காக ஜனங்களுடைய சகவாசத்தின் ஹக்குகளை நிறைவேற்றல்; பந்துக்கள், அயல்வீட்டார், அடிமைகள், ஏழைகள் இவர்களுடைய ஹக்குகளைப்பேணுதல் முதலியவைகளின் பயான்.

அறிந்துகொள்:—துன்யாவானது அல்லாகு தஆலாவுடைய சமுகத்திற்சேரும் பாதையிலிருக்கிற * மன்ஜில்களில் ஓர் மன்ஜிலாயிருக்கிறது. இந்த மன்ஜிலில் எல்லாரும் யாத்திரைக்காரரா யிருக்கிறார்கள். இந்த யாத்திரையில் எல்லாருடைய நோக்கமும் ஒன்றாகவே யிருப்பதால் இவர்களெல்லாரும் ஒன்றுபோலாவார்கள். ஆதலால் இவர்களுக்குள் அன்பும் ஒற்றுமையும் உதவியுமிருக்கவேண்டும். ஒவ்வொருவரும் மற்றவருடைய ஹக்குகளை ஞாபகத்தில் வைக்கவேண்டும். நாம், இந்த ஹக்குகளை மூன்றுபாபுகளிற் கூறுவோம்.

### முதலாவது பாபு - அல்லாவுக்காக ஒருவரை நேசிப்பதிற் பேசுவது.

அறிந்துகொள்:—அல்லாகு தஆலாவுக்காக ஒருவரை நேசிப்பதானது தீனில் வரிசைபெற்ற இபாதத்துகளில் ஒன்றாயும் பெரிய தகவிகளிற் சேர்ந்ததாயு மிருக்கின்றது. றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் தங்கள் திருவாசினால், "அல்லாகுதஆலா யாருக்குநன்மையை நாடியிருக்கிறானோ, அவன் அல்லாகுதஆலாவை மறந்தநேரத்தில் அவனுக்கு ஞாபகத்தை யூட்டவும், அவன் மறக்காமல் தியானிக்கிறவனாயிருந்தால் அவனுக்கு உதவிசெய்யவும் லாயக்கான ஒரு நேசனை அவனுக்குத் தந்தருளுவான்". என்று அருளிச்செய்திருக்கிறார்கள். இன்னும் "இரண்டு மூமின்கள் சேர்வதில் ஒருவனால் மற்றொருவனுக்குத் தீனில் ஏதாவது பிரயோசன முண்டாகாமற் போகாது" என்றுந் திருவுளமாயிருக்கிறார்கள். "இன்னும் யாராவதொருவன் அல்லாகுதஆலாவுடைய பாதையில் மற்றொருவனைத் தன் சகோதரனாக்கிக்கொள்வானானால் அவனுக்குச் சொர்க்கத்தில் எந்த அமலனாலும் கிடைக்காத ஓர் பதவி கிடைக்கும்" என்றுந் திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும் அபூஇதுரீசு கவலானி றகுமத்துல்லாகி அலைகியவர்கள் மஆது றழியல்லாகு அன்கு அவர்களிடத்தில் "நான் தங்களை அல்லாவுக்காக நேசிக்கிறேன்" என்று சொன்னார்கள். அதற்கவர்கள் "றசூல்சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களால் நான் கேட்டிருக்கிற ஓர் சங்கதியை உமக்கு நல்மாராயமாய்க் கூறு

* மன்ஜில் என்பது யாத்திரைக்காரர் தங்கிச் செல்வதற்காக ஏற்பட்டிருக்கிற ஓர் இடமாம். இதன்பொருள் இறங்குமிடம் என்பதேயாம்.



கிறேன். அதாவது:—கியாமத்துநாளில் அருஷைச்சுற்றிலும் நாற்காலிகள் போடப்படும். அந்த நாற்காலிகளின்மீது மனிதர்களில்நின்றும் ஓர்கூட்டம் உட்காரும். அவர்களுடைய முகங்கள் பூரணச்சந்திரன் போல் பிரகாசிக்கும். எல்லாரும் அந்தநாளில் அச்சமுற்றவர்களாயிருக்க இவர்கள் அச்சமில்லாதவர்களாயும், எல்லாரும் நடுக்கம்பிடித்தவர்களாயிருக்க இவர்கள் தீரமுள்ளவர்களாயுமிருப்பார்கள். இவர்கள் அல்லாகுதஆலாவுடைய நேசர்களாயிருப்பார்கள். இவர்களுக்குப்பயமுமிருக்காது துக்கமுமிருக்காது என்று நாயகமவர்கள் திருவுளமானார்கள். அப்போது யாரசூலல்லா! இவர்கள் எவரா யிருப்பார்கள்? என்று கேட்கப்பட்டது. அதற்கு நாயகமவர்கள் அல்முத்தஹாப்பூன பில்லாஹி இவர்கள் அல்லாவுக்காக ஒருவரையொருவர்நேசித்தவர்கள் என்று திருவுளமானார்கள்" என்பதே. இன்னும் "அல்லாவுக்காக ஒருவரையொருவர் நேசிக்கிற இரண்டுபேரில் எவன் அதிகமாய் நேசிக்கிறானோ அவன் அல்லாகு தஆலாவுக்கு அதிக நேசமுள்ளவனாயிருப்பான்" என்று றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும் "எனக்காக ஒருவரையொருவர் போய்க் கண்டுகொள்ளுகிறவர்களும்; எனக்காக ஒருவரையொருவர் நேசிப்பவர்களும், எனக்காகப் பொருளில் ஒருவருக்கொருவர் இலேசாக்கி வைப்பவர்களும், எனக்காக ஒருவருக்கொருவர் உதவியாயிருப்பவர்களுமான மூமின்கள் என்னுடைய நேசத்துக்குப் பாத்தியஸ்தர்களா யிருக்கிறார்கள்" என்று அல்லாகுதஆலா சொல்லுகிறதாய் றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும் "ஒன்றியிருக்க ஒருஆதரவுமில்லாத இன்றையதினத்தில் நான் என்னுடைய ஆதரவில் அணைத்துக்கொள்வதற்கு எனக்காக ஒருவரையொருவர் நேசித்தவர்கள் எங்கேயிருக்கிறார்கள்" என்று கியாமத்துநாளில் அல்லாகுதஆலா சொல்லுகிறதாய் றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும் "எவருக்கும் நிழல் கிடைக்காத கியாமத்துநாளில் ஏழுபேர் அல்லாகுதஆலாவுடைய (றகுமத்தென்னும்) நிழலில் இருப்பார்கள்" என்றும், "அவர்களில் முதலாவது-நீதவானாகிய பாதுஷா" என்றும், "இரண்டாவது-வாலிபத்தின் ஆரம்பத்திலிருந்து அல்லாகுதஆலாவுடைய இபாதத்திலிருப்பவன்" என்றும், "மூன்றாவது-பள்ளிவாசலை விட்டு வெளியே வந்தால் மீண்டும் அங்கேபோகவேண்டுமென்ற எண்ணமே மனதில் குடிகொண்டவன்" என்றும், "நான்காவது-அல்லாகுதஆலாவுக்காக ஒருவரையொருவர் நேசித்து அவனுக்காகவே ஒன்றுசேர்கிறவர்களாயும், அவனுக்காகவே பிரிகிறவர்களாயுமிருக்கிற இரண்டு

நேசர்கள்" என்றும், "ஐந்தாவது - தனிமையில் அல்லாகுதஆலாவை ஞாபகம்செய்து அழுதவன்" என்றும், "ஆறாவது - அழகும் அந்தஸ்துமுள்ள ஒரு பெண்பிள்ளையானவள் தன்னிடம் நெருங்கும்படி கூப்பிட நான் அல்லாகுதஆலாவுக்குப் பயப்படுகிறேன் என்றுசொல்லி அவளைவிட்டும் விலகிக்கொண்டவன்" என்றும், "ஏழாவது - இடதுகைக்குத் தெரியாதபடி வலதுகையினால் சதகா கொடுத்தவன்" என்றும் றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமா யிருக்கிறார்கள். இன்னும் "அல்லாவுக்காகத் தன் சினேகனைக் கண்டுகொள்ளப்போகிறவனுக்கும் ஒரு மலக்கு பின்னேயிருந்து உனக்கு அல்லாகுதஆலாவுடைய சொர்க்க வாழ்க்கை யுண்டாவதாக என்று சப்தித்து அவனை வாழ்த்துவதாய் றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். இன்னுமவர்கள் திருவுளமாகிறதாவது:—ஒருமனிதன் தன் சினேகனைக் கண்டுகொள்ளப் போய்க்கொண்டிருக்கும்போது அவன் வழியில் அல்லாகுதஆலா ஒருமலக்கை அனுப்பினான். அந்தமலக்கு வந்து "நீ எங்கேபோகிறாய்?" என்று அவனைக்கேட்க, "இன்னசினேகனைக்கண்டுகொள்ளப்போகிறேன்" என்று அவன்சொன்னான். அதற்கவர் "அவனிடத்தில் உனக்கு யாதாவது ஹாஜத்துண்டோ?" என்றுகேட்க அவன் "இல்லை" என்றான். அப்போதவர் "உனக்கு அவன் பந்துவாயிருப்பானோ?" என்று கேட்க, அவன் "அல்ல" என்றான். "உனக்கு அவன் ஏதாவது உபகாரம் செய்திருப்பானோ?" என்று கேட்க, அதற்கும் "இல்லை" என்றான். பின்பு "ஏன் போகிறாய்?" என்று கேட்டதற்கு "அல்லாவுக்காக அவனை நான் கண்டுகொள்ளப் போகிறேன். அல்லாவுக்காக அவனை நான் நேசிக்கிறேன்" என்று சொன்னான். அப்போது அந்த மலக்கானவர் "நீ அந்தச் சினேகனை நேசிக்கிற காரணமாக அல்லாகுதஆலா உன்னை நேசிக்கிறான்" என்றும், "உனக்குச் சொர்க்கத்தைக் கொடுக்கத் தன்மேல் விதியாக்கிக்கொண்டான்" என்றும், "உனக்கு நல்மாராயம் சொல்லும்படி அல்லாகுதஆலா என்னை உன்னிடத்திற்கு அனுப்பினான்" என்றும் சொன்னார் என்பதே. இன்னும் "அல்லாவுக்காகச் சினேகிப்பதும் பகைப்பதுமே ஈமானில் பலமான ஆதாரமாயிருக்கிறது" என்று றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமா யிருக்கிறார்கள்.

இன்னும் நபிமார்களில் ஒருவருக்கு அல்லாகுதஆலா அனுப்பிவைத்த வஹியாவது:—"நபியே! நீர் தெரிந்தெடுத்துக்கொண்ட ஜுஹ்து என்னும் இந்தத் தவத்தினால் துன்யாவையும் அதன் கஷ்டங்களையும் அநுபவிக்காதபடி நம்முடைய சுகத்தைத் தேடிக்கொள்ள



அவசரப்பட்டீர். இன்னும் என்னுடைய வணக்கத்தில் நீர் பராக்காயிருப்பதினால் உமக்கு மரியாதை சம்பாதித்துக்கொண்டீர். என்றுனும் நோட்டமிட்டுப் பாரும். எப்போதாவது எனக்காக என் சினேகர்களை நேசித்தும் என்பகைவர்களைப் பகைத்து மிருக்கிறீரா?" என்பதே. இன்னும் ஈஸா அலைகிஸ்ஸலாமவர்களுக்கு அனுப்பின வஹியாவது:—"ஓ ஈஸாவே! நீர் வானத்திலும் பூமியிலும் உள்ளவர்களுடைய எல்லா வணக்கங்களையும் வணங்கினபோதிலும் அந்த வணக்கங்களில் என் சிநேகர்களின்மேல் நேசமும் என் பகைவர்களின்மேல் பகையும் இல்லாமற்போனால் அந்த வணக்கங்கள் ஒன்றும் உமக்குப் பயன் தராது" என்பதே. இன்னும் "நீங்கள் பாவிகளின்மேல் பகைவைப்பதினால் அல்லாகுதஆலாவுக்கு நேசராகுங்கள்" என்றும், "அவர்களை விட்டும் தூரமாகுவதினால் அல்லாகுதஆலாவுக்குச் சமீபமாகுங்கள்" என்றும், "அவர்கள்மீது கோபஞ்செய்வதினால் அல்லாகுதஆலாவைச் சந்தோஷப்படுத்துங்கள்" என்றும் ஈஸா அலைகிஸ்ஸலாம் சொல்லியிருக்கிறார்கள். இன்னும் நாங்கள் யாரை அடுத்திருக்கலாம்" என்று அவர்களிடம் கேட்டதற்கு, "எவரைக்காண்பதானது உங்களுக்கு அல்லாகுதஆலா உடைய நினைவை யூட்டுகின்றதோ, எவருடைய வார்த்தையானது உங்களை அறிவில் விருத்தியடையச் செய்கிறதோ, எவருடைய செய்கையானது ஆகிரத்தின் பக்கம் உங்களை மனந்திரும்ப தோ அவரையே அடுத்திருங்கள்" என்று சொன்னார்கள். அல்லாகுதஆலா தாவூது அலைகிஸ்ஸலாமவர்களுக்கு "ஓ தாவூதே! நீர் ஏன் ஜனங்களைவிட்டும் விரண்டோடித் தனிமையில் உட்கார்ந்தீர்" என்று வஹி யிறக்கினான். அப்போது தாவூது அலைகிஸ்ஸலாமவர்கள் "என்னுடைய ஆண்டவனே! உன்னுடைய நேசமானது ஜனங்களுடைய ஞாபகத்தை என் மனதிலிருந்து நீக்கிவிட்டது, நான் எல்லாரையும் வெறுத்து விட்டேன்" என்று விண்ணப்பம் செய்தார்கள். அதற்கு அல்லாகுதஆலா "ஓ தாவூதே! எச்சரிக்கையாயிரும். சகோதரர்களை சம்பாதித்துக்கொள்ளும். தீனில் உமக்கு உதவியாயில்லாதவன் எவனோ அவனைவிட்டும் தூரமாயிரும். அவன் உம்முடைய மனதைக் கறுப்பாக்குவான். இன்னும் என்னிடமிருந்து உம்மைத் தூரப்படுத்துவான்" என்று அருளிச்செய்தான். இன்னும் அல்லாகுதஆலாவுக்கு ஒரு மலக்கு இருப்பதாயும், அந்த மலக்கின் ஒரு பாதி பனிக்கட்டியினாலும் மற்றொருபாதி நெருப்பினாலும் படைக்கப்பட்டிருப்பதாயும், அந்த மலக்கானவர் அல்லாகுதஆலாவை வேண்டி "என்னுடைய நாயனே! நீ பனிக்கட்டியும் நெருப்பும் பொருந்தி ஒன்று சேர்ந்திருக்கும்

படி அவைகளுக்குள் நேசமுண்டாக்கி வைத்ததுபோல் உன்னுடைய நல்லடியார்களுடைய மனங்களிலும் நேசத்தைக்கொடு" என்று சொல்லுகிறதாயும் றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும் "எந்த ஜனங்கள் அல்லாகுதஆலாவுக்காக ஒருவருக்கொருவர் நேசிக்கிறார்களோ அவர்களுக்குச் சிவந்த மாணிக்கத்தினாலாகிய ஓர் தூண் நிறுத்தப்படும்" என்றும், "அதன் உச்சியில் எழுபதினாயிரம் சன்னல்களிருக்கும்" என்றும், "இவர்கள் அந்தத் தூணின் மீதிருந்து அந்த சன்னல்களின் வழியாய்ச் சொர்க்கவாசிகளை எட்டிப் பார்ப்பார்கள்" என்றும், "சூரியனுடைய ஒளி பூமியின்மீது விழுவது போல் இவர்களுடைய முகத்தின் ஒளி சொர்க்கவாசிகள்மேல் விழும்" என்றும், அப்போது சொர்க்கவாசிகள் "வாருங்கள்! அவர்களைப் போய்ப்பார்க்கலாமென்று சொல்லுவார்கள்" என்றும், "இவர்கள் ஸுந்துஸு என்னும் பச்சைவர்ணப் பட்டாடை அணிந்தவர்களாயும், நெற்றிகளில் அல்முத்தஹாப்பூன பில்லாஹி இவர்கள் அல்லாவுக்காக ஒருவரையொருவர் நேசித்தவர்களென்று எழுதப்பட்டிருப்பவர்களாயும் காண்பார்கள்" என்றும் றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். இப்நுசம்மாக் றகமதுல்லாஹி அலைஹியவர்கள் மவுத்தாகிறபோது "என்னுடைய நாயனே! நான் பாவம் செய்துகொண்டிருக்கும்போதும் உன் வணக்கவாளிகளை நேசித்திருப்பது உனக்குத் தெரியும். இதை அந்தப் பாவங்களுக்குக் கபாறாவாக்கிவை" என்று சொல்லிக்கொண்டிருந்தார்கள். முஜாஹிது றகமதுல்லாஹி அலைஹியவர்கள் சொல்லுகிறதாவது:—"அல்லாவுக்காக நேசிக்கிறவர்கள் ஒருவரையொருவர் பார்த்துச் சிரிக்கும்போது அவர்களுடைய பாவமானது மரத்திலிருந்து இலை உதிர்வதுபோல் அவர்களிலிருந்து உதிர்ந்து விடுகிறது" என்பதே.

### அல்லாகுதஆலாவுக்காக நேசிக்கும் நேசம் எதுவென்பதின் பயான்.

அறிந்துகொள்:—நீ மற்றொருவனுடன் புத்தகசாலையில் எழுத்துவேலை பார்ப்பதினாலாவது, அல்லது யாத்திரையிலிருப்பதினாலாவது, அல்லது மதரஸாவில் படித்ததினாலாவது, அல்லது ஒரே வீதியில் இருப்பதினாலாவது உனக்கு அவன்மேல் நேசமுண்டாகும்படி நேரிட்டால் இது அல்லாவுக்காக நேசிக்கிற நேசமென்றாகாது. இன்னும், அழகும் அருமையான பேச்சும் அற்பர்களில் இருந்தாலும் அவர்கள்மேல் நேசமுண்டாகுவது சகசம். ஆதலால், ஒருவனும் அழகாயிருப்பதைப் பற்றி, அல்லது இனியவார்த்தை பேசுவதைப்பற்றி அவன்மேல் உண்டாகிற நேசம் இதிற் சேராது. இன்னும் ஒருவனால் உனக்கு ஏதாவதொரு பெருமை அல்லது பொருள் அல்லது துன்யா சம்பந்தமான யாதொரு பிரயோசனமிருப்பதைப்பற்றி அவன்மேல் உனக்கு உண்டாகிற நேசமும் இதிற் சேராது. ஏனென்றால், இந்த நேசமெல்லாம் அல்லாவின்பேரிலும் ஆகிறத்தின்பேரிலும் ஈமான் கொள்ளாதவனிடமும் உண்டாகக்கூடும். அல்லாவுக்காக நேசிக்கும் நேசமானது ஈமானில்லாதவர்களில் ஏற்படாது. இதுவோ இரண்டு வகுப்பாயிருக்கிறது.



முதலாவது வகுப்பு:—ஏதாவதொரு பிரயோசனத்தை நாடி ஒருவனை நேசிப்பதாம். ஆனால் அது தீன் சம்பந்தமான பிரயோசனமாயும் அல்லாவுக்காக என்று நாடப்பட்டதாயுமிருக்கவேண்டும். உதாரணமாக:—உஸ்தாதானவர் உனக்கு இல்மைப் படித்துக்கொடுக்கிற நிமித்தம் அவரை நீ நேசிப்பது அல்லாவுக்காக நேசிக்கிற நேசமாகும். ஆனால் இல்மைப்படிப்பதில் நீ கருதியபொருள் ஆகிரத்தாயிருக்கவேண்டும். பெருமையும் பொருளும் சம்பாதிப்பதற்கென்ற நோக்கமிருக்கக்கூடாது. துன்யாசம்பந்தமான நோக்கமிருந்தால் இந்த நேசம் அதிற் சேராது. இன்னும் ஷாகிர்தானவன் உன்னிடத்தில் இல்மைப்படித்து உன்போதிப்பினால் அவன் அல்லாகுதஆலாவுடைய பொருத்தத்தை அடைவான் என்பதைநாடி அவனை நீ நேசிப்பாயாகில் இது அல்லாவுக்காக நேசிப்பதென்றாகும். பெருமையைநாடி நீ போதிப்பதில் அவன்மேல் உனக்குண்டாகிற நேசம் அதிற்சேராது. இன்னும் சதகா கொடுக்கிற ஒருவன் (தன்னிலும் நல்லவிதமாய்) ஷரத்துப்படி பகீருகளுக்குப் பங்கிடுகிற மற்றொருவனை நேசிப்பானாகில், அல்லது பகீருகளுக்கு விருந்தளிக்கிற ஒருவன் நல்ல உணவுகளைச் சமைக்கிற மற்றொருவனை நேசிப்பானாகில் இது அல்லாவுக்காக நேசிப்பதென்றாகும். மேலும் தனக்கு ஒருவன் சோறும் பிடவையும் கொடுத்துத் தன்னை எப் பராக்குமில்லாமல் அல்லாகுதாலாவை வணங்க அவனுடைய வணக்கத்துக்கு ஒழிவு வைக்கிற நிமித்தம் அவனை நேசிப்பானாகில் இதுவும் அல்லாவுக்காக நேசிப்பதென்றாகும். ஆனால் இபாதத்துக்காகத் தனக்கு அவனால் ஒழிவு கிடைத்த காரணமாக அவனை நேசிக்கவேண்டும். அநேகம் ஆலிம்களும் ஆபிதுகளும் இந்த நாட்டத்தைக்கொண்டு சீமான்களை நேசித்திருக்கிறார்கள். இந்த இருதரத்தாரும் அல்லாகுதஆலாவுக்குப் பிரியமானவர்களாயிருந்தார்கள். அன்றியும் தன் மனைவியானவள் தன்னைக் கெடுதியில் பிரவேசிக்காதபடி காத்துக்கொள்ளுகிறாளென்றாவது, அல்லது தனக்கு நல்ல [illegible] செய்

கிற பிள்ளைபிறக்க அவள் காரணமா யிருக்கிறுளென்றுவது அவளை நேசிப்பானுகில் இதுவும் அல்லாவுக்காக நேசிப்பதாகும். இன்னும் அவள்பேரில் செலவு செய்கிற ஒவ்வொன்றும் சதகாவில் சேரும். அன்றியும் தன் வேலைக்காரன் தனக்குப் பணிவிடை செய்கிறுனென்றும், அல்லாஉடைய இபாதத்து செய்கிற நேரம்வரையில் தன்னைப் பராக்கு ஒழித்து வைக்கிறுனென்றும், ஆக இந்த இரண்டு காரணங்களால் அந்த வேலைக்காரனை நேசிப்பானுகில் இதுவும் அல்லாவுக்காக நேசிப்பதாகும். இதன்மேல் சவாபை அடைவான்.

இரண்டாவது வகுப்பு:—ஒருவனால் எவ்வித பிரயோசனத்தையும் நாடாமல் அல்லாவுக்காகவே அவனை நேசிப்பதாம். இது பெரிய வகுப்பு. எவ்விதமெனில் ஒருவனிடத்தில் இல்மைப் படிப்பதுமில்லை. அவனுக்கு இல்மைக் கற்றுக்கொடுப்பதுமில்லை. அவனால் தீன் சம்பந்தமான வேலைகளுக்காகப் பராக்கு ஒழித்தலான பிரயோசனமும் உண்டாகிறதில்லை. எனினும், அவன் அல்லாகு தஆலாவுக்கு வழிபட்ட அடிமையாயும், அவன்மீது ஆசையுள்ளவனுயு மிருப்பதைப் பற்றி அவனை நேசிக்கிறுன். மேலும் அவன் அல்லாகுதஆலாஉடைய அடிமையாயும் அவனால் சிருஷ்டிக்கப்பட்ட சிருஷ்டியாயு மிருப்பதைப்பற்றி அவனை நேசிக்கிறுன். இப்படி நேசிப்பது அல்லாவுக்காக நேசிப்பதென்றுகும். அன்றியும் இது மிகவும் பெரிய நேசமென்றுகும். ஏனென்றால், இது இஷ்குடைய எல்லைக்கு எட்டியிருக்கிற விதமாய் அல்லாகுதஆலாவின்மீது அதிக ஆசை யிருப்பதினால் உண்டாகிற நேசமாம். உதாரணமாக: ஆஷிகானவன் தன் மஃஷூக்கு இருக்கிற தெருவையும் அந்த மஃஷூக்கு வசிக்கிற இடத்தையும் அந்த மஃஷூக்குடைய வீட்டின் சுவற்றையும் நேசிக்கின்றுன். மேலும் அந்த மஃஷூக்குடைய தெருவிலிருக்கிற நாயையும் மற்ற நாய்களை நேசிப்பதிலும் அதிகமாய் நேசிக்கின்றுன். ஏனென்றால், ஆஷிகு தன் இஷ்குடைய வாதனையால் அந்த மஃஷூக்குடன் எவருக்காவது எதற்காவது எவ்விதசம்பந்தமாவது இருந்தால் அந்தசம்பந்தத்தினால் அவர்களையும் அவைகளையும்பற்றி ஆஷிகுக்கு மனதில் ஆசை தாக்குகின்றது. மஃஷூக்கின்மீதுள்ள இஷ்கு எவ்வளவு பெரிதாயிருக்கிறதோ அவ்வளவாகவே அந்த மஃஷூக்கைச் சேர்ந்தவர்கள்மீதும் மஃஷூக்குடன் சம்பந்தப்பட்டிருப்பவைகள்மீதும் ஆஷிகுக்கு அந்த ஆசை அதிகரித்திருக்கும். ஆகலால் எவனுக்கு அல்லாகுதஆலாவுடைய ஆசை அதிகரித்து இஷ்குடைய எல்லைக்கு வந்துவிட்டதோ அவன் அல்லாகு தஆலாவுடைய எல்லா அடியார்களையும் அதிலும் சொந்தமாக அவனுடைய உவப்புள்ள அடியார்களையும் அவனுடைய எல்லா சிருஷ்டிகளையும் நேசிப்பான். ஏனென்றால் உண்டாக்கப்பட்டிருப்பவைகளெல்லாம் தன்மஹ்பூபாகிய அல்லாகுதஆலாஉடைய வல்லமையாகிய சக்திக்கும் சமைப்புக்கும் அறிகுறியான அடையாளங்களா யிருப்பதினுலேயாம். ஆஷிகானவன் தன் மஃஷூக்கு எழுதிய காயிதத்தையும் தன் மஃஷூக்கு செய்த பொருளையும் நேசிக்கின்றுன். ரசூல் சல்லல்லாகு அலைஹிவசல்லமவர்களுடைய சமூகத்திற்குப் புதிதாய்ப் பழுத்த கனிகள் கொண்டுவரப்பட்டால் அதை யவர்கள் கண்படுத்திக் கண்ணிலொத்திக்கொண்டு இது சிறப்பும் பெருமையமுள்ள அல்லாகுதஆலாவினுல் பருவம் நெருங்கினதா யிருக்கிறது என்று சொல்வார்கள். அதாவது இது அல்லாகுதஆலாஉடைய புதியசமைப்பு என்பதேயாம்.



இனி அல்லாகுதஆலாவை நேசிப்பது இரண்டு வகையின்பேரிலிருக்கிறது. முதலாவது வகை:—துன்யா, ஆகிரத்து இவைகளுடைய நிஃமத்தாகிய செல்வத்துக்காக நேசிப்பதாம். இரண்டாவது வகை:—நடுவில் ஒரு வஸ்துவுமில்லாமல் அல்லாகு தஆலாவுக்காக மாத்திரம் அவனை நேசிப்பதாம். இது சிறப்பமான நேசமாகும். இதனுடைய விஸ்தாரிப்பை இந்த கிதாபின் நாலாவது ருகுனில் வருகிற மஹப்பத்துடைய அஸ்லில் பேசுவோம். ஆகக்கூடி அல்லாகு தஆலாஉடைய மஹப்பத்தின் உறுதியானது ஈமானுடைய உறுதியைப்போலிருக்கும். ஈமான் எவ்வளவு அதிக உறுதியாயிருக்கிறதோ அவ்வளவு அதிகமாய் அல்லாகு தஆலாஉடைய மஹப்பத்தும் உறுதிப்பட்டு அதன்பிறகு அந்த மஹப்பத்தானது அவனுடைய உவப்புள்ள மக்பூலான அடியார்களில் தாவுகின்றது. தற்போதைய பிரயோசனத்துக்காகவேயன்றி மற்றப்படி மஹப்பத்து உண்டாகாதென்றால் சென்றுபோன அம்பியா அவுலியாக்களின்மீது மஹப்பத்து உண்டாகுவதென்பது சகதமாகாது. ஆனால் அவர்களின் மஹப்பத்தோ எல்லா முஃமின்களுடைய இருதயத்திலுமிருக்கிறது. ஆகவே, ஒருவன் ஆலிம்களையும் செய்யிதுமார்களையும் சூபியாக்களையும் ஆபிதுகளையும் இவர்களுடைய ஊழியர்களையும் இவர்களை நேசிப்பவர்களையும் நேசிப்பானுகில் அவன் அல்லாவுக்காக நேசித்தவனென்றுகுவான். என்றாலும், இந்த நேசத்தின் அளவானது பொருளையும் பெருமையையும் செலவு செய்வதில் வெளியாகும். ஒருவன் தன் விசுவாசநேசத்தின் உறுதியால் அபூபக்கர் சித்தீகு றலியல்லாகு அன்கு அவர்கள்போல் தன் சொத்து முழுமையும் கொடுப்பவனுயிருப்பான். ஒருவன் உமர் றலியல்லாகு அன்கு அவர்கள்போல் தன் சொத்தில் அரைவாசியைக் கொடுப்பவனுயிருப்பான்.

ஒருவன் கொஞ்சமாய்க் கொடுப்பான். அதிகமாய்க் கொடுக்க அவனால் முடியாமலிருக்கும். எந்த மூமினுடைய மனமும் இந்த நேசத்தைவிட்டொழியாது. அது அற்பமாயிருந்தாலும் சரியே.

அல்லாகுதஆலாவுக்காகப் பகைக்கும் பகை எதுவென்பது.

அறிந்துகொள்:—எவனொருவன் அல்லாவுக்கு வழிபடுகிறவர்களை அல்லாவுக்காக நேசிக்கிறானோ அவன் அக்கிரமக்காரரையும் அக்கிரமக்காரனையும் பாவிகளையும் பாசிகளையும் பகைப்பான். ஏனென்றால் இவர்கள் அல்லாவுக்கு விரோதிகளாயிருப்பதினாலேயாம். ஒருவன் மற்றொருவனை நேசித்தால் அவனுடைய நேசர்களையும் நேசித்து அவனுடைய பகைவர்களையும் பகைப்பான். பின்னர் ஒரு முஸ்லிமானவன் பாவியாயிருந்தால் அவனுடைய இஸ்லாமுக்காக அவன்மேல் நேசமும் அவனுடைய பாவித்தனத்துக்காக அவன்மேல் பகையுமிருக்கவேண்டும். ஆகவே நேசத்தையும் பகையையும் ஒன்று சேர்ப்பான். எதுபோலென்றால், ஒருவன் தன்னுடைய ஒரு மகனுக்குப் பட்சம் காண்பித்து மற்றொரு மகன்மேல் கொடுமை செய்வதுபோலாம். இது அசாத்தியமென்றாகாது. ஏனென்றால் ஒருவனுக்கு மூன்று மக்களிருக்க அவர்களில் ஒருவன் புத்திமானாயும் சொற்படி நடக்கிறவனாயுமிருக்கிறான். மற்றொருவன் புத்தியில்லாதவனாயும் சொற்படி நடக்காதவனாயுமிருக்கிறான். மற்றொருவன் புத்தியில்லாதவனாயும் சொற்படி நடக்கிறவனாயுமிருக்கிறான். இந்த சமயத்தில் ஒருவனை நேசிப்பான். மற்றொருவனைப் பகைப்பான். மற்றொருவனை ஒருவிதத்தால் நேசிப்பான். ஒருவிதத்தால் பகைப்பான். இதன் அடையாளம் நடவடிக்கைகளில் வெளியாகும். அதாவது ஒருவனை உயர்த்துவான். ஒருவனைத் தாழ்த்துவான். மற்றொருவனை இவ்விரண்டுக்கும் மத்தியில் வைப்பானென்றறிந்துகொள். எவனொருவன் பாவஞ்செய்கிறதினால் அல்லாகுதஆலாவை விரோதப்படுத்துகிறானோ அவன் உனக்கு விரோதம் செய்ததுபோல் நீ எண்ணவேண்டும். அப்போது அந்த விரோதத்துக்குத் தக்க அளவாய் அவனை நீ பகைப்பாய். ஒற்றுமையின் அளவாய் நேசிப்பாய். இதன் அடையாளம் நீங்கள் ஒருவருக்கொருவர் நடந்துகொள்ளும் நடவடிக்கைகளிலும் கலந்திருப்பதிலும் பேசுவதிலும் வெளியாகவேண்டும். எந்தமட்டிலென்றால், பாவியின்மேல் நீ கோபங்காட்டி அவனைக் கடிந்துபேசவேண்டும். அவனுடைய பாவம் அதிகமாயிருந்தால் அதிகமாய்க் கோபங்காட்டி அதிகமாய்க் கடிந்துகொள்ளவேண்டும். பாவம் கடினதாயிருந்தால் அவனுடன் பேசாமல் அவனைவிட்டு முகத்தைத் திருப்பிக்கொள்ளவேண்டும். அக்கிரமஞ்



செய்கிற கொடியன் விஷயத்தில் கோபங் காட்டிக் கடிந்துபேசல், பேசாமல் முகத்தைத் திருப்பல் இவைகள் பாசிகின் விஷயத்தில் செய்யப்படுவதைவிட மிகவும் அதிகமாயிருக்கவேண்டும். ஆனால் ஒருவன் சொந்தமாக உன் விஷயத்தில் கொடுமை செய்தால் அப்போது நீ அதை மன்னிப்பதும் பொறுத்துக்கொள்வதும் மிக நன்மையாயிருக்கும். இது விஷயத்தில் ஸலபுகளான முன்னோர்களுடைய நடவடிக்கைகள் பலவகைப்பட்டிருக்கின்றன. சிலர் தீனுடைய உறுதிக்காகவும் ஷரகுடைய அதிகாரத்துக்காகவும் மிகவும் உறப்பாயிருந்திருக்கிறார்கள். அஹ்மதுபுனுஹம்பல் றஹிமகுல்லாவும் அப்படியிருந்தவர்களில் ஒருவராம். ஹாரிசு முஹாஸபீ என்பவர்கள் முஃதஸிலா கூட்டத்துக்கு றத்தாக இல்முல்கலாமில் ஒரு கிதாபு கோர்வை செய்திருந்த நிமித்தம் இவர்கள்மேல் அஹ்மதுபுனு ஹம்பல் றஹிமகுல்லா கோபித்து "நீர் அந்த கிதாபில் அநேகமாய் அவர்களுடைய சந்தேகங்களையெடுத்துக்காட்டி அதன்மேல் ஜவாபு எழுதியிருக்கிறீர். ஒரு சமயம் யாராவது அந்த சந்தேகங்களைப் பார்வையிட்டு அதன்படி நிர்ணயிங்கொள்ளவும் கூடும்" என்றார்கள். இன்னும் ஒருமுறை யஹ்யபுனுல் முஈன் என்பவர் "நான் ஒருவரிடத்திலும் ஒன்றையும் கேட்கமாட்டேன். ஆனால் சுல்தான் எதாவது கொடுத்தால் வாங்கிக்கொள்ளுவேன்" என்று சொன்னதற்காக இவர்கள் கோபப்பட்டு அவருடன் பேசுவதை நிறுத்திவிட்டார்கள். பிறகு அவர் வந்து மன்னிப்புக் கேட்டுக்கொண்டு "நான் பரிகாசமாகச் சொன்னேன்" என்றார். அதற்கிவர்கள் "ஹலாலான உணவைத் தேடுவது தீனில் முக்கியமானது. அப்படியிருக்கத் தீனில் பரிகாசம் செய்வானேன்?" என்று சொன்னார்கள். இன்னும் சிலர் எல்லாரையும் கிருபையாய்ப் பார்த்திருக்கிறார்கள். இந்த வித்தியாசம் எண்ணமும் மாறிக்கொண்டிருக்கும். எவருடைய பார்வை தவ்ஹீதின்மேலிருக்கிறதோ அவர் எல்லாரையும் அல்லாகுதஆலாவுடைய கத்றென்னும் கைக்குள்ளடங்கினவர்களென்று கண்டு அவர்கள்மேல் இரக்கப்படுகிறவராயிருக்கிறார். இதுவும் பெரிதுதான். ஆனால் இது சில மடையர்கள் மருள்கொள்வதற்கு இடமாயிருக்கிறது. ஏனென்றால், ஒருவனுடைய மனதில் எல்லாவற்றையும் இலேசாய் நினைக்கிற குணமிருக்கும். அதை அவன் தவ்ஹீது என்று எண்ணிக்கொள்ளுவான். தவ்ஹீதுக்கு அடையாளமென்னவென்றால், அவனை அடித்தாலும் வைதாலும் பொருளை எடுத்துக்கொண்டாலும் பெருமையை இழக்கினாலும் இவையெல்லாம் அல்லாகுதஆலாவினால் சம்பவித்ததென்றும், ஜனங்களுக்கு இதில் யாதொரு இக்தியாரில்லை என்றும் அவன் நினைக்கவேண்டும். அப்படி நினைக்கிற

வன் இவைகளைப்பற்றிக் கோபப்படமாட்டான். உதாரணமாக:-றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுடைய முபாரக்கான பல் ஷஹீதாகி அவர்களுடைய அய்யதிருமுகத்தின்மேல் இரத்தம் ஓடிக்கொண்டிருக்கும்போது கைகளை ஏந்தி அல்லாஹும்மஹ்தி கவ்மீ பஇன்னஹும் லாயஃலமூன் என்னுடைய ஆண்டவனே! என் கூட்டத்தாரான இவர்களுக்கு நல்வழியைக் காட்டு. மெய்யாகவே இவர்கள் தெரியாதவர்களாயிருக்கிறார்கள் என்று சொல்லிக்கொண்டிருந்தார்கள். ஆகவே ஒருவன் தன் விஷயத்தில் கோபிக்கிறவனும் அல்லாஹ்வின் விஷயத்தில் மவுனஞ்சாதிப்பவனுமாயிருந்தால் இது இலேசாக்குவதும் முனாபிக்குத்தனமும் மட்டித்தனமுமாயிருக்கும். தவறுமல்ல. பின்பு மேற்சொன்னவிதமாய்த் தன்மேல் தவறியவர்களைத் திரஸ்கரிக்கும் பாவத்தைப்பற்றியும் பாவியைப்பற்றியும் மனதில் பகையுண்டாகாமற்போனால் இது ஈமானுடைய பலவீனத்துக்கும் பாவியின்மேல் உவப்பிருப்பதற்கும் அத்தாட்சியாகும். உதாரணமாக:--ஒருவன் தன் சிநேகிதனைத் தாக்குகிறபோது தன் மனதில் கோபமுண்டாகாமலிருந்தால் தன் சிநேகம் மெய்யானதல்லவென்பதற்கு இது அத்தாட்சியாயிருக்கிறது.

(பசல்) அறிந்துகொள்:—அல்லாஹுத்தஆலாவுடைய பகைவர்கள் பல வகுப்பினராயிருப்பதால் அவர்கள்மேற் காய்வதும் கடிவதும் பலவகையாயிருக்கிறது. முதலாவது-காபிர்களின் வகுப்பாம். இவர்கள் ஹர்பிகளாயிருந்தால் இவர்கள்மேல் பகைவைப்பது பர்லாயிருக்கும். இவர்களுடன் நாம் நடக்கவேண்டிய நடவடிக்கை யாதெனில், இவர்களைக் கொல்வதும் சிறைகொள்வதுமேயாம். இரண்டாவது-திம்மிகாபிர்களின் வகுப்பாம். இவர்கள்மேலும் பகைவைப்பது பர்லாயிருக்கிறது. இவர்களிடத்தில் நாம் நடக்கவேண்டிய நடவடிக்கையாவது:—இவர்களை இலேசாக நினைக்கவேண்டும். கண்ணியப்படுத்தக் கூடாது. நடப்பதில் இவர்களுடைய வழியை நெருக்கமாக்க வேண்டும். இவர்களை நேசிப்பது பெரிய மக்ரூஹாயிருக்கிறது. அது ஹறாமுக்கு நெருங்கினதாயிருக்கலாம். அல்லாஹ்வின்மீதும் ஆகிரத்தின்மீதும் ஈமான்கொண்டவர்கள் அல்லாஹ்வுடைய பகைவர்களை நேசிக்கமாட்டார்கள் என்று அல்லாஹுத்தஆலா திருவுளமாகிறான். அன்றியும், இவர்கள்மேல் நம்பிக்கை வைப்பதும், இவர்களை இராஜாங்க வேலைகளில் முஸ்லிம்களின்மேல் அதிகாரியாய் வைப்பதும், இவ்விரண்டும் தாழ்த்துவதாயும் பெரும் பாவங்களிற் சேர்ந்ததாயுமிருக்கிறது. மூன்றாவது - ஜனங்களை பித்அத்தின் பக்கம் அழைக்கிற பித்அத்துக்காரரின் வகுப்பாம். இவர்களிடத்தில் பகையை வெளிப்படுத்துவது முக்கியமானது. ஏனென்றால்



இவர்களைப்பற்றி ஜனங்களுக்கு வெறுப்புண்டாகவேயாம். இவர்களுக்கு சலாம் சொல்லாமலிருப்பதும், இவர்களிடத்தில் பேசாமலிருப்பதும் இவர்களுடைய சலாமுக்கு ஜவாபுசொல்லாமலிருப்பதும் ஏற்றமாம். ஏனென்றால், இவர்கள்வந்து பித்அத்தின் பக்கம் ஜனங்களை அழைப்பார்களாகில் அதன்கேடு எங்கும் பரவிப்போம். ஆனால் பித்அத்துக்காரன் சாதா மனிதனாயும் பித்அத்தில் அழைக்காதவனாயுமிருந்தால் இவன் காரியம் இலேசேயாம். நாலாவது - ஜனங்களுக்கு வருத்தத்தை யுண்டாக்குகிற யாதொரு பாவத்தைச் செய்கிறவர்களின் வகுப்பாம். உதாரணமாக:—கொடுமை செய்தல், பொய்சாக்ஷி சொல்லல், ஓரபக்ஷமாய்த் தீர்ப்புசெய்தல், புறங்கூறல், கவிகட்டிவைதல், கலகத்தை யுண்டாக்கல் இக்கிரியைக்காரர்களை விட்டு முகந்திருப்புவதும் இவர்களைக் கடிந்துகொள்வதும் மிக நன்மையாயிருக்கும். இவர்களை நேசிப்பது கடினமான மக்ரூஹாயிருக்கிறது. ஆனால் ஷரீஅத்து பத்துவாவில் ஹறாமல்ல. ஏனென்றால், தக்லீபென்னும் விதிவிலக்குகளின் கட்டுப்பாட்டில் இதுவராமையினலேயாம். ஐந்தாவது வகுப்பு:- ஒருவன் சாராயம் குடிக்கிறதிலும் பாவஞ்செய்வதிலும் பாக்காயிருக்கிறான். அவனால் ஒருவருக்கும் இம்சையில்லாமற் போனால் அவன் விஷயமும் இலேசாகும். அவன் ஒப்புக்கொள்ளுவானென்று நம்பிக்கையிருந்தால் அதைப்பற்றி அவனுக்கு மிருதுவாக நஸீஹத்து செய்வது ஏற்றமாம். இல்லாவிட்டால் அவனை விட்டு முகந்திருப்புவது ஏற்றமாம். என்கிலும் அவனுடைய சலாமுக்கு ஜவாபு சொல்லவேண்டும். அவனை முனிந்துபேசக்கூடாது. றசூல்சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுடைய காலத்தில் ஒருவர் பலமுறை சாராயம் குடித்து ஹத்து செய்யப்பட்டார். அப்போது அஸ்ஹாபுகளில் ஒருவர் அவரை முனிந்து "இவனுடைய கேடு எதுவரையிலிருக்கும்" என்றதற்கு, றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் "அந்த அஸ்ஹாபியைத் தடைசெய்து அவனுக்குப்பகைவனாயிருக்க ஷைத்தானே போதுமானவனாயிருக்கிறான். நீரும் ஷைத்தானுக்கு உதவியாய் அவன்மேல் பகை பாராட்டவேண்டாம்" என்று அருளிச்செய்தார்கள்.

## இரண்டாவது பாபு-சகவாசத்தின் ஹக்குகளையும் அதன் ஷரத்துகளையும் பேசுவது.

அறிந்துகொள்:—சகவாசத்துக்கு எல்லோரும் தகுந்தவர்களாக மாட்டார்கள். மேலும் எவனில் மூன்று குணங்களிருக்கின்றனவோ அவனிடத்தில் சகவாசம் செய்யவேண்டும். முதலாவது:-அவன் புத்திமானு யிருக்கவேண்டும். மடையனுடைய சகவாசத்தில் ஒருபயனு

முண்டாகாது. [illegible] பிரதம்படி செய்துவிடுவான். ஏனென்றால், மடையன் உனக்கு நன்மைசெய்ய நாடுவானாகில், மடத்தனத்தினால் ஒருசமயம் உனக்குத் தீமை விளையும்படியான ஒரு காரியத்தைச் செய்யவும், அது தீமை என்பதை அவன் அறியாமலிருக்கவும் கூடும். இன்னும் மடையனைவிட்டும் தூரமாகுவது சவாபாயும் அவனுடைய முகத்தைப் பார்ப்பது பாவமாயு மிருக்கிறதென்று ஆன்றோர்கள் சொல்லியிருக்கிறார்கள். மடையன் யாரென்றால், காரியங்களின் உண்மையைத் தானாகவே பகுத்தறியாதவனும், ஒருவர் சொன்னாலும் விளங்கிக் கொள்ளாதவனாயு மிருப்பவன் எவனோ அவனே மடையன் என்னப்படுவான். இரண்டாவது:-அவன் குணத்தில் நல்லவனாயிருக்க வேண்டும். குணங்கெட்டவனால் நலமுண்டாகாது. அவனுடைய கெட்ட குணம் தலைநீட்டினால் உன்னுடைய சகவாசத்தின் ஹக்கை ஒரு பக்கத்தில் வைத்துவிடுவான். அதைப்பற்றி இலட்சியம் செய்யமாட்டான். மூன்றாவது:-அவன் நடக்கையில் நல்லவனாயிருக்கவேண்டும். எவனொருவன் பாவத்தில் நிலைத்திருக்கிறானோ அவன் அல்லாவுக்குப் பயப்படமாட்டான். அல்லாவுக்குப் பயப்படாதவன்மேல் நம்பிக்கை வைப்பது கூடாது. அல்லாகுத்ஆலா திருவுளமாகிறான். அதாவது:—"நம்முடைய நினைவைவிட்டும் யாருடைய மனதை நாம் மறதியிலாக்கினோமோ இன்னுமவன் தன் இச்சையைத் தொடர்ந்தானோ அவனுக்கு நீ வழிபடவேண்டாம்" என்கிறான். பிதுஅத்துக்காரனாயிருந்தால் அவனைவிட்டும் தூரமாகவேண்டும். ஏனென்றால், அவனுடைய பிதுஅத்தின் கெடுதியானது மற்றவர்களில் தாக்கும். இப்போது ஒரு பிதுஅத்து முளைத்தெழும்பியிருக்கிறது. இதற்குமேல் பெரிய பிதுஅத்து ஒன்றுமில்லை. அதென்னவென்றால், சில ஜனங்கள் உண்டாயிருக்கிறார்கள். இவர்கள் நல்லோர்களுடைய கல்குகளின்மீது நாம் அதிகாரம் செய்யக்கூடாதென்றும், பாவமான காரியங்களிலிருந்து ஜனங்களை விலக்கக்கூடாதென்றும், நமக்கு அல்லாவுடைய கல்குகளுடன் பகையில்லையென்றும், அவர்கள்மேல் நமக்குக் கையாட்சியில்லையென்றும் சொல்லுகிறார்கள். இதுவோ * இபாஹத்துக்கு விதையாயும் † ஐந்தகத்துக்குத் தலையாயும் பிதுஅத்துகளில் பெரிய பிதுஅத்தாயு மிருக்கிறது. இந்த ஜனங்களிடத்தில் சகவாசம் செய்வது ஒருபோதும் கூடாது. ஏனென்றால், இது நம்முடைய இச்சைக்கு இணக்கமான ஓர் பேச்சாயிருக்கிறது. ஷைத்தான் இதற்கு உதவியாயெழுந்து மனதுக்கு இதை

* இபாஹத்து—தனக்கு எல்லாம் ஆகுமெனல். எல்லாம் ஹலாலெனல்.

† ஐந்தகத்து—ருபுனைத் தனக்குள் மறைத்து ஏனோரை வெளிக்குக் காட்டல்.



அலங்கரித்துக் காட்டி அதிசீக்கிரத்தில் வெளியரங்கமாய் இபாஹத்தியாகும்படி இழுத்துவிடுவான். ஜஃபர்சாதிகு றலியல்லாகு அன்கு சொல்லுகிறதாவது:-ஐந்துபேர்களுடைய சகவாசத்தைவிட்டும் பேணிக்கொள். முதலாவது:-பொய்பேசுகிறவன். இவனால் உனக்கு எப்போதும் மோசமுண்டாகிக்கொண்டிருக்கும். இரண்டாவது:-மடையன். இவன் உனக்குலாபத்தை நாடும்போது தெரியாமையினால் நஷ்டத்தையுண்டாக்குவான். மூன்றாவது:—பகீல் என்னும் உலோபி. இவன் நல்ல தருணத்தில் உன்னைவிட்டுப் பிரிந்து விடுவான். நாலாவது:-கோழை நெஞ்சன். இவன் உதவி வேண்டியசமயத்தில் உன்னைக் கைவிடுவான். ஐந்தாவது:—பாவிகு. இவன் ஒரு பிடி சோற்றுக்கு அல்லது அதினும் குறைந்ததற்கு உன்னை விற்றுப்போடுவான். ஒருபிடி சோற்றினும் குறைந்தது என்னவென்று இவர்களைக் கேட்டதற்கு அதில் வைக்கும் ஆசையென்று சொன்னார்கள். இன்னும் "துர்க்குணமுள்ள ஆலிமுடைய சகவாசத்தினும் நற்குணமுள்ள பாவிகுடைய சகவாசம் எனக்கு மிகவும் உவந்ததா யிருக்கிறது" என்று ஜுனைது பக்தாதி றஹ்மத்துல்லாஹி அலைஹிவர்கள் சொல்லுகிறார்கள்.

அறிந்து கோள்:—இந்த எல்லாக்குணங்களும் ஒருவனில் சேர்ந்திருப்பது அருமையாயிருக்கும். ஆயினும் சகவாசிப்பதில் உன்னுடைய நோக்கம் எதுவென்பதை நோட்டமிடு. துணை வேண்டுமென்றால் நற்குணமுள்ளவனைச் சம்பாதித்துக்கொள். தீன்வேண்டுமென்றால் இல்மும் பூணிப்புமுள்ளவனைத் தேடிக்கொள். துன்யாவேண்டுமென்றால் ஈகையும் கொடையுமுள்ளவனைத் தெரிந்துகொள். ஒவ்வொன்றுக்கும் பிரத்தியேகமான ஷரத்திருக்கிறது. அறிந்துகோள்:-ஜனங்கள் மூன்று விதமா யிருக்கிறார்கள். சிலர் ஆகாரம்போல் அத்தியம் வேண்டியவர்களா யிருக்கிறார்கள். சிலர் அவிழ்தம்போல் சிற்சில சமயங்களில் வேண்டியவர்களாயிருக்கிறார்கள். சிலர் வியாதியைப்போல் எப்போதும் தேவை யில்லாதவர்களா யிருக்கிறார்கள். ஆனால் ஜனங்கள் இவர்களில் சிக்கிக்கொள்ளுகிறார்கள். இந்த சிக்கலைவிட்டும் நீங்குவதற்கு சிகிச்சை செய்யவேண்டும். மொத்தத்தில் உன்னால் அவனுக்காவது அவனால் உனக்காவது தீன் சம்பந்தமான யாதொரு பிரயோசன முண்டாகிற ஒரு மனிதனிடத்தில் சகவாசம் செய்யவேண்டும்.

## சகவாசிப்பது; சிநேகிப்பது இவைகளுடைய ஹக்குகளின் பயான்.

அறிந்துகோள்:—சகவாசிக்கவும் சிநேகிக்கவும் ஒருவருக்கொருவர் முடிவுகட்டிக்கொண்டால் இந்த முடிவானது நிகாஹுடைய முடி

லைப்போலாகும். இதற்கு ஹக்குகள் இருக்கின்றன. இன்னும் "இரண்டு சிநேகர்களானவர்கள் ஒன்றையொன்று கழுவுகிற இரண்டு கைகளுக்கு ஒப்பாவார்கள்" என்று ரசூல் சல்லல்லாகு அலைகி வசல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். இந்த ஹக்குகள் பத்து வகையாயிருக்கின்றன. முதலாவது:—பொருளில் உள்ள ஹக்காம். இதில் மிகவும் பெரிய தரஜாவாகிறது சிநேகனுடைய ஹக்கை முற்படுத்துவதும், தனக்குத் தேவையாயிருக்கினும் அவனுடைய தேவையைத் தெரிந்துகொள்வதுமாயிருக்கும். அன்னவர்கள் விஷயமாய் வந்திருக்கிறதுபோல், அதாவது:—அவர்கள் தங்களுக்குத் தேவையாயிருக்கினும் தங்களுடைய நபுசுகளின்பேரில் (மற்றவரைத்) தெரிந்துகொள்ளுவார்கள் என்று அல்லாகுதஆலா திருவுளமாகிறான். அன்றியும், அவனைத் தனக்குச் சமானமாயும் தன் சொத்தில் அவனுக்கும் பாகமிருக்கிறதாயும் எண்ணவேண்டும். குறைந்தபக்ஷம் அவனைத் தன் வேலைக்கார ஊழியன்போலாவது பாவிக்கவேண்டும். அவன் கேட்பதன்றி அவனுடைய ஹாஜத்துகளைத் தன்னால் கூடியவரையில் அவனுக்கு நிறைவேற்றிவைப்பான். அவன் கேட்கும்படி நேரிட்டால் சிநேகத்துடைய பதவியைவிட்டும் நீங்கிவிடுவான். ஏனென்றால் சிநேகனைப் பற்றிய உருக்கமும் கவலையும் இவன் மனதிலிருந்து விடுபட்டுப்போய் விட்டது. இந்த சகவாசம் சாதாரணமானது. இதற்கு யாதொரு மதிப்புமில்லை. உத்பத்துல் குலாம் றஹ்மத்துல்லாஹி அலைகியவர்களுக்கு ஒரு சிநேகர் இருந்தார். அவரிடத்தில் "எனக்கு நாலாயிரம் திருஹம் தேவையாயிருக்கிறது" என்று அவர்கள் சொன்னார்கள். அதற்கவர் "வாருங்கள்! இரண்டாயிரம் திருஹம் கொடுக்கிறேன். வாங்கிக்கொள்ளுங்கள்" என்றார். அப்போது அவர்கள் அவரைவிட்டும் முகத்தைத் திருப்பி, "உமக்கு வெட்கமில்லையா? அல்லாவுக்காக என்னை நேசிக்கிறதாய்ச் சொல்லுகின்றீர். பின்பு துன்யாவை அந்த நேசத்திலும் பெரிதென்று நினைக்கிறீர்" என்று சொன்னார்கள். சூபியாக்களில் ஒரு கூட்டத்தைப் பற்றிச் சிலர் கலீபரசனிடம் கோள்சொன்னார்கள். அரசன் அவர்களை ஹாஜிர்படுத்தும்படி ஆக்கியாபித்தான். அவர்கள் அரசன் சமுகத்துக்குக் கொண்டுவரப்பட்டார்கள். அரசன் அவர்களெல்லாருக்கும் சிரச்சேதனையை விதித்தான். கொலைஞன் கத்தியை உருவிக்கொண்டு வந்தபோது அந்த சூபியாக்களின் நடுவேயிருந்த அபுல்ஹஸன் நூரி றஹ்மத்துல்லாஹி அலைகியவர்கள் தங்களை முதலில் வெட்டும்படிக் குதித்து வந்து முன்னே நின்றார்கள். அப்போது அரசன் அவர்களை நோக்கி "நீர் ஏன் இப்படிச் செய்கிறீர்?" என்று கேட்டான். அதற்கவர்கள் இந்த சூபியாக்கள் என்னுடைய தீன் நேசரான சகோதரர்களாயிருக்கிறார்கள்.



ஆதலால் இவர்களுக்காகக் கொஞ்சநேரம் என் பிராணனைத் தத்தம் செய்ய நாடினேன் என்றார்கள். அப்போது அரசன் ஆச்சரியப்பட்டு, "ஆ! இப்படியிருப்பவர்களைக் கொல்வது கூடாது" என்று எல்லாரையும் விடுதலைசெய்தான். பத்ஹு மவ்ஸிலி றஹ்மத்துல்லாஹி அலைகியவர்கள் தங்களுடைய ஓர் சிநேகர் வீட்டுக்குப்போய் அவரை விசாரிக்க அவரில்லாமையால் அவருடைய அடிமைப்பெண்ணைக் கூப்பிட்டு, "உன் எஜமானனுடைய கைப்பெட்டியை எடுத்துக்கொண்டுவா" என்றார்கள். அவள் அதைக் கொண்டுவந்து வைத்தாள். அவர்கள் அதைத் திறந்து தங்களுக்குத் தேவையானதை எடுத்துக்கொண்டார்கள். பின்பு அவர் வந்து இந்த சேதியைக்கேட்டு மிகவும் சந்தோஷப்பட்டு அந்த அடிமைப்பெண்ணை உரிமைசெய்துவிட்டார். ஒருவர் அபூஹுறைரா றலியல்லாகு அன்கு அவர்களிடம் வந்து "நான் தங்களோடு சகோதரநேசமாயிருக்க ஆசிக்கிறேன்" என்று சொன்னார். அதற்கவர்கள் "சகோதர நேசத்தின் ஹக்கு இன்னதென்று உனக்குத் தெரியுமா?" என்று கேட்டார்கள். அதற்கவர் "தெரியாது" என்றார். அதற்கவர்கள் "உன்னுடைய பொருளில் என்னிலும் உனக்கு அதிகபாத்தியமில்லாமலிருப்பதே அது" என்றார்கள். அப்போதவர் "இந்த வகுப்புக்கு இன்னும் நான் வரவில்லை" என்றார். அதற்கவர்கள் "அப்படியானால் போ, இது உன் வேலையல்ல" என்றார்கள். இப்னு உமா றலியல்லாகு அன்குமா அவர்கள் சொல்லுகிறதாவது:—"அஸ்ஹாபுகளில் ஒருவருக்குப் பொரித்த தலைக்கறி அனுப்பப்பட்டது. அப்போதவர் தம்முடைய ஓர் சிநேகிதர் மிகவும் ஹாஜத்துள்ளவராயும் மேலானவராயும் இருக்கிறார் என்று அதை அவருக்கு அனுப்பிவிட்டார். அவர் மற்றொரு சிநேகருக்கு அனுப்பினார். இப்படியே அது பல கைகளிற் போய்க் கடைசியாய் அந்த முந்தினவருக்கே திரும்பி வந்தது" என்பதே. மஸ்ரூகு றஹிமகுல்லாவுக்கும் கைசமா றஹிமகுல்லாவுக்கும் சிநேகமிருந்தது. இருவரும் கடன் பட்டிருந்தார்கள். அவர்கள் பட்ட கடனை இவர்கள் தீர்த்திருக்கிறார்கள். இது அவர்களுக்குத் தெரியாது. இவர்கள் பட்ட கடனை அவர்கள் தீர்த்திருக்கிறார்கள். அது இவர்களுக்குத் தெரியாது. இன்னும் "ஏழைகளுக்கு நூறு திருஹங்களை நான் கொடுப்பதிலும் சிநேகவிஷயத்தில் இருபது திருஹம் கொடுப்பதை அதிகமாய் உவந்திருக்கிறேன்" என்று அலி றலியல்லாகு அன்கு அவர்கள் சொல்லுகிறார்கள். இன்னும் ரசூல் சல்லல்லாகு அலைகி வசல்லமவர்கள் ஒருதரம் காட்டுக்குப்போய் இரண்டு மிஸ்வாக்கு கொண்டுவந்தார்கள். அதில் ஒன்று கோணலாயும் ஒன்று நேராயுமிருந்தது. தங்களுடன் ஒருவர் ஸஹாபியிருந்தார்கள். நேரான

யில்லாக்கை அந்தஸஹாபியிடம்கொடுத்துவிட்டுக் கோணலானதைத் தங்களுக்காக வைத்துக்கொண்டார்கள். அப்போது அந்த ஸஹாபி, "யாரசூலல்லா! இது நல்லதாயிருக்கிறது; மேன்மைபொருந்திய தங்களுக்கே இது உத்தமமானது" என்று சொன்னார்கள். அதற்கு நாயகமவர்கள் "ஒருவன் ஒரு ஸாஅத்து நேரமாவது மற்றொருவனுடன் சகவாசிப்பானாகில் சகவாசத்தின் ஹக்கை நிறைவேற்றினுயா? அல்லது பழுதாக்கினுயா? என்று அவனிடத்தில் சுவால் செய்யப்படும்" என்று திருவுளமானார்கள். தன்னிலும் தன் சிநேகனைத் தெரிந்துகொள்வது சகவாசத்தின் ஹக்கு என்பதற்கு இது இஷாராவாயிருக்கிறது. இன்னும் "இரண்டு சிநேகிதர்களில் எவன் அதிகமாய் நேசிக்கிறானோ அவன் அல்லாகுதஆலாவுக்கு அதிக நேசன்" என்றும் திருவுளமாயிருக்கிறார்கள்.

இரண்டாவது வகை:—அவனுடைய எல்லா ஹாஜத்துகளிலும் அவன் கேட்பதற்கு முன்னே உதவியாய் நிற்பதும், அவனுடைய காரியங்களை மனப்பிரியத்தோடும் முகமலர்ச்சியோடும் செய்துவருவதுமாம். ஸைலுகளான முன்னோர்கள் தங்கள் சிநேகருடைய வீட்டுக்குப் போய், வீட்டாரைக் கூப்பிட்டு, "என்னசெய்கிறீர்கள்? விறகு இருக்கிறதா? சோறு இருக்கிறதா? உப்பு இருக்கிறதா? நெய்யிருக்கிறதா?" என்றும், இன்னும் இதுபோன்ற வஸ்துக்களையும்பற்றி விசாரிப்பார்கள். சிநேகருடைய காரியங்களைத் தங்கள் காரியம்போல் முக்கியமானதென்று நினைப்பார்கள். இவைகளையெல்லாம்செய்வது இது தங்கள்பேரில் உபகாரமென் றுணர்வார்கள். இன்னும் ஹசன்பஸரீ றஹ்மத்துல்லாஹி அலைஹியவர்கள் சொல்லுகிறதாவது:—"நம்முடைய சிநேகர்கள் நம்முடைய மனைவிமக்களைப்பார்க்கிலும் நமக்கு மிக உவப்பானவர்களாயிருக்கிறார்கள். ஏனென்றால் இவர்கள் நமக்குத் தீனுடைய ஞாபகத்தை மூட்டுகிறார்கள். மனைவிமக்களோ துன்யாவுடைய நினைவையுண்டுபண்ணுகிறார்கள்" என்பதே. இன்னும் "சிநேகர்களை மூன்று நாளைக்குப் பிறகு தேடிப்போங்கள்" என்றும், "அவர் வியாதிப்பட்டிருந்தால் விசாரியுங்கள்" என்றும், "ஒரு வேலையிலிருந்தால் உதவியாயிருங்கள்" என்றும், "மறந்துபோயிருந்தால் ஞாபகம் வருத்துங்கள்" என்றும் அதாஉறஹ்மத்துல்லாஹி அலைஹியவர்கள் சொல்லுகிறார்கள். இன்னும் முஹம்மதுப்னு ஜஃபர் றலியல்லாஹு அவர்கள் சொல்லுகிறதாவது:—"என் பகைவனுக்கு என் வேண்டுதல் அற்பமாயிருக்கும்படி அவனுடைய ஹாஜத்துகளை நிறைவேற்ற நான் அவசரப்படுகிறேன். அப்படியிருந்தால் என் சிநேகர்கள் விஷயத்தில் நான் எப்படியிருப்பேன்?" என்பதே. முன்னோர்களில் ஒருவர் தம்மு



டைய சிநேகர் மவுத்தான பிறகு நாற்பது வருஷம் அவருடைய பெண்சாதி பிள்ளைகளை ஆதரித்துவந்தார். ஏதனுலென்றால் சிநேகத்தின் ஹக்கை அவர் மறக்காமலிருந்ததினுலேயாம்.

மூன்றாவது வகை:—நாவின்மீதிருக்கிற ஹக்காம். அதாவது: சிநேகன் விஷயத்தில் நலவையே எடுத்துப் பேசுவான், அவனிலுள்ள குற்றங்களை மறைப்பான். அவனைப்பற்றி யாராவது புறங்கூறினால் அதை மறுத்துப் பேசுவான். சுவற்றுக்குப் பின்னாலிருந்து அவன் கேட்டுக்கொண்டிருக்கிறதாய் எண்ணுவான். தனக்குப் பின்னால் அவன் எப்படியிருந்துகொள்ள வேண்டுமென்று தான் நினைக்கிறானோ அப்படியே அவனுக்குப் பின்னால் தானுமிருந்துகொள்ளுவான். மனதில் இல்லாமல் வாயால் மாத்திரம் அவனைப் புகழ்ந்து முகஸ்துதி கூறான். அவன் பேசினால் அதைக் கேட்பான். தர்க்கம் பாராட்டான். வாதம் பேசான். அவனுடைய சிநேகம் அற்றுப்போன பிறகும் அவனுடைய எந்த இரகசியத்தையும் வெளியிடான். ஏனென்றால், இது சனஜாதிகளின் வழக்கமாயிருக்கும். யாராவது அவனைப்பற்றி ஏதாவது குற்றமாய்ச் சொல்லியிருந்தால் அதை அவனிடம் சொல்லான். ஏனென்றால், அதனால் அவனுக்கு உண்டாகிற வருத்தம் இவனால் வந்ததாகும். அவனைப்பற்றி யாராவது புகழாய்ப்பேசினால் அதை அவனுக்கு மறைக்கான். ஏனென்றால் இது பொருமையிற் சேர்ந்ததாயிருக்கும். தன்விஷயத்தில் ஏதாவது அவன் குற்றம் செய்தால் அதைப்பற்றி முறையிடமாட்டான். மன்னித்துக் கொள்ளுவான். அல்லாகுதஆலாவுடைய வணக்கங்களில் தான் செய்கிற குற்றங்களை நினைத்துப் பார்ப்பான். அப்போது தனக்கு அவன் செய்கிற குற்றத்தைப்பற்றி ஆச்சரியப்படமாட்டான். இன்னும் ஒரு குற்றமும் செய்யாதவனையும் ஒரு குறையுமில்லாதவனையுமிருக்கிற ஒரு மனிதனைத் தேடிப்பார்த்தால் அப்படிப்பட்டவன் ஒருபோதும் கிடைக்க மாட்டான் என்றும், அப்போது ஜனங்களுடைய சகவாசத்தை விட்டுவிட நேரிடுமென்றும் அறிந்துகொள்ளுவான். இன்னும் (மற்றவருடைய குற்றத்தைக் குற்றமென் றெண்ணாமலிருப்பதற்கு) "மூமினானவன் எப்போதும் சமாதானத்தைத் தேடுகிறான்" என்றும், "முனாபிக்கானவன் எப்போதும் குற்றத்தையே ஆராய்கிறான்" என்றும் றசூல் சல்லல்லாகு அலைஹிவசல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும் தன் சிநேகனிடத்திலிருக்கிற ஒரு நன்மையைக் கொண்டு அவனுடைய பத்து குற்றங்களை மறைப்பான். ஏனென்றால், "கெட்ட சிநேகனைவிட்டும் நீங்கள் அல்லாவினிடம் காவல் தேடுங்கள்"

என்றும், "அவன் ஒருதீமையைக் கண்டால் அதை வெளிப்படுத்துவான்" என்றும், "ஒரு நன்மையைக்கண்டால் அதை மறைத்துவிடுவான்" என்றும் றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். அவனுடைய ஒவ்வொரு குற்றத்துக்கும் யாதொரு சமாதானமிருக்கக் கூடுமானால் அதனால் அந்தக் குற்றத்தை நல்ல விதத்தின் பேரில் பொருத்திப்பார்க்கவேண்டும். கெட்ட எண்ணம் கொள்ளக் கூடாது. ஏனென்றால், கெட்ட எண்ணங் கொள்வது ஹறாமாயிருக்கிறது. மூமினுடைய பொருள், அவனுடைய உயிர், அவனுடைய மானம், அவன்மேல் கெட்ட எண்ணம் ஆக இந்த நான்கு வஸ்துக்களையும் அல்லாகுதஆலா ஹறாமாக்கியிருக்கிறான்" என்று றசூல்சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும் "தன்னுடைய சகோதரன் தூங்குகிறதைக் கண்டு அவனுடைய மேலாடையை உரிந்து அவனை அம்மணமாயிருக்கச்செய்கிற ஒருமனிதனைப் பற்றி நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள" என்று ஈஸா அலைகிஸ்ஸலாம் கேட்டார்கள். அப்போது "யாறஸூலல்லா! இப்படிச்செய்ய எவன் சம்மதிப்பான்?" என்று ஜனங்கள் கேட்டதற்கு, "நீங்கள் தான் அப்படிப்பட்டவர்கள். ஏனென்றால், நீங்கள் உங்கள் சிநேகர்களில் ஏதாவது குற்றத்தைக் கண்டால் அதை வெளிப்படுத்துகிறீர்கள். மற்றவர்கள் தெரிந்துகொள்ளும்படி அதைச்சொல்லிப்பிரஸ்தாபிக்கிறீர்கள்" என்று சொன்னார்கள். இன்னும் "நீ யொருவனைச் சிநேகிக்க நாடுவாயாகில் முதலில் அவனைக் கோபப்படுத்து" என்றும், "அதன்பிறகு அவனிடத்தில் உன் பேச்சை எடுத்துப் பேசும்படி ஒரு மனிதனை இரகசியமாய் அவன் பின்னால் அனுப்பு" என்றும், "அப்போது அவன் உன்னுடைய எந்த இரகசியத்தையாவது வெளிவிடுவானாகில் சிநேகத்திற்கு அவன் அருகனல்லவென்று எண்ணிக்கொள்" என்றும் பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள். இன்னும் "அல்லாகுதஆலா அறிகிறதுபோல் உன்னுடைய ஹாலத்தை அறிகிறவனும், அல்லாகுதஆலா மறைக்கிறதுபோல் உன் குற்றங்களை மறைக்கிறவனும் இருக்கிறவன் எவனோ அவனோடு நீ சகவாசம் செய்" என்றும் சொல்லியிருக்கிறார்கள். இன்னுமொருவர் ஒரு சிநேகரிடத்தில் ஒரு இரகசியமான பேச்சைச் சொல்லி "ஞாபகம் வைத்துக்கொண்டீரா?" என்று கேட்டார். அதற்கவர் "இல்லை, நான் மறந்துவிட்டேன்" என்று ஜவாபு சொன்னார். இன்னும் "சந்தோஷத்தின்போதும், கோபத்தின் போதும், ஒன்றில் ஆவல் கொள்ளும்போதும், தன்னுடைய இச்சையின்போதும் ஆக இந்த நான்கு நேரங்களில் தன் சிநேகனைவிட்டு மாறுகிறவன் எவனோ அவன் சிநேகத்துக்குத் தகுந்தவனல்ல" என்றும், மேலும் இக்கார



ணங்களால் உன்னுடைய ஹக்கை அவன் நிறுத்தாதவனாயிருக்கவேண்டும்" என்றும் சொல்லியிருக்கிறார்கள். அப்பாஸ்றழியல்லாகு அன்கு தங்கள் மகன் அப்துல்லா றழியல்லாகு அன்குவை நோக்கி, "மகனே! உன்னை உமர்றழியல்லாகு அன்கு தங்களருகில் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். வயதுசென்ற கிழவர்களின்மேல் உனக்குப் பெருமையைக் கொடுத்திருக்கிறார்கள். ஆதலால் நீ பத்திரமாய் நடந்துகொள். அவர்களுடைய இரகசியமொன்றையும் நீ வெளிவிடாதே. அவர்கள் சமுகத்தில் எவரையும் குறித்துப் புறங்கூறாதே. அவர்களுடைய உத்திரவுக்கு மாறு செய்யாதே. அவர்களிடத்தில் பொய்யொன்றும் பேசாதே. அவர்கள் உன்னிடத்தில் கொஞ்சமாவது துரோகம் காணாமலிருக்கும்படி நடந்துகொள். இந்த ஐந்துவார்த்தைகளையும் ஞாபகத்தில் வைத்துக்கொள்" என்று உபதேசித்தார்கள். இன்னுமறிந்துகொள். "பேச்சில் தர்க்கம் செய்வதும் வாதிப்பதும் சிநேகத்தைக்கெடுப்பது போல் வேறெதுவும் அப்படிக் கெடுக்காது. ஏனென்றால், சிநேகனுடைய வார்த்தையை மறுத்துப் பேசுவதில் அவனை நீ மடையனென்றும் தெரியாதவன் என்றும் சொன்னதாயும், உன்னை நீ புத்திசாலியென்றும், அவனிலும் மேலானவன் என்றும் மதித்து அவன்மேல் நீ பெருமை பாராட்டினதாயும், அவனை நீ இழிவாய்ப் பார்த்ததாயும் அர்த்தமாகின்றது. இதுவோ பகைமைக்கு அடுத்ததாயிருக்கிறது. சிநேகத்துக்கு அடுத்ததல்ல. இன்னும் "நீங்கள் உங்கள் சிநேகனுடைய பேச்சுக்கு மாறுபேசவேண்டாம்" என்றும், "அவனைப் பரிகாசம் செய்யவேண்டாம்" என்றும், அவனுக்குச்செய்த வாக்குத்தத்தத்துக்கு விரோதம்செய்யவேண்டாம்" என்றும் றசூல்சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும் "நீ உன் சிநேகனைநோக்கி "எழுந்திருபோகலாம்" என்று சொன்னநேரத்தில் அவன் "எவ்விடத்துக்கு" என்று கேட்பானாகில் சிநேகத்துக்கு அவன் தகுந்தவனல்ல" என்றும், "மேலும் சொன்ன உடனே ஒன்றும் கேட்காமல் அவன் எழுந்திருக்கவேண்டும்" என்றும் பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள். இன்னும் அபூசுலைமான் தாராணியவர்கள் சொல்லுகிறதாவது:—"எனக்கு ஒரு சிநேகர் இருந்தார். அவரிடத்தில் நான் கேட்பதை யெல்லாம் அவர் கொடுத்துக்கொண்டிருந்தார். ஒருதரம் அவரிடத்தில் எனக்கு இன்ன வஸ்து தேவையாயிருக்கிறதென்றேன். அதற்கவர் எவ்வளவு தேவையென்று கேட்டார். அப்போது அவரைப்பற்றி என் மனதிலிருந்த சிநேகத்தின் இன்பம்போய்விட்டது" என்பதே. இன்னுமறிந்துகொள்:—இணங்கக்கூடிய காரியத்தில் ஒருவருக்கொருவர் இணங்கிப்போவதினால் சிநேகம் நிலைக்கும்.

நாலாவது வகை:—நாவினால் தனது நேசத்தையும் அன்பையும் அவனுக்கு வெளிப்படுத்துவதாம். ஒருவன் தன் தீன் சகோதரனை மற்றொருவனை நேசிக்கிறதா யிருந்தால் அதை அவனுக்கு அறிவிக்க வேண்டும் என்று ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுள மாயிருக்கிறார்கள். அவர்கள் இப்படிச் சொன்னது எதற்காகவென்றால், அவனுடைய மனதிலும் சிநேகமுண்டாகவும் மறுபக்கத்தி லிருந்து மஹப்பத்து அதிகரிக்கவுமேயாம். சிநேகனுடைய எல்லாச் சேதிகளையும் விசாரிக்கவேண்டும். அவனுடைய சந்தோஷத்திலும் துக்கத்திலும் அவனுடன் கூட்டாகுவான். அவனுடைய சந்தோஷத்தைத் தன் சந்தோஷமாகவும் அவனுடைய துக்கத்தைத் தன் துக்கமாகவும் எண்ணிக்கொள்ளுவான். அவனை அழைத்தால் நல்லபெயரைக்கொண்டு அழைப்பான். அவனுக்கு யாதொரு பட்டப்பெயர் இருந்தால் அதனால் அவனை அழைப்பது அவனுக்குப் பிரியமா யிருக்கும். இன்னும் "நீ உன் சிநேகனை நல்ல நாமத்தினால் அழைப்பதும், சலாமில் நீ முந்துவதும், உட்காருவதில் அவனை முற்படுத்துவதுமான இம்மூன்று காரியங்களால் சிநேகம் உறுதிப்படும்" என்று உமர் றலியல்லாகு அன்கு சொல்லுகின்றார்கள். இன்னும் அவன் உன் கண்ணுக்கு மறைந்திருக்கிறபோது அவன் விரும்பும் புகழாக நீ அவனைப் புகழ்வதும் இதேவிதமாய் அவன் மனைவிமக்கள்முதல் மற்றும் அவனைச் சேர்ந்தவர்களைப் புகழ்வதும் அதிற் சேர்ந்ததேயாம். இது சிநேகத்தில் மிகவும் குணப்பாடு செய்யும். இன்னும் அவன் செய்கிற ஒவ்வொரு நன்மையிலும் ஷுக்குரு செய்வான். இன்னும் "யாராவதொருவன் தன் சிநேகனுடைய நல்ல எண்ணத்தின்பேரில் ஷுக்குருசெய்யவில்லையானால் அவனுடைய நல்ல நடக்கையின்பேரிலும் அவன் ஷுக்குரு செய்யமாட்டான்" என்று அலி றலியல்லாகு அன்கு அவர்கள் சொல்லுகிறார்கள். இன்னும் சிநேகன் தன் கண்ணுக்கு மறைந்திருக்கிறபோது அவனுக்கு உதவியா யிருக்கவேண்டும். யாராவது அவனைத் தூஷித்துப் பேசினால் அதை மறுத்துப் பேசவேண்டும். தன்னைப்போல் அவனைப் பாவிக்கவேண்டும். ஒருவனுக்கு முன்பாக அவன் சிநேகனை ஒருவன் தூஷிக்கும்போது அவன் வாய் மூடிக்கொண்டு சும்மாயிருப்பது பெரிய அநீதியா யிருக்கிறது. இதானது அவனை ஒருவன் அடிக்கும்போது இவன் உதவிக்கு வராமல் பார்த்துக்கொண்டு சும்மாயிருப்பதுபோலிருக்கிறது. அன்றியும் அடியினாலுண்டாகிற காயத்தைவிட பேச்சினாலுண்டாகிற காயம் மிகப்பெரியதாயிருக்கின்றது. இன்னுமொருவர் சொல்லுகிறதாவது:—"என் சிநேகர் என்னைவிட்டு மறைந்திருக்கிறபோது என் முன்பாக அவரைப்பற்றி



யாரும் ஏதாவது சொன்னால் அதை என் சிநேகர் இருந்து கேட்டுக்கொண்டிருக்கிறதாகப் பாவித்துக் கொள்ளுவேன். அப்போது அந்தப் பேச்சுக்கு அவர் என்னவிதமாய்ப்பதில் சொல்லவேண்டுமென்று நான் நினைக்கிறேனோ அந்த விதமாய்ப் பதில் சொல்லுவேன்" என்பதே. அபூத்தர்தா றலியல்லாகு அன்கு அவர்கள் ஒருவிடத்தில் இரண்டு மாடுகள் கட்டியிருந்ததையும், அவைகளில் ஒன்று எழுந்துநின்றபோது மற்றொன்றும் கூடவே எழுந்து நின்றதையும் கண்டு அழுதுவிட்டார்கள். பிறகு "தீனுடைய சகோதரர்கள் இதேவிதமா யிருப்பார்கள்" என்றும், "அவர்கள் எழும்புவதிலும் நடப்பதிலும் ஒருவர்க்கொருவர் ஒற்றுமையா யிருப்பார்கள்" என்றும் சொன்னார்கள்.

ஐந்தாவது வகை:—தீனுடைய இல்மில்நின்றும் அவனுக்குத் தேவையாகுவதை அவனுக்குப் போதிப்பதாம். தீனுடைய சகோதரனை நரக நெருப்பைவிட்டும் காப்பதானது துன்யாவுடைய துன்பத்திலிருந்து அவனை விலக்குவதிலும் மேலாயிருக்கிறது. அவனுக்கு நீ போதிக்கிறபடி அவன் அமல் செய்யாமற்போனால் நஸீஹத்து சொல்லி அல்லாகு தஆலாவைப்பற்றி அவனுக்கு அச்சம் மூட்ட வேண்டும். ஆனால் இந்த நஸீஹத்து அவன்மேல் தயவான நஸீஹத்தென்றுரும்படித் தனிமையி லிருக்கவேண்டும். ஜனங்கள் முன்பாகச் சொல்வது அவமானமா யிருக்கும். சொல்வதை நளினமாகவும் மிருதுவாகவும் சொல்லுவான். உறப்பாகவும் கடினமாகவும் சொல்லமாட்டான். "மூமினுக்கு மூமின் கண்ணாடியா யிருக்கிறான்" என்று ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமா யிருக்கிறார்கள். இதன் கருத்தாவது:—ஒவ்வொரு மூமினும் தன்னுடைய குற்றம் குறைகளை மற்றொருவனால் தெரிந்துகொள்ளுவான் என்பதேயாம். உன் சிநேகன் உன்மேல் தயவாக உன்னிடமிருக்கிற குற்றங்களைத் தனிமையில் எடுத்துக் காட்டுவானாகில் அதை நீ உபகாரமாய் நினைக்கவேண்டும். அவன்மேல் கோபம் வைக்கக்கூடாது. இதானது உன் சட்டைக்குள் சர்ப்பமோ தேளோ ஏதோ விஷக்காலி யிருக்கிறதை ஒருவன் உனக்கு அறிவிப்பதுபோலாகும். அப்படி அறிவித்ததற்காக அவன்மேல் நீ கோபப்படமாட்டாய். மேலும், அவன் உனக்கு உபகாரம் செய்ததாய் நினைப்பாய். மனிதனுக்குள் ளிருக்கிற கெட்ட குணங்களெல்லாம் சர்ப்பங்களும் தேள்களுமா யிருக்கின்றன. இவைகளின் கடிப்பாலுண்டாகிற புண்ணின் வருத்தம் கபுரில் வெளியாகும். இந்தப் புண் நெருப்பைப்பற்றியதா யிருக்கும். இவ்வுலக சர்ப்பங்களின் கடிப்பாலும் தேள்களின் கொட்டலாலும் உண்டாகிற வருத்தத்தைக்

காட்டிலும் நாவைப்பற்றிய அந்தப் புண்ணின் வருத்தம் அதிகமாயிருக்கும். ஏனென்றால், இது தேக சம்பந்தமான புண்ணாயும் அது ஆன்ம சம்பந்தமான புண்ணாயு மிருப்பதினாலேயாம். இன்னும் "என்னுடைய குற்றங்களை எனக்கு ஹதியாவாகக் கொண்டுவருகிற மனிதன்மேல் அல்லாகுதஆலாவுடைய றஹ்மத்துண்டாவதாக!" என்று உமர் றலியல்லாகு அன்கு சொல்லுவார்கள். ஒருதரம் இவர்களுடைய சமுகத்திற்கு சல்மான் றலியல்லாகு அன்கு வந்தபோது அவர்களை நோக்கி, "அய் ஸல்மானே! நீர் உண்மையாய்ச் சொல்லும். என் விஷயங்களிலின்றும் நீர் குற்றமாய்க்கண்டதும் கேட்டதுமான யாதொரு விஷயமுண்டா?" என்று வினவினார்கள். அதற்கவர்கள் "யா அமீறல் மூமினீன்! இந்த வார்த்தையை என்னிடம் கேட்காமலிருக்கும்படித் தங்களிடம் மன்னிப்புக் கேட்கிறேன்" என்றார்கள். அதற்கவர்கள் "இல்லை, அகத்தியம் சொல்லவேண்டும்" என்று ரொம்ப பிடிவாதமாய்ப் பிடித்ததினால் அவர்கள் "யா அமீறல் மூமினீன்! தங்களுடைய சுபுராவில் ஒரு நேரத்தில் இரண்டுவகைக் கறிகள் இருப்பதாயும், தாங்கள் இரவுக்கொரு உடையும் பகலுக்கொரு உடையுமாக இரண்டு உடை வைத்திருக்கிறதாயும் கேள்விப்பட்டேன்" என்று சொன்னார்கள். அப்போது அவர்கள் "இந்த இரண்டு வார்த்தைகளும் உண்மையல்ல. இன்னும் ஏதாவது கேள்விப்பட்டிருந்தால் சொல்லும்" என்றார்கள். அதற்கவர்கள் "இனியொன்றுமில்லை" என்றார்கள். ஹுதைபதுல் மர்அஷியவர்கள் யூசுபு அஸ்பாத்தவர்களுக்கு எழுதின நிருபமாவது:- நீர் உம்முடைய தீனை இரண்டு ஹப்பாவுக்கு விற்றுவிட்டதாகக் கேள்விப்பட்டேன். அதாவது:—நீர் கடைவீதியில் ஏதோ ஒரு வஸ்துவை வாங்கினதாயும், கடைக்காரன் அதன்விலை ஒரு தாங்க் என்று சொன்னதாயும், நீர் ஒன்று * தஸ்ஸூஜுக்கு அதைக் கேட்டதாயும், அவன் உம்மை அறிந்தவனாயிருந்ததால் நீர் கேட்டவிலைக்கு அவன் கொடுத்ததாயும் தெரியவந்தது. உம்முடைய தீனுக்காகவும் உம்முடைய நன்னடக்கைக்காகவுமே அவன் அப்படி உமக்கு இலேசுபடுத்தியிருக்கிறான். மறதி என்னும் போர்வையைத் தலையிலிருந்து அப்புறப்படுத்தும். மறதி என்னும் தூக்கத்திலிருந்து விழியும். இன்னும் அறிந்துகொள்ளும். இல்மையும் குர்ஆனையும் ஓதிக்கொண்ட ஒரு மனிதன் துன்யாவை விரும்புவானாகில் அவன் அல்லாகுதஆலா உடைய ஆயத்துகளைப் பரிகாசஞ் செய்கிற கூட்டத்தில் ஒருவனைப் போலென்று நான் பயப்படுகிறேன் என்பதே. இனி தீனுடைய விருப்பத்துக்கு அடையாளமாகிறது ஒருவர் தனக்கு நஸீஹத்து செய்வதை உபகாரமாய் நினைப்பதேயாம். நஸீஹத்து செய்கிறவர்களை நேசிக்க

* தஸ்ஸூஜு என்பது கால்தாங்க். இது இரண்டு ஹப்பாவாகின்றது.



மாட்டார்கள் என்று அல்லாகுதஆலா பொய்யர்களின் விஷயத்தில் திருவுளமாகிறான். நஸீஹத்து செய்கிறவரை ஒருவன் நேசிக்காததற்குக் காரணம் யாதெனில், அவனுடைய தீனின்பேரிலும் புத்தியின்பேரிலும் அகமும் பெருமையும் மேலிட்டிருப்பதேயாம். இனி இப்படி நஸீஹத்து செய்வதெல்லாம் எந்த இடத்திலென்றால் அவன் தனது குற்றத்தைக் குற்றமென்று அறியாத இடத்தில்தான். அவன் தன் குற்றத்தை அறிந்தவனாயிருந்தால் அவனுக்கு சமிக்கினையாக நஸீஹத்து செய்யவேண்டும். வெளிப்படையாய்ச் செய்யமாட்டான. அந்தக்குற்றம் உன் விஷயத்தில் செய்த குற்றமாயிருந்தால் அதை நீ அறியாதவன்போல் மறைத்துவிடுவது ஏற்றமாம். ஆனால் அப்படி மறைத்துவிடுவதில் அந்தக் குற்றங் காரணமாக உனக்கு அவன்மீதுள்ள மனப்பற்றில் ஏதாவது மாறுதலுண்டாகிறதாயிருந்தால் அப்போது அதை அறியாதவன்போல் மறைப்பதைவிட அதற்காக இரகசியத்தில் அவன்மேல் கோபிப்பது ஏற்றம். அவனுடன் சண்டைபோட்டு அவனைத் திட்டுவதைவிட அவன் சிநேகத்தை விட்டுவிடுவது ஏற்றம். இனி சகவாசம் செய்வதில் சகோதரர்களால் சம்பவிக்கும் இம்சைகளைச் சகித்துத் தன் குணத்தைச் சீர்திருத்திக்கொள்ளுகிற நாட்டமிருக்கவேண்டும். அவர்களால் யாதொரு பிரயோசனத்தை அடையலாமென்கிற நோக்கமிருக்கக் கூடாது. அபூபக்கர் கத்தானியவர்கள் சொல்லுகிறதாவது:— என்னுடன் ஒருவர் சகவாசம் செய்துகொண்டிருந்தார். அது எனக்குப் பாரமாயிருந்தது. அந்தப்பாரம் என் மனதைவிட்டு நீங்கவேண்டுமென்ற நிய்யத்து செய்து அந்தமனிதனுக்கு ஒருவஸ்துவைக் கொடுத்தேன். அப்போதும் அந்தப்பாரம் நீங்கவில்லை. பின்பு அந்த மனிதனுடைய கையைப் பிடித்து வீட்டுக்கு அழைத்துக் கொண்டுபோய் "உம்முடைய காலை என் முகத்தின்மேல் வையும்" என்றேன். அதற்கவர் "ஒருபோதும் நான் அப்படிச் செய்யமாட்டேன்" என்றார். நான் ஒரேபிடிவாதமாய் அப்படி வைக்கத்தான் வேண்டுமென்றேன். அவர் காலை என் முகத்தின்மேல் வைத்தார். அப்போது அந்தப் பாரம் என்மனதை விட்டு நீங்கிவிட்டது" என்பதே. அபூ அலி றபாத்தியவர்கள் சொல்லுகிறதாவது:—"நான் அப்துல்லாறாஸியவர்களுடன் காட்டுப்பாதையில் யாத்திரை செய்துகொண்டிருந்தேன். அப்போதவர்கள் என்னை நோக்கி "இந்த சபரில் நான் அமீராயிருக்கவா? அல்லது நீர் அமீராயிருக்கிறீரா?" என்று கேட்டார்கள். அதற்கு நான் "தாங்களே அமீராயிருங்கள்" என்று சொன்னேன். அப்போதவர்கள் "நீர் என் சொல்லுக்கு வழிப்படவேண்டும்" என்றார்கள். அதற்கு நான் "அப்படியே சந்தோஷத்துடன் நடந்துகொள்ளுவேன்"

என்று சொன்னேன். "உம்மிடத்திலிருக்கும் பையைத் தாரும்" என்றார்கள். நான் கொடுத்தேன். அதில் வழிநடைக்கு வேண்டிய உணவுகளையும் புடவைகளையும் இன்னும் என்னிடமிருந்த சாமான்களையும் வாங்கிவைத்துத் தங்கள் முதுகின்மேல் தூக்கிக்கொண்டு நடக்க ஆரம்பித்தார்கள். அப்படி நடக்கும்போது என்னால் கூடியமட்டும் "அந்தப் பையை என்னிடம் தாருங்கள், தாங்கள் களைத்துப்போவீர்கள்" என்று கேட்டேன். அப்போதவர்கள் "அமீரின்பேரில் உமக்கு அதிகாரமில்லை. அமீர் சொல்லுகிறபடி நடக்க நீர் கடமைப்பட்டவராயிருக்கிறீர்" என்று சொன்னார்கள். ஓர் இரவு மழை பொழிந்தது. அப்போதவர்கள் என்மேல் மழைபடாதபடி ஓர் கம்பளியை விரித்துப் பிடித்துக்கொண்டு விடிகிறவரையில் ஒரேநிலையாய் நின்றார்கள். நான் ஏதாவது சொல்ல வாயெடுத்தால் "அமீராயிருக்கிற எனக்கு நீர் வழிபடும்" என்று சொல்லுவார்கள். அப்போது நான் ஆ! ஆ!! நான் இவர்களை அமீராக்காமலிருந்தேனில்லையே என்று மிகவும் கைசேதப்பட்டேன்" என்பதே.

ஆறுவதுவகை:—சினேகனுடைய தவறுதல்களையும் குற்றங்களையும் மன்னிப்பதாம். "ஒரு சினேகன் உன் விஷயத்தில் ஏதாவது குற்றஞ்செய்தால் அதற்கு எழுபது விதத்தில் நியாய சமாதானத்தை வைத்து அவனை மன்னிக்கப்பார்" என்றும், "அப்படி மன்னிக்க உன்மனம் ஒப்புக்கொள்ளாத பக்ஷத்தில் அப்போது நீ உன்மனதோடு பின்வருமாறு, "ஓ மனமே! உன் சினேகன் உனக்கு எழுபது விதத்தில் சமாதானஞ்சொல்லியும் கேட்காத இக்குணமே கெட்டகுணமாயும் என்னுடைய இயற்கையாயுமிருக்கிறது" என உன்மனதுக்குச் சொல்" என்றும் பெரியோர்கள் கூறியிருக்கிறார்கள். அந்தக் குற்றமானது அவனைப் பாவத்துக்குள்ளாக்குவதாயிருந்தால் அவன் அதைவிட்டு நீங்கும்பொருட்டு மிருதுவான வார்த்தைகளால் அவனுக்கு நஸீஹத்துச்செய். அந்தக் குற்றம் அவன் எப்போதும் செய்து வராததாய் (புதிதாய்ச் சம்பவித்ததாய்) இருந்தால் அதை நீ அறியாதவன்போலிருந்துவிடு. அவன் அந்தக் குற்றத்தின்மேல் நிலைத்திருப்பானாகில் அவனுக்கு நஸீஹத்துச் செய். நஸீஹத்து பயன்படவில்லையானால் அப்போது என்ன செய்ய வேண்டுமென்ற இந்த மஸ்அலாவில் அஸ்ஹாபுகள் இருவித அபிப்பிராயமுள்ளவர்களாயிருக்கிறார்கள். அபூதர் றலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய அபிப்பிராயமானதில், "நீ அல்லாஹ்வுக்காக அவனை நேசித்தால் இப்போதும் அல்லாஹ்வுக்காகவே அவனைப் பகைத்து அவன் சினேகத்தை விட்டுவிடவேண்டும்" என்று அவர்கள் சொல்லு-



கிறார்கள். அபுத்தர்தா றலியல்லாஹு அன்ஹுவும் இன்னும் சில அஸ்ஹாபுகளும் "அவன் அந்தப் பாவத்தை விட்டுவிடுவானென்ற நம்பிக்கையிருப்பதால் அவனுடைய சினேகத்தை விடக்கூடாது" என்றும், "ஆனால் முதலில் இப்படிப்பட்டவனை நேசிக்கக்கூடாது" என்றும், "நேசித்தால் பின்பு அந்த நேசத்தை முறிக்கக்கூடாது" என்றும் சொல்லுகிறார்கள். இன்னும் "உன்னுடைய ஒரு சினேகன் ஏதாவதொரு பாவத்தைச் செய்தால், இன்று செய்த அந்தப் பாவத்தை நாளைக்கு அவன் விட்டுவிடவுங் கூடுமாதலால் அந்தப் பாவத்தின் நிமித்தம் நீ அவன் சினேகத்தைத் துறித்துவிடாதே" என்று இப்றாஹீம் நகுயீ அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இன்னும் ஆலிமானவன் ஒரு குற்றத்தைச் செய்தால் சீக்கிரத்தில் அவன் அதை விட்டும் மீளுவானென்ற ஆதரவிருப்பதால் அந்தக் குற்றத்தின்பொருட்டு நீங்கள் அவனுடைய நேசத்தை விடாதபடி பேணிக்கொள்ளுங்களென்று ஹதீஸில் வந்திருக்கிறது. இன்னும் முன்னுடைய பெரியோர்களில் இரண்டு சினேகர்களிருந்தார்கள். அவர்களில் ஒருவர் தமது நப்ஸினது இச்சையினால் ஒரு ஸ்திரீயின்மேல் மையல்கொண்டார். அப்போது அவர் தமது சினேகரைப் பார்த்து "என்மனம் மோகமென்னும் வியாதியில் மாட்டப்பட்டிருக்கிறது. ஆதலால் நம்மிருவருக்குமுள்ள சினேகபந்தத்தை அறுத்துவிட உமக்கிஷ்டமிருந்தால் நீர் அப்படிச் செய்துகொள்ளும்" என்றார். அதற்கவர் "உம்முடைய ஒரு குற்றத்திற்காக உமது சினேகத்தைத் தறிப்பதைவிட்டும் நான் அல்லாஹுத்தஆலாவினிடம் காவல் தேடுகிறேன்" என்றார். அன்றியும் அவர் தமது மனதில் "என் சினேகரைப் பிடித்த இந்த பலாவான நோயிலிருந்து அல்லாஹுத்தஆலா அவருக்குச் சுகத்தைக் கொடுக்கிறவரையில் நான் ஆகாரம் அருந்துகிறதில்லையென்று வைராக்கியம் பூண்டு அதுபோல் நாற்பது நாள்மட்டும் ஒன்றையும் உண்ணாமலும் குடிக்காமலும் இருந்தார். பின்பு தமது சினேகரிடத்தில் வந்து "இப்போது உம்முடைய நிலைமை எப்படியிருக்கிறது?" என்று கேட்க, அவர்கள் "முன்போலவே இருக்கிறது" என்று சொன்னார். பின்னும் அவர் முன்போலவே பசியைப் பொறுத்துக்கொண்டும் சாப்பிடாமல் மெலிந்துகொண்டுமிருந்தார். அப்போது அந்தச் சினேகர் வந்து "அல்லாஹுத்தஆலா எனக்கு ஆரோக்கியத்தைக் கொடுத்தான்" என்றும் "என் மனதிலிருந்த மோகாக்கினி தணிந்துவிட்டது" என்றும் சொன்னார். பின்பு அவர் ஆகாரம் அருந்தினார். இன்னுமொரு மனிதரிடத்தில் "உம்முடைய சினேகர் நிலைவிட்டு மாறிப் பாவமென்னும் குழியில் விழுந்துவிட்டாரே, நீர் ஏன் அவருடைய சினேகத்தை விடாமலிருக்கிறீர்" என்று கேட்டதற்கு, "அப்படி விழுந்திருக்கிற அவரைத் தூக்கிவிட இப்போது அவருக்கு என் சினேகமுடைய உதவி வேண்டி-

யதாயிருக்கிறது. ஆதலால் நான் அவரை என் கைவிடுவேன். மேலும் இந்தச் சமயத்தில் அவருக்குக் கைகொடுத்துத் தயவான கலீஹத்தினால் நரகத்தினின்றும் அவரைத் தப்புவிப்பேன்" என்று சொன்னார். இன்னும் பனீ இஸ்ராயீல் கூட்டத்தில் இரண்டு சினேகர்களிருந்தார்கள். அவர்கள் ஓர் மலையிலிருந்து அல்லாஹுதஆலாவை வணங்கிக்கொண்டிருந்தார்கள். ஒருநாள் ஏதோ ஒருவஸ்துவை வாங்குவதற்காக ஒருவர் அம்மலையிலிருந்து புறப்பட்டுப் பட்டணத்துக்குள் வந்தார். வந்தவிடத்தில் ஓர் கெட்ட பெண்பிள்ளையைக் கண்டு அவள்மீது மோகங்கொண்டு, அதனால் திரும்பி மலைக்குப்போகக் கூடாதபடிச் சிலநாள் வரையில் அவ்விடம் தங்கிவிட்டார். மலையிலிருந்த மற்றொரு சினேகர் அவரைத் தேடிப் புறப்பட்டு விசாரித்துக்கொண்டு வந்ததில் அவர் இன்ன நிலைமையிலிருக்கிறார் என்று கேள்விப்பட்டு அவரிடத்திற்குப் போனார். அவர் இவரைக்கண்ட உடனே வெட்கத்தினால் தம் சினேகர் என்ற வாஞ்சையையும் விட்டு "நீர் யார்? உம்மை எனக்குத் தெரியாது" என்று மறுதலித்துப் பேசினார். அப்போது இவர் அவரை நோக்கி "என்னுடைய தோழரே! நீர் ஒன்றுக்கும் மனதில் ஐயரவு வைக்கவேண்டாம். இன்று எனக்கு உம்முபேரில் இருக்கிற பிரியம் என்றுமிருந்ததில்லை" எனச் சொல்லி அவர் தோள்மீது கையைவைத்து அவரை முத்தங்கொண்டார். இப்படி அவர் பிரியமாயிருக்கிறதைக் கண்டு தம்முடைய சினேகர் தம்மை அவமதிக்கவில்லையென்று உணர்ந்த உடனே எழுந்து தவுபாச்செய்து அவருடன் புறப்பட்டுப் போய்விட்டார்.

ஆகவே, அபூதர் றலியல்லாகு அன்கு அவர்கள் செல்லும் வழியானது ஸலாமத்துக்கு மிக நெருங்கினதாயிருக்கிறது. என்றாலும், அபுத்தர்தா றலியல்லாகு அன்கு முதலானவர்களின் வழியே அதிக அன்பும் இரக்கமும் கூரிய விளக்கமும் உடையதாயிருக்கிறது. ஏனென்றால், இந்தத் தயவும் இரக்கமும் தவுபாவுக்குக் காரணமானது. அன்றியும், சினேகன் தவறியிருந்த காலத்தில் அவனுக்குக் கைகொடுத்துக் கரைசேர்க்கத் தன்னுடைய சினேகர்களின் உதவி வேண்டியதாயிருக்க, அவர்கள் எப்படி அவனைக் கைவிடுவார்கள். இன்னும் இது கூரிய விளக்கமுள்ள வழியென்றதற்குக் காரணம் யாதெனில், இரண்டு சினேகர்கள் ஒருவரையொருவர் நேசிக்க உடன்படிக்கை செய்துகொண்டால் இவர்களுடைய நேசமானது கராபத்து நானவும் பந்துத்துவம்போல் ஆயிற்று. ஆகவே, பந்துவானவன் பாவஞ் செய்ததற்காக அவனை பந்துபாத்தியத்தை அறுத்துவிடுவது அழகல்ல.



இதன் நிமித்தமே அல்லாஹுதஆலா "உன்னுடைய பந்துக்கள் உன்னிடத்தில் பாவஞ் செய்கிறவர்களா யிருந்தால், நான் உங்கள் செயல்களை வெறுத்தவனா யிருக்கிறேன் என்று நீ அவர்களுக்குச் சொல்" எனத் திருவுளமாயிருக்கிறான். உங்களை வெறுத்திருக்கிறேன் என்று சொல்லும்படி கட்டளையிடவில்லை. அபுத்தர்தா றலியல்லாகு அன்கு அவர்களிடத்தில், "உம்முடைய சகோதரர் பாவஞ் செய்கிறாரே, நீர் ஏன் அவரை வெறுத்துப் பகைக்கிறதில்லை?" என்று கேட்டதற்கு "நான் அவருடைய பாவச்செயலை வெறுத்துப் பகைக்கிறேன். ஆனால் அவர் என் சகோதரரா யிருக்கிறார்" என்று சொன்னார்கள். ஆயினும், பாவஞ் செய்கிற ஒருவனை முதலில் சினேகனாக்கக் கூடாது. அவனைச் சினேகிக்காமலிருப்பதில் மோசமொன்றுமில்லை. எனினும், சினேகித்தபின் நேசத்தை முறிப்பது மோசமாயும் முந்திய சினேகத்தின் ஹக்கை நழுவவிடுவதாயுமிருக்கிறது. அன்றியும், "உன் சினேகன் உன் விஷயத்தில் ஏதாவது குற்றஞ் செய்தால் அதை நீ பொறுத்துக்கொள்" என்று எல்லாரும் ஒத்துச் சொல்லுகிறார்கள். இதில் ஒருவருக்கும் வாதமில்லை. இன்னும் அவன் அந்தக் குற்றத்திற்காக உனக்குச் சமாதானஞ் சொல்லி மன்னிக்கத் தேடினால் அவன் சொல்லும் சமாதானம் பொய்யென்று உனக்குத் தெரிந்தாலும் அதை நீ ஏற்றுக்கொள்ளவேண்டும். நபீ சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் "ஒருவன் தன் சினேகனிடத்தில் சமாதானம் சொல்லி மன்னிக்கத்தேடும்போது அவன் அந்தச் சமாதானத்தை ஏற்றுக்கொள்ளாமலிருப்பதானது, பாதையில் சுங்கச்சாவடி வைத்து முஸ்லிம்களிடத்தில் வர்த்தக திரவியங்களுக்கு வரிவாங்குகிற பாதகத்துக்கு நிகரான பாவமாயிருக்கிறது" என்றும், "மூமினானவன் சீக்கிரத்தில் கோபமாவான், சீக்கிரத்தில் சந்தோஷமாவான்" என்றும் திருவுளமாயிருக்கிறார்கள். அபூசுலைமான் தாராளியவர்கள் தங்கள் முரீதை நோக்கி, "உன்னுடைய சினேகனில் ஏதாவது கொடுமையைக் கண்டாயாகில் அதைப்பற்றி நீ அவன்மேல் கோபிக்காதே" என்றும், "அப்படிக் கோபிப்பாயாகில் ஒருசமயம் முந்திய கொடுமையினும் பெரிய கொடுமையைக் கேட்பாய்" என்றும் சொல்லியிருந்தார்கள். இதைச் சோதித்ததில் அவர்கள் சொன்னபடியே ஆயிற்றென்று அந்த முரீது சொல்லுகிறார்.

ஏழாவது வகை:—உன் சினேகனுடைய சீவகாலத்திலும் அவனுடைய மரணத்துக்குப் பிறகும் நீ உனக்காக துஆ செய்வதுபோல் அவனுக்கும் அவன் பெண்ஜாதி பிள்ளைகளுக்கும் துஆ செய்வதாம்.

உண்மையில் இது உனக்காகச் செய்துகொண்ட துஆவாயிருக்கும். ஏனென்றால், ஒருவன் தன் சிநேகனுக்காக மறைவில் துஆ செய்வானாகில் அப்போது ஒரு மலக்கு உனக்கும் இதுபோல் உண்டாவதாக என்று சொல்லுகிறதாய் றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும் அல்லாகுதஆலா அப்படி துஆ செய்தவனை நோக்கி "நான் முதலில் உன்னைக்கொண்டு தொடங்குவேன்" என்று சொல்லுகிறதாய் வேறொரு ரிவாயத்தில் வந்திருக்கிறது. இன்னும் "சிநேகர்கள் மறைவில் செய்யும் துஆ மறுக்கப்படுகிறதில்லை" என்று றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். அபூத்தர்தா றலியல்லாகு அன்கு "நான் ஸுஜூதில் ஏழுபது சிநேகர்களுடைய நாமங்களை ஞாபகத்தில் கொண்டுவந்து அவர்களில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு துஆ செய்கிறேன்" என்று சொல்லுகிறார்கள். இன்னும் உன்னுடைய மௌத்துக்குப் பிறகு பந்துக்களெல்லாம் உன் ஆஸ்தியைப் பங்கிட்டுக்கொள்ளுகிற வேலையிலிருப்பார்களே. அப்போது உனக்குத் துஆ செய்வதிலும் உன்னுடைய ஹாலை நினைந்து அல்லாகுதஆலா உனக்கு என்ன செய்கிறானோ என்ற மனக்கவலையிலும் இருப்பவன் எவனோ அவனே உன் சிநேகனாகுவான்" என்றும் சொல்லியிருக்கிறார்கள். இன்னும் இறந்து போனவனுக்கு உபமானமாவது:—"தண்ணீரில் அமிழ்ந்து தத்தளிக்கிற ஒருவன் கரையேறும்பொருட்டு எதையும் தாவித் தாவிப் பிடிப்பதுபோல், இறந்தவனும் தன் மனைவிமக்களிலின்னும் சிநேகர்களிலின்னும் துஆவை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறான்" என்றும், "ஹயாத்தாயிருப்பவர்கள் செய்கிற அந்த துஆவானது இறந்தவர்களுடைய கபுருகளுக்கு ஒளிமலைகள்போல் போய்ச்சேரும்" என்றும் றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும் அந்த துஆவை ஒளிமிகுந்த தட்டுகளில் வைத்து இறந்தவர்களுக்கு எடுத்துக்காட்டி, இது இன்னாருடைய ஹதியா என்று அவர்களுக்குச் சொல்லுகிறதாயும், ஹயாத்தாயிருப்பவன் தனக்கு ஹதியா வந்தால் எப்படிச் சந்தோஷமாகிறானோ அப்படியே அவர்கள் சந்தோஷமாகிறதாயும் ஹதீதில் வந்திருக்கிறது.

எட்டாவது வகை:—சிநேக வாஞ்சையான விசுவாசத்தைக் காப்பாற்றுவதாம். அந்த விசுவாசத்திற்குப் பல பொருள்களுண்டு. அவற்றுள் ஒன்று:—சிநேகனுடைய மௌத்துக்குப் பிறகு அவனுடைய மனைவி மக்களையும் அவனுடைய சிநேகர்களையும் மறக்காமலிருப்பதாம். வயதுசென்ற ஒர் கிழவி றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்க



ளுடைய சமுகத்திற்கு வந்தபோது அவர்கள் அந்தக் கிழவிக்கு மரியாதை செய்தார்கள். அங்கிருந்தவர்கள் இதைக்கண்டு ஆச்சரியப்பட்டதினால், றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்களை நோக்கி, "இக்கிழவியார் கதீஜா றலியல்லாகு அன்ஹா இருந்தகாலத்தில் நம்மிடம் வந்துகொண்டிருந்தவர். ஆதலால் சிநேக வாஞ்சையைக் காப்பது ஈமானிற் சேர்ந்ததாயிருக்கிறது" என்று திருவுளமானார்கள். இன்னும் அவற்றுள் ஒன்று:—தன் சிநேகனுடைய மக்கள், அவனுடைய அடிமைகள், அவனுடைய ஷாகிர்துகள்போல் யார்யார் அவனுடைய சம்ரக்ஷணைக்குட்பட்டவர்களாயிருக்கிறார்களோ அவர்களெல்லார் பேரிலும் தயவாயும் பக்ஷமாயுமிருப்பதாம். அந்தப் பக்ஷத்தின் கூறு தன் மனதில் அந்தச் சிநேகன்மேலிருந்ததைக் காட்டிலும் அதிகமாயிருக்கவேண்டும். இன்னும் அவற்றுள் ஒன்று:—தான் ஏதாவது மேலான ஓர் அந்தஸ்தையாவது அதிகாரத்தையாவது தவுலத்தையாவது அடைந்தால் அப்போது முன்போலவே தன் சிநேகர்களை உபசரித்து மரியாதை செய்வதும் அவர்கள்மேல் பெருமை பாராட்டாமலிருப்பதுமாம். இன்னும் அவற்றுள் ஒன்று:—சிநேகம் எப்போதும் நிலைத்திருக்கும்படிப் பேணிக்கொள்வதும், இடையிலெக்காரணத்தாலும் சிநேகத்தை முறிக்காமலிருப்பதுமாம். ஏனென்றால், சிநேகர்களில் பிரட்சியை உண்டாக்குவதினும் ஷைத்தானுக்கு வேறு முக்கியமான வேலையொன்றுமில்லை. இதுபோல் அல்லாகுதஆலா "திட்டமாக ஷைத்தானாகிறவன் அவர்களில் கலகத்தை மூட்டுகிறான்" என்று திருவுளமாயிருக்கிறான். அன்றியும், ஹலரத்து யூசுபு அலைகிஸ்ஸலாமவர்கள் "எனக்கும் என் சகோதரர்களுக்கும் நடுவே ஷைத்தான் கலகத்தையுண்டாக்கினான்" என்று சொல்லுகிறார்கள். இன்னும் அவற்றுள் ஒன்று:—சிநேகன் விஷயத்தில் எவராயினும் பகைமையான பேச்சைச் சொன்னால் அதைச் செவியுட் கொள்ளாதிருப்பதும், அப்படிச் சொல்லுகிற எல்லாரையும் பொய்யரென நினைப்பதுமாம். இன்னும் அவற்றுள் ஒன்று:—சிநேகனுடைய பகைவனை நேசிக்காமலிருப்பதும் அவனைத் தன் பகைவனென்று நினைத்துக் கொள்வதுமாம். ஏனென்றால், ஒருவன் மற்றொருவனைச் சிநேகித்து அவன் பகைவனையும் நேசிப்பானாகில் இந்தச் சிநேகம் அற்பசிநேகமாம்.

ஒன்பதாவது வகை:—சிநேகனிடத்தில் தனைப்பகட்டிடம்பம் பாராட்டலை விடுவதும் தனிமையிலெப்படியோ அப்படியே அவனோடிருப்பதுமாம். ஒருவருக்கொருவர் பகட்டிடம்பம் பாராட்டி

வார்களாகில் சிநேகம் அற்பமேயாம். இன்னும் "எந்தச் சிநேகனிடத்தில் நீ கெஞ்சிக் கேட்கவும் அவனுக்காக உன்னைப் பகட்டிக் காட்டவும் அவசியமாகுமோ அவனே உன் சிநேகர்களெல்லாரிலும் மிகக் கெட்டவன்" என்று அலிறலியல்லாகு அன்கு சொல்லுகிறார்கள். இன்னும் ஜுனைது றஹிமகுல்லா அவர்கள் "ஒருவரையொருவர் நேசித்த அநேகஞ் சிநேகர்களை நான் பார்த்தேன்" என்றும், "ஆனால் எந்த இருவருக்குள் ஒருவனில் ஏதோ ஓர் அய்பான குற்றமிருந்ததோ அவனையொழிய மற்றப்படி எந்த இரண்டு சிநேகர்களும் ஒருவருக்கொருவர் பகட்டிப் பட்டம் பாராட்டினதை நான் பார்க்கவில்லை" என்றும் சொல்லுகிறார்கள். இன்னும் துன்யாவை யுடையவர்களோடு அதபாகவும், ஆகிறத்தை யுடையவர்களோடு இல்மின் பிரகாரமும் மஃரிபாவை யுடையவர்களோடு உன் இஷ்டம்போலும் சகவாசம் செய்யென்றும் சொல்லியிருக்கிறார்கள். சூபியாக்களில் ஒரு கூட்டம் தங்களுக்குள் ஒருவரையொருவர் நேசிப்பதற்குப் பின் வருமாறு விதி ஏற்படுத்திக்கொண்டார்கள். அதாவது:—"நம்மில் எவராயினும் எப்போதும் நோன்பு வைப்பவராயிருந்தாலும் அல்லது நோன்பில்லாமல் எப்போதும் உண்பவரா யிருந்தாலும், அல்லது இரவெல்லாம் தூங்குகிறவராயிருந்தாலும், அல்லது இரவெல்லாம் விழித்து வணங்குகிறவராயிருந்தாலும் அதைப்பற்றி நம்மில் ஒருவரும் அவரிடத்தில் ஒன்றும் கேட்கக்கூடாது" என்பதே. மொத்தத்தில் அல்லாவுக்காக நேசிப்பதென்பதற்குப் பொருளாகிறது அன்னியோன்னியமாய் இருப்பதேயாம். அன்னியோன்னியத்தில் பகட்டுண்டாக இடமில்லை.

பத்தாவது வகை:—தன்னை எல்லாச் சிநேகர்களிலும் தாழ்ந்தவனாக நினைப்பதும், அவர்களிடத்தில் யாதொரு பொருளை ஆசிக்காமலிருப்பதும், அவர்களுடைய ஹக்கில் நடக்கவேண்டிய எந்த நடப்பையும் அவர்களுக்கு மறைக்காமலிருப்பதும், எல்லா ஹக்குகளையும் நிறைவேற்றுவதுமாம். ஜுனைது றஹிமகுல்லா அவர்களிடத்தில் ஒருவர், "இக்காலத்தில் சிநேகர்கள் கிடைப்பது அருமையாய்ப் போய்விட்டது" என்று பலமுறை சொல்லிக்கொண்டிருந்தார். அதற்கு ஜுனைது றஹிமகுல்லா அவர்கள் அவரை நோக்கி, "உம்முடைய கஷ்டங்களில் உமக்கு உதவிசெய்ய ஒரு சிநேகன் வேண்டுமென்றால் கிடைப்பது அருமைதான். நீர் உதவிசெய்ய சிநேகர் வேண்டுமானால் என்னிடம் அநேகம்பேர் இருக்கிறார்கள்" என்று விடையளித்தார்கள். இன்னும் பின்வருமாறு பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதாவது:—ஒருவன் தன் சிநேகர்களிலும் தன்னை மேலாக நினைப்பா



னாகில் அவன்தானும் பாவியாகுவான். அந்தச் சிநேகர்களும் அவன் விஷயத்தில் பாவிகளாவார்கள். தன்னை அவர்களுக்குச் சமமாக நினைப்பானாகில் அப்போது தானும் கிலேசப்படுவான். அவர்களும் கிலேசப்படுவார்கள். தன்னை அவர்களுக்குத் தாழ்ந்தவனென்று நினைப்பானாகில் தானும் சுகமாயிருப்பான். அவர்களும் சுகமாயிருப்பார்கள்" என்பதே. அபூமஆவியத்துல் அஸ்வது என்பவர்கள், "என் சிநேகரெல்லோரும் என்னை முதன்மையாக்கி மேன்மைப்படுத்துகிறார்கள். ஆதலால், அவர்கள் என்னிலும் மிக்க நல்லவர்களாயிருக்கிறார்கள்" என்று சொல்லுகிறார்கள்.

## மூன்றாவது பாபு - முஸ்லிம்கள், பந்துக்கள், அண்டைவீட்டார், அடிமைகள் இவர்களுடைய ஹக்குகளின் பயான்.

அறிந்துகொள்:—ஒவ்வொருவருக்கும் அவரவருடைய நெருங்குதலின் அளவாக ஹக்கு இருக்கிறது. நெருங்குதலின் வகுப்புகள் பலவாயிருக்கின்றன. அந்த நெருங்குதலின் அளவாகவே அந்த ஹக்குகளுமிருக்கின்றன. எல்லாவற்றிலும் அல்லாவுக்காக நேசிப்பதே மிக்க பலமானதாம். அதனுடைய ஹக்குகள் மேலே பேசிவரப்பட்டன.

இனி ஒரு முஸ்லிமானவன் சிநேகனா யில்லாமற்போனாலும் அவன் முஸ்லிமாயிருக்கிற நிமித்தம் அவனுக்காகவும் பல ஹக்குகளுண்டு. முதலாவது ஹக்கு:—தனக்கு எதைப் பிரியப்படமாட்டானோ அதை ஒரு முஸ்லிமுக்கும் பிரியப்படாமலிருப்பதாம். "முஃமினானவர்கள் ஓரேஉடம்புக்கொப்பாயிருக்கிறார்கள்" என்றும், "உடம்பினது ஓர் உறுப்புக்கு யாதாவது வருத்தமுண்டானால் எல்லா உறுப்புகளும் அந்த வருத்தத்தையுணர்ந்து துன்பமுறுகின்றன" என்றும் றசூல் சல்லல்லாகு அலைஹிவசல்லம் அவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும் "ஒருவன் நரகத்தைவிட்டும் மீட்சி பெறவேண்டுமானால் அவன் கலிமா ஷஹாதத்துடன் மவுத்தாகவேண்டும்" என்றும், "தனக்கு மற்றவர் செய்யத்தான் பொருந்தாத ஒரு காரியத்தை அவன்தானும் ஒரு முஸ்லிமுக்குச் செய்யக்கூடாது" என்றும் திருவுளமாயிருக்கிறார்கள். மூஸா அலைஹிஸ்ஸலாம் அல்லாகுதஆலா உடைய சமுகத்தில் "யாறப்பீ! உன் அடியார்களில் பெரிய நீதிமான் யார்?" என்று கேட்டதற்கு "தனக்குள் நீதஞ்செய்பவன் எவனோ அவனே பெரிய நீதிமான்" என்று அருளிச் செய்தான்.

இரண்டாவது ஹக்கு:—தன் கையினாலும் நாவினாலும் எந்த முஸ்லிமுக்கும் வருத்தங்கொடாமலிருப்பதாம். றசூல் சல்லல்லாகு அலைஹி

வசல்லமவர்கள் அபூஹுறைறாவுகளை நோக்கி, "முஸ்லிம் இன்னுனென்று உங்களுக்குத் தெரியுமா?" எனக்கேட்டார்கள். அதற்கு "அல்லாவும் றசூலும் மிக அறிந்தவர்கள்" என்று அபூஹுறைறாவுகள் சொன்னார்கள். அப்போது "எவனுடைய கையையும் நாவையும் விட்டு முஸ்லிம்கள் சலாமத்தாயிருக்கிறார்களோ அவனேமுஸ்லிம்" என்றார்கள். "மூமின் யார்?" என்று கேட்டதற்கு, "எவனால் ஒரு மூமினுக்கு உயிரையும் பொருளையும் பற்றிய அச்சமு தீர்தல் உண்டாகுமோ அவனே மூமின்" என்றார்கள். "முஹாஜிர் யார்?" என்று கேட்டதற்கு, "கெட்டகாரியங்களை விட்டும் நீங்கினவனெவனோ அவனேமுஹாஜிர்" என்று திருவுளமானார்கள். இன்னும் "ஒரு முஸ்லிமுக்கு வருத்த முண்டாகும்படி கண்ணைக்கொண்டு இஷாரா செய்வதும், ஒரு முஸ்லிம் அருவருப்பு அச்சங்கொள்ளும்படி யாதொரு காரியத்தைச் செய்வதும் எந்த முஸ்லிமுக்கும் ஹலால் அல்ல" என்று றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும் "அல்லாகுதஆலா ஈமாந்தாரிகளுக்குத் தொறிவை விடுவான்" என்றும், "எறும்புகள் வெளித்தோற்றுமிறமையில் அவர்கள் தங்களைச்சொறிந்துகொள்ளுவார்கள்" என்றும், "அப்போது இந்த வருத்தம் உங்களுக்கு எப்படியிருக்கிறது? என்று அவர்களைக் கேட்கப்படும்" என்றும், "அதற்கவர்கள் மிகவும் கடினமாயிருக்கிறது என்று சொல்லுவார்கள்" என்றும், "அப்போது நீங்கள் துன்யாவில் முஸ்லிம்களை வருத்தப்படுத்திக்கொண்டிருந்தீர்களே அதனாலுங்களுக்கு இந்த வருத்தமுண்டாயிற்றென்று அவர்களுக்குச் சொல்லப்படும்" என்றும் முஜாஹிது றஹியல்லாகு அன்கு சொல்லியிருக்கிறார்கள். இன்னும் றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் "சொர்க்கத்தில் ஒரு மனிதனைக் கண்டேன்" என்றும், "அவன் குஷ்கிஷ்டமானபடி அதில் சுற்றியுலாவிக்கொண்டிருந்தான்" என்றும், "முஸ்லிம்கள் நடக்கிறவழியில் அவர்களுக்கு இடைஞ்சலாயிருந்த ஓர் மரத்தை வெட்டி அதனால் ஒருவருக்கும் யாதொருவருத்த மனுகஷ்டமாகாது செய்ததினால் அவன் அப்படி ஆயினான்" என்றும் திருவுளமானார்கள்.

மூன்றாவது ஹக்கு:— ஒருவர்மேலும் பெருமைபாராட்டாமலிருப்பதாம். ஏனென்றால் பெருமையடிப்பவர்களை அல்லாகுதஆலா பகைப்பாரென்றெண்ணுக. இன்னும் றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் "ஒருவரும் மற்றொருவர்மேல் பெருமை பாராட்டாமலிருக்கும்பொருட்டு நீர் தாழ்மையைத் தெரிந்துகொள்ளுமென்பதாய் அல்லாகுதஆலா எனக்கு வஹி இறக்கினான்" என்று திருவுளமாயிருக்கிறார்கள். இதன் நிமித்தமே நாயகமவர்கள் விதவைகளோடும் ஏழைகளோடும்



தாழ்மையாய் நடப்பவர்களாயும், அவர்களுடைய ஹாஜத்துகளை நிறைவேற்றிவைப்பவர்களாயுமிருந்தார்கள். எந்தமனிதனையும் இழிவாகப் பார்ப்பதுகூடாது. ஏனென்றால், ஒருக்கால் அந்தமனிதர் அல்லாவுடைய ஒலியாயிருக்கவும், அல்லாகுதஆலா தன்னுடைய அவ்லியாக்களையும் அன்பர்களையும் ஜனங்களுக்குள் மறைத்து ஒருவரும் அவர்களுடைய ஹாலுகளை அறியாமலிருக்கும்படி வைத்திருக்கவும் கூடும். அதை இவன் அறியமாட்டான்.

நாலாவது ஹக்கு:—எந்த முஸ்லிமைப் பற்றியாவது ஒருவன் கோள்சொன்னால் அதைக்காதில் வாங்காமலிருப்பதாம். ஏனென்றால் ஒருபேச்சை நீதிமானில்நின்றும் கேட்கவேண்டும். கோளனோ (நீதங்கெட்ட) பாவிகாயிருக்கிறான். "கோளன் சொர்க்கம் போகமாட்டான்" என்று ஹதீதில் வந்திருக்கிறது. ஒருவன் உன்னிடத்தில் மற்றொருவனைக்குறித்துக் கெடுதி பேசினால் அவன் உன்னைக்குறித்தும் மற்றவனிடத்தில் கெடுதிபேசுவான் என்றுணர்ந்துகொள். ஆகலால் அவனைவிட்டும் தூரப்படுவதுமன்றி அவனைப் பொய்யனென்றும் நினைத்துக்கொள்ளவேண்டும்.

ஐந்தாவது ஹக்கு:—எந்தச் சிநேகனிடத்திலும் பேசாதிருப்பதை மூன்றுநாளைக்குமேல் அதிகப்படுத்தாமலிருப்பதாம். "முஸ்லிமாகிய சகோதரனிடத்தில் மூன்றுநாளைக்குமேல் பேசாமலிருப்பது ஹலால் அல்ல" என்றும், "சலாமைக்கொண்டு எவன் பேசத்தொடங்குகிறானோ அவனே அவர்களில் மிகநல்லவன்" என்றும் றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். இக்ரிமா றலியல்லாகு அன்கு சொல்லுகிறதாவது:—அல்லாகுதஆலா யூசுபு அலைகிஸ்ஸலாமை நோக்கி "நீர் உம்முடைய சகோதரர்களை மன்னித்ததினாலேயே நான் உமது அந்தஸ்தையும் நாமத்தையும் மகிமைப்படுத்தினேன்" என்று திருவுளமானான் என்பதே. இன்னும் "ஒருசகோதரனுக்கு நீ ஒருகுற்றத்தை மன்னிப்பாயாகில் உனக்குப் பெருமையும் மேன்மையுமேயன்றி வேறொன்றும் அதிகப்படாது" என்று ஹதீதில் வந்திருக்கிறது.

ஆறாவது ஹக்கு:—நல்லவன், கெட்டவன் என்று வித்தியாசப்படுத்தாமல் எவனாயிருந்தாலும் அவனுக்குத் தன்னால் இயன்றமட்டும் நன்மைசெய்வதாம். ஏனென்றால், "எவருக்கும் உன்னால் கூடியவரையில் நன்மைசெய்" என்றும், "அந்த நன்மைக்கு அவன் அருகனல்லாதவனாயிருந்தால் நீ அதற்கு அருகனாயிருக்கிறாய்" என்றும் ஹதீதில் வந்திருக்கிறது. இன்னும் "ஈமானுக்குப்பிறகு ஜனங்களைச் சிநேகிப்பதும் யோக்கியனுள்ளவருக்கும் யோக்கியனில்லாதவருக்கும் நன்மை செய்வ

றமே அக்னுக்கு அடிவேரா யிருக்கிறது" என்று ஹதீஸில் வந்திருக்கிறது. இன்னும் யாராவதொருவர் றசூல் சல்லல்லாகு அலைஹிவசல்லம் அவர்களுடன் வசனிப்பதற்காக அவர்களுடைய கையைப் பிடித்தால் அவரே விடுகிறவரையில் நாயகமவர்கள் தங்கள் கையை இழுத்துக் கொள்ளுகிறதில்லை" என்றும், "யாராவதொருவர் அவர்களோடு பேசிக் கொண்டிருந்தால் தங்கள் முகத்தை அவருக்கெதிர் நோக்கினவர்களாய் அவர் பேசி முடிக்கிறவரையில் சப்று செய்வார்கள்" என்றும் அபூஹுறைரா றலியல்லாகு அன்கு சொல்லியிருக்கிறார்கள்.

ஏழாவது ஹக்கு:—விருத்தாப்பியருக்குச் சங்கை செய்வதும் சிறுவர்கள்மேல் பக்ஷமாயிருப்பதுமாம். றசூல் சல்லல்லாகு அலைஹிவசல்லமவர்கள் "எவனொருவன் விருத்தாப்பியருக்குச் சங்கைசெய்யாமலும் சிறுவர்கள்மேல் பக்ஷம் பாராட்டாமலு மிருக்கிறானோ அவன் நம்மிலுள்ளவனல்ல" என்று திருவுளமாயிருக்கிறார்கள். "இஸ்லாம் நரை ரோமத்துக்கு மரியாதை செய்வது நாயனைக் கனப்படுத்துவதா யிருக்கிறது" என்றும் திருவுளமாயிருக்கிறார்கள். அன்றியும் விருத்தாப்பியருக்குச் சங்கைசெய்கிற எந்த வாலிபனுக்கும் அவனுடைய விருத்தாப்பியகாலத்தில் அவனுக்கு சங்கை செய்யும்படி அல்லாகுதஆலா வாலிபர்களைத் தயார்படுத்திவிடுவான்" என்று றசூல் சல்லல்லாகு அலைஹிவசல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். இந்த ஹதீஸானது வயது நீடிப்பதின்பேரில் நல்மாராயமா யிருக்கிறது. ஏனென்றால், ஒருவன் விருத்தாப்பியருக்குச் சங்கைசெய்கிற நற்குணமாகிய நல்லுதவியைப் பெற்றுக்கொள்ளுவானாகில் அவன் அதற்குப்பிரதிபலனை அடையும்பொருட்டு அவனும் விருத்தாப்பியத்தை எற்றிக்கொள்ளுவான் என்பதின் பேரில் இது சாக்ஷியாயிருக்கிறது. றசூல் சல்லல்லாகு அலைஹிவசல்லமவர்கள் சபரி இருந்து திரும்பி வரும்போது சிறுவர்களை அவர்களிடம் கொண்டு போவார்கள், நாயகமவர்கள் அச்சிறுவர்களைத் தாங்களேறிவரும் வாகனத்தின்மீது தங்கள் முன்னால் ஏற்றிக்கொள்ளுவார்கள். சிலரைப் பின்னே ஏற்றிக்கொள்ளுவார்கள். அச்சிறுவர்கள் ஒருவருக்கொருவர் பெருமை பாராட்டி ஹஸரத்தவர்கள் எங்களை முன்னால் வைத்துக்கொண்டார்கள், உங்களைப் பின்னால் வைத்தார்களென்று வீம்புபேசுவார்கள். இன்னும் குழந்தைக்குப் பேரிட்டு ஆசீர்வதிப்பதற்காக றசூல் சல்லல்லாகு அலைஹிவசல்லமவர்களிடம் குழந்தைகளைக் கொண்டுபோவார்கள். நாயகமவர்கள் அக்குழந்தைகளைத் தங்கள் மடிமீது வைத்துக்கொள்ளுவார்கள். சில சமயங்களில் குழந்தை மூத்திரம் பெய்துவிடும். அப்போது அக்குழந்தையைக் கொண்டு வந்தவர்கள் இரைச்சலிட்டு அவர்களுடைய மடிமீதிருந்து குழந்தை



யைத் தூக்கிக்கொள்ள நாடினால் நாயகமவர்கள் அவர்களைத் தடைசெய்து "விடுங்கள்! முழுமையும் பெய்யட்டும். அதைத் தடுக்காதீர்கள்" என்று சொல்லுவார்கள். அன்றியும், குழந்தைக் குடையவர் விலேசப்படாமலிருக்கும்பொருட்டு அவருக்கு முன்னால் அந்த மூத்திரத்தைக் கழுவமாட்டார்கள். அவர் வெளியேபோன பிறகு கழுவிப் போடுவார்கள். குழந்தை மிகவும் சிறிய பாலகனா யிருந்தால் மூத்திரத்தைக் கழுவமாட்டார்கள். அதன்மேல் தண்ணீரைத் தெளித்துவிடுவார்கள்.

எட்டாவது ஹக்கு:—எல்லா முஸ்லிம்களிடத்திலும் சந்தோஷமாயும் முகமலர்ச்சியாயும் நகைமுகமாயு மிருப்பதாம். "முகமலர்ச்சியா யிருப்பவனையும் இலேசைத் தெரிந்துகொண்டவனையும் அல்லாகுதஆலா உவந்திருக்கிறான்" என்றும், "முகமலர்ச்சியும் இலேசை எடுப்பதும் இனிய மொழியும் பிழை பொறுக்கப்படுவதற்கு உரித்தாகிய நன்மையாயிருக்கிறது" என்றும் றசூல் சல்லல்லாகு அலைஹிவசல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். அனஸ் றலியல்லாகு அன்கு சொல்லுகிறதாவது:—"றசூல் சல்லல்லாகு அலைஹிவசல்லமவர்கள் ஒருதரம் தெருவழியாய் நடந்துபோகையில் ஒரு ஏழைப் பெண்பிள்ளை வந்து வழிமறித்துக்கொண்டு "தங்களிடத்தில் நான் கொஞ்சம் பேசவேண்டியதாயிருக்கிறது" என்று சொன்னாள். அப்போது ஹஸரத்தவர்கள் "நல்லது; நீ இந்தத் தெருவில் எங்கே உட்கார்ந்தாலும் நானும் உன்னோடு உட்காருவேன்" என்று சொல்லி, அவளுக்காக அந்தத்தெருவில் அவள் தன்னுடைய சங்கதிகள் முழுவதையும் சொல்லித் தீருகிற வரையில் அவளுடன் உட்கார்ந்தார்கள்" என்பதே.

ஒன்பதாவது ஹக்கு:—எந்த முஸ்லிமுக்கும் யாதொருவார்த்தைப்பாடுசெய்து மாறாமலிருப்பதாம். "பேசுவதில் பொய் சொல்வதும், வார்த்தைப்பாட்டில் மாறுசெய்வதும், அமானத்தில் மோசம் செய்வதுமான இந்த மூன்று குணங்கள் எவனில் இருக்குமோ அவன் முனாபிகாகுவான்" என்றும், "அவன் தொழுதாலும் நோன்பு வைத்தாலும் சரியே" என்றும் ஹதீஸில் வந்திருக்கிறது.

பத்தாவது ஹக்கு:—ஒவ்வொருவருக்கும் அவரவருடைய அந்தஸ்துக்குத் தக்க அளவாய் மரியாதை வைப்பதாம். ஒருவன் ஜனங்களுக்குள் சிறந்தவனாயிருந்தால் அவனை மிகவும் சிறப்பிக்கவேண்டும். ஒருவன் நல்ல உடையும் குதிரையும் உள்ளவனாய்க் கௌரவம் பொருந்தியவனாய் இருந்தால் அவனை மகா சங்கையுள்ளவனென்று மதிக்கவேண்டும். ஆயிஷா றலியல்லாகு அன்கா ஒரு சபரிலிருந்தார்கள். உணவருந்துவதற்காக சுப்ரா விரிக்கப்பட்டது. அப்போது ஒரு

பகிருவந்தார். அவருக்கு ஒரு ரொட்டியைக் கொடுக்கும்படி உத்திரவு செய்தார்கள். பிறகு ஒருவர் வாகனத்தின்மேலேறி அவ்வழியாய் வந்தார். அவரை அழைத்து உணவளிக்கும்படி உத்திரவு செய்தார்கள். இதைப்பற்றி அவர்களிடத்தில் "அம்மா! நாங்கள் பகிருக்கு ஒரு ரொட்டியைக் கொடுத்தனுப்பவும் சீமானை அழைத்து உணவளிக்கவும் உத்திரவு செய்த காரணமென்ன?" என்று கேட்டதற்கு, அவர்கள் சொன்னதாவது:—"அல்லாகுதஆலா ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு தரஜாவைக் கொடுத்திருக்கிறான். அந்த தரஜாவின் ஹக்கைநாமும் கவனிக்கவேண்டும். பகீரானவன் ஒருரொட்டியைக்கொண்டே சந்தோஷமாகுவான். சீமானுக்கும் அதுபோல்செய்வது அசங்கிதமாம். ஆதலால் அவனும் சந்தோஷமாகும்படி செய்யவேண்டும்" என்பதே. இன்னும் "ஒரு கூட்டத்தில் சிறந்தவராயிருக்கிற ஒருவன் உங்களிடத்திற்கு வந்தால் நீங்கள் அவனைக் கண்ணியப்படுத்துங்கள்" என்று ஹதீதில் வந்திருக்கிறது. இன்னும் சிலபேர் இருந்திருக்கிறார்கள். அவர்கள் உட்காருவதற்காக றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் தங்கள் போர்வையை விரிப்பாய்க் கொடுத்திருக்கிறார்கள். இன்னும் நாயகமவர்களுக்குப் பாலூட்டியிருந்த ஓர் கிழவியார் அவர்களிடத்திற்கு வந்தபோது, தங்கள் போர்வையை விரித்து அதன்மேல் அக்கிழவியாரை உட்கார்த்தினார்கள். அன்றியும் அக்கிழவியாரை நோக்கி "அருகேயுள்ள அன்னையே! "மருஹபா" எனக் கனிவுடனழைத்து "நீர் என்னிடம் சிபார்சு பேசலாம்" என்றும், "நீர் விரும்பியதைக் கேளும் நான் கொடுப்பேன்" என்றும் கூறினார்கள். பின்னர் யுத்தத்தில் கொள்ளையாகிய பொருட்களில் நின்றும் தங்களுக்கு வந்த பாகத்தை அக்கிழவியாருக்குக் கொடுத்தார்கள். அதை உதுமான் றழியல்லாகு அன்குவுக்கு அக்கிழவியார் நாலாயிரம் திருஹங்களுக்கு விற்றனர்.

பதினொன்றாவது ஹக்கு:—ஒருவருக்கொருவர் பிணக்கமாயிருக்கிற இரண்டு முஸ்லிம்களுக்கு நடுவே சமாதானம் செய்விக்க முயலுவதாம். றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் அஸ்ஹாபுகளை நோக்கி, "தொழுகை, நோன்பு, ஸக்காத்து இவைகளைக் காட்டிலும் அதிக வரிசையுள்ளது எதுவென்பதை நான் உங்களுக்குச் சொல்லவா?" என்று கேட்டார்கள். அதற்கு "சொல்லுங்கள், யாறசூலல்லா!" என்று அஸ்ஹாபுகள் கூற, "முஸ்லிம்களுக்கு நடுவே சமாதானத்தை உண்டுபண்ணுவதே அது" என்று நாயகமவர்கள் திருவுளம்பற்றினார்கள். அனஸ் றழியல்லாகு அன்கு சொல்லுகிறதாவது:—"ஒருநாள் றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் உட்கார்ந்திருக்கையில்



அசந்தர்ப்பத்தில் சிரித்தார்கள். உமர் றழியல்லாகு அன்கு நாயகமவர்களை நோக்கி "என் தாயும் தந்தையும் தங்களுக்கு குருபானியாயிருக்கும். தாங்கள் சிரித்தகாரணமியாது?" என்றுகேட்டார்கள். அப்போது றசூல்சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் "கியாமத்நாளில் என் உம்மத்துகளில்நின்றும் இரண்டுபேர் அல்லாகுதஆலாவுடைய சமுகத்தில் முழங்கால்களின்மேல் நிற்பார்கள். ஒருவன் மற்றொருவனைக் காட்டி, "ஆண்டவனே! இவன்என்மேல் கொடுமைசெய்திருக்கிறான். உன் விசாரணையினால் இவனிடத்திலிருந்து எனக்கு நாயம் கிடைக்கவேண்டும்" என்பான். அல்லாகுதஆலா அந்த மற்றொருவனை நோக்கி, "நீ அவன்ஹக்கைக்கொடு" என்று சொல்லுவான். அதற்கவன் "என் ஆண்டவனே! என்னுடைய நன்மைகளையெல்லாம் என் வழக்காளிகள் கொண்டுபோய்விட்டார்கள். எனக்கு ஒன்றுமேயில்லை" எனச் சொல்லுவான். அல்லாகுதஆலா அந்தவாதியைநோக்கி "இப்போது அவன் என்னசெய்வான்? அவனிடத்தில் ஒரு நன்மையுமில்லையே" என்பான். அதற்கவன் "என் ஆண்டவனே! என்பாவங்களை அவன்மேல்சாட்டு" என்பான். பின்பு அவனுடைய பாவங்கள் அவன்மேல் சுமத்தப்படும். அப்போதும் கொடுமை அவன்மேல் பாக்கியாயிருக்குமெனச் சொல்லி, இந்தச்சமயத்தில்நாயகமவர்கள் அழுதுவிட்டதுந்தவிர "இது பெரிய முசீபத்துடைய நாளாயிருக்கும். இதில் ஒவ்வொருவரும் தங்கள் பாவச்சுமையை எவராவது இரக்கிக்கொள்ளமாட்டார்களா என்று தேட்டமுள்ளவர்களாயிருப்பார்கள்" எனவும் சொன்னார்கள். பின்னர் அல்லாகுதஆலா அந்த வாதியை நோக்கி, "இதோ உனக்கென்ன தெரிகிறது பார்?" என்று சொல்லுவான். அதற்கவன் "என்னுடைய நாயனே! வெள்ளியினால் சமைந்த பட்டணங்களும் முத்துகள் இரத்தினங்கள் இவைகள் எழுதப்பெற்ற பொன் மாளிகைகளும் தெரிகின்றன. இது எந்த நபிக்கு உள்ளதோ, அல்லது எந்த ஷஹீதுக்கு உள்ளதோ அல்லது எந்த (சித்தீக்கு) சத்தியபுருஷருக்குள்ளதோ" என்பான். அப்போது "இதற்கு விலை கொடுப்பவன் எவனோ அவனே இதற்குச் சுதந்திரன்" என்று அல்லாகுதஆலா சொல்லுவான். அதற்கவன் "என் ஆண்டவனே! இதற்கு விலை கொடுக்க யாரால் முடியும்?" என்பான். "உன்னால் முடியும்" என்று அல்லாகுதஆலா அவனுக்குச் சொல்லுவான். அப்போதவன் "என் ஆண்டவனே! நான் எதை இதற்கு விலையாய்க் கொடுப்பேன்?" என்பான். அதற்கு அல்லாகுதஆலா "நீ இந்தச் சகோதரனை மன்னிப்பதே இதற்கு விலை" என்றுசொல்லுவான். அதற்கவன் "என் ஆண்டவனே! நான் மன்னித்தேன்" என்பான். அப்போது அல்லாகுதஆலா அவனை நோக்கி, "நீ எழுந்து அவன் கையைப்பிடித்துக்கொண்டு நீங்க

னிருவரும் சொர்க்கம்போய்ச் சேருங்கள்" என்று உத்தரவுசெய்வான். ஆகவே நீங்கள் அல்லாகுதஆலாவுக்குப் பயப்படுங்கள். அவன் கியாமத்துநாளில் முஸ்லிம்களுக்கு நடுவே சமாதானம் செய்கின்றானதலால் நீங்களும் ஜனங்களில் சமாதானம் செய்யுங்கள்" என்று திருவுளமானார்கள்" என்பதே.

பன்னிரண்டாவது ஹக்கு:—முஸ்லிம்களுடைய எல்லா அய்புகளையும் மானங்களையும் வெளியாக்காமல் மறைப்பதாம். "யாராவதொருவன் இவ்வுலகத்தில் முஸ்லிம்களுடைய மானத்தை மறைப்பானாகில், அல்லாகுதஆலா கியாமத்து நாளில் அவனுடைய பாவங்களை மறைப்பான்" என்று ஹதீதில் வந்திருக்கிறது. அபூபக்கர் ஸித்தீக் றழியல்லாகு அன்கு "நான் ஒருவனைப் பிடிக்கும்போது அவன் களவு செய்தவனாயிருந்தாலும் சாராயம் குடித்தவனாயிருந்தாலும் அந்தக் குற்றம் அவனிலே நின்றும் வெளியாகாதபடி அல்லாகுதஆலா மறைத்துவிடவேண்டுமென்பதை விரும்புகிறேன்" என்று சொல்லுகிறார்கள். றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் சில ஜனங்களை நோக்கி, "ஓ! நாவினும் ஈமான் கொண்டு கல்புக்குள் இன்னும் ஈமான் வராத ஜனங்களே! நீங்கள் பிறரைப் பற்றிப் புறங்கூறவேண்டாம். அவர்களுடைய அய்புகளைத் தேடித் திரியவேண்டாம். ஒருவன் ஒரு முஸ்லிமுடைய மானத்தை வெளியாக்குவானாகில் அவன் தன் வீட்டிற்குள்ளிருந்தாலும் அவன் மானங் குலையும்படி அல்லாகுதஆலா அவனுடைய அய்பை வெளிப்படுத்துவான்" என்று திருவுளமானார்கள். இபுனுமஸ்ஊது றழியல்லாகு அன்கு சொல்லுகிறதாவது:—"எனக்கு ஞாபகம் இருக்கிறது. நானில் முதல் முதல் பிடிபட்ட ஒருவனுடைய கையைத் தறிக்கும்படி தீர்ப்புச்செய்வதற்காக அவனை றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுடைய சமுகத்துக்குக் கொண்டுவந்தார்கள். அப்போது நாயகமவர்களுக்கு முன்னிருந்த முகக்குறி வேறுபட்டது. இதைக்கண்ட அன்ஸாரிகள் "யாறசூலல்லா! இது காரியம் தங்களுக்குப் பொருத்தமில்லாமலிருக்கிறதோ?" என்று கேட்டார்கள். அதற்கு நாயகமவர்கள் "ஏன் இருக்காது? என் சகோதரர்களுடைய வழக்கில் ஷைத்தானுக்கு நான் ஏன் உதவியாயிருப்பேன்? அல்லாகுதஆலா உங்களை மன்னிக்கவேண்டுமென்றும், உங்கள் பாவங்களை அவன் மறைக்கவேண்டுமென்றும், உங்கள் பிழைகளை அவன் பொறுக்கவேண்டுமென்றும் நீங்கள் நாடுவீர்களானால், நீங்களும் ஜனங்களுடைய பாவங்களை மறையுங்கள். ஆதலால் சுல்தானுடைய சமுகத்துக்கு வந்துவிட்டால் ஒருவருடைய ஹத்தைத் தீர்ப்புச்செய்வதேயன்றி (மன்னிக்க) வேறுவழியில்லை என்று திருவுளமானார்கள்" என்பதே.



உமர் றழியல்லாகு அன்கு ஓர் இரவு நகர்சோதனைக்காகப் புறப்பட்டு வீதியைச் சுற்றிக்கொண்டிருந்தார்கள். ஒரு வீட்டிலிருந்து இராகம் பாடுகிற சத்தம் கேட்டது. அந்த வீட்டின் மேலால் ஏறி உள்ளே இறங்கினார்கள். அங்கு ஒரு மனிதன் ஒரு ஸ்திரீயுடனிருந்து மதுபானம் பண்ணிக்கொண்டிருக்கிறதைக் கண்டு, "அடே அல்லாவுடைய பகைவனே! உன்னுடைய இப்படிப்பட்ட பாவத்தை அல்லாகுதஆலா வெளியாக்காமல் மறைத்து விடுவானென்று எண்ணியிருந்தாய்?" என்று சொன்னார்கள். அதற்கவன் "அமீறுல்முஃமினீனே! அவசரப்படவேண்டாம். நான் ஒருபாவஞ் செய்தேன். தாங்கள் மூன்று பாவங்களைச் செய்தீர்கள். ஏனென்றால், அல்லாகுதஆலா "நீங்கள் குற்றங்களைத் தேடித் திரியவேண்டாம்" என்று திருவுளமாகிறான். தாங்கள் தேடிப் பிடித்தீர்கள். இன்னும் "வீடுகளில் அவற்றின் வாசல் வழியாய்ப் பிரவேசியுங்கள்" என்று திருவுளமாகிறான். தாங்கள் வீட்டின் மேலால் ஏறிவந்தீர்கள். இன்னும் "பிறருடைய வீடுகளில் அவர்களுடைய உத்திரவில்லாமலும் அவர்கள்மேல் சலாம் சொல்லாமலும் நீங்கள் பிரவேசிக்கவேண்டாம்" என்று திருவுளமாகிறான். தாங்கள் உத்திரவில்லாமலும் சலாம் சொல்லாமலும் வந்தீர்கள்" என்று சொன்னான். இதைக் கேட்ட உமர் றழியல்லாகு அன்கு அவனைப் பார்த்து "நான் உன்னை மன்னித்தால் நீ இனிமேல் இந்தப் பாவத்தைச் செய்யாதபடி தவ்பா செய்வாயா?" என்று கேட்டார்கள். அதற்கவன் "அரசே! அப்படியே செய்வேன். இனிமேல் ஒருபோதும் இந்த வேலையினிடம் நெருங்கேன்" என்றான். பின்பு அவனை மன்னித்துவிட்டார்கள். அவன் தவ்பாச் செய்து மீண்டான். "இன்னும் யாராவதொருவன் தான் கூடவிருந்தால் ஜனங்கள் பேசாததும் தானில்லாதபோது அவர்கள் பேசுகிறதுமான ஒருபேச்சை ஒன்றியிருந்து கேட்பானாகில் கியாமத்துநாளில் ஈயத்தை உருக்கி அவன் காதில் ஊற்றுவார்கள்" என்று றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள்.

பதின்மூன்றாவது ஹக்கு:—ஜனங்கள் சம்சயப்படும்படியான நடப்பைவிட்டும் தூரமாயிருப்பதாம். ஏனென்றால், முஸ்லிம்கள் இவன்மேல் கெட்ட எண்ணங்கொள்ளாமலும் இவனைப்பற்றிப் புறம்பேசாமலுமிருக்கும்படி, அவர்களுடைய மனதையும் நாவையும் இவன் காத்தவனென்றாவதற்கேயாம். அன்றியும் எதுவொன்று வேறொரு பாவத்துக்குக் காரணமாகுமோ அதுவும் அந்தப் பாவத்திற் சேர்ந்ததாகும். இன்னும் "தன் தாய் தந்தையரைத் திட்டுகிறவன் எப்படியாகுவான்?" என்று றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் வினவ,

அஸ்ஹாபுகள் "யாரசூலல்லா! அப்படி எவன் திட்டுவான்?" என்றார்கள். அதற்கு நாயகமவர்கள் "யாராவதொருவன் மற்றொருவனுடைய தாய்தந்தையரைத் திட்டினால் அப்போது அவனும் இவனுடைய தாய் தந்தையரைத் திட்டுவான். அது இவனே திட்டினதென்றாகும்" என்று திருவுளமானார்கள். இன்னும் "ஒருவன் சம்சயமான இடத்தில் உட்காருவானாகில் அவன்மேல் கெட்ட எண்ணங்கொள்ளுகிற மற்றொருவனை நிந்திப்பது அவனுக்குக் கூடாது" என்று உமர் றழியல்லாகு அன்கு சொல்லுகிறார்கள். றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் ஒருதரம் றமழான்மாதம் கடைசியில் பள்ளிவாசலில் ஸபிய்யா றழியல்லாகு அன்காவுடன் பேசிக்கொண்டிருந்தபோது இரண்டு பேர் அந்தவழியாய்ச் சென்றார்கள். நாயகமவர்கள் அவ்விருவரையும் அழைத்து, ஸபிய்யா றழியல்லாகு அன்காவைச் சுட்டிக்காட்டி, "இவர் என் மனைவியர்" என்றார்கள். அப்போது ஸபிய்யா றழியல்லாகு அன்கா நாயகமவர்களை நோக்கி, "யாரசூலல்லா! எவர்மேலில் கெட்ட எண்ணங்கொண்டாலும் தங்கள்பேரில் ஒருவரும் கெட்ட எண்ணங் கொள்ளமாட்டார்கள்" என்றனர். அதற்கு நாயகமவர்கள் "நரம்புகளில் உதிரம் செல்லுவதுபோல் ஷைத்தானானவன் மனிதர்களுடைய உடம்பில் நடக்கிறான்" என்று திருவுளமானார்கள். ஒருமனிதர் வழியில் ஒருபெண்பிள்ளையுடன் பேசிக்கொண்டிருக்கையில் உமர் றழியல்லாகு அன்கு அவர்கள் கண்டு அவரைச் சவுக்கால் அடித்தார்கள். அப்போதவர் "ஓய் உமரே! இவள் என் மனைவி" என்றனர். அதற்கு உமர் றழியல்லாகு அன்கு "நீயேன் ஒருவருமில்லாத ஓரிடத்திலிருந்து பேசக் கூடாது?" என்று அவருக்குச் சொன்னார்கள்.

பதினாலாவது ஹக்கு:—யாராவதொருவன் ஏதோ மேன்மையான அந்தஸ்தையும் அதிகாரத்தையும் அடைந்திருந்தால் அவனிடத்தில் ஒருவனுக்காகச் சிபாரிசு செய்யப் பின்வாங்காமலிருப்பதாம். றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் அஸ்ஹாபுகளுக்குச் சொன்னதாவது:—"நீங்கள் உங்கள் ஹாஜத்துகளை என்னிடம் கேளுங்கள். நான் கொடுக்கச் சித்தமாயிருக்கிறேன். ஆயினும், உங்களில் யாராவது சிபாரிசு செய்யவேண்டுமென்றும், அவர்கள் அதற்கு கூலியைப் பெற வேண்டுமென்றும் எதிர்பார்க்கிறேன். ஆதலால் நீங்கள் சவாபு பெறுவதற்காகச் சிபாரிசு செய்யுங்கள்" என்பதே. இன்னும் "எந்தச் சதகாவும் நாவின் சதகாவுக்குமேல் விசேஷமுள்ளதல்ல" என்று நாயகமவர்கள் திருவுளமானபோது, "நாவின் சதகாவாவது என்ன?" என்று அஸ்ஹாபுகள் கேட்டார்கள். அதற்கு "ஒருவருடைய உயிரை மீட்ப



தற்காக அல்லது ஒருவருக்கு யாதொரு பிரயோசனத்தை யுண்டாக்குவதற்காக, அல்லது ஒருவரை யாதொரு துன்பத்திலிருந்து நீக்குவதற்காகச் சிபாரிசு செய்வதே நாவின் சதகா" என்று நாயகமவர்கள் திருவுளமானார்கள்.

பதினைந்தாவது ஹக்கு:—காயிபாயிருக்கிற ஒரு முஸ்லிமை ஒருவன் வாயில்வந்தபடி பேசுகிறான் என்றாவது, அல்லது அவனுடைய பொருளை எடுத்துக்கொள்ளப் பார்க்கிறானென்றாவது கேள்விப்பட்டால் அதற்கு ஜவாபுசொல்வதில் தானே அந்த காயிபுக்கு நாயிபாகுவதும் அக்கிரமம் செய்ய ஒட்டாதபடி அவனைத் தடைசெய்வதுமாம். "ஒருமுஸ்லிமைக் குறித்து நிந்தனையாய்ப் பேசி அவன் மானத்தைக் குலைக்கிற ஓர் இடத்தில் அவனுக்கு உதவிசெய்கிற எந்த முஸ்லிமுக்கும் அவன் முக்கியமாய் ஹாஜத்தாயிருக்கிற ஓர் இடத்தில் அல்லாகு தஆலா அவனுக்கு உதவிசெய்யவே செய்வான்" என்றும்; "ஒரு முஸ்லிமை மானக்குறைவு செய்கிற ஓர் இடத்தில் அவனுக்கு உதவிசெய்யாத எந்த முஸ்லிமும் தனக்கு உதவி வேண்டுமென்று அவன் ஆசிக்கிற இடத்தில் அல்லாகுதஆலா அவனைப் பாராட்டாமல் விட்டேவிடுவான்" என்றும் றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள்.

பதினாறாவது ஹக்கு:—ஒரு துஷ்டமனிதனுடைய சகவாசத்தில் சிக்கிக்கொண்டால் அவனைவிட்டு நீங்குகிறவரையில் அவனோடு சமாதானமாயிருப்பதும் நேரேயே அவனைக் கடிந்துகொள்ளாமலிருப்பதுமாம். "நன்மையினால் தீமையை அகற்றுவார்கள்" என்று அல்லாகு தஆலா திருவுளமாயிருக்கிற இந்த ஆயத்துக்கு "சலாமினாலும் சமாதானத்தினாலும் தீமைக்குப் பிரதி செய்யுங்களென்பதே பொருள்" என்று இப்னு அப்பாஸ் றழியல்லாகு அன்கு சொல்லுகிறார்கள். ஆயிஷா றழியல்லாகு அன்கா சொல்லுகிறதாவது:—ஒருமனிதன் றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுடைய சமுகத்துக்கு வர உத்திரவு கேட்டான். இதை அவர்களுக்கு அறிவித்ததற்கு, "அவனை வரச் சொல்லுங்கள்" என்றும், "அவன் தன்னுடைய கவுமுகளில் துஷ்ட மனிதன்" என்றும் நாயகமவர்கள் சொன்னார்கள். அவன் வந்தபோது அவனை எவ்வளவு உபசரித்தார்களென்றால் தங்களிடத்தில் அவனுக்கு ஏதோ மேம்பாடான பதவியிருக்கிறதென்று நான் எண்ணிக்கொண்டேன். அவன் வெளியே போனபிறகு நான் நாயகமவர்களிடத்தில் "யாரசூலல்லா! தாங்கள் அவனைத் துஷ்டமனிதனென்று சொன்னீர்களே, அவனை அவ்வளவாய் உபசரித்தீர்களே" என்று சொன்னேன்.

அதற்கு நாயகமவர்கள் "ஆயிஷாவே! துஷ்டத்தனத்துக்காகப் பயந்து எந்த மனிதனை உபசரிக்கிறார்களோ அந்த மனிதனே கியாமத்துநாளில் அல்லாகுத்தஆலாவிடத்தில் மிகத் துஷ்டன்" என்று திருவுளமானார்கள்" என்பதே. அன்றியும், "கோள் பேசுகிறவர்களுடைய நாவைவிட்டும் எதனால் நீ உன்மானத்தைக் காத்துக்கொள்ளுகிறாயோ அது சதகாவிற் சேர்ந்ததாகும்" என்று ஹதீதில் வந்திருக்கிறது. இன்னும் "அநேகம்பேர் இருக்கிறார்கள்" என்றும், "அவர்களுடைய முகத்தில் நாம் சிரிக்கிறோம்" என்றும், "ஆனால் நம்முடைய மனமானது அவர்களை லஃனத்து செய்கிறது" என்றும் அபுத்தர்தா றலியல்லாகு அன்கு சொல்லுகிறார்கள்.

பதினேழாவது ஹக்கு:—ஏழை ஜனங்களோடு சகவாசித்து அவர்களை நேசிப்பதும், பொன்னவர்களோடு சகவாசிக்காமல் பேணுவதுமாம். "செத்த சவங்களோடு நீங்கள் சகவாசம் செய்யவேண்டாம்" என்று றசூல் சல்லல்லாகு அலைஹிவசல்லமவர்கள் திருவுளமானார்கள். அப்போது அவர்களாரென்று கேட்கப்பட்டது. அதற்குச் "சீமான்கள்" என்று நாயகமவர்கள் பதில் கூறினார்கள். ஈஸா அலைஹிஸ்ஸலா மவர்கள் தங்கள் இராச்சியத்தில் எங்கேயாவது ஒரு மிஸ்கீனைக் கண்டால் அவனுடன் உட்கார்ந்து "மிஸ்கீனோடு மிஸ்கீன் இருக்கிறான்" என்று சொல்லுவார்கள். ஈஸா அலைஹிஸ்ஸலாமவர்கள் யாமிஸ்கீன் என்று அழைக்கப்படுவதைக் கேட்பதற்குமேல் அதிகமாய் வேறெந்தப் பெயரையும் அவர்கள் உவப்பு வைக்கவில்லை. இன்னும் றசூல் சல்லல்லாகு அலைஹிவசல்லமவர்கள் அல்லாகுத்தஆலாவினிடம் "ஓ என்னுடைய நாயனே! நான் ஜீவித்திருக்கிறவரையில் என்னை மிஸ்கீனாயிருக்கச்செய், என்னை மவுத்தாக்கும்போது மிஸ்கீனாக மவுத்தாக்கு, என்னை எழுப்பும்போது மிஸ்கீன்களுடன் எழுப்பு" என்று துஆ கேட்டிருக்கிறார்கள். மூஸா அலைஹிஸ்ஸலாம் அல்லாகுத்தஆலாவினிடம் "என்னுடைய நாயனே! நான் உன்னை எங்கே தேடவேண்டும்?" என்று கேட்டதற்கு "மனமுடைந்த மிஸ்கீன்களிடம் தேடிப்" என்று அல்லாகுத்தஆலா திருவுளமானான்.

பதினெட்டாவது ஹக்கு:—முஸ்லிம்களுடைய மனதைச் சந்தோஷப்படுத்துவதற்கும் அவர்களுடைய ஹாஜத்துகளை நிறைவேற்றுவதற்கும் முயற்சிப்பதாம். ஏனென்றால், "ஒருவன் தன் சகோதரனுடைய ஹாஜத்தை நிறைவேற்றுவானாகில் அவன் தன் வயது முழுவதும் அல்லாகுத்தஆலாவை வணங்கியவனைப் போலாகுவான்" என்றும், "ஒருவன் ஒரு மூமினுடைய கண்ணை வெளிச்சமாக்கிவைத்தால்



கியாமத்துநாளில் அல்லாகுத்தஆலா அவன் கண்ணை வெளிச்சமாக்கி வைப்பான்" என்றும், "ஒருவன் ஒரு முஸ்லிமுடைய ஹாஜத்தை நிறைவேற்றும்பொருட்டுப் பகலிலாவது இரவிலாவது ஒரு ஸாஅத்து நேரம் நடப்பானாகில் அந்த ஹாஜத்து நிறைவேறினாலும் நிறைவேறாமற்போனாலும் (அந்தக் கொஞ்சநேரத்தின் நடையானது) இரண்டுமாதம் பள்ளிவாசலில் இஃதிகாபு இருப்பதிலும் மிக நன்மையுள்ளதாயிருக்கிறது" என்றும், "ஒருவன் சஞ்சலப்பட்டவனுக்குச் சந்தோஷத்தை யுண்டாக்குவானாகில் அல்லது கொடுமையிலகப்பட்ட ஒருவனை அக்கொடுமையினின்று விடுவிப்பானாகில் அல்லாகுத்தஆலா அவனுக்கு எழுபத்துமூன்று மன்னிப்புகளை அருளுவான்" என்றும் றசூல் சல்லல்லாகு அலைஹிவசல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். "இன்னும் உங்களுடைய சகோதரனுக்கு உதவிசெய்யுங்கள்" என்றும், "அவன் கொடுமைசெய்கிறவனாயிருந்தாலும் கொடுமையிலகப்பட்டவனாயிருந்தாலும் சரியே" என்றும் றசூல் சல்லல்லாகு அலைஹிவசல்லமவர்கள் திருவுளமானார்கள். அப்போது "கொடுமைசெய்கிறவனுக்கு நாங்கள் எப்படி உதவி செய்வோம்?" என்று அஸ்ஹாபுகள் கேட்டதற்கு, "கொடுமை செய்வதிலிருந்து அவனை நீக்குவதே அவனுக்கு உதவியாகும்" என்று திருவுளமானார்கள். இன்னும் "ஒரு முஸ்லிமுடைய மனதுக்குச் சந்தோஷமுண்டாக்குவதை உவப்பதற்குமேல் வேறெந்த வணக்கத்தையும் அல்லாகுத்தஆலா உவப்பு வைக்கிறதில்லை" என்றும், "இரண்டு குணங்களிருக்கின்றன" என்றும், "அவைகளுக்குமேல் கெட்டபாவம் ஒன்றுமேயில்லை" என்றும், "அக்குணங்களில் ஒன்று ஷிர்க்குசெய்வதும், மற்றொன்று ஜனங்களுக்கு வருத்தங் கொடுப்பதுமாயிருக்கும்" என்றும், "இன்னு மிரண்டு குணங்களிருக்கின்றன" என்றும், "அவைகளுக்குமேல் நல்ல இபாதத்து ஒன்றுமேயில்லை" என்றும், "அவற்றுள் ஒன்று ஈமான் கொள்வதும், மற்றொன்று ஜனங்களுக்குச் சந்தோஷத்தை யுண்டாக்கப் பார்ப்பதுமாயிருக்கும்" என்றும், "எவனுக்கு ஒரு முஸ்லிமைப்பற்றிய விசனமில்லையோ அவன் நம்மிற் சேர்ந்தவனல்ல" என்றும் றசூல் சல்லல்லாகு அலைஹிவசல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். புலைல் றஹிமகுல்லா அவர்கள் ஒருமுறை அழுதுகொண்டிருந்ததை ஜனங்கள் கண்டு "ஏன் அழுகிறீர்கள்?" என்று கேட்டார்கள். அதற்கவர்கள் சொன்னதாவது:—"என்மேல் கொடுமை செய்திருக்கிற நிர்ப்பாக்கியரான சில முஸ்லிம்கள்மீது விசனப்பட்டு அழுகிறேன். ஏனென்றால், நீங்கள் ஏன் கொடுமை செய்தீர்கள் என்று கியாமத்துநாளில் அவர்களைக் கேட்கும்போது அவர்கள் ஒரு சமாதானமும் சொல்ல வகை

யில்லாமல் வெட்கமடைவார்கள் என்றேபாம்" என்பதே. இன்னும் "யாராவதொருவன் நாள்தோறும் மூன்றுதரம் அல்லாஹும்ம அஸ்லிஹ் உம்மத்த முஹம்மதின் அல்லாஹும்மர்ஹம் உம்மத்த முஹம்மதின் அல்லாஹும்ம பர்ரிஜ் அன் உம்மத்தி முஹம்மதின் சல்லல்லாஹு அலைஹி வஆலிஹி வஅஸ்ஹாபிஹி வஸல்லம் என்று ஓதுவானாகில் அப்தாலுகளுடைய கூட்டத்தில் அவன் பெயர் எழுதப்படும்" என்று மஃரூபுல்கர்கீ றஹிமஹுல்லா அவர்கள் சொல்லுகிறார்கள்.

பத்தொன்பதாவது ஹக்கு:—ஒரு முஸ்லிமிடம் போனால் அவனோடு பேசுவதற்கு முன்னே சலாமைக்கொண்டு தொடங்குவதும், கையைப்பிடித்து முஸாபஹா செய்வதுமாம். "ஒருவன் சலாமுக்கு முன்னே பேசுவானாகில் முதலில் அவன் சலாம் சொல்லுகிறவரையில் நீங்கள் அவனிடம் போகவேண்டாம்" என்று றசூல் சல்லல்லாகு அலைஹிவசல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். ஒருவர் சலாம் சொல்லாமல் றசூல் சல்லல்லாகு அலைஹிவசல்லமவர்களிடம் போனார். நாயகமவர்கள் அவரை வெளியே போகும்படிக்கும் மீண்டும் வந்து சலாம் சொல்லும்படிக்கும் உத்திரவுசெய்தார்கள். அனசுறலியல்லாகு அன்கு சொல்லுகிறதாவது:—"நான் எட்டுவருஷம் றசூல் சல்லல்லாகு அலைஹிவசல்லமவர்களுக்குப் பணிவிடைசெய்து வந்தேன். நாயகமவர்கள் என்னை நோக்கி "அனஸே! நீ நன்றாய்ச் சுத்திசெய். அப்போது உன் வயது நீடிக்கும்" என்றும், "நீ எவனிடம்போனாலும் சலாம்சொல், அப்போது உனக்கு நன்மைகள் அதிகரிக்கும்" என்றும், "உன் வீட்டுக்குள் போகும்போது உன் வீட்டார்பேரில் சலாம்சொல், அப்போது உன் வீட்டில் நன்மை பெருகும்" என்றும் திருவுளமானார்கள்" என்பதே. ஒருவர் றசூல்சல்லல்லாகு அலைஹிவசல்லமவர்களுடைய சமுகத்துக்கு வந்து "ஸலாமுன் அலைக்கும்" என்று சொன்னார். அதற்கு நாயகமவர்கள் "அவருக்குப் பத்து நன்மைகள் எழுதப்படும்" என்றார்கள். பிறகு ஒருவர்வந்து "ஸலாமுன் அலைக்கும் வறஹ்மத்துல்லாஹி" என்று சொன்னார். "அவருக்கு இருபது நன்மைகள் எழுதப்படும்" என்றார்கள். பிறிதொருவர் வந்து "ஸலாமுன் அலைக்கும் வறஹ்மத்துல்லாஹி வபறகாத்துஹு" என்று சொன்னார். அவருக்கு "முப்பது நன்மைகள் எழுதப்படும்" என்றார்கள். இன்னும் "நீங்கள் வீட்டுக்குள் போகும்போதும் வெளியே வரும்போதும் சலாம் சொல்லுங்கள்" என்றும், "முந்தின சலாமும் பிந்தின சலாமும் இரண்டும் வரிசையில் சமமாயிருக்கிறது" என்றும், "இரண்டு முஃமின்கள் ஒருவருக்கொருவர் கையைப்பிடித்து முஸாபஹா செய்வார்களாகில் அவர்களிருவரு



க்கும் பொதுவில் எழுபது நன்மைகள் பங்கிடப்படும்" என்றும், "அவர்களில் எவன் அதிக நகைமுகமாயும் அதிக முகமலர்ச்சியோடுமிருப்பானோ அவனுக்கு அறுபத்தொன்பது நன்மைகள் கொடுக்கப்படும்" என்றும், "இன்னுமிரண்டு முஸ்லிம்கள் சந்தித்து ஒருவருக்கொருவர் சலாம் சொல்லுவார்களாகில் அவர்களுக்குப் பொதுவில் நூறு நன்மைகள் பங்கிடப்படும்" என்றும், "தொண்ணூறு நன்மைகள் சலாமைத் தொடங்கினவனுக்கும், பத்துநன்மைகள் ஜவாபு சொன்னவனுக்கும் கொடுக்கப்படும்" என்றும் றசூல் சல்லல்லாகு அலைஹிவசல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். மேலான பெரியோர்களின் கையை முத்தமிடுவது சுன்னத்தாயிருக்கிறது. அபூஉபைதத்துப்னுல் ஜர்ராஹு றலியல்லாகு அன்கு அவர்கள் அமீறுல் முஃமினீன் உமர் றலியல்லாகு அன்கு அவர்களுடைய கையை முத்தமிட்டிருக்கிறார்கள். அனசுறலியல்லாகு அன்கு சொல்லுகிறதாவது:—"நாங்கள் ஒருவரையொருவர் சந்திக்கும்போது குனியலாமா?" என்று றசூல் சல்லல்லாகு அலைஹிவசல்லமவர்களிடம் கேட்டேன். நாயகமவர்கள் "அது சரியல்ல" என்றார்கள். "கையை முத்தமிடலாமா?" என்று கேட்டேன். அதற்கும் "சரியல்ல" என்றார்கள். "கையைப் பிடித்து முஸாபஹா செய்யலாமா?" என்று கேட்டேன். அதற்கு "ஆம் செய்யலாம்" என்றார்கள்" என்பதே. ஆனால் சபரிலிருந்து திரும்பி வந்தால் முகத்தின்மேல் முத்தமிடுவதும் கட்டித்தழுவி ஆலிங்கனம் செய்வதும் சுன்னத்தாயிருக்கும். எழுந்து நிற்பதை றசூல் சல்லல்லாகு அலைஹிவசல்லமவர்கள் பிரியப்படுவதில்லை. இன்னும் அனசுறலியல்லாகு அன்கு சொல்லுகிறதாவது:—றசூல் சல்லல்லாகு அலைஹிவசல்லமவர்களைக் காட்டிலும் எங்களுக்குப் பிரியமானவர்கள் வேறே யாருமிருந்ததில்லை. அப்படியிருந்தும் நாங்கள் அவர்களுக்கு எழுந்து நிற்கிறதில்லை. ஏனென்றால், அது அவர்களுக்குப் பொருத்தமில்லையென்று நாங்கள் அறிந்திருந்தோமாம்" என்பதே. பின்னால் மரியாதைக்காக எழுந்து நிற்பது வழக்கமாய்ப் போயிருக்கிற இடத்தில் ஒருவன் அப்படிச் செய்வானாகில் பாதகமில்லை. என்றாலும், ஒருவனுக்கு முன்னால் கைகட்டி நிற்பது விலக்காயிருக்கிறது. றசூல் சல்லல்லாகு அலைஹிவசல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறதாவது:—"தான் உட்கார்ந்திருக்கத் தனக்கு முன்னால் ஜனங்கள் நிற்கவேண்டுமென்று ஆசைப்படுகிறவன் எவனோ அவனுக்கு நரகத்தில் நின்றும் நீயுன் இருக்கையைத் தெரிந்தெடுத்துக் கொள் என்று சொல்" என்பதே.

இருபதாவது ஹக்கு:—ஒருவனுக்குத் தும்மல் வந்தால் அவன் அல்ஹம்துலில்லாஹி என்று சொல்லியபின் [illegible]

யல்லாகு அன்கு சொல்லுகிறதாவது:—"ஒருவனுக்குத் தும்மல்வந்தால் அவன் அல்ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமீன் என்றும், அதைக் கேட்டவன் யர்ஹமுக்கல்லாஹ்" என்றும், "அதற்குத் தும்மினவன் "யக்பிருல்லாஹு லீ வலக்கும்" என்றும் சொல்லும்படி ரசூல் கரீமவர்கள் எங்களுக்குக் கற்பித்திருப்பதுமன்றி, தும்மினவன் அல்ஹம்து லில்லாஹி என்று சொல்லாமற்போனால் யர்ஹமுக்கல்லாவுக்கு அவன் பாத்தியஸ்தனல்லன் என்றும் திருவுளமா யிருக்கிறார்கள்" என்பதே. ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களுக்குத் தும்மல் வந்தால் சப்தத்தைத் தாழ்த்துகிறவர்களாயும், முகத்தின்மேல் கையை வைத்துக்கொள்கிறவர்களாயு மிருந்தார்கள். "மலபாதைக்கிருக்கும்போது ஒருவனுக்குத் தும்மல் வந்தால் அவன் தன் மனதில் அல்ஹம்துலில்லாஹி என்று சொல்லவேண்டும். நாவினாற் சொன்னாலும் பாதகமில்லை" என்று இபுறாஹீமுன்னகயிறஹிமகுல்லா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். கஃபுல் அஹ்பார் றலியல்லாகு அன்கு சொல்லுகிறார்கள். அதாவது:—"மூஸா அலைகிஸ்ஸலாம் அல்லாகுதஆலாவினிடம், "யாறப்பு! நீ இருப்பது சமீபத்திலா? தூரத்திலா? சமீபத்திலிருந்தால் நான் உன்னிடம் மெதுவாய்ப் பேசுவேன். தூரத்திலிருந்தால் சப்தமிட்டுப் பேசுவேன்" என்று சொன்னார்கள். அதற்கு அல்லாகு தஆலா "எவன் என்னை ஞாபகம் செய்கிறானோ அவனிடத்தில் நான் இருப்பேன்" என்று திருவுளமானான். அப்போது மூஸா அலைகிஸ்ஸலாம் "யாறப்பு! எங்களுக்கு ஜனாபத்து, மலஜலாதிகள் போன்ற பலஹாலுகளிருக்கின்றனவே; அந்த ஹாலுகளிலும் உன்னை ஞாபித்துக் களப்படுத்தலாமா?" என்று கேட்டார்கள். அதற்கு அல்லாகு தஆலா "நீ எந்த ஹாலில் இருந்தாலும் ஐயமில்லாமல் என்னை ஞாபகம் செய்" என்று திருவுளமானான்" என்பதேயாம்.

இருபத்தோன்றாவது ஹக்கு:—தனக்கு அறிமுகமான ஒருவன் வியாதிபட்டிருந்தால் அவனை விசாரிப்பதாம். தனக்கு அவன் சிநேகனில்லாமற்போனாலும் சரியே. யாராவதொருவன் "வியாதியஸ்தனை விசாரிப்பானாகில் அவன் சொர்க்கத்தின் நடுவே இருக்கிறான்" என்றும், "விசாரித் திரும்புவானாகில் அன்றிரவு வரையில் அவன்மீது சலவாத்து சொல்லும்படி எழுபதினாயிரம் மலக்குகள் அவன்மேல் சாட்டப்படுகிறார்கள்" என்றும் ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். பின்னர் வியாதியஸ்தனை விசாரிப்பதில் அறிந்திருக்கவேண்டிய சுன்னத்து யாதெனில், அவனுடைய கையின் மேலாவது நெற்றியின் மேலாவது கையை வைப்பதும், எப்



படியிருக்கிறதென்று அவனைக் கேட்பதும், பிஸ்மில்லாகிர் ரஹ்மானிர் ரகீம் உஈதுக்க பில்லாஹில் அஹதிஸ்ஸமதில்லதீ லம்யலித் வலம்யூலத் வலம்யகுன் லஹு குபுவன் அஹது மின்ஷர்ரி மாதஜிது என்றோதுவதுமேயாம். உதுமான் றலியல்லாகு அன்கு தாங்கள் வியாதிப்பட்டிருந்ததாயும், அப்போது ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் வந்து இந்தத் துஆவைப் பலமுறை ஓதினதாயும் சொல்லுகிறார்கள். இனி வியாதிப்பட்டவன் உஈது பிஇஸ்ஸத்தில்லாஹி வகுத்ரத்திஹி மின்ஷர்ரி மாஅஜிது என்று சொல்வதும், விசாரிக்கிறவர்களிடம் வியாதியைப் பற்றி முறையிடாம லிருப்பதும் சுன்னத்தாயிருக்கும். ஏனென்றால், அடியான் வியாதிப்பட்டிருக்கும்போது அவனை விசாரிக்க வருகிறவர்களிடம் அவன் ஷுக்ரு செய்கிறானா? அல்லது முறையிடுகிறானா? என்று பார்க்கும்படி இரண்டு மலக்குகளை அல்லாகுதஆலா அவன்மேல் சாட்டுகிறான் என்றும், உனக்கு எப்படியிருக்கிறதென்று கேட்கையில் சுகமாயிருக்கிறது அல்ஹம்துலில்லாஹி என்று சொல்லுவானாகில் அப்போது அல்லாகுதஆலா இந்த என் அடியானை நான் எடுத்துக்கொள்ளுகிற பக்ஷம் என தன்பினால் எடுத்து இவனைச் சொர்க்கத்தில் சேர்ப்பதும், இவனுக்கு ஆரோக்கியத்தைக் கொடுக்கிற பக்ஷம் இவன் வியாதிப்பட்டிருந்த நிமித்தமாக இவனுடைய பாவங்களைப் பொறுத்து முன்னிருந்ததைக் காட்டிலும் இவனுக்கு நல்ல சதை, இரத்தங்களைக் கொடுப்பதும் எனக்குப் பொருப்பாய் விட்டதென்று சொல்லுகிறான் என்றும் ஹதீதில் வந்திருக்கிறது. அலிறலியல்லாகு அன்கு சொல்லுகிறதாவது:—ஒருவனுக்கு வயிற்றில் வலியிருந்தால் அவன் தன் பெண்சாதியுடைய மஹரில் தனக்கு ஏதாவது கொடுக்கச் சொல்லி அதற்குத் தேன் வாங்கி அதை மழைத்தண்ணீருடன் கலந்து குடிப்பானாகில் ஆரோக்கியத்தை அடைவான். ஏனென்றால் அல்லாகு தஆலா மழைத்தண்ணீருக்கு முபாரக்கு என்றும், தேனுக்கு ஷிபா என்றும், ஸ்திரீகள் தத்தம் செய்துவிட்ட மஹருக்கு ஹனிய்யுன், மரிய்யுன் என்றும் சொல்லுகின்றான். (இந்தச் சொற்களுக்கு முறையே மங்களம், சுகம், அமுர்தம் எனப் பொருள்படுகின்றது) ஆகவே, எப்போது இம்மூன்றும் ஒன்றாகச் சேர்ந்தனவோ அப்போது அகத்தியம் அவன் ஆரோக்கியத்தை யடைவான்" என்பதே. மொத்தத்தில் வியாதியஸ்தன் முறையிடாமலிருப்பதும், பதறாமல் சபுறு செய்வதும், இந்த வியாதியானது தன் பாவங்களுக்குக் கப்பாராவா யிருக்கலாமென்று ஆதரவு வைப்பதும், யாதொரு மருந்தைத் தின்றால் அந்த மருந்தின்மேல் ஆதரவுவைக்காமல் அம்மருந்தைப் படைத்த அல்லாகு தஆலாவின்மேல் ஆதரவு வைப்பதும், இவையெல்லாம் அவன் அறாஷ

டிக்கவேண்டிய அதபுகளாயிருக்கின்றன. வியாதியஸ்தனை விசாரிக்கப்போகிறவன் அவனிடத்தில் அதிக நேரமிருக்கான். அதிகமாய்ப்பேசான். சவுக்கியத்துக்காக துஆ செய்வான். அவன் வியாதிப்பட்டிருப்பதினால் விசனமுண்டாயிருப்பவன்போல் தன்னைக் காட்டுவான். அவன் வீட்டு அறைகளையும் சுவர்களையும் நோக்காதபடி தன் கண்ணைப் போற்றுவான். போகும்போது அவன் வீட்டுத் தெருவாசலில் நின்று உத்தரவு கேட்பான். வாசற்படிக்கு நேராக நிற்காமல் ஒருபக்கமாய் நிற்பான். கதவை மெதுவாகத் தட்டுவான். ஓ குலாமே! என்று கூப்பிடுவான். யார்? என்று கேட்டால் நான் என்று ஜவாபு சொல்லான். ஓ குலாமே என்று கூப்பிடுவதற்குப் பதிலாய் சுப்ஹானல்லாஹி வல்ஹம்து லில்லாஹி என்று சொல்லுவான். யாதொரு கதவைத் தட்டுகிற ஒவ்வொருவனும் இதேவிதம் செய்யவேண்டும். இவை விசாரிக்கப்போகிறவர்கள் அனுஷ்டிக்கவேண்டிய அதபுகளாம்.

இருபத்திரண்டாவது ஹக்கு:—ஜனாஸாவுடன் பின்செல்வதாம். யாராவதொருவன் ஜனாஸாவுடன் செல்லுவானாகில் அவனுக்கு ஒரு கீராத்து கூலியாய்க் கிடைக்கும்" என்றும், "அடக்கம் செய்கிறவரையில் நின்றிருப்பானாகில் அவனுக்கு இரண்டு கீராத்துகள் கிடைக்கும்" என்றும், ஒவ்வொரு கீராத்தும் உஹது மலைக்குச் சரியாயிருக்கும்" என்றும் ரசூல் சல்லல்லாகு அலைஹிவசல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். இனி ஜனாஸாவுடன் செல்வதற்குள்ள அதபுகளாவன:—பேசாமலிருப்பதும், சிரிக்காமலிருப்பதும், உற்றுணர்ந்து நற்புத்தி பெறுவதில் பராக்காகுவதும், தன்னுடைய மவுத்தைத் ஞாபகம் செய்வதுமேயாம். அஃமஷ் ரலியல்லாகு அன்கு "நான் ஒரு ஜனாஸாவுடன் போனேன்" என்றும், "அதனுடன் செல்லுகிறவர்களெல்லாரும் ஒரு வஸாரக்காணை ஒருவர் துக்கக்குறி புணர்ந்தவர்களாயிருந்தபடியால் யாரிடத்தில் தஃஸியத்து செய்வதென்று எனக்குத் தெரியவில்லை" என்றும் சொல்லுகிறார்கள். ஒரு மய்யித்தின்மேல் துக்கப்பட்டுக்கொண்டிருந்த சில ஜனங்களை ஒரு பெரியோர் பார்த்து "இறந்தவன் மவுத்தைக் கண்டு நிலைகுலைந்த திடுக்கத்திலிருக்கும், மவுத்தின்போதடைந்த கஷ்டத்திலிருக்கும், முடிவைப்பற்றிய அச்சத்திலிருக்கும் ஆக இந்த மூன்று திகில்களிலிருக்கும் நீங்கிவிட்டானானபடியால் நீங்கள் (அவனைப்பற்றி விசனப்படாமல்) உங்களைப்பற்றியே விசனப்படுங்கள்" என்று சொன்னார்கள். இன்னும் "ஜனாஸாவுடன் அவனுடைய பந்துக்களும் பொருளும் அமலும் ஆக மூன்று வஸ்துக்களே போகின்றன" என்றும், "பந்துக்களும் பொருளும் திரும்பிவிடுகின்றன.



அமல் மாத்திரம் அவனுடன் தங்கிவிடுகிறது" என்றும் ரசூல் சல்லல்லாகு அலைஹிவசல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள்.

இருபத்துமூன்றாவது ஹக்கு:—கபுராளிகளை ஜியாரத்து செய்யப்போவதும், அவர்களுக்காக துஆ செய்வதுமாம். ஜியாரத்து செய்கிறவன் இந்தக்கபுராளிகள் முந்திப்போய்விட்டார்களென்றும், நானும் சீக்கிரத்தில் போவேன் என்றும், என் தலமும் இவர்களுடைய தலத்தைப்போல் ஆகுமென்றும் நினைத்து உற்றுணர்ந்து நஸீஹத்தையடைவான். யாராவதொருவன் கபுரை அதிகமாய் ஞாபகம் செய்வானாகில் அவன் தன் கபுரை சொர்க்கத்துப் பூங்காவுகளில் ஒன்றாகக் காண்பான்" என்றும், "இன்னும் யாராவதொருவன் கபுரை மறந்திருப்பானாகில் அவன் தன் கபுரை நரகத்துப் பொந்துகளில் ஒன்றாகக் காண்பான்" என்றும் சுபியானு ஸவ்ரீ றஹ்மத்துல்லாஹி அலைஹியவர்கள் சொல்லுகிறார்கள். தாபியீன்களில் ஒரு பெரியோரும் தூஸ்பட்டணத்தில் கபுரடக்கம் செய்யப்பட்டிருப்பவருமான றபீஃ புனுகைஸம் றஹ்மத்துல்லாஹி அலைஹியவர்கள் தங்கள் வீட்டில் ஒரு கபுரு தோண்டி வைத்திருந்தார்கள். எப்போதாவது தங்கள் மனதில் இயல்பாக யாதொரு மறதியைக் கண்டால் அந்த கபுரில் படுத்துக்கொஞ்சநேரமிருந்து "யாறப்பு! என்னைத் துன்யாவுக்கு மீள அனுப்பு. நான்போய் என்னுடைய குற்றங்களுக்கு ஈடுசெய்துகொள்ளுகிறேன்" என்று சொல்லுவார்கள். பின்பு அதை விட்டெழுந்து "ஓ றபீஃ! பத்திரம்!! துன்யாவுக்கு உன்னைத் திரும்ப அனுப்பியிருக்கிறது. இனித் திரும்ப அனுப்பாத ஒருமுறை வரும். அதற்கு முன்பாக நீ முயற்சித்துக்கொள்" என்று சொல்லுவார்கள். உமர் ரலியல்லாகு அன்கு சொல்லியதாவது:—ரசூல் சல்லல்லாகு அலைஹிவசல்லமவர்கள் ஒருமுறை கபுருஸ்தானுக்குப்போய் அங்கு ஒரு கபுருவிடம் உட்கார்ந்து அதிகமாய் அழுதார்கள். நான் அவர்களுடன் கிட்டேயிருந்தேனாதலால் "யாறசூலல்லா! தாங்கள் ஏன் அழுதீர்கள்?" என்று கேட்டேன். அதற்கு நாயகமவர்கள் "இது என் தாயாருடைய கபுராயிருக்கிறது" என்றும், இவர்களை ஜியாரத்து செய்யவும் இவர்களுக்குப் பிழைபொறுக்கத் தேடவும் நான் அல்லாகுதஆலாவுடைய சமூகத்தில் உத்தரவு கேட்டதற்கு துஆ செய்ய உத்தரவு கிடைக்காமல் ஜியாரத்து மாத்திரம் செய்துகொள்ள உத்தரவு கிடைத்தது" என்றும், "அதன்மேல் புத்திரவாஞ்சையானது என் மனதில் அடிஅடித்ததினால் அழுதேன்" என்றும் சொன்னார்கள்" என்பதே. இஸ்லாமுக்காக மாத்திரம் நேசம் வேண்டிய எல்லா ஹக்குகளின் விஸ்தீர்ப்பு இதுவேயாம்.

## அண்டைவீட்டாருடைய ஹக்குகளின் பயான்.

இதில் மேற்கூறி வந்தவைகளினும் அதிகமாய்ச் சில ஹக்குக ளிருக்கின்றன. றசூல் சல்லல்லாகு அலைஹிவசல்லமவர்கள் தங்கள் திருவாயினால் "அண்டை வீட்டார்களில் ஒருவனுக்கு ஒரே ஹக்கும் ஒருவனுக்கு இரண்டுஹக்குகளும் ஒருவனுக்கு மூன்றுஹக்குகளும் உண்டு" என்றும், "ஒரே ஹக்குள்ளவன் அண்டைவீட்டுக் காபிர்" என்றும், "இரண்டு ஹக்குகளுள்ளவன் அண்டைவீட்டு முஸ்லிம்" என்றும், "மூன்று ஹக்குகளுள்ளவன் அண்டைவீட்டுபந்து" என்றும் அருளிச் செய்திருக்கிறார்கள். இன்னும் "அண்டைவீட்டாருடைய ஹக்குகளைப் பற்றி ஜிப்ராயீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் எனக்கு வசிய்யத்து செய்து வந்ததினால் என் சொத்தில் அண்டை வீட்டுக்காரருக்குப் பாகமிருக்குமென்று நான் எண்ணினேன்" என்று றசூலுல்லாஹி சல்லல்லாகு அலைஹிவசல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும் "அல்லாவின் மீதும் ஆகிரத்தின் மீதும் ஈமான் கொண்டிருப்பவன் எவனோ அவனைத் தன் அண்டைவீட்டாருக்குச் சங்கை செய்யும்படிச் சொல்லுங்கள்" என்றும், "எவனுடைய தீங்கை விட்டும் அவனுடைய அண்டைவீட்டார் அச்சந்தீரவில்லையோ அவன் மூமினாகான்" என்றும், "கியாமத்து நாளில் முந்திய இரண்டு வழக்காளிகள் இரண்டு அண்டைவீட்டாராயிருப்பார்கள்" என்றும், "ஒருவன் தன் அண்டைவீட்டாருடைய நாயின் மேல் ஒரு கல்லை எறிவானாகில் அவன் அவரை வருத்தப்படுத்தினான்" என்றும் திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும் றசூல் சல்லல்லாகு அலைஹிவசல்லமவர்களிடத்தில் "இன்ன பெண்பிள்ளை பகலில் நோன்பு வைப்பவளாயும், இரவில் தொழுகிறவளாயுமிருக்கிறாள்" என்றும், "ஆனால் அண்டை வீட்டாரை வருத்தப்படுத்துகிறாள்" என்றும் சொன்னார்கள். அதற்கு நாயகமவர்கள் "அவளுக்கு நரகமே இடம்" என்று திருவுளமானார்கள். "நாற்பது வீடுகள் வரையில் அண்டை வீட்டாரும்" என்று நாயகமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும் "எதிரில் நாற்பது வீடுகளும், பின்புறம் நாற்பது வீடுகளும், வலது பாரிசத்தில் நாற்பது வீடுகளும், இடதுபாரிசத்தில் நாற்பது வீடுகளும் அண்டைவீட்டாரும்" என்று ஜுஹ்ரீ றஹிமகுல்லா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

இன்னுமறிந்துகொள்:—அண்டை வீட்டாருடைய ஹக்கென்பது அவர்களை வருத்தப்படுத்தாமலிருப்பது மாத்திரமல்ல. மேலும் அவர்களுக்கு நன்மைசெய்து வரவேண்டும். ஏனென்றால், கியாமத்து நாளில் ஒரு ஏழைமனிதன் தன் அண்டை வீட்டானாகிய செல்வ



பேரில் வழக்குச்செய்து "ஆண்டவனே! இவன் ஏன் எனக்கு உபகாரம் செய்யாமலும், என்மீது தன் வீட்டுக்கதவை அடைத்து மிருந்தானென்பதை இவனிடம் விசாரணை செய்யெனச் சொல்லுவான்" என்று ஹதீதில் வந்திருக்கிறது. பெரியோர்களில் ஒருவருக்கு எலிகளின் மிகைப்பினால் இம்சையாயிருந்தது. அதைப்பற்றி அவரிடத்தில் "நீர் ஏன் பூனை வளர்க்கிறதில்லை?" என்று கேட்டதற்கு, "பூனையின் அரவத்தினால் எலிகள் அண்டை வீட்டுக்குப் போய்விடும்" என்றும், அப்போது நான் எனக்குப் பிரியமில்லாததை அண்டை வீட்டாருக்குப் பொருந்தினவனாகுவேன் என்றும் பயப்படுகிறேன்" என்று சொன்னார். றசூல் சல்லல்லாகு அலைஹிவசல்லமவர்கள் தங்கள் திருவாயினால் "அண்டை வீட்டானுடைய ஹக்குகள் இன்னவென்பதை நீங்கள் அறிவீர்களா?" என்றும், "அவன் உங்களிடத்தில் உதவி தேடினால் உதவி செய்யுங்கள்" என்றும், "கடன் கேட்டால் கொடுங்கள்" என்றும், "அவன் ஏழையாயிருந்தால் உதவி புரியுங்கள்" என்றும், "அவன் வியாதிப்பட்டால் விசாரியுங்கள்" என்றும், "அவன் மவுத்தாய்ப் போனால் அவனுடைய ஜனாஸாவுடன் செல்லுங்கள்" என்றும், "அவனுடைய மங்கள காரியங்களில் அவனுக்குச் சுபசோபனங் கூறுங்கள்" என்றும், "துக்க காரியங்களில் சகிப்பாற்றுங்கள்" என்றும், "அவனது வீட்டுக்குக் காற்று செல்வது தடையாகும்படி உங்கள் வீட்டுச் சுவற்றை அதிகமாய் உயர்த்தவேண்டாம்" என்றும், "கனிவர்க்கமுதலிய தின்பண்டங்கள் எதாவது வாங்கினால் அதில் அவனுக்கும் அனுப்புங்கள்" என்றும், "கூடாத பக்ஷத்தில் அதை மறைத்து வையுங்கள்" என்றும், "உங்கள் குழந்தைகள் அதைக் கையிலெடுத்துக்கொண்டு வெளியே போகாதபடி பார்த்துக்கொள்ளுங்கள்" என்றும், அதனால் அவனுடைய குழந்தைகளுக்கு விசனமுண்டாகும்" என்றும், "உங்கள் சமையலறையின் புகையினால் அவனை வருத்தப்படுத்தாதீர்கள்" என்றும், "ஆனால் அவனுக்கும் உணவு அனுப்புகிறதாயிருந்தால் தோஷமில்லை" என்றும், இவை அண்டை வீட்டாருக்குள்ள ஹக்குகள்" என்றும் அருளிச்செய்தார்கள். இன்னும் "அண்டை வீட்டானுடைய ஹக்கு இன்னவென்பது உங்களுக்குத் தெரியுமா?" என்றும், "யார் வசம் என் உயிர் இருக்கிறதோ அந்த ஆண்டவன்மேல் ஆணையாக எவன்மீது அல்லாகுதஆலா றஹ்மத்து செய்திருக்கிறானோ அவனேயன்றி மற்றவன் அண்டை வீட்டானுடைய ஹக்கை நிறைவேற்றான்" என்றும் திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும் "உன்வீட்டு மெத்தையிலிருந்து அண்டைவீட்டைப் பார்க்காமலிருப்பதும், உன் வீட்டுச் சுவற்றின்மேல் அவன் தன் வீட்டுக்கு மரம் சாற்றினால் அவனைத்

தடைசெய்யாமலிருப்பதும், நீர்விழும் தாரைக்கை அடைக்காமலிருப்பதும், அவன் உன் வீட்டு வாசற்படிக்குள் திரில் மண்ணைத் தள்ளினால் அவனோடு சண்டைபோடாமலிருப்பதும், அவனுடைய அம்புகளில் நின்றும் உனக்கு ஏதாவது தெரிந்தால் அதை மறைப்பதும், மனதுக்கு வருத்தத்தை யுண்டாக்குகிற யாதொரு பேச்சும் அவனிடம் பேசாமலிருப்பதும், அவன் வீட்டுப் பெண்பிள்ளைகளைப் பார்க்காதபடி நீ உன் கண்ணைப் பேணுவதும், அவனுடைய அடிமைப் பெண்களான வேலைக்காரிகளை அதிகமாய் நோக்காமலிருப்பதும், அண்டைவீட்டானுக்குள்ள ஹக்குகளின் தொகையிற் சேர்ந்தவைகளாம். இவை எல்லாம் முஸ்லிம்களுடைய ஹக்குகளில் நாம் சொல்லிவந்தவைகளுக்குப் புறம்பாகிய பிரத்தியேகமான ஹக்குகளாயிருக்கின்றன. இவைகளை ஞாபகத்தில் வைத்துக்கொள். அபூதர் றலியல்லாகு அன்கு சொல்லுகிறதாவது:—"எனக்கு உவப்புள்ள நாயகம் றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் என்னை நோக்கி "அபாதரே! நீ கறிசமைத்தால் (ஆனம் அதிகமாகும்படி) தண்ணீரை அதிகமாய்ச் சேர்த்துச் சமைத்து அதில் அண்டைவீட்டுக்கும் கொடுத்தனுப்பு" என்று வசியத்து செய்தார்கள்" என்பதே. ஒருவர் அப்துல்லாஹிப்னுல் முபாரக்கு றகிமகுல்லா அவர்களிடத்தில் வந்து "என் அண்டைவீட்டுக்காரன் என் அடிமையின்மேல் பிராது சொல்லுகிறான்" என்றும், "அதற்காக சாக்ஷி யில்லாமல் என் அடிமையை நான் அடித்தேனானால் குற்றவாளியாகுவேன், அடிக்காமற்போனாலும் அண்டைவீட்டுக்காரன் வருத்தப்படுவான். இதற்கு நான் என்ன செய்யலாம்" என்று கேட்டார். அதற்கவர்கள் சொன்னதாவது:—"பொறு. உன் அடிமை சிட்சையடையக் கூடிய குற்றம் ஏதாவது செய்யட்டும். பின்பு அந்தக் குற்றத்திற்காக அவனை சிட்சை செய்யாமல் விட்டு வைத்து அண்டைவீட்டுக்காரன் அவன்மேல் ஏதாவது பிராது செய்கிறபோது அவனை அடித்து அதட்டி வருத்து. அப்படிச் செய்தால் இருவருடைய ஹக்குகளையும் நிறைவேற்றினவனாவாய்" என்பதே.

## உறவினர்களாகிய பந்துக்களுடைய ஹக்குகளின் பயான்.

றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமாகிறார்கள். அதாவது:-"அல்லாகுதஆலா நான் றஹ்மானாயிருக்கிறேன்" என்றும், (கருப்பை சம்பந்தமான உறவினைப் பொருள்படும்) றஹிமு என்னும் சொல்லை றஹ்மான் என்னும் எனது நாமத்திலிருந்து பகுத்தமைத்தேன்" என்றும், "ஒருவன் தன் உறவினர்களைச் சேர்ப்பிப்



பானாகில் நான் அவனைச் சேர்ப்பிப்பேன்" என்றும், "ஒருவன் தன் உறவினர்களின் உறவைத் தறிப்பானாகில் நான் அவனைத் தறிப்பேன்" என்றும் திருவுளமாகிறான்" என்பதே. இன்னும் ஒருவன் தன் வயது நீடிக்கவும் இரணம் விருத்திக்கவும் வேண்டுமென்று விரும்புவானாகில் தன் பந்துக்களுக்கு நன்மை செய்யும்படி அவனுக்குச் சொல்லுங்கள்" என்றும் திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும் "பந்துக்களைச் சேர்ப்பதற்குள்ள சவாபுக்குமேல் அதிகமான சவாபு எந்த இபாதத்துக்கும் இல்லை" என்றும், "ஒரு குடும்பம் பாவமான காரியங்களில் பார்க்காயிருந்தும் அவர்கள் தங்கள் பந்துக்களைச் சேர்ப்பிக்கும் பாக்கத்தினால் அவர்களுக்குப் பொருளும் புத்திர சம்பத்தும் அதிகமாயிருக்கும்" என்றும் திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும் "உன்னுடன் பிணக்கமாயிருக்கிற பந்துக்களுக்கு நீ கொடுக்கிற கொடையிலும் அதிக வரிசையான தர்மம் ஒன்றுமில்லை" என்றும் திருவுளமாயிருக்கிறார்கள்.

அறிந்துகொள்:—பந்துக்களைச் சேர்ப்பதென்பது அவர்கள் உன் உறவைத் தறித்தாலும் நீ அதை இணைப்பதென்பதேயாம். றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் "உன் உறவைத் தறிப்பவனை நீ சேர்ப்பதும், உனக்கு அநியாயஞ்செய்தவனுக்கு நீ ஈவதும், உன்மேல் கொடுமை செய்தவனை நீ மன்னிப்பதும் எல்லா வரிசைகளிலும் மேலான வரிசையுடையதாயிருக்கும்" என்று திருவுளமாயிருக்கிறார்கள்.

## தாய் தந்தையருடைய ஹக்குகளின் பயான்.

அறிந்துகொள்:—தாய் தந்தையருடைய ஹக்கானது மிகவும் கனத்ததாயிருக்கிறது. ஏனென்றால், அவர்களுடைய உறவு மிகநெருங்கினதாயிருப்பதினாலேயாம். றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவாயினால் "எவனும் ஒரு அடிமையைக்கண்டு அவனைக் கிரயத்துக்கு வாங்கி உரிமைவிட்டவுடனேயல்லாமல் தன் தகப்பனுடைய ஹக்கை நிறைவேற்றினவனாகமாட்டான்" என்றும், "தாய் தந்தையருக்கு நன்மை செய்வதானது தொழுகை, நோன்பு, ஹஜ்ஜு, உம்றா, மார்க்கயுத்தம் இவைகளைக் காட்டிலும் மிக வரிசையுள்ளதாயிருக்கிறது" என்றும், "சுவர்க்கத்துடைய மணம் ஐந்நூறு வருஷத்துத் தூரமிருந்து வீசும்" என்றும், "ஆனால் தாய் தந்தையரை வருத்தப்படுத்துகிறவனும் பந்துவின் உறவைத் தறிப்பவனும் அந்த வாசனையை அடையமாட்டான்" என்றும் அருளிச்செய்திருக்கிறார்கள். இன்னும் மூசா அலைகிஸ்ஸலாமவர்களுக்கு அல்லாகுதஆலா வஹீ இறக்கிவைத்தான். அதாவது:—"ஒருவன் தாய் தந்தையருக்கு வழிபடாமல் எனக்கு

வழிபடுவானாகில் அவனை வழிபடாதவனென்று எழுதுவேன். ஒருவன் தாய் தந்தையருக்கு வழிபட்டு எனக்கு வழிபடாமற்போனால் அவனை வழிபட்டவன் என்று எழுதுவேன்" என்பதே. இன்னும் "ஒருவன் தன் தாய் தந்தையர் பேரால் ஸதகா கொடுப்பதில் என்ன நஷ்டமிருக்கிறது?" என்றும், "அதில் அவர்களுக்கும் சவாபு கிடைக்கிறது அவனும் யாதொரு குறைவில்லாமல் சவாபை அடைகிறான்" என்றும் ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். ஒருவர் ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுடைய சமுகத்தில் வந்து "யாரசூலல்லா! என் தாய் தந்தையர் இறந்துபோயிருக்கிறார்கள். நான் அவர்களுக்காக நிறைவேற்றவேண்டியதொன்று என்மீது என்ன இருக்கிறது?" என்று கேட்டார். அதற்கு நாயகமவர்கள் "நீ அவர்களுக்காகத் தொழுது பிழை பொறுக்கத் தேடு. அவர்களுடைய வாக்குத்தத்தங்களையும் வசிய்யத்தையும் நிறைவேற்று. அவர்களுடைய நேசர்களைக் கனப்படுத்து. அவர்களுடைய பந்துக்களுக்கு நன்மைசெய்" என்றும், "தாயினுடைய ஹக்காகிறது தகப்பனுடைய ஹக்கிலும் இரண்டத்தனையாயிருக்கிறது" என்றும் திருவுளமானார்கள்.

## பிள்ளைகளுடைய ஹக்குகளின் பயான்.

ஒருவர் ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களிடத்தில் "நான் யாருக்கு நன்மை செய்யவேண்டும்?" என்று கேட்டதற்கு, "தாய் தந்தையருக்கு நன்மைசெய்" என்று திருவுளமானார்கள். அப்போதவர் "என் தாய் தந்தையர் மவுத்தாய்ப் போனார்கள்" என்று சொன்னார். அதற்கு நாயகமவர்கள் "உன் பிள்ளைகளுக்கு நன்மைசெய்" என்றும், "பெற்றோருக்கு எப்படியோ அப்படியே பிள்ளைகளுக்கும் ஹக்குண்டு" என்றும் திருவுளமானார்கள். இன்னும் பிள்ளை தன்சொல்லுக்கு அடங்காமல் மீறுகிறதினிமித்தமாய் அவனுக்குத் தீர்க்குணத்தைக் காட்டாமலிருப்பது பிள்ளைகளுடைய ஹக்குகளில் ஒன்றாம். "பிள்ளையைத் தனக்கு மீறும்படி செய்துகொள்ளாத பிதாவின்மேல் அல்லாகு தஆலா றகமத்து செய்வானாக" என்று நாயகமவர்கள் துஆ செய்திருக்கிறார்கள்.

இன்னும் ரசூல்சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமானதாக அனாசரலியல்லாகு அன்கு சொல்கிறார்கள். அதாவது:—"பிள்ளை பிறந்த ஏழாம்நாளில் அதற்கு அகீகா செய்து பேரிட்டு சுத்தப்படுத்துங்கள். ஆறுவயதானால் அதனைக் கற்பியுங்கள். ஒன்பது வயதானால் படுக்கையிலிருந்து தனிப்பிரியுங்கள். பதின்மூன்று வயதானால் தொழு



கைக்காக அவனை அடியுங்கள். பதினாறு வயதானால் அவனுக்கு நிகாகு செய்வித்து அவன் கையைப் பிடித்து நான் உனக்கு அதபைப் படிப்பித்தேன். இல்மைக் கற்பித்தேன். நிகாகு செய்துவைத்தேன். இனி துன்யாவுடைய பித்னாவிலிருந்தும் ஆகிறத்துடைய அதாபிலிருந்தும் காக்கும்படி உன்னை அல்லாகுதஆலாவுடைய அடைக்கலத்தில் விட்டேன் என்று சொல்லுங்கள்" என்பதே. பிள்ளைகளுக்கு யாதொன்றைக் கொடுப்பதிலும் அவர்களை முத்தங்கொள்வதிலும் அவர்களுக்கு நடந்துகொள்ளுகிற மற்றும் நன்மைகளிலும் அவர்களை வித்தியாசப்படுத்தாமல் சமமாக்கிவைப்பது பிள்ளைகளுடைய ஹக்குகளிற்சேர்ந்ததாம். சிறுகுழந்தையைப் பக்ஷமாய்ப் பார்ப்பதும் முத்தங்கொள்வதும் சுன்னத்தாயிருக்கிறது. ஹசன் றலியல்லாகு அன்குவை ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் முத்தங்கொண்டபோது, அக்ரவுபுனு ஹாபிஸ் றலியல்லாகு அன்கு "எனக்குப் பத்துப் பிள்ளைகளிருக்கிறது" என்றும், "அவர்களில் ஒருவனையும் ஒருபோதாவது நான் முத்தங்கொண்டதில்லை" என்றும் சொன்னார்கள். அதற்கு நாயகமவர்கள் "கிருபையில்லாதவனுக்குக் கிருபை செய்யப்படமாட்டாது" என்று அருளிச்செய்தார்கள். ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் மிம்பரின்மேலிருக்கிற சமயத்தில் ஹசன் றலியல்லாகு அன்கு அவ்விடத்தில் (எப்படியோ) கீழே விழுந்துவிட்டார்கள். உடனே ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் மிம்பரிலிருந்து கீழே யிறங்கி வந்து பிள்ளையைத் தூக்கிக்கொண்டு பின்வரும் ஆயத்தை ஓதினார்கள். அதாவது:—"உங்கள் பொருள்களும் புத்திரர்களும் பித்னாவாயிருக்கும்" என்பதே. ஒருதரம் ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் தொழுதுகொண்டிருந்தார்கள். சஜ்தாவில் போனபோது உசைன் றலியல்லாகு அன்கு நாயகமவர்களுடைய கழுத்தின்மேல் ஏறிக்கொண்டார்கள். அதற்காக நாயகமவர்கள் வெகுநேரம் வரையில் தாமதித்திருந்தபடியால் அஸ்ஹாபுகள் வஹி வந்திருக்கிறதென்றும், அதனால் சஜ்தாவை நீளமாக்கியிருக்கிறார்களென்றும் எண்ணினார்கள். சலாம் கொடுத்தபிறகு அவர்கள் ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களிடத்தில் "யாரசூலல்லா! சஜ்தாவில் வஹி வந்திருக்கிறதோ?" என்று கேட்டார்கள். அதற்கு நாயகமவர்கள், "இல்லை, உசைன் (றலியல்லாகு அன்கு) என்னைத் தமக்கு ஒட்டகமாக்கியிருந்தார். ஆதலால் என்னைவிட்டும் அவரைப் பிரித்துவிடுவதற்கு மனம் வரவில்லை" என்று திருவுளமானார்கள்.

மொத்தத்தில் பெற்றோருடைய ஹக்காகிறது பிள்ளைகளுடைய ஹக்கைக்காட்டிலும் முக்கியமானதாயிருக்கிறது. ஏனெனில்

றால், பெற்றோர்களைக் கனப்படுத்தி உபசரிப்பது பிள்ளைகள்பேரில் விதியா யிருப்பதினாலேயாம். அன்றியும் அல்லாகுதஆலா தாய் தந்தையருக்கு நன்மை செய்தலைத் தன்னுடைய இபாதத்துடன் சேர்த்துக் கூறுகின்றான். அது வருமாறு:— "உங்கள் றப்பு அவனுக்கேயன்றி நீங்கள் வணக்கஞ்செய்யக்கூடாது" எனவும், "தாய் தந்தையருக்கு நன்மைசெய்ய வேண்டுமெனவும் கட்டளை இட்டான்" என்பதே. இன்னும் இரண்டு காரியம் வாஜிபாயிருப்பது இவர்களுடைய ஹக்கின் வழிப்பத்திலின்று முள்ளதாம். முதலாவது:— ஹறாமாகவே யில்லாமல் ஷுப்ஹத்தாயிருக்கிற ஒரு உணவை உண்ணும்படித் தாய்தந்தையர் உத்திரவு செய்தால் அந்த உத்திரவுக்கு வழிபட்டு அதை உண்ண வேண்டும்" என்றும், "அதேனென்றால் ஷுப்ஹத்தைவிட்டுப் பேணுவதினும் தாய் தந்தையரைச் சந்தோஷப்படுத்துவது மிக முக்கியமா யிருப்பதினால்" என்றும் உலமாக்களில் பெரும்பாலார் கூறுகின்றார்கள். இரண்டாவது:— தாய் தந்தையருடைய உத்திரவில்லாமல் யாத்திரையிலும் போகக் கூடாதென்பதாம். ஆனால் தொழுகை, நோன்பு இவைகளின் இல்மைப் படித்துக்கொள்ள அந்த இடத்தில் ஒருவரும் கிடைக்காமற்போனால் அப்போது அதைத்தேடி யடையும்பொருட்டு சபர்செய்வது பர்ளாய்ப்போயிருப்பதால் அதற்காக அவர்களின் உத்திரவில்லாமல் சபர் செய்யலாம். இல்முடைய ஞானத்தை இயற்றப் போவதற்கு இவர்களுடைய உத்திரவு வேண்டுமென்பதே தாமி. ஏனென்றால், அது பர்ளாக்கப்பட்டதா யிருந்தாலும் அதைப் பெற்றுக்கொள்வது கடமையா யிருப்பதினாலேயாம். ஒருவர் சபரில் யுத்தத்துக்குப் போக றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களிடத்தில் உத்திரவு கேட்டதற்கு, நாயகமவர்கள் "உன் அன்னையர் இருக்கிறாரா?" என்று வினவினார்கள். அதற்கவர் "ஆம் இருக்கிறார்" என்றார். அப்போது நாயகமவர்கள் "நீ உன் அன்னையிடத்தில் போயிரு. அவர் பாதங்களின் அடியில் உனக்குச் சொர்க்கமிருக்கிறது" என்று திருவுளமானார்கள். இன்னும் யமனிலிருந்து ஒருவர் வந்து சபரில் யுத்தத்துக்குப் போக நாயகமவர்களிடத்தில் உத்திரவு கேட்டார். "உமக்குத் தாய்தந்தையர் இருக்கிறார்களா?" என்று அவரை விசாரித்தார்கள். அவர் "ஆம் இருக்கிறார்கள்" என்று சொன்னார். அப்போது நாயகமவர்கள் "நீர் திரும்பப்போய் முந்தி அவர்களிடத்தில் உத்திரவு கேளும். உத்திரவு கொடுக்காமற்போனால் நீ அவர்கள் சொல்லுக்கு வழிபடு. ஏனென்றால், தவ்ஹீதுக்குப் பிறகு இதைக்காட்டிலும் அதிக நல்ல ஒரு நன்மையை அல்லாஹ்விடத்துக்கு நீ கொண்டுபோக மாட்டாய்" என்று திருவுளமானார்கள்.



இன்னுமறிந்துகொள்:— மூத்த சகோதரனாகிய தமையனுடைய ஹக்கானது தந்தையினுடைய ஹக்குக்கு நெருங்கினதா யிருக்கிறது. ஏனென்றால் பிள்ளையின்மேல் பிதாவினுடைய ஹக்கு எப்படியோ அப்படியே தம்பியின்மேல் தமையனுடைய ஹக்குமாம் என்று ஹதீதில் வந்திருக்கிறது.

## அடிமைகளுடைய ஹக்கின் பயான்.

றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமா யிருக்கிறார்கள். அதாவது:— "உங்களுக்கு அடிமைப் பட்டவர்களும் கீழ்ப்பட்டவர்களுமான ஊழியர்கள் விஷயத்தில் நீங்கள் அல்லாகு தஆலாவுக்குப் பயந்துகொள்ளுங்கள். நீங்கள் உண்பதில் அவர்களுக்கு உண்ணக்கொடுங்கள். நீங்கள் உடுப்பதில் அவர்களுக்கு உடுக்கக் கொடுங்கள். அவர்களால் இயலாத வேலையைச் செய்யும்படி நீங்கள் அவர்களை ஏவாதீர்கள். அவர்கள் உங்கள் வேலைக்குத் தகுந்தவர்களாயிருந்தால் வைத்துக் கொள்ளுங்கள். இல்லாவிட்டால் விற்றுப் போடுங்கள். அல்லாகுதஆலா இவர்களை உங்களுக்கு அடிமைகளாகவும் கீழ்ப்பட்டவர்களாகவும் ஆக்கியிருக்கிறதினால் அவனுடைய இந்த சிருஷ்டியை நீங்கள் இம்சையில் வைக்காதீர்கள். அவன் நாடியிருந்தால் உங்களை இவர்களுக்குக் கீழ்ப்பட்டவர்களாக்கி யிருக்கலாம்" என்பதே. ஒருவர் நாயகமவர்களிடத்தில் "யாறசூலல்லா! நான் என் அடிமையை ஒருநாளில் எத்தனைதரம் மன்னிக்கவேண்டும்?" என்று கேட்டதற்கு, "எழுபதுதரம்" என்று திருவுளமானார்கள். அஹ்னபுப்னு கைஸ் றலியல்லாகு அன்கு அவர்களை "நீங்கள் பொறுமையை யாரிடத்தில் படித்தீர்கள்?" என்று கேட்டதற்கு, "கைஸுப்னு ஆஸிமிடத்தில் படித்தேன். ஏனென்றால், அவருடைய அடிமைப்பெண் ஒரு அட்டெட்டியைப் பொரித்து அதை இருப்பாணியில் மாட்டிக் கொண்டு வரும்போது அது கீழே அவருடைய பிள்ளையின்மேல் விழ அந்தப்பிள்ளை இறந்துபோய்விட்டது. அதனால் அவள் நடுக்கமுற்று பயந்து நின்றாள். அப்போதவர் அவளைப் பார்த்து "நீ பயப்படாதே. உன்மேல் யாதொரு குற்றமுமில்லை. அல்லாஹுக்காக உன்னை நான் உரிமையாக்கிவிட்டேன்" என்று சொன்னார்" எனக் கூறினார். அபூஹுரைறா அவர்கள் தங்கள் அடிமை யாதொரு குற்றஞ்செய்தால் "நீ உன் எஜமானனுடைய வழக்கத்தையே எடுத்திருக்கிறாய்" என்றும், "உன் எஜமானன் எப்படித் தன் எஜமானனுக்குப் பாவஞ்செய்கிறவனா யிருக்கிறானோ அப்படியே நீயும் இருக்கிறாய்" என்றும் சொல்லுவார்கள். அநேகம் பெரியோர்கள் தங்களுடைய ஒரு அடிமையை அடித்துக்கொண்டிருக்கும்

போது "அபா மஸ்ஊதே!" என்று யாரோ கூப்பிட்ட ஒரு சத்தத்தைக் கேட்டுத் திரும்பிப் பார்க்க, அங்கு றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களைக் கண்டார். நாயகமவர்கள் அவரை நோக்கி "உமக்கு இந்த அடிமையின்மேலிருக்கிற வலிமையைப்பார்க்க உம்மேலில் அல்லாகு தஆலாவுக்கு அதிக வலிமையிருக்கிறது" என்று அருளிச்செய்தார்கள்.

ஆகவே அடிமைகளுடைய ஹக்கென்பது சோறு, கறி, பிடவைகளில் அவர்களுக்குக் குறைசெய்யாமலிருப்பதும், அவமதிப்பான பார்வையால் அவர்கள்மேல் பெருமை பாராட்டாமலிருப்பதும், தான் எப்படியோ அப்படியே அவர்களும் மனிதரா யிருக்கிறார்களென்று எண்ணுவதும், அவர்கள் யாதொரு குற்றஞ் செய்தால் அல்லாகுதஆலாவுக்குத் தான் செய்கிற குற்றங்களை நினைத்துப் பார்ப்பதும், அவர்கள்மேல் கோபம் வரும்போது தன்மேல் அல்லாகுதஆலாவுக்கிருக்கிற வலிமையை எண்ணிப்பார்ப்பதுமாம். இன்னும் "ஒரு அடிமையானவன் சோறு சமைப்பதில் கஷ்டத்தை யடைந்து தன் எஜமானனை அந்தக் கஷ்டத்திலிருந்து நீக்குகின்றானாகையால் எஜமானன் அந்த அடிமையைத் தன்னுடன் சேர்த்துக்கொண்டு உண்ண வேண்டும்" என்றும், "அப்படிச் செய்யாத பக்ஷம் உணவில் ஒரு கவளத்தை எடுத்து அதற்கு நெய்யூட்டித் தன் கையினால் அந்த அடிமையின் வாயிலிட்டு இதை உண் என்று அவனுக்குச் சொல்லவேண்டும்" என்றும் றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமா யிருக்கிறார்கள்.

## ஆறுவது அஸ்லு - உஸ்லத்து, அதாவது ஏகாங்கியாய்த் தனிப்பதற்குள்ள அதபுகளின் பயான்.

ஜனங்களை விட்டுப் ஏகாங்கியாய்த் தனிப்பதோ? அல்லது அவர்களுடன் சகவாசிப்பதோ? எதுமேல் என்பதில் உலமாக்களுக்குள் விகற்பமிருக்கிறது. சுப்யானுத்தவுரீ, இபுராகீமுப்னு அத்ஹம், தாவூதுத்தாயீ, புலைலுப்னு அயால், இபுராகீமுல்கவாஸ்ஸு, யூசுபுப்னு அஸ்பாத்து, ஹுதைபத்துல்மர்அஷீ, பிஷ்றுல்ஹாபீ றழியல்லாகு அன்ஹும் இவர்களும், மூத்த கூன்களாகிய பெரியோர்களில் இன்னும் அநேகரும் ஜனங்களுடன் சகவாசிப்பதினும் அவர்களை விட்டும் ஏகாங்கியாய்த் தனிப்பதேமேல் என்ற அபிப்பிராயத்தை யுடையவர்களா யிருக்கிறார்கள். ஷாபிஈ உலமாக்களான பெரியோர்களில் ஒரு கூட்டம் சகவாசிப்பதேமேல் என்று தாற்பரியப்படுகிறார்கள். இன்னும் "ஏகாங்கியாய்த் தனிப்பதிலின்றும் நீங்கள் உங்கள் பாகத்தைக் கவனித்துக் கொள்ளுங்கள்" என்று உமர் றழியல்லாகு அன்கு சொல்லுகிறார்கள்.



இன்னும் "ஏகாங்கியாய்த் தனிப்பது இபாதத்தா யிருக்கிறது" என்று இபுனுஷீரீன் றகிமகுல்லா அவர்கள் சொல்லுகிறார்கள். தாவூதுத்தாயீ றகிமகுல்லா அவர்களிடத்தில் ஒருவர் "எனக்கு வசிய்யத்துச் செய்யுங்கள்" என்று கேட்டதற்கு, "துன்யாவை விட்டும் நோன்பு வைத்துக்கொள்" என்றும், "மரணபரியந்தம் அந்த நோன்பைத் திறக்காதே" என்றும், "சிங்கத்தை விட்டும் ஓடுவதுபோல் ஜனங்களை விட்டும் ஓடிப்போ" என்றும் சொன்னார்கள். கவுருத்தில் பக்திருக்கிறதாய் ஹசன் பசரீ றகிமகுல்லா அவர்கள் சொல்லுகிறதாவது:—"மனிதன் (தனக்கு உள்ளது போதுமென்று ஒப்புக்கொண்டதனாலும்) கனாஅத்தை எடுத்தானாகில் அவன் வேண்டுதலற்ற செல்வனாய்ப் போவான். ஏகாங்கியாய்த் தனித்தானாகில் சுகத்தையடைந்தான். ஆசையை அடக்கினானாகில் அடிமைத்தனத்திலிருந்து உரிமை பெற்றான். பொறாமையை விட்டுவிட்டால் அவனுடைய மனுஷத்துவமை தலைகாட்டிற்று. கொஞ்சநாள் பொறுமை செய்தானாகில் என்றும் அழியாத நித்தியானந்தத்தை அடைந்தான்" என்பதே. இன்னும் "ஹிக்மத்தென்னும் ஞானம் பத்துப் பங்கா யிருக்கிறது" என்றும், "அதில் ஒன்பது பங்கு மவுனஞ் சாதிப்பதிலும் ஒரு பங்கு ஏகாங்கியாய்த் தனிப்பதிலு மிருக்கிறது" என்றும் வகுபுப்னுல் வர்து றகிமகுல்லா அவர்கள் சொல்லுகிறார்கள். மாலிக்குப்னு அனசு றழியல்லாகு அன்கு அவர்கள் தங்கள் சிநேகிதர்களான சகோதரர்களைக் கண்டுகொள்வதற்கும் வியாதியஸ்தர்களை விசாரிப்பதற்கும் ஜனாஸாவுடன் செல்வதற்கும் போகிறவர்களா யிருந்தார்கள். பின்பு இவையெல்லாவற்றையும் விட்டு ஏகாங்கியாய்த் தனித்துவிட்டார்கள். புலைலுப்னு அயால் றகிமகுல்லா அவர்கள் சொல்லுகிறதாவது:—"என்னிடம் வந்து எனக்குச் சலாம் சொல்லாமலும், நான் வியாதிப்பட்டால் என்னை விசாரியாமலும் இருப்பவன் எவனோ அவன் எனக்குப் பெரிய உபகாரஞ் செய்தவனென்று ஒப்புக்கொள்ளுகிறேன்" என்பதே. அஸ்ஹாபுகளான ஸஃதுப்னு அபீவக்காஸ், ஸஈதுப்னு ஸைது றழியல்லாகு அன்ஹுமா இவர்கள் மதீனாவுக்குச் சமீபத்தில் அகீக் என்னுமிடத்தில் வசிப்பவர்களா யிருந்தார்கள். அந்த இடத்தில் இவர்கள் மரணபரியந்தம் ஜுமுஆக்களுக்கும் மற்றும் காரியங்களுக்கும் வராதவர்களா யிருந்தார்கள். அமீருகளில் ஒருவன் ஹாத்திமுல் அஸம்மு றகிமகுல்லா அவர்களிடத்தில் "உமக்கு ஏதாவது ஹாஜத்துண்டா?" என்று கேட்க, அதற்கவர்கள் "ஆம் உண்டு" என்றார்கள். "அதென்ன ஹாஜத்து?" என்று அவன் கேட்க, அதற்கவர்கள் "நீர் என்னைப் பார்க்காமலும், நான் உம்மைப் பார்க்கா-

மனு மிருக்கவேண்டுமென்பதே என் ஞாதத்து" என்று சொன்னார்கள். ஒருவர் சஹல்துஸ்தரீ றகிமகுல்லா அவர்களிடத்தில் வந்து நாமிருவருக்கும் சகவாச மிருக்கவேண்டுமென்று நான் விரும்புகிறேன்" என்றார். அதற்கவர்கள் "நம்மிருவரில் ஒருவர் மவுத்தாய்ப்போனால் அப்போது யாரிடத்தில் சகவாசிப்பது?" என்று கேட்டார்கள். அதற்கவர் "அல்லாகுதஆலாவிடத்தில்" என்று சொன்னார். அதற்கு "இப்போதும் அவனிடத்திலேயே சகவாசிக்கவேண்டும்" என்று அவர்கள் சொன்னார்கள்.

இன்னும்அறிந்துகொள்:—நிகாஹு செய்வது மேலா? செய்யாமலிருப்பது மேலா? என்பதில் எப்படி விகற்ப மிருக்கிறதோ அப்படியே இதிலும் விகற்பமிருக்கிறது. உண்மையில் இது அவரவருடைய நிலைமைக்குத் தக்கபடியாம். ஏனென்றால், சிலர் ஏகாங்கியாய்த் தனித்திருப்பதற்கு அருகராயும் சிலர் சகவாசியா யிருப்பதற்கு அருகராயுமிருப்பார்கள். ஆகவே ஏகாங்கியாய்த் தனித்திருப்பதின் பிரயோசனங்களையும் ஆபத்துகளையும் விவரித்துக் காட்டுவோம். உண்மையில் இன்னதுக்கு இன்னது மேல் என்பது சரிப்படாது.

## ஏகாங்கியாய்த் தனித்திருப்பதின் பிரயோசனங்கள்.

அறிந்துகொள்:—ஏகாங்கியாய்த் தனித்திருப்பதில் ஆறு பிரயோசனங்களுண்டு. முதலாவது பிரயோசனம்:—திக்று பிக்றுகளுக்காய்ப் பாக்கு ஒழிவாம். அல்லாகுதஆலாவைத் திக்று செய்வதும், அவனுடைய சிருஷ்டியாகி கிரியைகளிலும், வானம் பூமிகளுடைய தத்துவங்களிலும் ஆராய்ந்து நோட்டமிடுவதும், துன்யா ஆகிறத்துகளில் அவனுடைய (சூக்குமமான) இரகசியங்களை அறிவதும் மிகமேலான இபாதத்தா யிருக்கிறது. மேலும் அல்லாகுதஆலாவையன்றி மற்றும் பொருள்களையும் மன்ஷேயும் மறந்து அவனையன்றி மற்றொன்றும் மனதில் இல்லாதபடி தன் முழுஇருதயத்தையும் அவனுடைய நினைவில் ஆக்குவதே பெரிய பதவியா யிருக்கிறது. இதுவோ ஏகாங்கியாய்த் தனிப்பதிலன்றி வாய்க்காது. ஏனென்றால், அல்லாகுதஆலாவையன்றி மற்றும் பொருள்கள் அவனை மறக்கச்செய்பவைகளா யிருக்கின்றன. அநேகம் நபிமார்கள் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இருந்ததுபோல் கல்குகளுக்கு நடுவே ஹக்குடன் சேர்ந்தார்த்திருக்கவும், கல்குகளுடன் சாமாதிருக்கவும் யாருக்கும் வல்லமையில்லையோ அவர்களை அவை அதுக்கியம் மறக்கச்செய்யும். இதன்நிமித்தமே மகுமூது நல்லல்லாகு அலைஹிவஸல்லம் அவர்கள் தங்கள் காரியஆரம்பத்தில் கல்குகளின் பற்றறுத்து ஹிறா மலையிற்போய் ஏகாங்கியாய்த் தனித்து அழுவதுதின் [illegible]



உவஇதியடைநிலைமையில் இருந்திருக்கிறார்கள். அப்போது தேகத்தால் கல்குடனும் மனதால் ஹக்குடனுமிருக்கும்படியான அரிய பதவியைப் பெற்றுக்கொண்டார்கள். இன்னும் நாயகமவர்கள் "நான் யாரையாவது சிநேகம் பிடிக்கவேண்டுமானால் அபூபக்கரைப் பிடித்துக் கொள்ளுவேன்" என்றும், "ஆனால் அல்லாகுதஆலாவுடைய சிநேகமானது இதர சிநேகத்துக்கு இடம் தரவில்லை" என்றும் நிருவணமாயிருக்கிறார்கள். அப்படி யிருந்தும் அவர்களுக்கு எல்லாரோடும் சிநேகமிருப்பதாய் ஜனங்கள் எண்ணினார்கள். அவுலியாக்களும் இந்தப் பதவியை அடைவது ஆச்சரியமல்ல. ஏனென்றால், சஹல்துஸ்தரீ றகிமகுல்லா அலைகியவர்கள் "நான் முப்பது வருஷகாலமாக ஹக்குடன் வசனித்துக்கொண் டிருக்கிறேன்" என்றும், "ஆனால் நான் கல்குடன் பேசுகிறதாய் ஜனங்கள் நினைக்கிறார்கள்" என்றும் சொல்கிறார்கள். இது அசாத்தியமல்ல. ஏனென்றால் ஒரு சிருஷ்டியின்மேல் ஆசைகொண்டிருக்கிற ஒருவன் ஜனங்களுக்கு நடுவேயிருக்கும்போது அவன் ஆசைகொண்ட அந்த மனுஷனுடைய பாக்கில் அவன் மனம் சிக்குண்டிருக்கிறதினிமித்தம் அவனுக்கு எவருடைய பேச்சும் காதில் விழாமலும் எவரும் அவன் கண்ணுக்குத் தென்படாமலு மிருப்பது அநுபவமேயாம். எனினும், இஃதெல்லாராலும் ஆகக்கூடுமென மருண்டு எவரும் கர்வங்கொள்ளக்கூடாது. ஏனென்றால், கல்குகளுக்கு நடுவே அல்லாகுதஆலாவை மறந்துபோகிற மனிதர்களே பெரும்பான்மையா யிருக்கிறார்கள். ஒருவர் ஒரு ராஹிபென்னும் சன்னியாசியான பாதிரியைக் கண்டு "நீர் ஏகாங்கியாய்த் தனித்திருப்பதின்பேரில் எப்படிச் சகித்துக்கொண்டிருக்கிறீர்? இது மிகவும் பெரியகாரியம்" என்றார். அதற்கந்த ராஹிப் "நான் தனியாயிருக்கவில்லை. அல்லாகுதஆலாவுடன் சகவாசியா யிருக்கிறேன். நான் அவனுடன் பேசநாடினால் தொழுது கொள்ளுகிறேன். அவன் என்னுடன் பேசவேண்டுமென்றால் தவ்றாத்தை ஓதுகிறேன்" என்றார். இன்னும் "இந்த ஜனங்கள் ஏகாங்கியாய்த் தனித்திருப்பதில் என்ன பயனை அடைந்திருக்கிறார்கள்?" என்று ஒருவரைக் கேட்டதற்கு "அல்லாகுதஆலாவுடன் சகவாசிக்கும் பயனை அடைந்திருக்கிறார்கள்" என்று விடையளித்தார். சிலர் ஹஸன்பசரீ றகிமகுல்லா அவர்களிடம் வந்து "இங்கொரு மனிதர் இருக்கிறார்" என்றும், "அவர் எப்போதும் ஒரு தூணுக்குப் பின்னால் உட்கார்ந்துகொண்டிருக்கிறார்" என்றும் சொன்னார்கள். அதற்கவர்கள் "அந்த மனிதர் அங்கு வந்து உட்கார்ந்தால் எனக்குத் தெரியப்படுத்துங்கள்" என்று சொல்ல, அப்படியே தெரியப்படுத்தினார்கள். அப்போதவர்கள் எழுந்து அந்த மனிதரிடம் வந்து, "நீர் ஏன் எப்போதும் தனித்திருக்கிறீர்? உனக்க

ளுடன் ஏன் சகவாசிக்கிறதில்லை?" என்று கேட்டார்கள். அதற்கவர் "எனக்கொருவேலை யிருக்கிறது" என்றும், "அந்த வேலையின் பராக்கானது என்னை ஜனங்களுடன் சகவாசிக்க விடுகிறதில்லை" என்றும் சொன்னார். பின்பவர்கள் "நீர் ஏன் ஹஸனிடத்தில் போய் அவர் வசனிக்கும் வார்த்தைகளைக் கேட்கிறதில்லை?" என்று வினவ, அவர் "அந்த வேலையானது ஹஸனையும் மற்றவர்களையும்விட்டு என்னைத் தன் பராக்கிலாக்கிக்கொண்டது" என்றார். "அஃதென்ன வேலை" என, "அவர் அல்லாகு தஆலாவினால் எனக்கு நிஃமத்தும் என்னால் பாவமும் உண்டாகாத நேரம் ஒருநேரமுமில்லையாதலால் நான் அந்த நிஃமத்துக்கு ஷுக்கரு செய்கிறவனாயும், என் பாவத்துக்கு இஸ்திக்பாரு செய்கிறவனாயுமிருக்கிறேன். ஹஸனையும் மற்றவர்களையும்கொண்டு பராக்காக எனக்கு ஒழிவில்லை" என்றார். அப்போது ஹஸன் பசரி றகிமகுல்லா அவர்கள் அவரை நோக்கி "நீர் உமது ஸ்தானத்தை விடவேண்டாம். ஹஸனைவிட நீர் மிக அறிந்தவரா யிருக்கிறீர்" என்றார்கள். ஹறமுபுனு ஹையான் றகிமகுல்லா அவர்கள் உவைசல் கர்னீ றகிமகுல்லா அவர்களிடம் போனதற்கு "நீர் என்ன காரியமாய் இங்கு வந்தீர்?" என்று உவைசல் கர்னீ றகிமகுல்லா கேட்டார்கள். அதற்கவர்கள் "நான் தங்களிடம் சுகம் பெறலாமென்று வந்தேன்" என்றார்கள். அதற்கு உவைசல் கர்னீ றகிமகுல்லா அவர்கள் "அல்லாகு தஆலாவை அறிந்தவனல்லாமல் சுகத்தையடைகிற ஒருவன் இருப்பான்" என்று நான் ஒருபோதும் நினைத்ததில்லை" என்று சொன்னார்கள். புலைலு றகிமகுல்லா அவர்கள் சொல்லுகிறதாவது:—"இரவின் இருள் வந்து சூழ்ந்தபோது என் மனதில் சந்தோஷமுண்டாகி இனி விடிகிறவரையில் நான் அல்லாகு தஆலாவுடன் தனித்திருப்பேன் என்று சொல்லுகிறேன். பகலின் வெளிச்சம் வெளியாகும்போது என் மனதில் சஞ்சலமுண்டாகி இப்போது ஜனங்கள் என்னை அல்லாகு தஆலாவைவிட்டும் பராக்காக்கிவிடுவார்களேயென்று சொல்லுகிறேன்" என்பதே. இன்னும் "யாராவதொருவன் ஜனங்களுடன் வசனிப்பதைப் பார்க்கிலும் அல்லாகு தஆலாவுடன் முனாஜாத்துக்கொண்டு வசனிப்பதை அதிகமாய் நேசிக்காமற்போனால் அவனுடைய இல்மு கொஞ்சம்" என்றும், "அவன் மனம் குருடாயிருக்கிறது" என்றும், "அவன் வயது விருதா" என்றும் மாலிக்குபுனு தீனார் றகிமகுல்லா அவர்கள் சொல்லுகிறார்கள். இன்னும் "யாராவதொருவன் மற்றொருவனைப் போய்ப் பார்க்கவும் அவனிடம் உட்காரவும் விருப்பமுள்ளவனாயிருந்தால் அவனே மனமானது அமைப்பையும் வேண்டியதை விட்டும் நீங்கியிருப்பதினாலும், வெளியிலிருந்து உதவியைத் தேடுவதாலும் அது அவனுக்கு நஷ்டமேயாம்"



என்று ஹுகமாக்களில் ஒருவர் சொல்லுகிறார். இன்னும் "எவனுக்கு ஜனங்களுடன் சகவாசமிருக்கிறதோ அவன் தரித்திரர்களிற் சேர்ந்தவன்" என்றும் சொல்லியிருக்கிறார்கள்.

ஆகவே இவைகளால் நீ தெரிந்துகொள்ளவேண்டியதென்னவென்றால், ஒருவனுக்கு அல்லாகு தஆலாவுடைய நேசமான நினைவு இடைவிடாமல் எப்போதுமிருக்கும்படி செய்துகொள்ள அல்லது அவனுடைய ஜலால் ஜமால்களில் நோட்டமிட்டு மஃரிபாவென்னும் அறிவை ஹாசில் செய்துகொள்ள சக்தியிருந்தால் இதானது கல்குகளுடன் சம்பந்தமான எல்லா இபாதத்துகளினும் மிகப் பெரிய இபாதத்தாயிருக்கிறது. ஏனென்றால், ஒருவன் இவ்வுலகத்தைவிட்டுப் போகும்போது அவனுக்கு அல்லாகு தஆலாவுடைய ஆசைமேவிட்டிருப்பதே சகல பதவியிலும் முற்றின பதவியாயிருக்கிறது. திக்றினால் ஆசை முற்றுகின்றது. ஆசையானது அறிவினாலுண்டாகிற பயனும், அறிவானது நோட்டமிட்டு விசாரணை புரிவதினாலுண்டாகிற பயனுமாயிருக்கின்றது. இவையெல்லாம் ஏகாந்தமாய்த் தனிப்பதில்தான் இணக்கப்பட்டு வரும்" என்பதே.

இரண்டாவது பிரயோசனம்:—ஏகாந்தமாய்த் தனிப்பதினால் அநேக பாவங்களை விட்டும் நீங்குகின்றான். நான்கு பாவங்களிருக்கின்றன. சகவாசியாயிருப்பதில் அவைகளைவிட்டும் நீங்க எல்லாராலும் முடிகிறதில்லை. முதலாவது:-புறம்பேசலும் அதைக் கேட்கலுமாம். இதுவே தீனைக் கெடுப்பதாயிருக்கிறது. இரண்டாவது:-நன்மையைக் கொண்டு ஏவாமலும் தீமையை விட்டும் விலக்காமலுமிருப்பதாம். ஏவல், விலக்கல்செய்யாமல் மௌனமாயிருப்பானாகில் பாவிக்கும் பாவியு மாய்ப் போவான். நிராகரித்துப் பேசுவானாகில் அநேகமாய் விரோதமாய்ப் போவான். மூன்றாவது:-ரியாவும் நிபாக்குமாம். அதாவது:-முரண்பனையும் நேரிடும். நடவடிக்கையிலும் பேசுவதிலும் உள்ளும் புறமும் ஒருவிதமாயிராமல் கள்ளத்தனமாயிருப்பதாம். இதுவோ சகவாசத்தில் அகத்தியமாயிருக்கிறது. ஏனென்றால், ஜனங்களுடன் இவன் இவ்விதம் சம்பவிப்பதாயிருக்கிறது. நடக்காமற்போனால் அவர்கள் இவனை இம்சிப்பார்கள். எல்லாரோடும் இணங்கி நடக்காவிட்டால் நியாயமும் பாவத்தில் விழுவான். ஏனென்றால், இணங்கி நடப்பதில் தாட்சண்யத்தையும் முகஸ்துதி கூறலையும் விலக்கு கஷ்டமாயிருக்கும். ஒருவருக்கொருவர் விரோதியாயிருக்கிற இரண்டுபேரிடத்தில் பேசுவதில் இருவருக்கும் இணங்கிப் பேசுவானாகில் இது அகத்தில்லென்றும் முகத்திலொன்றுமான முறையுந்தனமாகும். இப்படி இருவருக்கும் இணக்க

மெய்ப் பேசாமற் போனாலோ இவன்மேல் அவர்களுக்கு விரோதமுண்டாகும். இதிற் குறைந்தபக்ஷம் இவன் எவரைக் கண்டாலும் நான் எப்போதும் தங்களை தேட்டமுள்ளவனாயிருக்கிறேன் என்று சொல்லுவான். இது பெரும்பாலும் பொய்யாகவே யிருக்கும். இப்படியான பேச்சைச் சொல்லாமற் போனாலும் அவர்கள் இவனை வெறுப்பார்கள். நீயும் இப்படிச் சொல்லுவாயாகில் இது பொய்யும் போகுமாம். இதிலும் குறைந்த பக்ஷமாவது:—ஒருவரொருவரிடத்திலும் நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்? (சுகமாயிருக்கிறீர்களா?) உங்கள் ஜனங்கள் எப்படி இருக்கிறார்கள்? (சுகமாயிருக்கிறார்களா?) என்று விசாரிக்க வேண்டும். அவர்களைப் பற்றிய கவலை உள்ளத்தில் ஒன்றுமில்லாமல் இதுவோ கர்க்க முக்கிருத்தியமாயிருக்கிறது. இதுவே மனிடனாய் நபியல்லாகு அன்று சொல்லியிருக்கிறதாவது:—"ஒருவன் மற்றொருவனிடத்தில் ஒரு நேசத்தைக் காட்டுவானாயின் அவனை மனுஷத்தன்மையும் மரிக்க தெரியும் உள்ளவனென்று முழுமிருக்கதனமான முகஸ்துதியால் புகழ்ந்து உயர்த்துவான். பின்பு தன் ஹாஜத்து நிறைவேறுதலாயும் அல்லாது தனுவரவைக் கோபப்பிக்கிறவனாயும் அங்கிருந்து திரும்பி வீட்டிக்கு வருவான்" என்பதே. ஸுபியான் ஸௌரி றஹிமகுல்லா அவர்கள் சொல்லுகிறதாவது:—"ஒரு ஏழை தான் என்னிடம் வந்தால் நான் அவனுடைய நாடியைச் செய்யப் பற்றுவதற்கு அதை என் கையால் தடவிவிடுவேனாகில் என் பெயர் முனாபிகுகளுடைய தப்தரில் எழுதப்படுமென்று பயப்படுகிறேன்" என்பதே. புலைலு றஹிமகுல்லா அவர்கள் ஓரிடத்தில் உட்கார்ந்திருக்கும்போது ஒருவர் அவர்களிடத்தில் வந்துபோனார். "நீர் எதற்காக வந்தீர்?" என்று அவரைக் கேட்டதற்கு "நான் தங்கள் தரிசனையால் மருவி மனோசந்தோஷமடையும் பொருட்டு வந்தேன்" என்று அவர் சொன்னார். அதற்கு புலைலு றஹிமகுல்லா அவர்கள் அவரை நோக்கி "அல்லாஹ்வின் மீது ஆணையாக இது பிறட்டிக்கு மிக நெருங்கின வார்த்தையாயிருக்கிறது. நீர் வந்ததெல்லாம் என்னை நீர் பொய்ப்புகழாய்ப் புகழவும், உம்மை நான் பொய்ப்புகழாய்ப் புகழவும், என்மேல் நீர் பொய்யுரை கூறவும், உம்மேல் நான் பொய்யுரை கூறவும், நீர் முனாபிகாகி இங்கிருந்து புறப்படவும், அல்லது நான் முனாபிகாகி இவ்விடத்தைவிட்டு எழும்பவுமேயன்றி வேறொன்றுக்கும் நீர் வரவில்லை" என்று சொன்னார்கள். எவனொருவன் இம்மாதிரியான பேச்சுகளை விட்டும் பேணிக்கொள்ளக் கூடியவனாயிருக்கிறானோ அவன் ஏகாந்தியாயிருப்பதில் குற்றமில்லை. ஸலபுகளான முன்னோர்கள் ஒருவரை மற்றொருவர் கண்டால் நியாய சம்பந்தமான சங்கதி ஒன்றையும் விசாரிக்கமாட்டார்கள். தீன்



சம்பந்தமான சங்கதியை விசாரிப்பார்கள். ஹாத்திமுல் அஸம்மு றஹிமகுல்லா அவர்கள் ஹாமிது லப்பாபு றஹிமகுல்லாவைக் கண்டு "நீர் எப்படியிருக்கிறீர்" என்று வினவினார்கள். அதற்கவர்கள் "நான் ஸலாமத்திலும் ஆபியத்திலுமிருக்கிறேன்" என்க, "ஸலாமத்தானது ஸிறாத்தென்னும் பாலத்தைத் தாண்டின பிறகும் ஆபியத்தானது சொர்க்கம் போனபிறகும் உண்டாகும்" என்று ஹாத்திமுல் அஸம்மு றஹிமகுல்லா அவர்கள் சொன்னார்கள். ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களிடத்தில் "தாங்கள் எப்படியிருக்கிறீர்கள்?" என்று கேட்கப்பட்டால், அதற்கவர்கள் "எதில் எனக்கு இலாபமுண்டோ அது என்கையில் இல்லை" என்றும், "எதில் எனக்கு நஷ்டமிருக்கிறதோ அதைத் தட்டி விலக்க எனக்குச் சக்தியில்லை" என்றும், "நான் என் காரியத்திலிருக்கிறேன். அந்தக் காரியமானது மற்றொருவனுடைய கையிலிருக்கிறது" என்றும், "பின்னர் என்னிலும் அதிக திட்டாக்கியமுள்ள ஏழை எவனுமில்லை" என்றும் சொல்லுவார்கள். றபீஉப்னு கைதம் றஹிமகுல்லா அவர்களை "நீர் எப்படி இருக்கிறீர்?" என்று வினவினால், "நான் பலமற்றவனும், பாவியுமாய், என் இரணத்தைத் தின்றுகொண்டும், மரணத்தை எதிர்பார்த்துக்கொண்டு மிருக்கிறேன்" என்று சொல்லுவார்கள். அபுத்தர்தா றலியல்லாகு அன்கு அவர்களை "நீர் எப்படியிருக்கிறீர்" என்று கேட்டால், "நரகத்தைவிட்டும் நான் அச்சந்தீர்வேனாகில் க்ஷேமந்தான்" என்று சொல்லுவார்கள். உவைசுல்கர்னீ றஹிமகுல்லா அவர்களை "நீர் எப்படியிருக்கிறீர்?" என்று கேட்டால், "எந்த ஒரு மனிதன் காலையானால் அவன் மாலைவரையில் ஜீவிப்பானோ? இல்லையோ? என்பது தெரியாதவனும், மாலை நேரமானால் காலைவரையில் ஜீவிப்பானோ? இல்லையோ? என்பது தெரியாதவனுமாயிருக்கிறானோ அவன் எப்படியிருப்பான்?" என்று சொல்லுவார்கள். மாலிக்குப்னு தீனார் றஹிமகுல்லா அவர்களை "நீர் எப்படியிருக்கிறீர்?" என்று கேட்டதற்கு, "எந்த மனிதனுடைய வயசு குறைந்துகொண்டும், பாவம் அதிகரித்துக்கொண்டுமிருக்கிறதோ அவன் எப்படியிருப்பான்?" என்று சொன்னார்கள். ஓர் ஞானியான பண்டிதரை "நீர் எப்படியிருக்கிறீர்?" என்று கேட்டதற்கு, "நான் அல்லாஹுதஆலாவுடைய இரணத்தைத் தின்றுகொண்டு அவனுடைய பகைவனான இப்லீசுடைய ஏவலைப் பிடித்து நடக்கிறேன்" என்று சொன்னார். முகம்மதுப்னு வாசிகு றஹிமகுல்லா அவர்களை "நீர் எப்படியிருக்கிறீர்?" என்று கேட்டதற்கு, "தினமொருமஞ்சிலாய் ஆகிறத்துக்கு நெருங்கிக்கொண்டிருக்கிற ஒருமனிதன் எப்படியிருப்பான்?" என்று சொன்னார்கள். ஹாமிது லப்பாபு றஹிமகுல்லா அவர்களை "நீர் எப்படியிருக்கிறீர்?" என்று கேட்டதற்கு, "ஒரு தினம் சுகமாயிருக்க ஆசையுள்ளவனு

யிருக்கிறேன்" என்றார்கள். அதற்கு "நீர் இப்போது சுகமாயிருக்கவில்லையோ?" என்று கேட்டதற்கு, "எவனால் யாதொரு பாவம் சம்பவிக்காமலிருக்கிறதோ அவனே சுகமுள்ளவனாவான்" என்று சொன்னார்கள். பெரியோர்களில் ஒருவர் மரணமாகிற சமயத்தில் "நீர் எப்படி யிருக்கிறீர்?" என்று அவரைக் கேட்டதற்கு, "வழியின் உணவில்லாமல் நீடான சபர்போகிறவனும், கூடயிருக்கத் துணையில்லாமல் இருட்டறையான கபுருக்குப்போகிறவனும், சமாதானஞ்சொல்லயாதொரு ஆதாரமில்லாமல் நீதியுள்ள பாதுஷாவினிடம் போகிறவனுமான ஒரு மனிதனுடைய கதி எப்படியாயிருக்கும்?" என்று சொன்னார். ஹஸ்ரத்து துன்னூன் றகிமகுல்லா அவர்களை "நீர் எப்படி யிருக்கிறீர்?" என்று கேட்டதற்கு, "எவனொருவன் சாகக் கடமைப்பட்டவனும், பின்பு எழுப்பிக் கணக்குக் கேட்கப்படுகிறவனுமாயிருக்கிறானோ அவன் கதி எப்படியா யிருக்கும்?" என்று சொன்னார்கள். இபுனு ஸீரீன் றகிமகுல்லா அவர்கள் ஒருவரிடத்தில் "நீர் எப்படி யிருக்கிறீர்?" என்று வினவ, "அவர் ஐந்நூறு திருஹம் கடன்கொடுக்கவேண்டியவனும், குடும்பஸ்தனும், கையில் ஒன்றுமில்லாதவனுமாயிருக்கிற ஒரு மனிதனுடைய கதி எப்படியிருக்கும்" என்று சொன்னார். இபுனு ஸீரீன் றகிமகுல்லா தங்கள் வீட்டுக்குப்போய் ஆயிரம் திருஹங்களைக் கொண்டுவந்து அவருக்குத் தந்து, "நீர் ஐந்நூறு திருஹங்களைக் கடனில் கொடுத்து ஐந்நூறு திருஹங்களைக் குடும்பச்செலவுக்கு வைத்துக்கொள்ளும்" என்று சொன்னார்கள். அன்றியும் "இனிமேல் நான் எவரையும் நீர் எப்படி யிருக்கிறீர்? எனக் கேட்பதில்லையென்று இருதயம் வைத்துக்கொண்டேன்" என்றும் சொன்னார்கள். தாங்கள் வினவின அந்த மனிதனுடைய கவலையை நிவர்த்திசெய்து அவர் மனதை ஆற்றுமற்போனால் தங்களுடைய வினவலானது முனாபிக்குத்தனமாயிருக்குமென்று இவர்கள் பயந்ததினாலேயே இப்படிச் செய்தார்கள். பெரியோர்கள் சொல்லியிருக்கிறதாவது:- "நாங்கள் சில மனிதர்களைப் பார்த்திருக்கிறோம். அவர்கள் ஒருவருக்கொருவர் அற்பமே சலாம் சொல்லமாட்டார்கள். ஒருவர் மற்றொருவரிடத்தில் ஏதாவது கேட்டால் தங்களிடத்தில் உள்ளதைக்கொண்டு உதவிசெய்வார்கள். இப்போது சிலஜனங்களிருக்கிறார்கள். இவர்கள் ஒருவரையொருவர் கண்டுகொள்ளப்போவதில் வீட்டுக்கோழியையுங்குறித்து விசாரிக்கிறார்கள். ஒருவரையொருவர் அப்புக்காவது ஒரு திருஹம் கேட்டால் இல்லையெனும் மறுப்பையேயன்றி எதனைக் காண்கிறதில்லை. இது முனாபிக்குத்தனமேயொழிய வேறல்ல" என்பதே. பின்னர் ஜனங்களுடைய குணம் இவ்விதமாக மாறியிருந்தால் இவர்களோடு சகவாசிப்பவன் இவர்களுக்கு இணங்கி



கடப்பானாகில் இதில் கள்ளமென்றும் பொய்யும் கலந்துகொள்ளும். மாறாக கடப்பானாகில் இவர்கள் அவன்மேல் பகைவைத்து அவனுக்குக் கல்நெஞ்சனென்று பெயரிடுவதுந்தவிர எப்போதும் அவனைப்பற்றிப் புறங்கூறிக்கொண் டிருப்பார்கள். இவர்களால் அவனுடைய தீனும் அவனால் இவர்களுடைய தீனும் கெடுதியை அடையும். இவ்விசகவாசத்தில் உண்டாகிற நாலாவதுபாவம் யாதெனில், நீ சரீரத்தில் சகவாசஞ்செய்வாயோ அவர்கள் குணமானது உனக்குத் தெரியாதபடி உன்னில் உறையும். உன் மனமானது உனக்குத் தெரியாமல் அவர்களுடைய இயற்கையை எடுத்துக்கொள்ளும். மறதியாளரோடு சகவாசஞ்செய்தால் அது அநந்தம் பாவங்களுக்கு ஆதாரமான விதையாய்ப் போகவுங்கூடும். ஏனென்றால், யாராவதொருவன் துன்யாதாரான செல்வர்களையும் துன்யாவின்மேல் அவர்கள் கொள்ளும் ஆவலையும் காண்பானாகில் அவனிலும் அம்மாதிரியான குணம் வெளியாகும். இன்னும் யாராவதொருவன் அசுத்தையான பாவஞ் செய்பவர்களைக் காண்பானாகில் அந்த பாவத்தைப்பற்றி முதலில் அவன் நிராகரிப்பவனாயிருந்தாலும் அனேக அதிகமாய்ப் பார்ப்பதினால் பின்பு அது அவன் கண்ணுக்கு அற்பமாய்ப் போகின்றது. எந்தப்பாவத்தை அதிகமாய்ப் பார்க்கிறார்களோ அந்தப் பாவத்தைப்பற்றிய நிராகரிப்பு மனதிலிருந்து நீங்கிவிடுகின்றது. இது காரணத்தினாலேயே பட்டாடை அணிந்திருக்கிற ஒரு ஆலிமைக்கண்டால் எல்லாரும் அதை நிராகரிக்கின்றார்கள். ஆனால் அந்த ஆலிம் நாள் முழுவதும் புறம்பேசிக்கொண்டிருந்தால் அதைப்பற்றி ஒருவருடைய மனதிலும் நிராகரிப்பு உண்டாகிறதில்லை. புறம்பேசுவதானது பட்டாடை உடுப்பதிலும் ஜினாச் செய்வதிலும் கடினமான பாதகமாயிருக்கிறது. என்றிருந்தும், இதை அதிகமாய்க் கண்டுகொண்டும் கேட்டுக்கொண்டு மிருப்பதால் இது தீயதென்பது எவருடையமனதிலும் இல்லாமல் எடுபட்டுப் போயிற்று. மறதியாளரோடு சகவாசிப்பது மாத்திரமல்ல, மேலும் அவர்களுடைய சங்கதிகளைக் கேட்பதும் கெடுதியாயிருக்கிறது. எதுபோலெனில் அவ்லியாக்களுடையவும் ஆன்றோர்களுடையவுமான சங்கதிகளைக் கேட்பதில் நன்மையுண்டாகுவதுபோலவும், எடுத்துப்பேசுவதில் றகமத்து இறங்குவதுபோலவுமாம். "சாலிஹீன்களுடைய சங்கதிகளை எடுத்துப் பேசும்போது றஹ்மத்து இறங்கும்" என்று ஹதீஸில் வந்திருக்கிறது. றஹ்மத்து இறங்குவதற்குக் காரணம் யாதெனில், யாராவதொருவன் அவர்களுடைய அஹ்வால்களைக் கேட்பானாகில் அவனுக்குத் தீனிடையில் விருப்பமுண்டாகும். துன்யாவுடைய விருப்பங்குறையும். இதே றஹ்மத்து இறங்குவதற்குக் காரணமாம். இதுபோலவே மறதி

ருடைய அஹ்வால்களைக் கேட்பதானது துன்யாவுடைய விருப்பத்தையுண்டாக்குவதால் அதை ஒழிக்கப்பிரயாசைப்படுவது விசேஷத்து இரக்கு வதற்குக் காரணமாகும். ஆகவே மறுமையாளரைக் காண்பது மிகவும் கெட்டதாயிருக்கும். இதனாலேதான் ரசூல் சல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் கெட்ட சகவாசிக்குக் கருமானை உபமானமாக்கி "அவன் உன் வஸ்திரத்தைக் கொளுத்தாமற்போனாலும் புகையானது உன்னில் படியும்" என்றும், நல்ல சகவாசிக்கு அத்தர்காரனை உபமானித்து "அவன் தன் கஸ்தூரியை உனக்குக் கொடுக்காமற்போனாலும் வாசனையானது உனக்கு வீசும்" என்றும் திருவுளமானார்கள். ஆகவே துர்ச்சனங்களோடு சகவாசிப்பதிலும் ஏகாங்கியாய்த் தனிப்பதே மேல் என்றும், ஏகாங்கியாய்த் தனிப்பதிலும் சற்சன சகவாசமே மேல் என்றும் இந்த ஹதீதினால் நீ தெரிந்துகொள். பின்னர் எவனுடைய சகவாசமானது துன்யாவுடைய விருப்பத்தை உன் மனதிலிருந்து நீக்கி உன்னை அல்லாஹு தஆலாவின் பக்கம் அழைக்குமோ அவனுடன் கலந்திருப்பது பெரிய கொள்ளை பாக்கியமாயிருக்கிறது. ஆகலால் நீ அவனுடன் சகவாசிப்பவனாயிரு. இன்னும் எவனுடைய நிலைமை இதற்கு மாறுபாடாயிருக்கிறதோ அவனை விட்டும் தூரமாயிரு. அறிவும் சொற்பமாகத் துன்யாவின்மேல் ஆவல்கொண்டவனும், சொல்லும் செயலும் சரியாயில்லாதவனுமாயிருக்கிற ஆலிமைவிட்டும் தூரமாய்விடு. இவனுடைய சகவாசமானது சாகடிக்கிற நஞ்சாயிருக்கிறது. அன்றியும் இல்மைப் பெருமைப்படுத்துவதென்னும் மதிப்பை மாசற்ற மனதிலிருந்து நீக்கிவிடும். ஏனென்றால் இல்மாம் என்பதற்கு மூலதாரமிருந்தால் அதன்படி நடந்துகொள்ள இந்த ஆலிம் நம்மிலும் அதிக கடமைப்பட்டவனாயிருக்கிறான் என்று இவனுடன் சகவாசிப்பவன் தன் மனதிற் சொல்லிக்கொள்ளுவான். ஒரு தட்டு நிறைய பாதாம் ஹல்வாவைத் தனக்கெதிரில் வைத்து மிக ஆவலாய்த் தின்றுகொண்டிருக்கிற ஒருவன் மற்ற ஜனங்களைப் பார்த்து "ஏ ஜனங்களே! நீங்கள் இதைவிட்டும் தூரமாயிருங்கள். இது முழுமையும் பாஷாணமாயிருக்கிறது" என்று கூவிக்கூவிச் சொன்னால் இதை ஒருவரும் நம்பிக்கொள்ளமாட்டார்கள். அவன் அப்படிக் குவிகாமாய்த் தின்பது அதில் பாஷாணமில்லையென்பதற்கு அத்தாட்சி என்று சொல்லுவார்கள். அநேக ஜனங்கள் ஹராமான பொருளைத் தின்பதற்கும் பாவஞ்செய்வதற்கும் அஞ்சுகிறதில்லை. ஆனால் ஒரு ஆலிம் அப்படிச்செய்கிறதாய் அவர்கள் கேள்விப்பட்டால் அப்போது அவர்களும் அவ்விதம் செய்யத் துணிந்துவிடுகிறார்கள். இதன் நிமித்தமே ஆலிமுடைய யருவம் சிதைத்துப்போவது ஹராமாயிருக்கிறது. இது ஹராமென்றதற்கு



இரண்டு காரணங்களுண்டு. முதலாவது:-இது புறங்கூறலாயிருக்கிறது. இரண்டாவது:-இவனுடைய அந்த வழுவை ஆதாரமாகக்கொண்டு மற்றவர்கள் துணிகரமுள்ளவர்களாய் அந்த வழுவில் அவனைப்பின்பற்றுவார்கள். ஷைத்தான் அதற்கு தனியாயெழுந்து "கடைசியாய் நீ இன்ன ஆலிமைக்காட்டிலும் அதிகபெருமையும்பேணுதலுமுள்ளவனோ?" என்று சொல்லுவான். ஆமியென்னும் சாமானியன் ஆலிமிடத்தில் யாதொரு குற்றத்தைக் கண்டால் இரண்டு காரியங்களை யோசிப்பது அவன்மேல் கடமையாகும். முதலாவது:—ஆலிம் குற்றம் செய்தால் அந்தக்குற்றம் நிவாரணமாவதற்கு அவனுடைய இல்மே காரணமாயிருக்கக்கூடுமென்றும், இல்மானது பெரிய மன்றாட்டம் செய்வதாயிருக்கிறதென்றும், சாமானியனுக்கு இல்மில்லையாதலால் அவன் நல்ல அமல்களைச் செய்யாமற்போனால் மீட்சிபெற அவனுக்கு என்ன ஆதாரமிருக்கிறதென்றும் எண்ணிக்கொள்ளவேண்டும். இரண்டாவது:—ஹராமான பொருளைத் தின்பது கூடாது என்று ஆலிம் அறிந்திருப்பதுபோன்று சாராயம் குடிப்பதும் ஜினாச்செய்வதும் கூடாது என்று சாமானியன் அறிந்திருப்பதுபோலவேயாம். மதுபானமும் விபசாரமும் ஆகாதென்று இவ்வளவு அறிவில் எல்லாரும் ஆலிமாயிருக்கிறார்கள். ஆகவே ஒரு சாமானியன் சாராயம் குடிப்பதை ஆதாரமாகக் கொண்டு மற்றவர் அப்படிச்செய்யத் துணியாமலிருப்பதுபோல் ஒரு ஆலிம் ஹராமானபொருளைத் தின்பதிலும் அப்படியேயாம். அன்றியும் பெரும்பான்மையில், எந்த மனிதர்கள் பேருக்குமாத்திரம் ஆலிமாயும் இல்முடைய ஹகீகத்தை மறந்தவர்களாயுமிருக்கிறார்களோ அந்த மனிதர்களே ஹராமைத் தின்பதின்பேரில் துணிகரம் செய்கிறார்கள். அல்லது அவர்கள் செய்கிற அக்காரியத்துக்கு யாதொரு சமாதானமாவது தாவீலாவது அறிந்திருப்பார்கள். அது சாமானியருக்குத் தெரியாது என்று எண்ணிக்கொள்ளவேண்டும். சாமானியன் கெட்டுப்போகாமலிருப்பதற்கு ஆலிம் விஷயத்தில் இதை அவன் கவனித்துக்கொள்ள வேண்டும். இதற்குதாரணமாகவே ஹிழுறு அலைஹிஸ்ஸலாமுக்கும் மூஸா அலைஹிஸ்ஸலாமுக்கும் நடந்தஸர் ஆகமம் அதாவது ஹிழுறு அலைஹிஸ்ஸலாம் கப்பலைத் துளைத்ததும் மூஸா அலைஹிஸ்ஸலாம் அதை மறுத்ததுமான சரித்திரம் குர்ஆனில் கூறப்பட்டிருக்கிறது. மேற்சொல்லி வந்தவைகளின் மொத்தக் கருத்தேதுவெனில், இக்காலத்தில் பெரும்பாலோருடைய சகவாசத்தில் கஷ்டமிருக்கிறதென்பதும், ஏகாங்கியாய்த் தனிப்பதே பெரும்பாலாருக்கு மிக உத்தமமாயிருக்கிறதென்பதுமேயாம்.

மூன்றாவது பிரயோசனம்:—எந்தப் பட்டணமும் சண்டை கலகம் பாபங்களும் இவைகளைவிட்டும் ஒழிந்திருப்பதில்லை. எவனொருவன்

ஏகாந்தியாய்த் தனித்தானே அவன் இந்தச் சண்டையாதி சல்லியங்களிலிருந்து நீங்கினான். ஜனங்களின் நடுவே சகவாசியா யிருப்பானாகில் அவனுடைய தீனில் இடையூறு சம்பவிக்கும். அப்துல்லாஹிப்னு அம்ருப்னில்ஆஸ் றலியல்லாகு அன்குமா சொல்லுகிறதாவது:—"றசூல் சல்லல்லாகு அலைஹிவசல்லமவர்கள் (என்னை நோக்கி, அய் அப்தல்லா!) ஜனங்கள் இப்படிக் கோபப்படுகிறவர்களாயும், கை பிசைந்து வருந்தப்படுகிறவர்களாயு மிருப்பதை நீ கண்டால் வீட்டுக்குள் தனித்துவிடு. நாவைப் பேணிக்கொள். அறிந்ததைக்கொண்டு அமல் செய். அறியாததை விட்டுவிடு. உன் சொந்தவேலையில் பராக்காயிரு. மற்ற ஜனங்களுடைய காரியங்களைத் தள்ளிவிடு" என்று திருவுளமானார்கள்" என்பதே. அப்துல்லாஹிப்னு மஸ்ஊது றலியல்லாகு அன்கு ரிவாயத்து செய்கிறதாவது:—"றசூல் சல்லல்லாகு அலைஹிவசல்லமவர்கள் "மனிதருக்கு ஒருகாலம் வரும்" என்றும், "அக்காலத்தில் மனிதனானவன் நரியைப் போல் ஒளிந்து ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்கும், ஓர் மலையிலிருந்து மற்றோர் மலைக்கும், ஓர் பொந்திலிருந்து மற்றோர் பொந்துக்கும் ஓடிப்போகாதவரையில் அவனுடைய தீன் சலாமத்தா யிராது" என்றும் திருவுளமானார்கள். அப்போது அஸ்ஹாபுகள் "யாறசூலல்லா! அந்தக்காலம் எப்போது வரும்?" என்றார்கள். அதற்கு நாயகமவர்கள் "எந்தக்காலத்தில் பாவமில்லாமல் ஜீவனம் சம்பாதிக்க முடியாதோ அந்தக் காலமே அது" என்றும், "அப்போது நிகாகில்லாமல் கன்னியாசமாயிருப்பது ஹலால் ஆகும்" என்றும் திருவுளமானார்கள். அதற்கு அஸ்ஹாபுகள் "அது ஏன்? யாறசூலல்லா! நிகாகு செய்யும்படி தாங்கள் எங்களுக்கு ஆக்கியாபித்திருக்கிறீர்களே?" என்று கேட்டார்கள். அதற்கு நாயகமவர்கள் "அந்தக்காலத்தில் மனிதனுடைய மரணமாகிறது மாதாபிதாக்களுடைய கைகளின்மீதிருக்கும். அவர்களிறந்துபோயிருந்தால் மனைவி மக்களுடைய கைகளின்மீதிருக்கும். அவர்களில்லாமற்போனால் பந்துக்களுடைய கைகளின்மீதிருக்கும்" என்று திருவுளமானார்கள். அதற்கு அஸ்ஹாபுகள் "அது எப்படி? யாறசூலல்லா!" என்று கேட்க, "அவன் கைநெருங்கிய தரித்திரனாயிருப்பதைப்பற்றி அவர்கள் அவனை நிந்தித்துப் பேசுவார்கள். இவ்வும் அன்றேல் இயலாத ஒருபொருளை அவனிடத்தில் கேட்பார்கள். அப்போது (அந்த வாதனை பொறுக்காமல்) அவன் தன் உயிரை மாய்த்துக்கொள்ளுவான்" என்று திருவுளமானார்கள்" என்பதே. இந்த ஹதீஸால் நிகா இல்லாமலிருப்பதைப்பற்றி வந்ததேன் றாலும் ஏகாந்தியாய்த் தனிப்படுதல் இதனால் ஏற்படுகின்றது. றசூல் சல்லல்லாகு அலைஹிவசல்லமவர்கள் முன் அறிக்கையாய்ச் சொல்லியிருந்த அந்தக்காலம் நமக்கு



வெகுநாளைக்கு முன்னே வந்துவிட்டது. சுபியானுஸ் ஸவ்ரி றகிமகுல்லா அவர்கள் தங்கள் காலத்திலேயே "அல்லாவின்மீது ஆணையாக இப்போது நிகாகில்லாமலிருப்பது ஹலாலாய் விட்டது" என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

நாலாவது பிரயோசனம்:—ஜனங்களுடைய தீங்குகளிட்டும் பிட்சி பெறுவதும் சுகத்தை யடைவதுமாம். ஜனங்களின் நடுவே சகவாசியா யிருக்கிறவரையில் அவர்கள் புறங்கூறுவதாலும் தூஷணங்கொள்வதாலும் உண்டாகிற வருத்தத்தைவிட்டும் ஒழிந்திருக்க முடியாது. அசாத்தியமான பொருளின் ஆசையிலிருந்து அகலமுடியாது. ஜனங்களுடைய புத்திக்கெட்டாத (இழிவான) ஓர் செயல் இவனால் சம்பவிக்கக்கூடும். அதைக் கண்ணுற்றவர்கள் இவனைத் தூஷிப்பார்கள். அன்றியும் மௌத்துசேதி ஈவல், மங்கள வாழ்த்து கூறல், வந்த விருந்தினரை உபசரித்தல் இப்படி எல்லாருடைய கடமைகளையும் நிறைவேற்ற முயற்சிப்பானாகில் இக்காரியங்களிலேயே இவன் காலமெல்லாம் கழிந்துபோம். தன் காரியத்தில் பராக்காக முடியாது. இக்காரியங்களில் சிலதை மாத்திரம் குறிப்பிட்டுக் கொள்ளுவானாகில் மற்றவர்கள் இவன்மேல் வெறுப்புற்று இவனைத் தொந்திரவு செய்வார்கள். ஏகாந்தியாய்த் தனிப்பானாகில் ஒருமிக்க எல்லாவற்றையும் விட்டுப் பிட்சிபெறுவான். எல்லாரும் இவன்மேல் பொருத்தமாயிருப்பார்கள். பெரியோர்களில்நின்றும் ஒருவர் எப்போதும் தனித்தவராய் கபுருஸ்தானில் கொப்பும் கையுமாய் உட்கார்ந்துகொண்டிருப்பார். "நீர் ஏன் இப்படிச் செய்கிறீர்?" என்று அவரைக்கேட்டதற்கு, "ஏகாந்தியாய்த் தனிப்பதினும் மேலாக எந்த ஹாலையும் சலாமத்துக்கு இணக்கமானதாய் நான் காணவில்லை" என்றும், "கபுருக்கு ஒப்பான உபதேசி ஒருவரையும் நான் அறியவில்லை" என்றும், "தொடைப்போன்ற துணைவர் ஒருவரையும் நான் பார்க்கவில்லை" என்றும் சொன்னார். ஷைகுமார்களில் ஒருவராயிருந்த சாபித்தால் புனானி றகிமகுல்லா அவர்கள் அசத்புசரி றகிமகுல்லா அவர்களுக்குக் கடிதம் எழுதி "நீர் ஹஜ்ஜுக்குப்போகிறதாய்க் கேள்விப்பட்டேன். நானும் உம்முடன் வர நாடுகிறேன்" என்று கேட்டதற்கு, "அல்லாகுத்த ஆலாவுடைய திரையாகிய மறைப்பிலிருந்து நான் உயிர்வாழ என்னை விட்டுவிடும். நாமிருவரும் ஒன்றாய்ச் சேர்வோமாகில் நமக்குள் பகையுண்டாகும்படியான யாதொரு காரியம் நம்மால் சம்பவிக்கக் கூடுமாதலால் இது ஏகாந்தியாய்த் தனிப்பதினுண்டாகிற பிரயோசனத்துக்கு இடையூறாயிருக்கும். மனுஷத்தன்மை மறைந்திருக்கிறவரையில் பாபங்கள் ஒன்றும் வெளியாகாது. இல்லையாயின் நாம்

ஒருவருக்கொருவர் காணாததும் கேட்காததுமான வஸ்துக்கள் நம்மிலிருந்து வெளியாகும் என்று விடையளித்தார்கள்.

ஐந்தாவது பிரயோசனம்:—ஜனங்கள் இவனிடம் யாதொன்றை ஆசிப்பதும் ஜனங்களிடம் இவன் யாதொன்றை ஆசிப்பதும் அற்றுப்போவதாம். இந்த இரண்டு ஆசையினால் அநேகம் துன்பங்களும் பாவங்களும் பிறக்கின்றன. ஏனென்றால், துன்யாதாரான செல்வர்களை இவன் பார்க்கும்போது இவனில் ஆவல் பிறக்கும். ஆவலைத்தொடர்ந்து ஆசையும் ஆசையைத் தொடர்ந்து சிறுமையும் உண்டாகும். இதனாலேதான் அல்லாகுதஆலா (நமது நாயகம் றசூல்சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களை முன்னிலையாக்கி) "நாம் பற்பல ஜனங்களுக்கும் பலிமாரக் கொடுத்திருக்கிற பாக்கியமான செல்வத்தை நீர் உமதிருவிழியால் ஏறெடுத்துப் பார்க்கவேண்டாம்" என்று திருவுளம்பற்றினான். அன்றியும் "இவர்களுடைய பகட்டான துன்யாவைப் பார்க்கவேண்டாம்" என்றும், "அது இவர்களுக்கு பித்னாவாயிருக்கிறது" என்றும், "துன்யா விஷயத்தில் உங்களிலும் மேலாயிருக்கிறவர்களை நீங்கள் பார்க்கவேண்டாம்" என்றும், "பார்ப்பீர்களாகில் நீங்கள் அடைந்திருக்கிற நிஃமத்து உங்கள் பார்வைக்கு அற்பமாய்த் தோன்றும்" என்றும் றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும் சொல்லியிருப்பதாவது:—"யாராவதொருவன் பிறர்களுடைய செல்வத்தைப் பார்த்து அதைத்தேட முயலுவானாகில் அது கிட்டவுங் கிட்டாது. அதனால் அவனதுடைய முயற்சிக்கு நஷ்டமுண்டாகும். அதைத் தேடாமல் சும்மாயிருந்தால் அந்த ஆசையை வெல்லப் போர் புரியவும் சபுருசெய்யவும் நேரிடும். இதுவும் கஷ்டமேயாம்" என்பதே.

ஆறாவது பிரயோசனம்:—உயிர்கனத்தவர்களான சோம்பேறிகளையும், வன்னெஞ்சர்களையும், அறிவிலிகளான மூடர்களையும், இன்னும் எவர்களைப் பார்ப்பதில் இயல்பாகவே மனதுக்கு அருவருப்புண்டாகுமோ அவர்களையும் பார்க்காதபடி தப்பித்துக்கொள்ளுவான். அஃமஷு றஹிமகுல்லா அவர்களை "உமது கண்ணில் ஏன் இடைஞ்சல் சம்பவித்தது?" என்று கேட்டதற்கு, "உயிர் கனத்தவர்களைப் பார்த்ததினால்" என்று சொன்னார்கள். இன்னும் "தேகத்துக்கு ஜுரமிருக்கிறதுபோல் ஆன்மாவுக்கும் ஜுரமிருக்கிறது" என்றும், "உயிர்கனத்தவர்களைப் பார்ப்பதே ஆன்மாவின் ஜுரம்" என்றும் ஜாலீனூஸ் ஹகீம் சொல்லுகிறார். இன்னும் ஷாபிஈ றழியல்லாகு அன்கு சொல்லுகிறதாவது:—"நான் உயிர்கனத்த எந்த மனிதனுக்கு அருகில் உட்-



கார்ந்தாலும் அவன் பக்கமாயிருந்த எனது பாரிசம் எனக்குக் கனமாகவே இருக்கக் கண்டேன்" என்பதே. இது துன்யா சம்பந்தமான பிரயோசனமாயிருந்தபோதிலும் இத்துடன் தீனும் சம்பந்தப்பட்டிருக்கிறது. ஏனென்றால், கண்ணுக்கு அசங்கிதமாயிருக்கிற ஒருமனிதனைப் பார்த்தால் அப்போது நாவினாலாவது மனதினாலாவது அவனைப்பற்றிப் புறம்பேசத்தொடங்குவான். தனித்திருப்பானாகில் இவையெல்லாவற்றையும் விட்டு சலாமத்தை அடைவான். இவைகளே ஏகாங்கியாய்த் தனிப்பதிலுண்டாகிற பிரயோசனங்களாம்.

### ஏகாங்கியாய்த் தனிப்பதிலுண்டாகிற ஆபத்துகளின் பயான்.

அறிந்துகொள்:—ஜனசம்பந்த முன்னாவும் துன்யாசம்பந்த முன்னாவுமான சில காரியங்கள் மற்றவர்களுடைய சம்பந்தத்தினாலன்றி உண்டாகமாட்டா. சகவாசியாயிருப்பதினாலேயே அவை சரிகட்டிவரும். ஏகாங்கியாய்த் தனிப்பதிலோ அவை தப்பிப்போகின்றன. அப்படித் தப்பிப்போவதே தனிப்பதிலுண்டாகிற ஆபத்தாகும். அந்த ஆபத்துகளும் ஆறேயாம்.

முதலாவது ஆபத்து:—இல்மு படிக்கவும் படிப்பிக்கவும் ஏகாந்தத்தில் கூடாமலிருப்பதாம். யாராவதொருவன் தன்மேல் பர்லாக்கப்பட்ட இல்மைக் கற்றுக்கொள்ளாமலிருந்தால் ஏகாந்தம் அவனுக்கு ஹறாமாகும். பர்லாக்கப்பட்ட இல்மைப் படித்துக்கொண்டவனும் மற்ற இல்முகளைப் படிக்கவும் விளங்கிக்கொள்ளவும் திறமையில்லாதவனுமாயிருந்தால் அவன் இபாதத்துக்காக ஏகாங்கியாய்த் தனிக்கலாம். அவனோ அவனுடைய இல்முகளையெல்லாம் பூரணமாய்ப் படித்துக்கொள்ளத் திறமையுள்ளவனாயிருந்தால் ஏகாங்கியாய்த் தனிப்பது அவனுக்குப் பெரிய நஷ்டமாயிருக்கும். ஏனென்றால், யாராவதொருவன் இல்மைக் கற்பதற்கு முன்னே ஏகாந்தத்தை எடுத்துக்கொள்ளுவானாகில் அவன் அதிக நேரத்தை நித்திரையிலும் விருதாவிலும் பற்பல சிந்தனைகளிலும் வீண்போக்குவான். நாள்முழுவதும் இபாதத்தில் பராக்காயிருப்பானாகில் அவனுக்கு இல்மின் பலமில்லாமையால் அவன் இபாதத்தில் கர்வமும் மோசமும் இல்லாமற் போகாது. ஆதாரமும் ஆதாரமில்லாததுமான நினைவுகள் அவனது நினைவில் வராமலிரா. அல்லாகு தஆலாவின் விஷயத்தில் அவனுக்கு வருகிற எண்ணங்கள் குப்ரானதாய் அல்லது பித்அத்தானதாய் இருக்கவும் கூடும். அது அவனுக்குத் தெரியாமலிருக்கும். பொதுக்க

தில் ஏகாங்கியாய்த் தனிப்பது ஆலிம்களுக்கே தகும். சாமானியருக்கல்ல. ஏனென்றால் சாமானியன் நோயாளிக்குச் சமானமாயிருக்கிறான். அவன் வயித்தியனைவிட்டு நீங்கித் தனக்குத்தானே பரிகாரம் செய்துகொண்டால் சாகவே சாவான். ஆனால் இல்மைக் கற்றுக்கொடுப்பது வலிய பதவியுள்ளதாயிருக்கிறது. ஏனென்றால், "யாராவதொருவன் இல்மைப் படித்து அதன்படி அமல்செய்து மற்றவருக்கும் படித்துக் கொடுப்பானாகில் வான்லோகங்களில் அவனை (அழீம்) வலுப்பமுள்ள சனவான் என்று அழைப்பார்கள்" என்பதாய் ஈஸா அலைஹிஸ்ஸலாம் சொல்லுகிறார்கள். ஏகாங்கியாய்த் தனிப்பதுடன் இல்மைப் போதிப்பது இசையாத காரியம். ஆகவே ஏகாங்கத்தைவிட்டு இல்மைப் போதிப்பதே மிக ஏற்றமானதாம் என்றாலும், இதற்கு விதியாவது:—படிப்பிக்கிற போதகர், படிக்கிற மாணாக்கர் இவர்களிருவருக்கும் தீனுக்காக [illegible] நிய்யத்து இருக்கவேண்டும். பெருமையும் பொருளும் சம்பாதிப்பதற்கென்று நாட்டமிருக்கக்கூடாது. தீனில் பிரயோசனமான இல்மைப் போதிக்கவேண்டும். அன்றியும் முக்கியமானதை முற்படுத்தவேண்டும். உதாரணமாக:— சுத்தத்தினுடைய பாடத்தை ஆரம்பித்தால் துணியையும் தோலையும் கழுவுகிற சுத்தம் சுருக்கமானது என்றும், இதனால் நாடியது வேறே சுத்தத்தை என்றும் அது கண், காது, நாவு, கை முதலிய எல்லா உறுப்புகளையும் பாவங்களிலிருந்து சுத்தம் செய்வதென்றும் சொல்லி, அதன் விஸ்தரிப்பையும் எடுத்துக்காட்டி, அதன்படி அமல் செய்யவும் ஆக்கியாபிக்கவேண்டும். அப்படி அவன் அமல் செய்யாமல் வேறொரு இல்மைத் தேடுவானாகில் அவன் பெருமையை நாடிப் படிப்பவனாயிருக்கிறான். இந்தச் சுத்தம் முடிந்தால் பிறகு இதனால் நாடினது இருதயத்தின் வேறே ஒரு சுத்தத்தை யென்றும், அது துன்யாவின் ஆசையிலிருந்தும் அல்லாஹு தஆலாவைத் தவிர மற்ற முன்பான பொருட்களின் ஆசையிலிருந்தும் இருதயத்தைச் சுத்தம் செய்வதென்றும் சொல்லவேண்டும். அல்லாஹு தஆலாவன்றித் தனக்கு வேறு நாயனில்லையென்னும் அவன் தன் இருதயத்தைச் சுத்தம் செய்வதே லாஇலாஹ இல்லல்லாஹு என்பதற்குப் பொருளாயிருக்கிறது. யாராவதொருவன் தன் இச்சைக்கு வழிபட்டவனாயிருப்பானாகில் திடனாக அவன் தன் இச்சையைத் தன் நாயகனாக எடுத்துக்கொண்டான். லாஇலாஹ இல்லல்லாஹு என்ற கலிமாவின் ஹகீகத்தென்னும் உட்பொருளை அறியாதவன் நிர்ப்பாக்கியனாயிருக்கிறான். முற்ற [illegible] என்றும் [illegible] அக்கினியிருப்பவை [illegible] இச்சையை [illegible]



யைத் தெரிந்துகொள்ள முடியாது. இது எல்லா மனிதர்பேரிலும் பர்லு ஐனாயிருக்கிறது. மாணாக்கன் இந்த இல்மைக் கற்பதற்கு முன்னே நஹ்வு, கலாம், ஸர்பு, மன்திக், தப்ஸீர் இவைகளின் இல்மைத் தேடுவானாகில் அல்லது வேறு மதுஹபை, அல்லது இல்முல் கலாமை, அல்லது முஃதஸிலா, கர்ராமிய்யா இவர்களின் தர்க்க வாதத்தைப் படிப்பானாகில் அவன் தீனுக்காகப் படிப்பவனல்லவென்றும், பெருமை பொருள் இவைகளைச் சம்பாதிக்க நாடியே படிக்கிறான் என்றும் எண்ணிக்கொள். அவனை விட்டும் தூரமாயிருப்பது வேண்டும். ஏனென்றால், அவனாலுண்டாகிற தீங்கு பெரிதாயிருப்பதாலென்க. தன்னை ஹலாக்கின் பக்கம் அழைக்கிற ஷைத்தானையும் தனக்குப் பெரும்பகையாளியாயிருக்கிற தனது நப்ஸையும் எதிர்த்துப் போர்புரியாமல் அபூஹனீபா, ஷாபிஈ, முஃதஸிலா இவர்களோடு தர்க்கித்து வாதம் பேச நாடுவானாகில், இதானது ஷைத்தான் இவனைத் தன் கைக்குள்ளே போட்டுக்கொண்டான் என்பதையும் இவனை அவன் நகைத்துப் பரிகாசம் செய்கிறான் என்பதையும் ரூபிக்கிற அத்தாட்சியாயிருக்கிறது. இவனுடைய மனதுக்குள்ளிருக்கிற பொறாமை, பெருமை, ரியா, அகம், துன்யாவின் ப்ரியம், பொருளாசை, பெரியதனத்தின் ஆசை இவையெல்லாம் இவனுடைய கேட்டுக்குக் காரணமான அசுத்தங்களாயிருக்கிறது. இவைகளிலிருந்து இவன் தன் இருதயத்தைச் சுத்தப்படுத்தாமல் நிகாஹு, தலாகு, சலம், இஜாரத்து இவற்றின் பத்துவாக்களில் எது மிகவும் சரியானதென்பதில் பராக்காகுவானாகில் இது இவனுக்குக் கேடேயாம். மேற்கண்ட விஷயங்களான மஸ்அலாக்களில் யாராவது பிசகிப்போயிருந்தால் (அதனால் ஏற்படுகிற தோஷம் என்னவென்றால்) அவருக்கு இரண்டு கூலிகளில் ஒரே கூலி கிடைக்குமென்பதுதான். இதற்குமேல் வேறு தோஷம் ஒன்றுமில்லை. ஏனென்றால், "ஒருவன் தனது இஜ்திஹாதினால் ஆராய்தல் செய்து நேரை அடைவானாகில் அவனுக்கு இரண்டு கூலிகளுண்டு" என்றும், "பிசகிப்போவானாகில் அவனுக்கு ஒரே கூலி கிடைக்கும்" என்றும் ரசூல் சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். ஆகவே ஷாபிஈ மதுஹபை எடுத்தாலும் ஹனபி மதுஹபை எடுத்தாலும் அதனால் ஏற்படுகிற பயன் இதற்குமேல் அதிகமானதொன்றுமில்லை. (அதாவது நேராயிருந்தால் இரண்டு கூலிகளும் பிசகாயிருந்தால் ஒரு கூலியும் கிடைக்கும் என்பதுதான்) ஆனால் மேற்கண்ட பொறாமை முதலியவைகளை இவன் தன் மனதிலிருந்து நீக்காமற்போனால் இதன் பயனானது இவனுடைய தீனுக்குக் கேடாய் முடியும். இதிலானது எப்படியாய்விட்டதென்றால், இந்த

விதிப்படி இல்மைப்படிப்பிக்க விருப்பமுள்ள ஆலிம்கள் ஒரு பெரிய பட்டணத்தில் இரண்டொருத்தருக்குமேல் அதிகமாயிருக்கமாட்டார்கள். ஆகவே இல்மைப் போதிக்கிற முதர்ரிஸுகளுக்கும் ஏகாங்கம் ஏற்றமாகும். ஏனென்றால் துன்யாவை நாடிய மாணாக்கனுக்கு இல்மைப் போதிப்பவன் வழிபறி செய்ய நாட்டமுள்ள ஒரு கள்ளனுக்குக் கத்தியை விற்பவன்போலாகுவான். இந்த இல்மினால் ஒரு சமயம் இவன் தீனின் பக்கம் திரும்பவும் கூடும் என்று சொல்லுவானாகில், இதானது வழிபறி செய்கிற கள்ளன் ஒருநாள் தவ்பாச்செய்து பீசபீல் யுத்தத்துக்குப் புறப்படவும் கூடும் என்று சொல்வதுபோலாகின்றது. வாளானது அவனைத் தவ்பாவின் பக்கம் அழைக்காது என்றும், இல்மானது இவனைத் தவ்பாச்செய்வித்து அல்லாஹ்வின்பக்கம் அழைக்குமென்றும் சொல்லுவானாகில் இதுவும் பிசகேயாம். ஏனென்றால் பத்வா, தாவா, முஆமலாத்து, இல்முல்கலாம், நஹ்வு, ஸர்பு இந்த இல்முகள் தீனில் விருப்பத்தை யுண்டாக்குவதில்லையாதலால் இவை எவரையும் அல்லாஹ்வின் பக்கம் அழைக்கிறதில்லை. மேலும் இவைகளில் ஒவ்வொன்றும் பொறாமை, விருப்பு, பெருமை, பாரபக்ஷம் என்னும் விதைகளை மனதில் தூவி அவற்றை வளர்த்து வரும். "கண்ணாற்பார்ப்பதுபோல் அல்ல காதாற்கேட்பது." ஆகலின் இந்த இல்முகளில் பராக்கா யிருந்தவர்கள் எப்படி இருந்தார்கள்? எப்படி இறந்தார்கள்? என்பதை நோட்டமிட்டுப்பார். ஆகிறத்தின் பக்கம் அழைப்பதும் துன்யாவைவிட்டு மனந்திரும்பச் செய்வதுமான இல்மு எதுவென்றால், ஹதீஸ், தப்ஸீருகளின் இல்மேயாம். இந்த இல்முகளை முஆமிலாத்து, முஞ்சியாத்துடைய குதுபுகளில் நாம் கூறியிருக்கிறோம். இந்த இல்முகளையே அவசியமாய்ப் படிப்பிக்கவேண்டும். ஏனென்றால், இவை எல்லாருக்கும் குணம் செய்யும். ஆனால், எவன் கல்நெஞ்சனாயிருக்கிறானோ அவனுக்கு அவை குணம் செய்வது அருமையேயாம். பின்பு மேற்கூறிய தக்விதிப்படி யாராவதொருவன் இல்மைப்படித்துக்கொள்ள நாடுவானாகில் அவனை விட்டும் ஏகாந்தியாய்த் தனிப்பது பெரும்பாவங்களிற் சேர்ந்ததாகும். இனியொருவன் ஹதீஸ், தப்ஸீருகளுடைய இல்மையும் மற்றும் முக்கியமான இல்முகளையும் படிப்பதுடன் அவனில் பெருமையின் நோட்டமும் மிகைத்திருக்கக் கண்டால் அவனுக்குப் படிக்கக் கொடுப்பதைவிட்டும் விலகிக்கொள்ளவேண்டும். அவனுக்குப் போதிப்பதில் மற்றவர்களுக்கு அநேகம் நன்மைகளுண்டாகுமென்றாலும் அவனுக்குக் கேடாயிருக்கும். அவன் மற்றவர்கள் மேலுயர்ந்து பலியாய்ப்போவான். "அல்லாஹுத்தஆலா உனது தீனுக்குச் சில மனிதரைக்கொண்டு உதவிசெய்வான்" என்றும், "அவர்களுக்குத்



தீனில்நின்றும் யாதொரு நஸீபுமிருக்காது" என்றும், "வீட்டுக்கு வெளிச்சத்தைக் கொடுத்துக்கொண்டு எரிந்துருகி அழிந்துபோகிற மெழுகுவத்திக்கு அவர்கள் ஒப்பாவார்கள்" என்றும் றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் அருளிச்செய்திருப்பது இதே வகையிற் சேர்ந்ததாம். இதனாலேயே பிஷ்ருல்ஹாபீ றஹிமகுல்லா அவர்கள் கேட்டுவைத்திருந்த எழுபெட்டி ஹதீஸ் கிதாபுகளைப் பூமியில் புதைத்துவிட்டார்கள். அந்த ஹதீஸ்களை மற்றவருக்கு ரிவாயத்து செய்யவில்லை. (அதைப்பற்றி அவர்களிடம் கேட்டதற்கு) "ஹதீஸ்களை ரிவாயத்து செய்யவேண்டுமென்ற இச்சை என்னில் பிறந்திருக்கக் காண்கிறேனாதலால் நான் ரிவாயத்து செய்யமாட்டேன்" என்றும், "மௌனமாயிருக்க எனக்கு இச்சையிருந்தால் நான் ரிவாயத்து செய்திருப்பேன்" என்றும் சொன்னார்கள். இன்னும் (ராவிகளில் வழங்கப்படுகிற) "ஹத்தஸனா வென்பது துன்யாவுடைய பாபுகளில் ஒன்றாயிருக்கிறது" என்றார், "ஹத்தஸனா என்று சொல்லுகிறவன் என்னை முதன்மையான ஸ்தானத்தில் உட்காரவையுங்கள் என்று முறையிடுகிறான்" என்றும் பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள். இன்னும் நாற்காலியின்மீதுட்கார்ந்திருந்த ஒருமனிதனை அவ்வழியாய்ச் சென்ற ஹலரத்து அலிறலியல்லாகு அன்கு பார்த்தபோது, "இவன் இஃறிபூனி (என்பதாய் அதாவது) நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளுங்கள் என்பதாய்ச் சொல்லுகிறான்" என்றார்கள். இன்னும் ஒருவர் உமர்றலியல்லாகு அன்கு அவர்களிடம் வந்து "நான் சுபுஹு தொழுகையின் பிறகு காலைநேரத்தில் ஜனங்களுக்கு வஃலு சொல்ல எனக்கு உத்திரவு கொடுங்கள்" என்று கேட்டார். அதற்கு அவர்கள் உத்திரவு கொடுக்கவில்லை. "அப்போதவர், யா அமீறல் மூமினீன்! நஸீஹத்து செய்வதையா தாங்கள் தடை செய்கிறீர்கள்?" என்க, அதற்கு உமர்றலியல்லாகு அன்கு அவர்கள், "ஆம், இதனால் நீர் கர்வங்கொண்டு வானத்தின்மேல் ஏறிவிடுவீர் என்று பயப்படுகிறேன்" என்றார்கள். ராபிஅத்துல் அதவிய்யா அவர்கள் சுப்யானுத் தௌரீ றஹிமகுல்லா அவர்களிடத்தில் "துன்யாவை ஆசிக்கிற குணம் உம்மில் இல்லாமற் போனால் நீர் நல்ல மனிதர்தான்" என்றார்கள். அதற்கவர்கள், "நான் ஆசிக்கிற துன்யாவாவது என்ன?" என்று கேட்க, "நீர் ஹதீஸ்களை ரிவாயத்துசெய்ய ஆசிக்கிறீர்" என்று சொன்னார்கள். அபூசுலைமான் தாறானீ றஹிமகுல்லா அவர்கள் சொல்லுகிறதாவது:—"யாராவது உங்களிடத்தில் சகவாசிக்கவும் இல்மு படிக்கவும் நாடுவார்களாகில் இக்காலத்தில் இப்படிப்பட்டவர்களை விட்டும் விலகித் தூரமாகுங்கள். ஏனென்றால், இவர்களில்

* மாலும் இல்லை ஜாஹுமும் இல்லை. வெளிப்படைக்கு சிநேகர்களாயும் அந்தரங்கத்தில் பகைவர்களாயு மிருக்கிறார்கள். முகத்துக்கு முன்னால் புகழுவார்கள். மறைந்தால் நிந்திப்பார்கள். இவர்கள் எல்லாரும் முனாபிகுகளாயும் பேச்சுப் பொருக்கிகளாயும் வஞ்சகராயும் மோசக்காரராயும் இருக்கிறார்கள். இவர்கள் தங்களுக்கு கிட்டாத கெட்ட ஆசைகளை அடையும்பொருட்டு உன்னை எஸீர்பாக்கிக்கொள்ளவும், இச்சித்த பொருளை இசையச் செய்வதற்கு நீ இவர்களை சுற்றிக்கொண்டு பட்டணமெங்கும் சுற்றிவர உன்னை ஒரு கழுதையாக்கிக்கொள்ளவும் பார்க்கிறார்கள். இவர்கள் உன்னிடத்திற்கு வருவதை உனக்கு உபகாரமென்று நினைக்கிறார்கள். அப்படி இவர்கள் வருவதற்குப் பிரதியாக கீர்த்தியையும் கௌரவத்தையும் பொருளையும் இவர்களுக்கு அளித்துவிடவேண்டும் என்றும், இவர்களுடையவும் இவர்களின் பந்துக்களுடையவும் இவர்களைச் சேர்ந்தவர்களுடையவுமான எல்லா ஹக்குகளையும் நீ இறுத்துவிட வேண்டும் என்றும், இவர்களுக்கு நீ ஓர் அப்பனாயிருக்கவேண்டும் என்றும், இவர்களுடைய பகைவர்களுக்கு நீ இறுவாய் நடந்துகொள்ள வேண்டுமென்றும் நாடுகிறார்கள். இவைகளில் ஒன்றிலாவது நீ மாற்றம் செய்வாயாகில் அப்போது இவர்கள் உன்னையும் உன் இல்மையும் குறித்து என்ன பேசுகிறார்கள் என்பதையும் எப்படி உன்னுடன் நேர் மோசம் பண்ணக்க வருகிறார்கள் என்பதையும் பிரத்தியக்ஷமாய்க் கண்டுகொள்வாய்" என்பதே. அபூசுலைமான் கத்தாபியவர்கள் சொன்னபடியே அநுபவத்தில் சரியாயிருக்கிறது. ஏனென்றால், இக்காலத்தில் பயத்துக்காகவே யன்றி ஒரு ஷாகிர்தும் உஸ்தாதை நப்புகிறதில்லை. முதலாவது இவர்கள் தங்கள் ஜீவனம் நடந்துவரவேண்டுமென்று நாடுகிறார்கள். ஏழையாகிய உஸ்தாது (என்ன செய்வார்.) ஷாகிர்துகளில்லாமற்போனால் ஜனங்களில் தமக்கு மதிப்பில்லை யென்ற நோக்கத்தினால் அவர்களை விட்டுவிடவும் இவரால் முடிகிறதில்லை. அவர்களுடைய ஜீவனம்சத்தைச் சம்பாதித்துவருவதற்கும், அக்கிரமக்காரரிடம் சென்று அவர்களுக்கு மரியாதை செய்து முகஸ்துதி செய்தல் அவர்களைச் சந்தோஷப் படுத்துவதன்றி சாத்தியப்படுகிறதில்லை. ஆகவின் ஷாகிர்துகளுக்காக இவர் தமது தீனை இழந்துவிடுகிறார். அவர்களால் இவருக்கு யாதொரு பயனும் உண்டாகிறதில்லை. ஆதலால் இந்த ஆபத்துகளை நீக்கி இல்மைப் படித்துக்கொடுக்க யாருக்கு சக்தியிருக்கிறதோ அவ

* மால் என்பது பொருள். ஜாஹ் என்பது அந்தஸ்து, கீர்த்தி, கௌரவமும் எனப் பொருள் கொண்டதாகும்.



னுக்கு ஏகாந்தத்தைக் காட்டிலும் இல்மைப் படித்துக் கொடுக்கிற வேலையே ஏற்றமாயிருக்கும்.

இப்போது ஆலிமென்னும் சாமானியன்மேல் விதியாவது:— மஜ்லிசு வைத்துப் பாடஞ்சொல்லுகிற எந்த ஆலிமையும் அவன் பார்க்கிறபோது இவர் பெருமைக்காகவும் பொருளுக்காகவும் இதைச்செய்கிறார் என்று அவர்மேல் கெட்ட எண்ணங் கொள்ளாமல் அல்லாவுக்காகவே செய்கிறார் என்று நல்ல எண்ணங்கொள்ளவேண்டும். இப்படி நல்ல எண்ணங்கொள்வதே அவன்மேல் பர்லாயிருக்கிறது. உள்ளம் அசுத்தப்பட்டிருந்தால் அதில் நல்ல எண்ணம் வராது. ஏனென்றால், ஒவ்வொருவனும் தன்னில் எது உண்டோ அது மற்றவர்களிலும் இருக்குமென நினைப்பான். பின்பு இந்தசங்கதிகள் எதற்காகச் சொல்லப்பட்டனவென்றால், ஆலிம் தன்னுடைய ஷரத்தைத் தெரிந்துகொள்ளவும், சாமானியன் அவனது நடத்தனத்தால் இதை யொரு சாக்காகப் பிடித்துக்கொள்ளாம லிருக்கவும், ஆலிம்களுடைய மரியாதையில் குறைசெய்யாம லிருக்கவும், அவனும் இந்தக் கெட்ட எண்ணத்தினால் அழிந்துபோகாம லிருக்கவுமேயாம்.

இரண்டாவது ஆபத்து:—தான் பிரயோசன மடையவும் பிறருக்குப் பிரயோசனத்தை யுண்டாக்கி வைக்கவும் கூடாமலிருப்பதாம். பிரயோசன மடைவதென்பது தொழிற்செய்வதாம். இது ஜனசகவாசத்திலன்றி சரிகட்டி வராது. குடும்பஸ்தனா யிருப்பவன் தொழிற் செய்வதைவிட்டு ஏகாந்தியாய்த் தனிப்பது தகுதியல்ல, ஏனென்றால் அதனால் குடும்ப பரிபாலனத்துக்குப் பழுது வரும். குடும்பத்தைப் பரிபாலிக்காமல் விடுவது பெரும்பாவங்களிற் சேர்ந்ததாயிருக்கிறது. குடும்பச் செலவுக்குப் போதுமான பொருள் உள்ளவனாய் அல்லது குடும்பமே இல்லாதவனாய் இருக்கிறபக்ஷம் அப்போது ஏகாந்தம் ஏற்றமானதாம், பிரயோசனத்தை யுண்டாக்குவதென்பது சதகா கொடுப்பதும் முஸ்லிம்களுடைய ஹக்குகளை நிலைப்படுத்துவதுமாம். ஏகாந்தத்தில் வெளிப்படையான இபாதத்திலன்றி வேறொன்றிலும் பராக்கில்லாதவன் (அதைவிட்டு) ஹலாலான தொழிற்செய்வதும் சதகா கொடுப்பதும் அவனுக்கு மிக மேலாயிருக்கும். அல்லாஹு தஆலாவுடைய மஃரிபாவிலும் அவனுடைய திக்ருபிக்ருகளிலும் பராக்காக அவனுக்கு மனமுழி இருந்திருந்தால் இது எல்லா இபாதத்துகளிலும் மிக மேலானதா யிருக்கிறது. ஏனென்றால் எல்லா இபாதத்துகளாலும் நாடப்பட்ட சாரம்சம் இதுவாகவே யிருப்பதினா லென்க.

மூன்றாவது ஆபத்து:—மறைவாகவும் வெளிப்படையாகவும் ஜனங்களுடைய குணங்களிலிருந்து பொருந்திய தீமைகளை அற

பவிப்பதால்) உண்டாகிற வணக்கம் ஏகாந்தத்தில் ஏற்படாது. எல்லா இம்சைகளையும் அனுபவிக்காதவனுக்கு இந்த முஜாஹதா பெரும்பிரயோசனமுள்ளதாயிருக்கிறது. (முஜாஹதாவென்பது நற்குணத்தினுலுண்டாவதாம்.) நற்குணமோ எல்லா இபாதத்துகளுக்கும் அடிவேராயிருக்கிறது. அது ஜனசகவாசத்திலன்றி வெளியாகாது. ஏனென்றால், நற்குணமென்பது ஜனங்களால் உண்டாகிற அசாத்திய இம்சைகளைச் சகித்துக் கொள்வதாம். சூபியாக்களுக்குப் பணிவிடை செய்கிறவர்கள் ஜனசகவாசத்திலிருப்பது எதற்கென்றால், சாமானியரிடத்தில் சுவால் செய்வதினால் தங்கள் அகத்தை அழிப்பதற்கும், சூபியாக்களுக்குச் செலவு செய்வதினால் உலோபகுணத்தை ஒழிப்பதற்கும், அவர்களாலுண்டாகிற இம்சைகளைச் சகிப்பதினால் தங்களிடத்திலிருந்து துர்க்குணத்தைத் தூரப்படுத்துவதற்கும், அவர்களுக்குப் பணிவிடைசெய்வதினால் அவர்களின் துஆ பரகத்தை அடைவதற்கும், அவர்களின் அன்பான மனப்பிரியத்தைப் பெறுவதற்குமேயாம். முதலில் காரியம் இப்படியாயிருந்திருக்கிறது. இப்போது எண்ணம் புறம்பாயிருந்தாலும் சரியே. சிலருக்குப் பெருமையும் பொருளுமே நோக்கமாயிருக்கிறது. பின்னர் ஒருவன் இம்சைகளை அநுபவித்துத் தீர்த்தால் அவன் ஏகாந்தத்தில் தனிப்பதே மிக விசேஷமானது. ஏனென்றால், முஜாஹதாவில் நாடிய கருத்து எப்போதும் இம்சைகளைச் சகிக்கவேண்டுமென்பதல்ல. உதாரணமாக:—மருந்து தின்பது கசப்பை அநுபவிப்பதற்கென்றல்ல, மேலும் பிணி தீருவதற்கென்றேயாம். பிணி நீங்கிவிட்டால் பின்பு மருந்துதின்று கசப்பை அநுபவிக்கவேண்டிய விதியில்லை. இதுபோல் முஜாஹதாவைக்கொண்டு நாடியது பிறிதொரு பொருளாம். அது யாதெனில், அல்லாகு தஆலாவுடைய திக்ருகளில் ஆசையை உண்டாக்கிக்கொள்வதாம். அந்த ஆசைக்குத் தடையாயிருப்பவைகளை (அசாத்திய பிணிபோன்ற கோபமாதி துர்க்குணங்களை) நீ உன்னைவிட்டும் நீக்கி அந்த ஆசையின் பக்கம் பார்க்கிறதுவே முஜாஹதாவின் பயனும்.

இன்னும் அறிந்துகொள்:—தனக்கு எப்படி முஜாஹதா அவசியமோ அப்படியே மற்றவர்களுக்கும் அதைப் படிப்பித்து அதைப் பெருக்குவதானது தீனுடைய ருக்னுகளிற் சேர்ந்ததாயிருக்கிறது. இது ஏகாந்தத்தில் இயக்கப்பட்டுவராது. மேலும் ஷைகுமார்கள் முரீதுகளுடன் சகவாசிக்காமலிருக்கப் பாங்கில்லை. அவர்களைவிட்டும் அவர் ஏகாந்தியாய்த் தனிப்பது விதியாகாது. என்றாலும், பெருமையினாலென்னும் ஆபத்துகளைவிட்டும் பேணிக்கொள்வது உலமாக்களுக்கு எப்படி அவசியமோ அப்படியே ஷைகுகளுக்கும் அது அவசியமாயிருக்கிறது. விதிப்படி இவர்கள் சகவாசிப்பார்களாகில் இது ஏகாந்தத்தினும் மிக ஏற்றமானதாம்.



நாலாவது ஆபத்து:—ஏகாந்தத்தில் வஸ்வாஸே மேலீடவும் மனமானது திக்ருகளைவிட்டும் வெறுப்படையவும் சடைவு அதிகரிக்கவும் கூடும். இது ஜனசகவாசத்தினாலன்றி நீங்கமாட்டாது. இபுனு அப்பாஸ் றலியல்லாகு அன்குமா அவர்கள் "எனக்கு வஸ்வாஸின் பயம் இல்லாமற்போனால் நான் ஜனங்களுடன் சகவாசிக்கமாட்டேன்" என்று சொல்லுகிறார்கள். இன்னும் "மனோசந்தோஷத்தை மனதிலிருந்து நீக்கவேண்டாம்" என்றும், "ஒரே முறைபாய் மனதைத் துன்புறுத்துவாயாகில் அது குருடாய்ப் போகும்" என்றும் அலி றலியல்லாகு அன்கு சொல்லுகிறார்கள். ஆதலால் யாருடைய சகவாசத்தினால் மனதுக்கோர் சுகமுண்டாகுமோ அவனுடன் தினம் ஒரு நாழிகைநேரம் இருக்கவேண்டும். அது உற்சாகத்தை அதிகப்படுத்தும். ஆனால் அவன் எவனாயிருக்கவேண்டுமென்றால், ஜனங்கள் யாரிடத்தில் தீனுடைய பேச்சையும் தீனில் தங்களாலுண்டான குற்றமான சங்கதிகளையும் மற்றும் தீன் சம்பந்தமான அநேக விஷயங்களையும் சொல்லி அவற்றிற்குப் பக்குவ பரிகாரங்களைக் கேட்கிறார்களோ அவனாயிருக்கவேண்டும். மற்றையவர்களுடன் கொஞ்சநேரமாவது சகவாசிப்பது நஷ்டத்தையுண்டாக்கும். நாள் முழுவதிலும் சம்பாதித்த மனத்தெளிவை அது கலக்கிவிடும். அன்றியும், "ஒவ்வொருவனும் தான் யாரிடத்தில் சிநேகமும் சகவாசமும் செய்கிறானோ அவனுடைய குணத்திலிருப்பானாதலால் தான் யாரோடு சகவாசிக்கிறான் என்பதை அவனவனும் கவனித்துக்கொள்ளவேண்டும்" என்று றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள்.

ஐந்தாவது ஆபத்து:—வியாதியஸ்தர்களை விசாரித்தல், ஜனாசாவுடன் செல்லுதல், விருந்துண்ணப் போகுதல், சகோதரர்களை வினவுதல், ஜனங்களுடைய ஹக்குகளை நிறைவேற்றல், இவைகளாலுண்டாகிற சவாபு ஏகாந்தத்தில் தப்பிப்போகும். ஆனால் இக்காரியங்களிலும் ஆபத்துகளிருக்கின்றன. இவைகளில் பிதுஅத்தான சடங்குகளும் உள்ளும்புறமும் ஒருமிப்பாயில்லாத பொருளும் டம்பமும் நுழைந்துகொண்டது. ஒருவன் இந்த ஆபத்துகளைவிட்டும் தன்னைப் பேணிக்கொள்ளவும் இவற்றின் ஷர்த்துகளை அநுஷ்டிக்கவும் கூடாதவனாயிருப்பான். அப்படியிருந்தால் ஏகாந்தியாய்த் தனிப்பதே அவனுக்கு ஏற்றமாகும். ஸலபுகளான முன்னோர்களில் அநேகம்பேர் இப்படிச்

செய்திருக்கிறார்கள். ஏகாந்தத்திலேயே சலாமத்துண்டென்று அவர்கள் கண்டிருப்பதால் இக்காரியங்களையெல்லாம் அவர்கள் விட்டுவிட்டார்கள்.

ஆறாவது ஆபத்து:—சகவாசியாயிருந்து ஜனங்களுடைய ஹக்குகளை நிறைவேற்றுவது ஒருவனைத் தாழ்ச்சியாயும், ஏகாந்தியாய்த் தனிப்பது ஒருவனைப் பெருமைத்தனமாயு மிருக்கிறது. இப்படித் தனிப்பதின் வழியில் எழும்பிவிட்டதானால் ஒருசமயம் பெருமைத்தனமாயிருக்கவும் தான் ஒருவரையும் கண்டுகொள்ளப்போகாமல் தன்னை எல்லாரும் கண்டுகொள்ள வரவேண்டுமென்பதை நாடியிருக்கவும் கூடும். ரிவாயத்து செய்யப்பட்டிருக்கிறதாவது:—"பனீ இஸ்ராயீல்களில் ஒருபெரிய ஹகீம் இருந்தார். அவர் ஹிக்மத்தில் முந்நூற்றுஅறுபது தொகுதிகள் கோர்வை செய்திருந்தார். அதனால் அவர் அல்லாகு தஆலாவிடத்தில் தமக்கு ஏதோ பெரியபதவி யுண்டென்று எண்ணியிருந்தார். பின்பு அல்லாகுதஆலா அக்காலத்திலிருந்த நபியின்மீது வஹீ இறக்கி அந்த ஹகீமுக்குச் சொல்லும்படி அறிவித்தான். அதாவது:—"நீ பூமியின்மீது உன் பேரும் பிரஸ்தாபமும் சக்கமுமா யிருக்கும்படி செய்துகொண்டாய். உன்னுடைய இந்தப் பிரஸ்தாபத்தை நான் அங்கீகரிக்க மாட்டேன்" என்பதே. அப்போது அவர் பயந்து அக்காரியத்தை விட்டு நீங்கி ஏகாந்தியாய்த் தனித்து "அல்லாகுதஆலா இப்போது என்மேல் பொருத்தமா யிருக்கிறான்" என்றார். அப்போதும் அல்லாகு தஆலா "அவனை நான் பொருந்திக் கொள்ளவில்லை" என்று வஹீ இறக்கினான். பின்பு அவர் ஏகாந்தத்தை விட்டு வெளியே புறப்பட்டுக் கடைவீதியிற் போகவும் ஜனங்களுடன் கலந்திருக்கவும் ஆரம்பித்தார். ஜனங்களுடன்கூடிப் பட்சித்துக்கொண்டும் அவர்களுடன் நின்றுகொண்டும் அவர்களுடன் உண்டுகொண்டும் கடைவீதிகளுக்குப்போய்க்கொண்டுமிருந்ததினால் "இப்போது இவன் என்னுடைய பொருத்தத்தை அடைந்தான்" என்று வஹீயிறங்கிறது என்பதே. ஆதலால் நீ அறிந்துகொள், பெருமைக்காக ஒருவன் ஏகாந்தத்தை யெடுத்திருக்கவும் கூடும். அதாவது சகவாசியா யிருப்பதில் சபைகளிலும் கூட்டங்களிலும் ஜனங்கள் தனக்குச் சங்கை செய்யமாட்டார்கள் என்றாவது அல்லது இல்மிலும் பேச்சிலும் தனக்குள்ள குறையை ஜனங்கள் கண்டுகொள்ளுவார்களென்றாவது அவன் பயந்து தன்னுடைய அந்தக் குறையை மறைக்கும்பொருட்டு ஏகாந்தத்தை ஓர் திரையாக்கிக் கொண்டிருப்பான். இதில் ஜனங்கள் தன்னைக் கண்டுகொள்ள வருவார்களென்றும், தன்னிடத்தில் பரக்கத்தை



நாடுவார்களென்றும், தன்னுடைய கையை முத்தமிடுவார்களென்றும் ஆசித்து எப்போதும் எதிர்பார்த்தவனா யிருப்பான். இந்த ஏகாந்தம் சுத்த முனாபிக்குத்தனமா யிருக்கும். உண்மையான ஏகாந்தத்துக்கு அடையாளம் இரண்டு வஸ்துக்களாம். அவற்றுள் ஒன்று:—ஏகாந்தத்தில் இதரமனுஷர் ஒருவரும் இருக்கக்கூடாது. அவன் திக்ரு பிக்ருகளிலாவது, இல்மிலாவது, இபாதத்திலாவது பராக்கா யிருக்கவேண்டும். மற்றொன்று:—ஜனங்கள் கண்டுகொள்ள வருவதை அவன் வெறுத்தவனா யிருக்கவேண்டும். என்கிலும் எவரால் தீன் சம்பந்தமான யாதொரு பிரயோசன மிருக்கிறதோ அவன் வருவதை வெறுப்பது விதியாகாது. அபுல்ஹஸன் ஹாத்திமீ என்பவர் தஸ் பட்டணத்துத் தலைவர்களில் ஒருவர். இவர் ஒருமுறை பெரிய ஒலிமார்களில் ஒருவராகிய அபுல்காஸிம் ஜுர்ஜானி றஹிமஹுல்லா அவர்களைக் கண்டுகொள்ள வந்து, தாம் அதிகமாய் வந்து கண்டுகொள்ளாத குற்றத்தை மன்னிக்கவேண்டுமென்று அவர்களிடம் மன்னிப்புத் தேடினார். அதற்கவர்கள் "காஜாவே! நீர் மன்னிப்பு கேட்கவேண்டாம். ஏனென்றால், ஜனங்களின் வருகையை மற்றவர் எவ்வளவு உபகாரமாய் நினைக்கிறார்களோ அவ்வளவாகவே அவர்கள் வராமலிருப்பதை நான் உபகாரமாய் நினைக்கிறேன். பலத்துல் மஹ்தா அலைஹிஸ்ஸலாம் என்னும் அந்தப் பெரியவருடைய வருகையினால் எவருடைய வருகையும் எனக்கு இலட்சியமில்லை" என்று சொன்னார்கள். அமீருகளில் ஒருவன் ஹாதிமுல் அஸம்மு றஹிமஹுல்லா அவர்களைக் கண்டுகொள்ள வந்து "தங்களுக்கு ஏதாவது ஹாஜத்துண்டா?" என்று கேட்டான். அதற்கவர்கள் "இனியொருமுறை நீர் என்னைப் பார்க்காமலும் நான் உம்மைப் பார்க்காமலு மிருக்கவேண்டு மென்பதே என் ஹாஜத்து" என்று சொன்னார்கள். இன்னும் அறிந்துகொள்:—ஜனங்கள் தன்னைக் கனப்படுத்தி மரியாதைசெய்வதற்காக ஒருவன் ஏகாந்தியாய்த் தனிப்பது பெரிய மடத்தனமா யிருக்கிறது. ஏனென்றால், தன்னுடைய காரியங்களில் ஒருகாரியமாவது ஜனங்களுடைய கையிலில்லை என்பதை அதமபக்ஷம் இவன் அறிந்தே யிருக்கிறான். அன்றியும், மலையின் மீதிருந்து வணங்கப்போனாலும் இவன் வேஷம் காட்டுகிறான் என்று ஜனங்கள் குற்றங்கூறுவார்கள் என்பதும், சாராயக்கடையில் நுழைந்தாலும் இவன் கிலேசகாயும் ஷைதாயு மிருப்பவர்கள் (இவனைப் பழிக்காமல்). இவர் ஜனங்களுடைய பார்வைக்குத் தம்மை மதிப்புறவாக்கவேண்டுமென்ற நோக்கமாய்ப் பழிப்பான வழியில் நடக்கிறார் என்று சொல்லுவார்கள் என்பதும், எவ்விதத்திலும் இவன் விஷயத்தில் ஜனங்கள் இருகட்சியாரா யிருப்பார்களென்பதும் இவனுக்குத்

தெரிந்தே யிருக்கிறது. ஆதலால் இவன் தன் மனதை ஜனங்களில் அல்ல, தன்னுடைய தீனில் நிலைநிறுத்த வேண்டும். சஹ்ல்துஸ்தரீ றஹிமஹுல்லா அவர்கள் தங்கள் முரீதுகளில் ஒருவருக்கு ஒரு அமலைச் சொன்னார்கள். அந்த முரீது ஜனங்களுடைய நாவுக்குப் பயந்து "அந்த அமல் என்னால் முடியாது" என்றார். அப்போது சஹ்ல்துஸ்தரீ றஹிமஹுல்லா அவர்கள் தங்கள் அஸ்ஹாபுகளின் பக்கம் திரும்பி "இரண்டு குணங்களில் ஒன்றை உண்டாக்கிக் கொள்ளாதவரையில் எவனும் இந்த அமலின் ஹகீகத்தை அடையான்" என்றும், அது அல்லாஹு தஆலா தவிர மற்றவை இவன் கண்ணுக்கு இலக்ஷிய மில்லாமலிருப்பது, அல்லது இவன் நப்ஸே இவனுக்கு இலக்ஷியமில்லாமல் ஜனங்கள் இவனை எந்தவிதமாய்ப் பார்த்தாலும் அதைப்பற்றி இவன் பயப்படாம லிருப்பது" என்றும் சொன்னார்கள். ஒருவர் பாரீ றஹிமஹுல்லா அவர்களிடத்தில் "தங்கள் சமூகத்துக்குச் சில ஜனங்கள் வருகிறார்கள்" என்றும், "அவர்கள் தங்களிடத்தில் சில சங்கதிகளைக் கேட்டு ஞாபகம் செய்து கொள்ளுகிறார்கள்" என்றும், "பின்பு அதைப்பற்றி ஆக்ஷேபித்து அதில் குற்றங் கண்டுபிடிப்பவர்களா யிருக்கிறார்கள்" என்றும் சொன்னதற்கு, என்னுடைய நப்ஸானது மேலான பிருதவுஸ் என்னும் சொர்க்கத்தையும் அல்லாஹு தஆலாவுடைய சமூகத்தில் அமர்ந்திருப்பதையும் ஆசிக்கிறதாய் நான் கண்டிருக்கிறேன். ஆதலால் ஜனங்களுடைய நாவுக்குத் தப்புவதை அது ஒருபோதும் ஆசிக்காது. ஏனென்றால், அவர்களைப் படைத்த நாயகனாகிய அல்லாஹு தஆலாவும் அவர்களுடைய நாவுக்குத் தப்பவில்லை யாதலால்" என்று சொன்னார்கள். இனி நீ மேற்கூறிய எல்லாச் சங்கதிகளையும் ஏகாந்தத்தினுடைய பிரயோஜனங்களையும் அதன் ஆபத்துகளையும் தெரிந்துகொண்டாய். இப்போது ஒவ்வொருவனும் தன்னுடைய நிலைமையைக் கவனித்து இந்தப் பிரயோஜனங்களையும் ஆபத்துகளையும் தன் மனதுக்கு எடுத்துக்காட்டி (ஏகாந்தமோ? சகவாசமோ?) எது தனக்குமேல் என்பதைத் தெரிந்து கொள்ளக் கடவன்.

## ஏகாந்தமாய்த் தனிப்பதில் அனுஷ்டிக்க வேண்டிய அதபுகளின் பயான்.

யாராவதொருவன் ஏகாந்தமாய்த் தனிப்பானாகில் அவன் தன் மனதில் நான் இந்த ஏகாந்தத்தில் என்னால் மற்றவர்களுக்கும் மற்றவர்களால் எனக்கும் யாதொரு தீங்கு உண்டாகாம லிருக்கும்படி சலாமத்தை நாடுகிறேன் என்றும், அல்லாஹு தஆலாவுடைய இபாதத்



துக்காக வேறு பராக்கில்லாதபடி ஒழிவை நாடுகிறேன் என்றும் நிய்யத்து செய்யவேண்டும். கொஞ்சநேரமும் சும்மாவிருக்கக் கூடாது. மேலும் திக்ருபிக்ருகளிலும் இல்மு அமல்களிலும் பராக்கா யிருக்க வேண்டும். ஜனங்கள் தன்னிடம் வர இடங்கொடுக்கக் கூடாது. பட்டணத்துச் சேதிகளை விசாரிக்கக் கூடாது. ஏனென்றால், கேள்விப்படுகிற ஒவ்வொரு சேதியும் மனதில் விழுகிற விதைபோலாகும். அது ஏகாந்தத்தின் நடுவே இருதயத்திலிருந்து முளைத்தெழும்பும். திக்ரு பிக்ருகள் தெளிவுறும்பொருட்டு நப்ஸுடைய பேச்சை ஒழிப்பதே ஏகாந்தத்திற்கு முக்கியமானது. ஜனங்களிலிருக்கும் சேதியானது நப்ஸுடைய பேச்சுக்கு விதையாயிருக்கும். ஊண், உடை இவைகளைச் சுருக்கிக் கொஞ்சத்தின்மேல் போதுமாக்கிக் கொள்ளவேண்டும். இல்லாவிட்டால் ஜனசகவாசம் தேவையாகும். அண்டையி லிருப்பவர்களா லுண்டாகிற இம்சைகளைச் சகித்து சபுரு செய்கிறவனா யிருக்க வேண்டும். தன் விஷயத்தில் புகழாகவோ பழிப்பாகவோ யார் எதைச் சொன்னாலும் அதைச் செவியுற்றுக் கேட்கக் கூடாது. மனதை அதில் செலுத்தக் கூடாது. தன்னை உள்ளும் புறமும் ஒருவிதமில்லாத கள்ள ஏகாந்தியென்றாலும், வாக்கும் மனமும் பொருந்திய வணக்கமுள்ள ஏகாந்தி என்றாலும், பெருமைக்காரனென்றாலும், மோசக்காரனென்றாலும் எதையும் காதிற் போட்டுக்கொள்ளக் கூடாது. ஏனென்றால், அது காலம் முழுவதையும் வீண் போக்கும். ஆகிறத்துடைய அமல்களில் ஒரே பராக்காய் மூழ்கிவிடவேண்டுமென்பதே ஏகாந்தத்தில் கருதிய பொருளாயிருக்கிறது.

## ஏழாவது அஸ்லு - சபரு போவதற்குள்ள அதபுகளின் பயான்.

அறிந்துகொள்:—சபரானது அந்தரங்கமான சபர் என்றும் வெளிரங்கமான சபர் என்றும் இருவகைப்பட்டிருக்கிறது. அந்தரங்கமான சபர் என்பது கல்புடைய சபராம். அது யாதெனில், வானம் பூமிகளுடைய அதிசயங்களிலும் அல்லாஹு தஆலாவுடைய சிருஷ்டியின் புதுமைகளிலும் தீன்வழியிலுள்ள மன்ஜில்களிலும் (ஆராய்தல் செய்து விசாரணை புரிவதேயாம்) இந்தக் கால் வீட்டிலிருந்துகொண்டு இருதயத்தால் வானம் பூமிகளிலும் அதிக விசாலமான சொர்க்கத்தில் ஆனந்தக் கூத்தாடுவதே ஆரிபீன்களுடைய சபராயிருக்கிறது. ஏனென்றால், மலக்கூத்துடைய ஆலமானது ஆரிபீன்களுடைய சொர்க்கமாயிருப்பதினாலென்க. அந்த சொர்க்கத்தில் யாதொருதடையும் தடுப்பும் இடுக்கமும் படமாட்டாது. அல்லாஹு தஆலா ஜனங்

களை இந்த சபரின் பக்கம் அழைத்து "வானம் பூமிகளுடைய மலக்கூத்துகளிலும் அல்லாகு தஆலா சிருஷ்டித்த பொருள்களிலும் அவர்கள் நோட்ட மிடவில்லையா?" என்று திருவுளமாகிறான். இந்த சபர் செய்ய இயலாதவன் வெளியரங்கமான சபர் செய்வதுவேண்டும். அதாவது:—அவன் ஒவ்வொரு இடத்திலும் பிரயோசனமடையும் பொருட்டுத் தன்வெளிக்கூடாகிய தேகத்தைச் சுமந்துகொண்டு செல்லுவான். இந்த சபரானது ஒருவன் கஃபாவைத் தரிசிக்கும்பொருட்டுத் தன் காலால் நடந்து போவது போலவாம். அந்த மற்றொரு சபரானது ஒருவன் தன் இருப்பிடத்திலேயே இருந்துகொண்டிருக்கக் கஃபாவானது அவனிடத்திற்கு வரவும் அவனைச் சுற்றித் தவாபு செய்யவும் அது தன் இரகசியங்களை அவனிடம் சொல்லுமாயிருப்பது போலவாம். இப்படிக் காலால் நடந்துபோய்க் கஃபாவைப் பார்ப்பவனுக்கும் தன் இருப்பிடத்திற்கே கஃபாவரக் காண்பவனுக்கும் நடுவே வெகு வித்தியாச மிருக்கிறது. இதனாலேதான் "ஆண்மையற்ற மனிதர்களுக்குக் காலில் கொப்பளம்" என்றும், "ஆண்மையுள்ளவர்களுக்குக் கொம்மையில் கொப்பளம்" என்றும் ஷைகு அபூ ஸயீது ரலியல்லா அவர்கள் சொல்லுகிறவர்களா யிருந்தார்கள். நாம் இந்நூலில் வெளியரங்கமான சபரை இரண்டு பாபுகளில் கூறுவோம். அந்தரங்கமான சபரின் விஸ்தரிப்பு மிகவும் நுட்பமாயிருப்பதால் இம்மாதிரியான கிதாபு அதற்கு இடம் தராது.

## முதலாவது பாபு—சபருடைய நிய்யத்திலும் அதன் வகைகளிலும் அதன் ஆதாபுகளிலும் பேசுவது.

அறிந்துகொள்:—சபரானது ஐந்துவகைப்பட்டிருக்கிறது. முதலாவது வகை:—இல்மைத்தேடுவதற்காக சபர்செய்வதாம். படிக்கவேண்டிய இல்மு பர்லாக்கப்பட்டதா யிருந்தால் அதற்காக சபர்செய்வது பர்லாகும். சுன்னத்தாக்கப்பட்டதாயிருந்தால் சபர் சுன்னத்தாகும். இல்முக்காக சபர் செய்வது மூன்று விதத்தின்பேரி லிருக்கிறது. முதலாவது விதம்:—ஷரகுடைய இல்மைக் கற்றுக்கொள்வதற்காக சபர் செய்வதாம். "யாராவதொருவன் இல்மைத் தேடுவதற்காக வீட்டைவிட்டும் வெளியே புறப்படுவானாகில் அவன் அல்லாகு தஆலாவுடைய பாதையில் இருக்கிறான்" என்றும், "இல்மைத் தேடுகிறவனுக்கு மலக்குகள் தங்கள் சிறகுகளை விரிக்கிறார்கள்" என்றும் ஹதீதுகளில் வந்திருக்கிறது. சலபுகளான முன்னோர்களில் ஒருவர் ஒரு ஹதீதுக்காக நீண்ட சபர் போயிருக்கிறார். ஷஃபீ ரஹிமகுல்லா அவர்கள் சொல்லுகிறதாவது:—"தீன் வழியில் தனக்குப் பிரயோசனப்படுகிற ஒரு சொல்லைக்



கேட்பதற்காக ஒருவன் ஷாம்தேசத்திலிருந்து எமன் தேசத்துக்குப் போவானாகில் அவனுடைய சபர் வீணாகாது". ஆனால் ஆகிரத்தில் உதவுகிற ஒரு இல்முக்காக அவன் சபர் செய்யவேண்டும். எந்த இல்மு அவனைத் துன்யாவிலிருந்து ஆகிரத்தின் பக்கமும் ஹிர்ஸிலிருந்து கனாஅத்தின் பக்கமும் ரியாவிலிருந்து இக்லாஸின் பக்கமும் மனிதர்களுடைய பயத்திலிருந்து காலிகுடைய பயத்தின் பக்கமும் அழைக்காதோ அந்த இல்மு அவனுடைய நஷ்டத்துக்குக் காரணமாகும்.

இரண்டாவது விதம்:—தன்னையும் தன் குணங்களையும் அறிந்து தன்னிலிருக்கிற துர்க்குணங்களைப் போக்கும் பரிகாரத்தில் [illegible] னும்பொருட்டு சபர் செய்வதாம். இதுவும் முக்கியமானதுதான். ஏனென்றால், மனிதன் அவனுடைய வீட்டிலேயே இருந்துகொண்டு அவன் காரியங்கள் அவனிஷ்டப்படி இசைந்துவருமாகில் அப்போதவன் தன்விஷயத்தில் நல்ல எண்ணங்கொண்டு தன்னை நற்குண முள்ளவனென்று மதித்துக்கொள்ளுகின்றான். சபர் செய்வதிலோ அவனுடைய குணங்களை அவனுக்குத் தெரிய வொட்டாதபடி மறைத்துக் கொண்டிருக்கும் திரை நீங்கிப்போகின்றது. அதாவது சபரில் அவன் தன்னுடைய துர்க்குணங்களையும் தாழ்மையையும் தெரிந்து கொள்ளும்படியான அநேகசம்பவங்கள் வந்துநேரிடும். இவ்விதமாக அவன் தன்னிலிருக்கிற பிணியைத் தெரிந்து கொள்ளுவானாகில் அதற்குப் பரிகாரம் செய்வதில் பராக்காகுவான். ஒருவன் சபர் செய்யாதவனாயிருந்தால் அவனுடைய காரியங்கள் ஆண்பிள்ளைகளுடைய காரியம் போலிரா. பிஷ்ருல் ஹாபி ரஹிமகுல்லா அவர்கள் "ஓ உலமாக்களே! நீங்கள் யாத்திரை செய்யுங்கள், அப்போது சுத்தப்படுவீர்கள்" என்றும்; "தண்ணீரானது ஒரேவிடத்தில் கட்டுப்பட்டிருந்தால் அது நாற்றமெடுத்துப்போம்" என்றும் சொல்லுகிறவர்களா யிருந்தார்கள்.

மூன்றாவது விதம்:—கரை, கடல், மலை, வனம் இவைகளிலும் மற்றும் பற்பல தேசங்களிலும் அல்லாகு தஆலா படைத்திருக்கிற அரிய காட்சிகளைக் காண்பதற்கும், உலகத்தின் கோணங்களில் ஜீவவர்க்கம் மூலவர்க்கம் முதலிய பற்பல படைப்புகளின் வகுப்புகளை அறிவதற்கும், அவைகளெல்லாம் தங்களுடைய சிருஷ்டிகனாகிய அல்லாகு தஆலாவைத் தஸ்பீஹு செய்து அவன் ஒருவனென்று சாக்ஷி பகர்வதைத் தெரிந்து கொள்வதற்கும் சபர் செய்வதாம். நாவுப்பொருள்கள், எழுத்தும் சப்தமு மில்லாமல் பேசுகிற பேச்சைக் கேட்கவும், சகல படைப்புகளின் நெற்றியில் அக்ஷர வரிகளில்லாமல் எழுதப்பட்டிருக்கிற எழுத்தை வாசிக்கவும், அதனால் உலக இரகசி

பங்களை உற்றுணரவும் கூடுமானவிதமாய் எவனுக்கு இந்த அகக்கண் திறந்திருக்கிறதோ அவனுக்குப் பூமியைச்சுற்றி யாத்திரை செய்ய வேண்டுமென்ற ஆவசியகத்தில்லை. மேலும் அவன் இரவும் பகலும் தன்னைச் சூழ்ந்துகொண்டிருப்பதும் தன்னுடைய இரகசியங்களைச் சொல்லிக்கொண்டிருப்பதும் வானங்களிலும் பூமியிலும் அநேக திருஷ்டாந்தங்களிருக்கின்றன. அவைகளை உற்றுணராமல் அவர்கள் புறக்கணித்தவர்களாய் நடக்கிறார்கள் என்று சொல்லி முறையிட்டுக் கொண்டிருப்பதுமான வானத்துடைய மலக்கூத்துகளில் நோட்டமிடுவதே. அதிலும் ஒருவன் தன்னுடைய படைப்பின் புதுமைகளிலும் தனது உறுப்புகளிலும் (பார்வை, கேள்வி முதலிய) சித்துகளிலும் நோட்டமிடுவானாகில் தன் வயது முழுமையும் தன்னையொரு காட்சிசாலையாகக் காண்பான். அதிலும் அவன் தன் முகக்கண்ணை மூடி அகக்கண்ணைத் திறக்கும்போதுதான் தன்னிலுள்ள புதுமைகளைப் பார்ப்பான். பெரியோர்களில் ஒருவர் சொல்லுகிறார். அதாவது:—"நீங்கள் உங்கள் விழியைத் திறந்தால் விநோதக் காட்சியைக் காண்பீர்கள் என்று ஜனங்கள் சொல்லுகிறார்கள். நீங்கள் உங்கள் விழியை மூடினால் விநோதக்காட்சியைக் காண்பீர்கள் என்று நான் சொல்லுகிறேன்" என்பதே. இந்த இரண்டு சொல்லும் உண்மையேயாம். ஏனென்றால்; வெளிக்கண்ணைத் திறந்து அதற்குப் புலப்படும் புதுமைகளைப் பார்ப்பது முந்தின மன்றிலாயிருக்கிறது. பின்பு இரண்டாவது மன்றிலாகிய அகக்கண்ணால் அந்தரங்கமான புதுமைகளைப் பார்ப்பான். வெளிரங்கமான புதுமைகளுக்குத் தீர்மானமுண்டு. அந்தரங்கமான புதுமைகளுக்கு அளவில்லை. ஏனென்றால், அது அர்வாஹுகளைக் கொண்டும் ஹகாயிகுகளைக் கொண்டும் கொளுகின்றதாயிருக்கிறது. ஹகாயிகுகளுக்குத் தீர்மானமில்லை. ஒவ்வொரு ரூபத்துடனும் ஒரு ஹகீகத்தான ரூஹு இருக்கிறது. ரூபமானது முகக்கண்ணுக்குப் புலப்படுவதாயும், ஹகீகத்தானது அகக்கண்ணுக்குப் புலப்படுவதாயும் இருக்கிறது. ரூபமானது அளவுக்குள் அடங்கினது. (ஹகீகத்தானது அளவுக்குள் அடங்காதது.) உதாரணமாக:—ஒருவன் நாவின் ரூபத்தைப் பார்த்து இது ஒரு சதைத் துண்டு என்றும், இருதய கமலத்தின் ரூபத்தைப் பார்த்து இது ஒரு கருமையான இரத்தக்கட்டி என்றும் அறிந்துகொள்ளுகிறான். இப்போது நாவினுடையவும் இருதய கமலத்தினுடையவுமான ஹகீகத்துக்கு எதிரில் முகக்கண்ணுக்குப் புலப்படுகிற இந்த ரூபத்தின் அளவு எம்மாத்திரம் என்பதை யோசித்துப்பார். ஆலத்தின் பாகங்களான ஒவ்வோர் அணுவும் இதேவிதமாயிருக்கிறது. எவனுக்கு முகக்

கன்றுக்குமேல் அதிகமாய் அசக்கன் கொடுக்கப்படவில்லையோ, அவன் மிருகங்களுடைய பதவிக்கு அடுத்திருக்கிறான். என்றாலும் சில விஷயங்களில் முகக்கண்ணானது அகக்கண்ணைத் திறக்கிற திறவுகோலாயிருக்கிறது. ஆகவே, இது காரணத்தால் படைப்புகளின் புதுமைகளைப் பார்க்கும்பொருட்டு சபர் செய்வது பிரயோசனத்தைவிட்டும் ஒழிந்ததல்ல.

இரண்டாவது வகை:— இபாதத்துக்காக சபர் செய்வதாம். அது போலெனில், ஹஜ்ஜுக்கும் ஃபீசபீல் யுத்தத்துக்கும்; அம்பியா, அவுலியா, அஸ்ஹாபு, தாபியீன் இவர்களுடைய கபுருகளை ஜியாரத்துச் செய்வதற்காகப் போவதுபோல்வாம். மேலும், தீனுடைய உலமாக்களையும் பெரியோர்களையும் கண்டுகொள்ளப் போவதும் அவர்களுடைய முகத்தைப் பார்ப்பதும் இபாதத்தாயிருக்கிறது. அவர்களுடைய துஆவின் பரக்கத்து பெரிதாயிருக்கும். அவர்களைக் காண்பதினால் உண்டாகிற பரக்கத்துகளில் ஒன்று யாதெனில், அவர்களைப் பின்பற்ற மனதில் ஆசை எழும்புவதேயாம். ஆகவே அவர்களுடைய தீதாரைத் தரிசிப்பதும் இபாதத்தாயிருக்கும். அன்றியும், அது அநேக இபாதத்துகளுக்கு விதையாயுமிருக்கும். அவர்களுடைய வார்த்தைகளாலும் வசனிப்பினாலும் உண்டாகிற பிரயோசனங்கள் இவைக்கு உதவியாயிருக்குமாதலால் பயன்கள் இரட்டிக்கும். ஷஹீதுகளுடையவும் பெரியோர்களுடையவுமான கபுருகளை ஜியாரத்து செய்ய நாட்டங் கொண்டு அதற்காகவே சபர் போவதும் கூடும். ஆனால் (மக்கா, மதீனா, பைத்துல் முகத்தஸ் இந்த ஸ்தலங்களிலிருக்கிற) "மூன்று மஸ்ஜிதுகளுக்கே யொழிய நீங்கள் பயணங்கட்ட வேண்டாம்" என்று றசூல் சல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்களே இதானது இந்த மூன்று மஸ்ஜிதுகள் நீங்கலாக மற்றுமுண்டான மஸ்ஜிதுகளும் மஷ்ஹதுகளும் சமமாயிருப்பதால் அவைகளில் (ஒன்றிலும் மற்றொன்றை மேலெனக் கண்டு) சபருக்கு செய்யவேண்டாம் என்பதின்பேரில் அறிவிக்கிற அர்த்தமாயிருக்கிறது. எப்படி இந்த ஹதீது ஜீவித்திருக்கிற உலமாக்களின் தரிசனைக்குப் போவதைத் தடைசெய்யாதோ அப்படியே மௌத்தாயிருக்கிற பெரியோர்களின் ஜியாரத்துக்குப் போவதையும் இது தடைசெய்யாது. ஆகவே இந்த நாட்டத்தைக்கொண்டு அம்பியா, அவுலியாக்களுடைய கபுருகளை ஜியாரத்துச் செய்யப் போவதும் இந்த நிய்யத்தைக்கொண்டு சபர் செய்வதும் ஆகும்.

மூன்றாவது வகை:— தீனுடைய காரியங்களில் மனவோர்மையில்லாதபடி கலக்கப்படுத்துகிற பெருமை, செருக்கு, ஆட்சி, அதிகா

ரம், துன்யாவுடைய வேலைகள் போன்ற காரணங்களைவிட்டும் ஓடிப் போவதாம். துன்யாவுடைய பராக்குகளுடன் தீனுடைய பாதையில் நடக்க எவனுக்கு இலகுவுபடாதோ அவன் விஷயத்தில் இந்த சபர் பர்லாயிருக்கிறது. ஏனென்றால், அந்தப் பராக்குகளில்லாமல் தீனுடையபாதையில் நடக்கக்கூடுவதற்கேயாம். மனிதன் தன்னுடைய அவசியங்களையும் ஹாஜத்துகளையும் விட்டு அறவே நீங்கிவிட ஒருபோதும் முடியாது. என்றாலும், அவைகளைச் சுருக்கிக் கொள்ளலாம். சுமைபாரிகளாயிருந்தாலும் கனங்குறைந்தவர்கள் ஈடேற்றம் பெற்றார்கள். எவனுக்கு [illegible]த்தில் பெருமையும் பிரஸ்தாபமும் உண்டாகுமோ அவனை அது அதிகமாய் அல்லாஹு தஆலாவை விட்டும் வேறு பராக்கில் ஆக்கிவைக்கும். சுப்யானுஸ் ஸவ்ரீ றஹிமஹுல்லா அவர்கள் சொல்லுகிறதாவது:—"இது கெட்ட காலமாயிருக்கிறது. பிரஸ்தாபமில்லாத சாமானியருக்கே இதில் ஆபத்திருக்கிறது. இப்படி இருந்தால் பிரஸ்தாபமுள்ளவர்களுடைய ஹால் எப்படியாகும்? ஆகலால் எந்தவிடத்தில் உன்னை அறிந்திருக்கிறார்களோ, அந்தவிடத்தை விட்டும் உன்னை அறியாதிருக்கிற ஓர் இடத்துக்கு நீ ஓடிப்போகவேண்டிய காலமாயிருக்கிறது" என்பதே. இன்னுமிவர்கள் ஒருதண்ணீர்த்துருத்தியைத் தங்கள் முதுகின்மேல் கட்டிக்கொண்டு நடந்துபோகையில் "நீர் எங்கு போகிறீர்?" என்று கேட்டதற்கு, "இன்ன கிராமத்தில் தானியம் மலிவாயிருப்பதால் அவ்விடத்திற்குப்போகிறேன்" என்றுசொன்னார்கள். "இந்த எண்ணங்கொண்டு போவது ஆகுமா?" என்று கேட்டதற்கு, "எந்தவிடத்தில் ஜீவன சவுக்கியமுண்டோ அந்தவிடத்தில் தீன் அதிக சலாமத்தாயும் மனம் அதிக தூய்மையாயும் இருக்கும்" என்று சொன்னார்கள். இப்றாஹீமுல் கவாஸ்ஸு றஹிமஹுல்லா அவர்கள் எந்தப் பட்டணத்திலும் நாற்பது நாளைக்குமேல் அதிகமாய்த் தரித்திருக்கிறதில்லை.

நாலாவது வகை:—துன்யாவின் சம்பாத்தியத்தில் வர்த்தகத்துக்காக சபர் செய்வதாம். இந்த சபர் முபாஹாயிருக்கும். ஜனங்களிடம் ஹாஜத்தாகாமல் தன்னையும் தன் குடும்பத்தையும் தேவையொழித்து வைக்கும் நிய்யத்திருந்தால் இந்த சபர் இபாதத்தாகும். பெருமை பாராட்டுவதற்குத் துன்யாவை அதிகமாய்ச் சம்பாதிக்கிற நிய்யத்திருந்தால் இது ஷைத்தானுடைய பாதையில்நடக்கும் சபராகும். அதிக சம்பாத்தியத்திற்கு அளவில்லையாதலால் அநேகமாய் இந்த மனிதன் எப்போதும் சபருடைய கஷ்டத்திலேயே இருப்பான். கடைசியில் திடீரென்று வழியில் கள்ளர்கள் வந்து இவனை அடித்துப் பொருளைப்



பறித்துக்கொள்ளுவார்கள். அல்லது யாத்திரையில் ஓரிடத்தில் திக்கற்ற பிணமாய்ச் செத்துக் கிடப்பான். துரைத்தனத்தார் இவனுடைய பொருளை எடுத்துக்கொள்ளுவார்கள். அப்படிக்கில்லாமல் நல்லவிதமாய் மரித்தால் இவனுடைய வாரிசுகள் இவன் சொத்தை அடைந்து தங்கள் இச்சைகளில் செலவு செய்வார்கள். இவனிலொன்றாம் ஒன்றையும் நினைத்துப் பார்க்கமாட்டார்கள். ஏதோ வஸிய்யத்து செய்திருந்தால் அதையும் நிறைவேற்றமாட்டார்கள். இவன்பட்ட கடனையும் அவர்கள் செலுத்தாமல் சும்மா யிருந்துவிடவும் கூடும். ஆகிரத்துடைய பாதகம் இவன்மேல் சுமரும். இப்படி எல்லாக் கஷ்டங்களையும் தான் அடையவும், எல்லாச் சுகத்தையும் மற்றவர் அனுபவிக்கவும், எல்லாருடைய பாதகத்தையும் தான் ஏற்றுக்கொள்ளவும் பாடுபடுவது பெரிய மற்தியும் மதிமோசமுமா யிருக்கிறது. இதற்குமேல் பெரிய புத்திஹீனம் ஒன்றுமேயில்லை.

ஐந்தாவது வகை:—கண் காட்சிக்காக உலாவப்போவதாம். இது கொஞ்சமாக எப்போதாவது சில சமயங்களி லாயிருந்தால் முபாஹாகும். ஆனால் ஒருவன் புது புது பட்டணங்களையும் புது புது மனிதர்களையும் பார்க்கவேயன்றி வேறு நாட்டமில்லாமல் பட்டணங்களைச் சுற்றியுலாத்த வழக்கப்படுத்திக்கொள்ளுவானாகில் இவ்விதமான சபரில் உலமாக்களுக்குள் இக்திலாபிருக்கிறது. சிலர் இது உபயோகமில்லாமல் தன்னை வருத்தப்படுத்துவதா யிருக்கிறதென்றும் இது ஜசாது என்றும் சொல்லுகிறார்கள். நம்மிடத்தில் இது ஹராமாகாதென்பதே சரி. ஏனென்றால், கண்காட்சிக்காக உலாவப்போவது அற்பத்தனமாயிருந்தாலும் அதிலும் ஒரு பிரயோசன மிருக்கிறது. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு காரியம் முபாஹாகுவது அவரவர் தன்மைக்குத் தக்கபடியேயாம். இம்மாதிரியான மனிதர்கள் அற்ப சுபாவமுள்ளவர்களாயிருப்பார்கள். இவர்களுடைய தன்மைக்குத்தகுந்தபடியே அந்தப் பிரயோசனமும் இருக்கும். என்கிலும் ஸூபிகளாகிய சட்டையணிந்த பகிருமளான சில மனிதர் ஒரு பட்டணத்திலிருந்து மற்றொரு பட்டணத்துக்கும், ஒருவிடத்திலிருந்து மற்றொரு இடத்துக்கும் சுற்றித் திரிவதை வழக்கமா யெடுத்துக்கொண்டார்கள். எங்கேயாவது ஒரு ஷைகை அடைந்து அவரை அடுத்திருக்கவேண்டுமென்ற எண்ணம் இவர்களுக்குக் கிடையாது. ஊர் ஊராய் உலாத்துவதே இவர்களுடையநோக்கமாயிருக்கிறது. ஏனென்றால், இபாதத்தின் பேரில் நிலைத்திருக்க இவர்களுக்குச் சக்தியில்லை. தலைவருடைய ஸ்தானங்களில் ([illegible]) இருதயத்திலிருந்து இவர்களுக்கு வழிதிறக்

கவுமில்லை. சேர்ம்பலால் இவர்கள் சீர்கேட்டிலாயிருக்கிற நிமித்தம் ஓர் இடத்தில் உட்கார்ந்து கைத்தொழிலுடைய உத்திரவுப்படி நடந்துகொள்ளவும் கூடாதவர்களாயிருக்கிறார்கள். ஊர் ஊராய்ச் சுற்றுகிறார்கள். எந்த விடத்தில் நல்ல உணவு கிடைக்கிறதோ அந்தவிடத்தில் அதிகநாள் தங்கியிருக்கிறார்கள். நல்ல உணவு கொடுக்காமற்போனால் விருந்தளிப்பவனை வைது அவனை வருத்தப்படுத்துகிறார்கள். எங்கேயாவது நல்ல உணவு கொடுக்கிறார்களென்று கேள்விப்பட்டால் அங்குபோக ஆரம்பிக்கிறார்கள். அங்கு போம்போது நாங்கள் சபுருடைய ஜியாரத்துக்காக வந்தோமென்றும் சோற்றுக்காக வரவில்லையென்றும் இப்படி இவர்கள் சாக்குச் சொல்லுகிறதுமுண்டு. இத்தசபர் ஹராமல்லவென்றும் மக்ருஹா யிருக்கவேண்டும். இவர்கள் பாவிகளாயும் பாவிகளாயுமில்லாமற் போனாலும் பழிப்புக்கு ஆளானவர்களா யிருக்கிறார்கள். எவனொருவன் சூபியாக்களுக்கு நியமிக்கப்பட்ட ரொட்டியைத் தின்பவனும், அதைக்கேட்பவனும், தன்னை சூபியாக்களுடைய கோலத்தில் காட்டுகிறவனும் இருக்கிறானோ அவன் பாவிகளும் பாவியுமாய்ப் போவான். எது ஒன்றை அவன் வாங்குகிறானோ அது அவனுக்கு ஹராமாகும். ஏனென்றால், அப்புகளாலாகிய சட்டையை அணிந்து ஐந்துநேரமும் தொழுதுகொள்ளுகிற ஒவ்வொருவனும் சூபியாய் விடமாட்டான். மேலும் எவனொருவன் அல்லாவுடைய தேட்டமுள்ளவனும் அது காரியத்தில் முசம்மோக்கினவனுமா யிருக்கிறானோ, அல்லது எவனொருவன் அதை அடைந்தவனா யிருக்கிறானோ, அல்லது எவனொருவன் அதன் முயர்ச்சியிலிருந்துகொண்டு யாதொரு அவசரத்தின்போதன்றி அதில் குறை செய்யாதவனா யிருக்கிறானோ அவனே சூபியாகுவான். அல்லது இந்த ஜனங்களுக்குப் பணிவிடை செய்வதில் பராக்கா யிருப்பவனும் சூபியாகுவான். இந்த மூன்று கூட்டங்களுக்கன்றி மற்ற எவருக்கும் சூபியாக்களுடைய ரொட்டி ஹலாலாகாது. ஆதலால் சாதாரண மனிதனும் அல்லாவுடைய தேட்டமும் அதற்குரிய பிரயாசையும் இல்லாதவனும் சூபியாக்களுடைய பணிவிடையில் பராக்காகாதவனுமா யிருப்பவன் எவனோ அவன் அப்புகளாலாகிய சட்டையை அணிந்துகொள்வதினால் சூபியாய் விடமாட்டான். மேலும், முரீதுக்கு அவிழ்க்கிற கேப்புமாதிகளுக்கென்று ஏதாவது வகுப்பு செய்யப்பட்டிருந்தால் அதை வாங்குவது இவனுக்கு ஹராமாகும். ஏனென்றால், இவன் சூபியாக்களுடைய கோலங்களையும் நடவடிக்கைகளையும் எடுக்காமல் அவர்களைப்போல் வேஷம் போட்டுத் தன்னைக் காட்டுவதானது சுத்த முனாபிக்குத்தனமாயும் முடிச்சுமாறித்தனமாயு மிருக்கிறது. இவர்களில் மிகவும் கெட்டவன்



யாரென்றால், சூபியாக்களுடைய வாக்கியங்களிற் சிலவற்றை அவன் ஞாபகம் செய்துகொண்டு வீணில் பிதற்றுகிறான். முன்னோர் பின்னோர்களான எல்லாருடைய இல்மும் தனக்கு வெளியாக்கப்பட்டிருக்கிறதென்றும் அதனால் இப்படிப்பேசத் தனக்கு ஆகுமென்றும் எண்ணிக்கொள்ளுகிறான். சில சமயம் இந்தப் பேச்சினுடைய தீங்கானது இவனை எவ்வளவுதூரம் இழுத்துவிடுகிறதென்றால், இல்மையும் உலமாக்களையும் இழிவாய்ப் பார்க்கின்றான். ஷரீஅத்தும் இவன் கண்ணுக்குச் சிறியதாய்ப்போய் இது பலஹீனமான ஜனங்களுக்கு ஏற்பட்டதென்றும், தீனில் உறுதியை அடைந்திருப்பவர்களை ஒரு காரியமும் நஷ்டப்படுத்தாது என்றும், அவர்களுடைய தீனானது குல்லத்தைனி உடைய ஹத்தை அடைந்துவிட்டதென்றும், அது எதையும் அசுத்தப்படுத்தாது என்றும் சொல்லுவான். இவர்கள் இவ்வளவுதூரம் மீறிப்பேச ஆரம்பித்தார்களாகில் அப்போது இவர்களில் ஒருவனை வெட்டுவதானது ரூமிலும் ஹிந்திலும் ஆயிரம் காபிர்களை வெட்டுவதிலும் அதிக வரிசையுள்ளதாயிருக்கிறது. ஏனென்றால், அவர்கள் வெளிப்படையில் காபிர்களாயிருப்பதால் ஜனங்கள் அவர்களை விட்டும் தங்களைப் பேணிக்கொள்ளுகிறார்கள். லஃனத்துபெற்ற இந்தத் துன்மார்க்கன் இஸ்லாமை இஸ்லாமுடைய பேச்சினாலேயே கெடுத்துவிடுகிறான். இக்காலத்தில் ஷைத்தான் இதற்குமேல் அதிக உறுதியான வலையொன்றையும் விரித்திருப்பதில்லை. இதில் அனேகஜனங்கள் விழுந்து மடிகின்றார்கள்.

## முசாபிரானவன் வெளியரங்கமான சபருடைய ஆரம்பத்திலிருந்து கடைசிவரையில் அனுஷ்டிக்கவேண்டிய இதபுகளின் பயான்.

அவை எட்டு அதபுகளாம். முதலாவது அதபு—சபர் புறப்படுவதற்கு முன்னே தன்மேலுள்ள கடன்களை இறுத்துவிடவேண்டும். தான்செய்த கொடுமைகளைப் பொறுப்பித்துக் கொள்ளவேண்டும். அமானத்துகளை உடையவர் வசம் செலுத்திவிடவேண்டும். யாருக்கு அன்னவஸ்திரச் செலவு கொடுப்பது கடமையோ அவர்களின் செலவுக்கு வைத்துவிடவேண்டும். வழிக்கு வேண்டிய தங்கரிப்பை ஹலாலாயும் தோழர்களுக்கு உதவக்கூடிய அளவாயும் எடுத்துக்கொள்ளவேண்டும். ஏனென்றால், சபரில் உணவு கொடுப்பதும் நல்லப்பேச்சு பேசுவதும் சத்தத்துக்கு சவாரி கொண்டுவருகிற மனிதனுக்கு உபகாரம் செய்வதும் பெருந்தன்மையான குணங்களிற் சேர்ந்தவைகளா யிருக்கின்றன.

இரண்டாவது அதபு:—தினில் உதவியாயிருக்க லாயக்கான ஒரு துணைவனைச் சம்பாதித்துக்கொள்வதாம். "ஒண்டியாய் சபர் செய்ய வேண்டாம்" என்று றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் விலக்கியிருக்கிறார்கள். அன்றியும் "மூன்றுபேர் சேர்ந்த ஒரு ஜமாஅத்தாயிருக்கவேண்டும்" என்றும், "சபரில் அவர்களுடைய எண்ணங்கள் ஒன்றுக்கொன்று பேதப்படுமாதலால் அவர்களில் ஒருவனை அமீறாக்கி (மற்றவர் அவன் சொற்படி நடந்து) கொள்ளவேண்டும்" என்றும், "எஜமானனில்லாத எந்தக்காரியமும் இடர்படும்" என்றும், "ஆலமானது இரண்டு ஆண்டவனுக்குச் சம்பந்தப்பட்டதாயிருந்தால் அது சீர் குலைந்திருக்கும்" என்றும், "யார் அதிக நற்குணமுள்ளவனும் அதிக சபர் செய்தவனும் இருக்கிறானோ அவனை அமீறாக்கவேண்டும்" என்றும் திருவுளமாயிருக்கிறார்கள்.

மூன்றாவது அதபு:—ஊரிலிருக்கிற தோழர்களிடம் பயணம் சொல்லிக்கொள்ள வேண்டும். ஒவ்வொருவரிடத்திலும் அஸ்தவுதி உல்லாஹ தீனக்க வஅமானத்தக்க வகவாத்தீம அமலிக்க என்பதும் றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் அருளிச் செய்ததுமான இந்தத் துஆவை ஓதவேண்டும். றசூல்சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களிடத்திலிருந்து யாராவது சபர் போனால் ஜவ்வதக் கல்லாஹுத் தக்வா வகபர தம்பக்க வவஜ்ஜஹக லக்கல்கைர ஹைதுமா தவஜ்ஜஹ்த்த என்று துஆ செய்வார்கள். இந்த துஆ முகீமுக்கு சுன்னத்தாயிருக்கிறது. பயணம் சொல்லிப் பிரியும்போது எல்லாரையும் அல்லாகு தஆலாவுடைய காவலில் சாட்ட வேண்டும். உமர்றலியல்லாகு அன்கு அவர்கள் ஒருநாள் [illegible] கொடுத்துக்கொண்டிருந்தார்கள். அப்போது ஒருவர் ஒரு பிள்ளையைக்கூட அழைத்துக்கொண்டு அவர்களிடம் வந்தார். உமர்றலியல்லாகு அன்கு அவர்கள் அந்தப் பிள்ளையைப் பார்த்து ஆச்சரியப்பட்டு "சுபுஹானல்லா! இந்தப்பிள்ளை உன் சாயலாயிருப்பது போல் ஒருவரையும் மற்றவர் சாயலாயிருக்க எப்போதும் நான் கண்டதில்லை" என்று அவரை நோக்கிச் சொன்னார்கள். அப்போதவர் "யா அமீறல் முஃமினீன்! இந்தப்பிள்ளையினுடைய ஓர் அதிசயமான சங்கதியைத் தங்களுக்குச் சொல்லுகிறேன். அதாவது நான் சபர்போகிற சமயத்தில் இவனுடைய தாய் கர்ப்பவதியாயிருந்தபடியால் "என்னை இந்த நிலைமையில் விட்டுப்போகிறீரே" என்றனள். அப்போது நான் அஸ்தவுதிஉல்லாஹ மாபீபத்தனிக்கி "உன் வயிற்றிலிருக்கும் கர்ப்பத்தை அல்லாகு தஆலாவுடைய காவலில் சாட்டினேன்" என்று சொல்லிப் பிரயாணமாய்விட்டேன். பின்பு சபரிலிருந்து திரும்பி வந்த காலத்



தில் இவன் தாய் இறந்துபோயிருந்தனள். ஓர் இரவில் பேசிக்கொண்டிருக்கும்போது கொஞ்சதூரத்தில் நெருப்பின் வெளிச்சத்தைக்கண்டு "இதென்ன?" என்றுகேட்டேன். "இது உன் பெண்ஜாதியுடைய கபுரிலிருந்து உண்டாகிற வெளிச்சம்" என்றும், "இரவுதோறும் இப்படியே காண்கிறோம்" என்றும் சொன்னார்கள். அப்போது (என் மனதில்) அவள் தொழுகிறவளாயும் நோன்பு வைக்கிறவளாயுமிருந்தாளே இப்படி யாகுவதற்குக் காரணம் ஏதாயிருக்கலாம் என்று (யோசித்து) அந்த கபுரிடம்போய் அதைத் தோண்டிப்பார்க்க, அதில் ஒரு விளக்கு வைத்திருப்பதையும் அங்கு இந்தக் குழந்தை விளையாடிக்கொண்டிருப்பதையும் கண்டேன். அப்போது (அசரீரிவாக்காக) யாரோ என்னை விளித்து, "நீ இந்தப் பிள்ளையை நம்மிடம் சாட்டிவிட்டுப்போனாய். இப்போது இதை நாம் உன்னிடம் ஒப்புக்கொடுத்துவிட்டோம். இவன் தாயையும் நம்மிடம் சாட்டியிருந்தாயானால் தாயையும் ஒப்பிப்போம்" என்று எனக்குச் சொல்வதுபோல் ஒரு சத்தத்தைக் கேட்டேன்" என்றனர்.

நாலாவது அதபு:—இரண்டு தொழுகைகளைத் தொழுகவேண்டும். அவற்றுள் ஒன்று:-சபருக்கு முன்னதாக இஸ்திகாரா தொழுவதாம். இந்த இஸ்திகாரா தொழுகையும் இதன் துஆவும் தெரிந்தவைகளாயிருக்கின்றன. மற்றொன்று:-வெளியே புறப்படுகிற சமயத்தில் நாலு றக்அத்து தொழுதுகொள்வதாம். அனஸ் றலியல்லாகு அன்கு அவர்கள் சொல்லுகிறதாவது:—"ஒருவர் றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களிடம் வந்து நான் சபர்போக நாடியிருக்கிறேன். அதற்காக வஸிய்யத்து எழுதியிருக்கிறேன். அதை என் தகப்பனிடத்தில் கொடுக்கவா? அல்லது மகனிடத்தில் கொடுக்கவா? அல்லது சகோதரனிடத்தில் கொடுக்கவா?" என்று கேட்டார். அப்போது நாயகமவர்கள் "சபர் போகிற எவனும் பிரயாணப்படுவதற்கு முன்னே நாலு றக்அத்து தொழுவதற்குமேல் அல்லாகுதஆலாவிடத்தில் மெய்யான ஒரு கலீபாவைத் தனதுஸ்தானத்தில் நியமிக்கமாட்டான்" என்றும், "அதில் பாத்திஹாவைத்தையும் குல்ஹுவல்லாஹு அஹதுவையும் ஓதவேண்டும்" என்றும், "பிறகு அல்லாஹும்ம இன்னீ அதகர்றபு பிஹின்ன இலைக்க பக்லுப்னீ பிஹின்ன பீஅஹ்லீ வமாலீ (வஹிய்ய கலீபத்துன் பீஅஹ்லிஹி வமாலிஹி தவ்வரத் ஹவ்ல தாரிஹி ஹத்தா யர்ஜிஅ இலாஅஹ்லிஹி) என்று ஓதவேண்டும்" என்றும் அருளிச் செய்தார்கள்.

ஐந்தாவது அதபு:—வீட்டு வாசற்படியிலிருந்து வந்தால் பிஸ்மில்லாஹி வபில்லாஹி தவக்கல்த்து அலல்லாஹி லாஹவ்ல வலாகுவ்வ

த்த இல்லா பில்லாஹி றப்பிஅவூதுபிக்க அன்உலில்ல அவ்உலவ்வ அவ் அவுலம அவ்உஷலம அவ்அஜ்ஹல அவ்யுஜ்ஹல் அலைய்ய என்று ஓத வேண்டும். வாகனத்தின் மீதேறினால் சுப்ஹானல்லதீ சக்கரலனாஹாதா வமாகுன்னாலஹு முக்ரினீன் வஇன்னா இலா றப்பினாலமுன்கலிபூன் என்று ஓதவேண்டும்.

ஆறுவது அதபு:—வியாழக்கிழமையிலும் சுபுஹு நேரத்திலும் பயணத்தை ஆரம்பிக்க முயலவேண்டும். ஏனென்றால், றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் வியாழக்கிழமையில் சபரை ஆரம்பிப்பவர்களாயிருந்தார்கள். இன்னும் "யாராவதொருவன் சபர்போக நாடினால் அல்லது ஒரு ஹாஜத்துக்காக ஒருவனிடத்தில் போக நாடினால் சுபுஹு நேரத்தில் போகவேண்டும்" என்று இபுனு அப்பாஸ் றலியல்லாகு அன்குமா அவர்கள்சொல்லுகிறார்கள். றசூல்சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் அல்லாஹும்ம பாரிக் லிஉம்மத்தீ பீபுகூரிஹா யவ்மஸ்ஸப்தி என்று துஆ செய்திருக்கிறார்கள். இன்னும் அல்லாஹும்ம பாரிக் லிஉம்மத்தீ பீபுகூரிஹா யவ்மல் கமீஸி என்றும் துஆ கேட்டிருக்கிறார்கள். ஆகலால் சபர்போக சனி, வியாழன் இக்கிழமைகளின் சுபுஹு நேரம் முபாரக்கானதாயிருக்கும்.

ஏழாவது அதபு:—சபர்போகும் மிருகத்துக்குப் பாரத்தை இலேசுபடுத்தவேண்டும். அதனுடைய முதுகின்மேல் நிற்கக்கூடாது. அதன்மேல் தூங்கக்கூடாது. அதன் முகத்தின்மேல் கழியால் அடிக்கக்கூடாது. காலையிலும் மாலையிலும் ஒருவாயுத்துநேரம் அதை விட்டிறங்கிநடப்பான். அதனால்தானும் இலேசாகும். மிருகத்துக்கும்பாரம் குறையும். சத்தக்காரனுடைய மனமும் சந்தோஷமாகும். சலபுகளான முன்னோர்களிற் சிலர் யாதொரு மிருகத்தைச் சத்தத்துக்குப் பிடித்தால் சொந்தக்காரனும் அதைவிட்டு இறங்குகிறதில்லையென்ற ஷர்த்தை விதித்தே சத்தம் பேசிக்கொள்ளுவார்கள். பின்பு அதை விட்டிறங்கி நடப்பார்கள். ஏனென்றால், அந்த மிருகத்தின்மேல் அது சதகாவாயிருப்பதற்கேயாம். யாதொரு மிருகத்தைக் காரணமில்லாமல் அடித்தாலும் அதன்மேல் அதிகமான சுமை ஏற்றினாலும் கியாமத்தில் அது வழக்குச்செய்யும். அபுத்தர்தாறலியல்லாகு அன்கு அவர்களின் ஒரு ஒட்டகம் செத்துப்போயிற்று. அப்போதவர்கள் அந்த ஒட்டகத்தைப்பார்த்து, "ஓ ஒட்டகமே! பத்திரம். நீ அல்லாகு தஆலாவிடத்தில் என்மேல் பிராதுசொல்லாதே. நான் உன் சக்திக்கு மேல் அதிகமாய் உன்மீது சுமை ஏற்றவில்லை யென்பது உனக்குத் தெரியும்" என்று சொன்னார்கள். மிருகத்தின்மேல் ஏற்றும் சுமையைச்



சத்தக்காரனுக்குக் காட்டி இவ்வளவு சுமை ஏற்றுவேனென்று ஷர்த்திட்டு அவனுடைய சம்மதியைத் தேடிக்கொள்ளவேண்டும். அதற்கு மேல் சுமையை அதிகப்படுத்துவது அழகல்ல. இபுனுல் முபாரக்கு றஹிமகுல்லா அவர்கள்ஒட்டகத்தின்மேல் உட்கார்ந்திருந்தார்கள். அப்போது ஒருவர் ஒரு காகிதத்தைக் கொண்டுவந்து "இதை இன்னார் வசம் செலுத்திவிடுங்கள்" என்று அவர்களிடம் நீட்டினார். அவர்கள் அதை வாங்காமல் சத்தக்காரனிடம் "நான் இதைப் பேசவில்லை" என்று சொல்லிவிட்டார்கள். இதுஒருபளுவிற்சேர்ந்ததல்லவென்றும், இது ஷரகில் இலேசு படுத்தப்பட்ட குற்றமில்லாத வேலைகளிற் சேர்ந்ததென்றும் புக்காறாக்கள் சொல்லியிருப்பதைச் சார்ந்துகொள்ள இவர்கள் சம்மதிக்கவில்லை. மேலும் இலேசு என்றும் இந்த வழியை அடைப்பதானது பெரிய பேணுதலாயிருக்கிறதென்று எண்ணினார்கள். ஆயிஷா றலியல்லாகு அன்ஹா அவர்கள் ரிவாயத்து செய்கிறதாவது:—"றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் சபரில் போனால் தங்களுடன் சீப்பும் கண்ணாடியும் மிசுவாக்கும் சுருமாக்கூடும் மிதுரியும் கொண்டுபோவார்கள்" என்பதே. மிதுரியென்பது தலைரோமத்தைச் செம்மையாக்குகிற ஓர் பொருளாம். மற்றொரு ரிவாயத்தில் நகம் வாங்கியும் சேர்ந்திருக்குமென்று வந்திருக்கிறது. சூபியாக்கள் இவைகளுடன் தண்ணீர் சேம்புகிறகயிறு, பட்டை இவைகளையும்சேர்த்தார்கள். சலபுகளான முன்னோர்களுக்கு இந்தவழக்கமிருந்ததில்லை. ஏனென்றால், அவர்கள் எவ்விடத்திற்குப் போனாலும் தயமும் செய்துகொள்ளுவார்கள். இஸ்திஞ்சாவில் கட்டிகளின் பேரில் சுருக்கிக்கொள்ளுவார்கள். எந்தத் தண்ணீரில் நஜீசு இல்லையென்று தெரிந்துகொள்ளுகிறார்களோ அதில் ஒளு முழுக்கு முதலிய சுத்தம் செய்துகொள்ளுவார்கள். என்கிலும் அவர்களில் இந்த வழக்கமிருந்ததில்லையென்றாலும் சூபிகளுக்கு இது நன்மையாகவேயிருக்கிறது. ஏனென்றால், இவர்கள் இந்தப் பேணுதலை விடுவதற்கு இவர்களுடைய சபரானது அவர்களுடைய சபரைப்போன்றதல்ல. ஆகலால் இவர்கள் பேணுதல் செய்வது நன்மையாயிருக்கும். சலபுகள் பீசபீல்லாஹ் போன்ற பெரிய பெரிய காரியங்களுக்காக சபர் செய்கிறவர்களாயிருந்தார்கள். இவ்வகையான பேணுதலில் அவர்கள் பராக்காகமாட்டார்கள்.

எட்டாவது அதபு:—றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் சபரிலிருந்து திரும்பி வருகிறபோது அவர்களுடைய பார்வை மதீனாவின்மேல் விழுந்தால் அல்லாஹும்மஜ்அல்லனா பிஹா கறாரன்

வசிஜ்ஜன் ஸாசனன் என்று ஓதுவார்கள். பின்பு யாரையாவது அனுப்பி அறிக்கை செய்வார்கள், திடும்பிரவேசமாய் ஒருவரும் வீட்டுக்குப் போகவேண்டாம் என்று தடைசெய்வார்கள். இரண்டு பேர் இதற்கு மாறாக நடந்துகொண்டதினால் அவர்கள் தங்கள் வீட்டில் கெடுதியைக்கண்டு துக்கத்தை அடைந்தார்கள். அன்றியும் சபரிலிருந்து திரும்பிவந்தால் முதலில் மஸ்ஜிதுக்குப்போய் இரண்டு ரக்அத்து தொழுது கொள்ளுவார்கள். வீட்டில் பிரவேசித்தால் தவ்பன் தவ்பன் லிரப்பினா அவ்பன் லாயுகாதிரு அலைனா ஹவ்பன் என்று சொல்லுவார்கள். "வீட்டாருக்கு ஹதியாவாக ஏதாவது பண்டங்களை வாங்கிக்கொண்டுபோவது சுன்னத்து முஅக்கதாவாயிருக்கிறது. ஒன்றுமில்லாதவன் ஒரு கல்லையாவது பையில் போட்டுக்கொண்டு வருவான்" என்று ஹதீஸில் வந்திருக்கிறது. இந்த சுன்னத்து முக்கியமானது என்பதற்கு இது ஒரு அடையாளமாயிருக்கிறது. வெளியரங்கமான அமலுடைய அதபுகள் இவைகளேயாம்.

இனி கவாஸ்ஸுகள் என்னும் சிறந்த குணங்கள் தங்கள் சபரில் அநுஷ்டிக்கிற அதபுகளாவன:—சபர் செய்வதில் தங்கள் நிய்யத்துடைய விருத்தி யிருக்கிறதென்று தெரிந்தால் அப்போது அவர்கள் சபர் போவார்கள். போகும்போது வழியில் மனதில் ஏதாவது குறைச்சலைக் கண்டால் திரும்பி விடுவார்கள். பெரியோர்களுடைய கப்ருகளை ஜியாரத்து செய்யவும் ஷைகுகளைத் தேடவும் நல்லொருவரிடத்திலும் பிரயோசனத்தை அடையவும் நிய்யத்து செய்தே அவர்கள் எந்தப் பட்டணத்துக்கும் போவார்கள். அப்படிப் போவதில் நாங்கள் அநேக ஷைகுகளைப் பார்த்திருக்கிறோமென்று பெருமையாய்ச் சொல்லிக் காட்டுவதை யல்ல, மேலும் ஷைகுகளால் அடைந்த உபதேசத்தின்படி அமல் செய்வதையே நிய்யத்து செய்வார்கள். அவர்கள் நாடிப் போன காரியத்துக்காகச் சிலநாள் தங்கியிருக்கும்படி ஒரு ஷைகு அவர் உத்திரவு செய்திருந்தாலே யொழிய எந்தப் பட்டணத்திலும் பத்துநாளைக்குமேல் அதிகமாய்த் தங்கமாட்டார்கள். ஒருவன் ஒரு ஷைகைக் கண்டுகொள்ளப்போனால் அவனிடம் மூன்றுநாளைக்குமேல் அதிகமாய்த் தங்கமாட்டான். இதுதான் விருந்தினருடைய ஹக்காயிருக்கும். ஆனால் அப்படி அதிகநாள் தங்காதபடி அந்த ஷைகவன் வருத்தப்படுகிறவனாயிருந்தால் அப்போது தங்குவான். ஒரு ஷைகைக் கண்டுகொள்ள ஷைகுக்கு யாதொரு காட்டமில்லாமல் அவரிடம் போனால் தன் இரவு பகலானதுக்குமேல் அதிகமாய் அவரிடம் தங்கமாட்டான். ஒருவனைக் கண்டுகொள்ளப் போனாலும் அவன் வீட்டுக்கதவைத் தட்டமாட்டான். அவன் வெளியே வருகிற வரையில் சபுரு செய்வான். முதலில் அவனைக் கண்டுகொள்ளாதவரையில் வேறு எந்த வேலையையும் ஆரம்பிக்கமாட்டான். அவன் வினவுவதற்கு முன்னே அவனிடம் பேசத்தொடங்கான். வினவினால் அதற்குத் தக்க அளவாய்ப் பதில் சொல்லுவான். அவனிடத்தில் ஏதாவது சுவால் செய்ய வேண்டுமானால் முதலில் உத்திரவு கேட்பான். அந்தப்பட்டணத்தில் வேறு சகவாடிகளிற் பராக்காகமாட்டான். ஏனென்றால், அதனால் ஜியாரத்தில் இக்லாஸு என்னும் கலப்பறுதல் இல்லாமற்போகும். வழியில் மெதுவாக ஒருவருக்கும் கேட்காதபடி திக்ரு, தஸ்பீஹு, குர்ஆன் ஓதல் இவைகளிற் பராக்காகுவான். யாராவது பேசினால் தஸ்பீஹு செய்வதினும் அந்தப் பேச்சுக்கு ஜவாபு சொல்வது முக்கியமெனக் கருதி அதற்குப் பதில் சொல்லுவான். தான் தேடுகிற பொருள் தன் ஊரிலேயே கிடைக்கிற பக்ஷம் அதற்காக சபர் செய்யமாட்டான். ஏனென்றால் இது நன்றி மறக்குதலா யிருப்பதினாலென்க.



## இரண்டாவது பாபு - முசாபிரானவன் சபர்போகுமுன் கற்றுக்கொள்ளவேண்டிய இல்மின் பயான்.

அறிந்துகொள்:—சபரில் முசாபிருக்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிற ருக்ஸத்தான காரியங்கள் இன்னின்னவென்பதைத் தெரிந்துகொள்வது அவன்மேல் விதியாயிருக்கும். அந்த ருக்ஸத்தின்படி நடக்க அவனுக்கு நாட்டமில்லையென்றாலும் சரியே. ஏனென்றால், அவசியத்தின்போது அப்படி நடக்க அவன் ஹாஜத்தாகவும் கூடும். கிப்லாவுடையவும் தொழுகையின் நேரத்துடையவுமான இல்மையும் கற்றுக்கொள்ளவேண்டும். சபரில் தஹாரத்தென்னும் ஒழுவு முழுக்குகளில் இரண்டு காரியத்துக்கும், தொழுகையில் இரண்டு காரியத்துக்கும், சுன்னத்துத் தொழுகையில் இரண்டு காரியத்துக்கும், நோன்பில் ஒரே காரியத்துக்கும் ருக்ஸத்து கொடுக்கப்பட்டிருக்கிறது. தஹாரத்தில் இரண்டு காரியம் என்றது மோஜாவின்மேல் மஸ்ஹு செய்வதும் தயம்மும் செய்வதுமாம். தொழுகையில் இரண்டு காரியமென்றது கஸ்ரு செய்வதும் ஜம்உ செய்வதுமாம். சுன்னத்துத் தொழுகையில் இரண்டு காரியமென்றது வாகனத்தின்மேல் தொழுது கொள்வதும் நடக்கையில் தொழுதுகொள்வதுமாம். நோன்பில் ஒரே காரியமென்றது நோன்பு வைக்காமல் விட்டிருப்பதாம். ஆக இந்த ஏழுகாரியங்களில் முசாபிருக்கு ருக்ஸத்து (அனுமதி) கொடுக்கப்பட்டிருக்கிறது.

முதலாவது ருக்ஸத்து:—மோஜாவின்மேல் மஸ்ஹு செய்வதாம். ஒருவன் கிரமமான ஒழுவின்பேரில் மோஜாவை அணிந்திருப்பானா

கில் அவன் முஸாபிரா யிருந்தால் அவனுக்கு ஒழுமுறிந்த நேரத்திலிருந்து மூன்று இரவு பகல்கள் வரையில் அந்த மோஜாவின்மேல் மஸ்ஹு செய்துகொள்வது ஆகும். ஆனால் மஸ்ஹு கூடுவதற்கு ஐந்து விதிகளுண்டு. முதலாவது விதி:—அவன் ஒழுவை முடித்த பிறகு மோஜாவை அணிந்திருக்க வேண்டும். ஒருகாலைக்கழுவி மறுகாலைக் கழுவுவதற்கு முன்னே கழுவின காலை மோஜாவிலிட்டுக் கொண்டானாகில் இமாம் ஷாபிஈ றஹிமகுல்லா அவர்களிடத்தில் மஸ்ஹு கூடாது. பின்பு மற்றொருகாலைக் கழுவி மோஜாவி லிட்டுக்கொண்டால் முதலில்கழுவி மோஜாமாட்டிய காலையும் மோஜாவிலிருந்து கழட்டி மற்றொருமுறை அதைக் கழுவி மோஜாவிலிட்டுக்கொள்ள வேண்டும். இரண்டாவது விதி:—அந்த மோஜாவை அணிந்துகொண்டு வழக்கத்தில் கொஞ்ச தூரமாவது நடக்கக்கூடியதா யிருக்கவேண்டும். அஃறியும் தோலில்லாத மோஜாவின்மேல் மஸ்ஹு கூடாது. மூன்றாவது விதி:—அந்த மோஜாவானது கரண்டைவரையில் செம்மையானதா யிருக்கவேண்டும். பாதத்துடைய ஸ்தானத்தில் ஏதாவது வெளியானால் அல்லது அவாயிருந்தால் ஷாபிஈ றஹிமகுல்லா அவர்களிடத்தில் மஸ்ஹு கூடாது. மாலிகி றஹிமகுல்லா அவர்களிடத்தில் மோஜா கிழிந்திருந்தாலும் அதனோடு நடக்கக் கூடுகிறபக்ஷத்தில் மஸ்ஹு கூடும். இது ஷாபிஈ றஹிமகுல்லா அவர்களுடைய கதீமான கவுலா யிருக்கிறது. நம்மிடத்தில் இது மிகவும் ஏற்றமா யிருக்கும். ஏனென்றால் சபரில் மோஜா அநேகமாய்க் கிழியும். எந்நேரமும் அதைத் தைத்துக்கொண்டிருக்க முடியாது. நாலாவது விதி:—மஸ்ஹு செய்யும்போது மோஜாவைக் காலிலிருந்து கழட்டாம லிருக்கவேண்டும். கழட்டினால் ஒழுவைப் புதுப்பித்துக்கொள்வதே அதிக மேலாயிருக்கிறது. காலைமாத்திரம் கழுவிக்கொண்டாலும் ஆகுமென்பதே ஸாஹிறாயிருக்கும். ஐந்தாவது விதி:—மஸ்ஹைக் கெண்டைக் காலின்மேல் செய்யாமலிருக்கவேண்டும். மேலும் பாதத்துக்கு நேராக மஸ்ஹு செய்யவேண்டும். பாதத்துடைய முதுகின்மேற் செய்வது ஏற்றம். ஒரு விரலைக்கொண்டு மஸ்ஹு செய்தாலும் போதும். என்றாலும் மூன்று விரல்களால் செய்வது ஏற்றம். ஒரு தரத்துக்குமேல் அதிகமாய் மஸ்ஹு செய்யமாட்டான். சபர் புறப்படுவதற்கு முன்னே மஸ்ஹு செய்திருந்தால் ஒரு இரவு பகல்களின்பேரில் மஸ்ஹைச் சுருக்கிக்கொள்ளுவான். இனி யாராவதொருவன் மோஜாவை அணிய நாடினால் முதலில் அதைக் கவிழ்த்துத் தட்டிக்கொள்வது சுன்னத்தா யிருக்கும். ஏனென்றால், ஒருதரம் றசூல் ஸல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் ஒருகாலில் மோஜாவைமாட்டி மற்றொரு மோஜாவை



ஒரு காகம் வந்து தூக்கிக்கொண்டு அந்தரமாய்ப் பறந்துபோய் பின்பு அங்கிருந்து அதைக் கீழேபோட அதற்குள்ளேயிருந்து ஒருபாம்பு வெளிப்பட்டது. அப்போது றசூல் ஸல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் "அல்லாவின்மீதும் ஆகிரத்தின்மீதும் ஈமான்கொண் டிருப்பவன் எவனோ அவனுக்கு நீங்கள் சொல்லவேண்டியதாவது:—"மோஜாவைத்தட்டி உதறுவதற்கு முன் அதில் காலை மாட்ட வேண்டாம்" என்பதே எனத் திருவுளமானார்கள்.

இரண்டாவது ருக்ஸத்து:—தயம்மும் செய்வதாம். இதன் விபரத்தைத் தஹாரத்துடைய அஸ்லில் சொல்லிவந்திருக்கிறோம். மீண்டும் சொல்வதில் விரிவாகுமென விட்டுவிட்டோம்.

மூன்றாவது ருக்ஸத்து:—கஸ்று செய்வதாம். அதாவது:—நாலு றக்அத்தான ஒவ்வொரு பர்லையும் இரண்டு றக்அத்தாகச் சுருக்கித்தொழுவதாம். ஆனால் இதற்கு நாலு விதிகளுண்டு. முதலாவது விதி:—நேரத்தோடு தொழுவதா யிருக்கவேண்டும். கலாவாய்ப்போனால் கஸ்று செய்வது கூடாதென்பதே சரி. இரண்டாவது விதி:—கஸ்ரை நிய்யத்து செய்திருக்கவேண்டும். நிறப்பமாய்த் தொழுக நிய்யத்து செய்திருந்தால், அல்லது நிறப்பமாய்த் தொழுகவோ? கஸ்று செய்யவோ? எதற்காக நிய்யத்து செய்ததென்பது ஏற்படாமற்போனால் நிறப்பமாய்த் தொழுவதே விதியாகும். மூன்றாவது விதி:—நிறப்பமாய்த் தொழுகிற ஒரு இமாமைத் தொடராதவனா யிருக்கவேண்டும். தொடர்ந்தால் நிறப்பமாய்த் தொழுவது விதியாய்ப்போம். மேலும், இமாமை முகீம் என்றும் நிறப்பமாய்த்தொழுவான் என்றும் நினைத்துத் தொடர்ந்தவனுக்குச் சந்தேக முண்டாய்ப்போனால் அப்போதும் நிறப்பமாய்த் தொழுவது அவனுக்கு விதியாகும். ஏனென்றால், பிறகு முசாபிரைத் தெரிந்துகொள்ள முடியாததினாலென்க. ஆனால் முசாபிரே என்று தெரிந்து தொடர்ந்தவனுக்கு அவன் கஸ்று செய்வானோ? என்னவோ? என்று சந்தேக முண்டாய்ப்போனால் கஸ்று தொழுவது அவனுக்கு ஆகும். இமாம் கஸ்று செய்யவில்லை யானாலும் சரியே. ஏனென்றால், அவனுடைய நிய்யத்து மறைந்திருப்பதினாலும் அதை அறிவது ஷர்த்தென்று விதிக்க முடியாததினாலுமேயாம். நாலாவது விதி:—சபர் முபாஹானதாயும் தலையிட்டதாயு மிருக்கவேண்டும். எஜமானனைவிட்டு ஓடிப்போகிற அடிமையினுடைய சபரும், வழிப்பறி செய்யப்போகிற கள்ளனுடைய சபரும், ஹறாமான பொருளினின்றும் நியமித்த ஜீவனம்சத்தை வாங்கப்போகிறவனுடைய சபரும், தாய்தந்தையருடைய உத்தரவில்லாமல் போகிற சபரும் (முபாஹாகமாட்டா)

இந்த சபர்களெல்லாம் ஹராமாயிருக்கும். இவைகளில் (கஸ்று தொழுக) ருக்ஸத்து கூடாது. இதுபோலவே கடனைத் தீர்க்க சக்தியுள்ள ஒருவன் கடன் கொடுத்தவனைவிட்டு ஒளித்தோடுகிற சபரும் ஹராமாகும். மொத்தத்தில் கெட்ட நோக்கத்திற்காக சபர் செய்கிறானோ அந்த நோக்கம் ஹராமாயிருந்தால் சபரும் ஹராமாகும். ஆலெயிட்டாப் என்றது பதினாறு பர்சகுகளாயிருக்கும். இதற்குக் குறைந்ததில் கஸ்று செய்வது கூடாது. ஒரு பர்ஸகு என்பது பன்னீராயிரம் காலடிகளாயிருக்கும். ஊரின் கட்டிடங்களைவிட்டுத் தாண்டினவுடன் சபரின் துவக்கமாம். பாழடைந்த விடங்களையும் தோட்டங்களையும் விட்டுத் தாண்டவில்லையானாலும் சரியே. இனி ஊரின் கட்டிடங்களிடம் சேர்ந்துவிட்டால் அல்லது யாதொரு ஊரில் போகிறானோ புறப்படுகிற நாளையும் நீக்கி அதில் மூன்று நாளைக்காவது அதிகநாளைக்காவது தங்கியிருக்க நிய்யத்துச் செய்தால் அது சபரின் முடிவாகும். அப்படித் தங்கியிருக்க நிய்யத்துச் செய்யாமல் அந்த ஊரில் ஏதோ வேலைகளில் பராக்காயிருக்கிறான். அந்த வேலைகள் எப்போது முடியுமென்பது அவனுக்குத் தெரியவில்லை. தினந்தோறும் இன்று முடிந்துவிடுமென்று ஆதரவு வைத்தவனாயிருக்கிறான். இப்படியே மூன்று நாளைக்குமேல் அதிகமாய்த் தங்கும்படி நேரிட்டால் ஷாபிஈக்கு மிக நெருங்கினதாயிருக்கிற ஒரு சொல்லின்படி அவன் கஸ்று தொழுவது ஆகும். ஏனென்றால் அவனும் முசாபிரைப்போலிருக்கிறான். அவன் தன்மனதால் அங்கு தங்கியிருக்கவில்லை. அப்படித் தங்கியிருக்க அவனுக்கு ஸ்திரமான நாட்டமில்லையென்க.

நாலாவது ருக்ஸத்து:—ஜம்உ செய்வதாம். அதாவது:—முசாபிராயும் ஆலெயிட்டாபாயுமிருக்கிற சபரில் லொஹறு தொழுகையைப் பிற்படுத்தி அஸ்று தொழுகையுடன் சேர்த்துத் தொழுவதும், அல்லது அஸ்று தொழுகையை முற்படுத்தி லொஹறு தொழுகையுடன் சேர்த்துத் தொழுவதும், இதுபோல் மக்ரிபு இஷாத் தொழுகைகளைச் சேர்த்துத் தொழுவதும் ஆகும். பிந்தின தொழுகையை முந்தின தொழுகையுடன் சேர்த்துத் தொழுகிறதாயிருந்தால் முந்தினதை முந்தியும் பிந்தினதைப் பிந்தியும் தொழவேண்டும். சபரில் சுன்னத்துகளைத் தொழுது கொள்வது மிகவும் விருப்பம். ஆனால் அவனுக்கு இஷ்டமானால் சுன்னத்துகளை வாகனத்தின்மேலிருந்தபடியே அல்லது கால்நடையாய் நடந்துகொண்டே தொழுகலாம். சுன்னத்தை தொழுகிற தர்தீபு எப்படியென்றால், லொஹறுடைய முந்தின சுன்னத்து நாலு றக்அத்துகளை முதலில் தொழுது அதன்பிறகு அஸ்றுடைய முந்தின சுன்னத்து நாலு றக்அத்துகளைத் தொழுவான். பிறகு பாங்கும் இகாமத்தும்



சொல்லி லொஹறுடைய பர்லைத் தொழுதுகொண்டு, அதன்பிறகு அஸர் தொழுகைக்கு இகாமத்து சொல்லுவான். தயம்மும் செய்திருந்தால் அதை மீளவைத்து அசருடைய பர்லைத் தொழுவான். இரண்டு தொழுகைகளுக்கும் நடுவே தயம்மும் செய்வதும் இகாமத்து சொல்வதும் தவிர அதிகநேரம் தாமதம் செய்யான். பிறகு லொஹறுடைய பிந்தின சுன்னத்து இரண்டு றக்அத்துகளை அசருடைய பர்லுக்குப்பின் தொழுவான். லொஹறை அசருவரையில் பிற்படுத்தினாலும் இதுபோலவே செய்வான். அசரைத் தொழுதுகொண்டபின் சூரியன் அஸ்தமிப்பதற்குள்ளாக ஊருக்கு வந்து சேர்ந்தால் அசரை மீளவைக்கவேண்டியதில்லை. மக்ரிபு இஷாத் தொழுகைகளின் ஹுக்மும் இதுபோலவேயாம். ஒரு சொல்லின்படி சமீபமான சபரிலும் ஜம்உ செய்வது ஆகும்.

ஐந்தாவது ருக்ஸத்து:—வாகனத்தின்மேல் சுன்னத்தைத் தொழுவது ஆகுமென்பதாம். முகத்தை கிபுலாவின்பக்கம் ஆக்கவேண்டுமென்ற அவசியமில்லை. மேலும் வழியே கிபுலாவுக்குப்பகரமாயிருக்கிறது. ஆனால் வாகனத்தை அவன் தன் இச்சையாய் கிபுலாவைவிட்டுத் திருப்புவானாகில் தொழுகை பாத்திலாய்ப்போம். மறதியாய்த் திருப்புவானாகில் அல்லது வாகனம் மேய்ச்சலமேய்ந்தால் குற்றமில்லை. ருகூஉ ஸுஜூதுகளை சயிக்கினையாகச் செய்வான். அதாவது ருகூஉக்குக் கொஞ்சமாகவும் ஸுஜூதுக்கு அதிகமாகவும் முதுகைவளைப்பான். கீழேவிழுந்துவிடுகிற பயமுண்டாகும்படி அவ்வளவு அதிகமாய் வளைக்கவேண்டிய அவசியமில்லை. தாங்கும் தானத்திலிருந்தால் ருகூஉ சுஜூதுகளை நிறப்பமாகச் செய்வான்.

ஆறுவது ருக்ஸத்து:—நடந்துகொண்டே சுன்னத்தைத் தொழுவதாம். தக்பீருடைய ஆரம்பத்தில் முகத்தை கிபுலாபக்கம் ஆக்கிக்கொள்ளுவான். இது அவனுக்கு இலேசாயிருக்கும். வாகனத்தின்மேல் ஏறியிருப்பவனுக்கு இது கஷ்டமாகும். நடையில் தொழுகிறவன் ருகூஉ சுஜூதுகளை சயிக்கினையால் செய்துகொண்டு நடப்பான். தஷஹ்ஹுதுடைய நேரத்திலும் நடந்துகொண்டே அத்தஹிய்யாத்து ஓதுவான். நஜீசின்மேல் காலைவைக்காதபடி கவனித்துக்கொள்ளுவான். வழியில் யாதொரு நஜீசிருக்கிற காரணத்தால் அந்த வழியைவிட்டும் திரும்பிவிடுவதும் வழியில் அதற்காக கஷ்டத்தை எடுத்துக்கொள்வதும் அவன்மேல் வாஜிபாகாது. யாராவதொருவன் பகைவனுக்குப் பயந்து ஓடுவானாகில், அல்லது யுத்தசைனியத்தின் அணியிலிருப்பானாகில், அல்லது வெள்ளத்துக்கும் நாய்க்கும் பயந்து

ஓடுவானாகில் அவன் பர்ளுத்தொழுகையை (முன்னத்தில் நாம் சொன்னதுபோல்) வாகனத்தின்மேல் இருந்தபடியேயாவது அல்லது நடந்துகொண்டேயாவது தொழுதுகொள்வது அவனுக்கு ஆகும். அதை கலாசெய்வது அவன்மேல் வாஜிபாகாது.

ஏழாவது ருக்ஸத்து:—நோன்பை விடுவதாம். பிரயாணி நோன்பை நிய்யத்து செய்திருந்தால் அதை விட்டுவிடுவதும் ஆகும். ஆனால் சுபுஹுக்குப் பிறகு ஊரைவிட்டும் வெளிப்படுவானாகில் அப்போது நோன்பைவிடுவது ஆகாது. நோன்பைவிட்டிருந்த முசாபிர் ஒரு ஊரில் போய்ச் சேர்ந்தால் பகலில் உண்பது அவனுக்கு ஆகும். நோன்பு வைத்துக்கொண்டிருக்கிறவன் ஒரு ஊரில் போய்ச்சேர்ந்தால் அதை விடுவது ஆகாது. சபரில் சிறப்பாய்த் தொழுவதைக் காணவும் நோன்பு நோற்பதே மிகவும் சிறப்புள்ளதாயிருக்கிறது. ஏனென்றால், மதுஹபுடைய வித்தியாசத்தைவிட்டும் நீங்குவதற்கேயாம். அந்த வித்தியாசமாவது:— அபூஹனீபா ரஹிமஹுல்லா அவர்களிடத்தில் சிறப்பாய்த் தொழுவது ஆகாது என்பதேயாம். என்றாலும் நோன்பை விடுவதிலும் வைப்பதே மேல். ஏனென்றால், கலாவின் அபாயத்தில் அகப்படாமலிருக்கவேயாம். ஆனால் பலமில்லாத ஒருவன் சபரில் நோன்புகளைப் பயப்படுவானாம். ஆனால் பலமில்லாத ஒருவன் சபரில் நோன்புகளைக் கைப்பற்றுவது ... இந்த சமயத்தில் அப்போது அவன் நோன்பை விடுவதே உத்தமம். இந்த ஏழு ருக்ஸத்துகளில் முதல் மூன்று ருக்ஸத்துகள் நீண்ட சபருக்கு மாத்திரமாம். அவை:—கஸ்ரு தொழுவதும், நோன்பைவிடுவதும், மூன்று இரவு பகல்கள் வரையில் மோசாவின்மேல் மஸ்ஹு செய்வதுமாம். மூன்று ருக்ஸத்துகள் சமீபமான சபரிலும் ஆகும். அவை:—வாகனத்தின்மேலிருந்துகொண்டும் நடந்துகொண்டும் சுன்னத்தான தொழுகையைத் தொழுவதும் (ஜும்ஆவை விடுவதும்) தொழுகைகளை கலா செய்வதன்றி தயம்மும்செய்வதுமாம். ஜம்உ செய்து இரண்டு தொழுகைகளை ஜம்உசெய்வதில் வித்தியாசமிருக்கிறது. சமீபமான சபரில் அது கூடுமென்பதே ஸஹீஹாம். பிரயாணியானவன் சபர் போவதற்கு முன்னே இந்த இல்முகளைக் கற்றுக்கொள்வது அவசியமாயிருக்கும். ஏனென்றால், தேவைப்படும்போது ஒருவனிடத்தில் இவைகளைப்படித்துக்கொள்ள சபரில் எவரும் கிடைக்கமாட்டார்கள். வழியில் மஸ்ஜிதும் பள்ளிவாசலுமில்லாத ஊர்கள் அநேகமிருக்கும். (அவ்விடங்களில் பேசுபவர்கள் இல்லையென்பது ஏற்படாது.) ஆதலால் கிப்லா, தொழுகையின் நேரம் இவைகளின்பேரில் அறிவிக்கிற அத்தாட்சிகளையும் கற்றுக்கொள்ளவேண்டும். அதாவது, லுஹர் தொழுகையின்போது கிப்லாவை நோக்கிநிற்கிற சமயத்தில் சூரியன் எங்கேயிருக்கிறதென்பதையும், அதன் உதய அஸ்தமனங்கள் எப்பக்கங்களில் ஆகின்றனவென்பதையும், நடுப்புள்ளியாகிய குதுபு எப்படி நேர்ந்திருக்கிறதென்பதையும் தெரிந்துகொள்ளவேண்டும். வழியில் யாதொரு மலையிருந்தால் அது வலது பாரிசத்தில் இருக்கிறதா, அல்லது இடது பாரிசத்தில் இருக்கிறதா என்பதையும் அறிந்துகொள்ளவேண்டும். முசாபிரானவன் இவ்வளவையாவது அறியாமலிருக்க வழியில்லை.



## எட்டாவது அஸ்லு:- இராகம் கேட்பது, அதனால் அநந்த பரவசமாகுவது இவைகளுடைய அதபுகளையும், இராகம் கேட்பதின் ஹுக்முகளையும் பயான் செய்தல்.

இதில் இரண்டு பாபுகள் உண்டு.

முதலாவது பாபு:—இராகம் கேட்பது முபாஹு என்பதையும் அதில் ஹலாலானது இன்னது ஹராமானது இன்னது என்பதையும் பேசுவதாம்.

அறிந்துகொள்:—இரும்பிலும் சக்கிமுக்கிக்கல்லிலும் எப்படி நெருப்பு மறைந்திருக்கிறதோ அப்படியே மனிதனுடைய கல்பிலும் அல்லாஹுத்தஆலாவினுடைய ஓர் சிர்ரு மறைந்திருக்கிறது. இரும்பைச் சக்கிமுக்கிக் கல்லில் தட்டிவதுகொண்டு எப்படி அதிலிருந்து நெருப்புப் பரந்து கானகத்தில் வீழுகின்றதோ அப்படியே சரியான மெட்டையுடைய நல்ல இராகமானது இருதயத்தைத் தாக்கி அதிலிருந்து அவனுக்கும் தெரியாதபடி (ஆநந்த பரவசமென்னும்) ஓர்பொருள் உண்டாகின்றது. ஆலமுல் அர்வாஹு என்று சொல்லப்படுகிற ஆலமுல் உல்வியான மேலுலகத்துக்கும் மனிதனுடைய கல்புக்கும் ஓர் சம்பந்தமிருப்பதினால் அந்த சம்பந்தம் காரணமாக இருதயம் தாக்குண்டு அதில் பரவசமுண்டாகிறது. ஏனென்றால், ஆலமுல் உல்வியானது அழகும் சவுந்தரியமுமாயிருப்பதினாலும், அழகு சவுந்தரியமென்பதற்கு ஒன்றுக்கொன்று சரியாய்ப் பொருந்தியிருப்பதே பொருளாதலாலும், எதுவொன்று சரியாய்ப் பொருந்தியிருக்கிறதோ அதானது அந்த ஆலத்துடைய அழகின் வெளிப்பாட்டுக்கு அத்தாட்சியாயிருப்பதினாலும், இந்த ஆலத்தில் புலப்படுகிற ஒவ்வொரு அழகும் அந்த ஆலத்துடைய அழகுக்குப் பயனாயிருப்பதினாலுமேயாம். ஆகவே, சரியான மெட்டையுடைய நல்ல இராகமானது இசை பொருந்தியும், அந்த ஆலத்தைக்கொண்டு ஒருவாறு ஒப்பானதுமாயிருப்பது பற்றி அதனால் மனதுக்கோர் புளகமுண்டாகி ஆநந்தபரவசமாகின்றது. அது என்னவென்பதை மனிதன் அறியாமலிருக்கவும் கூடும். எந்த கல்பு ஆதாவையும் தடையாயிருக்கிற வேறு ஆசையில்லாமல் ஒழிந்ததாயிருக்கிறதோ அந்த கல்பில் இந்தப் பரவசமுண்டாகும். ஆனால்

அப்படி அது ஒழிந்திராமல் யாதொரு வஸ்துவில் பற்றிக் கனிந்துக் கொண்டிருக்குமாகில் அப்போது ஊதினால் பற்றிக்கொள்ளுகிற நெருப்பைப்போல் இராகத்தினால் அந்த வஸ்துவின் ஆசையென்னும் நெருப்பு சுவாலித்தெழும்பும். ஆகவே, எவனுடைய கல்பில் அல்லாஹு தஆலாவுடைய ஆசையென்னும் நெருப்பு கனிந்துகொண்டிருக்கிறதோ அந்த நெருப்பு சுவாலித்தெழும்பும்பொருட்டு இராகம் கேட்பது அவனுக்கு முக்கியமாம். இன்னும் எவனுடைய கல்பில் கெட்ட ஆசையிருக்கிறதோ அவன் இராகம் கேட்பதானது அவனைக் கொல்லுகிற நாசியாயும் ஹறாமாயுமிருக்கிறது.

இராகம் கேட்பது ஹறாமா? அல்லது ஹலாலா? என்பதில் உலமாக்களுக்குள் விகற்பமிருக்கிறது. அதை ஹறாமாக்கினவர்கள் லாஹிரை உடைய உலமாக்களாயிருக்கிறார்கள். ஏனென்றால், அல்லாஹு தஆலாவுடைய ஆசை எதார்த்தமாய் மனிதனுடைய கல்பில் அமைவது அவர்களுக்கே ரூபகரப்படவில்லை. மனிதன் தன்னுடைய இனத்தையே ஆசிக்கக்கூடுமென்றும்; தன் இனமல்லாததும் தனக்கு எவ்விதத்திலும் ஒப்பாகாததுமான ஒரு பொருளை அவன் எப்படி ஆசிக்கக்கூடுமென்றும் சொல்லுகிறார்கள். ஆகவே கல்பில் சிருஷ்டியாகிய படைப்பின் ஆசையே யொழிய சிருஷ்டிகனாகிய அல்லாஹு தஆலாவுடைய ஆசையுண்டாகுவது அவர்களிடத்தில் ரூபகரப்படாது. அப்படி ரூபகரப்பட்டால் அது ஷக்லில் ஆகாத ஓர் சாயலைச் சிந்திப்பதின் பேரில் ஏற்பட்டதாயிருக்கும். இந்த காரணத்தினாலேயே இராகம் கேட்பது விளையாட்டாகவாவது அல்லது ஒரு சிருஷ்டியின்மீதுள்ள ஆசையைப்பற்றியேன்றாவது ஏற்படுகிறதென்றும், இவ்விரண்டும் தீனில் பழிக்கப்பட்டதாயிருக்கிறதென்றும் அவர்கள் சொல்லுகிறார்கள். அல்லாஹு தஆலாவை ஆசிப்பது மனிதர்கள்பேரில் வாஜிபு என்று வந்திருக்கிறதே அந்த ஆசைக்குப் பொருள் என்னவென்று அவர்களைக் கேட்டால், அவனுடைய உத்திரவுக்கு வழிபட்டு வணங்குவதே அதற்குப் பொருள் என்று சொல்லுகிறார்கள். இது இவர்களுக்கு நேர்ந்திருக்கிற பெரியதோர் பிசகாயிருக்கிறது. நாம் இதை முஞ்சியாத்துடைய ருகுனு மஹப்பத்துடைய அஸ்லில் எடுத்துப் பேசுவோம். ஆனாலும் இவ்விடத்தில் நாம் சொல்வது யாதெனில், இராகம் கேட்பதின் ஹுக்குமை இருதயத்திலிருந்து எடுத்துக்கொள்ள வேண்டும். அதாவது இராகம் கேட்பதானது இருதயத்தில் இல்லாத இதரவஸ்துவைக் கொண்டுவராது. மேலும் எது இருதயத்திலிருக்கிறதோ அதையே எழுப்பிவிடும். ஆகவே ஒருவனுக்கு ஷரயில் உவந்



பாக்கப்பட்ட ஒரு பொருள் மனதில் உண்டாயிருந்து அதை உறுதிப்படுத்தவேண்டுமென்ற நாட்டமாய் இராகத்தைக்கொண்டு அதிகப்படுத்துவானாகில் அவனுக்கு சவாபு கிடைக்கும். ஷரயில் பழிப்பாக்கப்பட்ட ஒருபொருள் ஒருவனுடைய மனதில் உண்டாயிருந்தால் இராகம் கேட்பதில் அவனுக்கு அதாபுண்டாகும். ஒருவனுடைய மனதில் இவ்விரண்டுமில்லாமல் விளையாட்டாக இயற்கையின்படி இன்பத்தை யடையும்பொருட்டு இராகம் கேட்பானாகில் அவனுக்கு அது முபாஹாயிருக்கும். ஆகவே இராகம் கேட்பது மூன்றுவகையின்பேரிலாயிருக்கிறது.

முதலாவது வகை:—விளையாட்டின் வழியாக மறதியினால் கேட்பதாம். இது மறதியாளருடைய வழியாகும். துன்யா முழுவதும் விளையாட்டாயிருக்கிறது. இதுவும் அதிற் சேர்ந்ததாகும். இராகம் நல்லாயிருப்பதுபற்றியே அது ஹறாமென்பது கூடாது. ஏனென்றால் நல்லாயிருப்பவைகளெல்லாம் ஹறாமல்ல. அவைகளிற் சிலவற்றை ஹறாமென்றதெல்லாம் அவை நல்லாயிருப்பதினால் அல்ல. மேலும் அதில் ஏதோ நஷ்டமும் கெடுதியுமிருப்பதுபற்றியே ஹறாமாயிருக்கிறது. பக்ஷிகள் பாடுவதும் நல்லாயிருக்கிறது. அதைக் கேட்பது ஹறாமல்ல. மேலும் பசுமையான புற்பூடுகளும் ஓடுகிற தண்ணீரும் மலர்ந்த பூக்களும் நல்லாயிருக்கிறது. அதைப் பார்ப்பது ஹறாமல்ல. ஆகவே பசுமையான புற்பூடும் ஓடுகிற தண்ணீரும் கண்ணின் விஷயத்தில் எப்படியோ அப்படியே காதின் விஷயத்தில் நல்ல குரலோசையும், மூக்கின் விஷயத்தில் நல்ல வாசனையும், நாவின் விஷயத்தில் நல்ல உணவும் இன்பத்தைக்கொடுப்பதாயிருக்கிறது. இதுபோலவே புத்தியின் விஷயத்தில் நல்லபூராயமான அறிவுகளுமாம். இந்தப் புலன்களில் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொருவிதமான இன்பமிருக்கிறது. இவைகளில் இராகம் மாத்திரம் எப்படி ஹறாமாகக்கூடும்? விகடமும் விளையாட்டும் அதைப் பார்ப்பதும் ஹறாமல்லவென்பதின்பேரில் பின்வருகிற ஹதீது அத்தாட்சியாயிருக்கிறது. அது வருமாறு:—ஆயிஷா றலியல்லாஹு அன்ஹா ரிவாயத்து செய்கிறார்கள். அதாவது:—"ஈதுடைய நாளில் பள்ளிவாசலில் ஹபுஷிகள் ஆடிக்கொண்டிருந்தார்கள். அப்போது றசூல் சல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்கள் என்னை நோக்கி "நீ அதைப்பார்க்க விரும்புகிறாயா?" என்று கேட்டார்கள். அதற்கு நான் "ஆம்" என்றேன். அப்போதவர்கள் எழுந்துவந்து வாசற்படியினிடமீ தங்கள் கையை நீட்டிக்கொண்டு நின்றார்கள். நான் அதன்மேல் என் மோவாயை வைத்துக்கொண்டு வெகுநேரம் வரையில் வேடிக்கை

பார்த்துக்கொண்டிருந்தேன். அப்போது நாயகமவர்கள் பலமுறை என்னை நோக்கி "இவ்வளவு பார்த்தது போதாதா?" என்று கேட்டார்கள். நான் "இல்லை" என்றேன்" என்பதே. இந்த ஹதீஸ் சஹீஹில் இருக்கிறது. நாம் இந்த கிதாபிலும் இதற்குமுன் இதைச் சொல்லியிருக்கிறோம். இந்த ஹதீஸினால் ஐந்து முக்கியங்கள் தெரியலாயின. முதலாவது:—விளையாட்டும் வேடிக்கையும் அதைப் பார்ப்பதும் எப்போதாவது ஒவ்வொரு சமயத்திலிருந்தால் அது ஹராமல்ல. ஹப்ஷிகளுடைய விளையாட்டில் ஆட்டமும் பாட்டுமிருந்தது. இரண்டாவது:— பள்ளிவாசலில் ஆடினார்கள். மூன்றாவது:—ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் ஆயிஷா றளியல்லாகு அன்ஹாவை அழைத்து [illegible] அழைத்துக்கொண்டுபோனபோது யானைக்கும் யாபனியர்களுக்கு "வேடிக்கையைப் பார்" என்று சொன்னதாக ஹதீஸில் வந்திருக்கிறது. இது [illegible] லிருக்கிறது. ஹராமாயிருந்தால் எப்படி வருவார்கள். நாலாவது:—நாயகமே அவர்களும் செய்து "நீ அதைப்பார்க்க விரும்புகிறாயா?" என்று கேட்டிருக்கிறார்கள். இது பார்ப்பதின்பேரில் தூண்டுவதாயிருக்கிறது. ஆயிஷா றளியல்லாகு அன்ஹா அவர்கள் நீங்கள் இச்சையாக்கிறது. ஆயிஷா றளியல்லாகு அன்ஹா அவர்கள் அம்மா [illegible] வை பார்த்திருந்து ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் அம்மா யிருந்துவிட்டார்களென்றிருந்தால், அவர்களை வருத்தப்படுத்தக்கூடாதென்றும், வருத்தப்படுத்துவது கெட்டகுணமாயிருப்பதினாலும் நாயகமவர்கள் பயமாயிருந்துவிட்டார்களென்று யாராவது சொல்ல இடமிருந்தது. இது அப்படியில்லை. ஐந்தாவது:—ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுடைய வேலையல்ல வேடிக்கையைப் பார்ப்பது. அப்படியிருந்தும் அவர்கள் ஆயிஷா றளியல்லாகு அன்ஹாவுடன் வெகு நேரம் நின்றிருக்கிறார்கள். இதனால் பெண்களுடையவும் குழந்தைகளுடையவும் மனம் சந்தோஷமாகும்பொருட்டு அவர்களுடன் இப்படியான காரியங்களைச் செய்வது நற்குணத்திற் சேர்ந்ததென்றும், தன்னைச் சுத்தமாக்கிக்கொண்டு வணக்கவாளியெனக் காட்டுதென்றும், தன்னைச் சுத்தமாக்கிக்கொண்டு வணக்கவாளியெனக் காட்டு வதைவிட இது மிக மேலாயிருக்கிறதென்றும் தெரியவந்தது. இதன் வழியில் வேறொரு சஹீஹான ஹதீஸில் வந்திருக்கிறது. அது வருமாறு:—ஆயிஷா றளியல்லாகு அன்ஹா அவர்கள் ரிவாயத்து செய்கிறார்கள். அதாவது:—"நான் சிறுமியாயிருந்தேன். அப்போது சிறுமிகளின் வழக்கம்போல் பொம்மைகளைச் சிங்காரித்து விளையாடுவேன். வேறு சிறுமிகளும் விளையாட வருவார்கள். விளையாடிக்கொண்டிருக்கும் சமயத்தில் ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் வந்துவிட்டால் சிறுமிகளெல்லாரும் எழுந்து ஓடிவிடுவார்கள். ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் அச்சிறுமிகளை அழைத்து மீண்டும் என்னிடத்திற்கு



அனுப்புவார்கள். ஒருநாள் ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் ஒரு சிறுமியை நோக்கி, "இந்தச் சிலைப்பெண்களாவது என்ன?" என்று கேட்டார்கள். "இவை என்னுடைய பெண்மக்கள்" என்று சொன்னார். "இவைகளின் மத்தியில் கட்டியிருப்பது என்ன?" என்று கேட்டார்கள். இது "இவர்களுடைய குதிரை" என்று சொன்னாள். "இந்தக் குதிரையின்மேல் இருப்பது என்ன?" என்று கேட்டார்கள். "இது குதிரைக்கு இறக்கையும் சிறகும்" என்று சொன்னாள். குதிரைக்கு இறக்கையும் சிறகும் எங்கிருந்து வந்தது?" என்றார்கள். அதற்கவள் ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களைப் பார்த்து "நீங்கள் கேள்விப்பட்டதில்லையா! சுலைமான் அலைகிஸ்ஸலாமவர்களுக்கு இறக்கையும் சிறகுமுள்ள குதிரை இருந்ததென்பதை" என்று சொன்னாள். அப்போது ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் தங்கள் முபாரக்கான பற்களெல்லாம் துலங்கி வெளியாகும்படிச் சிரித்துவிட்டார்கள்" என்பதே. நாம் இந்த ஹதீஸை ரிவாயத்து செய்தது எதற்கென்றால், இப்படியான காரியங்களைவிட்டும் பேறுவதும் முகத்தைச் சுழிப்பதும் தன்னை ஒதுக்கிக்கொள்வதும் தீன் நெறியிற் சேர்ந்ததல்லவென்றும், இது குழந்தைகளுக்கே அடுத்த காரியமென்றும், யார் எதைச் செய்ய அடுத்தவர்களாயிருக்கிறார்களோ அவர்கள் அதைச்செய்வது வெகுதியர்காவென்றும் நீ தெரிந்துகொள்வதற்கேயாம், உருவம் சமைப்பது ஆகுமென்பதற்கு இந்த ஹதீஸ் அத்தாட்சியாகாது. ஏனென்றால் குழந்தைகளுடைய விளையாட்டுச்சாமான்கள் கட்டையும் கந்தையுமா யிருந்தன. முழுருபமாயிருந்ததில்லை. குதிரையினுடைய இறக்கை கந்தையினாலிருந்ததென்று ஹதீஸில் இருக்கிறது. இன்னும் ஆயிஷா றளியல்லாகு அன்ஹா அவர்கள் ரிவாயத்து செய்கிறார்கள். அதாவது:—"ஈதுடைய நாளில் இரண்டு அடிமைப்பெண்கள் என்னிடம் தப்பு கொட்டிப் பாட்டு பாடிக்கொண்டிருந்தார்கள். அப்போது ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் வந்து தங்கள் படுக்கை விரிப்பின்மேல் போய் முகத்தை மறுபக்கமாகத் திருப்பிக்கொண்டு படுத்துவிட்டார்கள். பின்பு அபூபக்கர் சித்தீக்கு றளியல்லாகு அன்கு அவர்கள் வந்தார்கள். அந்த அடிமைப் பெண்களை அதட்டி "ரசூலுல்லாவுடைய வீட்டில் இதென்ன ஷைத்தானுடைய சத்தம்!" என்று சொன்னார்கள். அப்போது ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் "யா அபாபக்கர்! இன்று ஈதுடைய நாளாயிருக்கிறது. நீர் அவர்களை விட்டுவிடும்" என்று சொன்னார்கள். தப்பு கொட்டுவதும் பாட்டு பாடுவதும் முபாஹு என்று இந்த ஹதீஸினால் தெரியவந்தது. இந்த சத்தம் ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுடைய காதுக்கு எட்டியிருப்பதில் சந்தேக

மில்லை. ஆகவே அவர்கள் அதைக்கேட்டதும் அநுபக்கா சித்திக்கு நலியல்லாது அன்று அவர்கள் அதட்டினதை அவர்கள் தடைசெய்ததும் அது முபாஹ என்பதின்பேரில் பரிஷ்காரமான அத்தாக்ஷியா யிருக்கிறது.

இரண்டாவது வகை:—மனதில் யாதொரு கெட்ட ஆசை, உதாரணமாக:—ஒருவனுக்கு ஒருபெண்பிள்ளையினுடைய அல்லது ஒரு வாலிபனுடைய ஆசையுண்டாயிருந்து அந்த ஆசையின் இன்பம் அதிகரிப்பதற்காக அவர்களை எதிரில் வைத்துக்கொண்டு இராகம் கேட்கிறான். அல்லது அவர்கள் எதிரில் இல்லாத சமயத்தில் அவர்களிடம் சேர்வதை ஆசைவைத்து அந்த ஆசை அதிகரிப்பதற்காக இராகம் கேட்கிறான். அல்லது பெண்களின் கன்னமிருதா, கரியமட்சம், கட்டழகுபோன்ற வர்ணிப்புகள் பொதிந்த பாடலைக் கேட்டுக்கொண்டே தன்மனதால் மகிழ்ச்சியடைகிறான். இவ்விதமாய் இராகம் கேட்பது ஹராமாயிருக்கிறது. அநேகம் வாலிபர்கள் இந்த தொகையிற் சேர்ந்தவர்களா யிருப்பார்கள். ஏனென்றால், இது சிற்றின்பமான கெட்ட ஆசையென்னும் அக்கினியை மூட்டிவிடும். எந்த நெருப்பை அணைத்துப்போடுவது விதியோ அந்த நெருப்பைப் பற்றவைப்பது எப்படி கூடும்? என்கிலும், இவனுடைய இந்த ஆசையானது இவன் சொந்த மனையாள்மீதும் அடிமைப்பெண்மீதுமா யிருந்து; அந்த ஆசை அதிகரிப்பதற்காக இராகம் கேட்பானாகில், இது லோகபோகத்தை அடைவதிற் சேர்ந்ததாயும் முபாஹாயு மிருக்கிறது. என்றாலும், அவன் அந்தமனையாளைத் தலாக்குசொல்லாமலும் அடிமைப்பெண்ணை விற்காமலு மிருக்கிறவரையில்தான் இது ஆகும். அப்படித் தலாக்கு சொல்லிவிட்டால் அல்லது அடிமைப்பெண்ணை விற்றுவிட்டால் அப்போது இது ஹராமாய்ப்போம்.

மூன்றாவது வகை:—மனதில் ஒரு நல்ல ஆசையிருந்து இராகமானது அந்த ஆசையைப் பலப்படுத்துவதா யிருப்பதாம். இது நான்கு வகைப்படும். முதலாவதுவகை:—ஹாஜிகளையும் கஃபாவையும் வனாந்திரத்தையும் குறித்து வர்ணித்துப்பாடுகிற இராகமாம். இது பைத்துல்லாவென்றும் கஃபாஷரீபின் ஆசையாகிய நெருப்பை மனதிலிருந்து எழுப்பிவிடும். ஆகவே ஹஜ்ஜுக்குப் போக எவனுக்குக் கூடுமோ அவன் இதைக்கேட்பதினால் சவாபைப் பெறுவான். என்கிலும், தாய் தந்தையருடைய உத்தரவு கிடைக்காததினாலாவது, இன்னும் வேறு காரணத்தினாலாவது ஹஜ்ஜுக்குப் போகக்கூடாதவன் இல்லையோ அவன் இதைக் கேட்பதும் அந்த ஆசையை மனதில் பலப்படுத்துவ



தும் கூடாது. ஆனால் அந்த ஆசை அதிகரிக்கும்பக்ஷத்தில் (அதை அடக்கி) ஹஜ்ஜுக்குப் புறப்படாமல் நின்றுபோகத் தன்னால் முடியுமென்று அறிந்தானாகில் அப்போது ஆகும். யுத்தவீரர்களுடைய வர்ணிப்புள்ள பாடல்களைப் பாடுவதும் அவர்கள் அதைக் கேட்பதும் இதற்கு அடுத்ததாயிருக்கிறது. ஏனென்றால், இது ஜனங்களை அல்லாகு தஆலாவுடைய பகைவரோடு போர்புரியவும் அவனுடைய நேசத்தில் உயிரைக்கொடுக்க ஆசைகொள்ளவும் செய்கின்றது. ஆதலால் இதற்கும் சவாபுண்டு. இதுபோலவே யுத்தவீரர்கள் அணிவகுத்து நிற்கும்போது அவர்கள் தைரியமாய்ச் சண்டை செய்வதற்காகவும் தைரியத்தை அதிகப்படுத்துவதற்காகவும் பாடுகிற வழக்கமான பாட்டிலும் அதைக் கேட்பதிலும் சவாபிருக்கிறது. ஆனால் இவையெல்லாம் காபிர்களோடு யுத்தம் செய்வதில்தான். ஹக்கையுடையவர்களோடு சண்டை செய்பவர்களுக்கு இது ஹராமாகும். இரண்டாவது வகை:—அழுகையை வருத்துவதும் மனதில் துக்கத்தை அதிகப்படுத்துவதுமான புலம்பலைப் பாடுவதும் அதைக்கேட்பதுமாம். அந்த அழுகையும் துக்கமும் இல்லாமல் தன்னாலுண்டான குற்றத்தின் பேரிலும் பாவத்தின்பேரிலும் பெரிய பதவிகளிலும் அல்லாகுதஆலாவுடைய பொருத்தங்களிலும் யாதொன்று தப்பிப்போனதின் பேரிலுமிருந்தால் இதிலும் சவாபிருக்கிறது. தாவூது அலைஹிஸ்ஸலாமவர்கள் புலம்பலைப் பாடும்போது அவர்களுக்கு முன்னால் ஜனாசாக்கள் தூக்கிக்கொண்டு போவதும் (அவர்களுக்குத் தெரிவதில்லை என்கிற விதமாய்) அவர்கள் அதே இராகத்தில் நல்ல சந்தமாய்ப் புலம்பிக்கொண்டிருப்பார்கள். என்கிலும் மனதில் ஹராமான சலிப்பு ஏற்பட்டிருந்தால், உதாரணமாக:—யாராவது மரித்தாய்ப் போனவனைப்பற்றி அவனுக்குச் சலிப்பிருந்தால் அதற்காகப் புலம்புவது ஹராமாகும். ஏனென்றால் "உங்களுக்குத் தப்பிப்போனதின்பேரில் நீங்கள் சலிக்கவேண்டாம்" என்று அல்லாகு தஆலா திருவுளமாகிறான். ஒருவன் அல்லாகு தஆலாவுடைய கலாவாகிய கற்பினையை வெறுத்து, அதற்காகச் சலிப்புற்று அந்த சலிப்பை அதிகப்படுத்துவதற்காகப் புலம்புவானாகில் இது ஹராமாகும். புலம்பல் பாடுகிறவனுடைய கூலி ஹராமாகுவதும், அவனும் அதைக் கேட்பவனும் பாவியாகுவதும் இது காரணத்தினாலேயாம். மூன்றாவதுவகை:—மனதில் சந்தோஷமிருந்து அந்த சந்தோஷத்தை அதிகப்படுத்தும்பொருட்டு இராகம் கேட்பதாம். ஆனால், ஈதுக்கு, வலீமா, அகீகா, குழந்தை பிறந்த நேரம், தகப்பனுடைய நேரம், சபரிலிருந்து திரும்பிவந்த நேரம் இவ்வாறிவைபோல் இந்த விஷயத்தில் சந்தோஷப்படுவது ஆகுமே.

அந்த விஷயத்தைப்பற்றின சந்தோஷமாயிருந்தால் இதுவும் முபாஹாகும். றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் மதினத்துக்குப் போனபோது (மதீனத்தார்) நாயகமவர்களை எதிர்கொண் றழைக்க வந்ததில் தப்பு கொட்டியும் பய்த்து சொல்லியும் சந்தோஷம் கொண்டாடினார்கள். அந்த பய்த்து இது—தலஅல்பதுரு அலைனா மின் சனிய்யாத்தில்வதாஇ வஜபஷ்ஷுகுரு அலைனா மாதஆ லில்லாஹிதாஇ. இதன் பொருள்:—"சலாமத்துடைய வழியாகப் பூரணச்சந்திரன் நம்மீது உதயமாய்விட்டது. அல்லாகு தஆலாவினிடம் துஆ செய்பவர் துஆ செய்துகொண் டிருக்கும் காலமெல்லாம் நன்றி யறிதலான புகழைக் கூறுவது நம்மீது விதியாய்விட்டது" என்பதே. இதுபோலவே ஈதுடைய நாட்களில் சந்தோஷங் கொண்டாடுவதும் அதற்காக இராகம் கேட்பதும் ஆகும். இன்னு மிதுபோலவே சிநேகர்கள் ஒருவருக்கொருவர் பொருந்தியுட்கார்ந்து உணவருந்தின நேரத்தில் அவரவரும் மற்றவரைச் சந்தோஷப்படுத்த நாடுவார்களாகில் அப்போது இராகம் கேட்பதும் அவரவரும் மற்றவருக்கு இணங்கி உடன்பட்டவர்களாகச் சந்தோஷத்தைக் காட்டுவதும் ஆகும்.

நாலாவது வகை:—இதுதான் (எல்லாவற்றிலும் இறுக்கெடுத்த) சாரமாயிருக்கிறது. அது யாதெனில், ஒருவனுக்கு அல்லாகு தஆலாவுடைய ஆசைமேலிட்டு அது இஷ்குடைய எல்லைக்கு எட்டினதாயிருந்தால் இராகம் கேட்பது அவனுக்கு முக்கியமாம். சாதாரணமான அநேக நன்மைகளைக் காட்டிலும் இதன் குணம் அதிகமாயிருக்கும். எதனால் அல்லாகு தஆலாவுடைய ஆசை அதிகரிக்குமோ அதன் சவாபு அதிகமாகவேயிருக்கும். சூபியாக்கள் ஆதியில் இராகம் கேட்டு வந்தது இதற்காகவேயாம். ஆனால் வெளிப்படையில் சூபியாக்கள் போல் வேஷம் தரித்துக்கொண்டும் அந்தரங்கத்தில் அவர்களுடைய குணம் ஒன்றுமில்லாமலுமிருக்கிற தரித்திரரான சில ஜனங்களால் இப்போது இதில் சாதாரண வழக்கம் கலந்துகொண்டது. இராகம் கேட்பதானது அல்லாவுடைய ஆசையென்னும் அக்கினியை மூட்டுவதில் பெரியகுணத்தைக் கொடுப்பதாயிருக்கிறது. இராகம் கேட்டுக்கொண்டிருக்கும்போது இவர்களிற் சிலருக்கு முகாஷபாத்து என்னும் வெளிப்பாடுகள் வெளியாகும். இன்னும் மற்றவைகளா லுண்டாகாத மனத்தெளிவும் பரவசமும் அப்போதிவர்களுக்கு உண்டாகும்.

இராகம் கேட்பதினால் தையான ஆலத்தில்நின்றும் இவர்களுக்கு உண்டாகின்ற அந்தரங்கமான அஹ்வால்களை வஜ்து என்று இவர்கள் சொல்லுகிறார்கள். வெள்ளியை நெருப்பில் காய்ச்சினால் அது எப்படி சுத்த



மாகின்றதோ அப்படியே இராகம் கேட்பதினால் இவர்களுடைய மனமானது சுத்தப்பட்டுத் தெளிவை அடையவும் கூடும். இன்னுமந்த இராகமானது (இஷ்கு என்னும்) நெருப்பை மனதில் தாக்கி அதிலிருக்கிற எல்லா அழுக்குகளையும் போக்கிவிடும். ரியாலத்தென்னும் அநேகமான பிரயாசைகளினாலு முண்டாகாத மனத்தெளிவு இராகத்தினால் உண்டாக்கக்கூடும். இன்னும் இராகமானது ஆலமுல் அர்வாஹுடன் மனிதனுடைய றூஹுக்கிருக்கிற சம்பந்தமான இரகசியத்தை எழுப்பிவிடும். அப்போது அவனை இவ்வுலகத்திலிருந்து அறவே எடுத்துக்கொள்ளவும், இவ்வுலகத்தில் நடக்கிறவை ஒன்றும் அவனுக்குத் தெரியாமலிருக்கவும் கூடும், இன்னும் அவனுடைய உறுப்புகளின் சக்தியொழிந்து அவன் மெய்சோர்ந்து விழவும் உணர்வு மாறிப்போகவும் கூடும். இந்த அஹ்வால்களில் எது சரியாயும் எதார்த்தமாயு மிருக்கிறதோ அதன் பலன் பெரிதாகவே யிருக்கும். இன்னும் எவனுக்கு இதன்மேல் ஈமான் இருக்கிறதோ அவன் இந்த மஜ்லிஸில் ஹாஸிராயிருந்தால் அதன் பரக்கத்துகளை அடையவும் நஸீபு கெடமாட்டான். என்றாலும் இதில் அநேகம் தவறுகள் சம்பவிப்பதுண்டு. பிசகான அநேக எண்ணங்கள் வரும். அவற்றின் உண்மையும் தப்புகளின் அடையாளத்தை வழிதெரிந்த காமிலான ஷைகுகளே அறிவார்கள். ஒரு முரீதுடைய மனதில் இராகத்தின் தேட்டமிருப்பதுடன் அவன் முதல்முதல் இராகம் கேட்கத் தொடங்குவது அவனுக்கு ஆகாது. ஷைகு அபுல்காஸிம் ஜுர்ஜானி றஹிமகுல்லா அவர்களுடைய முரீதுகளில் ஒருவராகிய அஸிஹல்லாஜு என்பவர் இராகம் கேட்பதற்கு ஷைகிடத்தில் உத்தரவு கேட்டார். அதற்கவர்கள் "நீ மூன்று நாளைக்கு ஒன்றையும் உண்ணாமல் பட்டினியாயிரு. அதன் பிறகு நல்ல உணவைச் சமைக்கும்போது அந்த உணவை விரும்பாமல் இராகத்தை எடுத்துக்கொள்ளுவாயாகில் இந்த இராகத்தின் தேட்டம் எதார்த்தமாயும் அதைக்கேட்பது உனக்குக் கூடுமாயு மிருக்கும்" என்று சொன்னார்கள். ஆகவே ஒரு முரீதுக்கு முஆமலாவான இல்மேயன்றி முகாஷபாவான அஹ்வால்கள் ஒன்றும் இன்னும் வெளியாகாமலிருந்தால் அல்லது வெளியாகியும் அவனுடைய இச்சைகள் முழுதும் இன்னும் ஒழியாமலிருந்தால் அந்த முரீதை இராகம் கேட்கவிடாமல் தடுத்து வைப்பது ஷைகுபேரில் விதியாயிருக்கும். ஏனென்றால், அதனாலுண்டாகிற நஷ்டமாகிறது இலாபத்தைவிட அதிகமாயிருப்பதினாலேயாக.

இன்னும் அறிந்துகொள்:—எவனொருவன் இராகத்தையும் வஜ்தையும் சூபியாக்களுடைய மற்றும் அஹ்வால்களையும் இன்காருசெய்

கிறானே அவன் தனது தெரியாமையினாலேயே அப்படிச்செய்கிறான். அந்த இன்காரில் அவன்மேல் குற்றம் கூறப்படாது. ஏனென்றால், அவனில் இல்லாததை அவன் நம்புவது கஷ்டமேயாம். இவனே ஆண்மையில்லாத பேடிக்குச் சமானமாகுவான். ஸ்திரீபோகத்தில் இன்பமுண்டென்பதை பேடி ஒப்பமாட்டான். ஏனென்றால் அந்த இன்பத்தை அறிவதற்கு இச்சையென்னும் தத்துவம் வேண்டும். பேடிக்கு அந்தத் தத்துவம் கிடையாததாகையால் இன்பத்தை அவன் எப்படி அறிவான். புஷ்பாதி பாக்கியங்களையும் திவ்விய ஜலத்தையும் பார்ப்பதில் கண்ணுக்கு இன்பமுண்டென்பதை அந்தகன் இன்காரு செய்தால் என்ன ஆச்சரியம்? கல்வியில்லாதவனுக்கு நேத்திரானந்தம் எப்படியுண்டாகும்? தலைமைத்தனம், இராஜரீகம், ஆட்சி அதிகாரம், இராச்சிய பரிபாலனம் இவைகளில் இன்பமுண்டென்பதை ஓர் பையன் ஒப்புக்கொள்ளாமற்போனால் ஆச்சரியமென்ன? அவனுக்கு விளையாட்டின் இன்பம் தெரியும், இராச்சிய பரிபாலனமென்பது தெரியாது.

இன்னும் அறிந்துகொள்:—ஞானிகள் சூபியாக்களுடைய அஹ்வால்களை இன்காரு செய்வதில் ஆலிமென்றாலும் என்ன? ஆலிமென்றாலும் என்ன? எல்லாரும் சிறுவர்களுக்குச் சமானமானவர்கள். ஏனென்றால் இவர்கள் இன்னும் கண்டறியாத ஒரு வஸ்துவை இன்காரு செய்பவர்களாயிருக்கிறார்கள். ஆனால் எவனாவது கொஞ்சம் நன்னாயிருக்கிறதோ அவன் எனக்கு இந்த அஹ்வால்கள் இல்லாமற்போனாலும் இவர்களுக்கு உண்டென்று நினைக்கிறேன் என்று ஒத்துக்கொள்ளுகிறான். ஆகவே, அந்த அஹ்வால்கள் உண்டாகுவது உண்மையென்றும், அது உண்டாகக் கூடுமென்றும் ஒருபோது இவன் ஈமான் கொள்ளுவான். எனினும், யாராவதொருவன் தன்னில் இல்லாதது மற்றவர்களில் இருப்பது அசாத்தியமென நினைப்பானாகில் இது பெரிய மடத்தனமாயிருக்கும். இவனே அல்லாஹுதஆலா திருவுளமாகிற (இந்த ஆயத்திற்குறித்த) ஜனங்களிற் சேர்ந்தவனாகுவான். அவ்வசனமாவது:—"அதைக் கொண்டு அவர்கள் நேர்வழியை அடையாமற்போனால் அப்போது இது பூர்வகாலப் பொய்யென்று அவர்கள் சொல்லுவார்கள்" என்பதே.

(பசல்) அறிந்துகொள்:—எந்தவிடத்தில் இராகம் ஆகுமென்று நாம் சொல்லியிருக்கிறோமோ அந்தவிடத்தில் ஐந்திலொரு காரணங் கொண்டு இராகம் ஹறாமாகும். அதைவிட்டும் பேணுவதுவேண்டும். முதலாவது காரணம்:—ஒரு பெண்பிள்ளையைக் கொண்டாவது அல்லது இச்சைகொள்ளப்படும் பக்குவத்திலாயிருக்கிற ஒரு பையனைக்



கொண்டாவது இராகம் கேட்பதாம். இது ஹறாமாகும். இவர்களிடம் இராகம் கேட்பவன் அல்லாஹுதஆலாவுடைய காரியங்களில் மனமூழ்கினவனாயிருந்தாலும் சரியே. ஏனென்றால், இயல்பாகவே அவனில் இச்சையைப் படைத்திருப்பதால் அவன் ஓர் அழகியரூபத்தைப் பார்ப்பானாகில் ஷைத்தான் அதற்கு உதவியாய் எழும்புவான். அப்போது இராகம் கேட்பது இச்சையின்பேரிலாயிருக்கும். இச்சை கொள்ளப்படும் பக்குவமெய்தாத சிறுவனாயிருந்தால் அவனைக்கொண்டு இராகம் கேட்பது முபாஹாகும். பெண்பிள்ளை அந்தங்கெட்டவளாயிருந்தாலும் அவளை எதிரில் வைத்துக்கொண்டு இராகம் கேட்பது ஆகாது. ஏனென்றால், பெண்பிள்ளை எப்படிப்பட்டவளாயிருந்தாலும் அவளைப் பார்ப்பது ஹறாமாயிருப்பதினாலென்க. ஆனால் திரைமறைவில் அவளைக்கொண்டு இராகம் கேட்கிறபக்ஷம் இச்சையுண்டாகுமென்ற பயமிருந்தால் ஹறாமாகும்; இல்லையாயின் முபாஹாகும். இது முபாஹா என்பதற்கு அத்தாட்சியாவது:—ஆயிஷா றலியல்லாஹு அன்ஹா அவர்களுடைய வீட்டில் இரண்டு அடிமைப் பெண்கள் இராகம் பாடிக்கொண்டிருந்த சப்தத்தை நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கேட்டுக்கொண்டிருந்ததில் சந்தேகமில்லை என்பதே. ஆகவே சிறுவன் சிறுமிகளுடைய முகமெப்படி * அவுறத்தாகாதோ அப்படியே ஸ்திரீகளுடைய சப்தமும் அவுறத்தாகாது. என்றாலும், சிறுவன் சிறுமி இவர்கள் இச்சை கொள்ளப்படும் பக்குவத்திலிருந்தால் அப்போது அவர்களை இச்சையுடன் பார்ப்பது ஹறாமாகும். ஸ்திரீகளுடைய சத்தமும் இதுபோலவேயாம். இது அவரவருடைய நிலைமைகளுக்குத் தக்கபடி மாறும். ஏனென்றால், ஒருவன் தனக்கு இச்சையுண்டாகாதென்று அச்சம் தீர்ந்தவனாயிருப்பான். இதர ஒருவன் இச்சையுண்டாகுமென்ற அச்சமுள்ளவனாயிருப்பான். இதானது தனக்கு இச்சையுண்டாகாதென்று அச்சம் தீர்ந்த ஒருவன் றமலானுடைய நோன்பில் தன் பெண்சாதியை முத்தங்கொள்ளுவது ஹலாலாகுவதுபோலவும், அது புணர்ச்சியில் இழுத்துவிடுமென்று பயந்தவனுக்கு அல்லது முத்தங்கொண்ட அந்தக்ஷணமே இன்ஸால் ஆய்விடுமென்று பயந்தவனுக்கு அது ஹறாமாகுவது போலவுமாம்.

இரண்டாவது காரணம்:—இராகத்துடன் தம்பூர், வீணை, கின்னரம் இன்னுமிவைபோல் நரம்புகள் மாட்டிய யாதொரு வாத்தியக் கருவி அல்லது இராகி நாகசுரம் வாசிக்கப்படுவதாம். (இதுவும் ஹறாமாகும்) ஏனென்றால் இவைகளால் இராகம் கேட்பது கூடாதென்று விலக்கப்பட்டிருக்கிறது. அப்படி விலக்கினது அவைகளின் சப்தம் நல்லதாயிருப்பதினால் அல்ல. மேலும் ஒருவன் அதைக் கர்ணா கடூரமாகவும் சீர்கேடாகவும் வாசித்தாலும் அப்போதும் அது ஹறாமே

* அவுறத்து - மானம், அல்லது மறைக்கவேண்டிய வஸ்து.

யாம். பின்பு எது காரணத்தினால் அது ஹராமாயிற்றென்றால், அது
சாராயக்குடியர்களில் வழங்கப்படுகிற வாத்தியமாயிருப்பதினாலென்க.
குடியர்களுக்கே குறிப்பாயிருப்பது எதுவோ அது சாராயத்துடன்
சேர்த்து ஹராமாக்கப்பட்டது. ஏனென்றால், அது சாராயத்தை
நினைப்பூட்டுவதினாலும் அதன் இச்சையை எழுப்பி விடுவதினாலுமே
யாம். எனினும், பேரிகை, டங்கம், குழல், தப்பு இது சிலுக்குள்ள
தா யிருந்தாலும் சரியே, இவை ஹராமல்ல. ஏனென்றால், இவைகளைக்
குறித்து யாதொரு ஹராமும் வரவில்லை. இது தம்பூர், வீணை முத
லிய நரம்பு வாத்தியம் போன்றதல்ல. இது குடியர்களில் வழங்கப்
படுவதுமல்ல. ஆகவே பேரிகை, குழல், தப்பு இவைகளைத் தம்பூர்
வீணை முதலிய வாத்தியங்களில் சேர்த்து ஹராமெனல் கூடாது. ஏனெ
ன்றால், நேரே றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்களுடைய சமு
கத்தில் தப்பு அடிக்கப்பட்டிருக்கிறது. அன்றியும் நிகாகு முதலிய
நல்ல காரியங்களில் தப்பு அடிக்கும்படி உத்திரவும் செய்திருக்கிறார்
கள். அதில் சிலுக்குகளை அதிகப்படுத்துவதினால் அது ஹராமாய்
விடமாட்டாது. பேரிகை முழங்குவது ஹாஜிகளுடையவும் யுத்த
வீரர்களுடையவுமான வழக்கமா யிருக்கிறது. ஆனால் முகன்னதுகள்
என்ற பேடிகளின் பம்பை ஹராமாகும். ஏனென்றால் அது அவர்க
ளுடைய வழக்கமா யிருப்பதினாலேயாம். பம்பை என்பது இடை
குறுகியும் இருதலைகள் அகன்றுமிருக்கிற நீண்டதோர் வாத்தியக் கருவி
யாம். குழல் எவ்வகையாயிருந்தாலும் ஹராமல்ல. ஏனென்றால் அதை
ஆடு மாடு மேய்ப்பர்களுடைய வழக்கமா யிருக்கிறது. அன்றியும்
"றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்கள் குழல் சப்தத்தைக் கேட்ட
போது தங்கள் காதில் விரலை வைத்துக்கொண்டு இபுனு உமர் றலி
யல்லாகு அன்குமா அவர்களை அதைக் கேட்கும்படிக்கும், அந்த சப்
தம் நின்றபிறகு தெரிவிக்கும்படிக்கும் உத்திரவு செய்ததானது
அது ஹலால் என்பதை ரூபிக்கிற அத்தாட்சியாயிருக்கிறது" என்று
ஷாபிஈ றஹிமகுல்லா அவர்கள் சொல்லுகிறார்கள். ஆகவே அதைக்
கேட்கும்படி இபுனு உமர் றலியல்லாகு அன்குமாவுக்கு உத்திரவு
கொடுத்துத் தங்கள் காதில் விரலை வைத்துக்கொண்டதானது அந்தச்
சமயத்தில் அவர்களுக்கு ஏதோ சிறந்த ஓர் பெரிய ஹால் இருந்திருக்கு
மென்றும், அந்த சப்தமானது அந்த ஹாலைவிட்டும் அவர்களைத்
தன் பராக்கில் ஆக்கிக்கொள்ளுமென்று அவர்கள் எண்ணியிரு
ப்பார்களென்றும் அறிவிக்கின்றது. ஏனென்றால், அல்லாகு
தஆலா உடைய ஆசையுள்ள ஒருவன் அந்த ஆசையில் இல்லாத
சமயத்தில் இராகம் கேட்பதானது அவனுக்கு அந்த ஆசையை



எழுப்பி அவனை அல்லாகு தஆலாவினிடம் நெருங்கும்படி செய்வ
தில் பெரிய குணப்பாடுள்ளதா யிருக்கிறது. இந்த ஹாலோ கேவலர்
களுடைய ஹாலோடு சேர்த்துப்பார்க்க மிகவும் பெரிதாகும். ஏனெ
ன்றால், கேவலர்களுக்கு இந்த ஹால் இராது. எனினும், அல்லாகு
தஆலாஉடைய ஆசையில் மூழ்கியிருக்கிற ஒருவன் அதே சமயத்தில்
இராகம் கேட்பானாகில் இராகமானது உடனே அவனை அந்த ஆசையி
லிருந்து நீக்கித் தன்பராக்கிலாக்கிக் கொள்ளவும் அவன் விஷயத்தில்
அது நஷ்டமாயிருக்கவும் கூடும். ஆகவே றசூல் சல்லல்லாகு அலைகி
வசல்லம் அவர்கள் குழல் சப்தத்தைக் கேட்காமல் காதில் விரலை வைத்
துக்கொண்டது அது ஹராமென்பதின்பேரில் அத்தாட்சியாகாது.
ஏனென்றால், றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்கள் எடுத்துக்
கொள்ளாத அநேகம் முபாஹுகள் இருக்கின்றன. ஆனால் அன்னி
யர் அதைச்செய்ய அவர்கள் அநுமதி கொடுத்திருப்பதானது அது
முபாஹு என்பதற்கு எவ்வித சந்தேகத்துக்கும் இடமில்லாத உறுதி
யான அத்தாட்சியா யிருக்கிறது.

மூன்றாவது காரணம்:—இராகம் பாடுவதில் துர்வார்த்தை, அல்
லது வசை, அல்லது அஸ்ஹாபுகளின் விஷயத்தில் ராபிழிகள் கட்டி
யிருக்கும் கவிகள்போல் தீனவர்கள்மேல் தூஷணம் கலந்திருப்பதாம்,
அல்லது அறியப்பட்ட ஒரு பெண்ணின் வர்ணிப்பிருப்பதாம். ஏனெ
ன்றால் ஸ்திரீகளுடைய வர்ணிப்பை ஆடவர்முன் சொல்வது அழகல்ல.
ஆகவே இந்த எல்லாப் பாடல்களும் இவைகளைக் கேட்பதும் ஹரா
மாகும். ஆனால் கன்னமிருதா, கரியமட்சம், கட்டழகு, ரூபாலவண்ணி
யம் இவைகளின் வர்ணிப்பும்; கூடல், பிரிதல் இவைகளின் வசனமும்,
இன்னும் ஆஷிகானவர்கள் வழக்கமாய்ச் சொல்லிவருகிற வாக்கியங்
களும் பொருந்த பாடல்களைப் பாடுவதும் அதைக் கேட்பதும் ஹரா
மல்ல. ஆனால் ஒருவன் இவைகளைக் கேட்பதில் தான் ஆசைகொண்ட
பெண்ணையாவது பையனையாவது மனதால் தியானிப்பானாகில், அவ
னுடைய இந்தத்தியானம் ஹராமாகிற நிமித்தம் இதைக் கேட்பதும்
ஹராமாகும். எனினும் தன் பெண்ஜாதியின்மீதும் அடிமைப் பெண்
மீதும் ஆசைகொண்டு கேட்பானாகில் ஹராமாகாது. அன்றியும்
இந்தப்பாடல்கள் சூபியாக்களையும் இன்னும் அல்லாகு தஆலாவுடைய
ஆசையில் மூழ்கி அதன்மேல் இராகம் கேட்பவர்களையும் நஷ்டமடை
யும்படிச் செய்யமாட்டா. ஏனென்றால், அவர்கள் தங்கள் அஹ்வால்க
ளுக்குத் தகுந்தவிதமாய் ஒவ்வொன்றினாலும் ஒவ்வொரு பொருளை
விளங்கிக் கொள்ளுகிறார்கள். * ஜுல்பினது கருமையை குபுராகிய

* ஜுல்பு - கன்னமிருதா.

இருள் எனவும், முகத்தினது காந்தியை சிமாஜுதிய வெளிச்சம் எனவும் அவர்கள் பொருள்கொள்ளக் கூடும். இன்னும் ஜுல்பு என்பதில் அல்லாஹ் தஆலாவுடைய சமுகத்துக்குச் சேரும் கஷ்டங்களான சங்கிலித் தொடர்பெனவும் அவர்கள் பொருள் கொள்வார்கள். உதாரணமாக:— ஒரு புலவர் சொல்லுகிறார்.

பய்த்து.

குட்டிக்கும் புஷ்டமாரம் ஸரெஎக் ஹல்கயெ ஜுல்பஷ்
பாத்தோகெ பதப்கலீல் ஸரே ஜும்ல பாரம்
கந்தீக் பமன் பார்ஸரெ ஜுல்பீனகே மிஷ்கீன்
எக்பேச் பிபேச்சத் வகலக் வர்து ஷுமாரம்.

இதன் கருத்து:—"மஹ்ஷூகுடைய ஜுல்பிலின் [illegible] சங்கிலி வளையம்போலச் சுருண்டு வளைந்த ஓர் சுருளின் முனையை என்னால் எல்லா முனைகளையும் கண்டுபிடிக்கக்கூடுமென்று நினைத்துக் கஸ்தூரி நிறத்துக்கு ஒப்பாகிய அவளுடைய கரிய ஜுல்பினது முனைகளை எண்ணிக் கொண்டு வருகையில் அவள் கண்டீது எனக்கு ஓர் சுழிசுழித்ததினால் என் எண்ணிக்கை பிசகிப்போயிற்று" என்பதே. இந்த ஜுல்புக்கு அவர்கள் கஷ்டங்களான சங்கிலிப் பின்னலெனப் பொருள்கொண்டு ஒருவன் அல்லாஹ் தஆலாவுடைய சமுகத்தினது புதுமைகளில்கின் ஓர் மயிர்முனை யளவையாவது அறிந்துகொள்ள நாடி அது விஷயத்தில் தன் புத்தியைக்கொண்டு போகிறானாகில் அதில் உண்டாகிற ஓர் சுழியினால் அவனுடைய யோசனையெல்லாம் பிழையாகி அறிவெல்லாம் மயங்கிவிடும் என்று அர்த்தம் செய்வார்கள்.

இன்னும் சாராயத்துடையவும் மங்கையுடையவுமான பேச்சுகள் வந்தால் அதன் வெளிப்படையின்படி பொருள் கொள்ளமாட்டார்கள். உதாரணமாக:—

பய்த்து.

கர் மைதொ ஹஜார் ரத்லுபர் பைமாயீ
தா மைக் குனீ நபாஷத் ஷைதாயீ.

இதன் பொருள்:—"நீ இரண்டாயிரம் இராத்தல் சாராயத்தை அளந்தபோதிலும் நீ அந்தக் குடிக்காதவரையில் உனக்குப் போதை யுண்டாகாது" என்பதே. இப்படிச் சொல்வதில் அவர்கள் விளங்கிக் கொள்ளும் பொருளாவது:—"வாய்ப்பேச்சாக வாதிப்பதினாலும் போதிப்பதினாலும் நீயுடைய காரியம் சரியாய்விடாது. மேலும் அதை ஆசையுடன் சாதிப்பதினால் மாத்திரம் சரியாய்வரும்" என்பதே. ஏனென்றால், அல்லாஹ் தஆலாவுடைய மஹப்பத்திலும் இஷ்கிலும் ஜுஹ்திலும் தவக்குலிலும் மற்றும் பொருள்களிலும் வாய்ப்



பேச்சாக நீ எவ்வளவு பேசினபோதிலும், எத்தனை கிதாபுகளைக் கோர்வை செய்தபோதிலும், எத்தனை காயிதங்களைக் கறுப்பாக்கினபோதிலும் அதன்படி நீ அமல்செய்யாதவரையில் ஒன்றும் உனக்குப் பயன் படமாட்டாது.

இன்னும் கராபாத்து என்று சொல்லப்படுகிற சாராயக்கடையைக் குறித்துப் பாடினால் உதாரணமாக:—

பய்த்து.

ஹர்கே ட கராபாத் ரஷ்ஷாக் பேதீனஸ்த்
ஜோராகே கராபாத் உஸூ லேதீனஸ்த்.

இதன் பொருள்:—"யாராவதொருவன் கராபாத்துக்குப் போகவில்லையானால் அவன் மார்க்கமில்லாத பேதீனாய் இருக்கிறான். ஏனென்றால், கராபாத்தானது தீனுக்கு மூலாதாரமாயிருப்பதினாலேயாம்" என்பதே.

இவர்கள் இந்த கராபாத்துக்கு மனுஷீகமான குணங்களைப் பாழாக்குவதெனப் பொருள் கொள்ளுவார்கள். ஏனென்றால், மனிதனுக்குள் தெரியாமல் மறைந்து கிடக்கின்ற மூலப்பொருள் வெளியாகி அது செழித்தோங்கவேண்டிய நிமித்தம் இப்போது செழிப்புற்றிருக்கிற மனிதப் பண்புகளைப் பாழாக்குவதே தீனுக்கு மூலாதாரமாயிருக்கிறது. இன்னு மிதுபோல இவர்களுடைய விளக்கத்தின் விஸ்தரிப்பு விரிவானதாயிருக்கிறது. ஏனென்றால் ஒவ்வொருவருக்கும் அவரவருடைய நோட்டத்துக்குத் தகுந்தவிதமாய் வெவ்வேறு விளக்கமிருக்கும். ஆனால் இதைச் சொன்னதற்குக் காரணம் யாதெனில், அறிவிலர்களான சில மூடர்களும் பித்அத்துக்காரரும் சூபியாக்கள்பேரில் தூஷணமாக இவர்கள் காரிகை, கன்னிகுதா, கரியமட்சம், கட்டமுறு, சாராயபோதை, சாராயக்கடை இவைகளைப் பேசிக்கொண்டும் கேட்டுக்கொண்டு மிருக்கிறார்களென்றும் இது ஹராமாகுமென்றும் சொல்லுகிறார்கள். இவ்விதம் அவர்கள் சொன்னதுகூட பெரிய ஓர் பிரமாதமாக நினைத்துக்கொண்டு நிராகரிப்புடன் பெரிய தூஷணம் செய்கிறார்கள். ஏனென்றால் அவர்களுடைய நோக்கம் இவர்களுக்குத் தெரியாமையினாலேயாம். ஆனால் அவர்கள் இசையும் கேட்பது பாடலின் பொருந்திய பொருளை நோக்கியல்ல. மேலும் இராகத்தின் ஓசைக்காகவேயாம். ஏனென்றால் குழலூதும் ஓசையில் இராகத்தின் இன்பம் மாத்திரமேயன்றி பொருள் ஒன்றுமில்லை. இதனாலேதான் அறபிபாஷை அறியாதவர்களுக்கு அறபி பய்த்துகளைப் பாடும்போது இராகத்தின் இன்பமுண்டாகின்றது. மூடர்கள் அவர்களை நோக்கி "இவர்களுக்கு அறபிபாஷை தெரியாதிருக்க இவர்கள் ஏன் இதைக் கேட்கிறார்கள்?

என்று எளனம் செய்கிறார்கள். இந்த மூடன் ஒட்டகையினுடைய ஊளையும் கேட்டிருக்கமாட்டான். அதாவது ஒட்டகைக்கும் பாஷை தெரியாது. அறபியர் இராகம்பாடி அதை ஓட்டினால் அந்த இராகத்தின் இன்பத்தினாலும் ஆனந்தத்தினாலும் அது பாரமான சுமையைத் தூக்கிக்கொண்டு உல்லாசமாய் நடந்துசெல்லுகின்றது. மன்ஜிலில் போய்ச் சேர்ந்து இராகத்தை நிறுத்திவிட்டால் உடனே அது விழுந்து மடிந்துபோவதுமுண்டு. இப்போது இந்த மூடன் ஒட்டகையுடன் எதிர்த்து வாதம்புரிந்து, "ஓ ஒட்டகமே! எனக்கு அறபிபாஷை தெரியாதிருக்க உன்னில் பிறந்திருக்கிற இந்த ஆநந்தமென்ன?" என்று கேட்கக்கடவன். அன்றியும், அறபி பைத்தைக்கொண்டு அதில் இல்லாத வேறு பொருளையும் விளங்கிக்கொள்ளக் கூடும். என்கிறதும் அப்படி விளங்கிக் கொள்வது அவர்களுக்கு உண்டாகிற உதிப்பின்படியிருக்கும். இது பைத்துடைய வியாக்கியானமென்று அவர்கள் கருதுவதில்லை. உதாரணமாக:—ஒருவன் அறபிபாஷையில் *மாஜாரணியின் ன்வுமி இல்லாகியாலுக்கும்" என்று சொல்லிக்கொண்டிருந்தான். அப்போது சூபியாக்களில் ஒருவருக்கு ஹால் உண்டாய்விட்டது. அங்கிருந்தவர்கள் அவரைநோக்கி "அவன் சொன்னசொல் இன்னதென்று உமக்குத்தெரியாதிருக்க நீர் ஏன் ஹாலில் மாறினீர்?" என்று கேட்டார்கள். அதற்கவர் "எனக்கு ஏன் தெரியாது? அவன் மாஜாரேம் (நாம் க்ஷீணதசையில் இருக்கிறோம்) என்று சொல்லுகிறான். அவன் சொன்னது சரிதான். அதுபோலவே நாமெல்லாரும் க்ஷீணதசையிலும் கேவலங்கெட்டநிலையிலும் அபாயநிலைமையிலும் இருக்கிறோம்" என்று சொன்னார். ஆகலால் இவர்கள் இராகம் கேட்பது இதுபோலவே யிருக்கும். ஒருவனுக்கு இருதயத்தில் யாதொருகாரியம் மிகைத்திருந்தால் அவன் எதைக் கேட்டாலும் அதையே கேட்பான், எதைப்பார்த்தாலும் அதையேபார்ப்பான். எவனொருவன் நல்வழியிலாவது கெட்ட வழியிலாவது இஷ்கு என்னும் நெருப்பைக் கண்டறியாதவனா யிருக்கிறானோ அவனுக்கு இந்தப்பொருள் இன்னதென்று ஏற்படாது.

நாலாவது காரணம்:—இராகம் கேட்பவன் வாலிபனாயும் இச்சை மேலிட்டவனாயும் அல்லாகு தஆலாவுடைய அன்பையன்றியே தெரியாதவனாயு மிருப்பதாம். பெரும்பான்மையில் இவன் [illegible] காரியம் அழகிய முகங்களின் வர்ணிப்புகளைக் கேட்டானென்றால் ஷைத்தான் இவனுடைய கழுத்தில் காலைவைப்பான். இவனுடைய இச்சையை எழுப்பிவிடுவான். அழகிய ரூபங்களின் இச்சை இவனுடைய மன

* தேவபோதம் உடைய சொப்பனத்தில் [illegible] உங்களின் [illegible] வேறல்ல [illegible].



தில் அலங்கரித்துக் காட்டுவான். அப்போது இவன் கேட்கிற ஆஷிக்குகளுடைய அந்த அஹ்வால்கள் இவனுக்கும் கல்வியாய்த் தெரியும். தானும் அவர்களைப்போல் ஒன்றில் இச்சைகொண்டு அதன் தேட்டத்தில் இஷ்குடைய மார்க்கமாய் எழும்புவான். ஆண்பிள்ளைகளிலும் பெண்பிள்ளைகளிலும் அநேகம்பேர் இருக்கிறார்கள். இவர்கள் சூபியாக்களுடைய உடையை அணிந்து இந்த இஷ்குடைய காரியத்தில் பராக்கா யிருக்கிறார்கள். அப்படி யிருந்தும் அதற்குச் சமாதானமாக ஆதாரமில்லாத விஞ்ஞானப் பல பிதற்றல்களைக்கொண்டு போக்குகாட்டுகிறார்கள்: "இன்னானுக்கு ஓர்பயித்தியம் உண்டாய்விட்டது" என்றும், "அவனுடைய வழியில் கொஞ்சம் குப்பைவிழுந்து கிடக்கிறது" என்றுஞ்சொல்லுகிறார்கள். இன்னும் "இந்த இஷ்கானது அல்லாகு தஆலாவினுடைய வலையாயிருக்கிறது" என்றும், "அதனால் அல்லாகு தஆலா அவனைத் தன்னிடத்திற்கு இழுக்கிறான்" என்றும் சொல்லுகிறார்கள். இன்னும் "அவனுடைய இருதயத்தைக் காத்து அவன் தன் மஃஷூகுவைப் பார்க்கும்படி செய்வது பெரிய காரியம்" என்றும் சொல்லுகிறார்கள். இவ்விதமாகக் கூட்டிக்கொடுக்கும் தொழிலுக்கு ஒரு மார்க்கமென்றும் தரீக்காவென்றும் பேரிட்டிருக்கிறார்கள். அகந்தையான பாவச் செய்கைக்கும் ஆண்புணர்ச்சிக்கும் பேரின்பப் பயித்தியம் என்று போர்வைதரித்திருக்கிறார்கள். இன்னும் இன்ன ஷைகுக்கு இவன் சிறுவன்மேல் பக்ஷமானபார்வை யிருந்ததென்று போக்குக்காட்டி இது எப்போதும் பெரியோர்களுடைய வழியில் சம்பவித்திருக்கிறதென்றும், இது விவாதத்து அல்லவென்றும், அழகைப்பார்த்து ஆனந்திப்பதென்றும், அழகைப் பார்த்து ஆனந்திப்பது ஆன்மாவுக்குத் தீனியாயிருக்கிறதென்றும் இன்னு மிவ்வகையான வீண்பிதற்றல்களைப் பிதற்றித் தங்களுடைய மானக்கேட்டை மறைக்கின்றார்கள். யாராவது இதை ஹறாமென்றும் அகந்தையான பாவமென்றும் நிர்ணயங்கொள்ளாமற்போனால் அவன் அஹ்லுல் இபாஹத்தில் சேர்ந்தவனாயிருப்பான். அவனைக் கொல்லுவது ஹலாலா யிருக்கிறது. ஷைகுகளில் எவரோ சிறுவனைப் பார்க்கிறவராயிருந்தார் என்று இவர்கள் ஹிகாயத்து செய்கிறார்களே இது இவர்களுடைய செய்கைக்குச் சமாதானமாக எடுத்துச் சொன்ன பொய்யா யிருக்கலாம். அல்லது அவர்கள் அப்படிப் பார்த்திருந்தபோதிலும் இச்சைகொண்டு பார்த்ததா யிராது. ஒருவன் சேப்புப் பழத்தின் சிவந்த வர்ணத்தைப் பார்ப்பதுபோலும் நல்ல மலர்களைப் பார்ப்பதுபோலும் பார்த்திருப்பார்கள். அல்லது அந்த ஷைகுகளும் குற்றமான வேலையில் விழுந்திருக்கக்கூடும். ஏனென்றால் எல்லா ஷைகுகளும் பாவத்தைவிட்டும் காவல்

பெற்றவர்களாயிருக்கமாட்டார்கள். ஒரு வலீயானவர் குற்றத்தில் விழுந்துவிட்டால் அல்லது அவர்மேல் யாதொரு பாவம் ஏற்பட்டால் அந்தப் பாவம் முபாஹாய்விடாது. தாவூது அலைஹிஸ்ஸலாமுடைய கிஸ்ஸாவையும் ஹிக்காயத்தையும் சொல்லியிருப்பது எதற்கென்றால், அவ்வலீயான் சிறு பாவங்களைவிட்டு எவரும் அச்சந்தீர்ந்தவரா யிருப்பார் என்று நீ நினைக்காம லிருக்கவேயாம். பெரியவரா யிருந்தாலும் சரியே. இன்னும் அவர்கள் புலம்பினதும் அழுததும் தவ்பாச் செய்ததுமான சங்கதிகளை ஹிகாயத்து செய்திருப்பது எதற்கென்றால், நீ அதை அத்தாட்சியாகப்பிடித்துத் தன்னைக்குற்றமுள்ளவனாகக் காண்கவேயாம். இதன்றியில் இன்னுமோர் காரணமிருக்கிறது. (அதனாலும் அவர்களை அழகிய ரூபங்களை விரும்பினவர்களா யிருக்கலாம்) என்றாலும் அது அருமையாயிருக்கும். அது யாதெனில், சூபியாக்களுக்கு உண்டாகிற ஹால்களில் அவர்களுக்குப் பலகாட்சிகள் காண்பிக்கப்படும். மலக்குகளுடையவும் நபிமார்களுடையவுமான அர்வாஹுகள் ஒன்றன் மாதிரியான ரூபத்தில் வெளியாகும். அப்படி வெளியாகுவது மனித ரூபத்திலாயிருக்கவும் அதிக அழகாயிருக்கவும் உட்பொருளுக்கு உசிதமான மாதிரியாயிருக்கவும் கூடும். ஆலமுல் அர்வாஹான உட்பொருள்களில் அந்தப் பொருள் அதிக பூரணமானதாயிருந்தால் அதன் மாதிரி ரூபமும் ஆலமுஸ்ஸவாஹிரில் அதிக அழகானதாயிருக்கும். அறபுதேசத்தில் திஹ்யத்துல்கல்பி றலியல்லாகு அன்குவிலும் அதிக அழகாய் ஒருவருமிருந்ததில்லை. றசூல்ஸல்லல்லாகு அலைஹிவசல்லமவர்கள் ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாமை திஹ்யத்துல் கல்பி றலியல்லாகு அன்குவுடைய ரூபத்தில் பார்ப்பார்கள். பின்னர் அந்த வெளிப்பாடுகளில் அருப்பமிராத அழகிய வாலிபனுடைய ரூபத்தில் யாதொரு பொருள் வெளியாயிருக்கவும் அதனால் பெரிய இன்பத்தை அடைந்திருக்கவும் கூடும். அந்த ஹால் மாறினால் அந்தப் பொருள் மறைந்துவிடும். அவன் அந்தப் பொருளை அதனுடைய மாதிரியான ரூபத்தில் தேடமுயலுவான். அது அவனுக்குக் கிட்டாமலிருக்கவும் கூடும். அப்போது அவனுடைய கண்பார்வையானது அந்தப் பொருளுக்கு ஓர்விதத்தில் ஒப்பாயிருக்கிற ஒரு ரூபத்தின்மேல் விழுந்தால் அந்த ஹால் புதிதாகும். அந்த மறைந்துபோன பொருளை மீண்டும் அடைவான். அதனால் அவனுக்கு ஒரு பரவசமும் ஹாலுமுண்டாகும். ஆகவே இழந்துபோன ஹாலை மீண்டும் அடைவதற்காக ஒருவன் அழகிய ரூபத்தைப்பார்க்க ஆசிப்பவனா யிருக்கக்கூடும். இந்த மர்மத்தை அறியாதவர் அவர்கள் அழகிய ரூபத்தில் ஆசை கொண்டு பார்ப்பதைக் காணும்போது அதைத் தன் ஆசையோடு ஒத்திட்டு



அவர்களும் அக்குணத்தினால் பார்க்கிறார்கள் என்று நினைக்கின்றான். மொத்தத்தில் சூபியாக்களுடைய காரியம் மகாபெரிய காரியமாயும் பயங்கரமுள்ளதாயும் மிகவும் மறைவானதாயு மிருக்கிறது. அவர்களுடைய காரியத்தில் புத்தி பிசகுவதுபோல் மற்றெந்த காரியத்திலும் அவ்வளவாய்ப் பிசகுவதில்லை. இவ்வளவு சயிக்கினை செய்தது எதற்கென்றால், இக்காலத்தில் வெளியாயிருக்கிற இம்மனிதர்கள்போலவே அவர்களு மிருந்திருக்கிறார்கள் என்று ஜனங்கள் நினைப்பது அவர்கள்பேரில் கொடுமை என்பதாய்த் தெரிந்து கொள்ளவேயாம். உண்மையில் இப்படி நினைப்பவன் எவனோ அவனே கொடுமைக்குள்ளானவனா யிருக்கிறான். ஏனென்றால் சூபியாக்களை மற்றவர்களோடு ஒத்திட்டு அவர்கள் விஷயத்தில் (அவமதிப்பான) சிந்தனை செய்ததினால் அவன் தன்னுடைய நப்ஸின்பேரில் கொடுமை செய்தவனா யிருக்கிறான்.

ஐந்தாவது காரணம்:—சாமானிய ஜனங்கள் சுகம் பாராட்டலாகவும் விளையாட்டாகவும் இராகம்கேட்க வழக்கப்படுத்திக் கொள்வதாம். இது முபாஹாயிருக்கிறது. என்றாலும் இதற்கு விதியாவது:—இதையே தொழிலாக எடுத்துக்கொள்ளக் கூடாது. இதன்மேல் எப்போதும் வழக்கப்படுத்தக் கூடாது. (அப்படிச் செய்தால் இது ஹறாமாகும்) எதுபோலெனில், சில சிறுபாவத்தை அதிகமாய்ச் செய்வதினால் அது பெரும்பாவத்திற் சேர்ந்துவிடுவது போலவாம். இன்னுமிதுபோலவே சில காரியங்க ளிருக்கின்றன. அவை எப்போதாவது ஒரு சமயத்தில் உண்டானால் அவை முபாஹாகும். அதிகமாய்ப் போனால் ஹறாமாய்விடும். ஹப்ஷிகள் ஒருமுறை பள்ளிவாசலில் ஆட்டம் ஆடினார்கள். அவர்களை றசூல் ஸல்லல்லாகு அலைஹிவசல்லமவர்கள் தடைசெய்யவில்லை. பள்ளிவாசலை அவர்கள் எப்போதும் விளையாடும் இடமாக ஏற்படுத்திக் கொள்ளுவார்களாகில் நாயகமவர்கள் தடைசெய்திருப்பார்கள். இன்னும் ஆயிஷா றலியல்லாகு அன்ஹா ஆட்டம் பார்த்ததையும் அவர்கள் தடைசெய்யவில்லை. ஒருவன் எப்போதும் இவர்களோடு சுற்றித் திரிவதைத் தொழிலாக எடுத்துக் கொள்ளுவானாகில் அது ஆகாது. இன்னுமிதுபோல் எப்போதாவது ஓர் சமயத்தில் பரிகாசம் செய்வதும் முபாஹாகும். ஒருவன் பரிகாசம் செய்வதையே வழக்கமாக எடுத்துக்கொள்ளுவானாகில் அவன் விகடப்பிரசங்கி யென்றாகுவான். அது அழகல்ல.

## இரண்டாவது பாபு-இராகம் கேட்பதிலுண்டாகிற குணக்குறிகளையும், அதன் அதபுகளையும் பேசுவது.

அறிந்துகொள் :—இராகம் கேட்பதில் மூன்று மகாம்களுண்டு. முந்தி விளக்கம், பின்பு பரவசம், பின்பு ஆட்டமசைம். இவை ஒவ்வொன்றிலும் பேச்சிருக்கிறது. முதலாவது விளக்கத்துடைய மகாமில்

பேசுவோம். ஆனால் எவனொருவன் இயற்கையான இச்சையினாலாவது மறதியினாலாவது ஓர் சிருஷ்டியின் ஆசையினாலாவது இராகம் கேட்கிறானோ அவனுடைய விளக்கத்தையும் ஹாலையும் குறித்து நாம் பேசுவதற்கு அவன் அருகனல்லாத மிக அற்பனாயிருக்கிறான். எனினும் ஒருவனுக்கு தீனுடைய நினைவும் அல்லாகு தஆலாவுடைய முஹப்பத்தும் மேலிட்டிருந்தால் அது இரு வகுப்பாகும். முதலாவது: முரீதுடைய வகுப்பாம். முரீதானவன் தன்னுடைய வழியைத் தேடுகிறதும் நடப்பதிலும் அவனுக்குச் சுருங்கல், விரிதல், இலகுவுபடல், கஷ்டமாதல், ஏற்கல் மறுத்தல்களின் குறிகள் தோன்றல்போல் ஒன்றுக்கொன்று நேர்மாறான பல ஹால்கள் உண்டாகுவதால் அந்த முரீதுடைய மனம் மயக்கமுற்றிருக்கும். அப்போது அவன் காதுக்கு கேட்கிற வார்த்தைகளில் கிந்திதல், ஏற்கல், மறுத்தல், சேர்தல், பிரிதல், சமீபமாதல், தூரப்படல், சந்தோஷமாதல், கோபித்தல், ஆதரவுவைத்தல், நிராதரவாதல், அச்சமுறுதல், அச்சம்தீர்தல், வாய்மை நிறைவேற்றல், வாய்மைமாறல், சேர்வதால் சந்தோஷமாதல், பிரிவதால் துக்கப்படல் இன்னும் இவைபோன்ற சங்கதிகள் வந்தனவாயிருந்தால் அதை அவன் தன்னுடைய நிலைமைகளுக்கு நேராகத் திருப்பிக் கொள்ளுகிறான். அதனால் அவனுடைய மனதுக்குள் இருப்பது சுவாலித்தெழும்புகின்றது. அப்போது அவனில் பலஹால்கள் உண்டாகின்றன. அவற்றில் அவனுக்குப் பற்பல சிந்தனைகள் பிறக்கும். அவனுடைய இல்மு, இஃதிகாதுகளின் சட்டம் உறுதியாயில்லாமற்போனால் இராகம் கேட்பதில் அவனுக்குக் குப்ரான பல எண்ணங்கள் உண்டாகக்கூடும். அதாவது இராகம் கேட்பதில் அல்லாகு தஆலாவின் விஷயத்தில் ஆகாத ஓர் பொருளை அவன் விளங்கிக் கொள்ளுவான். உதாரணமாக:—

பய்த்து.

ஜெஅல்வல்பம்னத் மைமல் பதாம்மைல்ருஜான்ஹ்
விம்ரோஸ் மதூல்கஷ்தகசஃஸ் பஹ்ரெசாஸ்த்.

இதன்பொருள்:—முதலில் என்மீது உனக்கிருந்த பக்ஷம் இப்போது எங்கேயாயிற்று? இன்று வெறுப்புற்றதற்குக் காரணம் என்ன? என்பதே.

ஆரம்பத்தில் அதிக விரைவாக நடந்து பின்பு தளர்ச்சியடைந்த ஒரு முரீதானவன் இந்த பய்த்தைக் கேட்பானாகில் தன்மீது அல்லாகு தஆலாவுக்கு முதலில் இருந்த பக்ஷம் இப்போது மாறிவிட்டதென்று நினைப்பான். இந்தமாதிரி அல்லாகு தஆலாவின் விஷயத்தில் அவ்விதம் பொருள் கொள்ளுவான். இது குப்ராகும். மேலும் அல்லாகு தஆலாவுக்கு மாறுதல் உண்டாக வழியில்லையென்றும், அவன் மாற்றுகிறவனேயன்றி மாறுகிறவனல்லவென்றும் அந்த முரீது அறிந்திருக்கவேண்டும். அன்றியும் தனக்கு வெளிப்பட்டிருந்த அந்தப் பொருள் தன்னுடைய மாறின காரணத்தால் மறைந்திருக்கிறதென்றும்,



அல்லாகு தஆலாவின் பக்கத்தால் தடையும் மறைப்பும் வெறுப்பும் ஒருபோதும் உண்டாகாவென்றும், அல்லாகு தஆலாவுடைய அருளென்னும் சன்னிதி எப்போதும் திறந்திருக்கிறதென்றும் அவன் உணரவேண்டும். உதாரணமாக:—சூரியனுடைய ஒளியான நூர் சமஸ்தத்துக்கும் பொதுவாய் அளிக்கப்பட்டிருக்கினும் ஒருவன் ஒரு சுவற்றின் மறைப்பிலாகுவானாகில் அந்த ஒளியைவிட்டும் அவன் மறைந்துவிடுவான். அந்த மறைப்பு அவனால் உண்டானதேயன்றி சூரியனால் உண்டானதல்ல. ஆகவே அவன் இப்படிச் சொல்லவேண்டும்.

பய்த்து.

குர்ஷீத் பர்ஆமதே நிகாரீந்தைரஸ்த்
பர்பந்த அகர் நதாபதஸ் இக்பீரஸ்த்.

இதன்பொருள்:—அலங்கார மண்டபமான வானத்திலிருந்து சூரியன் உதித்துப் பிரகாசித்துக்கொண்டிருக்கிறது. அது என்மீது பிரகாசிக்காமலிருப்பது எனது நிர்ப்பாக்கியத்தினாலேயாம் என்பதே.

ஆதலால் தனது சரித்திரமும் தன்னால் சம்பவித்த குற்றமுமான திரையே தனக்கு வெளியான பொருளை மறைத்துவிட்டதென்றும் அந்தத் திரையை ஹக்கு தஆலாவின்பக்கம் சேர்க்கப்படாதென்றும் அவன் உணரவேண்டும். இந்த உபமானத்தினால் நாடிய கருத்தென்னவென்றால், குறைவதும் மாறுவதுமான குணங்கள் எவையோ அவைகளைத் தன் விஷயத்திலும் தனது நப்ஸின் விஷயத்திலும் சேர்த்து உஜூதினது ஜமால் ஜலால்களென்னும் அழகும் மேன்மையும் பொருந்திய குணங்களை அல்லாகு தஆலாவின் விஷயத்திலும் அமைத்துப் பொருள் கொள்ளவேண்டுமென்பதேயாம். இல்மில் நின்றும் இவ்வளவு சரக்கு அவனில் இல்லாமற்போனால் அவன் வெகுசீக்கிரத்தில் குப்ரில் விழுவான், அதை அவன் அறியமாட்டான். இதுகாரணமாக அல்லாகு தஆலாவுடைய ஆசையினால் இராகம் கேட்பதில் பெரிய அபாயமிருக்கிறது. இரண்டாவது:—முரீதுகளுடைய வகுப்பையும் முகாமாத்துகளுடைய அஹ்வால்களையும் விட்டுத்தாண்டி பனாவுடைய ஹாலின் முடிவுக்கு வந்தவர்களின் வகுப்பாம். இந்த அல்லாகு தஆலா அல்லாத மற்ற வஸ்துக்களுடன் சேர்க்கும் பக்ஷத்தில் பனா என்றும் நாஸ்தி என்றும் சொல்லுகிறார்கள். அல்லாகு தஆலாவுடன் சேர்க்கும் படித்தில் தவ்ஹீது என்றும் ஏகத்துவம் என்றும் சொல்லுகிறார்கள். இவன் இராகம் கேட்பது பொருளை விளங்குகிற வழியிலேயாயிராது. மேலும் இராகம் இவன் காதுக்கு எட்டினால் அந்த நாஸ்தியும் ஏகத்துவமும் புதிதாகும். அவன் முற்றும் தன்னைவிட்டு மறைந்து இந்த உலகத்தின் உணர்ச்சியில்லாதவனாய்ப் போவான். உவமையில் இவன் நெருப்பில் விழுந்தால் அதுவும் இவனுக்குத் தெரியாமலிருக்கக்கூடும். ஷைகு அபுல்ஹசன் நூரி றஹிமகுல்லா அவர்கள் இராகம் கேட்டுக்கொண்டிருக்கும்போது ஓடத்தொடங்கி கரும்புவெட்டி அடிக்கட்டைகள் தங்கி நிற்கிற ஒரு கழ

னியில்போக நேரிட்டதால் அவர்களுடைய கால் முழுவதும் அறுப்புண்டுகொண்டிருந்தது. அது அவர்களுக்குத் தெரியவில்லை. இப்படியானவர்களுடைய இராகப்பரவசம் மிக நிறப்பமானது. முரீதுகளுடைய இராகப்பரவசத்தில் மனிதப்பண்பு கலந்திருக்கும். இதைவிட்டும் தாண்டினவனுடைய பரவசமானது அவனுடைய உணர்வையொழித்து அவனை முற்றாக எடுத்துக்கொள்ளும். இது எதுபோலெனில், யூசுபு அலைஹிஸ்ஸலாமவர்களைத் தரிசித்த பெண்கள் எல்லாரும் தங்கள் உணர்வுமாறிக் கைகளை அறுத்துக்கொண்டது போலவாம். நீ இந்த நாஸ்தியின் ஹாலை மறுத்து நான் அவனை என் கண்ணுறப் பார்க்கின்றேனே, அப்படியிருக்க அவன் நாஸ்தியானதெப்படி? என்று இன்காருசெய்யாமலிருக்கக்கடவாய். ஏனென்றால், நீ எதை நோக்கி அவன் என்கின்றாயோ அது அவன் அல்ல இது அவன் தேகமாம். இது மரித்தாலும் இதை நீ பார்க்கிறாய். அவனோ (உன் விஷயத்தில்) இல்லாதவனாய்ப் போனான். ஆகவே அவன் என்பது அறிவுஸ்தானமாகிய அந்த சித்துப்பொருளேயாம். எப்போது எல்லா வஸ்துக்களின் உணர்வு அவனைவிட்டும் மறைந்துவிட்டதோ அப்போது எல்லா வஸ்துக்களும் (அவன் விஷயத்தில்) இல்லாமல் நாஸ்தியாய்விட்டன. அவனுக்குத் தன் உணர்வு மில்லாமற்போனால் தானும் தன் விஷயத்தில் நாஸ்தியாய்விட்டான். ஹக்கு தஆலாவும் அவனுடைய நினைவும் தவிர வேறொன்று மில்லாமற்போனால் அழிந்து போகிறவைகளெல்லாம் போய்விட்டன. அழியாமல் நிலைத்திருப்பது மிச்சப்பட்டது. அப்போது அவன் அல்லாகு தஆலாவைத் தவிர வேறொன்றையும் தரிசிக்கிறதில்லை யாதலால் எல்லாம் அவனே நான் இல்லை என்றாவது, நானே அவன் என்றாவது சொல்லுகிறான். இதுதான் ஏகத்துவம் என்பதற்குப்பொருள். இத்தஸ்தானத்தில் சிலர் பிசகிப்போய் இதை *ஹுலூலாகவும் சிலர் †இத்திஹாதாகவும் எண்ணிக்கொள்ளுகிறார்கள். இதானது எப்படியிருக்கிறதென்றால், எப்போதும் கண்ணாடி பார்த்திராத ஒருவன் அதில் தன் ரூபத்தைப் பார்க்கும்போது நானே கண்ணாடிக்குள் இறங்கிவிட்டேன் என்றாவது அல்லது கண்ணாடியின் வர்ண பேதத்தால் அதற்குள் சிவப்பு அல்லது வெண்மையாக மாறியிருக்கிற ரூபமே என் ரூபமென்றாவது அவன் எண்ணுவதுபோலிருக்கிறது. தானே கண்ணாடிக்குள் இறங்கிவிட்டதாய் நினைப்பானாகில் இது ஹுலூலென்றாகும். கண்ணாடிரூபமே தன் ரூபமென்று நினைப்பானாகில் இது இத்திஹாதென்றாகும். இவ்விரண்டும் பிசகாகும். காரியங்களின் முடிவை அறியாதவன் எவனோ அவனே இவ்விதமாய் நினைப்பான். ஒருபோதும் கண்ணாடி தானாகுவதுமில்லை. தான் கண்ணாடியாகுவதுமில்லை. எனினும் அப்படித் தோற்றுகின்றது. இதன் வியாக்கியானத்தை இம்மாதிரியான கிதாபிற்சொல்லமுடியாது. ஏனென்றால் இதன் இல்மு விரிவாயிருக்கிறது. நாம் இதன விருத்தியுரையை இஹ்யாவுல் உலூமில் கூறியிருக்கிறோம்.

* ஹுலூல் = உட்புகுதல். † இத்திஹாது = இரண்டறக்கலத்தல்.



இரண்டாவது மகாம்:—விளக்கம் தீர்ந்தால் பின்பு உண்டாகுவது பரவசமாம். அதை வஜ்து என்று சொல்லுகிறார்கள். வஜ்து என்ற சொல்லுக்கு அடைவது எனப்பொருள்படும். அதாவது இதற்குமுன் இல்லாத ஒரு *ஹாலை அடைந்தான் என்பதேயாம். அந்த ஹாலுடைய உண்மையைக் குறித்தாவது என்னவென்பதில் அநேகம் பேச்சிருக்கிறது. அந்த ஹால் ஒருவகையாயில்லை; பலவகைப்பட்டிருக்கிறதென்பதே சரி. என்றாலும் அது அஹ்வாலுடைய இனமென்றும் முகாஷபாத்துடைய இனமென்றும் இரண்டு இனமாயிருக்கிறது. அஹ்வாலுடைய இனமென்றது யாதெனில், எதனால் அவனுக்கு ஒரு குணம்மேலிட்டு அவனை மஸ்துகொண்டவன்போல் ஆக்கிவிடுமோ அதுவேயாம். அந்தக் குணம் சில சமயம் ஆசையாயும், சில சமயம் அச்சமாயும், சில சமயம் இஷ்கு என்னும் நெருப்பாயும், சில சமயம் தேட்டமாயும், சில சமயம் துக்கமாயும், சில சமயம் கைசேதமாயும் இருக்கும். இப்படி அதனுடைய வகைகள் அநேகமாயிருக்கின்றன. என்கிலும், இஷ்கு என்னும் நெருப்பு இருதயத்தைத் தாக்கினால் அதன் ஆவியெழும்பித் தலைமூளைக்குப் போகும். அது அவனுடைய ஐம்புலன்களை ஒடுக்கும். நித்திரை செய்பவனுக்குப் பார்வை கேள்வி முதலிய புலன்கள் ஒடுங்கியிருப்பதுபோல் அவனுக்குப் பார்வை கேள்விகள் ஒடுங்கியிருக்கும். அவன் யாதொன்றைப் பார்த்தாலும் கேட்டாலும் மஸ்து கொண்டவன்போல் அதை அறியாதவனாயும் அதன் உணர்வில்லாதவனாயுமிருப்பான். இனி முகாஷபாத்துடைய இனமென்றது யாதெனில், சூபியாக்களுக்கு வெளியாக்கப்படுகிற காட்சியான பொருள்கள் வெளிப்பட ஆரம்பிப்பதாம். அந்தக் காட்சியிற் சிலது மிஸாலியான (மாதிரி) காட்சியாயும் சிலது பிரத்தியக்ஷமான காட்சியாயும் இருக்கும். இராகம் இதற்கு உதவியான குணத்தைக் கொடுப்பதற்குக் காரணம் யாதெனில், கண்ணாடியில் ரூபம் தோற்றுவதற்கு அதில் படிந்திருக்கிற தூசியைத் துடைத்துத் தெளிவாக்குவதுபோல் கல்பில் காட்சிகள் வெளிப்படும் விதமாய் இராகமானது கல்பைச் சுத்தப்படுத்தித் தெளிவுறச் செய்கின்றது. இந்தப் பொருளைக்குறித்து ஏதொன்றை விளக்கிச் சொல்லக்கூடுமோ, அது ஒரு இல்மாகிய அறிவாயும் கியாஸியாகிய அநுமானமாயும் மிஸாலியாகிய மாதிரியாயும் இருக்குமேயொழிய மற்றப்படி இதன் ஹகீகத்தாகிய உண்மையை இந்த மகாமுக்கு வந்திருப்பவனன்றி மற்றவன் அறியமாட்டான். அவரவருடைய மகாமின் ஹகீகத்தை அவரவரே அறிவார்கள். அவர்கள் மற்றொன்றில்

அநுபோகம் செய்தால் அதைத் தங்களுடைய மனதின்படி அனுமானித்துக்கொள்ளுவார்கள். அநுமானத்தால் அறியப்படுவதினதுவோ அது இல்லாதிய ஏட்டுப்பிரமாணமே யொழிய அநுபவமான இன்பமல்ல. இவ்வளவைச் சொல்லிவந்தது எதற்கென்றால், எந்த ஜனங்கள் இந்த ஹாலின் இன்பத்தை அநுபவிக்கவில்லையோ அவர்கள் இதை இன்காரு செய்யாமல் ஒருசமயம் அங்கீகரிப்பார்களெனக் கருதியேயாம். இன்காரு செய்வது அவர்களை நஷ்டப்படுத்தும். எவனொருவன் தன் பொக்கிஷத்தில் இல்லாத பொருள் அரசர்களுடைய பொக்கிஷங்களிலும் இராது என்று நினைக்கிறானோ அவன் வன்மைபற்றிய மூடனாயிருப்பான். அவனிலும் கறடுபற்றிய மூடன் யாரென்றால், தன்னிடத்தில் ஏதோ கொஞ்சம் பொருளிருப்பதைப்பற்றித் தனக்கு ஏதோ ராஜரீகம் கிடைத்துவிட்டதென்று நினைத்து நான் எல்லாவற்றையும் அடைந்துவிட்டேன் என்றும், எனக்கு எல்லாம் உடைத்தாயிருக்கிறதென்றும், என்னிடத்தில் இல்லாதது உலகத்தில் இல்லவே இல்லை என்றும் சொல்லுகிறவன் எவனோ அவனே பெரிய மூடனாம். இந்த இருவித மடத்தனத்தினாலேயே எல்லா இன்காருகளும் எழும்புகின்றன. இன்னு மறிந்துகொள்:—ஒருவனுக்கு வஜ்து என்னும் ஹால் எதார்த்தமாய் உண்டாகாமலிருக்க அவன் அதை உடையவன்போல் காண்பிக்கவும் கூடும். இது சுத்த முனாபிகுத்தனமாகும். ஆனால் எதார்த்தமாய் வஜ்து உண்டாகும்பொருட்டுப்பிரயாசையினால் அதனுடைய அஸ்பாபுகளை மனதில்கொண்டுவரலாம். குர்ஆன் ஓதக் கேட்டால் நீங்கள் அழுங்கள் என்றும், அழுகை வராவிட்டால் அதற்காகப் பிரயாசைப்படுங்கள் என்றும் ஹதீதில் வந்திருக்கிறது. இந்த ஹதீசுக்குப் பொருள் என்னவென்றால், துக்கத்தை எழுப்புகிற சபபுகளை மனதில் கொண்டுவாருங்கள் என்பதேயாம். அந்தப் பிரயாசையிலிருக்கிற குணமென்னவென்றால் ஒருசமயம் எதார்த்தத்தில் இழுத்துவிடு மென்பதேயாம்.

## சுவால்.

ஸூபியாக்கள் ஹக்காகவும் ஹக்கு தஆலாவை நாடியும் இராகம் கேட்பவர்களாயிருந்தால் சங்கீதம் பாடுகிறவர்களைக்கொண்டு இராகம் கேட்காமல் இந்த காரிகளை நியமித்து குர்ஆனை ஓதச்சொல்லி அதைக் கேட்கலாமே குர்ஆனுகிறது ஹக்குடைய கலாமாயிருப்பதால் அதைக் கேட்பது மிக மேலாயிருக்கிறதே என்று யாராவது சொல்லும்பக்ஷத்தில் அதற்கு

## ஜவாபு.

குர்ஆனுடைய ஆயத்துகளைக் கேட்பது அதிகமாய்ச் சம்பவிக்கின்றது. இன்னும் குர்ஆனைக் கேட்டு உணர்வுமாறி பிரக்கினை தப்



பினவர்களும் அநேகருண்டு. அநேகம்பேர் தங்கள் பிராணனையும் விட்டிருக்கிறார்கள். அந்த ஹிகாயத்துகளைச் சொல்லும்பக்ஷத்தில் விரிவாகும். இதைப்பற்றி இஹ்யாவுல் உலூம் என்னும் கிதாபில் விவரித்துச் சொல்லியிருக்கிறோம். என்கிலும் காரிகளை நியமிப்பதற்குப் பதிலாய்ச் சங்கீதவான்களையும் குர்ஆனை ஓதுவதற்குப் பதிலாய்ச் சங்கீதம் பாடுவதையும் ஸூபியாக்கள் ஏற்படுத்திக்கொண்டதற்கு ஐந்து காரணங்களுண்டு.

முதலாவது காரணம் யாதெனில்:—குர்ஆனுடைய ஆயத்துகள் எல்லாமே ஆஷிகுகளுடைய அஹ்வால்களுக்குநேர்பாடானதாயிராது. அதாவது குர்ஆனில் காபிர்களுடைய கிஸ்ஸாவும் துன்யாவை உடையவர்களின் முஆமலாத்துடைய ஹுகுமும் இன்னும் இதர விஷயங்களும் அநேகமாயிருக்கின்றன. ஏனென்றால் அது எல்லாவகை ஜனங்களுக்கும் ஆரோக்கியத்தைக் கொடுக்கும்படி அருளப்பட்டிருக்கிறது. குர்ஆனை ஓதுகிறவன் உவமையில் பாகவிஷயமான ஆயத்துகளைத் தொடங்கித் தாயாருக்கு சொத்தில் ஆறிலொன்றும் சகோதரிக்கு அரைவாசியும் சேருமென்றும், புருஷனை இழந்த பெண்பிள்ளை நான்கு மாதமும் பத்துநாட்களும் இத்தாவிருக்கவேண்டு மென்றும், இன்னு மிவைபோன்றவைகளையும் ஓதுவானாகில் இது இஷ்கு என்னும் நெருப்பை எரியப்பண்ணாது. ஆனால் ஒருவன் இஷ்கு முற்றிய பெரிய ஆஷிகாயிருந்தால் அவன் எதிலும் இராகத்தையே கேட்பான். அதில் அவனுடைய நோக்கத்துக்குப் பொருந்திய பொருள் அமைந்திராவிட்டாலும் சரியே. அப்படிப்பட்ட ஆஷிகு அருமையாயிருக்கிறான்.

இரண்டாவது காரணம் யாதெனில்:—குர்ஆனை அநேகம் பேர் மனப்பாடம் செய்திருக்கிறார்கள். அநேகம்பேர் குர்ஆனை ஓதியிருப்பார்கள். எதுவொன்று அநேகமாய்க் கேட்கப்பட்டிருக்கிறதோ அது மனதுக்கோர் ஹாலை யுண்டாக்காது. ஒருமுறை ஒன்றைக் கேட்டு அதன்மேல் வஜ்து செய்த ஒருவனுக்கு மறுமுறை அதைக் கேட்கும்போது அந்த வஜ்து உண்டாகாமலிருப்பதை அநேகமாய் நீ பார்த்திருக்கிறாய். அன்றியும் சங்கீதத்தைப் புதிதுபுதிதாகப் பாடக்கூடும். குர்ஆனை அப்படிப் புதிதுபுதிதாக ஓதமுடியாது. ரசூல்சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுடைய காலத்தில் சிற்றூர்களான கிராமங்களிலிருந்து அறபுகள் வருவார்கள். புதிதாக குர்ஆனைக்கேட்டு அழுவார்கள். அவர்களுக்கு ஹால் உண்டாகும். அப்போது அபூபக்கர்சித்தீகு றலியல்லாகு அன்கு அந்த அறபுகளை நோக்கி குன்னாகமா குன்த்தும்

சம்மசலத் தூடுபுறு நாங்களும் உங்களைப்போலிருந்தோம், பின்பு எங்களுடைய இருதயங்கள் வன்மை யடைந்துவிட்டன என்று சொன்னார்கள். அதாவது:—குருஆனைக் கேட்டுக்கேட்டு எங்கள் மனம் உறுதி யடைந்து நிலைபெற்றுவிட்டது. அது எங்களுக்கு வழக்கமாய்ப் போயிற்று என்பதேயாம். ஆகவே, எதுவொன்று புதிதாயிருக்கிறதோ அதன் குணப்பாடே அதிகமாயிருக்கும். இதற்காகவே உமர் றலியல்லாகு அன்கு அவர்கள் ஹஜ்ஜுக்கு வருகிற ஹாஜிகளைச் சீக்கிரமாக அவரவர்களுடைய ஊருக்குப் போகும்படி கட்டளையிட்டுக்கொண்டிருந்தார்கள். அன்றியும் "ஹாஜிகள் அதிகமாய்த் தங்கியிருப்பார்களாகில் அவர்களுடைய மனதிலிருந்து கஃபாவின் மகிமை எடுபட்டுப் போமென்று நான் பயப்படுகிறேன்" என்றும் சொல்லுவார்கள்.

மூன்றாவது காரணம் யாதெனில்:—அசையாமலிருக்கிற அநேகம் மனங்கள் இராகத்தினாலும் சரியான இசையுள்ள ஓசையினாலும் அசைந்தாடும். இதனாலேதான் சாதாரண பேச்சின்மேல் வஜ்து உண்டாகுவது அருமையாயிருக்கிறது. நல்ல ஓசையானது சரியான இசையோடும் இராகத்தோடுமிருந்தால் அதன்மேல் வஜ்து உண்டாகின்றது. பின்பு ஒவ்வொரு இராகமும் ஒவ்வொரு மனமும் வெவ்வேறு குணப்பாடுள்ளதாயிருக்கும். குருஆனை சங்கீதமெட்டில் கொண்டுவருவதும் அதை ஒரு இராகத்தின்பேரில் இணக்கிப்பாடுவதும் கூடாது. கூடாத போது அது இராகமில்லாமல் தனித்த கலாமாய் விட்டது. ஆனால் இஷ்குஎன்னும் நெருப்பு கனிந்துகொண்டிருந்தால் குருஆன் அதைச் சுவாலித்து எரியச்செய்யும்.

நாலாவது காரணம் யாதெனில்:—இராகத்தில் வேறொரு குணப்பாட்டை அதிகப்படுத்தும்பொருட்டு அதற்கு உதவியாகக் குழல், தாரை, தப்பு, டங்கம் முதலிய வேறு சப்தங்களும் வேண்டும். இது விளையாட்டு ரூபமுள்ளதாயிருக்கிறது. குருஆனோ மிகக்கனதிப்பாடும் கவுரவமும் பொருந்தினதாயிருக்கிறது. ஆகவே எதுவொன்று சாமானியர்களுடைய பார்வையில் விளையாட்டு ரூபமுள்ளதாயிருக்கிறதோ அதன்சப்தத்தோடு குருஆனை ஓதுவதுகூடாது. இப்படியான விளையாட்டு ரூபத்தை குருஆனுடன் சேர்க்காமல் அதைக் காப்பதுவேண்டும். உதாரணமாக:—றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் றபீயுபின்த்து மஸ்வூது றலியல்லாகு அன்ஹாஉடைய வீட்டில் இருந்தார்கள். அன்னாருடைய அடிமைப் பெண்கள் தப்புகொட்டிப் பாட்டு பாடிக்கொண் டிருந்தார்கள். அந்த அடிமைப் பெண்கள் றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களைப் பார்த்தபோது அவர்களைப் புகழ்ந்து பாடத்



தொடங்கினார்கள். றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் அந்த அடிமைப்பெண்களை நோக்கி "(ஏ! பெண்காள்) சும்மாயிருங்கள் முன் பாடிக்கொண்டிருந்ததையே பாடுங்கள்" என்று ஆக்கியாபித்தார்கள். ஏனென்றால் அவர்களுடைய புகழானது பெருமையும் மகிமையுமுள்ளதாகையால் அதை விளையாட்டு ரூபமான தப்பு கொட்டுவதுடன் பாடுவது தகாது என்பதற்கேயாம்.

ஐந்தாவது காரணம் யாதெனில்:—ஒவ்வொருவனுக்கும் ஓர்ஹால் இருக்கும். அவனவனும் தன்னுடைய ஹாலுக்கு நேர்பாடான ஒரு பாடலைக் கேட்க ஆவலுள்ளவனாயிருப்பான். அப்படி நேர்பாடான பாடலாயில்லாமற்போனால் அதைவெறுத்து இது வேண்டாம்வேறொன்று சொல் என்கவும்கூடும். இப்படிவெறுப்பாகி வேண்டாமென்கிற இடத்தில் குருஆனை ஓதுவது தகுதியல்ல. அன்றியும் குருஆனுடைய ஆயத்துகள் எல்லாமே அவரவருடைய ஹால்களுக்கு இணக்கமாயில்லாமலிருக்கவும் கூடும். ஒரு பய்த்தானது ஒருவனுடைய ஹாலுக்கு ஒத்தில்லாமற்போனால் அதை அவன் தன்னுடைய ஹாலுக்குத் தக்கபடி பொருத்திப் பொருள் கொள்ளலாம். ஏனென்றால், பாடலில் புலவன் கருதிய பொருளையே அமைக்கவேண்டுமென்பது அவசியமல்ல. என்கிலும் குருஆனுடைய மஃனாவைத் திருப்பித் தன்னுடைய நோக்கத்துக்கு நேர்பாடாகப் பொருத்திக்கொள்வது கூடாது.

ஆதலால் சூபியாக்கள் சங்கீதம் பாடுகிறவர்களைத் தெரிந்தெடுத்துக்கொண்டதற்கு மேற்கூறிவந்தவைகளே காரணங்களாயிருந்தன. இக்காரணங்களின் சாராம்சமானது இரண்டே விஷயங்களில் மீளும். அவையாவன:—கேட்பவன் கேவல நிலைமையுள்ளவனாயிருப்பதும் அவன்தனது இச்சைக்கு இணக்கமாக குருஆனைத் திருப்பிக்கொள்ளநேராதபடி அதன் மகிமையைக் காப்பதுமாம்.

மூன்றாவது மகாம்:—இராகம் கேட்பதில் ஆடுவதும்ஆடையைக் கிழித்துக்கொள்வதுமாம். இவற்றில் எதுவொன்று அவனைமிகைத்து அவனுடைய இந்திரியங்களுக்குள் அடங்காததாயிருக்கிறதோ அதைப்பற்றி அவன் குற்றவாளியாகான். தனக்கு ஹால் உண்டாகாமலிருக்கத் தன்னை ஹால் உள்ளவன்போல் ஜனங்களுக்குக் காட்டுவதற்காகத் தன் இச்சையாய் ஆடினாலும் ஆடையைக் கிழித்துக்கொண்டாலும் இது சுத்த முனாபிக்குத்தனமாயிருப்பதால் ஹராமாகும். அபுல்காசிம் நசுறாபாதீ றஹிமகுல்லா அவர்கள் "இந்தஜனங்கள் புறம்பேசுவதைக்காட்டிலும் இராகம் கேட்பதில் பராககாகுவார்களாகில் மிக நன்மையா

யிருக்கிறதென்று நான் சொல்லுவேன்" எனக் கூறியிருக்கிறார்கள். அபூஅம்ரபுனுஜ்ஜீது றலிமகுல்லா அவர்கள் "இந்த ஜனங்கள் இராகம் கேட்பதில் பொய்யாக ஒரு ஹாலைக் காட்டுவதினும் முப்பது வருஷம் புறம்பேசுவார்களாகில் மிக நலமாயிருக்கிறது" என்று சொல்லுகிறார்கள்.

இன்னுமறிந்துகொள்:—இராகம் கேட்கும்போது தனக்குள் உண்டாகிற ஹால் வெளியாகாதபடி ஆடாமல் அமரிக்கையா யிருப்பவன் எவனோ அவனே சிறப்பத்தை யுடையவன். அவன் தன்னைக் காத்துக்கொள்ளக் கூடிய விதமாய் அவனுடைய தத்துவமானது அவ்வளவு உறுதிப்பட் டிருக்கிறது. ஆடுவதும் அலறுவதும் அழுவதும் பலஹீனத்தினா லுண்டாகுவதாம். அவ்வித உறுதியான தத்துவம் அருமையா யிருக்கும். அபூபகர் சித்தீகு றலியல்லாகு அன்கு "நாங்களும் உங்களைப்போ லிருந்தோம். பின்பு எங்களுடைய இருதயங்கள் வன்மை யடைந்து விட்டன" என்று சொல்லி யிருப்பதற்கு எங்கள் மனம் உறுதிப்பட்டுப் பலத்தையடைந்திருக்கிறது, அதனால் நாங்கள் எங்களைச் சமாளித்துக்கொள்ளச் சக்தி யுள்ளவர்களா யிருக்கிறோம் என்பதே பொருளா யிருக்கலாம். தன்னைச் சமாளித்துக் கொள்ளச் சக்தி யில்லாதவன் எவனோ அவனும் கூடியவரையில் தன்னைச் சமாளித்து ஹாலை வெளியாக்காம லிருப்பது வேண்டும். ஒரு வாலிபர் ஜுனைதுறலிமகுல்லா அவர்களுடைய சகவாசத்தில் இருந்தார். அவர் இராகம் கேட்கும்போது அலறி சப்தமிடுவார். ஜுனைதுறலிமகுல்லா அவர்கள் அந்த வாலிபரை நோக்கி "இனிமேல் நீ இப்படிச் செய்கிறதாயிருந்தால் என் சகவாசத்திலிராதே" என்று சொன்னார்கள். பின்பு அவர் பெரிய பிரயாசையடைந்து தன்னைச் சமாளித்துக் கொண்டு வந்தார். ஒருநாள் அவர் தன்னை எவ்வளவோ சமாளித்தும் முடியாமல் கடைசியாய் அலறி ஒரு சப்தமிட்டதில் வயிறு வெடித்து மரணத்தை அடைந்தார். ஆனால் ஒருவன் தன் இச்சையாக ஹாலை வெளிப்படுத்தாமல் ஆடுவானாகில் அல்லது பிரயாசையினால் தன்னை அழுகையில் கொண்டுவருவானாகில் அது அவனுக்கு ஆகும். ஏனென்றால் ஆடுவது முபாஹா யிருக்கிறது. ஹபஷிகள் பள்ளிவாசலில் ஆடிக்கொண்டிருந்ததை ஆயிஷாறலியல்லாகு அன்ஹா அவர்கள் பார்க்கப்போனார்கள். [illegible] றசூல் சல்லல்லாகு அலைஹிவசல்லமவர்கள் அலிறலியல்லாகு அன்குவை நோக்கி "நீ என்னில்நின்று மாயிருக்கிறாய் நான் உன்னில்நின்று மாயிருக்கிறேன்" என்று சொன்னார்கள். இந்த சந்தோஷத்தினால் அலிறலியல்லாகு அன்கு அவர்கள் பூமியின்மேல்



பன்முறை குதித்துக் குதித்து ஆடினார்கள். சந்தோஷத்திலும் மகிழ்ச்சியிலும் இப்படிக் குதிகுதிப்பது அறபுகளின் வழக்கமா யிருக்கிறது. இன்னும் ஜஃபர்றலியல்லாகு அன்குவை நோக்கி "நீ குணத்திலும் தோற்றத்திலும் எனக்கு ஒப்பா யிருக்கிறாய்" என்று சொன்ன சந்தோஷத்தினால் அவர்களும் குதிகுதித்து ஆடினார்கள். இன்னும் ஜெய்து புனுஹாரிஸாறலியல்லாகு அன்குவை நோக்கி "நீ என் சகோதரனும் என் மவுலாவாயு மிருக்கிறாய்" என்று சொன்னார்கள். அந்த சந்தோஷத்தினால் அவர்களும் குதிகுதித்து ஆடினார்கள். ஆதலால் இதை ஹறாமென்பவன் எவனோ அவன் தப்பு சொல்லுகிறவனாகிறான். என்கிலும் இது விளையாட்டென்று தீரும். விளையாட்டும் ஹறாமல்ல. இன்னும் யாராவதொருவன் தனக்கு உண்டாகிற ஹால் அதிக உறுதியாகும்பொருட்டு ஆடுவானாகில் அது அழகேயாம். ஆனால் தன் இச்சையாக ஆடையைக் கிழிப்பது தகாது. ஏனென்றால் இது பொருளைச் சேதப்படுத்துவதாயிருக்கிறது. என்கிலும் தன்மீது ஹால்மிகைத்து மீறும்போது கிழிப்பானாகில் ஆகும். தன் இச்சையாக ஆடையைக் கிழிக்கிற ஒருவன் அப்படிக் கிழிக்காமலிருக்க நாடுவானாகில் அது அவனால் முடியாம லிருக்கவும் கூடும். வியாதியில் வருத்தமுற்று அழுது புலம்புகிற ஓர் நோயாளி தன் இச்சையாக அழுதாலும் அப்படி அழாமலிருக்க நாடினால் அது அவனால் முடிகிறதில்லை. மனிதன் தன் இச்சையாகச் செய்கிற எல்லாச் செயல்களையும் எப்போதுமே அவன் விட்டுவிடக்கூடு மென்பதில்லை. ஒருவன் இப்படி மிகைக்கப்படுவானாகில் அவன் குற்றவாளி யாகமாட்டான். சூபியாக்கள் தங்களிச்சையாகப் பிடவையைக் கிழித்துப் பல துண்டுகளாக்குவதைக் குறித்து இது தகாது என்று சிலர் ஆக்ஷேபித்திருக்கிறார்கள். இது இவர்களுடைய தப்பாயிருக்கிறது. ஏனென்றால் சட்டை தைப்பதற்காகவும் பிடவையைப் பல துண்டுகளாய்க் கிழிப்பதுண்டே. சேதமாக்காமல் உபயோகப்படுத்த நாடிக் கிழித்தால் ஆகுமல்லவா? அதுபோல் எல்லாருக்கும் பங்கு வரவேண்டுமென்றும், முசல்லா, சட்டை இவைகளுக்கு ஒட்டுப்போட்டுத் தைக்கவேண்டுமென்றும் கருதி சூபியாக்கள் தங்கள் பிடவையைப் பல துண்டுகளாய்க் கிழித்தால் (ஏன் ஆகாது?) ஆகும். பிடவையின் பாவு நூலான நெடுக்கிழையை ஒருவன் நாலுநாலு துண்டுகளாக அறுத்து ஒவ்வொரு துண்டையும் ஒவ்வொரு பகிருக்குக் கொடுப்பானாகில் அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு காரியத்துக்கு உபயோகப்படுகிற பக்ஷத்தில் அப்படி அறுப்பது முபாஹேயாம்.

## இராகம் கேட்பதற்குள்ள அதபுகள்.

அறிந்துகொள்:—இராகம் கேட்பதில் நேரம், இடம், ஜனம் இம்மூன்றையும் கவனித்துக் கொள்ளவேண்டும். ஏனென்றால், தொழுகையின் நேரத்திலாவது உணவருந்துகிற நேரத்திலாவது யாதொரு காரியத்தில் மனம் பராக்காயிருக்கிற நேரத்திலாவது இராகம் கேட்கிறபக்ஷத்தில் அது வீணாயாகும். இதுபோல் இடமானது நடக்கிற வழியாயிருந்தால் அல்லது இருட்டானதும் சந்தோஷமில்லாததுமான இடமாயிருந்தால் அல்லது ஒரு அக்கிரமக்காரனுடைய வீடாயிருந்தால் இவ்விடங்களில் இராகம் கேட்டால் அந்த நேரமெல்லாம் பல சிந்தனையாய்க் கழியும். இனி இராகம் கேட்க நாடுகிற ஜனங்கள் எவர்களோ அவர்கள் அதற்கு அருகராயிருக்கவேண்டும். அப்படியில்லாமல் அந்தச் சபையில் துன்யாவை உடைத்தாயிருக்கிற பெருமைக்காரனான ஒரு முத்தகப்பிராவது இராகத்தை இன்காரு செய்கிற ஒரு ஓதும்காரியாவது எப்போதும் தன்னிச்சையாகப் பிரயாசையினால் ஹால்காட்டி ஆடுகின்ற ஒரு மூத்த கல்வியாவது அல்லது மறதியாளரான ஒரு கூட்டமாவது ஹாஸிராயிருப்பக்ஷத்தில் இவர்கள் தப்பான சிந்தனையின்பேரில் இராகம் கேட்பார்கள். அல்லது வீண்பேச்சில் பராக்காகுவார்கள். பலபக்கமும் நோக்குவார்கள். சங்கையோடும் கனதியோடும் இருக்கமாட்டார்கள். அல்லது அந்தச் சபையில் வாலிபர்கள் இருப்பதுடன் பெண்பிள்ளைகள் அங்குவந்து பார்த்துக்கொண்டிருப்பார்களாகில் இவர்கள் ஒருவரையொருவர் இச்சிப்பது நீங்காது. இப்படியாக இராகம் கேட்பது ஒன்றும் உபயோகப்படாது. இராகம் கேட்பதில் காலம், ஸ்தலம் ஜனம் இவை விதியாயிருக்கிறதென்று ஜுனைது றஹிமகுல்லா அவர்கள் சொல்லியிருப்பதற்குப் பொருள் இதுவேயாம். என்றாலும், இச்சைமேலிட்ட மறதியாளரான வாலிபர்களிருப்பதும் வாலிப ஸ்திரீகள் வேடிக்கைப்பார்க்க வருவதுமான ஓர் இடத்திலே உட்காருவது ஹராமாகும். ஏனென்றால், இந்த சமயத்தில் இராகம் கேட்பதானது இருபக்கத்தாலும் மோகாக்கினியை மூட்டிவிடும். இச்சையுடன் ஓர் இடத்தைப் பார்க்கிற ஒவ்வொருவரும் அதைத் தன் இருதயத்திலும் ஏற்றிக்கொள்ளக் கூடும். அது அநேகம் பாவங்களுக்கு விதையாய்ப்போகும். ஆதலால் இப்படியாக இராகம் கேட்பது ஒருபோதுங் கூடாது.

பின்னர் இராகம் கேட்க அருகராயிருப்பவர்கள் அதற்காக உட்காருவார்களாகில் அவர்கள் அனுசரிக்கவேண்டிய அதபுகளாவன:— எல்லாரும் தலைகுனிந்திருக்கவேண்டும். ஒருவரையொருவர் பார்க்கக் கூடாது. ஒவ்வொருவரும் முற்றாகத் தங்களை இராகத்தின் வசத்தில் ஆக்கிவிடவேண்டும். நடுவில் பேசக்கூடாது. தண்ணீர்குடிக்கக்கூடாது. பக்கங்களில் நோக்கக்கூடாது. கையையும் தலையையும் ஆட்டக்கூடாது. தங்கள் பிரயாசையினால் ஒரு அசைப்பும் அசைக்கக்கூடாது. மேலும் தொழுகையினுடைய தஷஹ்ஹுதில் இருப்பதுபோல் அதபுடன் உட்கார்ந்திருக்கவேண்டும். தங்கள் முழு மனதையும் ஹக்கு தஆலாவின் பக்கம் ஆக்கிக்கொள்ள வேண்டும். கையிலிருந்து என்ன வெளியாகிறதென்று எதிர்பார்த்துக்கொண்டிருக்கவேண்டும். தன்னிச்சையாய் எழும்பாமலும் ஆடாமலுமிருக்கும்படித் தங்களைக் காத்துக்கொள்ளவேண்டும். யாராவதொருவர் வஜ்துடைய மிகைப்பினால் எழும்பிவிட்டால் அவரோடு இணங்கித் தாங்களும் எழும்பவேண்டும். யாருக்காவது தலைப்பாகை கழண்டு விழுந்துபோனால் எல்லாரும் தங்கள் தலைப்பாகைகளைக் கையில் எடுத்துக்கொள்ளவேண்டும். இவைகளெல்லாம் பித்அத்தாயிருந்தபோதிலும் பித்அத்தாயிருப்பதெல்லாம் ஆகாதென்பதில்லை. அநேகம் பித்அத்து நன்மையாயிருக்கும். தராவீஹுத் தொழுகையில் இமாம் ஜமாஅத்தாகத் தொழுவது உமர் றலியல்லாகு அன்கு அவர்களுடைய ஏற்பாடாயிருக்கிறதென்றும், இந்த பித்அத்து நன்மையானதென்றும் ஷாபிஈ றஹிமகுல்லா அவர்கள் சொல்லுகிறார்கள். ஆகவே சுன்னத்துக்கு விரோதமாயிருக்கிற பித்அத்து எதுவோ அதுவே கெட்ட பித்அத்தாகும். ஆனால் நற்குணமும் ஜனங்களுடைய மனதைச் சந்தோஷப்படுத்துவதும் ஷரகில் புகழப்பட்ட அழகான காரியமாயிருக்கிறது. ஒவ்வொரு கூட்டத்துக்கும் ஒவ்வொரு வழக்கமுண்டு. அந்த வழக்கங்களில் அவர்களுக்கு விரோதம் செய்வது துர்க்குணமாகும். றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் "நீ ஜனங்களுடன் அவரவருடைய குணத்துக்கும் வழக்கத்துக்கும் தக்கபடி இணங்கி நடந்துகொள்" என்று திருவுளமாயிருக்கிறார்கள். தங்களோடு இணங்குவதில் இவர்கள் சந்தோஷப்படுகிறார்களாதலால் இணங்காதிருப்பதைப்பற்றி வெறுப்படைவார்கள். இவர்களோடு இணங்குவது சுன்னத்துகளில் ஒன்றாகும். அஸ்ஹாபுகள் றலியல்லாகு அன்கும் றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுக்கு எழுந்து நிற்பதில்லை. ஏனென்றால் அதை அவர்கள் வெறுத்திருந்ததினாலேயாம். என்றாலும் எந்த இடத்தில் எழுந்து நிற்காததைப்பற்றி வெறுப்படைகிற வழக்கமாயிருக்கிறதோ அந்த இடத்தில் அவர்களுடைய மனதைச் சந்தோஷப்படுத்துவதற்காக எழுந்து மரியாதை செய்வது ஏற்றமாகும். ஏனென்றால், அறபுகளின் வழக்கம் வேறாயும் அஜமிகளின் வழக்கம் வேறாயுமிருப்பதினாலென்க.

## ஒன்பதாவது அஸ்லு-நன்மையைக்கொண்டு ஏவுவது, தின்மையைவிட்டு விலக்குவது இவைகளுடைய அதபுகளின் பயான்.

(நன்மை தின்மைகளை உணர்த்திக் கண்டித்த லென்னும்) இக்கிரியையானது தீனுடைய வேர்களில்நின்றும் ஓர் வேராயிருக்கிறது. எல்லா நபிமார்களும் இதற்காகவே அனுப்பப்பட்டிருக்கிறார்கள். ஜனங்களின் நடுவே இது இல்லாமல் எடுபட்டுப்போனால் ஷரகுடைய எல்லாக் காரியங்களும் கெட்டுப்போம். நாம் இதனுடைய இல்மை மூன்று பாபுகளில் கூறுவோம்.

### முதலாவது பாபு-நன்மை தின்மைகளை உணர்த்தி ஏவல், விலக்கல் செய்வது வாஜிபென்பதின் பயான்.

அறிந்துகொள்:—நன்மையைச் செய்யும்படி ஏவுவதும் தீமையை விட்டுவிடும்படி விலக்குவதும் கிரியாயிருக்கிறது. அவசியமானபோது ஒருவன் யாதொரு காரணமின்றி அதை விட்டுவிடுவானாகில் பாவியாகுவான். "உங்களில் ஒருகூட்டம் (ஜனங்களை) நன்மையின் பக்கம் அழைப்பவர்களாயும், நற்கிரியைகளைச் செய்யும்படி (அவர்களை) ஏவுகிறவர்களாயும், துர்க்கிரியைகளை விட்டுவிடும்படி (அவர்களை) விலக்குகிறவர்களாயும் இருப்பது கடமை" என்று அல்லாகு தஆலா திருவுளமாகி ஆக்ஞாபிக்கின்றான். இந்த உத்தரவானது அது பர்லு என்பதின்பேரில் அறிவிக்கின்றது. எனினும் பர்லுகிபாயாவாகும். அதாவது:—சில ஜனங்கள் அக்காரியத்தில் முயற்சியாயிருந்தால் போதும். எவருமே அதில் முயற்சிக்காதிருந்தால் எல்லா ஜனங்களும் பாவிகளாவார்கள். (நன்மை தீமைகளை உணர்த்தி ஏவல், விலக்கல் செய்வதென்னும்) இக்காரியத்தை அல்லாகு தஆலா தொழுகையோடும் ஸகாத்தோடும் சேர்த்துக் கூறி அதனால் தீனவர்களைப் புகழ்ந்திருக்கிறான். அதாவதுமாது:—"பூமியில் இடம் தந்தால் தொழுகையை நிலைப்படுத்துகிறவர்களாயும் ஸகாத்தைக் கொடுப்பவர்களாயும் நன்மை தின்மைகளை உணர்த்தி ஏவல் விலக்கல் செய்பவர்களாயும் இருப்பவர்கள் எவர்களோ (அவர்களுக்கு அல்லாகு தஆலா திடனாக உதவி புரிகின்றான்) என்று அருளிச்செய்திருக்கிறான்" என்பதே.

அன்றியும் றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் "நீங்கள் நன்மைகளை உணர்த்தி ஏவுங்கள்" என்றும், "இல்லாவிட்டால் அல்லாகு தஆலா உங்களில் மிகப் பொல்லாதவர்களை உங்கள்மேல் சாட்டுவான்" என்றும், "அப்போது உங்களில் மிக நல்லவர்கள் துஆ செய்தால் அது கபூல் செய்யப்படாது" என்றும் திருவுள



மாயிருக்கிறார்கள். இன்னும் "ஒருகூட்டத்தின் நடுவே பாவம் நடந்துவர அவர்களில் ஒருவரும் அதை இன்காறு செய்யாமலிருந்தால் சமீபகாலத்தில் அவர்களெல்லாரையும் வந்து வளைந்துக்கொள்ளுகிற ஒரு அதாபை அல்லாகுதஆலா அனுப்புவான்" என்றும், "இப்படியான கூட்டங்களில் அதாபு அனுப்பப்படாத கூட்டம் எதுவுமிராது" என்றும் றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமானதாக அபூபக்கர் சித்தீகு றழியல்லாகு அன்கு அவர்கள் ரிவாயத்து செய்கிறார்கள். இன்னும் பிசபீல் யுத்தத்துக்கு எதிரில் எல்லா நன்மைகளும் நெடிய கடலில் ஒருநீர்த்துளிக்கு நிகராயிருக்கிறது" என்றும், "நன்மை தீமைகளை உணர்த்தி ஏவல் விலக்கல் செய்வதற்கு எதிரில் பிசபீல் யுத்தமானது பெருங்கடலில் ஓர் புனற்றுளிபோல் ஆகும்" என்றும் திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும் "மனிதன் நன்மை தீமைகளை உணர்த்தி ஏவல் விலக்கல் செய்வதும் ஹக்குதஆலாவுடைய திக்ரும் தவிர மற்றும் அவன் பேசுகிற ஒவ்வொரு பேச்சும் அவனுக்கு நஷ்டங்கொடுக்கும்" என்றும் திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும் "அவாமென்னும் சாமானிய ஜனங்களின் பொருட்டால் கவாஸ்ஸென்னும் சிறந்த ஜனங்களில்நின்றும் பாவமில்லாதவர்களை அல்லாகு தஆலா அதாபு செய்யமாட்டான்" என்றும், "ஆனால் அவர்கள் பாவமான வேலைகளைக் கண்டு அவைகளை விலக்கச் சக்தியுள்ளவர்களாயிருந்து விலக்காமல் மவுனமாயிருப்பார்களாகில் அதற்காக அவர்கள் அதாபு செய்யப்படுவார்கள்" என்றும் திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும் "ஒருவனை அநியாயமாகக் கொலைசெய்கிற அல்லது அடிக்கிற இடத்தில் நிற்காதீர்கள்" என்றும், "விலக்க சக்தியுள்ளவன் விலக்காமல் பார்த்துக்கொண்டிருந்தால் அவன்மேல் லஃனத்து இறங்குகிறது" என்றும் திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும் "துர்க்கிரியை நடக்கிற ஓர் இடத்தில் உட்காருவதும் அதைப்பற்றிக் கண்டித்து உணர்த்தாமலிருப்பதும் கூடாது" என்றும், "அப்படிக் கண்டித்து உணர்த்துவதால் அவனுடைய தலையும் போய்விடாது இரணமும் குறைந்துவிடாது" என்றும் திருவுளமாயிருக்கிறார்கள்.

இந்த ஹதீஸானது அக்கிரமக்காரர்களுடைய வீட்டுக்கும் யாதொரு பாவமான காரியமுண்டாயிருந்து அதை விலக்கச் சக்தியில்லாத ஓர் இடத்துக்கும் யாதொரு அவசியமின்றிப் போவதுகூடாது என்பதின்பேரில் அத்தாட்சியாயிருக்கிறது. இதனாலேதான் ஸலபுகளான அநேகம் முன்னோர்கள் ஏகாந்தியாய்த் தனிப்பதை எடுத்துக்கொண்டார்கள். ஏனென்றால், கடைவீதிகளும் வழிகளும் பாவமான

காரியங்களைவிட்டும் ஒழிந்திருக்க அவர்கள் காரணமையினாலேயாம். இன்னும் "ஒருவனுக்கு எதிரில் ஒரு பாவமான காரியம் நடந்து அவன் அதைப்பற்றி வெறுப்படைந்திருப்பானாகில் அவன் அங்கு இல்லாதவன்போலாகுவான்" என்றும், "ஒருவன் இல்லாத இடத்தில் ஒருபாவம் நடந்து அதை அவன் பொருந்திக்கொள்ளுவானாகில் அது அவன் முன்னிலையில் நடந்த பாவம்போலாகும்" என்றும் றசூல் சல்லல்லாகு அலைஹிவசல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும் "ஹவாரிய்யூன்களென்னும் அஸ்ஹாபுகளில்லாத றசூல்ஒருவருமிருந்ததில்லை" என்றும், "அந்த றசூலுக்குப் பிறகு அந்த அஸ்ஹாபுகள் அல்லாகுதஆலாஉடைய கிதாபின்படிக்கும் அந்த றசூலுடைய சுன்னத்தின்படிக்கும் அமல்செய்து வந்தார்கள்" என்றும், "அவர்களுக்குப் பிறகு சில சில ஜனங்கள் உண்டானார்கள்" என்றும், "அவர்கள் மிம்பர்களின் மீதேறி நல்ல நசீஹத்தான பேச்சுகளைப் பிரசங்கிக்கிறவர்களாயும் துர்க்கிருத்தியங்களைச் செய்கிறவர்களாயு மிருந்தார்கள்" என்றும், "அப்படிப்பட்ட ஜனங்களோடு கையினாலாவது, கையினால் இயலாமற்போனால் நாவினாலாவது, நாவினால் இயலாமற்போனால் மனதினாலாவது போர்புரிவது ஒவ்வொரு மூமின்பேரிலும் ஹக்காயும் பர்லாயுமிருக்கிறது" என்றும், "இதுவுமில்லாமற்போனால் இஸ்லாமே இல்லை" என்றும் றசூல்சல்லல்லாகு அலைஹிவசல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும் "அல்லாகுதஆலா ஒரு பட்டணத்தை எடுத்துக் கவிழ்த்துவிடும்படி ஒரு மலக்குக்கு உத்திரவு செய்தான்" என்றும், அந்த மலக்கானவர் "யாறப்பு! இன்னான் அந்தப் பட்டணத்தில் இருக்கிறான், அவன் ஒரிமைப்பொழுதும் பாவஞ்செய்யவில்லை, நான் எப்படிக் கவிழ்ப்பேன்?" என்றுசொன்னாரென்றும், அதற்குஅல்லாகுதஆலா அந்த மலக்கை நோக்கி "கவிழ்த்துவிடு, அவன் அன்னியருடைய பாவத்தைக் கண்டு அதன்மேல் கொஞ்சநேரமாவது முகத்தைச் சுழிக்கவில்லை" என்று உத்திரவு செய்தான்" என்றும் திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும் "நபிமார்களுடைய அமல்களுக்கொப்பான அமலையுடையவர்களான பதினெண்ணாயிரம்பேர் இருந்த ஓர் பட்டணத்து ஜனங்கள்மேல் அல்லாகுதஆலா அதாபை அனுப்பினான்" என்று றசூல் சல்லல்லாகு அலைஹிவசல்லமவர்கள் திருவுளமாக, அஸ்ஹாபுகள் "அது ஏன்? யாறசூலல்லா!" என்று வினவ, நாயகமவர்கள் "அந்த மனிதர்கள் அன்னியர்மேல் அல்லாவுக்காகக் கோபிக்காததினாலும் அவர்களைக் கண்டித்து உணர்த்தாததினாலும்" என்று அருளிச்செய்ததாய் ஆயிஷா றலியல்லாகு அன்ஹா அவர்கள் ரிவாயத்து செய்திருக்கிறார்கள். இன்னும்



"ஷஹீதுகளைக்காண அதிக வரிசையுடையவர் யார்?" என்று றசூல் சல்லல்லாகு அலைஹிவசல்லமவர்களிடத்தில் ஜனங்கள் கேட்டதாகவும், அதற்கு நாயகமவர்கள் "கொடுங்கோலனுடைய சுல்தானைக் கண்டித்துத் தன்னை அவன் கொல்லுகிறவரையில் அவனுக்கு நஸீஹத்து செய்கிறவன் எவனோ அவனே அதிக வரிசையுடையவன்" என்றும், "அவன் கொல்லாமற்போனால் வேறு வான் இவனுக்குமேற் செல்லாது" என்றும், "அவன் அதிக வயதை அடைந்தாலும் சரி" என்றும் அருளிச்செய்ததாய் அபூஉபைதத்துப்னுல் ஜர்றாஹறலியல்லாகு அன்கு அவர்கள் சொல்லுகிறார்கள். இன்னும் ஹதீசில்வந்திருக்கிறதாவது:—"அல்லாகுதஆலா யூஷகுப்னுநூன் அலைஹிஸ்ஸலாமவர்களுக்கு வஹிமூலமாக "நான் உன்னுடைய கூட்டத்தில் நூறாயிரம்பேர்களை ஹலாக்கு செய்யப்போகிறேன். அவர்களில் நாற்பதினாயிரம்பேர் நல்லவர்களாயும் அறுபதினாயிரம்பேர் கெட்டவர்களாயும் இருக்கிறார்கள்" என்று அறிவித்தான். அதற்கவர்கள் "என் ஆண்டவனே! நல்லவர்களை ஏன் ஹலாக்கு செய்கிறாய்?" என்று கேட்டார்கள். அதற்கு அல்லாகுதஆலா "கெட்டவர்களுடன் அவர்கள் பகை செய்யாமலும் அவர்களுடைய உண்ணல், உட்காரல், எழும்பல் அவர்களுடன் முஆமலா செய்தல் இவைகளைவிட்டுப் பேணாமலும் இருந்ததினால்" என்று அருளிச்செய்தான்" என்பதே.

## இரண்டாவது பாபு-நன்மைதீமைகளை உணர்த்தி ஏவல் விலக்கல் செய்வதற்கு வேண்டிய விதிகளின் பயான்.

அறிந்துகொள்:—ஜனங்களுக்கு நன்மை தீமைகளை உணர்த்திக் கண்டித்து ஏவல் விலக்கல் செய்வது எல்லா முஸ்லீம்களின்பேரிலும் வாஜிபாயிருக்கிறது. ஆகலால் அதன் தன்மையும் ஷரத்தையும் அறிவது கடமையாகும். ஏனென்றால் அந்த பர்லான காரியத்தின் ஷரத்துகளை அறியவில்லையோ அந்த பர்லை நிறைவேற்றுவது அசாத்தியமாதலாலென்க. இனி நன்மை தீமைகளை உணர்த்தி ஏவல் விலக்கல் செய்வதென்னும் இக்காரியத்துக்கு நான்கு பிரிவுகள் உண்டு. அவற்றுள் ஒன்று உணர்த்துகிறவனும், மற்றொன்று உணர்த்தப்படுகிறவனும், மற்றொன்று உணர்த்தப்படுங் காரியமும், மற்றொன்று உணர்த்துவதெப்படி என்பதுமாம்.

முதலாவது ருக்னு:—உணர்த்துகிறவனும். இவன் முஸ்லிமாயும் ஆகில் பாலிகான முகல்லபாயும் இருப்பதுமாத்திரமே ஷரத்தாகும். இதற்குமேல் யாதொரு ஷரத்தில்லை. ஏனென்றால், நன்மைதீமைகளைப் பற்றிஉணர்த்துவதென்பது தீனுடையஹக்கைநிறைவேற்றுவதாயிருக்

றது. இவை உடையவனாயிருப்பவன் எவனோ அவன் அதற்கு அரு கனையாகுவான். நீதிமானும் நல்லோருடைய சந்திரவு பெற்றவனும் இருப்பது ஷர்த்தா? அல்லவா? என்பதில் உலமாக்களுக்குள் விகற்பமிருக்கிறது. அது ஷர்த்தல்லவென்பதே நம்மிடத்தில்சரி. நீதியும் பாவமின்மையான சத்தனும் அதற்கு எப்படி ஷர்த்தாகும்? ஒரு பாவமுமில்லாமல் சுத்தமாயிருப்பவனே உணர்த்தவேண்டுமென்றால், அப்போது உணர்த்துவதென்னும் வேலை ஒருபோதும் நடக்காது. ஏனென்றால் எந்தப்பாவமு மில்லாதபடி காவல்பெற்றவன் எவனுமிருக்கமாட்டான். சயீதுபுனு ஜுபைர் றழியல்லாகு அன்கு அவர்கள் "நான் எந்தப்பாவமும் செய்யாமலிருந்தே மற்றவருக்கு நஸீஹத்து செய்யவேண்டுமென்றால் ஒருபோதும் நான் நஸீஹத்து செய்யமாட்டேன்" என்று சொல்லுகிறார்கள். இன்னும் நீங்கள் குற்றங்களைவிட்டும் நன்றாக உங்களைச் சுத்தம் செய்துகொள்வதற்கு முன் மற்றவருக்கு நஸீஹத்து செய்யவேண்டாம் என்று யாரோ ஒருவர் சொல்லுகிறதாக ஹஸன்பசரீ றழிமகுல்லா அவர்களிடத்தில் அறிவித்தார்கள். அப்போது ஹஸன்பசரீ றழிமகுல்லா அவர்கள் "நஸீஹத்து என்னும் வாசல் அடைபட்டுப் போகும்படி ஷைத்தான் இந்தப் பேச்சையே மனதுக்கு அழகாக்கிவைக்க ஆசித்திருக்கிறான்" என்று சொன்னார்கள்.

இந்த மஸ்அலாவில் நீதியாகிறது:—ஒருவன் நன்மை தீமைகளை உணர்த்தி ஏவல் விலக்கல் செய்வது இருவகைப்படுமென்பதை நீ அறியவேண்டும். முதலாவது வகை:—நஸீஹத்தினாலும் நற்போதகங்களினாலும் உணர்த்துவதாம். தான் ஒரு காரியத்தைச் செய்கிறவனாயிருந்துகொண்டு அதைச் செய்யவேண்டாமென்று மற்றவருக்கு நஸீஹத்து சொன்னால் ஜனங்கள் அவன்மேல் நகைப்பார்களேயன்றி அந்த நஸீஹத்து ஒரு பயனையுந் தராது. அவனுடைய நற்போதகம் ஒரு குணப்பாட்டையுங் கொடாது. ஆதலால் இந்த உணர்த்தல் பாவியானவனுக்கு அழகல்ல. மேலும் தன்னுடைய நஸீஹத்தை ஜனங்கள் கேட்கமாட்டார்களே என்றும் தன்பேரில் நகைப்பார்கள் என்றும் அவன் அறிந்து நஸீஹத்து செய்யானாகில் குற்றவாளியாகவுங் கூடும். ஏனென்றால், அதில் நஸீஹத்துடைய மதிப்பும் ஷரருடைய கண்ணியமும் ஜனங்களுடைய பார்வையிலிருந்து பாத்திலாய்ப்போம். அதற்கு மதிப்பில்லை. பாவிகளென்னும் வெளியாகிய ஆலிம்களுடைய நஸீஹத்து ஜனங்களுக்கு நஷ்டம் கொடுப்பதாயிருப்பதும், அதனால் அவர்கள் பாவிகளாகுவதும் இது காரணத்



தினாலேயாம். இன்னும் இதுகாரணத்தினாலேயே றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் தங்கள் திருவாயினால் "என்னை மிஃறாஜுக்குக் கொண்டுபோன இரவில் ஒருகூட்டத்தைப் பார்த்தேன்" என்றும், "அவர்களுடைய உதடுகளை நெருப்புக்கத்தரியால் கறித்துக்கொண்டிருக்கிறார்கள்" என்றும், "நீங்கள் யார்?" என்று அவர்களைக் கேட்டதற்கு, "நாங்கள், தாம் செய்யாத நன்மையை மற்றவருக்கு ஏவிக்கொண்டும், தாம் விடாத பாவத்தை மற்றவர் விட்டுவிடும்படி விலக்கிக்கொண்டுமிருந்தோம்" என்று அவர்கள் சொன்னதாகவும் அருளிச்செய் திருக்கிறார்கள். இன்னும் ஈஸா அலைகிஸ்ஸலா மவர்களுக்கு வஹி மூலமாக "ஓ மர்யமுடைய மகனே! நீ முதலில் உனக்கு நஸீஹத்து செய். அதை உன் மனம் ஒப்புக்கொண்டால் பின்பு மற்றவர்களுக்கு நஸீஹத்துசெய். இல்லாவிட்டால் எனக்கு நாணம்வை" என்று அறிவிக்கப்பட்டது. இரண்டாவது வகை:—கையினாலும் உக்கிர கோபத்தினாலும் உணர்த்துவதாம். உதாரணமாக:—சாராயத்தைக் கண்டால் அதைக் கொட்டிவிடுவான். தம்பூர், வீணை முதலிய வாத்திய சத்தம் காதில் விழுந்தால் அவைகளை உடைத்துப் போடுவான். ஒருவன் ஒரு கெடுதியைச்செய்ய எத்தனிப்பானாகில், உக்கிரகோபங் காட்டி. அதைவிட்டு அவனை விலக்குவான். இது பாவியாயிருப்பவனுக்கும் ஆகும். ஏனென்றால் ஒவ்வொருவருக்கும் இரண்டு காரியம் கடமையாகும். அவை தான் செய்யாமலிருப்பது ஒன்றும், பிறரைச் செய்யவிடாமலிருப்பது மற்றொன்றுமாம். இவ்விரண்டில் ஒன்றை விட்டுவிட்டால் மற்றொன்றையும் ஏன் விடவேண்டும்? ஆனால் பட்டுடை அணிந்திருக்கிற ஒருவன் மற்றொருவனுடைய தலையிலிருந்து அதைக் கழட்டிப்போடுவதும், சாராயம்குடிக்கிற ஒருவன் மற்றவருடைய சாராயத்தைக் கொட்டிவிடுவதும் பழிப்பாகும் என்று யாராவது சொல்லும்பக்ஷத்தில், அதற்கு ஜவாபாவது:—பழிப்பு என்பதுவேறு; ஆகாமியம் என்பது வேறு. இது பழிப்பென்றது எதனாலென்றால், மிக முக்கியமானதை அவன் விட்டுவிட்டதினாலேயாம். ஆகாத வேலையைச் செய்தானென்றல்ல. தொழுதுகொள்ளாத ஒருவன் நோன்பு வைத்தால் மிக முக்கியமானதை அவன் விட்டுவிட்டதினால் பழிப்பாகும். நோன்பு வைப்பது ஆகாதென்பதினால் அல்ல. தொழுகையானது நோன்பைக்காட்டிலும் மிக முக்கியமானதா யிருக்கிறது. இதுபோலவே ஒருவேலையைப் பிறருக்கு ஏவுவதைக் காட்டிலும் தான் செய்வது மிக முக்கியமானதா யிருக்கிறது. என்கிலும் (தான் செய்வதும் பிறருக்கு ஏவுவதும்) இரண்டும் வாஜிபேயாம். ஒன்

றுக்கு மற்றொன்று ஷரத்தல்ல. ஏனென்றால்; இப்படி ஷரத்திடுவதானது தான் குடிக்காமலிருந்தால் மற்றவரைக் குடியிலிருந்து விலக்குவது வாஜிபென்றும், தான் குடித்தால் மற்றவரை விலக்குவது வாஜிபாகாதென்றும் சொல்லும்படி இழுத்துவிடும். இதுவோ கூடாத காரியம்.

இனி உணர்த்தும் வேலைக்கு மற்றொரு ஷரத்தாக சொல்லப்பட்டுள்ளது சுல்தானுடைய அநுமதியும் அதிகாரப்பத்திரமும் பெறுவதாம். இதுவும் ஷரத்தல்ல. ஏனென்றால் முன்னோரான பெரியோர்கள் தாங்களே கோபில் சுல்தான்களுக்கும் கலீபாக்களுக்கும் நன்மை தீமைகளை உணர்த்தி நஸீஹத்து செய்திருக்கிறார்கள். அந்த ஹிகாயத்துகளை பாஹதினால் விரிவாகும். உணர்த்தும் வேலையினுடைய வகுப்புகளை நீ தெரிந்துகொள்வதினால் இந்த மஸ்அலாவின் உண்மை விளங்கும். உணர்த்தும் வேலை நான்கு வகுப்பாகும். முதலாவது வகுப்பு:— நஸீஹத்து செய்வதும், அல்லாஹுதஆலாவைப்பற்றி அச்சம் மூட்டுவதுமாம். இதுவோ எல்லா முஃமின்கள்பேரிலும் வாஜிபாயிருக்கிறது. இதற்கு அதிகார பத்திரம் ஏன் அவசியமாகும்? மேலும் சுல்தானுக்கே நஸீஹத்து செய்து அவனுக்கு அல்லாஹுதஆலாவைப்பற்றி அச்சமூட்டுவது மிக மேலான இபாதத்தா யிருக்கிறது. இரண்டாவது வகுப்பு:— உறைப்பான வார்த்தையினால் கண்டித்து உணர்த்துவதாம். எதுபோலெனில், அடே பாவியே! அடே அநியாயக்கார! அடே மூடா! அடே அறிவு கெட்டவனே! நீ இப்படிச் செய்வதைப்பற்றி அல்லாஹுதஆலாவுக்குப் பயப்படமாட்டாயா? என்று சொல்லுவதுபோலவாம். இந்த வார்த்தைகளெல்லாம் பாவியின் விஷயத்தில் பொருந்துவதாயும் தருமமானதாயுமிருக்கிறது. உற்ற வார்த்தையைச் சொல்வதற்கு ஒரு உத்தரவும் தேவையாகாது. மூன்றாவது வகுப்பு:— கைகளினால் விலக்குவதாம். அதாவது:— சாராயத்தைக் கொட்டிவிடுவதும், தம்பூர் வீணைகளை உடைத்துவிடுவதும், பட்டுத் தலைப்பாகையை அவன் தலையிலிருந்து எடுத்துப் போடுவதுமாம். இதுவும் இபாதத்துகள்போல் வாஜிபாயிருக்கிறது. எவன் மூமினாயிருக்கிறானோ அவனுக்கு சுல்தானுடைய உத்தரவு வேண்டுமென்ற விதியில்லாமலே ஷரஉனது அவனுக்கு இந்த அதிகாரத்தைக் கொடுத்திருக்கிறதென்று முதலாவது பாபில் நாம் நியாயத்து செய்திருப்பது அறிவிக்கின்றது. நாலாவது வகுப்பு:— அடிப்பதும் அடிப்பேனென்று அச்சம் காட்டுவதுமாம். இதில் ஒருசமயம் அந்த ஜனங்கள் இவனை எதிர்க்கவும் அப்போது இவனுக்கு உதவிசெய்யும்படி திரித்தும் இவன்



தன் ஜனங்களைக் கும்பல் சேர்க்கவும் சம்பவிக்கும். சுல்தானுடைய உத்தரவில்லாமலிருந்தால் இது கலகத்தில் இழுத்துவிடவும் கூடும். ஆதலால் இது சுல்தானுடைய உத்தரவின்பேரி லிருப்பது மிக உத்தமமாகும். இனி உணர்த்தலுடைய வகுப்புகள் (அவரவருடைய அந்தஸ்துக்குத் தக்கபடி) மாறுவது ஆச்சரியமல்ல. ஏனென்றால், மகனானவன் தகப்பனுக்கு உணர்த்துவானாகில் மிருதுவாக நஸீஹத்து செய்வதற்குமேல் வேறொன்றும் கூடாது. "நீங்கள் தகப்பனுக்கு நஸீஹத்து செய்யுங்கள்" என்றும், "அவன் கோபப்படுவானாகில் சும்மாயிருங்கள்" என்றும் ஹசன்பசரி றஹிமஹுல்லா அவர்கள் சொல்லுகிறார்கள். ஆனால் தகப்பனை அஹ்மகு என்பதும் ஜாஹில் என்பதும் இன்னுமிதுபோன்ற கடினமான வார்த்தைகளைச் சொல்வதும் அவனைத் தன்மீது வருத்தமுறச் செய்வதும் ஒருபோதும் கூடாது. தகப்பன் காபிரா இருந்தாலும் அவனைக் கொல்வதும் ஹத்தடிப்பதும் மகனுக்குக் கூடாது; அந்த மகன் கொலைசெய்யவும் ஹத்தடிக்கவும் குறிக்கப்பட்ட வேலைக்காரனா யிருந்தாலும் சரியே. ஆனால் சாராயத்தைக் கொட்டிவிடுவதற்கும், பட்டுடையை அவனில் நின்றும் அப்புறப்படுத்துவதற்கும், ஹராமான விதமாய் அவன் அடையும் பொருளை உடையவரிடத்தில் செலுத்தி விடுவதற்கும், வெள்ளிக் கூஜாவை உடைத்துப் போடுவதற்கும், சுவற்றில் எழுதியிருக்கிற ரூபமான சித்திரத்தை அழித்துவிடுவதற்கும் இன்னுமிவைபோன்ற வேலைகளைச் செய்வதற்கும் அந்த மகனுக்குச் சக்தியிருந்தால் அவன் அப்படிச் செய்வது ஆகுமென்பதே வெளிப்படையாயிருக்கிறது; அதனால் தகப்பன் கோபப்படுகிறதா யிருந்தாலும் சரியே. ஏனென்றால், இவைகளைச் செய்வது ஞாயமாயும் தகப்பனுடைய கோபம் ஞாயமல்லாததாயும் இருக்கிறது. அன்றியும், இது அடிப்பதும் திட்டுவதும்போல் தகப்பனுடைய நபுசில் செய்யப்படுகிற நடவடிக்கையல்ல. ஆயினும் தகப்பன் கோபப்படுகிறதா யிருந்தால் அவனுக்கு நஸீஹத்து செய்வதைவிட்டும் சும்மாயிருங்கள் என்று அசன்பசரீ றஹிமஹுல்லா அவர்கள் சொல்லுகிறதுபோல் தகப்பன் அதிக வருத்தப்படுகிறபக்ஷம் மகன் இப்படிச் செய்யக்கூடாதென்று யாராவது சொல்லவும் இடமிருக்கிறது. இன்னுமறிந்துகொள்:— அடிமையானவன் தன் எஜமானனுக்கும், பெண்ஜாதியானவள் தன் புருஷனுக்கும், பிரஜைகள் தங்கள் அரசனுக்கும் உணர்த்துகிற விஷயமானது தகப்பனுக்கு மகன் உணர்த்துவதுபோலவேயாம். ஏனென்றால் இவர்களெல்லாருடைய ஹக்குகள் மிக முக்கியமானவை

களாயும் பெரியவைகளாயு மிருக்கின்றன. ஆனால் உஸ்தாதுக்கு ஷாகிர்து உணர்த்துவது மிகவெளிதேயாம். ஏனென்றால் உஸ்தாதுடைய இந்த சங்கையானது நீனுக்காக மாத்திரமேயாம். இவ்விடத்தில் படித்த இல்மின்படி அவன் நடவடிக்கை நடத்தினால் அது அசாத்தியமாகாது (சாதாரணமேயாம்). மேலும் ஒரு ஆலிமானவன் தன்னுடைய இல்மின்படி அமல் செய்யாமற்போனால் அவன் தன் பெருமையைத் தானே தாழ்த்திக்கொண்டவனாகுவான்.

இரண்டாவது ருகுனு:—உணர்த்தப்படும் காரியமாம். அறிந்துகோள்:—எந்தக்காரியம் ஷரகில் ஆகாததாயும் அப்போது நடக்கிறதாயும் உணர்த்துகிறவன் தேடிப்பிடிப்பதன்றியே தெரிந்துகொண்டதாயும் அது ஆகாதென்று, அற்ப சந்தேகமு மில்லாமல் அவன் அறிந்ததாயு மிருக்கிறதோ அந்தக் காரியத்தில் உணர்த்துவதுதான் ஆகும். ஆதலால் இதற்கு நாலு ஷர்த்துகள் உண்டென்று தெரியலாகும். முதலாவது ஷர்த்து:—ஆகாத காரியமாயிருப்பதாம். அது பெரும்பாவமா யில்லாமற்போனாலும் சிறு பாவமா யிருந்தாலும் சரியே. ஒரு பயித்தியக்காரனாவது சிறுவனாவது மிருகத்துடன் புணர்ந்துகொண்டிருப்பதைக் கண்டால் அவர்களை விலக்குவதுவேண்டும். அவர்கள்பேரில் மார்க்கவிதி விலக்குகள் ஏற்படாத நிமித்தம் அந்தச் செயலைப் பாவமென்று சொல்லப் பாங்கில்லையானாலும் சரியே. என்கிலும் இது தன்னிலேயே ஷரகில் ஆகாத அசங்கிதமான செயலாயிருக்கிறது. ஒரு பயித்தியக்காரன் சாராயம் குடிப்பதைக் கண்டால் அல்லது ஒரு சிறுவன் ஒருவருடைய பொருளைச் சேதப்படுத்துவதைக் கண்டால் அப்போதும் அவர்களை விலக்கவேண்டும். எதுவொன்று பாவமாயிருக்கிறதோ அது சிறுபாவமாயிருந்தாலும்சரியே, அதைப்பற்றிக் கண்டித்து உணர்த்தவேண்டும். உதாரணமாக:—தன் வீர்புரையில் அம்மணமாகுவது, பின்னாலிருந்து பெண்பிள்ளைகளைப் பார்ப்பது, ஒழிந்தவிடத்தில் அவர்களோடு தனித்துநிற்பது, பொன் மோதிரம் தரிப்பது, பட்டாடை அணிவது, வெள்ளிக்கூஜாவினால் தண்ணீர் குடிப்பது இவ்வுமிவைபோன்ற சிறுபாவங்கள் எல்லாவற்றையும் உணர்த்தி விலக்கவேண்டும். இரண்டாவது ஷர்த்து:—பாவம் அப்போது நடந்துகொண் டிருப்பதாம். ஒருவன் சாராயம் குடித்து ஒழிந்தால் அதன்பிறகு அவனுக்கு நஸீஹத்து செய்வதுமாத்திரமேயன்றி மற்றப்படி அவனை இம்சைப்படுத்துவதுகூடாது. ஆனால் ஹத்தடிப்பது அதிகாரிக்கு உரித்தேயன்றி மற்றவருக்கு உரித்தல்ல. இதுபோலவே ஒருவன் இன்றிரவில் சாராயம் குடிக்கவேண்டுமென்று



எத்தனம் செய்தால் அவனுக்கும் நஸீஹத்து செய்யவேண்டுமேயொழிய அவனை இம்சைப்படுத்தக்கூடாது, ஏனென்றால் ஒருசமயம் அவன் குடிக்காமலிருக்கவும் கூடும். நான் குடிக்கமாட்டேன் என்று அவன் சொன்னால் அதை நம்பவேண்டும். அவன்மேல் கெட்ட எண்ணம் கொள்ளக்கூடாது. என்கிலும், ஒழிந்தவிடத்தில் ஒரு பெண்பிள்ளையுடன் தனித்து உட்காருவானேயானால் அவர்களைக் கண்டித்து உணர்த்துவது ஆகும்; ஏனென்றால் அவர்கள் கைகலக்காமலிருக்கவேயாம். அன்றியும் பெண்பிள்ளையுடன் தனிப்பதே பாவமாயிருப்பதினாலேயாம். மேலும் பெண்பிள்ளைகள் குளிக்கிற ஜாகையிலிருந்து வெளியே வரும்போது அவர்களைப் பார்ப்பதற்காக ஒருவன் அந்த ஜாகையின் வாசல்வழியோரமாய் நிற்பானாகில் அவனையும் கண்டித்து உணர்த்தவேண்டும். ஏனென்றால் இப்படி நிற்பது பாவமாயிருப்பதினாலேயாம். மூன்றாவது ஷர்த்து:—உணர்த்துகிறவன் தேடிப்பிடிப்பதின்றி பாவம் தன்னால் வெளியாகுவதாம். தேடிப்பிடிப்பதுகூடாது. ஒருவன் தன்வீட்டுக்குட்சென்று கதவை அடைத்துக்கொண்டால் அவனுடைய உத்தரவில்லாமல் வீட்டுக்குள் நுழைவதும், அவன் என்ன செய்கிறான் என்று தேடிப்பார்ப்பதும்கூடாது. வாசற்படியிலிருந்தும் மேல்மாடியிலிருந்தும் காதை வைத்து சப்தத்தை உற்றுக்கேட்பதும், அதைப்பற்றி உணர்த்துவதும் கூடாது. மேலும் அல்லாகு தஆலா எதை மறைத்திருக்கிறானோ அதை மறைத்தே வைக்கவேண்டும். ஆனால் தம்பூர் சப்தமும் குடி வெறியினால் கத்துகிறவனுடைய சப்தமும் வெளியே வருகிறபக்ஷம் அப்போது உத்தரவின்றி உள்ளே பிரவேசிப்பதும் கண்டித்து உணர்த்துவதும் ஆகும். ஒரு பாவியானவன் ஒரு வஸ்துவைத் துணியில் மறைத்து எடுத்துக்கொண்டுபோனால் அது சாராயமா யிருக்கவும் கூடும். என்றாலும் அதைக்காட்டு அது என்னவென்பதை நான் பார்க்கிறேனென்று சொல்வதுகூடாது. ஏனென்றால் இது தேடிப் பிடிப்பதாகும். அன்றியும் அது சாராயமல்லாமல் வேறு வஸ்துவாயு மிருக்கலாமாதலால் அதைப் பார்க்காத ஒரு பொருளாகப் பாவித்துக்கொள்ளவேண்டும். ஆனால் சாராய வாசனை வந்தால் அதைக் கொட்டிவிடுவது ஆகும். ஒருவன் ஒரு கின்னரத்தை மறைத்து வைத்துக்கொண் டிருக்கிறான். அது பெரிதாயும் பிடவை மெல்லியதாயு மிருப்பதுபற்றி அதன் ரூபம் தெரியக்கூடியதாயிருந்தால் அப்போது அதை உடைப்பது ஆகும். அது வேறு வஸ்துவா யிருக்கக் கூடுமானால் பார்க்காத பொருளாகப் பாவித்துக் கொள்ளவேண்டும். உமர் றழியல்லாகு அன்கு அவர்கள் ஒரு வீட்டின்

மேலால் ஏறி உள்ளே பிரவேசித்ததும் அங்கு ஒருவன் ஒருபெண் பிள்ளையுடன் சாராயம் குடித்துக்கொண்டிருந்ததை அவர்கள் கண்டதுமான ஒரு கிஸ்ஸா சக்வாசத்துடைய ஹக்குகளைக் கூறும் பாபில் கொண்டுவந்திருப்பது தெரிந்ததா யிருக்கிறது. இன்னும் ஒருநாள் உமர்றலியல்லாகு அன்கு அவர்கள் மிம்பரின் மீதிருந்து அஸ்ஹாபுகளை நோக்கி, "இமாமாகிய அதிகாரி நேரே தன்கண்ணுல் ஒரு பாவத்தைக் கண்டால் அதற்கு ஹத்து செய்வது ஆகுமா? ஆகாதா? இது விஷயத்தில் நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?" என்று ஆலோசனை கேட்டார்கள். அதற்குச் சிலர் "ஆகும்" என்று அறிக்கையிட்டார்கள். அப்போது அலிறலியல்லாகு அன்கு அவர்கள் "இது காரியத்துக்கு அல்லாகுதஆலா இரண்டு சாக்ஷிகள் வேண்டுமென்று ஆக்கியாபித்திருக்கிறுன்" என்றும், "ஒரு சாக்ஷி போதாது" என்றும், "தான் அறிந்ததைக்கொண்டு நடவடிக்கை நடத்தலாம் என்று அல்லாகுதஆலா அருளவில்லை" என்றும், "மறைப்பதை அவன் வாஜிபாக்கி யிருக்கிறுன்" என்றும் சொன்னார்கள். நாலாவது ஷர்த்து:— அந்தக் காரியங்கள் ஆகாதவைகள் என்று உண்மையில் தெரிந்திருக்க வேண்டும். சந்தேகத்திலும் (அபிப்பிராய பேதத்தினுல் மதுஹபுகளில் ஏற்பட்டுள்ள) இஜ்திஹாதியான காரியங்களிலும் உணர்த்துவது கூடாது. ஆகவே ஹனபி மதுஹபைச் சேர்ந்த ஒருவன் வலியில்லாமல் நிகாகு செய்தாலும், அவ்வுடை பாத்தியக்காரனிருக்க ஒரு சொத்தை வாங்கினுலும் இன்னு மிவைபோன்ற காரியங்களைச் செய்தாலும் அதைப்பற்றி ஷாபிஈமதுஹபுகாரன் அவன்மேல் ஆக்ஷேபிப்பது கூடாது. ஆனுல் ஷாபிஈ மதுஹபைச் சேர்ந்தவன் அப்படி வலியில்லாமல் நிகாகு செய்தால் அல்லது பேரீத்தங்கனியில் ஊறிய நபீது என்னும் சாராயத்தைக் குடித்தால் அதைப்பற்றி அவனைக் கண்டித்து உணர்த்துவது ஆகும். ஏனென்றுல் தன் மதுஹபுடைய இமாமுக்கு மாற்றம் செய்வது எவரிடத்திலும் கூடாதாகையினுலென்க.

இன்னும் சில உலமாக்கள், குடியிலும் ஜினுவிலும் இன்னும் எல்லாருடைய ஒற்றுமையில் ஹறாமென்று ஏற்பட்ட காரியத்திலும் கண்டித்து உணர்த்துவது ஆகுமென்றும், இஜ்திஹாதினுல் ஹறாமென்று ஏற்பட்ட காரியத்தில் கண்டிப்பது ஆகாதென்றும் சொல்லுகிறார்கள். இதுசரியல்ல. ஏனென்றுல், ஒருவன் தன்னுடைய இஜ்திஹாதுக்கு மாருகவாவது தன் மதுஹபுடைய இமாமின் இஜ்திஹாதுக்கு மாருகவாவது ஒரு வேலையைச் செய்வானுகில் அவன் பாவியாகுவானென்பது மிகத் தேர்ச்சியையுடைய முஹஸ்ஸில்களான



உலமாக்களின் ஒற்றுமையா யிருக்கிறது. ஆகவே இஜ்திஹாதினுல் ஏற்பட்ட ஹறாம் உண்மையில் ஹறாமாகவே யிருக்கிறது. ஒருவன் தன்னுடைய இஜ்திஹாதினுல் ஒரு திசையை கிபுலாவென்று தெரிந்தெடுத்து அந்தப்பக்கத்தில் முதுகைத் திருப்பிக்கொண்டு தொழுவானுகில் அவன் பாவியாகுவான். அவன் முகம் நோக்கிய பக்கமே கிபுலாவென்று மற்றவன் அறிந்திருந்தாலும் சரியே.

இனி ஒருவன் எந்த மதுஹபை எடுத்துக்கொள்ள நாடுகிறுனே அந்த மதுஹபை எடுத்துக்கொள்வது அவனுக்கு ஆகும் என்று சொல்கிறார்களே இது வீண்வார்த்தையாயும் சார்வதற்குத் தகாததாயுமிருக்கிறது. மேலும் அவனவனும் தன்னுடைய ஆராய்வினுல் அறிந்தபடி அமல் செய்யவேண்டுமென்று ஆக்கியாபிக்கப்பட்டிருக்கிறுன். உவமையில் ஒருவன் தன்னுடைய ஆராய்வினுல் ஷாபிஈ றகிமகுல்லாவுடைய இஜ்திஹாதே மிகமேலா யிருக்கிறதென் றறிந்து பின்பு அதற்கு மாருக நடப்பானுகில் இது அவனுடைய நப்சின் இச்சையே யொழிய இதற்கு யாதொரு சமாதானமும் இல்லை. மாலிகீ, ஹனபீ என்னும் மற்ற மதுஹபுக்காரர்களைக் கண்டித்து உணர்த்தக் கூடாதென்றுலும் பித்அத்துக்காரரைக் கண்டித்து உணர்த்த வேண்டும். அவர்கள் யாரென்றுல், அல்லாகுதஆலாவுக்கு உடல் உண்டு என்றும், குர்ஆனனது படைக்கப்பட்டது என்றும், அல்லாகுதஆலாவைத் தரிசிக்கமுடியாது என்றும் இன்னுமிவைபோன்ற வார்த்தைகளையும் சொல்லுகிறவர்களாம். இவர்களுடைய பிசகு சந்தேகமறத் தெரிந்ததா யிருப்பதால் இவர்களைக் கண்டித்து உணர்த்தவே வேண்டும். (மாலிகி, ஹனபி முதலிய மதுஹபுகளின்) பிக்ஹில் பிசகுண்டென்பது சந்தேகமறத் தெரிந்ததல்ல. ஆனுல் எந்த ஊரில் பித்அத்துக்காரர் அற்பமாயும் சுன்னத்து ஜமாஅத்துகள் அதிகமாயுமிருக்கிறார்களோ அந்த ஊரில்தான் பித்அத்துக்காரரைக் கண்டித்து உணர்த்தவேண்டும். இருகட்சியாரும் அதிகமாயிருந்து நீ பித்அத்துக்காரனைக் கண்டித்து உணர்த்துகிறபக்ஷம் அவனும் உன்னைக் கண்டிக்க வருவான். இது கலகத்தில் இழுத்துவிடும். இப்படியான உணர்த்தல் சுல்தானுடைய உத்திரவும் உதவியுமில்லாமல் கூடாது.

மூன்றுவது றுகுனு:— உணர்த்தப்படுகிறவனும். இவனுடைய செய்கை பாவமென்றுகுவதற்கு இவன் ஆகில் பாலிகாகிய முகல்லபா யிருக்கவேண்டும். அன்றியும் உணர்த்துகிறவனுக்குத் தடையாயிருக்கிற யாதொரு மேன்பாடான தன்மை அவனில் இல்லாமலிருக்கவேண்டும். உதாரணமாக:— தகப்பனுடைய சங்கையானது அவனைக் கைபி

ணால் அலட்சியமாகக் கண்டித்து உணர்த்த மகனுக்குத் தடையா
யிருக்கிறது. ஆனால் முற்கூறியபடி பயித்தியக்காரனையும் சிறுவனையும்
கெடுதியிலிருந்து விலக்குவான். என்கினும் இதற்கு உணர்த்துவதென்
னும் பெயரில்லை. மேலும் ஒரு மிருகமானது முஸ்லிம்களுடைய
தானியத்தைத் தின்றுகொண்டிருக்கக் காண்போமாகில் அம்மிருகத்
தையும் ஒட்டிவிலக்குவோம். ஏனென்றால், முஸ்லிம்களுடைய பொரு
ளைக் காக்கும்பொருட்டேயாம். என்கினும் இது வாஜிபாகாது. ஆனால்
கஷ்டமில்லாமல் இலகுவாய் விலக்கக் கூடியதாயும் விலக்குவதினால்
யாதொரு நஷ்டமுண்டாகாதென்று மிருந்தால் அப்போது இஸ்லா
முடைய ஹக்குக்காக இவ்வளவு செய்வது வாஜிபாகும். எதுபோ
லெனில், ஒருவன் மற்றொருவனுடைய சொத்துவிஷயமாய் ஏதோ
தெரிந்தவனும் அதைப்பற்றி அவன் சாக்ஷி சொல்லாத பக்ஷம்
அந்த சொத்து அவனுக்கு நஷ்டமாய்ப் போவதாயும் சாக்ஷியத்திற்
குப் போகவேண்டிய இடம் தூரமல்லாமலு மிருந்தால் அப்போது
இஸ்லாமுடைய ஹக்குக்காக சாக்ஷி சொல்வது அவன்மேல் வாஜி
பாகுவது போலவாம். என்கினும், ஆகிலாகிய ஒரு புத்திமான் ஒருவ
னுடைய பொருளைச் சேதப்படுத்துவானாகில் இது அக்கிரமமாயும்
பாவமாயு மிருக்கிறது. இதைப்பற்றிக் கண்டித்து உணர்த்துவதில்
கஷ்டமிருந்தாலும், கண்டிக்கவேவேண்டும். ஏனென்றால், பாவத்
தை விடுவதும் விடும்படி மற்றவரைக் கண்டித்து விலக்குவதும்
கஷ்டமில்லாமல் ஆகாது. அகத்தியம் கஷ்டமெடுத்தே தீரவேண்
டும். ஆனால் சகிக்க முடியாத கஷ்டமாயும் அதைச்செய்ய இயலாதவ
னாயு மிருந்தால் அப்படிப்பட்ட கஷ்டத்தை எடுத்துக்கொள்ளான்.
கண்டித்து உணர்த்துவதில் கருதியபொருள் யாதெனில், இஸ்லா
முடைய அடையாளத்தை வெளியாக்க வேண்டுமென்பதேயாம். ஆத
லால் அதில் கஷ்டமெடுத்துக்கொள்வது வாஜிபாயிருக்கிறது. உவனம்
யில் ஓரிடத்தில் சாராயம் அதிகமாயிருந்து அதை எடுத்துக் கொட்
டிக்கொண்டிருக்கிற பக்ஷம். அவன் சோர்வடைகிறதா யிருந்தால்
அப்போதும் அதைக் கொட்டுவது வாஜிபாகும். மிருகம் ஆடுகள்
சேர்ந்து தானியத்தைத் தின்றுகொண்டிருந்து அவைகளை அப்புறம்
ஓட்டி விலக்கிக்கொண்டிருக்கிற பக்ஷம் அவன் சோர்வடைகிறதாயும்
அவனுடைய ஜீவன சம்பாத்தியம் தப்பிப்போகிறதாயு மிருந்தால்
அவைகளை ஓட்டுவது அவன்மேல் வாஜிபாகாது. ஏனென்றால், அன்
னியருடைய ஹக்கைக் காக்கவேண்டியதுபோல் அவன் தன்னுடைய
ஹக்கையும் காக்கவேண்டியவனா யிருக்கிறான். தன் ஜீவனம் தன்னு



டைய ஹக்காயிருக்கிறது. அதை அன்னியருடைய பொருளுக்குப்
பகரமாய்க் கொடுப்பது வாஜிபாகாது. என்றாலும் அதைத் தீனுக்குப்
பகரமாய்க் கொடுப்பதும் அந்தப் பாவத்திலிருந்து விலக்குவதும்
வாஜிபாகும்.

இனி கண்டித்து உணர்த்துவதில் எல்லாக் கஷ்டங்களையும் எடுத்
துக்கொள்ள வேண்டுமென்பது வாஜிபல்ல. மேலும் அதற்கோர்
விஸ்தரிப்புண்டு. அந்த விஸ்தரிப்பு யாதெனில், சோர்வடைகிறதா
யிருந்தால் அவன் மஃதூர் என்றாகுவான். அதாவது:—செய்ய இய
லாதவன் என்பதேயாம். அப்போது அவன் தன்மனதால் அந்தப்
பாவத்தை மறுத்திருப்பதன்றி மற்றொன்றும் வாஜிபாகாது. ஆனால்,
ஒருவன் சோர்வடையாதவனா யிருக்கிறான் என்றாலும் தன்னை அடிப்
பார்களென்று பயப்படுகிறான். அல்லது தன்னுடைய வார்த்தை ஒன்
றும் பயன் செய்யாது என்று அறிகின்றான். என்கினும் இது நான்கு
வகைப்படும். முதலாவது:—தன்னை அடிப்பார்களென்றும் பாவத்தை
விடமாட்டார்களென்றும் அவன் அறிவதாம். அப்போது உணர்த்து
வது அவன்மேல் வாஜிபாகாது. ஆனால் நாவினாலாவது கையினாலாவது
உணர்த்தி அவர்கள் அடிப்பதின்பேரில் சபுரு செய்துகொள்ளுவா
னாகில் இது முபாஹாகும். மேலும் இதில் சவாபைப் பெறுவான்.
ஏனென்றால், ஒருவன் ஒரு அநீதக்கார சுல்தானால் கொலையுண்ணப்
படுகிறவரையில் அந்த சுல்தானைக் கண்டித்து உணர்த்துவானாகில் அவ
னிலும் அதிக வரிசையுள்ள ஷஹீது ஒருவனுமில்லை" என்று ஹதீ
ஸில் வந்திருக்கிறது. இரண்டாவது:—பாவத்தை விலக்க முடியுமென்
றும், யாதொரு அச்சமில்லையென்றும், அதை விலக்கத் தனக்கு சக்தி
யிருக்கிறதென்றும் அறிந்திருப்பதாம். இப்படியிருப்பதில் உணர்த்
தாம லிருப்பானாகில் பாவியாகுவான். மூன்றாவது:—பாவத்தையும்
விடார்கள், தன்னையும் அடிக்கமாட்டார்கள் என்று அறிந்திருப்பதாம்.
அப்போது ஷரகுடைய சங்கைக்காக நாவினால் உணர்த்துவது வாஜி
பாகும். ஏனென்றால், மனதைக்கொண்டு மறுக்கத் தடையொன்று
மில்லாததுபோல் நாவைக்கொண்டு மறுக்கவும் அவனுக்கு யாதொரு
தடையில்லாதிருக்கிறதென்க. நாலாவது:—பாவத்தை அழிக்கக் கூடியவ
னாய், உதாரணமாக:—சாராய ஜாடியின்மேல் கல் எறிந்து அதைத்
தகர்க்கவும் தம்பூர் வீணைகளை உடைக்கவும் சக்தியுள்ளவனா யிருக்
கிறான். ஆனால் அப்படிச் செய்தால் அவனை அடிப்பார்கள் என்கிற
பக்ஷம் இது வாஜிபாகாது. என்கினும் அப்படிச் செய்து அடியைப்
பொறுத்துக்கொள்வது மிக வரிசையுள்ளதேயாம்.

ஆனால் உங்களை நீங்களே ஹலாக்கில் போடவேண்டாம் என்பதாய் அல்லாகு தஆலா திருவுளமாயிருக்கிறானே என்று யாராவது சொல்லும் பக்ஷத்தில் அதற்கு ஜவாபாவது:—"நீங்கள் ஹலாக்காகாத அளவாகப் பொருளை அல்லாகு தஆலாவுடைய பாதையிற் செலவு செய்யுங்கள் என்பதே அதற்கு அர்த்தம்" என்று இப்னு அப்பாஸ் றலியல்லாகு அன்குமா அவர்கள் சொல்லுகிறார்கள். இன்னும் பாவஞ் செய்கிற ஒருவன் என்னுடைய தவ்பா கபூலாகாதென்று சொல்வதே அந்த ஹலாகத்துக்குப் பொருள் என்பதாய் பராபினுல் ஆஜிபு றலியல்லாகு அன்கு சொல்லுகிறார்கள். இன்னும் பாவஞ் செய்பவர்கள் அதற்குப் பிறகு ஒருநன்மையும்செய்யாமல் விட்டுவிடுவதே அதற்குப் பொருள் என்று அபூஉபைதா றலியல்லாகு அன்கு அவர்கள் சொல்லுகிறார்கள். மொத்தத்தில் ஒரு முஸ்லிமானவன் காபிர்களான படையினுடைய அணியின்மேல் தானாகவே விழுந்து அவர்கள் இவனைக் கொல்லுகிறவரையில் சண்டை செய்வானாகில் இது தானே தன்னை ஹலாக்கில் போடுவதாயிருக்கிறதென்றாலும் இது ஆகுமான காரியமேயாம். ஏனென்றால் இதில் பிரயோசனமிருக்கிறது. அதாவது:—அவனும் ஒருவனை வெட்டுவான். அப்போது காபிர்களுடைய மனம் முறிந்து தளர்ச்சியடையும். இன்னும் முஸ்லிம்களெல்லாம் இப்படியே தைரியஸ்தர்களாயிருப்பார்களென்று அவர்கள் சொல்லுவார்கள். ஆதலால் இதில் சவாபுண்டாகும். ஆனால் கண்தெரியாத ஒரு குருடன் அல்லது ஒரு பலஹீனன் தானாகப் படையில் விழுந்து சண்டை செய்வது கூடாது. ஏனென்றால், இது பிரயோசனமில்லாமல் தானாகத் தன்னை மாய்த்துக்கொள்வதாயிருக்கிறது. இதுபோலவே எந்தவிடத்தில் பாவத்தை விடாமலிருப்பதுடன் தன்னைக் கொன்றுபோடுவார்களென்றாவது, அடிப்பார்களென்றாவது பயப்படுகிறானோ, இன்னும் திகரில் அவன் செய்கிற கடினமான கண்டனையினால் பாவிகளுடைய மனதில் அச்சம் பிறக்காது என்றும், ஒருவனுக்கும் நன்மையின் விருப்பமுண்டாகாது என்றும் அறிகின்றானோ அந்த இடத்தில் உணர்த்துவது கூடாது. ஏனென்றால், இலாபமில்லாமல் தீமையை ஏற்பது சரியல்லவாதலாலென்க.

இந்த காயிதாவில் இரண்டு கஷ்டங்களிருக்கின்றன. முதலாவது:—கூழை மனத்தினாலும் துர் எண்ணத்தினாலும் அவன் பயப்படுகிறவனாயிருப்பதாம். இரண்டாவது:—அடிப்பார்களென்ற பயமில்லாமல் கவுரவத்துக்குப் பங்கமுண்டாக்குவார்கள் என்றும், பொருளைப் பிடுங்கிக்கொள்ளுவார்களென்றும், பந்துக்களை இம்சிப்பார்களென்றும் பயப்படுவதாம். முந்தியதின் விவரிப்பாவது:—தன்னை அடிப்பார்களென்ற எண்ணமே அவனுக்கு மேலிட்டிருந்தால் அவன் உணர்த்தக் கடமைப்படாதவனாகுவான். அடிக்க மாட்டார்களென்ற எண்ணமே மேலிட்டிருப்பதுடன் அடிக்கவுங் கூடுமென்று அற்ப சந்தேகமுமிருந்தால் அப்போது உணர்த்துங் கடமை அவனை விட்டு நீங்காது. ஏனென்றால், இந்த சந்தேகமும் துர் எண்ணமும் இருக்கவே இருக்கும். இது ஒருபோதும் ஒழிவதில்லை. அடிப்பார்களோ, என்னவோ என்று சந்தேகமேயிருந்தால் அப்போது உணர்த்துவது எதினைக்கொண்டு வாஜிபாயிருக்கிறதென்றும், சந்தேகத்தைக்கொண்டு அந்த வாஜிபு நீங்காது என்றும் நாம் சொல்லக்கூடும். இன்னும் சலாமத்துடைய எண்ணமே மிகைத்திருக்கிற இடத்தில்தான் உணர்த்துவது வாஜிபாகுமென்றும் சொல்லலாம். இனி இரண்டாவதின் விவரிப்பாவது:—யாதொரு கஷ்டத்தைப்பற்றி பயமுண்டாயிருந்தால் அந்த கஷ்டம் பொருளிலாவது கவுரவத்திலாவது தன்னிலாவது பந்துக்களிலாவது வேலைக்காரர்களிலாவது உண்டாகக்கூடும். அல்லது தன்னைத் திட்டுவார்களென்ற பயமிருக்கும். அல்லது தீன் துன்யாக்களுடைய யாதொரு பிரயோசனம் தப்பிப்போகுமென்ற பயமிருக்கும். இதனுடைய வகைகள் பலவாயிருக்கின்றன. ஒவ்வொன்றின் ஹுக்மு வெவ்வேறாயிருக்கிறது. ஆனால் தன் விஷயத்தில் பயப்படுவது இரண்டு வகையாகும். முதலாவது வகை:—பின்னிட்டு யாதொரு பிரயோசனம் தப்பிப்போகுமென்று அவன் பயப்படுவதாம். உதாரணமாக:—உஸ்தாதுக்கு உணர்த்தினால் அவன் இனிமேல் இவனுக்கு இல்மு கற்பிக்கமாட்டான் என்றும், வயித்தியனுக்கு உணர்த்தினால் அவன் இவனுக்குப் பரிகாரம் செய்யமாட்டான் என்றும், எஜமானனுக்கு உணர்த்தினால் அவன் இவனுடைய சம்பளத்தை நிறுத்திவிடுவான் அல்லது யாதொரு ஹாஜத்தான நேரத்தில் உதவி செய்யமாட்டான் என்றும் பயப்படுவானாகில் இவைகளெல்லாவற்றிலும் [illegible] உணர்த்துங் கடமை அவனை விட்டும் நீங்காது. ஏனென்றால் இதோர் கஷ்டமல்ல. மேலும் பின்னிட்டு யாதொன்று தப்பிப்போகுமென்று பயப்படுவது (அநாவசியமான) அதிகமேயாம். ஆனால் தற்போது அவனுக்குத் தேவையாயிருக்கிற யாதொருவஸ்து தப்பிப்போகிறதாயிருந்தால், உதாரணமாக:—இவன் வியாதிப்பட்டிருக்கிறான், வயித்தியன் பட்டணத்திலொருவனிருக்கிறான். அதைப்பற்றி அவனுக்கு உணர்த்துவானாகில் அவன் இவனிடத்துக்கு வரமாட்டான். அல்லது இவன் வறுமையாயும் கேவல,

ளாயு மிருக்கிறான். இவனிடத்தில் உணவுக்கு ஒன்றும் கிடையாது. தவக்குல் செய்வதுமில்லை. ஒருவன் இவனுக்கு உணவு முதலிய செலவு கொடுத்துக்கொண்டு வருகிறான். அவனுக்கு இவன் உணர்த்துவானாகில், அவன் கொடுப்பதை நிறுத்திவிடுவான். அல்லது இவன் ஒரு துஷ்டனுடைய கையில் சிக்கிக்கொண்டிருக்கிறான். இவன் ஒருவனே இவனைக் காத்துக்கொள்ள வேண்டியவனா யிருக்கிறான். இவை யெல்லாம் தப்பிப்போகு வேண்டியவைகளா யிருக்கின்றன. ஆதலால் இவை தப்பிப்போகுமென்ற பயத்துக்காக உணர்த்தாமல் சும்மா யிருக்க நாமும் அவனுக்கு அநுமதி கொடுப்பது அசாத்தியமல்ல. ஏனென்றால், இந்த நஷ்டம் தப்போது உண்டாகிறதா யிருப்பதினாலேயாம். ஆனால், இந்த கஷ்டத்தினுடைய அளவானது அவரவருடைய நிலைமைகளுக்குத் தக்கபடி மாறும், இது உணர்த்துகிறவனுடைய யோசனையையும் ஆராய்வையும் பொருத்ததா யிருக்கிறது. ஆதலால், அவன் தன்னுடைய நினை ஓட்டத்தில் வைத்து, உணர்த்தும் வேலையை யாதொரு அவசியத்தின்போதன்றி விடாமல் ப்ரேமிக்கொள்வது வேண்டும். இரண்டாவது வகை:—இப்போது கைவசமா யிருக்கிற யாதொரு வஸ்து தப்பிப்போகுமென்று பயப்படுவதாம். உதாரணமாக:—அவர்கள் இவனுடைய பொருளை எடுத்துக்கொள்வார்களென்றும், வீட்டைப் பாழாக்குவார்களென்றும், அதனால் அவை தன் கையிலிருந்து போய்விடுமென்றும் அறிகிறான். அல்லது அவர்கள் இவனை அடிப்பார்களென்றும், அதனால் சரீரகம் தப்பிப்போகுமென்றும், அல்லது அடிக்காமற்போனாலும் தலை திறந்து கடைத் தெருவுக்கு இழுத்துக்கொண்டு போவதுபோன்ற கௌரவ பங்கமான யாதொரு குறைவு செய்வார்களென்றும், அதனால் தனது கௌரவத்துக்கு நஷ்டமுண்டாகுமென்றும் அறிவானாகில், இவை யெல்லாவற்றிலும் உணர்த்தும் கடமை அவனைவிட்டும் நீங்கிப்போம். ஆனால் மனுஷத் தன்மையான மானத்துக்கு யாதொரு நஷ்டத்தை யுண்டாக்காமல் சிறப்புக்கும் பெருமைக்கும் குறைவை யுண்டாக்குகிற யாதொரு நடவடிக்கை செய்வார்களென்று பயப்படுவானாகில், உதாரணமாக:—காலில் ஒன்றுமில்லாமல் கடைத்தெருவுக்குக் கொண்டு போவார்களென்றுவது, நல்ல உடை உடுக்க விடமாட்டார்களென்றுவது, அல்லது தன்னை நேர் நேரே கடுத்து பேசுவார்களென்றுவது பயப்படுவானாகில், இவையெல்லாம் (அவசியமில்லாத) அதிகச் சிறப்பும் பெருமையுமா யிருப்பதால் இம்மாதிரியான காரணங்களால் உணர்த்துங் கடமை அவனை விட்டும் நீங்காது. ஏனென்றால், இம்மாதிரி



யான சுகபோகங்களில் எப்போதும் நிலைத்திருப்பது ஷரகில் அழகானதல்ல. ஆனால் மானத்தைக் காப்பது ஷரகில் நாடப்பட்டதேயாம். என்கினும், ஒருவன் தன்னைப்பற்றிப் புறம் பேசுவார்களென்றும், திட்டுவார்களென்றும், பகைசெய்வார்களென்றும், காரியங்களில் தன்னைத் துயரபாட்டார்களென்றும் பயப்படுவானாகில், இவை யெல்லாம் உணர்த்துங் கடமையை நீக்குகிற உதாரமா வென்பதில் சந்தேகமில்லை. ஏனென்றால், உணர்த்துகிற எவனும் இவைகளுக்குத் தப்புவது அருமையாதலாலென்க. ஆனால் அது புறங்கூறலான பாவமாயிருந்து அதைப்பற்றி உணர்த்தும் பக்ஷத்தில், அவர்கள் அதை விடமாட்டார்களென்றும், இவனைப்பற்றியும் புறங் கூறுவார்களென்றும், பாவத்தை அதிகப்படுத்துவார்களென்றும் அறிவானாகில் அப்போது உணர்த்தாமலிருப்பது ஆகும். ஆனால் தன்னுடைய பந்துக்கள் சினேகர்கள் இவர்கள் விஷயத்தில் இந்தக் கஷ்ட நஷ்டங்களுண்டாகுமென்று பயப்படுவானாகில், உதாரணமாக:—ஒருவன் துன்யாவை வெறுத்துவிட்ட ஸாஹிதாயிருக்கிறதினால் அவன் தன்னை அடிக்கமாட்டார்கள் என்றும், அவர்கள் பிடுங்கிக்கொள்ளத் தன்னிடத்தில் யாதொரு பொருளில்லை யென்றும் அறிந்திருக்கிறான். ஆனால் அதற்குப் பதிலாகத் தன்னுடைய பந்துக்களையும் சினேகர்களையும் இம்சைப் படுத்துவார்களென்று பயப்படுவானாகில் அவன் உணர்த்துவது கூடாது. ஏனென்றால் தன் விஷயத்தி லுண்டாகிற இம்சைகளைச் சகிப்பதுதான் ஆகும். தன்னால் மற்றவருக்கு இம்சை யுண்டாகப் பார்ப்பது கூடாது. மேலும் அவர்களைக் காக்கப் பார்ப்பதே இவனுடைய ஹக்காயிருக்கிறது. அதுவும் முக்கியமானதேயாம்.

நாலாவது பகுதி:—உணர்த்துவது எப்படி என்பதாம். அறிந்துகோள்:—உணர்த்துவதற்கு எட்டு வகுப்புகளுண்டு. முந்திப் பாவம் நிகழ்வதை அறிவது, பின்பு அதன் கெடுதியை அவனுக்கு அறிவிப்பது, பின்பு உபதேசித்து செய்வது, பின்பு கடிந்து பேசுவது, பின்பு கையினால் பேதப்படுத்துவது, பின்பு அடிப்பதாய் அச்சமுறுத்துவது, பின்பு அடிப்பது, பின்பு ஆயுதமெடுத்து உதவிக்கு ஆட்களைச் சேர்த்து சண்டைபோடுவதாம். இதில் தர்த்தீபாகிய வரிசைக்கிரமத்தைக் கவனிப்பது வாஜிபாயிருக்கிறது.

முதலாவது வகுப்பு:—பாவம் நிகழ்வதை அறிவதாம். அதாவது:—சிறிதும் சந்தேகமில்லாமல் ஏதேனுக உண்மையில் பாவம் நடப்பதை முதலில் நேர்நேரே தெரிந்துகொள்ளவேண்டும். தேடித்திரியக்கூடாது. வாசல் வழியிலும் ஓட்டையிலும் ஜன்னலிலிருந்து பார்க்கக்கூடாது.

அயல்வீட்டாரிடத்தில் விசாரிக்கக்கூடாது. ஒருவன் மறைத்து ஏதாவது வைத்துக்கொண்டிருந்தால் அது என்னவென்று கையால் தடவிப்பார்க்கக்கூடாது. தேடித்திரியாமலேயே தம்பூர் சப்தத்தைக் கேட்டால் அல்லது சாராய வாசனை தெரிந்தால் அல்லது சாராயத்தைக் கண்டால் அப்போது அதைப்பற்றி உணர்த்தவேண்டும். பாவம் நடக்கிறதாக இரண்டு நீதவான்கள் சாக்ஷி சொன்னால் அவர்களுடைய சாக்ஷியத்தை ஒப்புக்கொள்ளவேண்டும். இரண்டு நீதவான்களுடைய சாக்ஷியத்தின்பேரில் உத்திரவில்லாமல் வீட்டுக்குள் பிரவேசிப்பது ஆகும். ஒரு நீதவான் சாக்ஷி சொன்னால் அதைக்கொண்டு உள்ளே புகாமலிருப்பதே மேல். ஏனென்றால் வீட்டானுடைய சுயாதீனமாயிருக்கிறது. ஒரு சாக்ஷியுடைய சொல்லைக்கொண்டு அவனுடைய சுயாதீனத்துக்குத் தோஷமுண்டாகாது. இமாம் அலியவர்களுடைய மோதிரத்தில் (பின்வருமாறு) நக்ஷா வெட்டியிருந்ததாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது:—"நீ உன் கண்ணாற் பார்த்ததை மறைப்பது சந்தேகத்தில் பங்கப்படுத்துவதிலும் மிக மேல்" என்பதே.

இரண்டாவது வகுப்பு:—பாவத்தின் கெடுதியைப்பற்றி அறிவிப்பதாம். ஏனென்றால், ஆகாததென்று தெரியாமல் ஒருவன் ஒரு காரியத்தைச் செய்யவும் கூடும். எதுபோலெனில், ஓர் பட்டிக்காட்டான் பள்ளிவாசலில் ருகூஉ ஸுஜூதுகளை நிதானமாய்ச் செய்யாமல் தொழுதுகொள்ளுகிறான். அல்லது அவனுடைய மோஜாவில் நஜீஸ் இருக்கிறது. இந்தத் தொழுகை கூடாதென்பதை அவன் அறிந்திருப்பானாகில் அப்படிச் செய்யமாட்டான். ஆதலால் அவனுக்கு அதைப்பற்றி அறிவிக்கவேண்டும். இப்படி அறிவிப்பதற்கு அதபாவது:—அவன் வருத்தப்படாமலிருக்கும்படி மிருதுவாகவும் இனிமையாகவும் போதிக்கவேண்டும். ஏனென்றால், ஒரு முஸ்லிமை அவசியமில்லாமல் வருத்தப்படுத்துவது கூடாதானதினாலேயாம். முன்னால் நீயொருவனுக்குப் போதித்தால் அவனை அறிவிலியென்றும் தெரியாதவனென்றும் ஆக்கினாய். அவனிடமுள்ள குறையை எடுத்துக்காட்டி அவன் மனதைப் புண்படுத்தினாய். அந்தப் புண்ணை ஆற்றுகிற யாதொரு மருந்தில்லாமல் அதைத் தாங்க முடியாது. அந்த மருந்து யாதெனில், அவனுக்கு யாதொரு சமாதானம் சொல்வதேயாம். அதெப்படியென்றால், "அன்னை வயிற்றிலிருந்து பிறக்கும்போதே ஆலிமாயிருப்பவர் எவருமில்லை" என்றும், "அவரவரும் ஒருவரிடத்தில் படித்தே கல்வி அறிவை அடைகின்றார்கள்" என்றும், "ஒருவனுக்கு ஒரு விஷயம் தெரி



யாமலிருந்தால் அது அவனுடைய தாய்தந்தையரும் உஸ்தாதும் படித்துக்கொடுக்காத குறை" என்றும், "தெரியாத விஷயங்களைச் சொல்லிக்காட்ட உங்கள் பக்கத்தில் ஓதின மனிதர் ஒருவருமில்லைபோலிருக்கிறது" என்றும், இன்னும் இவைபோன்ற வார்த்தைகளையும் சொல்லி அவன் மனதைச் சந்தோஷப்படுத்தவேண்டும். இப்படிச் சமாதானப்படுத்தாமல் ஒருவன் மற்றொருவனை வருத்தப்படுத்துவானாகில் இதானது ஒருவன் தன் பிடரியில் பட்ட இரத்தத்தை மூத்திரத்தால் கழுவுவதுபோலும், ஒரு நன்மையைச் செய்யப்போய் வேறொரு தீமையைப் புரிந்ததுபோலுமாகும்.

மூன்றாவது வகுப்பு:—வஃலு நஸீஹத்து செய்வதாம். இது மிருதுவாயிருக்கவேண்டும். கடினமாயிருக்கக்கூடாது. தான் செய்வது ஹராமான காரியமென்று அறிந்திருக்கிற ஒருவனுக்கு அதைப்பற்றி அறிவிப்பதில் பயனொன்றுமில்லையாதலால் அவனுக்கு அச்சமுறுத்தவேண்டும். அச்சமுறுத்துவதில் மிருதுவாவது:—உதாரணமாக, ஒருவன் புறம்பேசிக்கொண்டிருந்தால் அவனுக்கு நஸீஹத்தாக நம்மில் ஒரு குற்றமுமில்லாதவர் எவரிருக்கிறார்? ஆதலால், அவரவரும் தம் பாரத்தில் ஆழ்ந்து அல்லது எதையாவது படிப்பது மிக மேலாயிருக்கிறது என்று சொல்லவேண்டும். இங்கு பெரிய ஓர் ஆபத்திருக்கிறது. அல்லாவுடைய உதவி பெற்றவனன்றி மற்றவன் அந்த ஆபத்துக்குத் தப்பமாட்டான். ஏனென்றால் நஸீஹத்து செய்வதில் இருவிதமான மேம்பாடிருக்கிறது. ஒன்று தன்னுடைய இல்மின் பெருமையை வெளிப்படுத்துவதும், மற்றொன்று அவன்மேல் தன் அதிகாரப்பெருமையைக்காட்டித் தனது பதவியின் உயர்த்தியை வெளிப்படுத்துவதுமாம். இவ்விரண்டும் தன்னைமேலாக்கவேண்டுமென்ற ஆசையினால் எழும்பும். இந்த ஆசை மனிதனுக்கு இயற்கையாயுள்ளது. ஆகவே அவன் உண்மையில் தனது இச்சைக்கும் மேம்பாட்டுக்கும் வழிபட்டு வருது நஸீஹத்து செய்கிறவனாயிருக்கக்கொண்டு தான் ஷரகுக்கு வழிபட்டு இக்காரியத்தைச் செய்கிறேனென்று எண்ணிக்கொள்ளுவான். இதுவே இவனிடம் நடந்திருக்கிற இந்தப் பாவம் பெரும்பான்மையாயிருக்கும். இவனிடம் நடந்திருக்கிற இந்தப் பாவம் அவன் செய்கிற பாவத்திலும் மிகக் கெட்டதாயிருக்கும். ஆதலால் இவன் தன்னில் சோதித்துப் பார்க்கவேண்டும். அவன் தானாகவே இவனுடைய நஸீஹத்தில்லாமல் தன் பாவத்தைவிட்டுத் திரும்புவதை அல்லது அவனுக்கு மற்றொருவன் நஸீஹத்து செய்வதை இவன் அதிகம் விரும்புவானாகில், தன்னுடைய நஸீஹத்தை வெறுத்திருப்பானாகில் அப்போது நஸீஹத்து செய்வது இவனுக்குத் தகும். இவனுடைய நஸீ

ஹத்தினாலேயே அவன் அந்தப்பாவத்தை விடவேண்டுமென்று விரும்புவானாகில் இவன் அல்லாகுதஆலாவுக்குப் பயந்துகொள்ளவேண்டும். ஏனென்றால், இந்த நஸீஹத்தினால் அவனை இவன் தன் பக்கத்திற்கு அழைக்கிறானென்றும், அல்லாவுடைய பக்கத்துக்கு அழைக்கவில்லையென்றும் அச்சமிருப்பதினாலென்க. இன்னும் "சுல்தானிடம் போய் அவனைக் கண்டித்து உணர்த்துகிற ஒரு மனிதனுடைய விஷயத்தில் நீர் என்ன சொல்லுகிறீர்?" என்று தாவூது தாயி ரஹிமஹுல்லா அவர்களைக் கேட்டபோது, "அவனுக்குச் சவுக்கடி விழுமென்று பயப்படுகிறேன்" என்று அவர்கள் சொன்னார்கள். "அவன் அதைச் சகிக்கக் கூடியவனாயிருந்தாலோ?" என்க, "அவனைக் கொன்றுபோடுவார்கள் என்று பயப்படுகிறேன்" என்றார்கள். "அதையும் சகிக்கக் கூடியவனாயிருந்தாலோ?" என்க, "இதற்கெல்லாம் மிகப்பெரியதும் அதிக மறைவானதுமான ஓர் பிணி அவனில் இருக்குமென்று பயப்படுகிறேன்" என்றும், அது "உஜுப் என்னும் அகம்பாவம்" என்றும் சொன்னார்கள். அஹ்மதிப்னு ஹம்பல் ரஹிமஹுல்லா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதாவது:—"நான் இன்ன கலீபாவைக் கண்டித்து உணர்த்தவேண்டுமென்று நாடினேன். அப்படிச் செய்தால் அவன் என்னைக் கொல்லுவான் என்பதும் எனக்குத் தெரியும். அதற்கு நான் பயப்படவில்லை. ஆயினும் ஜனங்கள் அங்கு அதிகமாயிருந்தார்கள். நான் அவனைக் கண்டித்து உணர்த்தினால் அப்போது என்னுடைய உண்மையையும் உறுதியையும் ஜனங்கள் பார்ப்பார்களென்றும், அப்படி அவர்கள் பார்ப்பது என் மனதுக்கோர் இன்பமாயிருக்குமென்றும், அந்தச் சமயத்தில் நான் இக்லாஸான கலப்பற்றதல் இல்லாமல் கொலையுண்டவனாகுவேன் எனப் பயந்தேன்" என்பதே.

நாலாவது வகுப்பு:—கடிந்து பேசுவதாம். இதில் இரண்டு அதபுகளுண்டு. ஒன்று:—மிருதுவாய்ச் சொல்லக் கூடுமாயிருக்கிற வரையில் கடிந்துபேசாமலிருப்பதாம், மற்றொன்று:—கடிந்துபேசினால் கெட்ட பதங்களையும் உண்மையல்லாத வார்த்தைகளையும் வழங்காமல், "ஏ அநீதக்காரா! ஏ பாதகா! ஏ அறிவில்லாதவனே! ஏ மூடா! என்பவைபோன்ற உண்மையான வார்த்தைகளைச் சொல்லுவதாம். ஏனெனில் பாவம் செய்கிறவனே அவன் மூடனேயாகுவான். ஏனென்றால், "எவன் தன் கிரியைகளைக் குறித்துக் கணக்கு சோதித்துக்கொண்டும் மரணத்தை எதிர்பார்த்துக்கொண்டுமிருக்கிறானோ அவன் புத்திமான்" என்றும், "எவன் தன் இச்சையைத் தொடர்ந்து தன்னை மோசத்திற்குள்ளாக்கியிருக்கிறானோ, அல்லாகுதஆலா தன்னை விட்டுவிடுவா



னென்று ஆதரவு வைக்கின்றானோ அவன் மூடன்" என்றும் ரசூல் சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். கடிந்து பேசுவது எப்போது ஆகுமென்றால், அது பிரயோசனங் கொடுக்குமென்று அறிந்தால்தான். பிரயோசனம் செய்யாதென்று தெரிந்தால் அப்போது முகத்தைச் சுளித்துக்கொண்டு அவனை இழிவாகப் பார்த்து அவனைவிட்டும் முகத்தைத் திருப்பிக்கொள்ளுவான்.

ஐந்தாவது வகுப்பு:—கையினால் பேதப்படுத்துவதாம். இதிலும் இரண்டு அதபுகளுண்டு. முதலாவது அதபு:—தன்னால் கூடியவரையில் அவனையே பேதப்படுத்தும்படி ஏவுவதாம். உதாரணமாக:—அவன் பட்டுடை தரித்திருந்தால் அதைக் கழட்டி விடும்படிக்கும், அவன் அக்கிரமமாய் அபகரித்துக்கொண்ட ஒரு பூமியிலிருந்தால் அதைவிட்டு அப்புறம் போகும்படிக்கும், சாராயம் வைத்திருந்தால் அதைக் கொட்டிவிடும்படிக்கும், பட்டு விரிப்பின்மேல் உட்கார்ந்திருந்தால் அதிலிருந்து எழுந்துவிடும்படிக்கும், ஜனாபாளியாகப் பள்ளிவாசலுக்குள்ளிருந்தால் அதைவிட்டு வெளியே புறப்படும்படிக்கும் சொல்லுவான். இரண்டாவது அதபு:—இதற்கு அவன் வசப்படாத பக்ஷத்தில் தன் கையினால் அப்புறப்படுத்துவதாம். இதில் அதபாவது:—சொற்பத்தின்மேல் சுருக்கிக்கொள்வதாம். உதாரணமாக:—அவனுடைய கையைப் பிடித்து அப்புறப்படுத்தக் கூடுமாயிருக்கும்போது காலைப்பிடித்தும் தாடியைப் பிடித்தும் இழுக்கமாட்டான். தம்பூரை உடைத்தால் அதைத் துண்டுதுண்டாக முறிக்கான். பட்டுடையைக் கழட்டினால் அதுகிழியாதபடி மெதுவாகக் கழட்டுவான். சாராயத்தை மாத்திரம் கொட்டிவிடக் கூடுமாயிருக்கும்போது அதிருக்கும் பாத்திரத்தை உடைக்கான். ஆனால் அது அவன் கைக்கு எட்டாத நிமித்தம் அதன்மேல் ஒருகல்லை எறிந்து அதை உடைப்பது ஆகும். அப்போது அதன் சேதத்துக்கு அவன் உத்திரவாதியாகமாட்டான். வாய்நெருங்கிய ஓர் ஜாடியிலிருக்கிற சாராயத்தை எடுத்துக் கொட்டிக்கொண்டிருந்தால், அதற்குள்ளாக ஜனங்கள் வந்து அவனைப்பிடித்து அடிப்பார்களென்கிற பக்ஷம் அதை உடைத்துவிட்டு ஓடிப்போவது ஆகும். சாராயத்தை ஹராமாக்கின ஆரம்பத்தில் அதன் பாத்திரத்தை உடைக்கும்படி உத்திரவிருந்தது. பின்பு அந்த உத்திரவு மாற்றப்பட்டது. அன்றியும், அந்தப் பாத்திரம் சாராயம் வைப்பதற்கே யன்றி வேறொன்றுக்கும் உபயோகிக்கத் தகாத பாத்திரமாயிருந்தது. இப்போது யாதொரு காரணமின்றி உடைப்பது கூடாது. அப்படி உடைத்தால் சேதத்துக்கு உத்திரவாதியாகுவான்.

ஆறாவது வகுப்பு:—அச்சமுறுத்துவதாம். எப்படியென்றால், நீ இந்த சாராயத்தைக் கொட்டிவிடு. இல்லாவிட்டால் உன் மண்டையை உடைப்பேன். உன்னை இப்படி இப்படிச் செய்வேன் என்று சொல்லுவதாம். இது எப்போது ஆகுமென்றால், மிருதுவாய்ச் சொன்னால் அதைக் கொட்டமாட்டான் என்றறிந்து இப்படிச்சொல்லத்தேவைப்படும்போதுதான் ஆகும். இதற்கு இரண்டு அதபுகளுண்டு. முதலாவது அதபு:—செய்ய ஆகாத ஒரு செயலைக்கொண்டு அச்சமுறுத்தாமலிருப்பதாம். உதாரணமாக:—உன் உடையைக் கிழித்துவிடுவேன், உன் வீட்டை இடித்துப்பாழாக்கிவிடுவேன், உன்பெண்சாதி பிள்ளைகளை வருத்தப்படுத்துவேன் என்று சொல்லமாட்டான். இரண்டாவது அதபு:—தன்சொல் பொய்யாகாதவண்ணம் தான் செய்யக்கூடிய ஒருசெயலைச் சொல்லி அச்சமுறுத்துவதாம். உன்னைக் கொன்றுபோடுவேன் என்றும், உன்னைக் கழுவில் ஏற்றுவேன் என்றும், இன்னும் இவைபோன்றவைகளையும் சொல்லமாட்டான். ஏனென்றால் இவையெல்லாம் பொய்யாகும். என்கிலும், தான் செய்யக் கருதியிருப்பதற்கு மேல் அதிக கடப்பாக ஒரு செயலைச் சொன்னால், அவனுக்கு அதனால் அச்சமுண்டாகுமென்று அறிகிறபக்ஷம் இந்த இணக்கத்துக்காக அப்படிச் சொல்லுவது ஆகும். இது எப்போதென்னில், இரண்டுபேருக்கு நடுவே சமாதானமுண்டாக்குவதற்காகப் பேசுவதில் கூட்டிக்குறைய இருந்தால் ஆகுமென்பது போலவாம்.

ஏழாவதுவகுப்பு:—கையினாலும் காலினாலும் தடியினாலும் அடிப்பதாம். இதைச்செய்யத்தேவைப்படும்போதும் தேவையின் அளவாகவும் இது ஆகும். தேவைப்படுவது எப்போதென்றால், பாவத்தை அவன்விடாமல் செய்கிறபோதேயாம். அடித்தால் காயமாகாதபடி அடிப்பான். பாவத்தை விட்டுவிட்டால் பின்பு அடிப்பது கூடாது. ஏனென்றால், பாவஞ்செய்து தீர்ந்தபிறகு அடிப்பது தண்டிப்பு என்றும் ஹத்து என்றுமாகும். இது சுல்தானுக்குச் செல்லும். இதில் அதபாகிறது:—கையால் அடிப்பதே போதுமாயிருந்தால் தடியால் அடிக்கமாட்டான். முகத்தின்மேல் அடிக்கமாட்டான். போதாதபக்ஷம் கத்தியை உருவிக் காட்டுவது ஆகும். கத்தியைக்கொண்டு பயமுறுத்தினாலன்றி அவன் பாவத்தை விடமாட்டான் என்கிறபக்ஷம் அப்போது கத்தியை உருவிக்காட்டுவது ஆகும். தனக்கும் அவனுக்கும் நடுவே தடையான யாதொரு வாய்க்காலிருந்தால் அம்பை வில்லில் பூட்டிக்கொண்டு நீ அந்தப் பாவத்தை விட்டு நீங்கு, இல்லாமற் போனால் அம்பை எய்வேன் என்று அச்சமுறுத்துவான். அவன் அதைவிட்டு



நீங்கவில்லையானால் அம்பை எய்வது ஆகும். ஆனால் அவனுடைய தொடை கெண்டைக்கால் இவைகளுக்கு நேராகப்பிடித்து எய்வான். அபாயமான தலத்துக்கு நேராக எய்வதைவிட்டுப் பேணிக்கொள்ளுவான்.

எட்டாவது வகுப்பு:—உணர்த்துகிறவன் ஒண்டியாக இக்காரியத்தைச் செய்யப்போதாதவனாயிருந்தால் உதவிக்கு ஆட்களைச் சேர்த்துக் கும்பல் கூட்டுவதும் சண்டைபோடுவதுமாம். ஆனால் அந்தப் பாதகனும் ஆட்களைச் சேர்த்துக்கொண்டு வரவும் யுத்தத்தில் இழுத்துவிடவும் கூடும். ஆகவே சிலர் இது கலகத்தை எழுப்புவதாயும் கேட்டில் இழுத்துவிடுவதாயுமிருப்பதால் சுல்தானுடைய உத்திரவில்லாமல் இது கூடாது என்று சொல்லுகிறார்கள். இன்னும் சுல்தானுடைய உத்திரவில்லாமல் காபிர்களின்மேல் யுத்தஞ்செய்யப்போவது கூடுமாயிருப்பதுபோல் பாவிகளின்மீதும் உத்திரவில்லாமல் சண்டைக்குப் போவது கூடுமென்றும் உணர்த்துகிறவனை அவர்கள் வெட்டிப்போட்டாலும் அவன் ஷஹீதாகுவான் என்றும் சிலர் சொல்லியிருக்கிறார்கள்.

## உணர்த்துகிறவனுக்கு வேண்டிய அதபுகள்.

அறிந்துகொள்:—உணர்த்துகிறவனுக்கு இல்மும் பேணுதலும் நற்குணமும் இம்மூன்றும் அவசியமாம். ஏனென்றால், இல்மில்லையாயின் நன்மையினின்றும் தீமைகளை வகுத்தறியமாட்டான். பேணுதலில்லையாயின் அவன் வகுத்தறிகிறவனாயிருந்தபோதிலும் அவனுடைய காரியம் ஏதோ ஓர் நோக்கத்தின்மேலிருக்கும். நற்குணமில்லையாயின் ஜனங்கள் அவனைத் துன்புறுத்தும்போது அவன் தன் கோபத்தை ஊட்டுவான். அல்லாது தஆலாவை மறந்துவிடுவான். வரம்பில் நிற்கமாட்டான். எதைச் செய்கிறானோ அதை அவன் நப்ஸுடைய பங்காகவே செய்வான். அல்லாவுக்காகச் செய்யமாட்டான். அப்போது அவனுடைய உணர்த்தல் ஒர் பாவமாக மாறும். இதனாலேதான் ஹஸ்ரத்து அலி கர்ரமல்லாஹு வஜ்ஹஹு அவர்கள் அமர்களத்தில் ஓர் காபிரைக் கீழேதள்ளி அவனை வெட்டநாடினபோது அவன் அவர்களுடைய முகத்தில் எச்சிலைத் துப்பினதினால் அவர்கள் அவனை வெட்டாமல் விட்டுவிட்டார்கள். இன்னும் "அவன் எச்சில் துப்பின காரணமாக எனக்குக் கோபமுண்டாய்விட்டபடியால் அந்தச் சமயத்தில் நான் அவனை வெட்டினால் அல்லாவுக்காக வெட்டினவனாகமாட்டேனென்று பயந்தேன்" என்பதாய் அவர்கள் சொன்னார்கள். இன்னும் உமர் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஒரு மனிதனைச் சவுக்காலடித்துக்கொண்

டிருக்கும்போது, அக்கமனிதன் அவர்களைத் திட்டினான். பின்பு அப்பறை நிறுத்திவிட்டார்கள். "ஏன் நிறுத்திவிட்டீர்கள்?" என்று கேட்டதற்கு, "நான் இதுவரையில் அவனின் அல்லாஹ்க்காக அடித்தேன். இப்போது அவன் திட்டினான். இனி அடிப்பேனாகில் கோபத்தின் மேல் அடித்தவனாகுவேன்" என்று சொன்னார்கள். இன்னும் இதற்காகவே றஸூல் ஸல்லல்லாகு அலைகிவஸல்லமவர்கள் "எவனொருவன் ஏவுவதிலும் விலக்குவதிலும் இல்மும் பொறுமையும் இரக்கமும் உள்ளவனாயிருப்பானோ அவனேயன்றி மற்றவன் உணர்த்தும் வேலையைச் செய்யமாட்டான்" என்று திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும் ஹஸன்பஸரீ றகிமகுல்லா அவர்கள் "நீ யாதொன்றைப்பற்றி ஒருவனுக்கு உணர்த்த நாடுவாயாயின் முதலில் நீ அதற்கு வசப்பட்டவனாயிருந்து அதன்படி நீ செய்யவேண்டும்" என்று சொல்லுகிறார்கள். ஆனால் இது உணர்த்தும் வேலைக்கு ஓர் அதபாயிருக்கிறது என்றும் இது சரத்தல்ல. ஏனென்றால், றஸூல் ஸல்லல்லாகு அலைகிவஸல்லமவர்களுடைய சமுகத்தில் "யாறஸூலல்லா! நாங்கள் எல்லாவற்றையும் நிறைவேற்றுவதற்கு முன்னே நன்மை தீமைகளைப்பற்றி உணர்த்தாமலிருக்கலாமா?" என்று கேட்டதற்கு, நாயகமவர்கள் "அப்படியல்ல. நீங்கள் எல்லாவற்றையும் நிறைவேற்றாமற்போனாலும் சரியே, உணர்த்தும் வேலையை விட்டுவிடவேண்டாம்" என்று அருளிச்செய்தார்கள். இன்னும் உணர்த்துகிறவன் பொறுமையுள்ளவனாயும் தேகத்தின்மேல் வருகிற இம்சைகளைச் சகிக்க இஷ்டமுள்ளவனாயிருப்பது அவனுக்கு வேண்டிய அதபுகளில் ஒன்றாம். ஏனென்றால், அல்லாகு தஆலா "நீ நன்மை தீமைகளை உணர்த்தி ஏவல்விலக்கல் செய்" என்றும், "உனக்குச் சம்பவிப்பதைச் சகித்துக்கொள்" என்றும் திருவுளமாகினான். ஆகவே எவனொருவன் இம்சைகளைச் சகிக்க இயலாதவனாயிருக்கிறானோ அவனால் உணர்த்தும் வேலை ஒழுங்குபடமாட்டாது. இன்னும் முக்கியமான அதபுகளில் ஒன்றுகிறது—அவன் (அதிக குடும்பஸ்தனாயில்லாமல்) அற்ப குடும்பமுள்ளவனாயும் ஆசை குறைந்தவனாயுமிருப்பதாம். ஏனென்றால், எந்தவிடத்தில் ஆசையிருக்குமோ அந்தவிடத்தில் உணர்த்துவது ஒழிந்துபோம். மஷாயிகுமார்களில் ஒருவர் தமது பூனைக்காக ஒரு கசாயிக்காரனிடத்திலிருந்து இறைச்சியில் கொஞ்சம் வழக்கமாய் எடுத்துக்கொண்டுபோவார். அவர் ஒருநாள் அந்தக் கசாயிக்காரனிடத்தில் ஏதோ தீமையைக் கண்டார். முதலில் வீட்டுக்குப் போய் அந்தப் பூனையைத் தமது வீட்டிலிருந்து அப்புறப்படுத்திவிட்டுப் பின்பு கசாயிக்காரனிடத்தில் வந்து அந்தத் தீமையைக் குறித்து அவனைக்



கண்டித்தார். அப்போது அவன் "இனிமேல் நீர் சவ்வை எடுத்துக்கொண்டுபோகமாட்டீர்" என்று சொன்னான். அதற்கவர் "முதலில் நான் பூனையை அப்புறப்படுத்திவிட்டுப் பின்புதான் கண்டிக்க வந்தேன்" என்றார். இன்னும் எவனொருவன் தன்னை ஜனங்கள் நேசிக்கவேண்டுமென்றும் புகழவேண்டுமென்றும் தன்மீது அவர்கள் சந்தோஷமாயிருக்கவேண்டுமென்றும் நாடுகிறானோ அவனால் உணர்த்த முடியாது. கஃபுல்அஹ்பார் றலியல்லாகு அன்கு அவர்கள் அபூமுஸ்லிம் கவ்லானி றலியல்லாகு அன்கு அவர்களிடத்தில் "உம்முடைய ஜனங்களின் நடுவே உம்முடைய நிலைமை எப்படியிருக்கிறது?" என்று கேட்டார்கள். அதற்கவர்கள் "நல்விதமாயிருக்கிறது" என்று கூறினார்கள். அப்போதவர்கள் "ஒருவன் உணர்த்துகிறவனாயிருந்தால் அவன் தன் ஜனங்களுக்கு நடுவே கெட்டஸ்திதியிலிருப்பான் என்பதாகத் தவுராத்து வேதத்தில் கண்டிருக்கிறது" என்று சொன்னார்கள். அதற்கவர்கள் "தவுராத்து கூறுவது உண்மைதான், அபூமுஸ்லிம் பொய் சொல்லுகிறான்" என்றார்கள்.

இன்னும் அறிந்துகொள்:—உணர்த்துகிறவன் அந்தப் பாவியினால் பாவம் நிகழ்ந்ததைப்பற்றி அவன்மேல் பரிதாபப்படுகிறவனாயிருப்பதே உணர்த்துந் தொழிலுக்கு அடிவேரான மூலமாயிருக்கிறது. ஆகவே உணர்த்துகிறவன் அவனைக் கிருபைக் கண்ணால் பார்ப்பான். ஒருவன் தன் மகனைப் பாவத்திலிருந்து எப்படி விலக்குவானோ அப்படியே அவனை விலக்குவான். இரக்கத்தை எதிர் நோக்கத்தில் வைத்துக்கொள்ளுவான். (ஹாரூனர் ரஷீதுடைய மகனான) மாமூன் என்ற கலீபாவை ஒருவர் கடுந்துபேசிக் கண்டித்து உணர்த்தினார். கலீபா மாமூன் அவரை நோக்கி, "ஓ தைரியவீரரே! அல்லாகுதஆலா உம்மினும் மிக நல்லவரை என்னிலும் மிகக் கெட்டவனிடத்தில் அனுப்பி மிருதுவான வார்த்தைகளை வழங்கும்படி ஆக்ஞாபித்தான். அதாவது, மூஸா அலைகிஸ்ஸலாமையும் ஹாரூன் அலைகிஸ்ஸலாமையும் பிர்அவுனிடத்துக்கு அனுப்பி "நீங்கள் அவனுக்கு மிருதுவான வார்த்தையாய்ச் சொல்லுங்கள், அவன் அங்கீகரிக்கப்போதும் என அருளிச்செய்தான்" எனக் கூறினான். அன்றியும் உணர்த்துகிறவன் றஸூல் ஸல்லல்லாகு அலைகிவஸல்லமவர்களைப் பின்பற்றவேண்டும். ஒரு வாலிபர் றஸூல் ஸல்லல்லாகு அலைகிவஸல்லமவர்களுடைய சமுகத்தில் வந்து "யாறஸூலல்லா! நான் ஜினா செய்வதற்குத் தாங்கள் எனக்கு உத்தரவு கொடுக்கவேண்டும்" என்றார். அங்கிருந்த அஸ்ஹாபுகளெல்லாரும் சபித்து அவரை அதட்டி அதுவன்றி அடிக்கவும் நாடினார்கள். அப்போது நாயகமவர்

கள் அஸ்ஹாபுகளை நோக்கி, "நீங்கள் அவனைத் துன்புறுத்தம் செய்யவேண்டாம்" எனத் தடைசெய்து, அந்த வாலிபனைத் தங்கள் சமூகத்தில் அழைத்துத் தங்கள் முழங்காலுடன் அவருடைய முழங்கால் நெருங்கியிருக்கும்படி எதிரில் உட்காரவைத்துக்கொண்டு, "அய் வாலிப பருவ மெய்திய பாலியா! ஒருவன் உன் தாயோடு ஜினாச்செய்ய நீ சம்மதிப்பாயா?" என்று கேட்டார்கள். அதற்கவர் "சம்மதிக்கேன்" என்ன, நாயகமவர்கள் "அப்படியே மற்றவரும் அதற்குச் சம்மதிக்கார்" என்றார்கள். பின்பு "உன்மகளுடன் ஒருவன் இப்படிச் செய்ய நீ சம்மதிப்பாயா?" என்று கேட்டார்கள். அதற்கவர் "சம்மதிக்கேன்" என்ன, "அப்படியே மற்றவரும் அதற்குச் சம்மதிக்கார்" என்றார்கள். பின்பு "உன் சகோதரியுடன் ஒருவன் இப்படிச்செய்ய நீ சம்மதிப்பாயா?" என்று கேட்டார்கள். அதற்கவர் "சம்மதிக்கேன்" என்ன, "மற்றவரும் அதற்குச் சம்மதிக்கார்" என்றார்கள். இப்படியே மாமி, சிறியதாய், பெரியதாய் இவர்கள் ஒவ்வொருவரையும் சொல்லிக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். அவர் "சம்மதிக்கேன் சம்மதிக்கேன்" என்று ஜவாபு சொல்லிக்கொண்டு வந்தார். நாயகமவர்கள் "இதுபோலவே மற்றவரும் சம்மதிக்கார்" என்று சொல்லிக் கடைசியாய்த் தங்கள் முபாரக்கான கையினால் அவருடைய நெஞ்சைத் தடவிவிட்டு, "யாறப்பி! இவன் இருதயத்தைச் சுத்தமாக்கு, இவன் வெட்கத்தைக் காப்பாற்று, இவன் குற்றத்தைப் பொறு" என்று (இரக்கமாய்) துஆசெய்தார்கள். அப்போதவர் அந்த எண்ணத்திலிருந்து மனந்திரும்பினார். அதன் பிறகு அவருக்கு ஜினாவிலும் கொடிய பகைமையானது வேறொன்றுமிருந்ததில்லை. "சுபியானுப்னு உயைனா றலியல்லாஹு அன்ஹு அவர்கள் கல்தான் தொடுக்கும் கொண்டையை வாங்குகிறார்கள்" என்று புலையுப்னு அயாஸ் றலியல்லாஹு அவர்களிடத்தில் ஜனங்கள் சொன்னதற்கு, "பைத்துல்மாலில் அதற்குமேல் அதிகமாய் அவருடைய பங்கு இருக்கிறது" என்று அவர்கள் சொன்னார்கள். பின்பு புலையு றலியல்லாஹு அவர்கள் சுபியான் றலியல்லாஹு அவர்களைத் தனிமையில் கண்டு, அதைப்பற்றி அவர்களைக் கோபித்தார்கள். அப்போதவர்கள் "அய் அலியுடைய தகப்பனாரே! நான் சாலிஹானவர்களில் ஒருவனாயிராமற்போனாலும் சாலிஹானவர்களை நேசிக்கிறவனாயிருக்கிறேன்" என்று சொன்னார்கள். சல்மத்துப்னு அஸ்லம் றலியல்லாஹு அவர்கள், தங்கள் தோழர்களுடன் உட்கார்ந்திருந்தார்கள். அப்போது அரபிகளில் பெருமைக்காரர் செய்கிற வழக்கப்படி உடுத்தாடை பூமியில் இழுக்க உடுத்திக்கொண்டு ஒருவன் அந்தப்பக்கமாய் வந்தான். அப்படி உடுப்பது கூடாதென்று



ஷரகில் விலக்கப்பட்டிருக்கிறது. ஆகலால் அவர்களுடைய அஸ்ஹாபுகள் அவனைக் கடிந்து கண்டிக்க நாடினார்கள். அப்போதவர்கள் "நீங்கள் சும்மாயிருங்கள், நான் அதற்குப் போதுமாயிருக்கிறேன்" என்று சொல்லிப் பின்பு ஓர் சப்தமிட்டு "எ தம்பி!" என்று அவனைக் கூப்பிட்டு, "உன்னிடத்தில் எனக்கோர் ஹாஜத்திருக்கிறது" என்றார்கள். அதற்கவன் "என்ன ஹாஜத்து" என்கவே "உன் உடுத்தாடையை உயர்த்திக்கொள்ளவேண்டுமென்பதே என் ஹாஜத்து" என்றார்கள். அதற்கவன் "நல்லது அப்படியே செய்கிறேன் அதுவே சங்கை" என்றான். பின்பு அவர்கள் தங்கள் தோழர்களை நோக்கி "நாம் அவனைக் கடிந்து பேசிக் கண்டித்திருந்தால் நான் அப்படிச் செய்யமாட்டேனென்று அவன் சொல்வதோடு நம்மைத் திட்டியுமிருப்பான்" என்று சொன்னார்கள். இன்னும் ஒரு மனிதன் உருவின கத்தியும் கையுமாக ஒரு பெண்பிள்ளையைப் பிடித்துக்கொண்டிருக்கிறான். அந்தப் பெண்பிள்ளை பதறி முறையிட்டுக்கொண்டிருக்கிறாள். ஒருவரும் அவன் கிட்டே போக முடியவில்லை. அந்தச் சமயத்தில் பிஷ்ருல் ஹாபி றஹிமஹுல்லா அவர்கள் அங்கு வந்து அவனுடைய தோளோடு தங்கள் தோளை நெருங்கும்படி நின்றார்கள். உடனே அந்த மனிதன் மயக்கமாகிக் கீழே விழுந்துவிட்டான். அவன் தேகமெல்லாம் வெயர்த்து வடியத் தொடங்கினது. அந்தப் பெண்பிள்ளை அவனைவிட்டு மீட்சிபெற்றாள். அவன் தெளிவுபெற்று எழுந்த பிறகு, "உனக்கு என்ன நிகழ்ந்தது?" என்று ஜனங்கள் அவனைக் கேட்க, "எனக்குத் தெரியாது. யாரோ ஒருவர் என் அருகே வந்து என் தோளோடு தோளை பொருந்த நின்று அல்லாஹுதஆலா நீ எங்கு இருக்கிறாய் என்ன செய்கிறாய் என்பதைப் பார்த்துக்கொண்டிருக்கிறான் என்று சொன்னார். அந்த அச்சத்தினால் நான் கீழே விழுந்துவிட்டேன்" என்று கூறினான். "அப்போது உன்னிடம் வந்தவர் பிஷ்ருல் ஹாபி றஹிமஹுல்லா அவர்கள்" என்று அவனுக்குச் சொல்ல, அவன் வெட்கமுற்று, "ஆ! இந்த வெட்கக்கேட்டுடன் இனி அவர்களுடைய முகத்தில் நான் எப்படி விழிப்பேன்!" என்றான். அப்போதே அவனுக்கு ஜுரமுண்டாய்விட்டது. அதே ஜுரத்தில் அவன் ஆகிரத்தையடைந்தான்.

## மூன்றாவது பாபு—ஜகத்தில் பெருகியிருக்கிற தீமைகளின் பயானம்.

அறிந்துகொள்:—இக்காலத்தில் உலகமானது தீமைகளால் நிரம்பியிருக்கிறது. ஜனங்கள் இது சரியிருக்குமென்று நம்பிக்கையில்லாதவர்களாய்ப் போனார்கள். அன்றியும் தீமைகள் இப்படிப் பெருகிப்போனதற்குக் காரணம் யாதெனில், ஜனங்கள் எல்லாத் தீமைகளையும் விலக்க

முடியாதவர்களாயிருந்தபோதிலும், எதை விலக்க முடியுமோ அதை யும் விலக்காமல் விட்டுவிட்டார்கள். மார்க்கத்தை அநுசரிக்கும் தீன் தார்களுடைய கதியே இப்படியிருக்கிறது. மார்க்கத்தை மறந்தவர்க ளுக்கோ இது சம்மதமேயாம். ஆதலால் எதை விலக்க உன்னால் முடி யுமோ அதை விலக்காமல் நீ மௌனமாயிருப்பது கூடாது. நாம் இந் தத் தீமைகளில்நின்றும் ஒவ்வோர் இனத்தை ஒரு சாக்ஷியாகக் காட்டுவோம்: ஏனென்றால், எல்லாத் தீமைகளையும் எடுத்துக்காட்ட இடம்படாகாது. இவைகளில் சில தீமைகள் பள்ளிவாசல்களிலும், சில தீமைகள் கடைவீதிகளிலும் கடைபாட்டைகளிலும், சில தீமை கள் குளிக்கிற தண்ணீர்ப் பொறையிலும் வீடுகளிலும் நடந்துவருவன வாயிருக்கின்றன.

பள்ளிவாசல்களில் நடைபெறுந் தீமைகளாவன:—அதில் ஒருவன் றுகூகு ஸுஜூதுகளை நிறைவாகச் செய்யாமல் தொழுவான். அல்லது குர்ஆனை இராகமிட்டு ஓதுவான். அல்லது தொழுகைக்கு முஅத்தின் கள் ஒரு கூட்டமாய்ச் சேர்ந்து பாங்கு சொல்லுவார்கள். இன்னும் அதில் இராகத்தை அதிகமாய் நீட்டி இழுப்பார்கள். இது கூடாது என்று ஷரகில் விலக்கப்பட்டிருக்கிறது. இன்னும் அதில் ஹய்ய அலஸ்ஸலாத் ஹைய்ய அலல்பலாஹ் என்று சொல்லும்போது தேகம் முழுவதையும் கிப்லாவை விட்டும் திருப்புவார்கள். இவைகள் தவிர இன்னும் கதீபானவன் கருவன்னப்பட்டுடை அணிந்திருப்பான். பொன்வாள் பிடித்திருப்பான். இது ஹராமாயிருக்கிறது. இதுவுமன்றி ஜனங்கள் பள்ளிவாசலில் கூட்டங் கூடுவார்கள். கதைகள் பேசுவார் கள். பாட்டுகள் படிப்பார்கள். அல்லது தஸ்பீகு விற்பார்கள். அல் லது வேறு வஸ்துவை விற்பார்கள். இதுவுமன்றிப் பள்ளிவாசலின் பாலர்களும் பயித்தியக்காரரும் மதுபான வெறியரும் வருவதில் அவர்கள் சப்தம்போட்டால் அதனால் பள்ளிவாசலில் இருப்பவர் களுக்கு இடைஞ்சலாயிருக்கும். ஆனால் குழந்தையும் பயித்தியக்காரனும் சப்தம் போடாமலும் இடைஞ்சலுண்டாக்காமலும் பள்ளிவாசலில் அமர்ந்திருந்தாலுமிருந்தால் அவர்கள் வருவது ஆகும். ஒரு சிறு வன் எப்போதாவது அருமையாய் ஒருமுறை பள்ளிவாசலில் விளை யாடுவானாகில் அவனை விலக்குவது வாஜிபாகாது. ஏனென்றால் முதினத்துப் பள்ளியில் ஒருமுறை ஹபஷிகள் கத்தியும் கேடயமும் வைத்துக்கொண்டு விளையாடினதை ஆயிஷா றலியல்லாகு அன்ஹா அவர்கள் அதைப் பார்த்துக்கொண்டிருந்ததுமுண்டேயாம். ஆனால் பள்ளிவாசலை விளையாடுந் தானமாக எடுத்துக்கொள்ளுவார்களாகில்



விலக்கவேண்டும். பள்ளிவாசலில் ஒருவன் தையல் தைப்பானா கில் அல்லது தொப்பு எழுதுவானாகில் இதனால் ஜனங்களுக்கு யாதொரு இடைஞ்சலில்லையாதலால் இது ஆகும். அதை எப்போதும் கடையாக எடுத்துக்கொள்ளுவானாகில் மக்ருஹாயிருக்கும். இன்னும் பள்ளிவாசலில் கூச்சல் உண்டாகுவதற்குக் காரணமாயிருக்கிற யா தொரு காரியத்தைச் செய்வது கூடாது. உதாரணமாக:—வழக்குத் தீர்ப்பது, பத்திரம் எழுதுவதுபோன்ற காரியங்களை அதில் வழக்க மாய்ச் செய்துவருவது ஆகாது. ஆனால் ஒவ்வோர் சமயத்தில் ஏதா வது தீர்ப்புச் செய்ய நேரிட்டால் ஆகும். ஏனென்றால், நபி சல்லல் லாகு அலைஹிவசல்லமவர்கள் ஒவ்வோர் சமயத்தில் அங்கு தீர்ப்புச் செய்திருக்கிறார்கள். ஆனால் அது காரியத்துக்காகவே அவர்கள் அங்கு வந்திருந்ததில்லை. இன்னும் பள்ளிவாசலில் வண்ணார் துணிகளைக் காயவைப்பதும் சாயக்காரர் துணிகளுக்குச் சாயம்போடுவதும் அல் லது காயவைப்பதும் இவை எல்லாம் விலக்கவேண்டிய கருமங்களா யிருக்கின்றன. மேலும் சிலர் பள்ளிவாசலில் சபைசேர்ந்து நம்பத் தகுந்த ஹதீது கிதாபுகளில் இல்லாதவைகளும் கூடக்குறைய இருப் பவைகளுமான கிஸ்ஸாக்களைச் சொல்லுகிறார்களே அவர்களைப் பள்ளி வாசலிலிருந்து அப்புறப்படுத்தவேண்டும். ஸலபுகளான முன்னோர் கள் இப்படியே செய்திருக்கிறார்கள்.

இன்னும் சில வாயிழுகள் என்னும் பிரசங்கிகள் தங்களை அலங் கரித்துக்கொள்ளுகிறார்கள். அன்றியும் அவர்களுக்கு ஆசை மேலிட் டிருக்கிறது. பதக்கட்டான வார்த்தைகளைக்கொண்டு பிரசங்கம் செய் கிறார்கள். பாடல்களைப்பாடி இராகம் இழுக்கிறார்கள். அந்தச் சபை யில் வாலிபஸ்திரீகள் வருகிறார்கள். இது பெரும்பாவங்களிற் சேர்ந்த தாயிருக்கிறது. பள்ளிவாசலல்லாத மற்றவிடங்களிலும் இது ஆகாது. மேலும் வாயிழு என்னும் பிரசங்கியானவன் தன்னு வெளியரங்கம் திருத்தினவனையும் தினவர்களுடைய உடையும் கோலமும் கண்ணிய மும் உள்ளவனையுமிருக்கவேண்டும். அப்படியிருந்தாலும் நடுவில் யா தொரு மறைப்பில்லாமல் வாலிபஸ்திரீகளும் ஆடவர்களும் சபையில் உட்காருவது கூடாது. அன்றியும் ஆயிஷா றலியல்லாகு அன்ஹா தங் கள் காலத்தில் ஸ்திரீகள் பள்ளி வாசலுக்குப் போகக்கூடாது என்று தடுத்துவிட்டார்கள்: நபி சல்லாகு அலைஹிவசல்லமவர்களுடைய காலத்தில் ஸ்திரீகள் அப்படித் தடுக்கப்பட்டிருந்ததில்லை. நாயகமவர் கள் இப்போதிருக்கிற நிலைமையைப் பார்ப்பார்களானால் தடைசெய் வார்கள் என்று ஆயிஷா றலியல்லாகு அன்ஹா சொல்லியிருக்கிறார்கள்.

இதுவுமன்றிப் பள்ளிவாசலில் கச்சேரி செய்வதும், காசு பங்கிடுவதும், கிராமவாசிகளுடைய கணக்கு வழக்குகளைச் சரிப்படுத்துவதும், அல்லது பள்ளிவாசலில் உட்கார்ந்து வேடிக்கை விளையாட்டுகளைப் பார்ப்பதும், புறம்பேசுவதும், வீண்வார்த்தையாடுவதும் இவையெல்லாம் விலக்கவேண்டிய கருமங்களாயிருக்கின்றன. அன்றியும், இவை பள்ளிவாசலை மகிமைப்படுத்துவதற்கு மாறுமானவைகளாயுமிருக்கின்றன.

கடைவீதிகளில் நடக்கும் தீமைகளாவன:—சரக்கைக் கொள்ளவருக்குப் பொய் சொல்லுவார்கள். சரக்கிலுள்ள பழுதை மறைத்து வைப்பார்கள். தராசு, நிறைகல், அளவுகோல் இவைகளைச் சரியாய் வைத்திருக்கமாட்டார்கள். சரக்கில் சூதுசெய்வார்கள். கடைபெருநாள்களில் சங்கீதக்காரர் மீட்டுகிற இராகக்கருவிகளையும் பிள்ளைகளுக்காகப் பிராணிகளின் உருவங்களான பொம்மைகளையும் விற்பார்கள். பாரசீகர்களுடைய நவுரோஸ் என்னும் பண்டிகைநாளில் கட்டையினாலாகிய கத்திகேடயங்களை விற்பார்கள். அவர்களுடைய சதா என்னும் பண்டிகைநாளில் மண்ணினாலாகிய ஊதுகருவிகளை விற்பார்கள். ஆண்பிள்ளைகளுக்காகப் பட்டுச்சட்டை பட்டுத்தொப்பிகளை விற்பார்கள். கிழிந்ததும் பழையதுமான துணிகளுக்கு இழைபோட்டுச் சலவை செய்து புதுப்பிடவைபோல் காட்டி விற்பார்கள். இன்னும் எதில் சூதிருக்கிறதோ அதுவும் இதுபோலவேயாம். பொன்வெள்ளிகளாலாகிய தாபகலசம், கூசா, சாயுக்கூடு, வேறு பாத்திரம் இன்னுமிவை போன்றவை இவற்றிற் சில பொருள் ஹராமாயும், சில பொருள் மக்ரூஹாயுமிருக்கிறது. பிராணிகளின் உருவம் ஹராமாயிருக்கிறது. சதா, நவுரோஸ் என்னும் பண்டிகைநாளில் விற்கிற மரக்கத்திகேடயங்கள், மண்நாகரா இவை தன்னிலே ஹராமல்ல. ஆனால் நெருப்பை வணங்குகிற பாரசீகர்களுடைய பண்டிகைநாளின் அடையாளத்தை வெளிப்படுத்துகிற காரணமாக ஹராமாயிருக்கிறது. ஏனென்றால், அது ஷரீஅத்துக்கு விரோதமாயிருப்பதால் அதற்காக எதுவொன்று செய்யப்படுகிறதோ அது ஆகாது. மேலும் நவுரோஸ் பண்டிகைநாளுக்காகக் கடைகளை அதிகமாய் அலங்கரிப்பதும் மிட்டாய் முதலிய பக்ஷணங்களை மிகுதமாய்ச் செய்துவைப்பதும், சாதாரணத்துக்குமேல் புதிதான விசேஷங்களைச் செய்வதும் கூடாது. ஏனென்றால் நவுரோஸ், சதா என்ற இந்தப் பண்டிகைநாள் கூடின தரையடைந்து ஒருவரும் அதன் பெயரை எடுக்காமலிருக்கவேண்டுமென்பதற்கேயாம். இது விஷயத்தில் ஸலபுகளான முன்னோர்களிற் சிலர் இந்த நாட்களில் விற்கிறபக்ஷ



ணங்களைத் தின்னாமலிருக்கும்பொருட்டு நோன்புவைக்கவேண்டுமென்கிறவரையில் இன்னும் சதாப் பண்டிகையின் இரவில் அறவே நெருப்பைப் பார்க்காமலிருக்கும்படி விளக்கும் கொளுத்தக்கூடாதென்கிறவரையிற் சொல்லியிருக்கிறார்கள். இன்னும் இந்த நாளில் நோன்பு வைப்பதானது இதை ஞாபகம் செய்வதாயும் எவ்விதத்தினாலாவது இதன் பேரை எடுப்பதாயுமிருக்கிறதால் இதில் நோன்பு வைப்பதும் ஆகாதென்றும், மற்றும் நாட்களோடு இதைச் சமமாக்கவேண்டுமென்றும், சதாப்பண்டிகை இரவையும் இதுபோலாக்கவேண்டுமென்றும், இவற்றின்பேரும் அடையாளமுமில்லாதபடி செய்துகொள்ளவேண்டுமென்றும் விஷய விசாரணை புரிவோரான முஹக்கிகீன்கள் சொல்லியிருக்கிறார்கள்.

நடைபாட்டைகளில் விலக்கவேண்டியவை:—வழி நெருக்கமாகும்படி நடைபாட்டையில் கால்கள் நாட்டிக் கடைவைப்பார்கள். செடி நடுவார்கள். வாகனத்தின்மேல் ஏறிப்போகிறவனுக்கு இடிக்கும்படியாக நீர்விழும் தூம்பை நீட்டிவைப்பார்கள். தெருத்தாழ்வாரத்தை வெளியே நீண்டுவருவார்கள். சுமைகளை இறக்கிவைப்பார்கள். மிருகங்களைக்கட்டுவார்கள். வழியை நெருக்கமாக்குவார்கள். இவைகூடாது. ஆனால் மிருகத்தின்மேலிருந்து சுமையை இறக்கவும் வீட்டில் கொண்டுபோகவும் போதுமான நேரம்வரையில் தேவைப்படுகிறநிமித்தம் ஆகும். உடையைக் கிழிக்கும்படியான முட்சுமை ஏற்றிய ஒரு மிருகத்தை நெருக்கமான சந்துவழியாய் ஓட்டிவருகூடாது. ஆனால் அந்த வழி தவிர வேறுவழியில்லாமற்போனால் அப்போது தேவைப்படுகிற நிமித்தம் ஓட்டலாம். மிருகத்தினுடைய சக்திக்கு அதிகமாய் அதன்மேல் சுமை ஏற்றுவது கூடாது. கசாயிகாரன் நடைபாட்டையில் ஆடறுப்பது ஜனங்களுடைய பிடவைகளை அசுத்தப்படுத்துமாதலால் கூடாது. மேலும் கடையிலேயே அதற்காக ஓர் இடத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். இதுபோலவே ஜனங்களுடைய கால் சறுக்குமென்ற விதமாக வழியில் வெள்ளரி மூலிய பழத்தோலை எறிவதும் தண்ணீரை ஊற்றுவதும் கூடாது. வழியில் ஒருவன் பனிக்கட்டியைப் போட்டுவைத்தால் அல்லது அவனுடைய வீட்டுச் சாலவத்திலிருந்து விழுகிற தண்ணீரானது நடைபாட்டையில் பாய்ந்தால் வழியைச் சுத்தப்படுத்த அவன் கடமைப்பட்டவனாகுவான். பொதுவாக எல்லாவீடுகளிலுமிருந்து தண்ணீர் விழுகிறபக்ஷம் எல்லார்பேரிலும் கடமையாகும். ஜனங்களை இக்காரியத்தின்மேல் பொருத்துவது அதிகாரிக்குச் செல்லும். ஒருவன் தன்வீட்டு வாசற்படியில் மனிதர்களுக்

குப் பயங்கொடுக்கிற ஒரு நாயைக் கட்டிவைப்பது கூடாது. நாயானது ஜனங்கள் நடக்கும் வழியை நஜீஸாக்குவது மாத்திரமேயன்றி அதனால் வேறு யாதொரு இம்சையுமில்லையானால் அப்பேர்ப்பட்ட நாயை நீக்கும்படி உணர்த்துவது கூடாது; ஏனென்றால் அந்த நஜீஸை விட்டும் ஒதுங்கிப்போகக் கூடுமாதலாலென்க. நாயானது வழி நெருக்கமாகும்படிப் பாதையில் படுத்திருப்பது கூடாது. அதை விலக்க வேண்டும். மேலும் நாய்க்குடையவனே வீதியில் உட்கார்ந்திருந்தாலும் படுத்திருந்தாலும் கூடாது.

தண்ணீர்ப்புரையில் விலக்கவேண்டியவை:—குளிப்பவன் தொப்பூழ்முதல் முழங்கால் வரையிலுமுள்ள மானத்தை மறைக்கமாட்டான். அல்லது தேய்த்து அழுக்கைப் போக்கும் பொருட்டு முன்னால் நின்று தொடையைத் திறப்பான். மேலும் உடுத்தாடைக்குள் கையை விட்டுத் தொடையைத் தொடுவானாயினும் கூடாது. ஏனென்றால் தொடுவதும் பார்ப்பது போலவேயாம். தண்ணீர்ப் புரையின் சுவர்களில் உயிரினங்களின் உருவமெழுதியிருப்பதும் விலக்க வேண்டியவைகளில் ஒன்றாம். அந்த உருவத்தை அழிப்பது அல்லது அந்தத் தண்ணீர்ப் புரையிலிருந்து அப்புறப்படுவது வாஜிபாகும். நஜீஸாயிருக்கிற கையையும் பாத்திரத்தையும் கொஞ்சத் தண்ணீரில் போடுவது ஷாபியீ மத்ஹபில் கூடாது. மாலிகீ மத்ஹபுக்காரன் அப்படிச் செய்தால் அவனுக்கு அது கூடுமாதலால் அவனைக் கண்டிக்கலாகாது. இவைகள் தவிர இன்னும் விலக்கவேண்டியவைகளிருக்கின்றன. அவைகளைத் தஹாரத்துடைய பாடத்தில் கூறிவந்திருக்கிறோம்.

விருந்துண்ணப் போகுமிடத்தில் விலக்கவேண்டியவை:—அங்கு பட்டு விரிப்பு விரித்திருக்கும். வெள்ளியினாலாகிய தூபகலசமும் பன்னீர்ச்செம்புமாகிய இவைகளும் வைக்கப்பட்டிருக்கும். உருவமெழுதிய திரைகள் விடப்பட்டிருக்கும். எங்கிலும் விரிப்பு, தலையணை இவைகளின்மீது உருவங்களிருப்பது ஆகும். யாதொரு பிராணியினுடைய ரூபமாகச் செய்யப்பட்டுள்ள தூபகலசம் ஆகாது. இராக வாத்தியத்தைக் கேட்பதும் வாலிப ஆடவர்களை வாலிப ஸ்திரீகள் பார்ப்பதுமான இது யாவும் கெடுதிகளுக்கு விதையாகும். இவைகளெல்லாவற்றின்மீதும் கண்டித்து உணர்த்துவது வாஜிபாகும். உணர்த்த முடியாமற்போனால் அந்தவிடத்தை விட்டும் வெளியே போய்விட வேண்டும். அஹ்மது ஹம்பல் றஹிமஹுல்லா அவர்கள் ஒருவிடத்தில் வெள்ளியினாலாகிய சுருமாக் கூட்டைக் கண்டநிமித்தம் அங்கிருந்து எழுந்து வெளியே போய்விட்டார்கள். இன்னும் இதுபோலவே விருந்



துண்ணப் போனவிடத்தில் பட்டுடை அணிந்திருக்கிற அல்லது பொன்மோதிரம் தரித்திருக்கிற ஒரு மனிதனைக் கண்டால் அங்கு உட்காருவது கூடாது. தமீசை (பகுத்தறிவை) அடைந்திருக்கிற ஒரு சிறுவன் பட்டுடை அணிவதும் ஆகாது. ஏனென்றால், சாராயம் எப்படி ஹறாமாயிருக்கிறதோ அப்படியே இது முஸ்லிமான ஆண் பிள்ளைகள்பேரில் ஹறாமாயிருக்கிறது. அன்றியும் சிறுவன் இதை வழக்கப்படுத்திக் கொள்ளுவானாகில் வாலிபத்திலும் அவனுக்கு அதன் ஆசையுண்டாகும். தமீசை அடையாத சிறுவனாயிருந்து அவனுக்கு அதன் இன்பம் தெரியாமற்போனால் அணிவது மக்ரூஹாகும். என்றாலும் இது ஹறாமுக்கு நெருங்கினதாயிராது. விருந்து சபையில் ஒரு விகடனிருந்து கெட்ட வசனங்களாலும் பொய்ப் பேச்சுகளாலும் ஜனங்களைச் சிரிக்கும்படிச் செய்வானாகில் அவனுடன் அங்கு உட்காருவது கூடாது. இன்னும் விலக்கவேண்டியவைகளின் விஸ்தரிப்பு அநேகமாயிருக்கிறது. இவ்வளவைத் தெரிந்துகொண்டாயானால் இனி மதரஸா, கான்கா, நியாயஸ்தலம், இராஜசபை முதலிய இடங்களில் விலக்கவேண்டியவைகளை இதன்மேல் உத்தேசித்துக்கொள்.

## பத்தாவது அஸ்லு: அரசாளுவது அதிகாரம்செலுத்துவது இவைகளின் பயான்.

அறிந்துகொள்:—அரசாளுவதானது பெரிய ஓர் காரியமாயிருக்கிறது. அதில் நீதிவழுவாமலிருக்கிற பக்ஷம் பூமியில் அது அல்லாஹு தஆலாவுடைய கிலாபத்தாகும். நீதியும் இரக்கமும் இல்லாத பக்ஷத்தில் அது ஷைத்தானுடைய கிலாபத்தாகும். ஏனென்றால், அரசனுடைய கொடுமையினாலுண்டாகிற கேட்டினும் மிகப் பெரியது யாதொன்றுமில்லை. இராஜரீகம் செய்வதற்கு இல்மாகிய அறிவும் அமலாகிய நன்னடக்கையும் அடிவேராம். இராஜரீகத்துடைய இல்மு மிக விரிவானதாயிருக்கிறது. எங்கிலும் அந்த இல்முகளுக்கு அஸ்திபாரமானது அடியிற் கூறுவதை அரசன் அறிந்திருப்பதேயாம். அதாவது:—

தன்னை இவ்வுலகத்துக்குக் கொண்டுவந்ததும் (தனக்கு இராஜவிருதாகிய கொடியைக் கொடுத்ததும்) எதற்காக என்பதையும், தனது எதார்த்தமான இருப்பிடம் எங்கேயிருக்கிறது என்பதையும் உற்றுணரவேண்டும். இன்னும் துன்யாவானது தங்கிச்செல்லும் சத்திரமேயல்லாமல் தரித்திருக்கிற இடமல்லவென்றும், தான் ஒரு முசாபிரைப் போலிருக்கிறான் என்றும், தான்போகிற சபரில் தாயினுடைய கருப்

யையானது தன்னுடைய முந்தின மன்ஜில்களென்றும், கப்ரானது கடைசி மன்ஜில் என்றும், தனது சொந்தவூர் இதுவல்லவென்றும், அதுவேறே யிருக்கிறதென்றும், தன் வாழ்நாளில்நின்றும் கழிகின்ற ஒவ்வோர் வருஷமும் ஒவ்வோர் மாசமும் ஒவ்வோர் நாளும் தனது சபரில் கழிய வேண்டிய ஒவ்வோர் பிரயாணமாயிருக்கிறதென்றும், அதனால் தன் எதாஸ்தானமாகிய சொந்தவூருக்கு நெருங்கிக்கொண்டிருக்கிறான் என்றும் அறிந்துகொள்ளவேண்டும். ஆற்றைக் கடந்துபோகவேண்டிய ஒருவன் அதற்குரிய சாதனமாகிய பாலத்தைக் கட்டமுயற்சிக்காமலும், தான்போய் இறங்கவேண்டிய இடத்தின் நினைவேயில்லாமலுமிருந்தால் அவன் புத்தியில்லாதவனாகுவான். மேலும், துன்யாவென்னும் மன்ஜிலில் ஆகிரத்துக்கு வேண்டிய தக்கரிப்பைத் தேடியும், மற்றவைகளில் பராக்காகாமலும் துன்யாவில் நின்றும் அவசியத்துக்குமேல் அதிகமாய்த் தேடாமலுமிருப்பவன் எவனோ அவனே புத்தியானவான். அதிகமாய்த் தேடுவதானது அவனைக் கொல்லுகிற நஞ்சாயிருக்கிறது. மவுத்துடைய நேரத்தில் (அவன் மிகவும் கைசேதப்பட்டு ஆ!) என்னுடைய எல்லாப் பொக்கிஷங்களும் மண்ணால் நிரம்பி அவற்றில் பொன் வெள்ளி முதலிய பொருள்களில்லாமலிருந்தால் நலமாயிருந்ததே என்று நினைப்பான். ஆகவே, அவன் அதிகமாக எவ்வளவைத் தேடினாலும் அதில் நின்றும் அவனுக்கு அவசியமாய்த் தேவையாகின்ற அளவோ அவனுடையதாகும். மற்றவைகளெல்லாம் அவனுக்குத் துக்கத்தை விளைவிக்கச் செய்கிற வினையாகும். மரணத்தின்போது உயிரை வாங்குவது அவனுக்கு மிகவும் கஷ்டமாயிருக்கும். இந்தத் துக்கமும் கஷ்டமும் அந்தப் பொருள் ஹலாலாயிருப்பதில்மாத்திரமேயாம். ஹராமாயிருந்தால் ஆகிரத்துடைய அதாபு இந்தத் துக்கத்திலும் கடினமாயிருக்கும். வருத்தமில்லாமல் துன்யாவுடைய இச்சைகளை அடக்கி சபுருசெய்ய முடியாது. ஆனால் துன்பமும் கலக்கமுமுள்ளதாகும் அற்பகாலம் அநுபவிக்கக் கூடியதுமான இவ்வின்பத்தினால் முடிவில்லாத நித்தியராஜரீகமாயும் யாதொரு கலக்கமில்லாததாயுமிருக்கிற ஆகிரத்துடைய அந்த இன்பத்தை இழந்துவிடுவோமென்று எண்ணிக்கொண்டிருந்தால் கொஞ்சகாலம் சபுருசெய்வது இலேசாகும். இதனுக்கு உபமானமாவது:—மஃஷூக்காகிய ஒரு ஸ்திரீயின்மேல் மோகங்கொண்டிருக்கிற ஒரு மனிதனை நோக்கி "நீ இன்றிரவில் உன் மஃஷூக்கினிடம் போகிறபக்ஷம் இனி எப்போதும் அவளை நீ பார்க்கமாட்டாய்" என்றும், "இவ்விரவு மாத்திரம் சபுரு செய்வாயாகில் பின்பு ஆயிரம் இரவுகள் வரையில் யாதொரு தீங்கும்



கலக்கமுமில்லாமல் அவளை உன்வசம் ஒப்புவிக்கப்படும்" என்றும் சொன்னால், அப்போது அவனுடைய மோகதாபமானது அளவுக்குமேல் அதிகரித்திருந்தாலும் ஆயிரம் இரவுகளுக்கு இன்பத்தை அடையலாமென்ற ஆதரவினால் ஒரு இரவு பொறுத்துக்கொள்வது அவனுக்கு இலேசாகும். துன்யாவுடைய காலமானது ஆகிரத்துடைய காலத்துக்கு ஆயிரத்திலொருபங்குமல்ல. மேலும் அதற்கு ஆகிரத்துடைய காலத்துடன் யாதொரு சம்பந்தமுமில்லை, ஏனென்றால் அது முடிவில்லாததாயிருப்பதினாலேயாம். அபது என்னும் காலத்துடைய நீட்சியானது மனிதனுடைய புத்தியில் அமையாது. ஏனெனில், ஏழுவானமும் பூமிகள் நிரம்பக் கேழ்வரகைக்கொட்டி ஒரு பக்ஷியானது அதில் ஆயிரம் வருஷத்துக்கொருவித்தாக எடுத்துத்தின்று அந்தக்கேழ்வரகெல்லாம் செலவாய்ப் போனதாகப் பாவித்துக்கொண்டால் அப்போதும் அபது என்னும் காலத்தில் அற்பமும் குறையாது. ஆகவே, மனிதனுடைய வயது உலகத்தில் நூறுவருஷமாயிருந்து மஷ்ரிகு தொடுத்து மக்ரிபு வரையிலுமுள்ள பூமியினுடைய இராச்சியமெல்லாம் யாதொரு கலக்கமும் சச்சரவுமில்லாமல் அவனுக்கு வசப்பட்டிருந்தாலும் முடிவில்லாத ஆகிரத்தை நோக்க இதற்கு என்ன கணக்கிருக்கிறது? பின்பு (பார்க்கப்போனால்) ஒவ்வொருவனுக்கும் துன்யாவில்நின்றும் கொஞ்சமே கிடைத்திருக்கிறது. அதுவும் துன்பமும் கலக்கமுமுள்ளதாயிருக்கிறது. எந்தச் செல்வத்திலிருந்தாலும் இன்னும் அதற்குமேல் ஆக்கவேண்டுமென்ற இச்சையுள்ள ஜனங்கள் அநேகம்பேர் இருக்கிறார்கள். அப்படியிருக்க, எப்போதுமழியாத அந்த இராஜரீகத்தைத் துன்பங் கலந்த இந்த அற்ப வாழ்க்கைக்கு விற்க எப்படி விதித்துக்கொள்ளுவான்? ஆகவே அரசனாயிருப்பவனும் அப்படியில்லாதவனும் இதை எப்போதும் தன் மனதில் சிந்தித்துப் பார்த்து அடிக்கடி இதைத் தன் இருதயத்துக்கு எடுத்துக்காட்டிக்கொண்டிருக்கவேண்டும். அப்போது துன்யாவுடைய இச்சைகளை அடக்கிக் கொஞ்சநாள் சபுருசெய்யவும், பிரஜைகளின்மேல் மனமிரங்கவும், அல்லாகுதஆலாவுடைய அடிமைகளை நல்லவிதமாய் நடத்தவும், அவனுடைய கிலாபத்தென்னும் இராஜரீக வேலையை நீதியுடன் நிறைவேற்றவும் அவனுக்குச் சுலபமாயிருக்கும். அரசன் இதை அறிந்துகொண்டதின் பிறகு அல்லாகுவுடைய ஆக்கினையைப்படி அரசாளுவதில் பராக்காகுவான். தனது துன்யாவுக்கு இணக்கமான விதமாய் அரசாட்சி செய்வான். அல்லாகு தஆலாவினிடத்தில் நீதியோடு அரசாளுவதினும் அதிகப் பெரிய இபாதத்து எதுவுமில்லாமலிருக்கலாம். நீதிமானாகிய சுல்தான்

ஒருநாளைக்கு நீதி செலுத்துவதானது அறுபது வருஷம் இடைவிடாமல் இபாதத்து செய்வதைக்காட்டிலும் அதிகவரிசையுடையதென்று நபி ஸல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும் கியாமத்து நாளில் ஏழுபேர் அல்லாகு தஆலாவுடைய (அருஷெயி) நிழலில் இருப்பார்களென்று ஹதீதில் வந்திருக்கிறதே, அவர்களில் முதலாவன் நீதிமானாகிய சுல்தானேயாம். இன்னும் "பாதுஷாக்களில் இபாதத்து செய்கின்ற அறுபது சித்திக்களென்னும் சத்திய புருஷர்களுடைய அமல்போன்றதைத் நீதிமானாகிய சுல்தானுக்காகத் தினந்தோறும் மலக்குகள் வானத்துக்கு எடுத்துக்கொண்டு போகிறார்கள்" என்றும், "அல்லாகு தஆலாவுக்கு அதிகப் பிரியமுள்ள சிநேகனும் மிகநெருங்கினவனுமாயிருப்பவன் நீதிமானாகிய சுல்தான்" என்றும், "பெரும்பகைவனும் அதிக வேதனைக்கு ஆளாயிருப்பவன் கொடுங்கோலனாகிய சுல்தான்" என்றும் நபி ஸல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும் "எந்த நாயகனுடைய வல்லமையான கையில் என் உயிர் இருக்கிறதோ அந்த நாயகன்பேரில் ஆணையாக நீதிமானாகிய சுல்தானுக்காகத் தினந்தோறும் வானத்துக்கு உயர்த்தப்படுகிற அமலானது அவனுடைய எல்லாப் பிரஜைகளின் அமலத்தனையாயிருக்கும்" என்றும், அந்த "அமல்களில் ஒவ்வொரு தொழுகையானது எழுபதினாயிரம் தொழுகைகளுக்குச் சமமாயிருக்கும்" என்றும் திருவுளமாயிருக்கிறார்கள். இப்படியிருந்தால், அல்லாகு தஆலா ஒருவனுக்கு அரசாட்சியைக் கொடுத்து அதனால் அவனுடைய வாழ்நாளில் ஒருநாள் அத்துணை நேரமானது மற்றவனுடைய வாழ்நாள் முழுமைக்கும் சமமாய்ப் போவதைக் காட்டிலும் பெரிய கொள்ளை வாழ்க்கை என்ன இருக்கிறது? ஒருவன் இந்த நிஃமத்தான செல்வத்தினுடைய நன்றியை அறியாமல் கொடுமை புரிவதிலும் தன் இச்சையைப் பாராட்டுவதிலும் பராக்காகுவானாகில் அவன் அல்லாவுடைய பகைக்கும் அதாபுக்கும் ஆளாகுவானென்பது நன்கு விளங்கும்.

இனி இந்த நீதியானது பத்து காயிதாக்களை கவனித்துக் கொள்வதினால் கைப்பட்டுவரும். முதலாவது காயிதா:—அரசன் தன் சமூகத்துக்குக் கொண்டு வரப்படுகிற வழக்கில் தன்னை ஒரு பிரஜையாகவும் சுல்தான் வேறே யொருவன் இருக்கிறான் என்றும் எண்ணிக் கொள்ளவேண்டும். எதைத் தனக்குப் பிரியப்படாமலிருக்கிறானோ அதை மற்றொரு முஸ்லிமுக்கும் பிரியப்படான். அப்படிப் பிரியப்படுவானாகில் அவன் தனது அரசாட்சியில் அக்கிரமமாகவும் துரோகத்தொழில் புரிந்தவ



னென்றாகுவான். பதுருசண்டையில் அஸ்ஹாபுகள் வெயிலில் இருக்க நபி ஸல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் நிழலில் உட்கார்ந்திருந்த நிமித்தம் ஜிபுரயீல் அலைகிஸ்ஸலாம் வந்து (நபிகள் நாயகமே!) "தங்கள் அஸ்ஹாபுகள் வெயிலில் இருக்கத் தாங்கள் நிழலிலிருக்கிறீர்களே" என்று சொன்னார்கள். இவ்வளவுக்காக அவர்களை உறுத்தப்பட்டது. இன்னும் நபி ஸல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் தங்கள் திருவாயினால் "யாராவதொருவன் நரகத்தைவிட்டும் மீட்சி பெறுவதற்கும் சொர்க்கத்திற் பிரவேசிப்பதற்கும் நாடுவானாகில் அவன் மரணத்தை யடையும்போது லாஇலாஹ இல்லல்லாஹு என்ற கலிமாவின்பேரிலும், தனக்குப் பிரியமில்லாததை மற்றெந்த முஸ்லிமுக்கும் பிரியப்படாதவனாயுமிருந்து மரணத்தை யடையவேண்டும்" என்று அருளிச்செய்திருக்கிறார்கள். இன்னும் "ஒருவன் காலை நேரத்தில் எழுந்திருக்கும்போது அவனுக்கு அல்லாகு தஆலாவுடைய நாட்டமன்றி வேறுநாட்டமிருக்குமாகில் அவன் அல்லாவுடைய ஆள்பிள்ளையல்ல" என்றும், "முஸ்லிம்களுடைய காரியத்தையும் அவர்களுக்காக உருக்கப்படுவதையும் விட்டு ஒழிந்திருப்பானாகில் அவன் அவர்களிற் சேர்ந்தவனாகான்" என்றும் திருவுளமாயிருக்கிறார்கள்.

இரண்டாவது காயிதா:—கோரிக்கை யுள்ளவர்கள் தன்னுடைய சமூகத்தை எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருப்பதை இலேசாக எண்ணாமல் அரசன் அதற்கு மிகவும் பயந்துகொண்டிருக்கவேண்டும். ஒரு முஸ்லிமுக்கு யாதொரு கோரிக்கை இருக்கிறவரையில் நப்லான எந்த இபாதத்திலும் பராக்காகமாட்டான். ஏனென்றால், முஸ்லிம்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றுவதானது எல்லா நபுல்களிலும் மிக வரிசையுள்ளதாயிருக்கிறது. உமருப்னு அப்தில் அஜீஸ் என்னும் கலீபாசர் ஒருநாள் ஜனங்களுக்கு நடுவே நியாய விசாரணை புரிந்து கொண்டிருந்து ளுஹர் தொழுகையின்போது கொஞ்சம் சோர்வடைந்து சற்றுநேரம் சயனித்து வரலாமென்று அரண்மனைக் கேகினார். அப்போது அவருடைய குமாரர் (அவரை விளித்து, "ஓ என் தந்தையே!) இந்த நேரத்தில் மறுத்து வருவதையும், ஒருவன் ஒரு கோரிக்கை விஷயமாய்த் தங்கள் கொலுமண்டபத்தில் வந்து காத்துக்கொண்டிருப்பதையும், அவனால் தாங்கள் குற்றவாளியாகுவதையும் பயப்படாமல் தங்கள் அச்சம் நீங்குவதற்குக் காரணம் யாது?" என்று கூறினார். அதற்கவர் "ஆம் நீ சொன்னது சரியே" யென்று உரைத்து அக்கணமே எழுந்து வெளியே போய்விட்டார்.

மூன்றாவது காயிதா:—அரசனானவன் தன் இச்சைகளில் பராக்காகி நல்ல உடையை உடுப்பதற்கும் நல்ல உணவை உண்பதற்கும் வழக்கப்படுத்தாமல் எல்லா வஸ்துக்களிலும் கொஞ்சத்தின்பேரில் போதுமாக்கிக்கொள்வதாம். ஏனென்றால், அப்படிப் போதுமாக்கிக் கொள்ளாமல் (அதிகத்தை விரும்பினால்) நீதி செலுத்தமுடியாது. உமர் றலியல்லாகு அன்கு அவர்கள் சல்மான் றலியல்லாகு அன்கு அவர்களை நோக்கி "நீர் என்னுடைய விஷயங்களில் உமக்குப் பொருத்தமில்லாத விஷயம் ஏதாவது கேள்விப்பட்டிருக்கிறீரா?" என்று வினவினார்கள். அதற்கவர்கள் ஆம், தங்களுடைய போஜனமேசையில், ஒரேநேரத்தில் இரண்டுவகைக் கறிகள் வைத்திருப்பதாயும். இரவுக்கொரு உடையும் பகலுக்கொரு உடையுமாக இரண்டு உடுப்புகள் வைத்திருக்கிறதாயும் கேள்விப்பட்டேன்" என்று கூறினார்கள். அப்போதவர்கள் "இதைத் தவிர இன்னும் ஏதாவது கேள்விப்பட்டிருக்கிறீரா?" என்று வினவ, அவர்கள் "இல்லை" எனச் சொன்னார்கள். அப்போது உமர் றலியல்லாகு அன்கு அவர்கள் "நீர் கேள்விப்பட்ட இந்த இரண்டுங்கூட நிஜமல்ல" என்று கூறினார்கள்.

நாலாவது காயிதா:—அரசன் கூடியவரையில் எல்லாக் காரியங்களின் ஏற்பாட்டைச் சுளுவின்மேல் வைக்கவேண்டும். அது கடினமாயிருக்கக்கூடாது. றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் தங்கள் திருவாயினால் "பிரஜைகளுக்குச் சுளுவான ஏற்பாடு செய்கிற எந்த அரசனுக்கும் கியாமத்தில் சுளுவாக்கப்படும்" என்று அருளிச் செய்திருப்பதுமன்றி, "என்னுடைய றப்பே! எந்த அரசன் தன் பிரஜைகளுக்குச் சுளுவாக்குகிறானோ அவனுக்கு நீ சுளுவாக்கு. அவன் கடினமாக்கினால் நீ அவனுக்குக் கடினமாக்கு" என்று துஆவும் செய்திருக்கிறார்கள். இன்னும் "அரசபுரியும் ஏக்கை நிறைவேற்றக்கூடியவன் எவனோ அவனுக்கே அத்தொழில் நல்லதாகும்" எனவும், "அதில் குறைசெய்பவனுக்கு அது கெட்டதா யிருக்கிறதெனவும்" திருவுளமா யிருக்கிறார்கள். கலீபாக்களில் ஒருவனாயிருந்த ஹிஷாமுப்னு அப்துல் மலிக்கு என்பவன் மகாமான்களான உலமாக்களில் ஒருவராகிய அபூஹாஸிம் றஹிமகுல்லா அவர்களை நோக்கி, "இத்தொழிலில் (ஆளும் ராஜாங்கம்) ஈடேறுவதற்கு என்ன ஏற்பா டிருக்கிறது?" என்று வினவினான். அதற்கவர்கள் "நீ வாங்குகிற ஒவ்வொரு திர்ஹத்தையும் ஹலாலான வகையாய் வாங்கி ஹக்கான வழியில் செலவு செய்" என்று சொன்னார்கள். அதற்கரசன் "இது யாரால் முடியும்?" என்றான். அப்போதவர்கள் "எவன் நரகத்தைத் தாங்கச் சக்தியுடையவனா



னும் சொர்க்கத்தை ஆசிப்பவனுமா யிருக்கிறானோ அவனால் முடியும்" என்றார்கள்.

ஐந்தாவது காயிதா:—அரசனானவன் எல்லாப் பிரஜைகளும் தன்மேல் சந்தோஷமாகும்படி முயற்சிக்கவேண்டும். அந்த முயற்சி ஷறகுக்கு ஒற்றுமைப்பட்டதாயு மிருக்கவேண்டும். றசூல்சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் "எந்த அரசர்கள் உங்களை நேசிப்பவர்களாயும் நீங்கள் அவர்களை நேசிப்பவர்களாயுமிருப்பீர்களோ அவர்களேமிக நல்ல அரசர்கள்" என்றும், இன்னும் "எந்த அரசர்கள் உங்களைப் பகைப்பவர்களாயும், நீங்கள் அவர்களைப் பகைப்பவர்களாயும், அவர்கள் உங்களை லஃனத்து செய்பவர்களாயும், நீங்கள் அவர்களை லஃனத்து செய்பவர்களாயு மிருப்பீர்களோ அவர்களே மிகக்கெட்ட அரசர்கள்" என்றும் திருவுளமா யிருக்கிறார்கள். இனி அரசனானவன் தன்னுடைய சமுகத்துக்கு வருகிற எல்லாரும் தன்னைத் துதித்துப் புகழ்கின்றார்களென மருண்டு கர்வங்கொள்ளக்கூடாது. தன்மேல் எல்லாரும் சந்தோஷமா யிருக்கிறார்கள் என்று எண்ணக்கூடாது. ஏனென்றால், அவர்கள் அச்சத்தினால் அவ்வாறு புகழவுங் கூடுமாதலாலென்க. ஆகவே அரசன் நம்பிக்கையுள்ளவர்களைப் புலம்வைத்து அவர்களால் தன்னுடைய சங்கதிகளை ஜனங்களிடத்தில் விசாரித்து வரும்படி செய்யவேண்டும். அப்போது ஜனங்களுடைய வாய்மொழியால் தன்னுடைய குறைகளைத் தெரிந்துகொள்ளக்கூடும்.

ஆறாவது காயிதா:—அரசனானவன் ஷறகுக்கு விரோதம்செய்து எவருடைய பொருத்தத்தையும் தேடக்கூடாது. ஷறகுக்குப் பொருத்தமான காரியத்தில் ஒருவன் பொருத்தமில்லாமல் பிணங்குவானாகில், அந்தப்பிணக்கம் அரசனுக்கியாதொரு நஷ்டத்தையும் தராது. உமர் றலியல்லாகு அன்கு அவர்கள் சொல்லுகிறதாவது:—"நான் தினந்தோறும் (கொலுவைவிட்டு) எழும்பும்போது அரைவாசி ஜனங்கள் என்மேல் பொருத்தமில்லாமல் பிணங்குவார்கள். இது இன்றியமையாப் பிணக்கமேயாம். ஏனென்றால், நியாயமில்லாத வழக்காளிக்குப் பிரதிகூலமாக நியாயத்தீர்ப்பு செய்தால் அவன் பிணங்கவே பிணங்குவான். ஆகவே இரண்டு வழக்காளிகளையும் சந்தோஷப்படுத்துவது அசாத்தியமாம். இனி ஜனங்களுடைய பொருத்தத்துக்காக அல்லாகு தஆலாவுடைய பொருத்தத்தை விட்டுவிடுகிறவன் எவனோ அவன் பெரிய மூடனாயிருப்பான். மஆவியா றலியல்லாகு அன்கு அவர்கள் ஆயிஷா றலியல்லாகு அன்கா அவர்களுக்குக் காயித மூலமாகத் "தாங்கள் சுருக்கமாக எனக்கு ஏதாவது நஸீஹத்து செய்யுங்கள்" என்று

எழுதியனுப்பினார்கள். அதற்கு அம்மா அவர்கள் எழுதின ஜவாபா
வது:—"எவனொருவன் அல்லாகு தஆலாவைக் கோபப்படுத்துவதில்
ஜனங்களுடைய சந்தோஷத்தைத் தேடுவானாகில் அவன்மேல் அல்
லாகுதஆலா பொருத்தமில்லாமலிருப்பதுடன், ஜனங்களையும் அவன்
மேல்பொருத்தமில்லாமல் பிணங்கச் செய்வான் என்று றசூல் சல்லல்
லாகு அலைகிவசல்லமவர்கள் அருளக் கேட்டிருக்கிறேன்" என்பதே.

ஏழாவது காயிதா:—அரசாளும் அபாயம் கடினமானதென்றும்,
அல்லாகு தஆலாவுடைய சிருஷ்டிகளின் காரியமாய் அதிகண்டத்தில்
தலையிட்டுக்கொள்வது அபாரமான வேலையென்றும் அரசன் அறிந்
திருக்கவேண்டும். அரசுபுரியும் ஹக்கை நிறைவேற்ற அருள் பெற்ற
வன் எவனோ அவன் இணையில்லாத பெரிய சீர்வரிசைத் தனத்தை
அடைந்தான். அதில் குறை செய்வானாகில் குபுருக்குப் பிறகு இத
ற்கு நிகரில்லை யென்றவிதமான பெரிய துர்ப்பாக்கியத் தனத்தில் விழு
வான். இபுனு அப்பாஸ் றலியல்லாகு அன்குமா அவர்கள் ரிவாயத்து
செய்கிறதாவது:—ஒருநாள் றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்
கள் கஃபத்துல்லாவினிடம் வந்து அதன் றெல்காவைப் பிடித்தார்
கள். ஹரமில் சில குறைஷிக ளிருந்தார்கள். அப்போது நாயகமவர்
கள் (பேசத்தொடங்கி) "குறைஷிகள் மூன்று காரியங்களை நிறைவே
ற்றி வருகிறவர்களா யிருக்கிறவரையில் அரசர்களும், சுல்தான்களும்
அவர்களில் உண்டாகுவார்கள்" என்றும், (அந்த மூன்று காரியங்கள்
யாதெனில்) "அவர்களிடத்தில் ஜனங்கள் அன்பைத்தேடினால் அன்பு
புரிவதும், வழக்குச்சொல்லித் தீர்ப்புகேட்டால் நீதிபுரிவதும், அவர்க
ளுடைய சொல்லும் செயலும் சரியா யிருப்பதுமாம்" என்றும்
"எவனாயினும் இப்படிச் செய்யாமற்போனால் அவன்மேல் அல்லாகு
தஆலாவுடையவும், மலக்குகளுடையவும், மற்றும் சிருஷ்டிகளுடை
யவுமான லஃனத்துண்டாகும்" என்றும், "அல்லாகுதஆலா அவனு
டைய பர்ளையும் கபூல் செய்யமாட்டான், சுன்னத்தையும் கபூல்
செய்யமாட்டான்" என்றும் அருளிச்செய்தார்கள் என்பதே. இப்
போது நோட்டமிடு. இமாரத்து கபூலாகாம லிருப்பதற்கு எது கார
ணமா யிருக்கிறதோ அது எவ்வளவு பெரிய ஓர் காரியமா யிருக்குமா
மென்பதை யோசி. இன்னும் "இரண்டுபேருக்கு நடுவே தீர்ப்பளிப்ப
தில் அக்கிரமம் செய்பவன் எவனோ" என்றும், "அக்கிரமக்காரர்மீது
அல்லாகுவுடைய லஃனத்துண்டாவதாக" என்றும் றசூல் சல்லல்லாகு
அலைகிவசல்லமவர்கள் சபித்திருக்கிறார்கள். இன்னும் "மூன்றுபேர்
இருக்கிறார்கள்" என்றும், "கியாமத்து நாளில் அல்லாகுதஆலா அவர்



களைப் பார்க்கமாட்டான்" என்றும், (அவர்களாரென்றால்) "பொய்
பேசுகிற சுல்தானும், ஜினாச்செய்கிற கிழவனும், பெருமையடிக்கிற
பகீருமாம்" என்றும் திருவுளமா யிருக்கிறார்கள். அன்றியும், அஸ்
ஹாபுகளை நோக்கி, "சமீபகாலத்தில் மஷ்ரிகுமக்ரிபுடைய தேசங்கள்
உங்களுக்கு வெற்றியாகும்" என்றும், "அவை உங்களுக்கு ஐக்கியப்
படும்" என்றும், அப்பக்கங்களின் ஆமில்களான உத்தியோகஸ்தர்க
ளெல்லாம் நரகத்தில் சேர்வார்கள்" என்றும், "ஆனால் அவர்களில்
எவனொருவன் அல்லாகு தஆலாவுக்குப் பயப்படுகிறவனும், தக்
வாவுடைய வழியை எடுக்கிறவனும், அமானத்தை நிறைவேற்றுகிற
வனும் இருப்பானோ அவன் அப்படியாகான்" என்றும் திருவுளமா
யிருக்கிறார்கள். இன்னும் "அல்லாகு தஆலா ஒரு அடிமைக்குப் பிர
ஜைகளைக் கொடுத்து, அந்தப் பிரஜைகளுக்கு அவன் அக்கிரமம் செய்
கிறவனும், அவர்கள்மேல் இரக்கப்படாதவனும், நஸீஹத்தை
நிறைவேற்றாதவனு மிருந்தால், அல்லாகு தஆலா சொர்க்கத்தை
அவன்மேல் ஹறாமாக்குவான்" என்றும் திருவுளமா யிருக்கிறார்கள்.
இன்னும் "எவனுக்கு முஸ்லிம்களின்பேரில் அதிகாரம் கொடுக்கப்பட்
டதோ அவன் அவர்களைத் தன் குடும்பம்போல் பாதுகாக்காமற்போ
னால் அவன் தன்னுடைய ஸ்தானத்தை நரகத்திலிருந்து எடுத்துக்
கொள்ளட்டும்" என்றும் திருவுளமா யிருக்கிறார்கள். இன்னும் "என்
னுடைய உம்மத்தில்நின்றும் இரண்டுபேர் என் ஷபாஅத்துக்கு
அருகரல்லாதவர்களாய்ப் போவார்கள்" என்றும், (அவர்களில் ஒரு
வன்) "கொடுங்கோலனாகிய சுல்தான்" என்றும், (மற்றொருவன்) "வர
ம்பு மீறுகிறவரையில் தீனில் கடந்த பித்அத்து செய்பவன்" என்றும்
திருவுளமா யிருக்கிறார்கள். இன்னும் "கியாமத்து நாளில் மிகவும்
கடினமான வேதனை கொடுங்கோலனாகிய சுல்தானுக்கே" என்றும்
திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும் "ஐந்துபேர் இருக்கிறார்கள்" என்
றும், "அவர்கள்மேல் அல்லாகுதஆலா கோபமா யிருக்கிறான்" என்
றும், "அவன் நாடினால் துன்யாவிலேயே தனது கோபத்தை அவர்கள்
மேல் காட்டுவான்" என்றும், "இல்லாவிடில் அவர்கள் தரிக்குமிடம்
நரகமே" என்றும், "அவர்களில் முதலாமவன் ஒரு கூட்டத்துக்கு அமீ
ராயிருந்து அவர்களிடத்தில் தன் ஹக்கை வாங்கிக்கொண்டு, அவர்களு
டைய பிராதுகளுக்கு நியாயம்சொல்லாமலும், அவர்கள்மீது நடத்தப்படு
கிற கொடுமையை அகற்றாமலுமிருப்பவன்" என்றும், "மற்றொருவன்
ஒரு ஜாதியாருக்குத் தலைவனாயிருந்து அவர்கள் இவனுக்கு வழிபட்டு
வர இவன் அவர்களில் சீமான் ஏழை எல்லாரையும் சமமாகப் பார்க்

காமல் ஒரபக்ஷமாய்ப்பேசுகிறவன்" என்றும், "மற்றொருவன் கூலிக்கு
ஒரு வேலைக்காரனைப் பிடித்து அவனிடத்தில் வேலை முழுமையும்
வாங்கிக்கொண்டு கூலிமுழுமையும் சரியாய்க்கொடுக்காதவன்" என்றும்
"மற்றொருவன் தன் பெண்ஜாதி பிள்ளைகளை அல்லாகுதஆலாவுடைய
வணக்கத்தின்மேல் ஏவாமலும், அவர்களுக்குத் தீனுடைய காரியங்க
ளைப் படித்துக் கொடுக்காமலும், அவர்களுக்கு எங்கிருந்து உணவு
கொடுக்கிறான் என்பதை இலட்சியம் செய்யாமலுமிருப்பவன்" என்
றும், "மற்றொருவன் மஹாவிஷயத்தில் தன் பெண்ஜாதியின்மேல்
கொடுமை செய்பவன்" என்றும் திருவுளமாயிருக்கிறார்கள்.

உமர்றலியல்லாகு அன்கு அவர்கள் ஒருநாள் ஒரு ஜனாஸாவின்
மேல் தொழுவிக்கநாடினார்கள். அதற்குள்ளாக ஒருமனிதர்முன்னேறி
நின்று அந்த ஜனாஸாவின்மேல் தொழுவித்தார். மய்யித்தை கபரடக்
கம்செய்தபிறகு, அவர் அந்த கபுரின்மேல் கையைவைத்துக்கொண்டு
"என் ஆண்டவனே! இவன் உனக்குப் பாவஞ் செய்திருக்கக்கூடுமாத
லால் நீ இவனை அதாபு செய்யத்தகும், றக்மத்து செய்வாயாகில் இவன்
உனது றக்மத்துக்கு வேண்டுதலுள்ளவனாயிருக்கிறான். ஓ மரணத்தை
யடைந்த மய்யித்தே! நீ ஒரு காலத்திலும் அமீராக, அல்லது தலைவ
னாக, அல்லது (அவர்களுக்கு) உதவிக்காரனாக அல்லது, எழுத்துக்கார
னாக, அல்லது தாசில்தாரனாக இருந்தில்லாதபக்ஷம் உனக்குச் சுப
சோபனம்" என்று சொன்னார். பின்பு கண்ணுக்குத் தென்படாமல்
மறைந்துவிட்டார். உமர்றலியல்லாகு அன்கு அவர்கள் அவரைத் தே
டும்படி உத்திரவுசெய்தார்கள். அவர் அகப்படவில்லை. அவர் கிலுருநபி
அலைகிஸ்ஸலாம் என்று அவர்கள் சொன்னார்கள். இன்னும் ரசூல்
சல்லல்லாகு அலைகி வசல்லமவர்கள் (பரிதாபப்பட்டு) அருளிச்செய்
திருக்கிறதாவது:—"அமீருகளின்மேல் ஆ பரிதாபமே! தலையார்களின்
மேல் ஆ பரிதாபமே! அமீன்களின் மேல் ஆ பரிதாபமே! கியாமத்து
நாளில் அவர்களிற் சிலர் ஆ! எங்கள் கிருதாக்களை வானத்தில் கட்டி
நாங்கள் தொங்கிக்கொண் டிருந்தாலும் தொந்திரவில்லையே. நாம்
இந்த வேலையை எப்போதும் ஏற்காமலிருந்தோ மில்லையே என்று
எண்ணித் தயங்குவார்கள்" என்பதே. இன்னும் "பத்துபேர்களின்
மேல் அதிகாரத்தைப் பெற்ற எந்த மனிதனையும் கியாமத்து நாளில்
சங்கிலியால் கையைக்கட்டி இழுத்துக்கொண்டு வருவார்கள்" என்றும்,
"அவன் நல்லவனாயிருந்தால் பின்பு அவனை விட்டுவிடுவார்கள்" என்
றும், "இல்லாமற்போனால் இன்னும்வேறு சங்கிலியை அதிகப்படுத்து
வார்கள்" என்றும் திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும் உமர்றலியல்



லாகு அன்கு அவர்கள் சொல்லியிருக்கிறதாவது:—"பூமியின் அரசன்
வானத்துடைய அரசனைச் சந்திக்கும்நாளில் ஆ! அவன்மேல் கை
சேதம்! ஆனால் அவன் நீதிசெலுத்தித் தனதிஷ்டப்படி தீர்ப்புச்செய்
யாமல் இனத்தார் பக்ஷம் சாராமல் பயபயங்களுக்குத் தக்க கட்டளையை
மாற்றாமல் அல்லாகுதஆலாவுடைய வேதாபாகிய குருஆனைக் கண்ணாடி
யாக்கி அதை முன்னால்வைத்துக்கொண்டு அதன்படி தீர்ப்புச்செய்து
வந்தால் அவனைப்பற்றி விசனசேதமில்லை" என்பதே. "இன்னும் கியா
மத்துநாளில் அரசர்களைக் கொண்டுவருவார்கள்" என்றும், "அவர்களை
நோக்கி நீங்கள் என் ஆடுகளை மேய்க்கும் மேய்ப்பர்களாயிருந்தீர்கள்.
பூமியினுடைய ராச்சியத்தின் பொக்கிஷத்தை யுடையவர்களாயிருந்
தீர்கள். என் உத்திரவுக்குமீறி என் ஒருவனை ஹத்துசெய்தீர்கள்? என்
சிட்சைசெய்தீர்கள்? என்று அல்லாகுதஆலா அவர்களைக்கேட்பான்"
என்றும், "அதற்கவர்கள் எங்கள் ஆண்டவனே! உனக்கு அவர்கள்
மாறுசெய்தார்கள் என்ற கோபத்தினால் அப்படிச் செய்தோம் எனச்
சொல்லுவார்கள்" என்றும், "அப்போது அல்லாகுதஆலா என் என்
கோபத்திலும் உங்கள் கோபம் மேலிட்டிருந்ததோ? எனச்சொல்லு
வான்" என்றும், "மற்றொருவனைவிளித்து, நீ ஏன் நான் விதித்த விதிக்
குக் குறைவாக ஹத்தும் சிட்சையும் செய்தாய்? எனக் கேட்பான்"
என்றும், "அதற்கவன் என் ஆண்டவனே! நான் அவன்மேல் இரக்கப்
பட்டு அப்படிச்செய்தேன் எனச்சொல்லுவான்" என்றும், "அப்போது
அல்லாகுதஆலா நீ என்னிலும் பெரிய இரக்கமுடையவனாயிருந்தா
யோ? எனக்கேட்பான்" என்றும், "பின்பு அவனுடையவிதிக்குமீறியும்
குறைத்தும் ஹத்துசெய்தவர்களைப் பிடித்துக்கொண்டுபோய் நரகத்தி
னுடைய மூலைகளை அவர்களால் நிறப்புவார்கள்" என்றும் ரசூல்
சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். ஆ நாம்
சைபாறலியல்லாகு அன்கு அவர்கள் "நான் ஒருமுறையாவது எந்தான
அரசனையும் புகழமாட்டேன், அவன் நல்லவனாயிருந்தாலும் கெட்டல்ல,
டவனாயிருந்தாலும்சரியே" என்றுசொன்னார்கள். "அது ஏன்? என்று
கேட்டதற்கு, அவர்கள் சொன்னதாவது:-"கியாமத்துநாளில் நீதிமான்
களும் கொடுங்கோலருமான எல்லா அரசர்களையும் கொண்டுவந்து
சிறுத்து என்னும் பாலத்தின்மேல் விடுவார்கள்" என்றும், அவர்களைக்
குலுக்கித் தள்ளும்படி அந்தப்பாலத்துக்கு அல்லாகுதஆலா அறிவிப்
பான்" என்றும், "ஒரே ஒரு குலுக்கலில் யார் யார் தம்முடைய தீர்ப்
பில் அநீதம் செய்திருப்பார்களோ, அல்லது களவத்தில் கையடை
வாங்கியிருப்பார்களோ, அல்லது ஒரேவழக்காளியின் பக்கம் அதிகமா

யக் காதாழ்த்தி யிருப்பார்களோ அவர்களெல்லாரும் அப்பாலத்தி லிருந்து விழுந்து எழுபது வருஷம்வரையில் நரகத்துக்கு இரங்கிக் கொண்டிருந்து பின்பு நரகத்தில் போய்த்தரிப்பார்கள்" என்றும் ரசூல் சல்லல்லாகு அலைஹிவசல்லமவர்கள் அருளிச்செய்ய நான்கேட்டேன்" என்பதே. தாவூது அலைகிஸ்ஸலாமவர்கள் தங்களை இன்னாரென எவரு மறியாதபடி மாறு வேடம் பூண்டுவெளியே வருவார்கள். எவரைக் கண்டாலும் "தாவூதுடைய நடவடிக்கை எப்படியிருக்கிறது" என்று கேட்பார்கள். ஒருநாள் ஜிப்ரயீல் அலைகிஸ்ஸலாமவர்கள் மானிட ரூபத்தில்மாறி அவர்களுக்கு எதிரே வந்தார்கள். அவர்களிடத்திலும் அதுபோல் கேட்டார்கள். அதற்கவர்கள் "தாவூது பய்த்துல் மாலில் நின்றும் உண்ணாமல் தமது கைத்தொழிலால் உண்பாராகில் அவர் நல்லவர்தான்" என்று சொன்னார்கள். பின்பு தாவூது அலைகிஸ்ஸலாம் தங்கள் மிஹ்ராபினிடம்போய் அழுதுகொண்டே, "என் ஆண்டவனே! நான் எனது கைப்பாடுபட்டு உண்பதற்கு ஏதாவது ஒரு தொழிலை எனக்குப் படித்துக்கொடு" என்று துஆகேட்டுக்கொண் டிருந்தார்கள். அல்லாகுதஆலா அவர்களுக்குப் போர்க்கவசம் செய்யும் தொழிலைக் கற்றுக்கொடுத்தான். உமர்றலியல்லாகு அன்கு அவர்கள் நகர்காவல் செய்பவனுக்குப் பதிலாக இரவில் தாங்களே நகர்சுற்றி வருவார்கள். ஏனென்றால், எங்கேயாவது யாதொரு இடைஞ்சலைக்கண்டால் அதை நிவர்த்திக்கக்கருதியேயாம். இன்னும் "சொறிசிரங்குள்ள ஓர் ஆட்டுக்கு எண்ணெய்தடவிப் பக்குவஞ்செய்யாமல் அதை புறாத்து என்னும் ஆற் றங்கரையில் யாராவது விட்டுவிடுவார்களாகில் கியாமத்தில் அதைப் பற்றி என்னைக்கேட்கப்படுமென்பதாக நான்பயப்படுகிறேன்" என்று அவர்கள்சொல்வார்கள். இவர்களுடைய பேணுதல்இப்படியிருந்தும், இன்னும் இவர்களுடைய நீதமானது எவரும் எட்டாத நீதமாயிருந் தே, இவர்கள் துன்யாவைவிட்டுப் பரத்துக்கேகினபிறகு இவர்களைக் குறித்து அப்துல்லாஹிபுனு அம்றப்னில்ஆஸ் றலியல்லாகு அன்குமவர் கள் சொல்லுகிறதாவது:—"உமர்றலியல்லாகு அன்கு அவர்களை என் சொப்பனத்தில் காட்டும்படி அல்லாகு தஆலாவினிடம் துஆ செய் தேன். பன்னிரண்டு வருஷத்துக்குப் பிறகு நான் அவர்களைச் சொப் பனத்தில் கண்டேன். குளித்தவுடன் உடுத்தாடையணிந்து இன்னு மதைக் கட்டிக்கொண்டிருக்கிற ஒருமனிதன்போல் அவர்கள் வருகி றார்கள். நான் அவர்களை நோக்கி "யா அமீறல் முஃமினீன்! தங்கள் விஷ யத்தில் அல்லாகு தஆலாவை எவ்விதமாகக் கண்டீர்கள்" என்று கேட் டேன். அப்போதவர்கள் "நான் உங்களிடமிருந்து பிரிந்து எவ்வளவு



காலமாகிறது" என்று கேட்டார்கள். "பன்னிரண்டு வருஷமாகிறது" என்றேன். அப்போதவர்கள் "நான் இதுவரையில் கணக்கு ஒப்பிப்ப தில் இருந்தேன். அல்லாகு தஆலா கிருபைபாலிக்கிற றஹீமாயில்லா மற்போனால் என்காரியம் கெடாய் முடியுமென்றே பயந்திருந்தேன்." எனச் சொன்னார்கள்" என்பதே. துன்யாமுழுவதிலும் அரசாங்க சாமான்களில்நின்றும் ஒரே ஒரு சீவுக்குக்குமேல் வேறொன்றையும் வைத்திராத உமர்றலியல்லாகு அன்கு அவர்களுடைய ஹாலே இப் படியிருந்தது.

(பாரிசு தேசத்தரசனாகிய நவுஷேருவானுக்குத் தலைமந்திரியா யிருந்த) புசுர்ஜு மிஹர் என்பவன் உமர்றலியல்லாகு அன்கு அவர் கள் எப்படிப்பட்ட மனிதர் என்பதையும், அவர்களுடைய குணநி சயத்தையும் அறிந்துவரும்படி ஓர் தூதனை அனுப்பினான். அவன் மதீனமா நகரத்துக்கு வந்தபோது அங்கிருந்தவர்களை "அய்னல் மலி க்கு உங்கள் அரசர் எங்கிருக்கிறார்?" என்று கேட்டான். அதற்கவர்கள் "எங்களுக்குஅரசனில்லை. ஓர் அமீர் இருக்கிறார். அவர் அந்தவாசலால் வெளியே ஏகியுள்ளார்" எனச் சொன்னார்கள். அந்தத்தூதன் வெளியே புறப்பட்டுப்போய் உமர்றலியல்லாகு அன்கு அவர்களைப் பார்க்கும் போது அவர்கள் தங்கள் சவுக்கைத் தலையின்கீழே வைத்துக்கொ ண்டு வெயிலாயிருக்கிற ஓரிடத்தில் படுத்து நித்திரை செய்கிறார்கள். அவர்களுடைய நெற்றியிலிருந்து வெயர்த்து வடிகின்ற வெயர்வையி னால் பூமி நனைந்திருந்தது. இந்த நிலைமையைக் கண்ட அந்தத்தூதன் ஆ! உலகத் தரசர்களெல்லாம் இவருக்குப் பயந்து நடுநடுங்குகிறவர் களாயிருக்க இவர் இக்குணத்தைப் பூண்டிருப்பது ஆச்சரியமே (என் றுணர்ந்தான்.) அவனுடைய மனதில் பெரிய ஓர் மாறுதல் உண்டாயி று. பின்பு (அவன் அவர்களிடம் பேசத்தொடங்கி) "நீர் நீதிமானா புரிந்ததினாலேயே நிர்ப்பயமாய் நித்திரை செய்கிறீர். எங்கள் அரசனல்ல, அக்கிரமத்தைச் செய்கின்றானதலால் அவன் எப்போதும் திகில்பிடித் தவனாயிருக்கிறான். உங்கள் மார்க்கமே உண்மையுள்ள மார்க்கமெ ன்று நான் சாக்ஷி பகர்கின்றேன். தூதனாக வந்திராத பக்ஷத்தில் நான் இப்போதே இஸ்லாமாய்விட்டிருப்பேன். ஆயினும் இனியொருதரம் வந்து இஸ்லாமிற் சேருவேன்" என்று கூறினான். ஆகவே அரசாளுவ தின் அபாயம் இப்படியாயும் அதன் இல்மு விரிவாயு மிருப்பதால் அரசன் சலாமத்தை யடைவதற்கு வழியாவது: அவன் எப்போதும் தீனுடைய உலமாக்களின் சகவாசத்தி லிருக்கவேண்டும். அவர்கள் அவனுக்கு நீதிமார்க்கத்தைப் போதித்துக்கொண் டிருக்கவேண்டும்.

நீதிவழுவி நடப்பதால் வரும் அபாயத்தை அடிக்கடி அவனுக்கு அறிவித்துக்கொண் டிருக்கவேண்டும். மோசக்கார உலமாக்களுடைய சகவாசத்தைவிட்டும் அரசன் பேணிக்கொள்ள வேண்டும். ஏனென்றால் இவர்கள் ஷைத்தான்களா யிருப்பதினாலென்க.

எட்டாவது காயிதா:—அரசனானவன் எப்போதும் தீனையுடைய உலமாக்களைத் தரிசிப்பதற்கும் அவர்களுடைய நஸீஹத்தைக் கேட்பதற்கும் பேராவலுள்ளவனா யிருப்பதாம். இன்னும் துன்யாவின் மேல் ஆசையுள்ள உலமாக்களுடைய சகவாசத்தைவிட்டும் பேணுவதுமாம். ஏனென்றால், இவர்கள் தங்களுடைய தந்திர வஞ்சகத்தினால் அவன் கைவசத்திலிருக்கிற அந்த ஹறாமான பொருளில் ஒன்றும் ஏதாவது தங்கள் கைக்கு வருமெனக் கருதி அவனை வஞ்சிப்பார்கள். அவனைத் துதித்துப் புகழ்வார்கள். அவனைச் சந்தோஷப்படுத்தும் வழியைத் தேடுவார்கள். இனி தீனையுடைய ஆலிம்யாரென்றால், எவன் அரசனிடத்தில் யாதொன்றை ஆசிக்காமல் அவனுக்கு நீதியைப் போதிப்பானோ அவனேயாம்.

உதாரணமாக:—ஷகீகுல்பல்கீ றஹிமகுல்லா அவர்கள் ஹாரூனர் ரஷீதினிடம் போனபோது அரசன அவர்களைநோக்கித் "துறவியான ஷகீகு நீர்தானா?" என்று கேட்டான். அதற்கவர்கள் "நான் ஷகீகுதான், துறவியல்ல" என்றார்கள். அரசன் எனக்கு ஏதாவது நஸீஹத்து செய்யும்" என்றான். அப்போதவர்கள் அல்லாகு தஆலா உம்மை சித்தீகுடைய தானத்தில் உட்கார்த்தி சிதகு என்னும் சத்தியத்தை அவர்களிடத்தில் கேட்டதுபோல் உம்மிடத்திலும் கேட்கிறான். இன்னும் உம்மை பாரூகுடைய தானத்தில் உட்கார்த்தி மெய்பொய்களுக்கு நடுவே பிரித்தலாகிய பர்கு என்னும் தொழிலை அவர்களிடத்தில் கேட்டதுபோல் உம்மிடத்திலும் கேட்கின்றான். பின்னும் உம்மை தின்னூரைனியுடைய தானத்தில் உட்கார்த்தி நாணமும் சங்கையுமான தன்மத்தை அவர்களிடத்தில் கேட்டதுபோல் உம்மிடத்திலும் கேட்கிறான். பின்னும் உம்மை அலிமூர்த்தலா உடைய தானத்தில் உட்கார்த்தி இல்மு, அதுலு என்னும் அறிவு நீதங்களை அவர்களிடத்தில் கேட்டதுபோல் உம்மிடத்திலும் கேட்கிறான்" என்று சொன்னார்கள். அரசன் "இன்னுமதிகமாக உபதேசியும்" என்றான். அப்போதவர்கள் "நரகம் என்று சொல்லப்படுகிற ஓர்வீட்டை அல்லாகுதஆலா படைத்திருக்கிறான். அந்த வீட்டின் வாசற் காப்பவனாக உம்மை அமைத்து பய்த்துல்மால், வாள், சவுக்கு இந்த மூன்றையும் உமக்குக் கொடுத்து இவைகளால் அந்த நரகமாகிய வீட்டில் ஜனங்கள் பிரவேசிக்காதபடி



காத்துக்கொள்" என்றும், "உன்னிடம்வருகிற ஒவ்வொரு ஏழைக்கும் இந்தபய்த்துல்மாலில்நின்றும்கொடு" என்றும், "அல்லாவுடைய உத்தரவுக்கு விரோதம் செய்கிற ஒவ்வொருவனையும் இந்தச் சவுக்காலடித்துக்கண்டனைசெய்" என்றும், "அநியாயமாகக்கொலைசெய்தவொவ்வொருவனையும் கொலையுண்டவனின் ஒலியுடைய அநுமதிகொண்டு இந்த வாளால் வெட்டு" என்றும் உமக்கு உத்திரவு செய்திருக்கிறான். நீர் இப்படிச்செய்யாத பக்ஷத்தில் நரகம் சேர்பவர்களுக்கு நீர் முன்செல்கிறவராயிருப்பீர், மற்றவர் உமக்குப் பின்வருகிறவரா யிருப்பார்" என்றுசொன்னார்கள். அரசன் "இன்னுமதிகமாகஉபதேசியும்"என்றான். அப்போதவர்கள், "நீரோ சுரக்கிற ஊற்றாயிருக்கிறீர். மற்றும் உம்முடைய ஆமில்களான உத்தியோகஸ்தர் ஆறுகளாயிருக்கிறார்கள். சுரக்குமிடம் சுத்தமும் தெளிவுமா யிருந்தால் பாயுமிடத்தின் கலங்கலால் பாதகமொன்றுமில்லை. சுரக்குமிடம் கலங்கலா யிருந்தால் பாயுமிடம் தெளிவாகுமென்ற நம்பிக்கை யில்லை" என்று உபதேசித்தார்கள்.

(இன்னுமொருநாள் இந்த) ஹாரூன், புலைலுபுனு அயால்றஹிமகுல்லா அவர்களைக் கண்டுகொள்வதற்காகத் தம்முடைய மந்திரியாகிய அப்பாஸுடன் புறப்பட்டு அவர்களுடைய வீட்டு வாசற்படியினிடம் வந்தார். அப்போது அவர்கள் குர்ஆன் ஓதிக்கொண் டிருக்கிறதினால் அது அடியிற் கண்டபொருள் பொருந்திய ஆயத்தை ஓதும் சமயமாயிருந்தது. அதாவது:—

" துர்க்கிருத்தியங்களைப் புரிகின்றவர்கள், நாம் அவர்களை ஈமான்கொண்டு சாலிஹான அமல் செய்தவர்களுக்குச் சமமாக்குவோமென்று நினைக்கிறார்களோ? அவர்கள் இருப்பதும் இறப்பதும் சரியேயாகும். அவர்கள் செய்யும் தீர்ப்பு மிகக் கெட்டது" என்பதே.

இதைக்கேட்ட ஹாரூன் தம்முடைய மந்திரியைப்பார்த்து "நாம் நஸீஹத்தைத் தேடுகிற பக்ஷம் இந்த ஆயத்தே நமக்குப்போதுமானதாயிருக்கிறது" என்றுசொன்னார். பின்பு கதவைத்தட்டும்படிசொல்ல, அப்பாஸ் கதவைத்தட்டி "அமீருல்மூமினீனுக்காகக் கதவைத்திறந்துவிடும்" என்றான். அதற்கவர்கள் "அமீருல்மூமினீனுக்குஎன்னிடம்என்ன வேலையிருக்கிறது?" என்றார்கள். அதற்கவன் "அமீருல் மூமினீனுக்கு நீர்வழிபடும்" என்றான். பின்பு அவர்கள் கதவைத் திறந்தார்கள். இரவானதால் விளக்கு எரிந்துகொண்டிருந்தது. அதை அணைத்துவிட்டார்கள். ஹாரூனர் ரஷீது அவர்களுடைய கையைப் பிடிக்க (முஸாபஹா செய்ய) நாடி இருட்டில் அவர்களுடைய தேகத்தின்மேல் கையைவைத்துத் தடவிக்கொண்டிருந்தார். அப்போது புலைலு றஹிமகுல்லா

அவர்கள் (ஆயாசத்துடன் ஆ!) "இவ்வளவுமிருந்தவர்யிருக்கிற இந்தக் கை நரகவேதனைக்குத் தப்பவேண்டுமே" என்று சொல்லிப் பின்பு "அமீருல்மூமினீனே! கியாமத்து நாளில் அல்லாகு தஆலாவுக்குச் சொல்லவேண்டிய ஜவாபைத் தயார் செய்பவராயிரும். ஏனென்றால், உம்மை ஒவ்வொரு முஸ்லிமோடும் உட்காரவைத்து உம்மிடத்தில் ஒவ்வொருவரையும் குறித்து நியாயம் கேட்கப்படும்" என்று சொன்னார்கள். ஹாரூன் அழுதுவிட்டார். அப்போது, மந்திரியாகிய அப்பாஸ் "ஓ புலீலே! நீர் சும்மாயிரும். அமீருல் மூமினீனைக்கொன்று போட்டீர்" என்றான். "அதற்கவர்கள் ஓ ஹாமானே! நீயும் உன் ஜனங்களும் அவரை ஹலாக்கு செய்துவிட்டிருக்க நான் கொன்று போட்டேன் என்று சொல்லுகிறாய்!" எனக்கூறினார்கள். ஹாரூன் அப்பாசை விளித்து "என்ன அவர் பிருஅவுன் என்று வைத்ததினாலேயேஉன்னை ஹாமான் என்று சொன்னார்" என்றார். பின்பு ஆயிரம் தங்கக்காசை அவர்களுக்கு முன்பாகவைத்து "இது என்தாயாருடைய மஹரிலின்றும் கிடைத்த ஹலாலான பொருள்" என்று சொன்னார். அதற்கவர்கள் "நீர் உம்மிடத்திலிருப்பதை உடையவரிடம் செலுத்திவிடுமென்றும், அதை விட்டுப்போடுமென்றும் நான் உமக்குச் சொல்லுகிறேன். நீர் எனக்குக் கொடுக்கவருகிறீர்" என்று சொல்லி அங்கிருந்து எழுந்து வெளியே போய்விட்டார்கள். உமருபுனு அப்தில் அலீஸு (என்னும் கலீபரசர்) முகம்மதுபுனு கஃபில் குர்த்துபியவர்களிடம் "நீர் எனக்கு நீதத்துடைய இலக்ஷணத்தைச் சொல்லும்" எனக்கேட்டார். அதற்கவர்கள் "முஸ்லிம்களில் உமக்குச்சிறியவரா யிருப்பவர்களுக்கு நீர் தகப்பன்போலும், பெரியவரா யிருப்பவர்களுக்குமகன்போலும், சமானரா யிருப்பவருக்குச் சகோதரன்போலு மிருந்து, அவரவருடைய குற்றத்துக்கும்; தேகபலத்துக்கும் தக்கபடி சிட்சை புரிவதே நீதம்" என்றும், "பத்திரம்! நீர் கோபத்தின்மேல்எவரையும் ஒருசவுக்கடியும் அடிக்க வேண்டாம்" என்றும், "அப்படி அடிப்பீராகில் நரகமானது உமது ஸ்தானமாயிருக்கும்" என்றும் சொன்னார்கள். ஸாஹிதுகளென்னும் துறவிகளில் ஒருவர் அவர்காலத்து கலீபரசனிடம் போனார். கலீபரசன் "எனக்கு ஏதாவது நஸீஹத்து செய்யும்" என்றான். அப்போதவர் சொன்னதாவது:-"நான் சீனதேசத்துக்குப் போயிருந்தேன். அத்தேசத்தரசனுக்குக் காது மிகவும் செவிடாய்ப் போயிருந்தது. அவன் அதிகமாய் அழுதுகொண்டு என் காது செவிடாய்ப் போனதற்கு நான் அழவில்லை" என்றும், "கொடுமையிலகப்பட்ட ஓர் வழக்காளி என் வாசலில் வந்து முறையிட்டால் அது என்காது



க்கு எட்டாதென்றே அழுகிறேன்" என்றும், "ஆயினும் எனக்குப் பார்வையில் பழுதில்லை யாதலால் கொடுமையால் வருந்தும் வழக்காளி இன்னாரென நான் பார்த்துக் கொள்ளும்படி அவர்கள் சிவப்பு உடை உடுத்தியிருக்கவேண்டுமெனப் பறை சாற்றுங்கள்" என்றும் ஆக்கியாபித்திருந்தான். அவன் தினந்தோறும் யானையின் மீதேறி வெளியே வருவான். யாராவது சிவப்புஉடை உடுத்தியிருக்கக் கண்டால் அவனை அழைத்து அவன் முறைப்பாட்டைத் தெரிந்து முடிவு செய்து வான். அமீருல் மூமினீனே! அவன் ஒரு காபிராயிருந்தவன் அல்லாகு தஆலாவுடைய அடிமைகளின்மீது அவன் இவ்விதமாகத் தயை புரிந்துகொண்டிருந்தான். நீரோ மூமினாயிருக்கிறீர். அன்றியும் நபியுடைய குடும்பத்திற் சேர்ந்தவராயுமிருக்கிறீர். உம்முடைய தயவு எப்படி யிருக்கிறதென்று நோட்டமிட்டுப் பாரும்" என்பதே. அபு குல்லாபா றகிமகுல்லா அவர்கள் உமருபுனு அப்தில் அலீஸு அவர்களிடம் போனார்கள். அவர்கள் "எனக்கு ஏதாவது நஸீஹத்து செய்யும்" என்றார்கள். அப்போதவர்கள் "ஆதம் அலைஹிஸ்ஸலாமுடைய காலத்திலிருந்து இதுகாலம்வரையில் உண்டான கலீபாக்களில் ஒருவரு மில்லாமல் சென்று போனார்கள். நீர்மாத்திரம் பாக்கியா யிருக்கிறீர்" என்றார்கள். "இன்னும்சொல்லும்" என்க, "இனி மரிக்கவேண்டிய கலீபாக்களில் நீர்தான் முந்தி மரிப்பவரா யிருக்கிறீர்" என்றார்கள். "இன்னும் சொல்லும்" என்க, "அல்லாகு தஆலா உம்மோடிருந்தால் பின்பு நீர் எதற்கு பயப்படுகிறீர்? அவன் உம்மோடில்லாமற்போனால் பின்பு நீர் யாரிடத்தில் அடைக்கலம் புகுவீர்?" என்றார்கள். பின்பு அவர்கள் "நீர் இப்போது சொன்னதே போதுமா யிருக்கிறது" என்றார்கள்.

சுலைமானுபுனு அப்தில் மலிக்கு என்னும் கலீபரசன் ஒரு நாள் தன் மனதில் நான் துன்யாவில் இவ்வளவு சுகத்தைப் பாராட்டினேனே கியாமத்தில் என் கதி எப்படியாகுமோ, என்று ஆலோசித்து, அக்காலத்து ஆலிமாயும் ஸாஹிதாயுமிருந்த அபூஹாஸிம் றகிமகுல்லா அவர்களிடம் ஓர் மனிதனை அனுப்பித் "தாங்கள் நோன்பு திறக்கிற வஸ்துவில் ஏதாவது எனக்குக் கொடுத்தனுப்புங்கள்" என்று சொல்லச் சொன்னான். அவர்கள் கோதுமைத் தவிட்டை வறுத்துக் கொடுத்து நான் இரவில் இதிலின்றுமே ஆகாரம் அருந்துகிறேன்" என்று சொல்லியனுப்பினார்கள். அதைப் பார்த்தபோது அரசனுக்கு அழுகை வந்துவிட்டது. அவனுடைய மனதில் பெரிய ஓர் குணப்பாடு உண்டாயிற்று. மூன்றுநாள் ஒன்றையும் உண்ணாமல் நோன்பாயிருந்து, மூன்றும் நாள் இரவில் அந்தத் தவிட்டைக் கொண்டு

நோன்பு திறந்தான். இன்னும் அந்த இரவில் அரசன் தன் மனைவியாளோடு சேர்ந்ததினால் அப்துல் அஜீஸ் என்னும் புத்திரர் உண்டானார் என்றும், அந்தப் புத்திரனால் உமருப்னு அப்தில் அஸீஸ் பிறந்தார் என்றும், அவர் உலகத்தில் ஒருவராயும் உமருகத்தாபு றலியல்லாகு அன்குவுடைய நீதத்துக்கு நிகரான நீதியைச் செலுத்தினவராயுமிருந்தார் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இன்னும் இதானது அந்தத்தவிட்டைத் தின்ற நல்ல நிய்யத்துடைய பாக்கியத்திலிருந்து உண்டாயிற்றென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. உமருப்னு அப்தில் அஜீஸ் அவர்களை "நீர் தௌபாச் செய்ததற்குக் காரணம் யாது?" என்று கேட்டதற்கு, "நான் ஒருநாள் ஒரு அடிமையை அடித்துக் கொண்டிருக்கும்போது, அவன் என்னை நோக்கி "எந்த இரவில் பொழுது விடிந்தால் கியாமத்தாகுமோ அந்த இரவை நீர் நினைத்துப்பாரும்" என்று சொன்னான். அந்தச் சொல்லானது என் மனதில் உறைந்துவிட்டது" எனக் கூறினார்கள். பெரியோர்களில் ஒருவர் ஹாரூன் ரஷீது என்னும் கலீபாவரசரை அரபாத்தில் கண்டார். அவர் தலைதிறந்தும் காலில் பாதரட்சை யில்லாமலும் (வெயிலின் வெப்பத்தில்) சூடேறிய கல்லும் மணலுமான ஓர் இடத்தில் நின்று, கைகளை ஏந்திக்கொண்டு, "என் ஆண்டவனே! நீ நீயாயிருக்கிறாய், நான் நானாயிருக்கிறேன், எந்த நேரமும் பாவத்திலுழல்வது என் வேலையாயிருக்கிறது, எப்போதும் பிழை பொறுப்பது உன் வேலையாயிருக்கிறது, என்மீது கிருபை செய்" என்று சொல்லிக்கொண்டிருக்கிறார். இதைக்கண்ட அந்தப்பெரியவர் "பூமியை அடக்கியாளும் அரசன் வானம்பூமிகளை யடக்கியாளும் அரசனிடத்தில் எவ்வாறு கெஞ்சி மருகின்றான் பாருங்கள்" எனக் கூறினார். உமருப்னு அப்தில் அஜீஸ் அவர்கள் "எனக்கு நஸீஹத்து செய்யுங்கள்" என்று அபூஹாஸிம் றஹிமஹுல்லா அவர்களிடம் சொன்னதற்கு "நீர் தரையிற்படுப்பீராக. தலைமாட்டில் மரணத்தை வைத்துக் கொள்ளுவீராக. மரணம் உம்மை அடையும்போது நீர் எப்படியாயிருக்கவேண்டுமென்று விரும்புகிறீரோ அப்படியான காரியங்களைக் கவனத்தில் வைப்பீராக. எப்படியாயிருக்கக் கூடாதென்று எண்ணுகிறீரோ அப்படியான காரியங்களை விட்டும் அகலுவீராக. ஏனென்றால் மரணமே அடுத்திருக்கக் கூடுமாதலினாலேயாம்" என்று கூறினார்கள். ஆகவே அரசாக்ஷியை உடையவர் இந்த ஹிக்காயத்துகளைத் தன்னு கண்களுக்கு முன்னே வைத்துக் கொள்ளவேண்டும். மற்றவருக்குச் சொல்லப்பட்டிருக்கிற இந்த நஸீஹத்துகளை மனதால் ஏற்று நடக்கவேண்டும். எந்த ஆலிமைக் கண்டாலும் அவனிடத்தில்



நஸீஹத்தைக் கேட்கவேண்டும். இவர்களைக் காண்கின்ற ஒவ்வொரு ஆலிமும் இவர்களுக்கு இவ்வகையான நஸீஹத்துக்களைச் சொல்லவேண்டும், உண்மையை ஒளிக்கக்கூடாது. ஆலிமானவன் உண்மையை ஒளித்துப் (பொய்ப்புகழால்) மருட்டி இவர்களைக் கர்வங்கொள்ளச் செய்வானாகில் இராச்சியத்தில் நடக்கிற ஒவ்வொரு கொடுமையிலும் அரசனோடு அவனும் கூட்டாகுவான்.

ஒன்பதாவது விதி:—அரசனானவன் தான் மாத்திரம் கொடுமை செய்யாமலிருந்தால் போதுமென்றிராமல், தன் அடிமைகளையும் வேலைக்காரர்களையும் தானாதிபதிகளையும் சீர்திருத்தவேண்டும். அவர்கள் கொடுமைபுரிவதை அரசன் சம்மதித்துக்கொண்டிருக்கக்கூடாது. ஏனென்றால் அக்கொடுமையைக் குறித்து அரசன் கேட்கப்படுவானதலாலென்க. உமருல்கத்தாபு றலியல்லாகு அன்கு அவர்கள் தங்களுக்கு ஆமிலாயிருந்த அபூமூஸா அஷ்அரி றலியல்லாகு அன்கு அவர்களுக்குக் காயிதம் எழுதினார்கள். அது வருமாறு:—அபூமூஸாவே, எந்த அதிகாரியால் பிரஜைகள் சீர்பட்டிருக்கிறார்களோ அவன் பெரிய சீலவதிருஷ்டமுள்ளவன். இன்னும் எந்த அதிகாரியால் பிரஜைகள் சீர்கெட்டிருக்கிறார்களோ அவன் பெரிய சீர்கேடன். நீர் தாராளமான செலவைவிட்டும் ஜாக்கிரதையாய் நடந்துகொள்வீராக. இல்லையாயின் உமதுகீழ் அதிகாரிகளும் அவ்வாறு செய்வார்கள். அப்போது உமக்கு உபமானமாகிறது ஒரு மிருகம் பசுமையான புல்லைக்கண்டு அதிகமாயத் தின்று கொழுத்தது போலும், அந்தக் கொழுமையே அதன் யழிவுக்குக் காரணமாகுவது போலுமாம். ஏனென்றால், அதன் கொழுமையைக் கண்டு ஜனங்கள் அதை அறுத்துப் புசிப்பதினாலேயாம். இன்னும் தௌராத்தில் எழுதியிருப்பதாவது:—அதிகாரியுடைய அமல்தாரால் நடக்கிற எந்தக் கொடுமையில் அவன் மௌனமுற்றிருக்கிறானோ அந்தக்கொடுமைகளை அவனே செய்தாருமாம். அதற்காக அவன் பிடிக்கப்படுவான் என்பதே. இன்னும் அன்யாருக்காகத் தன்னுடைய தீனை மற்றொருவருக்கு விற்பவனைக் காட்டிலும் பெரிய நஷ்டவாளியாம் புத்தியீனனும் எவனுமிருக்கமாட்டான் என்று அரசன் அறிந்து கொள்ளக் கடவன். எல்லா அமல்தாரரும் நாயக்கர்களும் தங்கள் அன்யாருடைய பிரியத்துக்காகவே வேலைபார்க்கிறார்கள். இவர்கள் அரசனை நரகத்துக்கு அழைப்பது வகையில் கொடுமையை அவன் கண்களுக்குப் பட்டாக்க் காட்டுகிறார்கள். தாங்களோ தங்கள் சுயநயத்திலேயே செல்லுகிறார்கள். (ஓ அரசாண்டவனே!) தாற்காலிகப் பணம் சம்பாதிப்பதற்காக உன்னைப் பிராமநரகத்தில் முயற்சிக்கின்ற பகைவனைக் காட்டிலும் பெரும்பகைவன் எவனிருக்கிறான்?

மொத்தத்தில் எவன் தன்னுடைய அமல்தாரர்களையும் நவுக்கர்களையும் பெண்சாதி பிள்ளைகளையும் அடிமைகளையும் நீதத்தின்மேல் நிறுத்தமாட்டானோ அவன் தன் பிரஜைகளிலும் நீதியைக் கவனிக்க மாட்டான். முதலில் தன்னுடைய தேகத்துக்குள் நீதியைக் கவனிப்பவன் எவனோ அவனே மற்றவரை நீதத்தின்மேல் நிறுத்துவான். இனி நீதமென்பது புத்தியினால் கொடுமை கோபம் ஆசை இவைகளை அகற்றுவதாம் அவைகளைப் புத்திக்கும் மார்க்கத்துக்கும் மீறாதபடி அடக்கியிருக்கச் செய்வதுமாம். அநேகம்பேர் புத்தியை ஆசைக்கும் கோபத்துக்கும் அடிமையாக்கப் பிரயாசைப் படுகிறார்கள். ஆசையும் கோபமும் அதன் தன் நோட்டத்தை யடைவதற்குச் சார்பான தந்திரங்களையும் தேடியெடுத்து இதுவே புத்தி யென்கிறார்கள். ஆ! காரியம் அப்படியல்ல!! ஏனென்றால், புத்தியானது மலக்குகளுடைய இனத்திற் சேர்ந்ததாயும் அல்லாஹ் தஆலாவுடைய சேனைகளிற் சேர்ந்ததாயு மிருக்கிறது. ஆசையும் கோபமும் இப்லீசுடைய சேனையிற் சேர்ந்ததா யிருக்கிறது. அல்லாஹ் தஆலாவுடைய சேனைகளை இப்லீசுடைய சேனைகளிடம் பிடித்துக் கொடுப்பவன் எப்படி மற்றவர்களின் மேல் நீதி செலுத்துவான். ஆகவே நீதமென்னும் சூரியனானது முதலில் தன் இருதயத்தில் உதித்துப் பிறகு அதன் பிரகாசமானது தன் வீட்டாரிலும் சினேகர்களிலும் தாக்கும். பிறகு அதன் சுடரானது பிரஜைகளில் வீசும். சூரியனில்லாமல் சுடருண்டாகுமென ஆதரவு வைப்பவன் எவனோ அவன் இல்லாதபொருளைத் தேடுகிறவனாகுவான்.

இன்னுமறிந்துகொள்:—நீதமென்பது புத்திபூரணத்தினால் உண்டாகுவதாம். புத்தி பூரணமென்பது காரியங்களை உள்ளது உள்ளபடி அறிவதாம், அதன் அந்தரங்கமான ஹகீகத்தை உணர்வதாம், வெளியரங்கத்தைக் கண்டு மருளாம லிருப்பதுமாம். உதாரணம்:—ஒருவன் நீதத்தை விட்டுவிட்டால் அன்யாயத்துக்காக அதைக் கைவிட்டிருப்பான். அப்படிவிட்டதில் அவன் தன்னுடைய நோக்கமென்னவென்று பார்க்கவேண்டும். நல்ல உணவுகளை உண்பதற்கென்ற நோக்கமிருந்தால் அப்போது அவன் தன்னை மனிதரூபத்திலிருக்கிற ஓர் மிருகமென்று எண்ணிக்கொள்ள வேண்டும். ஏனென்றால் ஊணாசையானது மிருகங்களுடைய குணமா யிருப்பதினாலென்க. பட்டாடை அணிவதற்கென்ற நோக்கமிருந்தால் அவன் புருஷ ரூபத்திலிருக்கிற ஓர் பெண்ணினமாகுவான். ஏனென்றால், சிங்காரிப்பானது ஸ்திரீகளுடைய செயலா யிருப்பதினாலேயாம். தன்னுடைய பகைவர்களின் மீது தன் கோபத்தைச் செலுத்தவென்ற நோக்கமிருந்தால் அவன்



மனித ரூபத்தில் மாறிய ஓர் துஷ்டமிருக மென்றாகுவான். ஏனெனில், கோபம் பாராட்டுவதும் மனிதர்கள்மேல் காய்ந்து விழுவதும் துஷ்ட மிருகங்களின் செயலாதலா லென்க. ஜனங்கள் தனக்குப் பணிவிடை செய்வதற்கென்ற நோக்கமிருந்தால் அவன் புத்தியான் போலிருக்கிற ஓர் மூடனென்றாகுவான். ஏனெனில், அவன் புத்தியுள்ளவனா யிருந்தால் இந்தப் பணிவிடைக்காரர்கள் எல்லோரும் அவரவருடைய வயிற்றுக்கும் போக இச்சைகளுக்குமே பணிவிடை செய்கிறார்கள் என்றும், ஒருநாளைக்கு இவர்களுடைய சம்பளத்தை நிறுத்திவிட்டால் ஒருபோதும் தன்னிடம் நெருங்க மாட்டார்கள் என்றும் அவன் அறிந்து கொள்ளுவான். ஆகவே அவர்கள் அவனுக்குப் பணிவிடை செய்வதில் அவனையோர் வலையாக்கிக்கொண்டு தங்கள் இச்சைகளை வேட்டையாடுகிறார்கள். அவர்கள் அவனைப் பணிந்து வணங்குவதில் தங்களுக்கே வணக்கம் செய்துகொள்ளுகிறார்கள். இதற்கு அடையாளம் யாதெனில், இராஜபட்டம் வேறொருவனுக்குக் கட்டப் போகிறார்கள் என்று பொய்யாகவாயினும் யாராவது சொல்லிவிட்டால் இவர்கள் எல்லோரும் அவனைவிட்டு நழுவி விடுவார்கள். அந்த மற்றொருவனிடம் அடுக்கப் பார்ப்பார்கள். எவ்விடத்தில் பணமிருக்குமென்று இவர்கள் நினைக்கிறார்களோ அந்த இடத்துக்குப் பணிந்து வணங்குவார்கள். ஆகவே உண்மையில் இது பணிவிடை செய்வதல்ல. அவனைப் பரிகாசம் செய்வதேயாம். காரியங்களினின்றும் வெளியரங்கமான ரூபத்தையே பார்க்காமல் அதன் உண்மையான உயிரை அறிபவன் எவனோ அவனே புத்திமானாகுவான். இப்பணிவிடைக்கு உயிரா யிருப்பது மேற்சொல்லி வந்ததேயாம். எவன் இப்படி அறிய வில்லையோ அவன் புத்திமானல்ல. எவன் புத்திமானல்லவோ அவன் நீதிமானுமல்ல. எவன் நீதிமானல்லவோ அவனுடைய தலம் நரகமேயாம். இது காரணத்தினாலே எல்லா நற்செய்கைகளுக்கும் புத்தியே தலை என்றது.

பத்தாவது காயிதா:—அரசனாகிய பெருமை மேலிடாம லிருக்க வேண்டும். ஏனென்றால் பெருமை மேலிட்டால் கோபம் மேலிடும். கோபமானது தனக்குப் பதில்வாங்கும்படி அவனைத் தூண்டிவிடும். அன்றியும் கோபமானது புத்தியை மருட்டும் பேயா யிருக்கிறது. நாம் அதன் ஆபத்தையும் அதற்குச் செய்யவேண்டிய பக்குவத்தையும் (மூன்றாவது ருக்குனாகிய) முஹ்லிகாத்துடைய ருக்குனில் கோபத்தைப் பற்றிய பாகில் கூறுவோம். சினம் இடமேறும்போது அவன் செய்ய வேண்டியது யாதெனில் எல்லாவற்றிலும் மன்னிப்பின் பக்க

மே அவன் சார்ந்திருக்க வேண்டும். சங்கையையும் சாந்தகுணத்தையுமே தொழிலாக எடுத்துக் கொள்ளவேண்டும். அப்படி எடுத்துக் கொண்டால் அம்பியா, அவுலியா, ஸஹாபா இவர்களுக்கு ஒப்பாகுவான் என்றும், கோபம் பாராட்டலைத் தொழிலா யெடுத்துக் கொண்டால் கொடிய மிருகங்களுக்கு ஒப்பாகிற துருக்கியர், பயில்வான்கள், மூடர்கள்போல் ஆகுவான் என்றும் அவன் அறியவேண்டும். ஹிக்காயத்து:—கலீபாசராயிருந்த அபூஜஃபர் என்பவர் ஓர் குற்றவாளியைக் கொலைசெய்யும்படி த்திர்ப்பளித்தார். அப்போது அங்கிருந்த முபாரக்குப்னு பூலாலா றலிமகுல்லா அவர்கள் அரசரை நோக்கி "யா அமீறல் மூமினீன்! முதலில் றசூல் சல்லல்லாகு அலைஹிவசல்ல மவர்களால் வந்திருக்கிற ஓர் ஹதீதைக் கேட்டுக்கொள்வீராக" என்றார்கள். அரசர் "சொல்லும்" என்க, அவர்கள் "கியாமத்து நாளில் எல்லாரையும் மஹ்ஷர் வெளியில் கூட்டும்போது ஓர் மலக்கு சப்தமிட்டு அல்லாகு தஆலாவுடைய சமுகத்தில் யாருக்கு வல்லமை யிருக்கிறதோ அவன் எழுந்து நிற்பானாக எனச் சொல்லுவார்" என்றும், "அப்போது ஒருவனுடைய குற்றத்தை மன்னித் திருப்பவனே யன்றி மற்றவன் எழுந்து நிற்கமாட்டான்" என்றும் றசூல் சல்லல்லாகு அலைஹிவசல்ல மவர்கள் திருவுளமா யிருப்பதாய் ஹசன் பசரீ றலிமகுல்லா அவர்கள் ரிவாயத்து செய்கிறார்கள்" எனச் சொன்னார்கள். அப்போது அரசர் "அந்தக்குற்றவாளியை விட்டுவிடுங்கள், நான் அவனைமன்னித்தேன்" என்று சொன்னார். அரசர்களை யாராவது எதிர்த்துப் பேசுவதினால் அநேகமாய் அவர்களுக்குக் கோபம் வருவதுண்டு. அப்போதவர்கள் அவனைக் கொல்லக் கருதி அதற்கு முயர்ச்சிக்கின்றார்கள். இந்தச் சமயத்தில் இவர்கள் யஹ்யா அலைஹிஸ்ஸலாமுக்கு ஈஸா அலைஹிஸ்ஸலாம் சொன்னதை நினைத்துப் பார்க்கவேண்டும். அதாவது:— "யஹ்யாவே! உம்மைக் குறித்து ஒருவன் எதாவது சொன்னால் அது உண்மையாயிருக்கும் பக்ஷத்தில் நீர் ஷுக்குரு செய்யும். பொய்யா யிருக்கும்பக்ஷத்தில் இன்னு மதிகமாக ஷுக்குரு செய்யும். ஏனென்றால், உமது பிரயாசை யில்லாமலே ஒரு அமல் உமது பட்டோலையில் அதிகப்படுகின்றது. அதாவது:—அவனுடைய இபாதத்து உமது பட்டோலையில் எழுதப்படுமென்பதேயாம்" என்பதே. றசூல் சல்லல்லாகு அலைஹிவசல்ல மவர்களுடைய சமுகத்தில் ஒரு மனிதனைச் சுட்டிக்காட்டி "இவன் பெரிய பலசாலி" என்றுசொன்னார்கள். "அதெப்படி" என்று நாயகமவர்கள் கேட்க, "யாறசூலல்லா! இவன் எவனோடு மல்லு செய்தாலும் அவனைக் கீழ்தள்ளிவிடுவான்.



எல்லாரோடும் ஈடு செய்வான்" என்று சொன்னார்கள். அதற்கு நாயகமவர்கள் ஒருவனைக் கீழ்தள்ளுகிறவனல்ல பலசாலி! மேலும், எவன் தன் கோபத்தை அடக்குகிறானோ அவனே பலசாலியும், ஆண்பிள்ளையுமா யிருக்கிறான் என்று திருவுளமானார்கள். இன்னும் மூன்று வஸ்துக்க ளிருக்கின்றனவென்றும், அவற்றை அடைந்தவன் எவனோ அவனுடைய ஈமான் நிறப்பமாய்விட்டதென்றும், அவற்றுள் ஒன்று கோபம் வரும்போது தப்பு செய்யக் கருதாம லிருப்பதும், மற்றொன்று சந்தோஷம் வந்தால் ஹக்கை மறக்காமலிருப்பதும், மற்றொன்று சக்திபெற்றால் ஹக்குக்குமேல் அதிகமாக வாங்காம லிருப்பதுமாம் என்றும் றசூல் சல்லல்லாகு அலைஹிவசல்லமவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள். இன்னும் கோபத்தின்போது பார்த்தேயொழிய எவனுடைய நற்குணத்தையும் நம்பாதே என்றும் இச்சையின்போது பரிசோதித்தே யொழிய எவனுடைய நன்னடக்கையையும் நம்பாதே என்றும் அமீருல் மூமினீன் உமர்றலியல்லாகு அன்கு அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஒருநாள் அலியிப்னுல் ஹுசைன் றலியல்லாகு அன்குமா அவர்கள் பள்ளிவாசலுக்குப் போய்க்கொண்டிருந்தார்கள். வழியில் ஒருவன் அவர்களை வசைபேசினான். அடிமைகள் அவனை அடிக்கஓடினார்கள். அப்போதவர்கள் அவனை நீங்கள் தொடவேண்டாம் என்று அடிமைகளுக்கு ஆக்கியாபித்துப் பின்பு அந்த மனிதனை நோக்கி என்னைக்குறித்து நீ இப்போது சொல்லியவைகளுக்குமேல் இன்னும் அநேகக் குற்றங்கள் உனக்குத் தெரியாமல் என்னில் மறைந்திருக்கின்றன. உனக்கு என்னாலாகவேண்டிய ஹாஜத்து ஏதாவதிருந்தால் சொல்லென்றார்கள். அப்போதந்த மனிதன் மனம் நாணி வெட்கத்தை யடைந்தான். பின்பு அவர்கள் அணிந்திருந்த சட்டையை அவனுக்குக் கொடுத்து ஆயிரம் திர்ஹங்களும் கொடுக்கும்படி உத்திரவு செய்தார்கள். அவன்போகும்போது இவர் நபியுடைய புத்திரரேயன்றி மற்றவரல்லர் என்று நான் சாக்ஷி பகர்கின்றேன் எனச் சொல்லிக் கொண்டே போனான். இன்னுமொருபோது இவர்கள் தங்கள் அடிமையை பயலே இரண்டுதரம் சப்தமிட்டுக் கூப்பிட்டார்கள் அவன் அதற்கு ஜவாபு சொல்லாமையால் நான் கூப்பிட்டது உனக்குக் கேட்கவில்லையா? என்று கேட்டார்கள் அவன் கேட்டேன் என்றான். பின்பு ஏன் ஜவாபு கொடுக்கவில்லை? என்றார்கள் தாங்கள் நற்குணத்தைப் பூண்டவர்களா யிருப்பதால் என்னை அடிக்கமாட்டீர்கள் என்று அச்சந் தீர்ந்திருந்தேன் என்றான். அப்போதவர்கள் என் அடிமைகளைப்பற்றி அச்சம் தீர்ந்திருப்பதற்கு நான் அல்

லாகு தஆலாவைப் புகழ்கின்றேன் எனக் கூறினார்கள். இன்னுமொரு முறை இவர்களுடைய அடிமை யொருவன் இவர்களின் ஆட்டை அடித்து அதன் காலை முறித்துவிட்டான். நீ ஏன் இப்படிச் செய்தாய்? என்று அவனைக் கேட்டதற்குத் தங்களுக்குக் கோபத்தை யுண்டாக்க வேண்டுமென்று முராதாகவே நான் இப்படிச்செய்தேன் என்று அவன் சொன்னான். அப்போதவர்கள் அவனை நோக்கி உனக்கு இதைப் படித்துக்கொடுத்த இப்லீசை நான் கோபப் படுத்துகிறேன். என்று சொல்லி அவனை அடிமைத் தனத்திலிருந்து நீக்கி உரிமைபெறச் செய்தார்கள். இன்னு மொருபோது இவர்களை யொருவன் திட்டினான். அதற்கிவர்கள் அவனைநோக்கி வாலிபனே! எனக்கும் நரகத்துக்கும் நடுவே இதுதான் கஷ்டமான ஓர் கணவாயாயிருக்கிறது. நான் அந்த கணவாயைக் கடந்து விடுவேனாகில் நீ சொன்னது எனக்கோர் இலக்ஷியமில்லை. அதை நான் கடக்காத பக்ஷத்தில் நீ சொன்னதைக் காட்டிலும் நான் மிகக் கெட்டவனா யிருக்கிறேன் என்றார்கள்.

இன்னும் ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் தங்கள் திருவாயினால் ஒருவன் தனது சாந்த குணத்தினாலும் மன்னிப்பினாலும் காலமெல்லாம் நோன்புவைத்து இரவெல்லாம் வணங்கினவனுடைய பதவியைப் பெற்றுக்கொள்பவனா யிருப்பான் என்றும் ஒருவன் தனது பெயர் கொடியவர்களுடைய தப்தரில் எழுதப்படுகிறவனா யிருப்பான் என்றும் அவன் தன் வீட்டார்பேரிலேயே யொழிய மற்றவர்பேரில் ஒரு ஆட்சி அதிகாரமும் செய்யமாட்டான் என்றும் அருளிச்செய்திருக்கிறார்கள். இன்னும் நரகத்துடைய வாசல்களில் ஓர் வாசல் இருக்கிறதென்றும் எவன் தனது கோபத்தை ஷரூக்கு விரோதமாகச் செலுத்தினானோ அவனே யன்றி மற்றவன் அந்த வாசலால் நடக்கமாட்டான் என்றும் ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் திருவுளமா யிருக்கிறார்கள். இன்னும் ரிவாயத்து செய்யப் பட்டிருக்கிறதாவது:—இப்லீசானவன் மூசா அலைகிஸ்ஸலாமுக்கு எதிரேவந்து நான் தங்களுக்கு மூன்று வஸ்துக்களைப் படித்துக் கொடுக்கிறேன். தாங்கள் அல்லாகு தஆலாவிடத்தில் எனக்கு வோர் ஹாஜத்தைக் கேளுங்கள் என்று சொன்னான். அதற்கு மூசா அலைகிஸ்ஸலாமவர்கள் அந்த மூன்று வஸ்துக்கள் யாவை? என்று கேட்டார்கள். அப்போதவன் சொன்னதாவது:—உக்கிரகோபத்தை விட்டும் தாங்கள் பேணுதல் செய்யுங்கள். ஏனென்றால், எவனொருவன் உக்கிரகோபக்காரனாயும் அற்பனாயு மிருக்கிறானோ அவனைக்கொண்டு நான் பிள்ளைகள் பந்து விளையாடுவதுபோல் விளையாடுவேன். இன்



னும் பெண்களை விட்டும் தாங்கள் பேணுதல் செய்யுங்கள். ஏனென்றால், ஜனங்களுக்காக நான் விரித்திருக்கிற வலைகளில் பெண்கள் போல் எனக்கு நம்பிக்கையுள்ள வலை எதுவுமில்லை. இன்னும் தாங்கள் பகீல்தனமென்னும் உலோபகுணத்தை விட்டும் பேணுதல் செய்யுங்கள். ஏனென்றால், எவனுக்கு பகீல்தன மிருக்குமோ, அவனுடைய தீன் துன்யா இரண்டையும் நான் நஷ்டப்படுத்துவேன் என்றதே. இன்னும் ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் தங்கள் திருவாயினால் ஒருவன் தன் கோபத்தைச் செலுத்தக்கூடியவனா யிருந்து அதை அடக்கிக்கொள்ளுவானாகில் அல்லாகு தஆலா அவனுடைய கல்பை அச்சம் தீர்தலாலும், ஈமானாலும் நிறப்பமாக்குவான் என்றும், இன்னும் யாராவதொருவன் அல்லாகு தஆலாவுக்குத் தாழ்ச்சி செய்தவனா யிருப்பதற்காகப் பெருமையான உடையை உடுத்தாமல் விட்டுவிடுவானாகில் அல்லாகு தஆலா அவனுக்குச் சங்கையும் நன்மையுமான உடையை உடுத்துவான் என்றும் அருளிச் செய்திருக்கிறார்கள். இன்னும் எவனொருவன் கோபிக்கிறவனாயும் அல்லாகு தஆலாவுடைய கோபத்தை மறந்தவனாயு மிருப்பானோ அவன்மேல் கைசேதம் என்றும் திருவுளமா யிருக்கிறார்கள். இன்னு மொருவர் ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் சமுகத்தில் யாரசூலல்லா! நான் சொர்க்கம் போகக்கூடிய ஒரு அமலை எனக்குப் படித்துக்கொடுங்கள் என்று கேட்டார். அதற்கு நாயகமவர்கள் நீ கோபப்படாமலிரு. உனக்குச் சொர்க்கமுண்டு என்றும் எவரிடத்தும் எதையும் கேட்காதே. உனக்குச் சொர்க்கமுண்டு என்றும் உபதேசித்தார்கள். பின்பவர் இன்னும் சொல்லுங்களென்க. நீ அசரு தொழுகைக்குப் பிறகு எழுபதுதரம் இஸ்திகுபாரு செய் உனக்கு எழுபது வருஷத்துப் பாவம் மன்னிக்கப்படும் என்றார்கள். அதற்கவர் எனக்கு எழுபது வருஷத்துப் பாவம் இல்லையென்க, அப்போது உன் தாயுடைய பாவம் மன்னிக்கப்படும் என்றார்கள். அதற்கவர் என் தாய்க்கு அவ்வளவு பாவம் இல்லையென்க, அப்போது உன் தகப்பனுடைய பாவம் மன்னிக்கப்படும் என்றார்கள். பின்பு அவர் என் தகப்பனுக்கும் அவ்வளவு பாவம் இல்லை என்க, அப்போது உன் சகோதரர்களுடைய பாவம் மன்னிக்கப்படும் என்று திருவுளம்பற்றினார்கள். அப்துல்லாஹிப்னு மஸ்ஊது றலியல்லாகு அன்கு அவர்கள் சொல்லியிருப்பதாவது:—ரசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் ஒரு பொருளைப் பங்கிட்டுக்கொண் டிருந்தார்கள். அப்போதொருவர் இது அல்லாவுக்காகப் பங்கிடுவதல்ல. அதுவது நியாயமான பங்கா

யில்லை என்று சொன்னர். அவர் இப்படிச் சொன்னதை நான் றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்களுடைய சமுகத்தில் அறிக்கையிட்டேன். இதைக் கேட்டு றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் மிகவும் கோபமானர்கள். அவர்களுடைய முகம் சிவந்து வேறுபட்டது. அப்போதவர்கள் என் சகோதரரான மூசா அலைகிஸ்ஸலாம் பேரில் அல்லாகு தஆலா றக்மத்து செய்வாராக. அவர்களை இதினும் அதிகமாக ஜனங்கள் வருத்தப்படுத்தி யிருக்கிறார்கள். அதை அவர்கள் சபுரு செய்துக்கொண்டார்கள் என்று சொன்னர்கள். இதற்கு மேல் அதிகமாய் ஒன்றும் சொல்லவில்லை என்பதே. ஆட்சி அதிகாரத்தையுடைய அரசர்களின் நஸீஹத்துக்காக இந்த ஹதீசுகளும் ஹிக்காயத்துகளும் போதுமாயிருக்கின்றன. ஏனென்றால், ஈமான் என்னும் அடிவேரானது இருதயத்தில் இருக்கிறபக்ஷம் இவை குணஞ்செய்யும் இவை குணஞ் செய்யாமற்போனல் இருதயமானது ஈமானைவிட்டும் ஒழிந்தேயிருக்கிறது. (இவனுடைய ஈமான் என்பது) நாவின்மீதுள்ள வேற்றுரையேயன்றி வேறொன்றுமல்ல. இருதயத்திலுள்ள ஈமானுடைய சங்கதி வேறாயும் ஈமான் வேறாயுமிருக்கிறது. ஒருவருஷத்தில் ஆயிரக்கணக்கான தினர் என்னும் பவுன்களை ஹராமாக வாங்கி அன்னியனுக்குக் கொடுத்து அதன் பயனை அவன் அடையவும் கியாமத்தில் அந்த எல்லாப் பொருளுக்கும் தான் உத்திரவாதியாகவும் எல்லாரும் தன்னிடத்தில் கேட்கவும் செய்துக்கொள்ளுகிற ஆமிலுடைய இருதயத்தில் ஈமான் என்ற பொருள் எப்படி இருக்குமோ எனக்குத் தெரியவில்லை. இது மிகவும் மறதியும் மார்க்கமின்மையுமா யிருக்கிறது. வல்லாகு அஃலமு பிஸ்ஸவாப்.

அல்லாகு தஆலாவினது அழகிய நல்லுதவியினல் கீமியாயெ ஸஆதத்தின் முற்பாதிபாகம் முடிவுபெற்றது. வல்ஹம்து லில்லாகி றப்பில் ஆலமீன் வசல்லல்லாகு தஆலா அலாகைரிகல்கிஹி வநூரி அருஷிஹி சைய்யதினா வமவ்லானா முஹம்மதின் வஆலிஹி வஅஸ்ஹாபிஹி அஜ்மயீன் பிறக்மத்திக்க யாஅர்ஹமர் ராஹிமீன்.

முற்றிற்று.

இனி முஹ்லிகாத்துடைய பயானகிய மூன்ருவது ருகுனை மொழிபெயர்த்தச்சிட அல்லாகு தஆலா அருள்புரியவேண்டும்.

# பிழை திருத்தம்.

| பக்கம் | வரி | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 3 | 31 | இருவுள்ளமா | இருவுளமா |
| 16 | 21 | னென்றுன். அவன் | னென்று அவன்சொன்னன் |
| 18 | 24 | ஆடவாகளைப் | ஆடவர்களைப் |
| 22 | 10 | சமமதத்தைப் | சம்மதத்தைப் |
| 22 | 32 | வாசறபடியில் | வாசற்படியில் |
| 23 | 3 | தகபபனுடைய | தகப்பனுடைய |
| 43 | 2 | மானாஸக்தனு | மாஸக்தனு |
| 60 | 20 | ஷரத்துகளைக | ஷர்த்துகளைக் |
| 62 | 17 | சொன்னல | சொன்னல் |
| 106 | 33 | எண்ணங்களும் | எண்ணங்களும் |
| 134 | 6 | பாத்தியானுரு | பாத்தியனுகு |
| 134 | 23 | நல்லவகள் | நல்லவர்கள் |
| 137 | 15 | இருவுள்மாகிறதிதினுலுமாம். | இருவுளமாகிறதினுலுமாம். |
| 151 | 20 | சம்சாதித்துக்சொன் | சம்பாதித்துக்கொன் |
| 153 | 12 | ஹறைரா | ஹுறைரா |
| 154 | 4 | உத்தானது | உரித்தானது |
| 156 | 15 | யாருஹல்லா | யாருஹல்லா |
| 157 | 31 | அவ் | அவ |
| 159 | 17 | நஸீஹத் | நஸீஹத் |
| 168 | 12 | மஃரியாவை | மஃரிபாவை |
| 190 | 5 | மனதுககு | மனதுக்கு |
| ,, | 17 | க்கு | எனக்கு |
| 204 | 22 | யிருக்யிகிறீர் | யிருக்கிறீர் |
| 218 | 13 | பூாகத்தை | பாக்கத்தை |
| 230 | 8 | ஜியாத்துக்காக | ஜியாரத்துக்காக |
| 231 | 24 | இதபுகளின் | அதபுகளின் |
| 232 | 27 | மறவர்சாயலாயிருக்க | மற்றவர்சாயலாயிருக்க |
| 247 | 36 | காதுகரு | காதுக்கு |
| 258 | 5 | காலைவவைப்பான் | காலைவைப்பான் |
| 259 | 33 | சேபுப | சேபுப் |
| 269 | 4 | தறித்துக் | தறித்துக்கொண் |
| 306 | 20 | கண்டிக்கலாது | கண்டிக்கலாகாது |
| 315 | 28 | துன்பாவிலேயே | துன்யாவிலேயே |
| 326 | 10 | அசன்தன் | அதனதன் |

பிஸ்மில்லாஹி.

# புத்தக விளம்பரம்.

1. கீமியாயே ஸஆதத்து முதலாவது வால்யூம். இது முன்னச்சிடப்பட்டு வெளிவந்திருப்பது அநேகருக்குத் தெரிந்திருக்கலாம். இதில் அடங்கியுள்ள விஷயங்கள் இன்னின்னவென்பதை இந்த இரண்டாவது வால்யூத்தின் முகவுரையில் தொகுப்பாகக் காட்டியிருக்கிறது. முதல் முறை அச்சிட்ட காப்பிகளெல்லாம் செலவாய்ப்போய் இப்போது மறுமுறை பதிப்பிக்கப்படுகிறது. நிகழும் 19..8-ஹு-ம் அக்டோபர் மாதத்தில் அச்சுவேலை முடிந்து புத்தகம் வெளிப்படும் இன்ஷா அல்லாஹ். இப்புத்தகத்தில் முந்திய பதிப்பு போலவே ஆயத்து ஹதீசு ஆஜு இவைகளை அங்கங்கு அறபெழுத்தால் அச்சிட்டிருப்பதுடன் அந்த ஆயத்துகளையும் ஹதீசுகளையும் ஆஜுக்களையும் ஐபர் சேர் முதலிய குறிகளோடு ஒருங்கே சேர்த்தெழுதி இது இப்புத்தகத்தின் இத்தனையாவது பக்கத்திலிருப்பதென வோர் அட்டவணையும் ஏற்படுத்தி விஷய அட்டவணைக்கு முன்னாவைக்கப்பட்டிருக்கும். இப்புத்தகம் முன்னிலும் உயர்ந்த 16 பவுண்டு கிளேசு காயிதத்தில் பதிப்பிக்கப்பட்டு மேற்கண்ட அட்டவணையும் புதிதாய்ச் சேர்க்கப்பட்டிருந்தபோதிலும் அதற்காக விலையை அதிகப்படுத்தாமல் முந்திய விலையின்படியே விற்கப்படும் அதாவது:—

| | |
|---|---|
| கைவிலைக்கு | ரூ 1-4-0. |
| வி. பி. போஸ்டில் | ரூ 1-7-0. |

2. இல்முல் பராயிலு. இது அறபு தமிழில் அச்சிடப்பட்டிருக்கிறது. ஒருவன் இறந்துபோனால் அவனுடைய சொத்திலிருந்து முதலில் எந்தெந்த காரியங்களைச் செய்யவேண்டுமென்பதும் பிறகு மிஞ்சிய சொத்தை அடையும் வார்சுகள் இத்தனை வகையார் என்பதும் அந்த வார்சுகளில் இன்னின்னாருக்கு இன்னின்ன சமயத்தில் இவ்வளவு இவ்வளவு பாகம் கிடைக்கும் என்பதும் இன்னின்ன சமயத்தில் இன்னின்னாருக்குப் பாகமே கிடைக்காதென்பதும் சொத்தைப்பாகிக்கிற கணக்கு வழிகளும் கர்ப்பத்திலிருக்கிற பிள்ளைக்குப் பாகம் எடுக்கிற வழியும் ஆண் என்றாவது பெண் என்றாவது ஏற்பட்ட குன்ஸாவுடைய பாகசங்கதியும் ஆண் என்றும் பெண் என்றும் ஏற்படாத குன்ஸாவுடைய பாக விஷயமும் முர்த்தத்தாய்ப் போன



வன், காணாமற் போனவன், சிறையில் அகப்பட்டவன் இவர்களுடைய பாகவிஷயமும் இன்னும் பாகவிஷயத்திற்கு வேண்டிய அநேக சங்கதிகளும் இதில் உதாரணங்களோடு மிகத்தெளிவாய் விவரிக்கப்பட்டிருக்கின்றன. முகம்மதியலா பாக சங்கதி அறிய விருப்பமுள்ளவர்களுக்கு இது மிகவும் உபயோகமுள்ளது.

| | |
|---|---|
| கிளேசு காயிதத்தில் பதிக்கப்பட்டது | விலை ரூ 1-0-0. |
| றப் காயிதத்தில் | ரூ 0-14-0. |
| தபால் செலவு | ரூ 0-3-0. |

3. சிறாத்துல் இஸ்லாம். இதுவும் அறபுதமிழில் அச்சிடப்பட்டிருக்கிறது. மதரஸாக்களில் ஓதும் ஆண், பெண்களான பாலர்களுக்குக் கற்பிக்கவேண்டிய அகீதாக்களை பதினைந்து பிரிவுகளில் எழுதியிருக்கிறது. அன்றியும் பிள்ளைகளிடத்தில் சுவால் செய்து அவர்களிடத்திலிருந்து ஜவாபு வருவிப்பதற்கு அநுகூலமாக வோர் அட்டவணையும் இதில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

| | |
|---|---|
| இதன் விலை | ரூ 0-4-0. |
| தபால்செலவு | ரூ 0-2-0. |

4. துஹ்பத்துல் ஹிந்து. இது இந்தி பாஷையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. நான்கு அத்தியாயங்களையும் முடிவில் ஒரு அநுபந்தத்தையு முடையது. அத்தியாயங்களில் முறையே இந்துமார்க்கத்தின் விசுவாச வணக்கங்கள், லௌகீக சம்பந்தமான நடவடிக்கைகள் இவைகளுக்கும்; இஸ்லாம் மார்க்கத்தின் விசுவாச வணக்கங்கள் லௌகீக நடவடிக்கைகள் இவைகளுக்கும் உள்ள தாரதம்மியங்களை எடுத்துக்காட்டி இஸ்லாம் மார்க்கமே உண்மையுள்ளதென்ற நியாயங்களைச் சொல்லியிருப்பதோடு இந்துக்களுடைய ஆக்ஷேபங்களுக்கு உத்தரங்களும் கூறப்பட்டிருக்கின்றன. அநுபந்தத்தில் இஸ்லாம் மார்க்கத்தில் அமைந்திருக்கும் நன்மைகளும் காட்டப்பட்டிருக்கின்றன. அன்றியும், இஸ்லாம் மார்க்கம் உண்மையுள்ளதென்பதைப்பற்றிச் சில சீர்மை துரைமார்கள் எழுதியிருக்கிற அபிப்பிராயங்களையும் காட்டியிருக்கின்றன. இவைகளைத்தவிர இன்னும் சில நூதன விஷயங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இது பலமுறை அச்சிடப்பட்டு ஆயிரக்கணக்கான காப்பிகள் செலவாய்ப் போயிருந்தும் அநேக ஜனங்களுக்கு இப்புத்தகம் கிடைக்காமையால் அவர்கள் இப்புத்தகத்தின்மேல்

அவலாபெழுகிழு·ச்பு.தங்களானவை முன்னிலும் நல்ல மாதிரியாய் இப்புத்தகம் அச்சிட்டுத் தபாலாகத் தயார்செய்தலா யிருக்கிறது.

விலை புத்தகம் 1-க்கு ரூ 0-12-0.
வி. பி. மூலமாய் ரூ 0-15-0.

5. மிஸ்டர் ... மஹாஷய் என்னும் மார்க்கங்களின் உரைகள் இன்னும் இந்தி பாஷையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இதில் மூன்று விஷயங்களைப்பற்றி வாதம் பேசப்படுகிறது. முதலாவது:— மனிதனுக்கு மார்க்க ஞானம் அவசியமா? இல்லையாவென்பது. இரண்டாவது:— மார்க்க ஞானம் அவசியமென்றால் மனிதன் முழு நம்பிக்கையோடு சாதித்திருந்த மார்க்கம் எதுவென்பது. மூன்றாவது:— இன்ன மார்க்கந்தான் உண்மையுள்ளதென்று நாம் எதனால் அறியலா மென்பது. இந்த மூன்று விஷயங்களையும் குறித்து வாதித்து வருவதற்கு இடையில் யூத, கிறிஸ்தவ, முகம்மதிய மதங்களை மும்மதங்களிலும் ஒற்றுமையான விஷயங்கள் இன்னின்ன வென்பதும், இந்து மதஸ்தாபகர் இன்னார் என்பதும், புத்தசமயப் பிராமணருக்கு விரோதமாய்ப் பிரசங்கம் செய்ததும், அதற்குப் பிறகு பிராமணர் செய்த தந்திர யத்தனங்களும், இந்துமத வேதங்கள் யாரால் எப்போது எழுதப்பட்டன வென்பதும், திருக்குர்ஆன் ... என்ற விசுவாசம் கிறிஸ்தவர்களில் பரவிப்போன காரணமும், யூத கிறிஸ்தவர்கள் வேதபுத்தகங்களில் மாறுபாடு செய்யத் துணிந்த காரணமும், ஐரோப்பாவில் அநேகம்பேர் நாஸ்திகரா யிருப்பதற்குக் காரணமும், இன்னும் பலநூதன விஷயங்களும் சொல்லி வரப்படுகின்றன. பார்த்தால் புஸ்தகத்தின் அருமை விளங்கும்.

விலை புத்தகம் 1-க்கு ரூ 0-8-0.
வி. பி. மூலியமாய் ரூ 0-10-0.

இப்புத்தகங்கள் வேண்டியோர் அடியிற் குறிப்பிட்ட விலாசக்காரருக்கு எழுதி வி. பி. போஸ்டு மூலமாய்ப் பெற்றுக்கொள்ளலாம்.

ஜே. கா. அப்துல் கரீம் ...யார்,
...தெரு,
... நெல்லிக்குப்பம்.